

பண்ணையார் மகள்
லக்ஷ்மி

2 - FEB 2011
19 FEB 2011
4 MAR 2011
5-10-11

# பண்ணையார் மகள்

லக்ஷ்மி

பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி : 4943074

## நூல் விவரப்பட்டியல்

நூலின் பெயர் : பண்ணையார் மகள்

நூலாசிரியர் : லக்ஷ்மி

மொழி : தமிழ்

வெளியீடு : பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்குத் தெரு
மயிலாப்பூர், சென்னை - 600 004

நூல் உரிமை : டாக்டர் கே. மகேஸ்வரன்

| | | | |
|---|---|---|---|
| பதிப்பு ஆண்டு : | முதற் பதிப்பு | : ஜனவரி | 1974 |
| | இரண்டாம் பதிப்பு | : மார்ச் | 1983 |
| | மூன்றாம் பதிப்பு | : ஜூலை | 1985 |
| | நான்காம் பதிப்பு | : மார்ச் | 1990 |
| | ஐந்தாம் பதிப்பு | : டிசம்பர் | 1993 |
| | ஆறாம் பதிப்பு | : ஜூன் | 2000 |

பக்கங்கள் : 376

நூல் அளவு : 18.5x12.5 செ.மீ.

எழுத்து : 11 புள்ளிகள்

தாள் : 10.7 கி.கி. வெள்ளைத்தாள்

பைண்டிங் : கார்டு போர்டு

ஒளி அச்சுக் கோவை : அமராவதி
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
பேஜர் : 9632711847

அச்சிட்டோர் : நடராஜ் ஆப்செட் பிரஸ்,
சென்னை - 600 005

விலை : ரூ. 85-00



31505
4757969


## முன்னுரை

தமிழ் இலக்கியத் துறையில் நல்ல மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கும் இத்தருணத்தில், ''பண்ணையார் மகள்'' என்ற இந்த நாவல் வெளிவருகிறது. இந்தத் தொடர் கதை, 'ஆனந்த விகடன்' வாரப்பதிப்பில் தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு முன் வெளிவந்தது.

அத்துடன், நான் தென் ஆப்பிரிக்காவிலிருந்து, தமிழ்நாட்டின் இலக்கிய வளத்தில் ஈடுபாடு கொண்டு, தொலைவிலிருந்தே வளர்த்த கதை இது. மேலும், காலத்தால் குன்றாத, இளமை மங்காத, கற்பனை நயம் ஒரு கதையில் இருந்தால் அது காலமெல்லாம் நிலைத்து நிற்கும் என நான் எண்ணுகிறேன். உண்மை

வாழ்க்கையின், தத்ரூபமான பிரதிபலிப்பை இக்கதையின் மூலம் சித்தரிக்க முயன்றிருக்கிறேன். அதை ரசிகப் பெருமக்களும் படித்து மகிழ்வார்கள் என நம்புகிறேன்.

புதிய முறையில் (New wave) எனக்கு நாட்டமில்லை. பேனா முனை ஒரு ரசவாதம் போல. அவலம், ஆனந்தம், அருவருப்பு எனப் பல்வேறு உணர்ச்சிகளை கற்பனை வளத்தோடு, இலக்கிய வாயிலாக உணர்த்தும்போது, ரசிகர்களை இன்பத்தில் ஆழ்த்த வேண்டும்; அருவருப்பில் ஆழ்த்துவது நயம்பட உரைக்கும் முறையல்ல. உணர்ச்சிகளுக்கு உருவம் கொடுக்கும் பொழுது, இலக்கிய நயத்தின் சுவை கெடாமல் கதையின் இளமை குன்றாமல் ரசிகர்களை ஆழ்ந்து, உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கடித்து, இன்புறச் செய்யும்போதுதான் ஒரு கதாசிரியன் திறமை பளிச்சிடும்.பல்லாயிரக்கணக்கான வாசகர்கள், வாரா வாரம் தொடர்ந்து படித்து இன்புற்ற, இக் கதையைப் புத்தக வடிவில், முழுதுமாகப் படித்து அகமகிழ்வார் என்ற நம்பிக்கையுடன் வணக்கம் கூறுகிறேன்.

லக்ஷ்மி
28-12-73

சென்னை மாவட்ட மைய நூலகம்
3505
4757969
கொளத்தூர், சென்னை - 99.

# பண்ணையார் மகள்

## 1

'ஓ' வென்ற இரைச்சலுடன் காற்றைக் கிழித்தபடி ஓடிக்கொண்டிருந்த ரயில் வண்டித் தொடரின் வேகம் திடீரென்று குறைந்து விட்டதைப் போன்றதொரு பிரமை உமாவுக்கு ஏற்பட்டது. இரண்டாம் வகுப்புப் பெண்கள் பெட்டியில் அவள் மட்டும் தன்னந்தனியே பட்டணத்திலிருந்து பிரயாணம் செய்து கொண்டிருந்தாள். ரயில் வண்டி என்ஜின் அடிக்கொரு தடவை ஊதித் தள்ளிக் கொண்டிருந்த கரித் தூள்கள் கண்களில் படாதிருக்க வெளிப்புறத்து ஜன்னல்களை அவள் இறுக்கமாக அடைத்து வைத்திருந்தாள். கையில் பிடித்திருந்த தினசரிப் பத்திரிகையை ஆசனத்தின் மீது விசிறிப் போட்டுவிட்டு, அவசரமாக எழுந்து ஜன்னல் கதவுகளைத் திறந்தாள்.

பள்ளிக்கூடம் செல்லப் பிடிவாதம் செய்யும் சிறுவனைப் போல், வண்டித் தொடர் நெளிந்து வளைந்து பெருமூச்சுவிட்ட வண்ணம் குலசேகரன்பேட்டை ரயில்வே ஸ்டேஷனை நெருங்கிக் கொண்டிருந்ததைக் கண்டு திடுக்கிட்டுப்போனாள். இவ்வளவு விரைவில் அவள் இறங்க வேண்டிய இடம் சமீபித்துவிடும் என அவள் கனவிலும் கருதவே இல்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் தனக்கு ஏற்படப் போகிற பல்வேறு

நூதன அனுபவங்களை எண்ணிப் பரபரப்புற்று,மேல் ஆசனத்தில் வைத்திருந்த தன் பெட்டி, படுக்கை, கூஜா, பழக்கூடை முதலிய சாமான்களை அவசரமாகக் கீழே இறக்கி வைத்தாள்.

உமா, தன் சாமான்களை எல்லாம் ஒருங்கு திரட்டி வினாடிப் பொழுதில் சேகரித்து வைத்துக் கொள்வதற்கும், வண்டி ஒரு பெரும் குலுக்கலுடன் குலசேகரன்பேட்டை ஸ்டேஷனில் நிற்பதற்கும் சரியாக இருந்தது. வண்டிநின்ற வேகத்தில் கீழே சாய இருந்த அவள் சட்டென்று சாமர்த்தியமாக ஜன்னல் கம்பிகளைப் பிடித்தபடி நின்றாள். பிறகு மெதுவாகக் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள்.

ஒரு சின்னஞ்சிறு ஓட்டுக் கட்டடம். அதையடுத்து ஒரு பெரிய வேப்பமரம், அந்த மரத்தடியில் முறுக்கு, மசால் வடை முதலியவற்றை இரு கூடைகளில் நிரப்பி வைத்துக் கொண்டு தரையில் அமர்ந்தபடி வானவீதியில் கண்ணோட்டமாக இருந்த ஒரு விற்பனையாளர்- பக்கத்திலே தண்ணீர்க்குழாய்- இத்யாதி சௌகர்யங்களுடன் காணப்பட்ட குலசேகரன்பேட்டை ரயில்வே ஸ்டேஷனை அவள் வியப்புடன் உறுத்துப் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின்றாள்.

மலைவாயிலை சமீபித்துக் கொண்டிருந்த சூரியனின் செங்கதிர்கள் அந்தச் சிறு ஓட்டுக் கட்டடத்திற்குப் பொன் பூச்சு பூசிக்கொண்டிருந்தன. வண்டியில் அது சமயம் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களும் மிகவும் குறைவாக இருந்ததால் ஸ்டேஷனில் ஜனநடமாட்டமே இல்லாதது போன்று உமாவுக்குத் தோன்றியது. 'வண்டி இந்த ஸ்டேஷனில் சில நிமிஷங்கள்தான் நிற்கும்' என்று மானேஜர் வரதராஜன் அவளுக்கு முன்னெச்சரிக்கையாகக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அதை நினைத்துக் கொண்ட அவள் போர்ட்டருக்கோ மற்ற கூலியாட்களுக்கோ காத்திருக்காமல்



மிகவும் பரபரப்பாகத் தன் பெட்டி படுக்கை முதலிய சாமான்களை வண்டியினின்று இழுத்து, பிளாட்பாரத்தில் வைத்துவிட்டுச் சுற்றும் முற்றும் கண்களால் ஆராய்ந்தபடி நின்று கொண்டிருந்தாள்.

''அழகர்நத்தத்திற்கு வரவேண்டிய பிரயாணிகள் குலசேகரன்பேட்டை ஸ்டேஷனில் இறங்கியாக வேண்டும். அங்கிருந்து அழகர்நத்தத்திற்கு சுமார் எட்டு மைல் தூரம் இருக்கும். அதைப்பற்றித் தாங்கள் கவலைப்பட வேண்டாம். பண்ணையிலிருந்து மோட்டார் வண்டி எடுத்துக்கொண்டு நானே நேரிடையாக வந்து தங்களைக் கூட்டிக்கொண்டு போகிறேன்'' என்று வரதராஜன் அவளுக்கு அந்தக் கடிதத்தில் விவரமாக எழுதியிருந்தார்.

ஒன்று இரண்டு என்று பல நிமிஷங்கள் விரைவில் கழிந்துவிட்டன. ஸ்டேஷனை விட்டுப் பிரிய மனமில்லாததைப் போன்று வண்டித்தொடர் பெருமூச்சு விட்ட வண்ணம் நெளிந்து வளைந்து புறப்பட்டு விட்டது. சில வினாடிகளில் ஸ்டேஷன் எல்லையை ஒட்டியபடி நின்று கொண்டிருந்த பெரிய அரச மரத்தையும் தாண்டி அதி வேகமாக மறையத் தொடங்கிவிட்டது. தன்னைத் தவிர பிளாட்பாரத்திலே வேறு பிரயாணிகள் யாரையுமே காணாத உமா திடுக்கிட்டுப் போய் வெளிப்புறம் செல்லும் வாயிலை ஆவலுடன் உற்றுப் பார்த்தாள். 'முன்பின் தெரியாத ஒரு வீட்டுக்கு விருந்தாளியாக எப்படிப் போவது!' என்ற கவலை அவள் உள்ளத்திலே எழத் தொடங்கியது. கடிதத்தில் அவ்வளவு நிச்சயமாக எழுதியிருந்த மானேஜர் தப்பாமல் வந்துவிடுவார். ஏதோ காரணத்தினால் தாமதம் ஏற்பட்டிருக்கும் என தன்னைத் தானே சமாதானம் செய்துகொண்டு நகத்தைக் கடித்தபடி யோசனையில் ஆழ்ந்து போய் நின்று கொண்டிருந்தாள்.

ஓட்டுக் கட்டடத்தின் வாயிலில் நின்றுகொண்டிருந்த ஸ்டேஷன் மாஸ்டர் சிங்காரம், தம் தலை மீது சுமையாக

அழுத்திய தலைப்பாகையைக் கையில் எடுத்துக்கொண்டு ஒரு முறை தமது வழுக்கைத் தலையைச் செல்லமாகத் தடவிக் கொண்டார். அருகில் உள்ள நகரத்து சந்தைக்குச் செல்லும் காய்கறிக் கூடைக்காரிகள், மாடு விற்பனையாளர், பால்காரர் போன்ற தொழிலாளிகளையே பிரயாணிகளாக அதிகம் பார்த்துப் பழகியிருந்த அவரது கண்களுக்கு, பிளாட்பாரத்தில் தன்னந் தனியாக நின்று கொண்டிருந்த அந்தப் பெண் யாரென்று சட்டென்று தெரிந்துவிட்டது. தலைப்பாகையை இடையே இடுக்கிக் கொண்டு புன்னகை நெளிந்தோடும் பிரகாசமான வதனத்துடன் அவர் அவள் அருகே நெருங்கினார்.

''அம்மா! நீங்கள்தானே அழகர்நத்தம் பண்ணையார் ஏகாம்பரம் அவர்கள் குமாரத்தி! பட்டணத்திலிருந்து வரப்போவதாகக் கேள்விப்பட்டோம்!'' என்று மிகவும் பழகியவர் போலக் குசலம் விசாரித்தார். அவரது கண்களில் அறியும் ஆவலும், குரலில் வியப்பும் கொந்தளித்துக் கொண்டிருந்தன.

உமா மீண்டும் ஒருமுறை திடுக்கிட்டுப் போனாள். ''ஆமாம்! இது விவரம் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டுவிட்டு, காற்றில் அசைக்கப்பட்டு நெற்றிமீது தவழ்ந்த தனது சுருண்ட கூந்தலைக் கையால் ஒதுக்கிக் கொண்டாள்.

ஒரே பார்வையில் தம் முன் நின்ற அந்தப் பெண்ணைத் தமது உள்ளத்தில் சித்தரித்துக் கொண்டு விட்ட சிங்காரம்,ஒரு கணம் யோசனையில் மூழ்கிப் போய்விட்டார். அவர் பண்ணையார் மனைவியை ஒரு முறை கூட நேரில் பார்த்தவர் அல்ல. ஆனால் பெரும் அழகி என்று ஊரில் பரவி நின்ற பற்பல கதைகளின் வாயிலாகக் கேள்விப்பட்டிருந்தார். கட்டாயம் அந்தப் பெண், சாயலில் தன் தாயைத்தான் கொண்டிருக்க வேண்டும் என்று அவரது மூளை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தது. ஏனெனில், பண்ணையார் ஏகாம்பரத்திற்கு



அந்த எடுப்பான நாசியோ, கூரிய கருவிழிகளோ கிடையாது. மேலும் நிறத்தில் அவர் சற்றுக் கரியமேனி படைத்தவர். ஆனால் அந்தப் பெண்ணோ பளபளவென்று ஒளி வீசும் பத்தரை மாற்றுப் பசும்பொன் மேனி படைத்தவளாக, யௌவனத்தின் பொலிவுடன், அழகே உருக்கொண்டு நின்றாற்போல், அந்தி மயங்கும் வேளையில் அங்கே நின்றுகொண்டிருந்தாள். வயோதிகத்தின் தளர்வால் நலிந்து கொண்டு வந்த அவரது கண்களுக்கு, அழகோடு பூரித்து நின்ற யௌவனத்தின் சோபை பார்க்கத் திகட்டாத பெரும் விருந்தாக இருந்தது. காரணமற்றதொரு களிப்பும் உற்சாகமும் அவரது உள்ளத்திலே எழுந்தன. உமா கேட்ட கேள்விக்குச் சட்டென பதில் அளிக்காது அவர் மௌனமாகத் தமது அயர்ச்சியில் மூழ்கித் தம்மை மறந்து நின்றார்.

அழகர்நத்தத்திலும் அதற்குச் சுற்றுப்புறத்திலும் நடக்கும் அக்கப்போர் அனைத்தும் இந்தக் குலசேகரன் பேட்டை ரயில்வே ஸ்டேஷனுக்குத்தான் முதலில் வந்து அத்துப் படியாகும். ''பண்ணையார் மகள் பட்டணத்திலிருந்து வரப்போறாங்க என்கிற செய்தி மூணு நாளா ஊரே திமிலோகப் படுகிறதே!'' என்று தானே வலிய பதில் அளித்தான், ஸ்டேஷன் மாஸ்டர் சிங்காரத்தின் பின்னால் நின்று கொண்டிருந்த நடுத்தர வயதுடைய மனிதன் ஒருவன். அவனது உடை அலங்காரத்திலிருந்து அவன் ரயில்வே ஊழியர்களில் ஒருவன் என்பதை ஊகித்துக் கொண்ட உமா, அதற்குப் பதில் ஏதும் கூறவில்லை.

சிந்தனை உலகினின்று விழித்துக்கொண்ட சிங்காரம், ''வண்டி வரப்போகும் நேரத்தைக் கூட நான் சரியாகக் குறிப்பிட்டு மானேஜர் ஐயாவிடம் கொடுத்தேன். நேற்று ராத்திரி அவர் இங்கிருந்து என்னோடு வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார். அவர் இந்த மாதிரி காரியங்களில் நேரத்தை மிகவும் கண்டிப்பாக அனுசரிக்கிற மனிதர். ஐந்து மணிக்கு

வண்டி என்று சொன்னால் வண்டி ஒரு சமயம் ஐந்து நிமிஷம் முன்னோ பின்னோ வந்தாலும் வருமே ஒழிய, டாண் என்று ஐந்தடிக்கும் போது வரதராஜன் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் ஆஜராகி விடுவார். வண்டி வந்து அரைமணி நேரமாகியும் அவரை இங்கு காணாதது எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு சமயம் பண்ணையார் உடம்புக்கு...'' என்று முடிக்காது பேச்சை நிறுத்தி விட்டு, உமாவின் முகத்தை மிகவும் பரிதாபமாகப் பார்த்தார்.

பிறந்ததிலிருந்து அன்றுவரை ஒரு தடவை கூடக் கண்களால் பார்த்தறியாத தன் தந்தையின் தேக நிலையைப் பற்றி உமா மிகவும் கவலைப்பட்டாள் என்றால் அது முற்றிலும் பொய்யாகும். இதுவரை கண்டறியாத தந்தையை முதன் முதலாகச் சந்திக்கப் போகிறோம் என்ற நினைவில் அவளது உள்ளத்தில் ஒரு பரபரப்பு ஏற்பட்டிருந்தது வாஸ்தவம். ஆனால் அதில் துயரத்திற்கோ, வருத்தத்திற்கோ சிறிதும் இடம் இருக்கவில்லை. எனினும், தனது விசித்திரமான மனப் போராட்டத்தை அவள் வெளியே காட்டிக் கொள்ள விரும்ப வில்லை. ஆகவே, ''எனக்கு ஒன்றும் விளங்கவில்லை'' என்று கூடசமாக முணமுணத்து விட்டு, தன் முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டாள். அது சமயம் காற்றின் ஊடே குப்பென்று ஏதோ ஒரு புஷ்பத்தின் மணம் மிதந்து ஓடிவந்து அந்தச் சிறு ஸ்டேஷன் முழுவதையும் வியாபித்துக் கொண்டது.

''அடடா! நம்ப தம்பி ரங்கதுரை வந்திருக்கிறாரே!'' என்று ஆச்சர்யத்துடன் கூவியபடி ஸ்டேஷன் மாஸ்டர் சிங்காரம் யாரையோ உற்சாகமாக வரவேற்றார். அதைக் கேட்டு உமா ஆவலுடன் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாள். ஸில்க் ஜிப்பா மீது சரிகை அங்கவஸ்திரம் புரண்டு வர, காலில் அணிந்திருந்த புத்தம் புதிய பாதரக்ஷை பலமாக சப்திக்க, உயரமும், உயரத்திற்கேற்ற பருமனுமாகத் தென்பட்ட ஒரு யௌவன புருஷன் பிளாட்பாரத்திற்குள் நுழைந்து அவர்கள் அருகே வந்தான்.



வாசனை மலரின் சுகந்தம் முன்னைவிட அதிகமாக அருகில் வீசுவதை உணர்ந்த உமா, தலையை நிமிர்த்தி அந்த வாலிபனை ஏற இறங்கப் பார்த்தாள்.

''தாங்கள் தான் திருமதி உமாமகேஸ்வரி அவர்கள் என்று நினைக்கிறேன். தங்களைச் சிறிது நேரம் காக்க வைத்ததற்கு மன்னிக்க வேண்டும்'' என்று மிகவும் பவ்யமாகக் கூறிவிட்டு, கைகுவித்து நமஸ்கரித்தான் அந்த வாலிபன்.

வாசனை மலரின் நறுமணத்திற்குக் காரணபூதமாக விருந்த அந்த வாலிபனை ஆச்சர்யத்துடன் உற்றுப் பார்த்த உமா, ''ஆமாம்! தாங்கள் யார்?'' என்று கேட்டாள்.

வெற்றிலைக் காவி ஏறிய முப்பத்திரண்டு பற்களும் தெரிய, மந்தஹாசம் செய்த வண்ணம் அருகில் நின்று கொண்டிருந்த சிங்காரம், அவளுக்குப் பதில் அளிக்க வேண்டிய தொல்லையை விட்டு வைக்கவில்லை.

''பண்ணை மானேஜர் வரதராஜன் அவர்களின் ஏக புத்திரன் ரங்கதுரை இவர்தான். இந்த வருஷத்துடன் இன்ஜினீயர் படிப்பை முடித்துக் கொண்டு ஊருக்கு வந்திருக்கிறார்''என்று அறிமுகம் செய்துவிட்டு ''ஏன் தம்பி ரங்கதுரை! பண்ணை யாருக்கு உடம்புக்கு இப்பொழுது எப்படி யிருக்கிறது?'' என்று கவலை தோய்ந்த குரலில் விசாரித்தார்.

உமாவை நேரிடையே பார்த்துப் பேச அஞ்சுகிறவன் போல் ரங்கதுரை சிங்காரம் பக்கம் திரும்பி நின்று கொண்டான். குரலை மிகவும் தாழ்த்திக் கொண்டு ''இன்று பிற்பகல் பண்ணையாருக்குத் திடீரென்று உடம்புக்கு அதிகமாகி விட்டது. அப்பா காரை எடுத்துக்கொண்டு பெரிய டாக்டரை நகரத்திலிருந்து அழைத்து வரப் போயிருக்கிறார். அதனால்தான் என்னை வில்வண்டியுடன் ஸ்டேஷனுக்கு அனுப்பி இருக்கிறார்'' என்றுமெல்ல, தடுமாற்றத்துடன் மொழிந்தான்.

''நேற்று ராத்திரி உன் தந்தையோடு நான் பேசிக் கொண்டிருந்தபோது அவர் பண்ணையார் உடம்பு குணமாகி வருவதாக என்னிடம் சொன்னார். நான் அப்பவே நினைத்தேன். அது சரியாகிவிட்டது. 'அணையும் தீபம் சுடர்விட்டு எரியும்' என்பார்கள் அதுபோல சில நாட்களாக அவர் உடல்நிலை தேறுவதுபோல் போக்குக் காட்டிவிட்டுக் கடைசியில் ஏமாற்றிவிட்டது போலிருக்கிறது. இந்தம்மா தன் பெற்ற தகப்பனாரை இதுவரை பார்த்ததே கிடையாது. ஊரிலிருந்து அவரை உயிரோடு காண ஓடோடி வந்திருக்கிறார்கள். பெரியவர்கள் செய்த புண்யத்தில் கடுகளவாவது இருந்து இவர்களுக்குத் தந்தையின் முகதரிசனம் கிட்ட பாக்கியம் இருக்கட்டும்'' என்று விரக்தியாகக் கூறிவிட்டு சிங்காரம் நீண்டதொரு துயரப் பெருமூச் செறிந்தார்.

திடீரென்று உடல் முழுவதும் தீப்பற்றி எரிவதுபோன்றதொரு உணர்ச்சி உமாவுக்கு ஏற்பட்டது. அவளுடைய பெற்றோரின் இடையே வெகு காலமாக நிலவியிருந்த மனஸ்தாபம் ஊரறிந்த பெரிய ரகசியமாக இருப்பதை உணர்ந்ததும் அவள் அவமானத்தினால் ஒரு வினாடி உடல் குன்றிப் போய்விட்டாள். முகத்திலே துளிர்த்த வியர்வையைச் சட்டென கைக்குட்டையினால் துடைத்துக் கொண்டு,''நாம் புறப்படலாமே! சீக்கிரமாகச் செல்வது நலம் என நினைக்கிறேன்'' என்று ரங்கதுரையிடம் பதட்டமாகச் சொன்னாள்.

மின்சாரத்தினால் தாக்குண்டவன் போல ரங்கதுரை இதைக் கேட்டுத் துள்ளி அப்பால் நகர்ந்தான். ''மன்னித்துக் கொள்ளுங்கள். புறப்பட இதோ ஏற்பாடு செய்கிறேன்'' என்று அவளுக்கு விநயமாகப் பதில் அளித்து விட்டு ஸ்டேஷன் வாயிலுக்கு விரைந்தோடினான். ''பேச்சிமுத்து! காளியப்பா! அங்கே என்ன வேடிக்கை? ஓடிவந்து சாமான்களை எடுத்து வண்டியில் வையுங்கள்! நேரமாகிறது'' என்று உரத்த குரலில் தன் கூட வந்த இரு ஆட்களை நோக்கி உத்தரவிட்டான்.



சிறிது பொழுதில் வண்டியின் முன் பகுதியில் தன் உடலை ஒடுக்கியபடி உமா அமர்ந்திருக்க, பின் பகுதியில் வெளியே கால்களைத் தொங்கவிட்டுக் கொண்டு குறுக்குக் கம்பிமீது சாய்ந்தபடி ரங்கதுரை உட்கார்ந்திருக்க, பண்ணையாரின் பச்சை நிற வில் வண்டி அழகர்நத்தத்தை நோக்கி ராஜபாட்டை மீது ஜில் ஜில் என்று சலங்கை நாதத்தை எழுப்பியவாறு விரைந்து கொண்டிருந்தது.

சூரியன் மலை வாயிலின் எல்லைக்குள்ளே புகுந்து விட்டதனால் எங்கும் அந்தகாரம் லேசாகப் பரவத்தொடங்கி விட்டது. அதுசமயம் எதிர்ப்புறமாக மிக வேகமாகப் படபடவென்ற சப்தத்துடன் புழுதியைக் கிளப்பியவண்ணம் ஒரு மோட்டார் சைக்கிள் வாகனம் வந்து கொண்டிருந்தது. வண்டியோட்டி பேச்சிமுத்து, மிரண்டு கொண்டு சாலை ஓரம் ஓட யத்தனித்த காங்கேயத்துக் காளைகளின் மூக்கணாங் கயிற்றைப் பிடித்துப் பலமாக இழுத்து நிறுத்தினான்.

''கண்மூஞ்சி தெரியாம வண்டியை இப்படி ஓட்டா விட்டால் குடியா முழுகிவிடும்? நல்ல மனிதன் இவன்! ஒரு கணத்தில் எல்லோரையும் எமலோகத்திற்கு அனுப்பப் பார்த்தானே?'' என்று கோபத்துடன் சீறியபடி வண்டியினின்று ரங்கதுரை வெளியே குதித்தான்.

சில கஜ தூரம் மேலே ரஸ்தாவில் சென்று மோட்டார் சைக்கிள் வாகனம் திடீரென்று நின்றது. அதன் மீது அமர்ந்திருந்த யெளவன புருஷன் தொப்பென்று ஆசனத்திலிருந்து இறங்கி வண்டியருகே ஓடி வந்தான். ''மிஸ்டர் ரங்கதுரை! மன்னிக்கவும். மிகவும் அவசரமாகச் சென்று கொண்டிருக்கிறேன். சற்றுத் தவறியிருந்தால் இன்று பெரும் விபத்தில் நாம் அனைவரும் சிக்கியிருப்போம். பிசகு என்னுடையது. மிக வருந்துகிறேன்'' என்று படபடவென்று கூறிவிட்டு, வந்த அதே

வேகத்தில் திரும்பச் சென்று தன் வாகனத்தின் மீது பாய்ந்து ஏறிக்கொண்டான்.

அந்தி பரப்பி நின்ற இருளில் அந்த மனிதனின் முகம் உமாவுக்கு நன்றாகப் புலப்படவில்லை. எனினும் அவனை அவள் முன்பு எங்கேயோ ஒரு முறை சந்தித்திருப்பது போன்ற ஒரு 'நினைவு ஏனோ அது சமயம் ஏற்பட்டது!

''பாக்தாத் திருடன்,மன்னிப்புக் கோர வந்துவிட்டான். ஒரு நாள் இல்லாவிட்டால் ஒருநாள் இவனது பகல் வேஷம் ஊருக்கு அம்பலமாகப் போகிறது'' என்று மிகவும் ஆத்திர மாகக் கூவிய ரங்கதுரை, பற்களைக் கடித்துக்கொண்டு வண்டியில் ஏறி உட்கார்ந்தான். உமா எதற்கும் பதிலே சொல்லவில்லை. அவளது சிந்தனை பல்வேறு விஷயங் களில் அந்தச் சமயம் சென்று வியாபித்திருந்ததனால் அவள் மௌனமாக வெளிப்புறத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

''தாங்கள் பயப்பட்டு விட்டீர்களா? வீணான ஓர் அதிர்ச்சி இவ்வாறு ஏற்பட்டதற்கு நான் மிக வருந்துகிறேன்'' என்று அனுதாபத்துடன் பகர்ந்தான் ரங்கதுரை.

''இதற்கெல்லாம் சுலபத்தில்,பயந்துவிடும் பயந்தாங் கொள்ளியல்ல நான்!'' என்று பதில் அளித்த உமா புன்முறுவல் செய்தாள்.

ஏதோ பெரிய ஹாஸ்யத்தைக் கேட்டு ரசித்தவன்போல் கடகடவென்று வாய்விட்டுச் சிரித்தான் ரங்கதுரை. வண்டி மீண்டும் வேகமாக அழகர்நத்தம் ராஜபாட்டையில் ஓடத் தொடங்கியது.

# 2

அழகர் நத்தத்தின் எல்லை ஆரம்பத்திலேயே முதல் வீடாகப் பண்ணையார் ஏகாம்பரத்தின் மாளிகை அமைந் திருந்தது. சற்றுத் தொலைவிலிருந்து வந்த சதங்கை ஒலியைக் கேட்டதும்,வாயில் காக்கும் பொன்னப்பன் அதுவரை சுவாரஸ்யமாக மென்று கொண்டிருந்த வெற்றிலைக் சுத்தையைக் காரி ஒருபுறம் உமிழ்ந்து விட்டுத் தலையில் சுற்றியிருந்த முண்டாசுத் துணியை அவிழ்த்துத் தோளில் போட்டுக் கொண்டான். சிறிதளவு மட்டுமே திறந்து இருந்த வாயில் புறத்து இரும்புக் கதவுகளை நன்றாகத் திறந்து வைத்துவிட்டு, இருபுறமும் அலங்காரமாக அமைக்கப்பட்டு இருந்த சிமெண்டுத் தூண்கள் உச்சியில் தொங்கிய புஷ்பக் கொத்துகள் போன்ற மின்சார விளக்குகளை எரியவிட்டான். பளிச்சென்று ஜோதிமயமாக நாலாபுறமும் ஒளி வீசி எரிந்த அந்த விளக்குகளின் வெளிச்சம் நடைபாதை மீது வெகு தூரம் வீசிக் கொண்டு இருந்தது.

வீட்டை நெருங்கிவிட்ட உற்சாகத்தில் வண்டிக் காளை கள் தலைதெறிக்க ஓடிவந்து கொண்டு இருந்தன. ராஜ பாட்டையில் இருந்து விருக்கென ஒரு குலுக்கலுடன் வண்டி திரும்பியபோதுதான், உமாவிற்குத் தாங்கள் செல்ல வேண்டிய இடத்தை நெருங்கிவிட்ட உண்மை புலனாகியது. சாய்ந்த நிலையிலிருந்து எழுந்து உட்கார்ந்து, கழுத்தை நீட்டி அவள் வெளியே எட்டிப் பார்த்துத் தன் சூழ்நிலையைப் பற்றி ஆராயுமுன், பண்ணையாரின் வில்வண்டி கனவேகமாக ஓடிச்சென்று, மிகவும் பழைய நாள் பாணியில் கட்டப்பட்டிருந்த ஒரு பெரிய வீட்டின் முன் வந்து சட்டென நின்றுவிட்டது.

''தங்களுடைய வீட்டிற்கு வந்துவிட்டோம், மெதுவாகப் பார்த்து இறங்குங்கள். அவசரப்பட வேண்டாம்'' என்று

கூறியவண்ணம் ரங்கதுரை வண்டியின் குறுக்குக் கம்பியைக் கழட்டி விட்டு வெளியே குதித்தான். அதுசமயம் வீட்டின் உட்புறத்திலிருந்து வந்த சற்று வயதான ஒரு மனிதர், ''வாருங்கள் அம்மா! வாருங்கள். பிரயாணம் சௌகர்யமாக இருந்ததா?'' என்று உபசாரமாகக் கேட்ட வண்ணம் விரைவாக வண்டி அருகில் வந்து நின்றார்.

வாயிற்படியருகில் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்த விளக்கு வெளிச்சத்திலே அந்த மனிதரை ஏற இறங்க ஒரு முறை உற்றுக் கவனித்த உமாவிற்கு அவர் யாரென்று அறிமுகம் இல்லாமலேயே விளங்கிவிட்டது. சாயலில் ஏறக்குறைய ரங்கதுரையை ஒத்திருந்த அந்த மனிதர்தான் பண்ணையாரின் மானேஜர் வரதராஜன் என்பதை ஊகித்துக் கொண்ட அவள் கைகுவித்து அவருக்கு நமஸ்காரம் செய்தாள்.

''பிரயாணம் சௌகரியமாக இருந்தது. ஆமாம் அப்பாவிற்கு உடம்பு இப்பொழுது எப்படி இருக்கிறது?'' என்று மெல்லிய குரலில் மிகவும் தயக்கமாகக் கேட்டாள்.

பஞ்சகச்ச வேஷ்டிமீது முழங்கால் வரை நீண்டு தொங்கிய கருப்புக் கோட்டின் மேல் விசிறிப் போட்டிருந்த சரிகை உருமாலையை யோசனையுடன் தடவிக் கொடுத்துக் கொண்டு வரதராஜன் மௌனமாக இருந்தார். பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''இன்று பிற்பகல் திடீரென்று உடம்பிற்கு அதிகமாகிவிட்டது. பெரிய டாக்டரை அழைத்து வந்து காட்டுவது நலம் என்று நானே மோட்டார் வண்டியை எடுத்துக் கொண்டு டவுனுக்குப் போயிருந்தேன். நாங்களும் இப்பொழுதுதான் வந்தோம். அதற்குள் நீங்களும் வந்து விட்டீர்கள். வாருங்கள் உள்ளே போவோம்'' என்று விநயமாகப் பதில் அளித்தார். வயோதிகத்தில் தளர்ந்து நார்போலாகிவிட்ட அவரது காதுகள் தாங்கள் சுமந்து நின்ற கண்டைக்காய் பருமன் அளவான வைரக்கடுக்கன்களைத்



தூக்க முடியாதவை போன்று, அவர் பேசும்பொழுதும், திரும்பிய பொழுதும் நீலவொளியை வாரி நாலுபுறமும் கக்கிக்கொண்டு ஊசலாடிக் கொண்டிருந்தன.

முன்கட்டைத் தாண்டி இரண்டாவது கட்டிற்குள் நுழைந்து கூடத்தை ஒட்டியிருந்த மாடிப்படிகள்மீது அவர் வழிகாட்டிக் கொண்டு முன்னால் சென்றார். உமா அவரைப் பின் தொடர்ந்து, அவர் காட்டிய வழியே சென்று கொண்டிருந்தாள். மாடிப்படிகள் மீது விரித்து இருந்த கம்பளம் ஆங்காங்கே நைந்து கிழிந்து தொங்கிக் கொண்டிருந்ததையும், பாதச் சுமையைத் தாள முடியாது அந்த மரப்படிகள் கிரீச்சென்று ஓலமிடுவதையும் அவள் கவனிக்கத் தவறவில்லை.

''இதுதான் பண்ணையாரது படுக்கையறை'' என்று வரதராஜன் வராந்தாவை ஒட்டியிருந்த ஒரு பெரிய அறையைச் சுட்டிக் காட்டிவிட்டு, அங்கே கிடந்த பழைய பிரம்பு நாற்காலிகளில் ஒன்றை இழுத்துப்போட்டு அவளை அதில் உட்காரும்படி மெத்தவும் உபசரித்தார்.

''டாக்டர் உள்ளே நோயாளியைப் பரிசோதனை செய்து கொண்டு இருக்கிறார். அதனால் நாம் இங்கே காத்து இருக்கவேண்டும்'' என்று கூறிவிட்டுத் தமது முகவாயை வலது கரத்தால் மெல்லத் தடவிக்கொண்டார். அவரது வலது கை விரல்கள் இரண்டில் பச்சையும், வைரங்களும் வைத்து இழைத்த இரண்டு மோதிரங்கள் விளக்கொளியில் மின்னிக் கொண்டிருந்ததை உமா அசைப்பில் கவனிக்க நேர்ந்தது. எதிர்ப்புறம் இருந்த சுவரில் தொங்கிய பழைய படங்களையும், சுற்றிலும் காணப்பட்ட மிகவும் பழுதாகி விட்டிருந்த ஆசனங்களையும் கூர்ந்து கவனித்த அவளது உள்ளம், 'ஏது? பண்ணையாரைவிட இந்த மானேஜரின் பொருளாதார நிலை தேவலைபோல் இருக்கிறதே' என்று சிந்திக்கத் தொடங்கிவிட்டது.

இந்தச் சமயம் வராந்தாவின் மறுகோடியிலிருந்து பல்லக்கைச் சுமந்து வருகிறவர்கள்போல், இரு வேலையாட்கள் ஒரு கிழவியை ஒரு நாற்காலியில் வைத்து சுமந்து கொண்டு வந்தார்கள். வரதராஜன் செய்த சைகையைக் கண்ணுற்றதும் நாற்காலியை அறைக்கு முன்னால் கீழே வைத்துவிட்டு, அவர்கள் அப்பால் சென்றுவிட்டார்கள். முற்றும் பழுத்து,எந்தச் சமயத்திலும் கீழே விழத் தயாராக இருந்த பழுத்த பழத்தினைப் போன்று அவள் தென்பட்டாள். எலும்புக் கூட்டின் மீது போர்த்தியிருந்தது போன்றிருந்த அவளது தசைகள் கீழே விழுந்து தொங்கிக் கொண்டிருந்தன. தண்ணீரில் நனைந்த கோழியின் சிறகு போல் நனைந்த கூந்தல் கழுத்தின் பிடறி மீது ஆங்காங்கே சிறிதளவு தொங்கிக் கொண்டிருந்தது. நரைத்துக் கண் இமை மீது தொங்கிய தன் புருவங்களைத் தூக்கி அவள் உமாவை வெறித்துப் பார்த்தாள்.

''வரதராஜா! யார் இது?'' என்று தளர்ந்த குரலில், ஆனால் மிகவும் அதிகாரமாக அதட்டிக் கேட்டாள்.

ஏதோ யோசனையாக நின்ற வரதராஜன் திடுக்கிட்டு விழித்துக் கொண்டு உமாவின் அருகில் வந்து,''அம்மா! இவர் தான் உங்கள் பாட்டியார், ஸ்ரீமதி தையல்நாயகி அவர்கள். வயோதிகத்தில் மெத்தவும் நலிந்துவிட்டிருக்கிறார்'' என்று அறிமுகம் செய்து விட்டு, கிழவியின் பக்கம் திரும்பி,''அம்மா! உங்கள் பேத்தி உமாமகேஸ்வரி. ஊரில் இருந்து இப்பொழுது தான் வந்திருக்கிறார்'' என்று முடித்தார்.

''யாரது? வைதேகியின் மகளா? நல்ல சமயத்திற்கு அப்பனைப் பார்க்க வந்து இருக்கிறாள்'' என்று கிழவி சூள் கொட்டினாள்.

தனக்கு அவள் அளித்த இந்தக் காரசாரமான வரவேற்பை மனதில் கொள்ளாது உமா, ஆசனத்தை விட்டு எழுந்து, கிழவி



அருகில் வந்து கை குவித்து, ''பாட்டி! நமஸ்கரிக்கிறேன். என்னை ஆசிர்வதியுங்கள்'' என்றாள்.

''போகிறது போ! உனக்கு இவ்வளவாவது மட்டு மரியாதை தெரிகிறதே. இவ்வளவு நாள் கழித்துப் பார்க்கிற பாட்டிக்கு ஒரு கூழைக் கும்பிடாவது போட வேண்டும் என்று தெரிஞ்சு கொண்டிருக்கிறாய். உன் தாயார் வைதேகி இருந்தாளே, அந்த மகராஜி எனக்கு ஒரு நாள் கூடக் கைகுவித்து நமஸ்கரித்ததில்லை. மாமியார் என்கிற மரியாதையும் கிடையாது. அவளுக்குப் புருஷன் என்ற மதிப்பும் கிடையாது. தான் என்ற அகந்தை அதிகம். இல்லாவிட்டால் அந்த ராக்ஷஸி மூன்று வயது குழந்தை உன்னைத் தூக்கிக் கொண்டு கட்டின புடவையுடன் வீட்டை விட்டு வெளியேறத் துணிவாளா? இருபது வருஷம் என் மகனது வாழ்வே பாழாகிப் போச்சு! எத்தனையோ முறை சொன்னேன். வேறு ஒரு பெண்ணைக் கட்டிக்கொள் என்று முட்டிக் கொண்டேன். அவன் கேட்டால் தானே? ஆமாம். கடைசியில் அந்த அகங்காரி காசநோயில் செத்துவிட்டாளாமே? வரதராஜன் சொன்னார். இல்லாவிட்டால் எனக்கு என்ன தெரியப்போகிறது?'' என்று நீண்டதொரு பிரசங்கத்தை முடித்து விட்டு, உமாவை மீண்டும் ஒரு முறை வெறிக்கப் பார்த்தாள் தையல்நாயகி.

வருஷங்கள் பல சென்றும் பாட்டியாருக்குத் தன் தாயின் மீது ஏற்பட்டிருந்த வன்மம் குறையவில்லை என்பதை உணர்ந்து கொண்ட உமாவின் உள்ளம் மிக்க வேதனையுற்றது. ஏதோ சொல்ல அவள் வாய் எடுக்கு முன், அறையின் கதவைத் திறந்து கொண்டு வைத்தியர் வெளியே வந்தார். ஒரு சிறு பீங்கான் கிண்ணத்தில் மருந்து நீரைச் சுமந்தவண்ணம் பயபக்தியுடன் ஆங்கிலோ இந்திய தாதிப் பெண் ஒருத்தி அவருக்குப் பின்னால் அறையினின்று வெளிப்பட்டாள்.

''டாக்டர் ஐயா! என் மகனுக்கு உடம்பு எப்படி இருக்கிறது. சொல்லுங்கள் ஐயா, பிழைப்பானா மாட்டானா,

அவனுக்கு முந்தி நான் போகக் கூடாதா? நான் ஏன் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கவேண்டும்?'' என்று யாரும் பேசும் முன் தையல்நாயகி பிரலாபித்துவிட்டு வாய்விட்டு அழ ஆரம்பித்தாள். குனிந்து மிகவும் க்வனமாகக் காகிதத்தில் மருந்து விவரங்களை எழுதிக் கொண்டிருந்த வைத்தியர் பொறுமையற்றவராக விருக்கென அவள் அருகே வந்தார். ''ஸ்! இப்படி இரைந்து கூச்சல் போடாதீர்கள்! நோயாளிக்கு நிசப்தம் அவசியம். என்னால் முடிந்ததைச் செய்கிறேன். உயிரைக் கொடுக்கும் வித்தை எனக்குத் தெரியாதே. அம்மா இன்று இரவு போனால்தான் எதுவும் என்னால் சொல்ல முடியும்'' என்று கூறிவிட்டு, அதிகம் பேசிவிட்டவர்போல் முகத்தைக் கடுத்துக் கொண்டு மானேஜர் வரதராஜனிடம் ஒரு சீட்டை நீட்டினார். ''இன்று இரவு தாதிப் பெண் இங்கிருந்து நோயாளியைக் கவனித்துக் கொள்ளட்டும்'' என்று கூறி விட்டு, மாடிப்படியை நோக்கி விரைந்தார்.

''ஒரு நிமிஷம் ,டாக்டர்'' என்று பதறிக் கொண்டு வரதராஜன் பின்னால் ஓடி, கையில் எடுத்து வைத்திருந்த ரூபாய் நோட்டுக் கத்தை ஒன்றை அவரிடம் கொடுத்தார்.

இதற்கு மேலும் உமாவினால் சும்மா நின்று கொண்டிருக்க முடியவில்லை. எனவே ஒரே எட்டில் வைத்தியரை அணுகி, ''டாக்டர் ஸார்! என் தந்தையைக் காண பட்டணத்திலிருந்து இப்போதுதான் நான் வந்தேன். அவரிடம் நான் இரண்டு வார்த்தைகள் பேசலாமா? அதனால் தவறு இல்லையே?'' என்று தயக்கமாகக் கேட்டாள்.

வைத்தியர் அவளை உறுத்துப் பார்த்துவிட்டு வரட்சியாகப் புன்முறுவல் செய்தார்.

''பேசுவதாவது? அவர் நினைவு தப்பி ஆறுமணி நேரமாகிறது. இந்த நிலையில் நான் ஏதும் நிச்சயமாகச் சொல்ல முடியாதவனாக இருக்கிறேன். சப்தம் செய்யாது ஒவ்வொரு



வராக அவர் அருகே போய்ச் சில நிமிஷங்கள் நின்று பார்த்துவிட்டுப் போகலாம். அதற்கு ஒன்றும் ஆக்ஷேபணை இல்லை. ஆனால் யாரும் அந்த அறையில் அழுது கூச்சல் போட்டு ரகளை செய்யக்கூடாது''என்று பதில் அளித்து விட்டு வேகமாக இறங்கிக் கீழே சென்றார். வரதராஜன் வைத்தியரை வழி அனுப்பிவிட்டு மீண்டும் மாடிப் பக்கம் வந்தார்.

முதலில் தையல் நாயகி தன் மகனைப் பார்க்க விரும்பவே, ஆட்கள் அவள் வீற்றிருந்த நாற்காலியைத் தூக்கிக் கொண்டு அறைக்குள் சென்றார்கள். நோயாளிக்குப் படுக்கையை சரிப்படுத்திக் கொண்டிருந்த தாதிப் பெண் பார்த்த பார்வையில், கிழவி தன் தொண்டையில் எழ இருந்த பிரலாபத்தை அடக்கிக் கொண்டாள். சிறிது நேரம் சென்றதும் வரதராஜன் உத்தரவுப்படியே ஆட்கள் நாற்காலியைச் சுமந்து கொண்டு அறையைவிட்டு வெளியே சென்றார்கள்.

அடுத்தபடியாக மானேஜர் முன் செல்ல, உமா பின்னால் மிகவும் தயங்கிக்கொண்டு தன் தந்தையின் அறைக்குள் நுழைந்தாள். பிறந்ததிலிருந்து அன்றுவரை ஒரு முறையேனும் காணாத தந்தையைப் பார்க்கப் போகிறோம் என்ற நினைப்பில் அவளது இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. இனம் விளங்காத ஒரு சஞ்சலம் நெஞ்சத்தை அடைத்துக் கொள்ளவே, கண்களில் நீர் பெருக அறையின் மத்தியில் கிடந்த பெரிய மஞ்சத்தருகே வந்து நின்றாள்.

வெட்டிச்சாய்ந்த நெடுமரம்போல ஏகாம்பரம் படுக்கை மீது தம் நினைவின்றிக் கிடந்தார். அவரது மாநிற மேனி நோயினால் கறுத்துக் காணப்பட்டது. தயிரைக் கடையும் ஒலியைப் போன்று நெஞ்சினின்று எழுந்த சிரமமான சுவாசத்தைத் தவிர அவரது உடம்பில் அசைவே தென்படவில்லை. சிறிது நேரம் தன்னைப் பெற்ற தந்தையையே உற்றுப் பார்த்துக்கொண்டு நின்ற உமா, வரதராஜன் மெல்ல நகர்வதைக்

கண்டு அறையை விட்டு மனவேதனையுடன் வெளியே வந்தாள்.

''கீழே செல்வோம். வெந்நீர் தயாராக இருக்கிறது. ஸ்நானத்தை முடித்துக் கொண்டதும், கொஞ்சம் ஆகாரம் அருந்திவிட்டுக் களைப்பாறச் சிறிது நீங்கள் தூங்கியாக வேண்டும்'' என்று மானேஜர் நினைப்பூட்டியதும் உமா கீழே இறங்கிச் சென்றாள்.

பின் கட்டிற்கு அடுத்தப்படியாக இருந்த பெரிய ஸ்நான அறையில் பிரம்மாண்டமானதொரு பித்தளை அண்டாவில் சூடான வெந்நீரை நிரப்பி வைத்துக் கொண்டு ஒரு வேலைக்காரப் பெண் அவளுக்காகக் காத்திருந்தாள். இந்த மாதிரியான ஆசார உபசாரங்கள் உமாவுக்குப் பழக்கம் இல்லை. எனவே அவள் விரைவில் ஸ்நானத்தை முடித்துக் கொண்டு வேற்றுடை அணிந்து கொண்டு, போஜன அறைக்கு வந்தாள். இதுவரை வாயிலிலேயே நின்று கொண்டு தவம்புரிந்து கொண்டிருந்த ரங்கதுரை இப்பொழுது தன் தந்தையுடன் அங்கே பிரசன்னமாகியிருந்தான். அவர்கள் இருவரும் அவள் வருகைக்காக அங்கே காத்திருந்தார்கள்.

வழுவழுப்பான சிவப்பு சிமெண்டு பூசிய தரைமீது சமையற்காரன் மூன்று தலைவாழை இலைகளைப் போட்டு போஜன வகைகளை வேகமாகப் பரிமாறத் தொடங்கினான். மானேஜர் வரதராஜன் உமாவின் அருகில் அமர்ந்து கொண்டார். ''இது உங்கள் தோட்டத்தில் வளர்ந்த கத்தரிக்காய், அம்மா! சிறுமணி சம்பா அரிசி பண்ணையார் வீட்டுச் செலவிற்காகப் பிரத்தியேகமாகப் பயிரிட்டது. வீட்டில் காய்ச்சிய புத்துருக்குப் பசு நெய், தாராளமாகப் போட்டுக் கொள்ளுங்கள்'' என்று அடிக்கடி உபசரித்து அவளை உற்சாகமூட்டிக் கொண்டிருந்தார். மானேஜரும் அவரது மைந்தனும் நன்றாக போஜனத்தைச் சுவைத்துச் சாப்பிட்டார்கள். உமாவுக்கும் நல்ல பசிதான். ஆனால்



அவளுக்கு இருந்த மனநிலையில் அவளால் ஒரு கவளம் கூட உணவைச் சரியாக உட்கொள்ள முடியவில்லை.

வரதராஜன் சிறிது நேரம் தங்கியிருந்து பண்ணையார் உடல்நிலை எப்படி ஆரம்பத்திலிருந்து நாளடைவில் நலிந்து கொண்டு வந்தது என்பதையும், எந்த விதமான சிகிச்சைகள் செய்யப்பட்டன என்பதையும் சுருக்கமாக விவரித்துவிட்டு, மறுநாள் வந்து காண்பதாகக் கூறித் தன் மகனுடன் விடை பெற்றுக்கொண்டு வீடு சென்று விட்டார்.

இரவு பத்து மணிக்குமேல் உமா படுக்கச் சென்றாள். அவளுக்காகக் கீழ் கட்டில் ஓர் அறை தயார் செய்யப் பட்டிருந்தது. அறைக்குள் அவளுக்குத் துணையாக ஒரு வேலைக்காரப் பெண்ணும் வந்து படுத்துக் கொண்டிருந்தாள். விளக்கை அணைத்து விட்டு ஜன்னல் புறம் கிடந்த கட்டிலின் மீது வந்து படுத்தாள் அவள். புதிய சூழ்நிலை, தனிமை இரண்டும் அவள் உள்ளத்தை வேதனை செய்து கொண்டிருந்தன. 'இவ்வளவு செல்வ வசதிகள் இருந்தும் அவள் தாயார் அனாதை போல் நகரத்து தர்ம ஆஸ்பத்திரி ஒன்றில் காச நோயால் ஏன் உயிரை விட வேண்டும்? இருபது வருஷ காலமாக மீண்டும் கூடி வாழ முடியாதபடி அவளுக்கும் பண்ணையாருக்கும் இடையே ஏற்பட்ட அந்த மனஸ்தாபத்தின் மர்மம் என்னவாகத்தான் இருக்கும்?' என்று தன் மனத்தில் பற்பல எண்ணி, சமீபத்தில் மரணமடைந்துவிட்ட தன் தாயை நினைத்துத் துயரம் தாள முடியாது குமுறி அழுது விட்டாள்.

கொஞ்ச நேரம் சென்றதும் உமா தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டாள். ''ஒரு சமயம் அன்று இரவுப் பொழுது நன்றாகப் போய்விட்டால், பண்ணையார் உடல்நிலை அபிவிருத்தியடையத் தொடங்கி விட்டால், ஒரு நாள் இல்லாவிடில் ஒரு நாள் அவள் கட்டாயம் அவர்களது பிரிவின் காரணத்தைக் கண்டு பிடிக்காமல் போய்விடுவாளா? தாயார்

தான் அதை மனத்திலே புதைத்து வைத்துக் கொண்டு மாண்டாள் என்றால், தந்தையும் அப்படியே இரும்பு மனம் படைத்தவராக இருக்கமாட்டார். விடியட்டும் பார்ப்போம்'' என்று எண்ணியவளாகப் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு அயர்ச்சி தாளாது உறங்கலுற்றாள்.

எவ்வளவு நேரம் தூங்கினாளோ, அவளுக்கே தெரியாது. யாரோ தன்னைக் குலுக்கி எழுப்புவதை உணர்ந்து திடுக்கிட்டு எழுந்தாள். ''ஐயாவுக்கு உடம்பு அதிகமாகிவிட்டதாம். மானேஜர் உங்களை உடனே மாடிக்கு வரச்சொன்னார்'' என்று வேலைக்காரப் பெண் பதட்டமாகக் கூறினாள்.

உமா தன் தந்தையின் அறையை அடைந்த பொழுது பண்ணையாரின் ஆவி பிரிந்து சில நிமிஷங்களாகி இருந்தது.

## 3

**ப**ண்ணையார் மகள் என்ற தனது புதிய அந்தஸ்தை உமாவினால் சில தினங்கள் நம்பவே இயலவில்லை. சில மாதங்களுக்கு முன்பு அவளிடம் யாராவது வருங்கால வாழ்க்கையில் ஏற்படக்கூடிய திடீர் மாற்றத்தைப் பற்றிக் கூறியிருந்தால், அவள் ஒரு பொழுதும் அதை நம்பியே இருந்திருக்க மாட்டாள். ஏனெனில் அழகர்நத்தத்துப் பிரபல செல்வந்தர் ஏகாம்பரத்தின் ஏக புதல்வி என்ற அவளது ஸ்தானத்திற்கும், நகரத்தின் ஒரு மூலையில் குடத்தில் ஏற்றி வைத்த குத்து விளக்குப்போல் பொலிவு இன்றி வறுமையுடன் போராடிக் கொண்டிருந்த பாட்டு உபாத்தியாயினி வைதேகியின் செல்வமகள் என்ற நிலைக்கும் மலைக்கும் மடுவிற்குமிருந்த வித்தியாசம் இருந்தது. அதனால் தன் வாழ்க்கையில் திடீரென்று ஏற்பட்ட இந்த மாற்றத்தை அவள் ஒரு அதிசயக் கனவோ என்று கூட சம்சயிக்கத் தொடங்கினாள்.



உமா பிறந்ததிலிருந்து அழகர்நத்தம் புறப்பட ஆயத்தமான சில தினங்கள்வரை தனது பிறப்பின் ரகசியத்தைக் கொஞ்சமும் அறியாதிருந்தாள். அவளுக்கு நினைவு தெரிந்த பருவத்திலிருந்து அவளும், அவளது தாயும், பாட்டனாரும் ஒரு சிறு வீட்டில் நகரத்தின் ஒரு பகுதியில் ஏழ்மையிலே உழன்று வாழ்ந்து கொண்டிருந்தனர். உமாவின் தாய் வைதேகிக்கு சங்கீத ஞானம் அபரிமிதமாக இருந்தது. அந்தக் கலை ஒன்றையே மூலதனமாகக் கொண்டு, அவர்களது சிறு குடும்பம் வாழ்க்கையில் முன்னேற வெகுவாகப் போராடிக் கொண்டிருந்தது. ஒரு சில காலம் வைதேகி தான் வசித்து வந்த வீட்டிலேயே ஒரு சிறு சங்கீதப் பள்ளிக் கூடத்தை நடத்திக் கொண்டிருந்தாள்.

செல்வ வசதியும், விளம்பர வசதியும் மிக்க பல்வேறு சங்கீத ஸ்தாபனங்களின் போட்டி நாளடைவில் ஏற்பட்டு விடவே, அவளது கலைத் திறமைக்கு மகிமையும் ஆதரவும் குறைந்து விட்டன. பள்ளிக் கூடத்தை நடத்தப்போதிய பணவசதி இல்லாது அவள் அதை ஆரம்பித்த சில வருஷங்களில் மூடி விட நேர்ந்தது. வயோதிகத்தினால் தளர்ந்து நலிந்து போன வைதேகியின் தந்தை, உமாவின் பன்னிரண்டாவது வயதில் திடீரென்று மாரடைப்பினால் இறந்து போனார்.

சின்னஞ்சிறு குழந்தையுடன் தன்னந்தனியே அனாதையாக இவ்வுலகில் விடப்பட்ட வைதேகிக்கு, தன் மகளது வருங்கால நலனுக்காக ஏதேனும் ஓர் உத்யோகம் செய்து வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. பிறரிடம் அடிமையாக ஊழியம் செய்வதில்லை என்று அது நாள் வரை அவள் கொண்டிருந்த கொள்கைகளை வேறு கதியின்றிக் கைவிட நேர்ந்தது. அவள் வசித்து வந்த தெருவிற்கு அருகாமையில் இருந்த ஒரு சங்கீதப் பள்ளியில் மிகவும் அரும்பாடுபட்டு வீணை போதிக்கும் உபாத்தியாயினியாக ஒரு வேலையை விரைவில் தேடிக் கொண்டாள். மாதச் சம்பளமாக அவளுக்குக்

கிடைத்த முப்பது ரூபாய்கள் தாயும் மகளும் வயிறார உண்ணுவதற்குக் கூடப் போதியதாக இருக்கவில்லை.

இந்த நிலையில் வைதேகிக்குத் தன் ஒரே செல்வ மகளுக்குக் கலாசாலைக் கல்வி கற்பித்து அவளை ஒரு பட்டதாரிணியாக்க வேண்டுமென்ற ஆசை அபரிமிதமாக இருந்தது. தன் மகளது வாழ்க்கை முன்னேற்றத்திற்காக அவள் எத்தகைய தியாகமும் செய்யத் தயாராக இருந்தாள். ஒரே புடவையைத் துவைத்து உடுத்திக் கொண்டு, பாதி வயிற்றுக்கு மட்டுமே சாப்பிட்டுத் தன்னால் ஆன பொருளைச் சேமித்து, மகளை நகரத்தில் ஒரு பெரிய கலாசாலையில் படிக்க வைத்தாள். சில வருஷங்களில் பட்டதாரிணியாகிக் கல்விக் கலைகளில் சிறந்தவளாக விளங்கப்போகும் தனது மகளைப் பற்றி எண்ணி எண்ணிப் பெருமிதமடைந்து போன அவளுக்கு எதுவும் அப்பொழுது அவ்வளவு பயங்கரமாகத் தோன்றவில்லை.

வைதேகியின் மனத்திலே இருந்த திடம் அவளது மெல்லிய உடலிலே இருக்கவில்லை. எனவே, நாளடைவில் அவளது ஆரோக்கியம் நலிவடையத் தொடங்கியது. ஆகாரத்தில் நாட்டக் குறைவும், லேசான காய்ச்சலும் முதலில் ஆரம்பமாயின. இந்தச் சமயம் உமா மஹேஸ்வரி தனது பி.ஏ. பட்டத்திற்குப் படித்து கொண்டிருந்தாள். அவளது படிப்பு முடியும்வரை எப்படியாவது பொறுத்துத்தான் ஆக வேண்டும் என்ற பிடிவாதத்தில் தனது நலிந்த நிலையைப் பொருட்படுத்தாது வைதேகி சிரமப்பட்டு உத்தியோகம் செய்து கொண்டிருந்தாள். தக்க சிகிச்சை இல்லாததனாலும், ஒய்வு குறைவாக இருந்ததனாலும் அவளது நோய் விரைவாக முற்றத் தொடங்கவே, மகள் பரிக்ஷை எழுதி முடித்த சில தினங்களில் தாய் படுத்த படுக்கையாகிவிட்டாள்.

கையில் பொருள் ஏதும் இன்றி, நோயாளித் தாயுடன் உமா மஹேஸ்வரியின் வாழ்க்கை பெரியதொரு போராட்டமாக



ஆரம்பமாகியது. இருபத்து மூன்று வருஷங்கள் தன் நலன் ஒன்றிற்காகவே உயிரை வைத்துக்கொண்டு வாழ்ந்த தனது அருமைத் தாயை, அவள் இந்தச் சமயம் எப்பாடுபட்டாவது போஷிக்க வேண்டிய கடமை ஏற்பட்டுவிட்டது. எனவே, அவள் காலதாமதம் ஏதும் செய்யாது உத்தியோகம் ஒன்றைத் தேடிகொள்ள விரும்பினாள்.

செல்வாக்கும் மனித சகாயமும் இல்லாத உமாவிற்கு அறிவும், திறமையும் இருந்தும் பயன் இருக்கவில்லை. 'வேலை காலி' என்று கேள்விப்பட்டு அவள் விண்ணப்பத் தாளுடன் நகரத்திலிருந்த பல்வேறு ஸ்தாபனங்களில் நாள் முழுவதும் ஏறி இறங்கி வந்து கொண்டிருந்தாள். பத்திரிகையில் கண்ணுற்ற 'வேலை காலி' விளம்பரங்கள் அனைத்திற்கும் சளைக்காது மனு எழுதிப் போட்டுப் பார்த்தாள். மூன்று மாத காலம் அலைந்து திரிந்தும் அவளுக்கு முப்பது ரூபாய்ச் சம்பளத்தில் ஒரு குமாஸ்தா உத்தியோகம் கூடக் கிடைக்கவில்லை. நோயாளியான தாயாருக்கு 'டானிக்' மருந்துகள் ஏதும் வாங்கிக் கொடுத்து சிகிச்சை செய்ய முடியாவிட்டாலும், வயிறு நிறைய உணவேனும் கொடுத்துக் காக்க வேண்டியது முக்கியம் என்ற நிர்ப்பந்த நிலையில் உமாவிற்கு ஒரு வழியும் புலனாகவில்லை. பிறந்ததிலிருந்து அவள் தன் தாயையும், பாட்டனையும் தவிர, உற்றார் உறவினர் நண்பர்கள் என்று வேற்று மனிதர்கள் யாரையும் கண்டதில்லை, கேட்டதுமில்லை. வைதேகி தான் உண்டு, தன் வீடு உண்டு என்று சமுதாயத்தினின்று ஒதுங்கி வாழ்ந்தவள். தன் மகளை அழைத்துக் கொண்டு அவள் தெருவிலிருந்த பக்கத்து வீட்டிற்குக் கூடப் போனவள் அல்ல. அதுபோல் அக்கம் பக்கத்தவர்கள் சிநேகிதத்தையோ உறவையோ அவள் ஒரு பொழுதும் வேண்டியதும் கிடையாது.

எனவே, செல்வத்திலே திளைத்துக் கொண்டு சுகபோக வாழ்க்கையில் இப்படித் தனக்கு ஒரு தந்தை உயிருடன் இருக்கிறார் என்ற உண்மை உமாவுக்குத் தெரியவே தெரியாது.

ஐந்து வயது அறியாச் சிறுமியாக இருக்கையில் ஒரு முறை அவள் தாயார் அவளுக்கு ஒரு விஷயம் கூறினாள். பொருள் தேடி வர ரங்கூனுக்கு அவளது தந்தை புறப்பட்டு சென்றார் என்றும், அங்கேயே திடீரென்று நோய்வாய்ப்பட்டு இறந்து போனார் என்றும் அவள் கூறியிருந்தாள். இந்தக் கூற்றை அவள் பூரணமாக நம்பியதனால், தந்தை என்ற நினைவையே நெஞ்சத்தினின்று அகற்றிவிட்டு, தாய் ஒருத்தியையே பாசமுடன் நேசித்து வாழ்ந்து கொண்டிருந்தாள்.

உதவி செய்ய உற்றார் உறவினர் என்று யாருமே இல்லாததனால் வேறு வழியின்றி வேலை கிடைக்கும் வரை உமா தங்கள் வீட்டில் தங்களுக்குச் சொந்தமாக இருந்த இரண்டொரு பாத்திரங்கள், சாமான்கள், நகைகள் முதலிய வற்றை ஒவ்வொன்றாக விற்றுக் குடும்பத்தை நடத்தத் தொடங்கினாள். விற்றுப் பணமாக்க லாயக்கான பொருள்கள் அனைத்தும் விற்றாகிவிட்டன. இனி நாளைக்கு என்ன செய்வோம் என்ற பயங்கரமான நிலை ஏற்பட்ட பொழுது வைதேகியின் உடல்நிலை மிகவும் அபாயகரமாகத் தொடங்கிவிட்டது. இனி அவளை வீட்டில் இருத்திக் கொண்டு பணிவிடைகள் செய்து பயன் இல்லை என்று உணர்ந்த உமா, ஒரு நாள் காலை தன் தாயை ஒரு வண்டியில் ஏற்றிக் கொண்டு நகரத்து தர்ம ஆஸ்பத்திரி ஒன்றில் கொண்டுபோய் சேர்த்து விட்டாள்.

வைதேகியைப் பரிசோதனை செய்து பார்த்த வைத்தியர் தலையை அசைத்து விட்டார். ஒரு வருஷத்துக்கு முன்பே தக்க சிகிச்சைகள் செய்திருக்க வேண்டும் என்றும், காசநோய் முற்றி விட்டதினால் பிழைப்பது துர்லபம் என்றும் உண்மையைப் பச்சையாக மகளிடம் எடுத்துக் கூறிவிட்டார். தனது அருமைத் தாய் சில தினங்களில் மரணமடைந்து விடக் கூடும் என்பதை உணர்ந்து கொண்ட உமாவின் உள்ளம் பட்ட பாட்டை விவரிக்கவே இயலாது. இருபத்து மூன்று வயதுப் பெண்ணாக,



வாட்ட சாட்டமாக வளர்ந்திருந்தும், கலாசாலைக் கல்வி கற்றிருந்தும் தன்னால் தன் தாயாருக்கு ஒரு வகையிலும் கடமை புரிய இயலாது போய்விட்டதை எண்ணி அவள் கண்ணீர் உகுப்பதைத் தவிர வேறு வழியில்லா திருந்தது.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஏழாவது தினம் வைதேகியின் உடல்நிலை மிகவும் அபாயகரமாகிவிட்டது. அன்று காலையிலிருந்து அவளால் சரியாக சுவாசிக்கவும் கூடவில்லை. தனது நினைவு முழுவதும் மங்கி நிலைமை மோசமாகுமுன் தன் மகளிடம் அவள் முக்கிய விஷயத்தைக் கூறி விட விரும்பினாள்.

எனவே அன்று காலை தன்னைக் காண ஆஸ்பத்திரிக்கு வந்த மகளை வைதேகி அன்புடன் அழைத்துத் தன் படுக்கை மீது அமரும்படி செய்தாள். மகளது இரு கரங்களையும் சிறிது நேரம் மெல்லத் தடவிக் கொண்டு, "உமா! மரணப் படுக்கையிலே இருக்கும் உன் தாயாரை நீ மன்னிப்பாயா?" என்று தாபத்துடன் தடைப்பட்ட குரலில் மெல்லக் கேட்டாள்.

இத்தகைய ஒரு கேள்வியைத் தாயிடமிருந்து எதிர் பார்க்காத உமா திடுக்கிட்டு மெய்பதறிப் போனாள். "அம்மா? மன்னிப்பது, எதற்கு? ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்?" என்று பதட்டமாக வினவினாள். தாயினது பலஹீன நிலைமையையும், அவள் முகத்திலே படர்ந்து நின்ற துயரத்தையும் காண மகளால் சகிக்கவே முடியவில்லை. உமாவின் அகன்ற இரு விழிகளிலும் கண்ணீர் பெருகிக் கன்னங்கள் மீது வழிந்தோடியது.

வைதேகி, தளர்ந்த தனது இரு கரங்களையும் தூக்கி அன்புடன் மகளின் கண்ணீரை மெல்லத் துடைத்தாள்.

"குழந்தாய்! அழாதே. இருபது வருஷ காலமாக உனக்கு நான் ஒரு பெருந்துரோகம் செய்து விட்டிருக்கிறேன். எவ்வளவோ செல்வத்திலும் சிறப்பிலும் வாழ வேண்டிய

உன்னை, எனது கர்வத்தின் காரணமாக வறுமையில் உழல விட்டேன். உண்மையை அறிந்ததும் நீ என் மீது மனக்கசப்பு அடையாது மன்னித்திடுவாயானால் என் ஆத்மா சாந்தியடையும். கண்ணே! 'உன்னை மன்னிப்பேன்' என்று வாக்குக் கொடு. உன்னிடம் இன்று ஒரு உண்மையைக் கூறப்போகிறேன்'' என்று திணறினாள்.

உமாவின் நெஞ்சு துயரத்தின் சுமையைத் தாளாது வெடித்துவிடும் போலக் குமுறியது. தாய் சொல்லப் போகும் உண்மை என்னவாக இருக்கும் என்று அவளால் ஊகிக்க முடியாததனால் கலவரமும் பீதியும் ஒருங்கே எய்தி, ''அம்மா! நீங்கள் என்னை வளர்த்து ஆளாக்கப் பட்டபாட்டிற்கு என் உடலில் உள்ள ஒவ்வொரு அணுவும் தங்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. இந் நிலையில் நான் மன்னிப்பது என்பதற்கே இடமில்லை. எனினும், உங்கள் மனம் சாந்தி அடைவதற்காக சத்தியமாகச் சொல்கிறேன். உண்மை எதுவாக இருந்த போதிலும் உங்களை மன்னித்து விடுவேன். கவலைப் படாதீர்கள்'' என்று ஆறுதலாகக் கூறிவிட்டுத் தாயை அணைத்துக் கொண்டாள்.

கண்களைத் திரையிட்டு, பார்வையை மறைத்த தன் கண்ணீரை வைதேகி சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். ''உமா, என் செல்வமே! உனது தந்தை இறந்துவிட்டார் என்று இது காறும் நீ என் பேச்சைக் கேட்டு நம்பி வந்தாயல்லவா? அது பொய்! உன் தந்தை உயிருடன் இருக்கிறார்!'' என்று திணறி விட்டுப் பேச முடியாது நிறுத்தினாள்.

திகைப்பும் ஆச்சர்யமும் அடைந்த உமா ''அப்படியா அம்மா!'' என்று ஆவலுடன் கூவினாள்.

''சுமார் இருபது வருஷங்களுக்கு முன்பு அவரிடமிருந்து நான் பிரிந்து தனியே வாழ வெளியே புறப்பட்டுவிட்டேன். அப்பொழுது நீ மூன்று வயது குழந்தை. உன்மேல் கொண்டிருந்த கரை காணாத பாசத்தினால் உன்னை உன் தந்தை எவ்வளவோ வேண்டியும் அவரிடம் வளர்ந்து வர அனுப்ப மறுத்து விட்டேன். உன் பாதுகாப்புக்காக அவர் செய்து வந்த உதவிகளை ஏற்க மறுத்துவிட்டேன். அவர் அளிக்கும் ஒரு செப்புத் தம்பிடி கூட உன் வளர்ச்சிக்காக உபயோகிக்கக் கூடாது என்ற பிடிவாதம் எனக்கு அப்பொழுது தீவிரமாக இருந்தது. என் வயிற்றிலே பத்து மாதம் சுமந்து என்னால் போஷிக்கப்பட்டு, கண்ணின் கருமணியாக நான் நேசித்த என் மகளை நானேதான் பாடுபட்டு வளர்த்து ஆளாக்க வேண்டும் என்ற ஆத்திரம் என் உள்ளத்தில் அபரிமிதமாக இருந்தது. என் ஆசையாலும், என் பிடிவாதத்தாலும் ஏற்பட்ட வறுமைக்கு உன் இளமையை நான் பலியிட்டேன். அதனால் மாற்றியுடுக்க ஆடையின்றி, வயிறாரச் சாப்பிட உணவு கூட இன்றி என்னோடு நீ வீணாக ஏழ்மையிலே இதுவரை உழல நேர்ந்தது. ஆனால், கண்ணே! உமா! நீ கோபமடையாதே. என் மீது மனத்தாங்கல் கொள்ளாதே! உன்னைப் பிரிந்து ஒரு கணமும் என்னால் வாழ முடியாதபடி ஓர் அன்பு என்னை உன்பால் இறுக்கிச் சங்கிலி போட்டுப் பிணைத்து வைத்துக் கொண்டிருந்தது. எவ்வளவோ முறை உன் க்ஷேமத்தின் பொருட்டு உன் தந்தை வசம் உன்னை ஒப்படைக்க நான் எண்ணியதுண்டு. ஆனால் அடுத்த கணம் அந்த எண்ணம் என் மனத்தை விட்டு ஓடிவிடும். உன் பொருட்டு நான் எவ்வளவோ தியாகங்கள் செய்யத் தயங்கியதில்லை. ஆனால் கண்ணே, உமா, உன்னைப்பிரிந்து வாழ மட்டும் என்னால் முடியவில்லை. அந்தத் தியாகத்தை உயிரோடு என்னால் செய்யவே முடியவில்லை. என் மனோபாவம் உனக்கு இப்பொழுது விளங்காது. ஒரு தாயின் உள்ளத்திலே குழந்தை மீது எத்தகையதொரு பாசம் ஏற்படும் என்பதை நீ ஒரு தாயாகும் போது அறிந்து கொள்வாய். இப்பொழுது உனக்கு என் மீது உண்மை அறிந்து வெறுப்பு ஏற்பட்டாலும் அப்பொழுது நீ என்னை மன்னித்து விடுவாய்'' என்று துயரத்துடன் திணறினாள்.

தாயின் கண்களில் பெருகி ஓடிய கண்ணீரை மெல்ல உமா துடைத்து விட்டாள். ''அம்மா! நடந்தது என்னவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். இது சமயம் நீங்கள் மனத்தை அலட்டிக் கொண்டு இப்படிச் சஞ்சலப்படுவது நல்லதல்ல'' என்று அன்புடன் தேற்றினாள்.

இருமித் தொண்டையை சரிப்படுத்திக் கொண்டு வைதேகி மேலே பேசலுற்றாள். ''நடுக்கடலிலே எந்த நிமிஷமும் மூழ்கிவிடத் தயாராக இருக்கும் ஒரு மனிதன், அருகில் மிதக்கும் துரும்பைக்கூட ஆதாரமாகப் பிடித்துக் கொள்ள விரும்புவான் அல்லவா? அதுபோல் துயரக் கடலிலே மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருந்த எனக்கு நீ ஒருத்திதான் வாழ்விலே ஒரு பிடிப்பாக ஆதரவாய் இருந்தாய். மனச் சாந்தியையும் அமைதியையும் உன் குளிர்ந்த முகத்திலே நான் கண்டேன். கன்னங் குழியும் உன் சிரிப்பிலே திருப்தியையும் மகிழ்ச்சியையும் அனுபவித்தேன். அதனால் என் சுய நலம் காரணமாக உனது வாழ்விலே வலிய வந்த அதிர்ஷ்டத்தை நான் வெறுத்து ஒதுக்கித் தள்ளினேன். நான் மகாபாபி. ஆனால், கண்ணே உமா! இந்த உலகில் நான் ஏதாவது ஒரு பிசகு செய்திருப்பேனானால் ஒன்றே ஒன்றைத்தான் என்மீது சுமத்த முடியும். உன்னை நான் என் உயிரைவிட அருமையாக ஒவ்வொரு கணமும் நேசித்தேன். அதுதான் நான் செய்த பிசகு'' என்று படபடவென்று பேசிவிட்டுத் துக்கம் தாளாது விம்மி அழுதாள்.

இதையெல்லாம் கேட்ட உமாவின் உள்ளம் துயரத்தைத் தாள முடியாது குமுறிக் கொந்தளித்தது. வறுமையிலே வாடித் துயரம் ஒன்றையே இதுநாள் வரை அனுபவித்து வாழ்ந்த தன் தாயை மார்புடன் சேர்த்து அணைத்துக் கொண்டாள் ''அம்மா! அழாதீர்கள்! உங்களைத் தவிர அன்போடு நேசிக்க எனக்கு மட்டும் யார் இருக்கிறார்கள்? உங்களை விட இனிய தாயை நான் ஏழேழு ஜென்மத்திலும் எந்தத் தவத்தின் பயனாலும் அடைய



முடியாது. நடந்தது நடந்து விட்டது. அதையெல்லாம் நாம் மறந்துவிடுவோம்'' என்றாள்.

ஒருவாறு தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டு வைதேகி தொடர்ந்து பேசலானாள். ''உனது தந்தை உயிருடன் இருக்கிறார் என்று சொன்னேனே ஒழிய, யார் என்று நீ கேட்கவில்லையே?'' என்று மகளை வியப்புடன் கேட்டாள்.

''அவர் யார் என்று அறிந்து கொள்ள வேண்டியது அவசியமல்ல என்று நினைத்ததால் கேட்கவில்லை அம்மா'' என்றாள் உமா.

''இல்லை, கண்ணே, நீ நினைப்பது தவறு. அவர் யார் என்று இந்தச் சமயம் நீ அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். அழகர்நத்தம் பண்ணையார் ஏகாம்பரம் அவர்கள்தான் உனது தந்தையார். முறைப்படி என்னை மணந்து விரைவில் பிரிந்த எனது கணவர். அவருடன் மனஸ்தாபப்பட்டுக் கொண்டு பிரிந்து வெளியேறிய போது இடையே சில காலம் எங்களுக்குள் சமாதானம் ஏற்பட இரு சாரார் பக்கத்திலிருந்தும் உறவினர்கள் தூது நடந்து கொண்டிருந்தனர். அதன் விளைவாக நான் ஓர் ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டேன். அதாவது, எனது இறுதிக் காலத்தின் போது உன்னை அவர் வசம் ஒப்படைத்துவிட்டுப் போய் விட வேண்டும். எனக்கு முன் அவருக்கு மரணம் ஏற்பட்டாலும் உனக்கு உண்மையைத் தெரிவித்துச் சட்டபடி உனக்கு உண்டான உரிமைகளை நீ அடைய உதவி செய்ய வேண்டும் என்பது அந்த ஒப்பந்தம். என்னுடைய இறுதிக் காலம் வெகு விரைவில் சமீபித்துக் கொண்டு வருவதை நான் அறிவேன். அதனால் உன்னை உன் தந்தை வசம் ஒப்படைக்க ஏற்பாடு செய்ய வேண்டியது என் கடமை. அதனால் ஒரு காகிதத்தையும் பேனாவையும் எடுத்துக்கொள். என் நினைவு மங்குமுன் நான் கூறும் இந்தக் கடிதத்தை எனக்காக நீ எழுது'' என்று திணறினாள்.

தாயார் கூறியதற்கு மறுப்பு ஏதும் பேசாது உமா அவள் சொல்லியபடியே பின் கண்டதொரு கடிதம் எழுதினாள்.

''அன்புமிக்க கணவருக்கு வைதேகி எழுதிக் கொள்வது:

இப்பவும் நான் மிகவும் நோய்வாய்ப்பட்டு இங்குள்ள தர்ம ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருக்கிறேன். இதிலிருந்து நான் பிழைப்பது கஷ்டம் என்று வைத்தியர் கூறிவிட்டதனால், நமது ஒப்பந்தப்படி உங்கள் மகளை உங்களிடம் சேர்ப்பித்துவிட நான் விரும்புகிறேன். உமா மகேஸ்வரிக்கு இந்தச் சித்திரையோடு இருபத்து மூன்று வயது முடிந்துவிடுகிறது. எனது ஏழ்மை நிலையில் என்னால் ஆன கல்வியையும் சங்கீதத்தையும் அவளுக்குப் போதித்திருக்கிறேன். பிறந்த வீட்டிற்கும் புகப் போகிற வீட்டிற்கும் கீர்த்தியே கொண்டுவரும்படி அவளைக் கண்ணியமான பெண்ணாக வளர்த்திருக்கிறேன். பட்டதாரியான போதிலும், உமாவுக்குக் கர்வம் என்பதே கிடையாது. அடக்கமான நல்ல பெண் அவள். அவளுக்குத் தக்க வாழ்க்கைத் துணைவரைத் தேடி, அவளது வாழ்வை வளமாக்குவது இனி உங்கள் பொறுப்பு. இந்தக் கடிதங் கண்டவுடன் தங்கள் மகளைத் தங்களிடம் அழைத்துக் கொள்ளத் தக்க ஏற்பாடுகளை விரைவில் செய்வீர்கள் என நம்புகிறேன். உமாவுக்கு என் ஆசீர்வாதம்.

தங்கள் மனைவி,

**வைதேகி.''**

என்று கடிதத்தை எழுதி முடித்தாள். மகளிடமிருந்து அதை வாங்கி ஒரு முறை நன்றாக வாசித்துத் திருப்தி அடைந்த வைதேகி, சிரமப்பட்டு படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்து, கடிதத்தின் முடிவில் தன் கையெழுத்தை இட்டாள். ''இதைப் பத்திரமாக இன்று தபாலில் 'பண்ணையார் ஏகாம்பரம், அழகர்நத்தம்,' என்ற விலாசத்திற்கு ரிஜிஸ்டர் செய்து



அனுப்பிவிடு'' என்று உத்தரவிட்டு விட்டுக் களைப்புடன் படுக்கையில் சாய்ந்து கொண்டாள்.

கடிதத்தை மடித்துப் பத்திரமாகக் கையில் வைத்துக் கொண்ட உமாவினால் அது சமயம் மனத்தில் எழுந்த ஓர் ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை.''அம்மா! இவ்வளவு உண்மைகளைக் கூறிய உங்களிடம் இன்னும் ஒரு விஷயத்தை அறிய நான் விரும்புகிறேன். இருபது வருஷ காலமாக இப்படித் தனியாகப் பிரிந்து வாழ முற்பட்டதன் காரணம் என்ன? அப்பாவுக்கும் உங்களுக்கும் இடையே ஏற்பட்ட இந்தப் பெரிய பிரிவிற்கு ரகஸ்யம் யாது? அதையும் சொல்லி விடுங்கள்'' என்று கேட்டாள்.

வைதேகி வரட்சியாகப் பதிலுக்குச் சிரித்தாள். ''குழந்தாய், உன தந்தை யார் என்பதை உனக்கு நான் சொன்னதுடன் நீ திருப்பதியடைந்து கொள். எனக்கும் அவருக்கும் இடையே ஏற்பட்ட பிரிவின் மர்மத்தை நீ அறிய வேண்டியது அவசியமேயல்ல. அந்தக் கசப்பான உண்மை என்னுடன் மறைந்து போக வேண்டியது. அதனால் உனக்குத் தெரிவிக்க முடியாதவளாக இருக்கிறேன், என்னை வற்புறுத்திக் கேட்காதே. அந்தத் துயரத்தை மறக்கவே இதுநாள்வரை நான் இல்லாத கஷ்டங்களையெல்லாம் அனுபவித்தேன். மரணத்தின் வாயிலைச் சமீபித்துக் கொண்டிருக்கும் எனக்கு மனச் சாந்தி கொடு'' என்று படபடப்பாகப் பேசி விட்டுக் கண்களை மூடிக் கொண்டாள்.

அதற்குப் பிறகு வைதேகி அதிகம் ஏதும் பேசவில்லை. அன்று இரவின் முற்பகுதியில் அவள் அமைதியாக மரணமடைந்து விட்டாள்.

தாய் கூறாது மறுத்த ரகஸ்யத்தைத் தந்தையிடமிருந்து அறிந்து கொள்ளலாம் என்று உமாவின் உள்ளம் நம்பிக் கொண்டிருந்தது. தந்தையும் மகளைக் கண் திறந்து பாராது

காலன் வசம் போய்ச் சேர்ந்து விட்டார். இனி உண்மையை அறிந்து கொள்ள வேண்டுமானால் அவள் ஒரே ஒரு ஆத்மாவைத்தான் நாட வேண்டும். அதுதான் அவளது பாட்டியார் தையல்நாயகி அம்மாள். குழைவாகப் பேசி, அன்பு பாராட்டி, பணிவிடைகள் செய்தால் கல் மனம் படைத்த அந்தக் கிழவி மனம் கரைந்து, உமாவின் உள்ளத்திலே கொந்தளித்துக் குமுறும் இந்த ஆவலைத் தீர்ப்பாளா? தந்தை தாய் இருவர் இடையே மனஸ்தாபத்திற்குக் காரணமாக இருந்த அந்த ரகஸ்யத்தைப் பாட்டியார் பேத்திக்குச் சொல்லுவாளா?

உமா தந்தையின் மரணத்திற்குப் பிறகு இவ்வாறு சஞ்சலத்தில் தவித்துக் கொண்டிருந்தாள்.

## 4

பண்ணையாரின் ஈமக்கடன்கள் ஒருவாறு நிறைவேறிய பின் சில தினங்கள் சென்று அவரது குடும்ப வக்கீலான குணசேகர ராவ், உமாவைத் தனியே வந்து சந்தித்தார். ஏகாம்பரத்தின் இறுதிக் காலத்து உயிலின் பிரகாரம் அவரது அளவற்ற செல்வத்திற்கு வாரிசாக இருந்தாள். இந்த உண்மையை அவளுக்கு அறிவித்துவிட்டு, அவர் மேற் கொண்டு அது விஷயமாகச் செய்யவேண்டிய காரியங்களைக் கவனிக்கலுற்றார்.

பண்ணையாரது அந்தரங்கக் காரியதரிசியாகவும், அவரது பண்ணையின் மானேஜராகவும் இதுகாறும் ஊழியம் செய்து வந்த வரதராஜன் இன்னமும் தொடர்ந்து அந்த ஸ்தானத்திலேயே இருக்கப் பெரிதும் விரும்பினார். அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவதாக, அவருக்கு மாதா மாதம் பண்ணையிலிருந்து அளிக்கப்பட்ட நல்ல ஊதியத்தைச் சட்டென விட்டுவிட மனம் இருக்கவில்லை. இரண்டாவதாக எழிலே உருக்கொண்டாற் போன்ற உமாமகேஸ்வரியையும் அவளது திரண்ட ஆஸ்தியையும் தமது குடும்பத்தில் சேர்த்துவிட அவர் உள்ளம் வெகுவாக ஆசைப்பட்டது.



என்ஜினியர் பட்டம் பெற்று ஊருக்கு வந்திருந்த தமது ஒரே மகனுக்கு, அழகும் அந்தஸ்தும் ஒருங்கே அமைந்த ஒரு பெண்ணைத் தேடி எடுத்து, கட்டி வைக்க அவர் பல முயற்சிகள் செய்து கொண்டிருந்தார். பண்ணையாரின் செல்வ புத்திரியைக் கண்ட நாள்தொட்டு 'இவள்தான் நமது வருங்கால மருமகள்' என்று அவர் உள்ளம் இல்லாத கற்பனைக் கோட்டைகளைக் கட்டத் தொடங்கிவிட்டது. மேலும், தமது மகன் ரங்கதுரைக்கு, உமா மீது அவளை ஸ்டேஷனிலிருந்து அழைத்து வரச்சென்ற தினத்திலிருந்து கவர்ச்சி ஏற்பட்டிருப்பதையும் ஜாடையாக அறிந்து கொண்டிருந்தார்.

அவரது எண்ணத்திற்கு மகனது ஆவல் ஒத்துப்போகவே வரதராஜன் துளிர்த்து எழ ஆரம்பித்திருந்த இந்தக் காதலை பலப்படுத்தப் பூரணமாக ஒத்துழைக்கத் தயாராக இருந்தார். எனவே, அவர் அடிக்கடி தினசரி இரு வேளைகள் தவறாது பண்ணையார் மாளிகைக்கு விஜயம் செய்து, அன்றாடக் காரியங்களைக் கருத்துடன் கவனிக்க உமாவிற்கு உதவி செய்தார். அவளுடைய புதிய பொறுப்பைப் பற்றி போதித்துத் தமது ஆழ்ந்த அனுபவத்தில் உதித்த யோசனைகளை அவளுக்குக் கூறி வந்தார். ஒவ்வொரு சமயம் தாம் வரும்பொழுது, கூடவே தமது மைந்தனையும் யதேச்சையாக அழைத்து வருகிறவர் போல் கூட்டிக்கொண்டு வந்து, தமது மகனும் உமாவும் சங்கோஜமின்றி நட்புரிமையோடு பழகப் பல சந்தர்ப்பங்களை உண்டாக்கிய வண்ணம் இருந்தார்.

இதைத் தவிர, வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறைகள் உமாவைப் பண்ணையாரின் பழைய மாடல் காரில்

அழைத்துச்சென்று, அவளது நிலங்கள், தோட்டங்கள், மனைகள் அனைத்தையும் ஒவ்வொன்றாக அவளுக்குக் காட்டி அறிமுகம் செய்து வைத்த வண்ணம் இருந்தார். இந்த ஒரு சந்தர்ப்பம் அவருக்கு உமாவிடம் நெருங்கிப் பழகுவதற்கும், அவளது மனோபாவனையை அறிந்து கொள்வதற்கும் மிகவும் உதவியாக இருந்தது. அவளது வருங்கால நலனில் மிகவும் கருத்துக்காட்டி அவளது நன்னம்பிக்கை முழுவதையும் கைக்கொண்டு, காலக் கிரமத்தில் அவளைத் தமது கைப் பொம்மையாக ஆட்டி வைக்கவேண்டும் என்றதொரு தீவிரமான திட்டமும் அவர் உள்ளத்தில் ஒரு புறத்தில் உருவாகிக் கொண்டிருந்தது.

அன்று காலை வழக்கம் போல் வரதராஜன் பண்ணையாரின் மாளிகைக்கு விஜயம் செய்திருந்தார். "அம்மா இன்று தாங்கள் மாந்தோப்பு பங்களாவைப் பார்வையிட வேண்டும். இங்கிருந்து அது ஐந்து மைலுக்கப்பால் இருப்பதால் வெய்யிலுக்கு முன் புறப்படுவது நலம்" என்றார். பண்ணையில் அன்றாட விவகாரங்களைக் கவனிக்க வேண்டும் என்ற பொறுப்பு ஒரு புறமிருக்க, ஏகாம்பரத்தின் மரணத்தை யொட்டி துக்கம் விசாரிக்க வந்து போய்க் கொண்டிருந்த நண்பர்கள், உற்றார் உறவினர்களின் கூட்டத்தைச் சமாளித்துக் கவனித்து அனுப்ப வேண்டிய பெரும் பொறுப்பும், நண்பர்கள், அனுதாபிகள் முதலியோரிடமிருந்து வந்து குவிந்து கொண்டிருந்த அனுதாபக் கடிதங்களைக் கவனித்து பதில் எழுதவேண்டிய கடமையும் அதிகம் ஏற்பட்டு விட்டதனால், உமாவுக்கு ஓய்வு ஒழிச்சல் என்பதே இல்லாது போய்விட்டது.

அன்று காலை வரதராஜன் அங்கே வந்த பொழுது, பண்ணையாரின் மரணத்திற்கு அனுதாபம் காட்டித் தன் பெயருக்கு வந்த ஒரு கடிதத்திற்குப் பதில் எழுதிக் கொண்டிருந்தாள். மானேஜர் வெளியே கிளம்ப அவசரப் படுவதை உணர்ந்ததும், அந்தக் கடிதத்தை விரைவாக எழுதி உறையிலிட்டுத் தபாலில் சேர்க்கச் செய்துவிட்டு, வெளியே



செல்ல அவசரமாகத் தன்னைத் தயாரித்துக் கொண்டு புறப்பட்டாள்.

கொஞ்ச நேரத்தில் அவர்களது மோட்டார் வாகனம் மரங்கள் மிகவும் அடர்ந்து செழித்து வளர்ந்திருந்த ஒரு பெரிய தோட்டத்திற்குள் நுழைந்து அழகானதொரு சிறிய வீட்டின் முன் வந்து நின்றது. கோடை காலத் துவக்கத்தின் அறிகுறியாக உக்கிரமாக வீசிக் கொண்டிருந்த சூரியனின் கிரணங்களைத் தாளமுடியாது துடித்துக் கொண்டிருந்த உமாவிற்கு, அந்தத் தோட்டத்திற்குள் வந்ததும் உதகமண்டலத்திற்கோ, கோடைக் கானலுக்கோ திடீரென்று போய்ச் சேர்ந்து விட்டதைப் போன்ற ஒரு பிரமிப்பு ஏற்பட்டது. தோட்டம் அவ்வளவு குளிர்ச்சியாக, வெய்யிலின் கொடுமையே தெரியாது அமைந்திருந்ததைக் கண்டு அவள் மிக்க வியப்படைந்து போனாள்.

"பண்ணையார் இந்த பங்களாவை இருபது வருஷங்களுக்கு முன்புதான் கட்டினார். சமீபத்தில் இதிலே கொஞ்சம் திருத்தம் செய்தோம். பண்ணை விவகாரங்களை விட்டு அவர் வெளியே எங்கும் செல்வதே கிடையாது. அதனால் கோடை காலத்தின் போது மூன்று மாத காலம் அவர் இந்த பங்களாவில்தான் வசிப்பது வழக்கம்" என்று சுருக்கமாக அந்த வீட்டின் பெருமையை எடுத்து வரதராஜன் உரைத்து விட்டு காரின் கதவைத் திறந்து உமா இறங்குவதற்கு உதவி செய்தார்.

அது சமயம் அந்த வீட்டின் உள்ளிருந்து திடீரென்று நாய் ஒன்று மிகவும் ஆக்ரோஷமாகக் குரைத்த வண்ணம் பாய்ந்தோடி வரவே, உமா ஒரு நிமிஷம் மெய் பதறித் திடுக்கிட்டு நின்றுவிட்டாள்.

"நல்லான், போ உள்ளே; டேய் கட்டையா! ஏ அஞ்சலை, இரண்டு பேரும் எங்கே போய் விட்டீர்கள்? நாயை உள்ளே கூப்பிடு!" என்று கோபத்துடன் மானேஜர் இரைந்து கத்தினார்.

''இதோ வந்துவிட்டோம், சாமி!'' என்று பதிலுக்கு ஒரு பெண்ணின் கீச்சுக் குரல் உள்ளிருந்து கூவியது. அடுத்த கணம் மிகவும் வயதான ஒரு வேலைக்காரப் பெண்மணி உள்ளிருந்து ஓடோடியும் வந்தாள். ''அவர் தோட்டத்திலே தண்ணீர் பாய்ச்சிக்கிட்டிருக்கிறார். நான் அடுப்படியிலே வேலையாக இருந்தேன்'' என்று குழறிக்கொண்டு நாயின் கழுத்தில் தொங்கிய சங்கிலியைப் பிடித்து இழுத்து அதை நிறுத்தினாள். '' நல்லான் ஏன் இப்படிக் குரைக்கிறே? இவங்க நம்ப வீட்டு அம்மாவாச்சே!'' என்று அதனிடம் பேசினாள்.

''பத்து மணிக்கு மேல் நாங்கள் வரப் போகிறோம் என்று நேத்தே சொல்லியனுப்பியிருந்தேனே! அப்படியிருந்தும் தோட்டத்திற்குத் தண்ணி பாய்ச்ச கட்டையன் இப்பத்தான் நேரம் பார்த்தானா? உங்களையெல்லாம் சொல்லிக் குற்ற மில்லை. பண்ணை ஆட்கள் அவ்வளவு பேரும் இப்போது ஆளுவார் அடக்குவார் இல்லாது கொட்டமடிக்கிறீர்கள்! இருக்கட்டும், சரி சரி! நாயை இழுத்துப் போய் உள்ளே கட்டு. எங்களுக்கு நல்ல வரவேற்பு இது! வீட்டை நன்றாகக் கூட்டிப் பெருக்கிக் கழுவி வைத்திருக்கிறாய் அல்லவா?'' என்று அவர் அதட்டினார்.

நாயின் கழுத்துச் சங்கிலியைப் பிடித்திருந்த அஞ்சலையின் கரங்கள் நடுங்கின. மரண தேவதையை எதிர்நோக்கி விட்டவள்போல், அவள் மிகப் பீதியுடன் வரதராஜனைப் பார்த்துவிட்டு தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டாள். ''எல்லாம் சொன்னபடி செய்து விட்டேங்க. உள்ளே வந்து உட்காருங்க. நான் போய் அவரைக் கூட்டிவரேன்'' என்று பணிவாகப் பதில் அளித்தாள்.

எவ்வளவோ அதட்டியும் நல்லான் வரதராஜனையும் உமாவையும் திருப்பித் திருப்பிப் பார்த்து ஆக்ரோஷமாகக் குரைத்தவண்ணமே இருந்ததனால், அதைப் பிடித்து



இழுத்துக்கொண்டு வீட்டின் பின் பகுதிக்குச் சென்றாள். அதை ஒரு தூணில் சேர்த்து இறுகக் கட்டிவிட்டு, தோட்டத்துக் கிணற்றடிக்குத் தலைதெறிக்க ஓடினாள்.

''இந்தாங்க, உங்களைத்தானே? பண்ணையார் மகளும் மானேஜர் ஐயாவும் வந்துவிட்டாங்க? ஐயா ரொம்பக் கோபமாக இருக்கிறார், ஓடியாங்க'' என்று பதட்டமாக அவள் கூவினாள்.

கீரைப் பாத்திக்குத் தண்ணீர் பாய்ச்சி, களை கொய்து விட்டுக் கொண்டிருந்த கட்டையன், இதைக் கேட்டதும் இடி விழுந்தவன்போல் மனைவியைப் பார்த்தான். ''அஞ்சலை! நாம் எவ்வளவு நன்றியோடு உழைத்தாலும், ஐயாவுக்கு நம் மேலே திருப்தியே கிடையாது. என்ன செய்வது?'' என்று முணமுணத்தான்.

''நாம வாங்கி வந்த வரம் அது! யாரைச் சொல்லியும் குத்தமில்லை. சட்டுனு கையைக் கழுவிக்கிட்டு உள்ளே வாங்க'' என்று கணவருக்கு உத்தரவிட்டு அஞ்சலை வந்த வேகத்தில் திரும்பி வீட்டை நோக்கி நடந்தாள்.

இதற்குள் வரதராஜன் வீட்டின் உட்புறத்தையும் மற்றப் பகுதிகளையும் உமாவிற்குச் சுற்றிக் காண்பித்துக் கொண்டிருந்தார்.

பண்ணையாரின் மாளிகையைப்போல் மாந்தோப்பு பங்களா பழுது அடைந்த நிலையில் இருக்கவில்லை. பல வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டிருந்த போதிலும், சமீப காலங்களில் செய்த திருத்தங்களின் பயனாக புத்தம் புதியதொரு வீடுபோல் அது காணப்பட்டது.

கண்ணுக்குக் குளுமையான நீல வர்ணம் பூசிய சுவர்களும், பளிங்குக் கற்கள் பாவிய தரையும்அந்த வீட்டை மிகவும் கவர்ச்சிகரமானதாகத் தோற்றுவித்தன. பண்ணையார் உபயோகித்த படுக்கை அறையில் மின்சார விசிறி, ரேடியோ,

மிருதுவான பஞ்சணை போன்ற வசதிகள் காணப்பட்டன. வீட்டின் பின்னால் சமையல் விடுதி என்று கட்டப்பட்டிருந்த பகுதியில்தான் அஞ்சலையும் கட்டையனும் வசித்துக் கொண்டிருந்தனர். வீட்டைக் கவனித்துக் கொள்வதுடன் அந்த தம்பதிகளுக்குச் சமையல் உத்தியோகமும் அளிக்கப் பட்டிருந்தது என்பதை வரதராஜன் கூற அவள் அறிந்து கொண்டாள்.

வீட்டையும் தோட்டத்தையும் சுற்றிவிட்டு, மிருதுவான சோபாக்கள் போட்டிருந்த முன் ஹாலுக்குள் மின்சார விசிறியினடியில் களைப்பாக இருவரும் வந்து அமர்ந்து கொண்டனர். சூடான பசும்பாலை இரண்டு வெள்ளி டம்ளர்களில் ஊற்றி நிரப்பி, மிகவும் பயபக்தியுடன் சுமந்து கொண்டு வந்து அஞ்சலை அவர்கள் அருகில் இருந்த மேஜை மீது வைத்தாள். தலையில் கட்டியிருந்த முண்டாசுத் துணியை அவிழ்த்து இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு ஹாலுக்குள் மெல்ல வந்த கட்டையன், தன் புதிய எஜமானிக்கும் மானேஜர் ஐயாவுக்கும் ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு, பணிவோடு வந்து எதிரே நின்று கொண்டான்.

எரித்து விடுகிறவர் போல் வரதராஜன் அவனை உறுத்துப் பார்ப்பதைக் கடைக்கண்ணால் கவனித்த உமாவுக்கு மெத்த வருத்தம் ஏற்பட்டது. கட்டையனது தள்ளாத வயதையும், உழைத்து ஓடாகிவிட்டிருந்த அவனது தளர்ந்த உடலையும் கண்டு அவள் மனம் இரக்கப்படவே, மானேஜர் அவனிடம் ஏதும் கடுமையாகப் பேசுமுன் அவர் கவனத்தை வேறு திக்கில் திருப்ப, " இந்த வெய்யிலுக்குச் சூடான பால் எதற்கு. குளிர்ந்த தண்ணீர் ஒரு டம்ளர் கிடைத்தால் நன்றாக இருக்குமே!" என்றாள் புன்முறுவலுடன்.

"அப்படியா? தண்ணீர் எதற்கு. இங்கே தோட்டத்தில் நல்ல இளநீரே கிடைக்குமே!" என்று பதிலளித்த வரதராஜன்



துள்ளி எழுந்தார். "கட்டையா! இங்கே வா என்னுடன். அந்த மூலை தென்னைமரத்தில் ஏறி பெரிதான நல்ல காயாக நான்கு பறித்துப் போடு" என்று உத்தரவிட்டு, அதை நேரிடையாகக் கவனிக்கப் புறப்பட்டு, தோட்டத்தின் மறுகோடியை நோக்கி விரைந்தார்.

பீதியே உருவாகி தயக்கமாக அருகில் நின்று கொண்டிருந்த அஞ்சலையை ஏற இறங்க ஒருமுறை கவனித்தாள் உமா. உள்ளத்தில் எழுந்த ஆவலைக் கட்டுப் படுத்த முடியாது. "ஏன் அம்மா! நீயும் உன் கணவரும் இங்கே எத்தனை காலமாக வேலை செய்கிறீர்கள்?" என்று வினவினாள்.

ஆறுதலான வார்த்தைகளுக்கு ஏங்கி இருந்தவள்போல் அஞ்சலையின் கண்களில் கண்ணீர் பெருகி வழிந்தது "முப்பது வருஷமாகப் பண்ணையில் நானும் அவரும் வேலை செய்கிறோம் அம்மா" என்று திணறிவிட்டு விக்கி அழத் தொடங்கினாள்.

தன்னுடைய ஒரு சிறு கேள்வி அந்தக் கிழவியின் உள்ளத்திலே பெரும் துயரத்தைக் கிண்டி விட்டதைக் கண்ட உமாவுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. "ஏன் அம்மா இப்படி வருத்தப்பட்டுக் கொள்கிறீங்க? உங்களுக்கு இங்கே என்ன குறை? என்னிடம் தாராளமாகக் கூறலாம். சம்பளம் போதவில்லை என்றாலும் அல்லது வேறு கஷ்டம் ஏதேனும் ஏற்பட்டிருந்தாலும் என்னிடம் நீங்கள் மனம் விட்டுக் கூறலாம். பண்ணையில் வேலை செய்யும் ஆட்படைகள் அனைவர் குறைகளையும் தீர்க்க வேண்டியது எனது முக்கிய கடமை" என்றாள் பச்சாதாபத்துடன்.

அஞ்சலை கண்களைத் துடைத்துக்கொண்டு, சுற்று முற்றும் பார்த்தாள்."அம்மா, உங்கள் புண்ணியத்தில் சாப்பாடும் இருக்க இடமும் குறைவில்லாது பண்ணையிலிருந்து இதுவரை கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அம்மா,

எனக்கும் என் புருஷனுக்கும் வயசு அதிகம் ஆயிடுச்சு, எங்களால் இந்த வேலையை நல்லா கவனிக்க முன்போல் உடம்பிலே சக்தியில்லை. அதனாலே எங்கள் ரெண்டு பேருக்கும் ''பின்ஜின்'' கொடுத்து அனுப்பிவிட்டால் மெத்த புண்ணியமாக இருக்கும். நான் என் கடைசி காலத்திலே தாய் புள்ளைகளோட போய் இருக்க ஆசைப்படுகிறேன் அம்மா'' என்றாள் தழதழத்த குரலில்.

அவள் கூறிய காரணம் முற்றிலும் சரியானதல்ல என்று உமாவிற்குத் தோன்றவே மேலே தொடர்ந்து ஏதோ கேட்க வாயைத் திறந்தாள். அது சமயம், ''நான் உள்ளே வரலாமா?'' என்று ஓர் ஆடவனின் குரல் கேட்கவே, திடுக்கிட்டு வாயிற்பக்கம் திரும்பினாள்.

வாயிற்கதவை மெல்ல விரலால் சில முறைகள் தட்டிவிட்டு, புன்முறுவலுடன் சிவகுமாரன் உள்ளே வந்து நின்றான். எதிர்பாராத அவனது வருகை உமாவிற்குச் சட்டென்று ஓர் அதிர்ச்சியைக் கொடுக்கவே சில வினாடிகள் அவனை பிரமிப்புடன் உற்றுப் பார்த்துக்கொண்டு வாளா இருந்தாள்.

''மன்னிக்க வேண்டும், தங்களை நேரிடையாகக் காணப் பன்முறை பிரயத்தனப்பட்டேன். தங்களைப் பார்க்க முடியாது என்று மானேஜர் என்னை உள்ளே அனுமதிக்க மறுத்து விட்டார். மாந்தோப்பு பங்களாவிற்கு இன்று தினம் வரப்போகிறீர்கள் என்பதைக் கேள்விப்பட்டேன். இதுதான் தங்களை நேரில் பார்த்துப் பேசும் சந்தர்ப்பம் என்று ஒரே பிடிவாதமாக உங்கள் உத்தரவுகூடக் கேட்காது, மரியாதையில்லாது, இங்கே வந்துவிட்டேன்'' என்று கூறிவிட்டு, மெல்லச் சிரித்தான்.

களங்கமற்ற அவனது முகத்தை நேருக்கு நேர் நோக்கவும் உமாவுக்குக் கொஞ்சம் சங்கோஜமாக இருந்தது. லேசாகச் சிவந்து போன தன் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டு, ''வாருங்கள்! உட்காருங்கள். என்னுடைய தரிசனம் இவ்வளவு



சிரமத்தை உண்டாக்கியிருக்கிறதென்பதை இப்பொழுது தான் அறிகிறேன். மானேஜர் அப்போது தங்களிடம் கடுமையாக நடந்து கொண்டதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்'' என்றாள் சாதுரியமாக.

''உங்களது பொன்னான நேரத்தை நான் அதிகம் வீணாக்க விரும்பவில்லை. தங்கள் தந்தையார் மறைவுக்காக என் அனுதாபத்தை நேரிடையாகத் தெரிவித்துக் கொள்ளவே தங்களைக் காண நான் மிகவும் பாடுபட்டேன். தங்கள் தந்தையார் இந்த ஊருக்கும்,பக்கத்திலுள்ள கிராமத்திற்கும் பலவிதத்திலும் நன்மைகள் செய்திருக்கிறார். இந்த ஊர்க் கோவிலுக்கு அவர் செய்துள்ள காணிக்கைகள் பற்றியும், பக்கத்து கிராமத்துப் பள்ளிக் கூடத்திற்கும் தர்ம ஆஸ்பத்திரிக்கும் அவர் செய்துள்ள தர்மங்கள் பற்றியும் தாங்கள் இதுவரை அறிந்து கொண்டிருப்பீர்கள். பொது நல வாழ்க்கையிலே பற்றுக் கொண்டு பல தர்ம காரியங்களை மனமுவந்து செய்து வந்த அன்னாரின் மறைவு சமூகத்திற்கு ஒரு பெரிய நஷ்டமாகும்'' என்று கூறி முடித்துவிட்டு, நிமிர்ந்து அவளைப் பார்த்தான் சிவகுமாரன்.

''தாங்கள் என் தந்தை மறைவு பற்றிக் காட்டும் அனுதாபத்திற்கு மெத்த வந்தனம்'' என்று முணமுணத்தாள் உமா பதிலுக்கு.

''தாங்கள் மிகவும் களைப்பாகக் காணப்படுவதால் அதிக நேரம் பேசிக்கொண்டிருக்க விரும்பவில்லை. அதனால் விடைபெற்றுக் கொள்கிறேன். ஆனால், போகுமுன், ஒரு வேண்டுகோள். தங்களை மற்றொரு முறை சந்தித்துச் சில முக்கிய விஷயங்கள் பற்றிப் பேச விரும்புகிறேன். தங்களுக்கு அவைகளைக் கேட்க அவகாசம் கிடைக்குமா என்பதைத் தெரிவித்தால்...'' என்று முடிக்காது எழுந்து நின்று கைகூப்பி வணங்கினான் அவன்.

''மற்றும் ஒரு முறை என்ன, பலமுறை வேண்டுமானாலும் சந்தித்து, அந்த முக்கிய விஷயங்களைப் பற்றிப் பேசி அறிய எனக்கு ஆக்ஷேபணையில்லை. எப்போது தங்களுக்கு அவகாசம் இருக்குமோ அதைக் குறிப்பிட்டு முன் கூட்டியே ஒரு கடிதம் என் விலாசத்திற்கு அனுப்பிவிட்டு வந்தால் தங்களைச் சந்திக்கச் சௌகரியமாக இருக்கும்'' என்று கம்பீரமாகப் பதில் அளித்த உமா, எழுந்து நின்று கைகூப்பி வணங்கி அவனுக்கு விடை கொடுத்தாள்.

சீவிய இளநீர் இரண்டைத் தாமே சுமந்து கொண்டு மூச்சுத் திணற உள்ளே வந்த வரதராஜனுக்கு, அவனைக் கண்டதும் முகம் சுண்டிப் போயிற்று. சிவகுமாரன் தோட்டத்தைத் தாண்டி அப்பால் செல்லும்வரை மௌனமாக இருந்த அவர், தமது கரத்தாலேயே இளநீரைக் கண் திறந்து ஒரு தம்ளரில் ஊற்றி உமாவின் அருகில் வைத்தார். ''சாப்பிடுங்கள், அம்மா!'' என்று உபசரித்துவிட்டு எதிரே அமர்ந்து கொண்டார். முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு தாழ்ந்த குரலில், ''அம்மா! வயதிலும் அனுபவத்திலும் தங்களைவிட முதிர்ந்தவன் என்ற ஹோதாவில் சொல்ல விரும்புகிறேன். இங்கிருந்து சற்றுமுன் போனானே ஒரு வாலிபன், அவனிடம் தாங்கள் மெத்த ஜாக்கிரதையாக இருந்து கொள்ள வேண்டும். தங்களது தந்தையின் பரம விரோதி அவன் என்பதை மட்டும் சொல்ல விரும்புகிறேன். பிறகு உங்கள் இஷ்டம்'' என்றார் பெருமூச்சுடன்.

''அப்படியா'' என்று ஆச்சரியத்துடன் கேட்ட உமா திகைப்பில் மௌனமானாள்.

# 5

உமாவின் மாந்தோப்பு பங்களா விஜயத்திற்குப் பிறகு, சில தினங்கள் எவ்வித சம்பவமும் இன்றிக் கழிந்தன. ஒரு நாள் காலை இரண்டு ஆட்கள் ஒரு பெரிய கள்ளிப் பெட்டியைச் சுமந்து வர மானேஜர் வரதராஜன் அதைப் பின் தொடர்ந்தவராகப் பண்ணையாரின் மாளிகைக்குள் பிரவேசித்தார்.

வழக்கம் போல் உமா தனது காலை அலுவல்களைக் கவனிக்கும் நிமித்தம் மாளிகையின் முன்கட்டு ஹாலில் ஓர் ஆசனத்தில் அமர்ந்திருந்தாள். பண்ணையின் கணக்கு வழக்குகள் நிறைந்த காகிதங்களும், நோட்டுப் புத்தகங்களும் அவள் அருகில் கிடந்த ஒரு பெரிய மேஜை மீது குவிந்து கிடந்தன. அதுசமயம் அவள் வீட்டுச் செலவு தாங்கிய ஒரு நோட்டுப் புத்தகத்தைக் கருத்துடன் ஆராய்ந்து கொண்டிருந்தாள். கணக்குப்பிள்ளை கணபதி, காதில் ஒரு இறகு பேனாவைச் சொருகிக்கொண்டு, எஜமானி எந்தக் கணக்கைத் தப்புக் கண்டுபிடிப்பாளோ என்று எண்ணிக் கலங்கியவனாக அவள் ஆசனத்துக்குப் பின்னால் கை கட்டியபடி நின்று கொண்டிருந்தான். திடுதிடுவென்று காலடி ஓசையுடன் இரண்டு ஆட்கள் பெருமூச்சுவிட்டவர்களாக, ஒரு பெரிய மரப்பெட்டியைச் சுமந்து கொண்டு வந்து தன் எதிரே தரை மீது வைப்பதைக் கண்டு திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்து பார்த்தாள் உமா.

''பெட்டியை வைத்து விட்டுப் போங்கள்'' என்று அந்த ஆட்களுக்கு உத்தரவிட்ட வரதராஜன் கம்பீரமாகக் கணக்குப் பிள்ளை பக்கம் திரும்பி, அவனையும், அப்பால் போகும்படி கையால் ஜாடை செய்து கட்டளையிட்டார். பிறகு, புன்னகை பூத்த முகத்தினராக, பண்ணையாரின் புத்திரிக்கு மிக்கப் பணிவோடு ஒரு பெரிய கும்பிடு போட்டு விட்டு, எதிரே கிடந்த மற்றொரு ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டார்.

''வாருங்கள், ஏது வெகு காலையிலேயே புறப்பட்டு விட்டீர்கள்?'' என்று விசாரித்த உமா, பதிலுக்கு வணங்கி விட்டுத் தரை மீது ஆட்கள் கொண்டு வந்து வைத்துப் போன அந்தப் பெரிய மரப்பெட்டியைக் குறிப்பாகப் பார்த்தாள்.

''ஒரு முக்கியமான காரியத்திற்காகத்தான் வெகு காலையிலேயே வரவேண்டியிருந்தது. தங்கள் தந்தையார் இங்கு அருகில் உள்ள கிராமத்துப் பள்ளிக்கூடம் ஒன்றிற்குப் பெரும் நன்கொடை வழங்கியிருக்கிறார். அதைப் பற்றி நான் முன்பு ஒரு தடவை கூடத் தங்களிடம் சொல்லியிருப்பது ஞாபகத்திற்கு வரும் என்று நினைக்கிறேன். அந்தப் பள்ளிக்கூடத்தின் நிர்வாகிகள் தங்கள் தந்தையின் பெயரில் பள்ளிச் சிறுவர் களுக்காக ஒரு போஜனக் கூடத்தைக்கட்டி முடித்திருக் கிறார்கள். அதன் திறப்பு விழாவைக் கொண்டாடத் திட்டமிட்டிருக்கிறார்கள். அது சமயம் அந்தக் கூடத்தில் தங்களது தந்தையின் உருவப்படம் ஒன்றை வைத்து, அதைத் திறந்துவைக்க விருப்பம் தெரிவித்தார்கள். தங்கள் தந்தையின் உடல் நோயால் மிகவும் பலஹீனமாகி விட்ட சமயம், நான் அவரது உருவப் படம் ஒன்று பெரிய அளவில் வீட்டில் இருக்க வேண்டியது அவசியம் என்று உணர்ந்து அவ்வாறு தயாரிக்க ஏற்பாடு செய்தேன்'' என்று ஒரு பெரிய பூர்வ பீடிகை போட்டு விட்டுத் தரை மீதிருந்த பெட்டியை மெல்லத் திறந்தார்.

அதிலிருந்து ஒரு பெரிய படத்தை எடுத்து, அதன் மீது சுற்றப்பட்டிருந்த காகிதங்களை நீக்கி விட்டு, உமாவிடம் கொடுத்தார். ''இதே அளவில் இந்தப் படத்தில் இரண்டு காப்பிகள் தயாரிக்கச் செய்தேன். ஒன்றை ஒரு பள்ளிக் கூடத்திற்கு அனுப்பி விட்டேன். தங்களுக்கு ஒன்று வேண்டும் என்று இங்கே இதைக் கொண்டு வந்தேன். இதைப் பூஜை அறையில் மாட்டி வைத்திருப்பது உத்தமம்'' என்றார் தொடர்ந்து.



உமா அந்தப் படத்தை வாங்கி நன்றாக ஆராய்ந்து உற்றுக் கவனித்தாள். ''இது சமீபத்தில் எடுத்தது போல் காணப்படவில்லையே!'' என்று கேட்டுவிட்டு, லேசாகப் புன்னகை செய்தாள். படத்தில் காணப்பட்ட ஏகாம்பரத்திற்கு சுமார் நாற்பது வயதிற்கு மேல் இராது போல் தோன்றியது.

வரதராஜன் பதிலுக்கு மெல்லச் சிரித்தார். ''பண்ணையார் சமீபத்தில் எடுத்துக் கொண்ட புகைப்படம் ஏதும் கிடையாது. அதனால் பல வருஷங்களுக்கு முன் எடுத்த ஒரு படத்திலிருந்து இதைப் பெரியதாக்க ஏற்பாடு செய்தேன்,'' என்று பதில் அளித்தார்.

படத்தை ஏற இறங்கப் பன்முறை உற்றுப் பார்த்த உமா, அதை பத்திரமாக மேஜை மீது வைத்தாள். ''உங்களது ஆலோசனைப்படியே இந்தப் படத்தை பூஜையறையில் மாட்டி வைக்க ஏற்பாடு செய்து விடுகிறேன். ஆனால் ஒன்று, என் தந்தையாரின் படத்தருகே என் தாயாரின் படத்தையும் சேர்த்தாற்போல் வைத்து வணங்கி வர ஆசைப்படுகிறேன். அதனால் இதே அளவில் என் தாயின் புகைப்படத்தையும் பெரியதாக்கத் தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்றாள்.

வரதராஜன் சட்டென பதில் சொல்லாமல் தயக்கமாக விழித்தார். பிறகு, முகவாயை இடது கரத்தால் ஆலோசனை யோடு தடவிக்கொண்டு, ''தங்களது தாயாரது புகைப்படம் சமீபத்தில் எடுத்தது ஏதும் இங்கே கிடையாதே!'' என்று இழுத்தாற் போல் சொன்னார்.

உமாவின் முகம் இதைக் கேட்டதும் அவமானத்தினால் சட்டென்று சிவந்து போயிற்று. மறைமுகமாக அவர் கூற வந்த விஷயத்தை அவள் அறிந்து கொண்டாள். அவர் மேலே தொடர்ந்து பேசுமுன் குறுக்கிட்டு, ''என் தாயாரும் தந்தையும் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு பிரிந்து பல வருஷங்கள் ஆகின்றன என்பது ஊரறிந்த ரகஸ்யம். அதனால் என்ன?

அவர்கள் இருவரும் சேர்ந்து வாழ்ந்த ஒரு சில வருஷங்களில் எடுத்த படம் ஒன்று, இரண்டு கட்டாயம் இந்த வீட்டில் எங்கேயாவது இருக்க வேண்டும். அவைகளைத் தேடி என்னிடம் சேர்க்க வேண்டியது தங்கள் பொறுப்பு. வாழ்க்கையில் தான் அவர்கள் இருவரும் பிரிந்து இருந்தார்கள். இறந்த பின்னர் பட உருவிலாவது அருகருகே சேர்ந்திருக்கட்டும். என் தந்தைக்கும், மற்ற உற்றார் உறவினருக்கும் வேண்டுமானாலும் என் தாயார் வேண்டாத மனுஷியாக இருந்தாள். ஆனால், என்வரைக்கும் அவள் பாசமிகுந்த, கடமைகள் நிறைந்த ஓர் இலட்சியத் தாயார். மரணத்திற்குப் பின்னரும் என்னால் பூஜிக்கப்பட வேண்டியவர்கள். அதனால் அவர்களது படத்தையும் பூஜையறையில் வைத்து என் நினைவில் பாராட்ட விரும்புகிறேன்'' என்று கண்டிப்பான குரலில் சற்றுக் கோபமாகப் பேசினாள்.

தாயின்மீது அந்தப் பெண் கொண்டிருந்த அபாரமான அன்பைக் குறிப்பாக உணர்ந்துகொண்ட வரதராஜன் ''நல்ல வேளை! ஞாபகப்படுத்தினீர்கள். தங்களுடைய தாயாரின் புகைப்படங்கள் சிலவற்றைப் பத்திரமாக ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டியிருப்பது நினைவுக்கு இப்போதுதான் வந்தது. அவைகளைத் தேடி எடுத்துத் தங்களிடம் சேர்ப்பதைவிட வேறு எனக்கு என்ன வேலை?''என்று பணிவாகக் கூறிவிட்டுக் கபடமாகச் சிரித்தார்.

''விரைவாக அவைகளைத் தாங்கள் தேடி எடுத்தால் நலமாக இருக்கும். என் தாயின் புகைப்படம் ஒன்றுகூட ஞாபகத்திற்கு என்னிடம் கிடையாது. அவர்கள் தம்முடைய வாழ்வில் எனக்குத் தெரிந்து புகைப்படம் ஒன்று கூட எடுத்துக்கொண்டதில்லை. ஆகவே, இங்கே கிடைக்கப் போகிறவைகளை நாம் பொக்கிஷம் போல் போற்றிக் காப்பாற்ற வேண்டியிருக்கும்'' என்று கூறிவிட்டு, உமா அதற்குமேல் அவரிடம் பேச விருப்பமற்றவள் போல் விருக்கென எழுந்து



31505
4257969

கணக்குப் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு உட்புறம் சென்று விட்டாள்.

வயதிலும், அனுபவத்திலும், திறமையிலும் முதிர்ந்த தம்மை, அந்தச் சின்னஞ்சிறு பெண் உலக விவகாரமே தெரியாத ஒரு பத்தாம்பசலி, இவ்வாறு அதட்டிப் பேசி அலட்சியப் படுத்துவதை வரதராஜனால் தாங்க முடியவில்லை.

அவர் முகம் சிறுத்துப்போயிற்று. கோபத்தில் நெஞ்சம் பதறியது எனினும், பல காரணங்களை உத்தேசித்து அவர் தமது சினத்தைக் கட்டுப்படுத்தக் கடமைப்பட்டிருந்தார். ஆகவே அவர், தம்மை ஒருவாறு சமாளித்துக் கொண்டு உமாவுக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டுக் கிளம்பினார்.

அடுத்த சில நாட்களில் பண்ணையாரின், மாளிகையில் பாழாகப் பூட்டி வைத்திருந்த பல அறைகளைத் திறந்து, குப்பை தூசிகள் இடையே கேட்பாரற்றுக் கிடந்த பல பழைய பெட்டிகளைத் திறந்து, வரதராஜன் மேற்பார்வையில் வைதேகியின் புகைப்படத்திற்காகத் தேடிக் கொண்டிருந்தார்கள். இந்த வேலையில் இடை இடையே அவகாசம் கிடைத்த போதெல்லாம் உமாவும் உற்சாகத்துடன் சேர்ந்து கொண்டாள். எப்படியாவது தன் தாயின் பழைய புகைப்படம் ஒன்றைத் தேடியெடுத்துப் பெரிதாக்கி பூஜையறையில் வைத்துப் பக்தியுடன் அவளது நினைவைப் பாராட்ட வேண்டுமென்ற தீவிரமான ஆசை அவளுக்கு. நாலைந்து நாட்கள் தேடியலைந்த பின்னர் ஒருநாள் ஏதேச்சையாக ஒரு பெரிய தகரப் பெட்டியில் பழைய காகிதங்கள் இடையே இரண்டு படங்களை ஆட்கள் தேடிக் கண்டு பிடித்து எடுத்தனர்.

''இப்படிக் கொடுங்கள்'' என்று ஆவலுடன் கூவிய உமா, தன் கையை நீட்டி அவசரமாக அவைகளைத் தானே வாங்கிக் கொண்டாள். பரபரப்பாக அவைமீது படிந்திருந்த ஒட்டடை, தூசி முதலியவற்றைத் தன் கைகளால் துடைத்து விட்டு,

ஆவலுடன் அவைகளை மாறிமாறி வெளிச்சத்தில் நன்றாகக் கவனித்தாள்.

''இது தங்கள் பெற்றோரின் திருமணத்தின்போது எடுத்தது. இது தாங்கள் பிறப்பதற்கு இரண்டு வருஷங்களுக்கு முன்பு எடுத்தது'' என்று அவைகளைப் பற்றி விவரம் தெரிவித்தார் அருகில் நின்று கொண்டிருந்த வரதராஜன்.

திருமணக் கோலத்தில் அந்தப் படத்தில் ஊஞ்சல் மீது ஏகாம்பரத்தின் அருகே வீற்றிருந்த சிறுபெண்ணை வியப்போடு உற்றுப்பார்த்தாள் உமா. பல வருஷங்களுக்கு முன் தன் தாய் அப்படி ஓர் அழகான சிறு பெண்ணாக இருந்தாள் என்பதை அவளால் நம்பக்கூட முடியவில்லை. மகிழ்ச்சி பொங்கும் வதனத்துடன் தன்னையே பார்ப்பவள்போல் ஊஞ்சலில் அமர்ந்திருந்த அந்த மணப்பெண்ணைப் பன்முறை உற்றுக் கவனித்த உமாவின் கண்கள் கலங்கிவிட்டன. தன் நெஞ்சுக்குள் எழுந்த துயரத்தைச் சமாளித்துக்கொண்டு, மற்றொரு புகைப்படத்தையும் நன்றாகத் துடைத்துவிட்டு நோக்கினாள். அந்தப் படத்தில் சற்று முதிர்ச்சியடைந்தவளாகக் காணப்பட்டாள். கொழு கொழுவென்ற செழுமையான மேனியும், மேனி நிறைந்த ஆபரணங்களும், உயர்ந்த பட்டாடைகளும் தரித்திருந்தாள். கணவனும் மனைவியும் அருகருகே நாற்காலியில் அமர்ந்திருந்த பாணியில் அந்தப் படம் எடுக்கப்பட்டிருந்தது. வைதேகியின் முகத்தோற்றத்திலும், கண்களிலும் திருப்தியும், மகிழ்ச்சியும் நிலவிக் கொண்டிருந்தன. தந்தை ஏகாம்பரத்தின் முகத்திலும் சந்தோஷத்தின் சாயைதான் குடிகொண்டிருந்தது.

அந்தப் படத்தைக் கண்ணுற்ற யாரும் சட்டென அவர்கள் இருவரும் மனமொத்த தம்பதி என்று கூறி விடுவார்கள். உண்மையாகவே அதுசமயம் அவர்கள் இருவரும் அன்னியோன்னியமான தம்பதியாக வாழ்ந்து கொண்டிருந்திருக்க



வேண்டும். ஏனெனில், அந்தப் படத்தில் அவர்கள் முகத்தில் செயற்கையான புன்முறுவலோ, பாவனையோ சிறிதும் காணப்படவில்லை. உள்ளத்தின் நிறைவு ஒன்றையே அவர்களது முகம் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

''ஒரு காலத்தில் இவ்வளவு மனமொத்த தம்பதியாக வாழ்ந்து வந்த அவர்களிடையே இந்தப் பிளவு, பயங்கரமான இந்த நீண்ட நாள் பிரிவு எதற்காக ஏற்பட்டது? அதற்குக் காரணம்?'' எனத் தனக்குள்ளே எண்ணிய உமா, அந்தப் படங்களை மாறி மாறிப் பன்முறை ஆவலுடன் பார்த்துக் கொண்டு நின்றாள். ''தாயும் தந்தையும் மனஸ்தாபப் பட்டுக்கொண்டு ஏன் பிரிந்து போனார்கள்?'' என்று தனக்குள் 'ஏன்?ஏன்?ஏன்?' எனக் கேட்டு, சில தினங்களாகக் குழம்பிய வண்ணம் இருந்த உமாவின் உள்ளப் போராட்டம் அந்தப் படங்களைக் கண்ணுற்றதும் பன்மடங்காகப் பெருகிவிட்டது.

''இந்தப் படத்தில் இருக்கும் என் தாயின் உருவைப் பெரிதாக்க ஏற்பாடு செய்யுங்கள்'' என்று வரதராஜனுக்கு உத்தரவிட்டு, இரண்டாவது படத்தை அவரிடம் கொடுத்து விட்டுத் தன் அறையை நோக்கி அவள் வேகமாகச் சென்றாள். தன் கையில் பிடித்திருந்த முதல் படத்தை மேஜை மீது வைத்துவிட்டு, பத்திரமாகக் கதவைத் தாளிட்டுக் கொண்டு அதன் அருகே வந்தாள்.

திருமணக் கோலத்திலிருந்த தன் பெற்றோரை உற்று ஆர்வத்துடன் பன்முறை பார்த்த உமாவினால் துக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

''எவ்வளவோ ஆசையுடன் என் தாயைக் கல்யாணம் செய்து கொண்டீர்களே அப்பா! உங்களுக்கு ஏன் அவள் மீது பின்னால் இத்தனை வன்மம்? திருப்தியும் மகிழ்ச்சியுமாக என் தந்தையின் கையைப் பிடித்தீர்களே, அம்மா! உங்களுக்கு ஏன் அவர் மீது இத்தனை கோபம்? ஒருவரையொருவர்

முகாலோபனம் செய்யக்கூட மனமின்றி மரணவாயிலுக்கு மன திடத்துடன் போய்ச் சேர்ந்து விட்டீர்கள். ஆனால் உங்கள் பிரிவின் ரகஸ்யத்தைத் தெரிந்துகொள்ள முடியாது. உங்கள் புத்திரியான நான் படும் மனவேதனையை நீங்கள் இருவரும் அறிய மாட்டீர்கள்! மரணம் உங்களுக்கு அமைதியைத் தந்துவிட்டது. ஆனால், இந்த உண்மையைத் தெரிந்து கொள்ளாது மரணம் எனக்கு ஏற்பட்டால் என் ஆத்மா ஒருபோதும் சாந்தியடையாது. அம்மா? எனக்குக்கூடச் சொல்லமுடியாத அந்த ரகஸ்யம் என்ன? அப்பா! என் முகத்தைக் கூடப் பார்க்காது என்னை அனாதையாக விட்டுப் போய்விட்டீர்கள். நான் இதை எப்படித் தெரிந்து கொள்வேன்? யார் எனக்கு உண்மையைச் சொல்வார்கள்?'' என்று பிதற்றியபடி விம்மி விம்மி வெகுநேரம் குமுறி அழுது கொண்டிருந்தாள்.

பிறகு ஒருவாறு தன்னைச் சமாதானம் செய்துகொண்டு, கண்களைத் துடைத்துக் கொண்டாள். 'இன்று நாளை என ஒத்திப் போடுவதைவிட, பாட்டியாரிடம் சென்று இன்றே இதைப்பற்றி ஏன் கேட்கக் கூடாது?'' என்ற யோசனை ஏற்படவே, எப்படியாவது அந்தக் கிழவியிடம் அதைப் பற்றிப் பேசி விடுவது என்ற உறுதியுடன் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

தையல்நாயகியிடந்தான் இனி அந்த ரகஸ்யத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்த நாளிலிருந்து உமா, தன் பாட்டியாரிடம் நெருங்கிப் பழகி நேச உறவை உண்டாக்கத் தன்னால் ஆன மட்டும் பலவிதமான முயற்சிகள் செய்து கொண்டு வந்தாள். தினசரி ஒரு வேலையேனும் தானே நேரிடையாகப் பாட்டியாரின் அறைக்குள் சென்று அவளது க்ஷேம லாபங்களைக் கருத்தோடு விசாரித்தாள். ஆனால், எவ்வளவு முயற்சிகள் செய்த போதிலும் அந்தக் கிழவிக்குப் பேத்தி மீது கருணை என்பது சிறிதும் ஏற்பட வில்லை. தன் அருகில் அன்போடு வந்து இனிமையாகப் பேசிய



உமாவை அவள் ஒவ்வொரு முறையும் தன் ஜன்ம விரோதியை வெறித்துப் பார்க்கிறவள் போல் உறுத்து விழித்தாள். பேத்தி பன்முறை பன்னிப்பன்னி விசாரித்தால், முத்து உதிர்ந்து விடும் என்று அஞ்சுகிற தோரணையில் பாட்டி 'உம், ஆம்' என்று அதிசயமாக ஒன்றிரண்டு பதில் சொல்வதே மிகக் கடினமாக இருந்தது. இந்த நிலையில் பாட்டியாரிடமிருந்து, அந்தக் குடும்பத்தின் ரகஸியத்தை எப்படித்தான் கிரகிப்பது என்பதே உமாவுக்கு விளங்கவில்லை. இரும்பையொத்த அந்தக் கிழவியின் நெஞ்சைத் தன்பால் எவ்வாறு இளக்குவது என்பதும் அவளுக்குப் புரியவில்லை. எனினும், அன்று எப்படியாவது பாட்டியாரிடம் அதைப் பற்றிப் பேசி விடுவது என்ற உறுதியுடன் அவள் வேகமாகப் பாட்டியின் அறையை நோக்கி விரைந்தாள்.

தையல்நாயகியின் ஆரோக்கியம் ஏற்கனவே மிகவும் பழுதாகி விட்டிருந்தது. மகனது மரணம் அந்தக் கிழவியை ஒரேயடியாகப் படுத்த படுக்கையாக்கி விட்டிருந்தது. அன்று தினம் காலையிலிருந்து அவளது உடல் நிலை சரியாகவே இருக்கவில்லை. பாட்டியாரைக் காணும் பொருட்டு, பேத்தி வந்த சமயம் தையல்நாயகி மூச்சுவிடவும் சிரமப்பட்டுக் கொண்டு, படுக்கை மீது இருப்புக் கொள்ளாது புரண்டு கொண்டிருந்தாள். இரவும் பகலும் அங்கிருந்து சதா கவனிக்க நியமித்திருந்த வேலைக்காரப் பெண் எஜமானியைக் கண்டதும் ஓடிவந்து, ''ஒருமணி நேரமாகப் பெரியம்மா என்னவோ பேத்திக் கிட்டிருந்தாங்க, உடம்பைத் தொட்டா நெருப்பாகக் கொதிக்குது. இரண்டு தடவை உங்களைத் தேடிக் கொண்டு வந்தேன். அறையிலே உங்களை அப்போது காணவில்லை'' என்று குழறினாள்.

இதைக் கேட்டதும் உமாவுக்கு நெஞ்சம் பகீர் என்று ஆகிவிட்டது. அவள் மனத்தை வாட்டி வதைத்துக் கொண்டிருந்த அந்தப் போராட்டத்தின் முடிவு, உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் அந்தக் கிழவியின் கையில் அல்லவா

இருக்கிறது? வயது மிகவும் சென்றவள், ஆரோக்கியம் குன்றியவள். இது விஷயத்தில் அசட்டையாக இருந்தால் ஆபத்தாகிவிடும் என்று எண்ணிக் கவலையுற்று விரைவாகக் கீழே இறங்கி முன் கட்டிற்கு ஓடினாள்.

''சீக்கிரமாகப் போய் மானேஜர் ஐயாவைக் கையுடன் அழைத்துக்கொண்டு வா'' என்று ஓர் ஆளுக்கு உத்தரவிட்டு விட்டு, பொறுமையற்றவளாக உள்ளுக்கும் வாயிலுக்கும் நடந்து கொண்டிருந்தாள். எஜமானி விரைவாக அழைக்கிறாள் என்றதும், பாதி சாப்பாட்டில் இருந்த வரதராஜன் கையை உதறிவிட்டு எழுந்து அவசரமாகக் கழுவிக் கொண்டு, அங்கவஸ்திரத்தை அள்ளிக் கீரைபோல் மேலே போட்டுக் கொண்டு, வேகமாகத் தங்கள் வீட்டு வில் வண்டியில் சிட்டாய்ப் பறந்தோடி வந்தார்.

''பாட்டியாருக்கு உடம்பு சுகமில்லை, மிகவும் கடுமையாக ஜுரம் வீசுகிறது. அதனால் உடனே யாராவது டாக்டரை அழைத்து வந்து காட்ட வேண்டும்'' என்றாள் உமா அவரைக் கண்டதும்.

முகத்தில் வழிந்த வியர்வையை அங்கவஸ்திரத்தால் துடைத்துக் கொண்டார் வரதராஜன். என்னவோ ஏதோ என்று பதறிக்கொண்டு ஓடிவந்த அவருக்கு இதைக் கேட்டதும் 'பூ இவ்வளவுதானா?' என்ற இகழ்ச்சியான எண்ணம் ஏற்பட்டது. எனினும் சாமார்த்தியமாக, ''கிழப் பிராணன் எது சாக்கு என்று காத்துக் கொண்டிருக்கும், அதனால் நாம் ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டியது அவசியம். ஆனால் இது சமயம் பார்த்து இன்று நம் வீட்டுக் கார் ரிப்பேராகவல்லவா கிடக்கிறது. பக்கத்து ஊருக்கு மாட்டுவண்டி அனுப்பி டாக்டரைக் கூட்டி வரச் சொல்லவேண்டும். வண்டி போய்வரவே இரண்டு மணியாகிவிடும். நாம் போகும் சமயம் டாக்டர் வெளியே சென்றிருந்தால் இன்னும் கொஞ்சநேரம் பிடிக்கும். எதற்கும்



நான் வீட்டிற்குப் போய், என் வண்டியில் ரங்கதுரையைக் கூட அனுப்பி, டாக்டரை அழைத்து வர ஏற்பாடு செய்கிறேன்'' என்றார்.

உமாவுக்கு இந்த ஆலோசனை சிறிதும் பிடிக்கவில்லை. ''பக்கத்து ஊருக்கு ஏன் போகவேண்டும்? இத்தனை பெரிய ஊரில் டாக்டர் கிடையாதா? அன்று ஒருநாள் நாம் நிலங்களைப் பார்வையிடப் போனபோது கடைத்தெருவின் கோடியில் சிறு வைத்தியசாலை ஒன்றைக் கண்டதாக எனக்கு ஞாபகம்'' என்று சற்றுக் கோபமாக அதட்டிக் கேட்டாள்.

''இந்த ஊரில் ஒரு டாக்டர் சொந்தமாக வைத்தியசாலை வைத்து நடத்திக் கொண்டிருக்கிறார். அவர் ஒருவர் இங்கு சொந்த வைத்தியசாலை வைத்து நடத்துவதனால்தான் 'நாங்கள் இந்த ஊரில் வேறு ஒரு தர்ம வைத்திய சாலை வைத்து நடத்த முடியாது' என்று பஞ்சாயத்தார் தகராறு செய்து விட்டார்கள். நமது குடும்ப வைத்தியர் பக்கத்து ஊரில் வசிக்கிறார். நமக்கு எதற்காவது அவசியம் ஏற்படும் போது அவரைத்தான் போய் அழைத்து வருவது வழக்கம்'' என்றார் மிகவும் பவ்யமாக.

''அவசரத்திற்கெல்லாம் பக்கத்து ஊருக்கு ஓடிக் கொண்டிருப்பது என்பது சாத்தியமா? நீங்கள் போய் உள்ளூரில் இருக்கும் இந்த டாக்டரை இன்று கூட்டி வாருங்கள். நமது ஊரிலேயே ஒரு வைத்தியர் இருக்கும்போது அவரை விட்டுப் பக்கத்து ஊருக்குப் போவானேன்?'' என்று கோபமாகக் கேட்டாள் உமா.

''அதற்குக் காரணம் இருக்கிறதும்மா, உங்கள் தகப்பனாருக்கும் இந்த ஊரில் வசிக்கும் டாக்டர் குருமூர்த்திக்கும் பல வருஷங்களாகப் பெரிய மனஸ்தாபம். அதனால் அவரை பண்ணை வைத்தியத்திற்கு அழைப்பதே இல்லை!'' என்றார் சுருக்கமாக வரதராஜன்.

"என் தகப்பனாருக்கும் அவருக்கும்தானே மனஸ்தாபம். எனக்கு அந்த வைத்தியர் மீது எந்தவிதமான மனஸ்தாபமும் கிடையாதே! அதனால் நான் அழைத்தேன் என்று நீங்கள் போய் அவரை உடனே கையோடு அழைத்து வாருங்கள். ஆபத்து சமயத்தில் இதெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பது நியாய மல்ல" என்றாள் உமா கடுமையாக.

வரதராஜன் தயக்கமாக அவளைப் பார்த்து விழித்தார். பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டார். "அம்மா! நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். டாக்டர் குருமூர்த்தியை அழைத்து வருவது என்னால் ஆகாத காரியம். நான் போய் அழைத்தாலும் அவர் வரமாட்டார். மேலும் என்னை ஒரு முறை அவர் அவமரியாதையாகப் பேசிவிட்டார் என்ற காரணத்திற்காக அவரிடம் எனக்குப் பேச்சு வார்த்தையே கிடையாது!" என்று மென்று விழுங்கினார்

"அப்படியானால் சரி, உங்களால் ஆகாது என்றால் விட்டு விடுங்கள். வண்டியைக் கொண்டு வரச்சொல்லுங்கள். நான் தனியே போய் அந்த குருமூர்த்தியைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்" என்று கோபத்துடன் உத்தரவிட்ட உமா வெடுக்கென உள்ளே சென்றாள்.

## 6

டாக்டர் குருமூர்த்தி என்ற பெயர் பொறித்த பலகை தாங்கிய சிறு ஓட்டு வீட்டின் முன்பு வண்டி நின்றது. உமா கீழே இறங்கி வேகமாக வாயிலை நோக்கி விரைந்து வந்தாள். "இப்படி உட்காருங்கள். ஐயா உள்ளே காரியமாக இருக்கிறார். உங்களுக்கு என்ன வேணுமின்னு சொன்னாக்க, சித்தப் பொறுத்து நான் போய் அவரிடம் சொல்கிறேன்" என்று வாயில் வராந்தாவில் நின்று கொண்டிருந்த வேலையாள் கூறிவிட்டு, அவளைச் சற்று ஆச்சரியத்துடன் ஏற இறங்கக் கவனித்தான்.



அவனது கூற்று முற்றிலும் மெய் என்று நிரூபிப்பது போல் வராந்தாவின் மறுகோடியில் மூடியிருந்த அறையினின்று ஒரு குழந்தை கிறீச்சிட்டு அலறும் சப்தம் கேட்டது "சும்மா இரு! உன்னை இப்போ என்ன செய்து விட்டேன்" என்று யாரோ தொடர்ந்து கடினமான குரலில் அதட்டுவதும் கேட்டது.

"டாக்டர் வெளியே வருவதற்கு நேரம் ஆகுமா? எனக்கு அவசரமாக அவரைப் பார்க்க வேண்டுமே?" என்று கவலை யுடன் கேட்டாள் உமா.

வேலைக்காரன் தன் தலையை லேசாகச் சொறிந்து கொண்டான்.

"உண்மையைச் சொல்லப் போனால் இந்த நேரத்தில் டாக்டர் ஐயா யாரையுமே பார்ப்பது கிடையாது. ஆனால், அப்படிக் கண்டிப்பாக இருக்க முடிகிறதா? கரும்பு ஆலை முதலாளி ஒரு குழந்தையை இட்டுக்கொண்டு வந்து விட்டார். ஓடி விளையாடிக் கீழே விழுந்து அந்தக் குழந்தை காலிலே காயம் பண்ணிக் கொண்டு விட்டது. அந்தக் கேசுக்குத்தான் ஐயா இப்போது உள்ளே கட்டுக் கட்டிக் கொண்டிருக்கிறார். ஓர் அஞ்சு நிமிஷம் உட்கார்ந்து இருங்கோ, வந்துவிடுவார்" என்று உபசரித்தான் அவன்.

உமாவின் ஆடையையும் தோற்றத்தையும் உற்றுக் கவனித்த அவனுக்கு அவளை எங்கேயோ பார்த்தது போன்ற ஒரு நினைவு ஏற்பட்டது. அந்த அம்மாள் அந்த ஊருக்குப் புதிது என்று மட்டும் அவனது புத்திக்கு அதுசமயம் விளங்கியது. ஆனால், அவளை இதற்கு முன் எங்கே பார்த்தோம் என்று மட்டும் அவனுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. 'ஊரில் இந்தம்மா யார் வீட்டிற்கு வந்திருக்கிறாங்க' எனத் தனக்குள் ஆராய்ந்தபடி திருதிருவென விழித்துக்கொண்டு அவன் வராந்தா ஓரத்தி லிருந்த தூண்மீது சாய்ந்தவண்ணம் நின்று கொண்டிருந்தான்.

'சரி, பிறகு என்ன செய்வது?' என்று தனக்குள்ளே பேசிய உமா, வேண்டா வெறுப்பாக அங்கிருந்த ஒரு பெஞ்சுமீது உட்கார்ந்து கொண்டாள்.

அது சமயம் சாத்தியிருந்த அந்த அறையின் கதவு மெல்லத் திறக்கப்பட்டது. குப்பென்று அதைத் தொடர்ந்து மருந்து வாசனை வராந்தா முழுவதும் வேகமாக வந்து பரவியது. ''என்ன ஆச்சரியம்! தங்களை நான் இங்கே சந்திப்பேன் என்று கனவில் கூடக் கருதவில்லையே?'' என்று வியப்புடன் வினவிய வண்ணம் சிவகுமாரன் அறையினின்று வெளியே வந்து அவளுக்கு நமஸ்காரம் செய்தான். எதிர்பாராத இந்தச் சந்திப்பு உமாவின் நெஞ்சத்தைப் படபடவென்று துடிக்கச் செய்தது.

''கரும்பு ஆலை முதலாளி ஒருவர் இங்கே வந்திருக்கிறார் என்று சற்று முன் இந்த வேலையாள் சொன்னான். ஆனால் நான் அது தாங்களாக இருக்குமென்று கொஞ்சமும் எதிர்பார்க்க வில்லை'' என்று கூறிய உமா மென்மையாகப் புன்முறுவல் செய்தாள்.

''முதலாளி என்று எனக்குப் பெரிய பட்டத்தைக் கொடுத்துவிட்டானா முனிசாமி! பரவாயில்லை. அனாவசியமாக அந்தஸ்தும் புகழும் நம்மீது சுமத்தப்படும்போது அவைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுபோல் அனாவசியமாக இகழ்ச்சியும் பழியும் சுமத்தப்படும்போதும் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்! இல்லையா, சொல்லுங்கள்'' என்று மந்தஹாசமாக வினவிவிட்டு எதிரே கிடந்த மற்றொரு பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டான் அவன்.

உமா அதற்கு நேரிடையாகப் பதில் கூறாது' ''டாக்டர் குருமூர்த்தியை அவசரமாக ஒரு காரியமாகப் பார்க்க வந்தேன். அவரைக் காண வெகு நேரமாகுமோ?'' என்று கவலையுடன் விசாரித்தாள்.



''டாக்டரிடம் நானும் ஓர் அவசர காரியமாகத்தான் வந்தேன். எங்கள் ஆசிரமத்துக் குழந்தை ஒன்று திடீரென்று ஓடி விழுந்து காயப்படுத்திக் கொண்டு விட்டது. உடனே அதை வண்டியில் போட்டுக் கொண்டு இங்கே ஓடிவந்தேன். டாக்டர் இது சமயம் அந்தக் குழந்தைக்குத்தான் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார். விரைவில் வந்து விடுவார். கவலைப் படாதீர்கள்!'' என்று கூறிவிட்டு, சிவகுமாரன் சற்றுத் தயக்கமாக அவளைப் பார்த்தான். ''நான் கேட்பதில் தவறு இல்லை என்றால், தங்களுக்கு உடம்பிற்கு ஒன்று மில்லையே?'' தொடர்ந்து அனுதாபத்துடன் கேட்டான்.

உமா அதற்குப் பதில் அளிக்க வாய் திறந்தாள். அதற்குள் வராந்தாவின் கோடியிலிருந்த அறைக் கதவு மீண்டும் திறக்கப்பட்டது. ''சிவகுமார்! குழந்தையை அழைத்துக் கொண்டு போகலாம்!'' என்று கம்பீரமாகக் குரல் கொடுத்துவிட்டு, அறுபது வயதிற்கு மேற்பட்ட வயோதிக மனிதர் ஒருவர் வெளியே வந்தார். கழுத்தில் மாலைபோல் அவர் அணிந்து கொண்டிருந்த சோதனைக் குழாயையும், அவரது ஆடையையும் கண்டதுமே உமாவுக்கு அவர்தான் டாக்டர் குருமூர்த்தி என்று யாரும் சொல்லாமலே விளங்கிவிட்டது.

அவளுக்குச் சிரமம் கொடுக்காது சிவகுமாரன் எழுந்திருந்து, ''டாக்டர்! தங்களைக் காண இந்த அம்மாள் கொஞ்ச நேரமாகக் காத்திருக்கிறார்கள். பண்ணையார் ஏகாம்பரம் அவர்களின் புத்திரிதான் இவர்கள். ஏதோ அவசரமாகத் தங்களைக் கலந்து ஆலாசிக்க வேண்டுமாம்'' என்று அறிமுகம் செய்து வைத்துவிட்டு, வராந்தாவின் அறையை நோக்கிச் சென்றான். ''பண்ணையார் ஏகாம்பரத்தின் மகளா!'' என்று ஆச்சர்யத்துடன் கேட்ட குருமூர்த்தி அவளை விழுங்கி விடுகிறவர் போல் உற்றுப் பார்த்தார்.

''ஆமாம் அவர் கூறியது சரிதான். நான்தான் பண்ணையார் ஏகாம்பரம் அவர்களின் புதல்வி உமா. என்

பாட்டியாருக்கு உடம்பு மிகவும் அபாயமாக இருப்பதனால் தங்களைக் கையோடு அழைத்துப்போக அவசரமாக வந்தேன். தற்சமயம் எங்கள் வீட்டுக் கார் ரிப்பேராகிக் கிடப்பதனால் வில் வண்டியைக் கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் உடனே வந்து பார்த்தால் மிகவும் உபகாரமாக இருக்கும்'' - உமா எழுந்து நின்று கை கூப்பி வணங்கினாள்.

''நான் வருவதா?'' என்று திடுக்கிட்டு வினவினார் டாக்டர். நீண்டதொரு பெருமூச்சு விட்டு விட்டு. ''மன்னிக்க வேண்டும். உங்களுடைய வேண்டுகோளை ஏற்க முடியாதவனாக இருக்கிறேன். உங்கள் குடும்ப டாக்டரை நீங்கள் அழைத்துச் செல்வதுதான் நலம்'' என்றார் மிகவும் கண்டிப்பாக.

விக்கி அழுது கொண்டிருந்த ஒரு குழந்தையைச் சமாதானப் படுத்தித் தோளில் தூக்கிச் சுமந்த வண்ணம் சிவகுமார் அறையிலிருந்து வந்தான். டாக்டர் குருமூர்த்தி உமாவுக்கு அளித்த பதில் அவன் காதுகளில் நன்றாகக் கேட்கவே அவன், ஆச்சரியத்துடன் அவரைத் திரும்பிப் பார்த்துக்கொண்டு வெளியே போகாது தயக்கமாக நின்று விட்டான்.

''எங்கள் குடும்ப டாக்டரை அழைத்து வருவதற்குள் பாட்டியின் நிலைமை மிகவும் மோசமாகிவிடும் போல் பயங்கரமாக இருப்பதால் நான் இங்கே ஓடி வந்தேன். தயவு செய்து மறுக்காது வரவேண்டும்'' என்று உமா குழைவாக வேண்டிக் கொண்டாள். சிவகுமார் எதிரே, தான் இவ்வாறு தர்க்கம் செய்து கொண்டிருக்க நேர்ந்தது அவளுக்கு மிக்க சங்கோஜமாக இருந்தது.

டாக்டர் குருமூர்த்தி உள்ளே போகத் திரும்பினார். ''உங்களுக்கென்று பிரத்யேகமாக ஒரு குடும்ப வைத்தியர் இருக்கும்போது, நான் அவர் அனுமதியின்றி நோயாளியை வந்து கவனிப்பது தவறு ஆகும். மேலும் பண்ணையாருக்கும் எனக்கும் நீண்ட காலமாகப் பெரியதொரு மனஸ்தாபம் உண்டு.



நான் அந்த வீட்டுக்குள் மறுபடி கால் எடுத்து வைப்பதில்லை என்று பிரதிக்ஞை செய்து கொண்டிருக்கிறேன். ஆகையினால் அம்மா, தயவு செய்து என்னை வற்புறுத்திக் கட்டாயப் படுத்தாதீர்கள்'' என்று நிர்த்தாக்ஷண்யமாகச் சொல்லி விட்டு வேகமாகச் சென்று விட்டார்.

அவரது கடுமையான சொற்களைக் கேட்டு உமாவின் அழகிய வதனம் சிவந்து சுண்டி விட்டது. எவ்வளவோ குழைவாக வேண்டியும் மறுத்துவிட்டாரே என்ற துக்கத்தில் அவள் கண்கள் கலங்கிவிட்டன. ஜாடையாக அவளது மனப் போராட்டத்தை உணர்ந்து கொண்ட சிவகுமாரன், அழுது கொண்டிருந்த குழந்தையைத் தட்டிச் சமாதானப் படுத்திக் கொண்டு வாயிலுக்குச் சென்று, தயாராகக் காத்திருந்த மாட்டு வண்டியில் ஏற்றிப் படுக்கவைத்து விட்டு விரைவாகத் திரும்பி வந்தான். மிக்க உரிமையுடன் அறையின் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே சென்றான். டாக்டர் குருமூர்த்தி தமது கைகளை சோப்பு போட்டுக் கழுவித் துண்டினால் துடைத்தபடி தமது முதுகுப்புறம் கதவுப் பக்கம் தெரியும்படி நின்று கொண்டிருந்தார்.

''டாக்டர்!'' என்று சிவகுமார் அதட்டி அழைத்ததைக் கேட்டு அவர் ஒரு கணம் உண்மையிலேயே திடுக்கிட்டுப் போய் விட்டார்! ''நண்பன் என்ற முறையில் நான் ஒன்று கூற விரும்புகிறேன். தங்களுக்கும் அந்தம்மாளுக்கும் இடையே நடந்த சம்பாஷணை அனைத்தும் என் காதுகளில் விழத்தான் செய்தன. தங்கள் தொழில் விவகாரத்தில் நான் தலையிடுவதாக எண்ணி என்மீது தாங்கள் கோபம் கொள்ள வேண்டாம். என் சுபாவம் தங்களுக்குத் தெரியும். நியாயமல்லாத காரியம் எதுவானாலும் என்னால் அதைப் பார்த்துக் கொண்டு வாளா இருக்க முடியாது. பண்ணையாருக்கும் தங்களுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டிருந்தது வாஸ்தவம். அது எதன் பொருட்டு என்று நான் ஒரு நாளும் கேட்டறிய விரும்பியதேயில்லை. ஆனால்

அந்த மனஸ்தாபத்தை அவர் மகள் மீதும் தாங்கள் காட்டுவது நியாயத்திற்குச் சற்றும் பொருந்தாததாக இருக்கிறது. பண்ணையார் வந்து தங்களை அவர்கள் வீட்டுக்கு வரும்படி அழைத்திருந்தால் நீங்கள் மறுப்பது நியாயமாக இருக்கும். ஆனால், அவர் மகள் வந்து 'ஆபத்து, உடனே வாருங்கள்' என்று கெஞ்சி அழைக்கும் போது தங்களைப் போன்ற அறிவில் சிறந்தவர்கள் இவ்வாறு கண்டிப்பாக மறுப்பது கொஞ்சமும் நியாயமேயில்லை. வீணாக விவாதம் செய்து பொழுதைக் கழிப்பதை விடத் தாங்கள் உடனே புறப்பட்டுச் சென்று வருவதுதான் சிறந்தது'' என்று கண்டிப்பாகப் பேசினான்.

டாக்டர் குருமூர்த்தி மேஜையருகே கிடந்த பெரிய நாற்காலியில் மிக்க ஆயாசத்துடன் உட்கார்ந்து கொண்டார். ''சிவகுமார்! உனக்கு விஷயம் தெரியாது. ஒரு காலத்தில் நான் பண்ணையாருக்குக் குடும்ப வைத்தியனாக இருந்தவன்தான். அந்தப் பெரிய மனஸ்தாபத்திற்குப் பிறகு மறுபடியும் அந்த வீட்டிற்குச் செல்லவேண்டுமென்றால் என் மனம் கூசுகிறது'' என்று அலுப்பாகப் பேசினார்.

''நீங்கள் எந்தவிதமான ஆக்ஷேபணைகள் கூறிய போதிலும் நான் உங்களை இன்று விடப் போவதில்லை. மருந்துப் பெட்டியை நானே கொண்டு இதோ அந்த வண்டியில் வைக்கப் போகிறேன். கடந்து போன விஷயங்களை நீங்கள் மறந்துவிட்டு மரண வாயிலில் துடித்துக் கொண்டிருக்கும் ஓர் உயிருக்கு உதவி செய்யப் போகிறோம் என்ற ஒரு நல்ல எண்ணத்துடன் புறப்பட்டுப் போகப் போகிறீர்கள்'' என்று மிகவும் உரிமையுடன் அதட்டிவிட்டு, சிவகுமார் அவர் பதிலுக்குக் காத்திருக்காது, அருகிலிருந்த சிறு மர அலமாரியைத் திறந்து வைத்தியரின் மருந்துப் பெட்டியை எடுத்துக் கொண்டான்.



தர்க்கிக்க வேறு வழியில்லாது போகவே குருமூர்த்தி ஆசனத்திலிருந்து எழுந்து, அருகில் ஆணியில் தொங்கிக் கொண்டிருந்த தமது கோட்டை எடுத்து அணியத் தொடங்கினார். ''சிவகுமார்! இவ்வளவு பிடிவாதம் செய்து என்னை வற்புறுத்திக் கடத்திச் செல்வதைப் பார்த்தால், எனக்கு உன்மீது ஒரு சிறு சந்தேகம் உண்டாகின்றது. பண்ணையாரின் மகளை நீ அதிகம் அறிவாயோ?'' என்று கேட்டுவிட்டுப் பரிகாசமாக மெல்லச் சிரித்தார்.

வெளியே செல்லத் திரும்பிய சிவகுமார் இதைக் கேட்டதும் அவர் அருகில் வந்தான். ''டாக்டர் அண்ணா! இவ்வளவு நாட்கள் பழகிய பின்னர் கூட நீங்களும் என்னை இவ்வாறு நினைப்பது சரியேயல்ல. கஷ்டத்தில் இருக்கும் ஆண், பெண் குழந்தைகள் அனைவருக்கும் நான் வித்தியாசமின்றி உதவி செய்ய எப்பொழுதுமே தயாராக இருப்பவன் என்பதைத் தாங்கள் நன்று அறிவீர்கள். பரவாயில்லை. தாங்கள்தானே என்னைக் கேலி செய்கிறீர்கள்? தங்களுக்குக் கூட அத்தனை உரிமையில்லையா?'' என்று பதிலுக்குப் பரிகாசம் செய்துவிட்டு, மெல்லச் சிரித்த வண்ணம் வெளியே வந்தான்.

கவலையே உருவாக வராந்தாவில் நின்று கொண்டிருந்த உமாவைக் கண்டதும், ''கவலைப்படாதீர்கள்! டாக்டர் இரண்டு நிமிஷத்தில் வந்து விடுவார். மருந்துப் பெட்டியை உங்கள் வண்டியில் வைக்கச் சொன்னார், நான் வருகிறேன்!'' என்று கூறிவிட்டு, அவளிடம் விடை பெற்றுக் கொண்டு புறப் பட்டான் சிவகுமார்.

'முடியாது' எனக் கடுமையாகப் பேசிய வைத்தியரிடம் தன் பொருட்டு விவாதித்து ஒப்புக் கொள்ளச் செய்ததற்கு அவனுக்கு நன்றி கூற உமா விரும்பினாள். என்ன சொல்வது என்று அவள் யோசித்து முடிப்பதற்குள், சிவகுமார் வாயிலைத் தாண்டி

வெளியே நின்று கொண்டிருந்த அவர்கள் வீட்டு வில் வண்டியில் மருந்துப் பெட்டியை வைத்துவிட்டு, தனக்காக அதுவரை காத்து நின்ற ஆசிரமத்து மாட்டு வண்டியில் ஏறிக் கொண்டு விட்டான். அடுத்த கணம் வண்டி தெருவினின்று புறப்பட்டது.

''நான் தயாராகி விட்டேன். புறப்படலாமே?'' என்று பின்னாலிருந்து வந்த அதட்டும் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு உமா தனது பார்வையை வாயிலினின்று பின்னால் திருப்பினாள். டாக்டர் குருமூர்த்தி வெளியே புறப்படத் தயாராகி வந்து விட்டதை அறிந்ததும், ''வண்டி வாயிலில்தான் காத்திருக்கிறது. வாருங்கள்'' என்று உபசரித்து விட்டு முன்னால் சென்றாள்.

உமாவின் அருகில் சற்று ஒதுங்கியபடி குருமூர்த்தி அமர்ந்திருந்தார். பண்ணையாரின் காங்கேயத்துக் காளைகள் வேகமாக வண்டியை இழுத்துக் கொண்டு கடைத் தெருவினின்று ராஜ பாட்டையை நோக்கி ஓடின. வெளியே சாலையின் இருமருங்கிலும் ஓங்கி வளர்ந்திருந்த மரங்களையே வெறித்துப் பார்த்த வண்ணமிருந்த குருமூர்த்தி, உமாவிடம் ஏதுமே பேசவில்லை. வண்டி சாலையினின்று திரும்பி பண்ணையாரின் மாளிகையின் தோட்டத்திற்குள் புகுந்தது.

தம்மை அறியாமலேயே குருமூர்த்தி நீண்டதொரு பெருமூச்செறிந்தார். ''இருபது வருஷங்களுக்குப் பிறகு மறுபடியும் நான் இங்கே வருவேன் என்று கனவிலும் நினைத்தது கிடையாது. நினைப்பது நடக்காதிருப்பதும், நினைக்காதவைகள் நடப்பதும்தானே வாழ்க்கையின் விசித்திரமாகும்'' என்று தமக்குள்ளே பேசுகிறவர் போல் மெல்லிய குரலில் கூறினார்.

சற்று முன் தன்னிடம் பேசியபொழுது கடுமையாகக் காணப்பட்ட அவர் முகபாவம் இப்பொழுது முற்றிலும் மாறிவிட்டிருப்பதைக் கண்டு உமா அதிசயமடைந்தாள். அவர்



பேசியதைத் தொடர்ந்து ஏதேதோ அவரைக் கேட்க வேண்டும் என்ற ஓர் ஆவல் அவள் உள்ளத்தில் சட்டென எழுந்தபோதிலும், அவளுக்கு அவ்வாறு கேட்க அச்சமாக இருந்தது. 'தவறாக எண்ணிக்கொண்டு கோபித்துக் கொண்டுவிட்டால்?' எனத் தனக்குள் எண்ணிப் பயந்தவளாக அவள் இருந்து விட்டாள்.

குருமூர்த்தி வந்து கவனித்து சிகிச்சை செய்து விட்டுப் போன பின்பு தையல்நாயகியின் உடல்நிலையில் சிறிது அபிவிருத்தி காணப்பட்டது. மூச்சுவிட முடியாது சிரமப்பட்டுக் கொண்டிருந்த பாட்டியார், அன்று மாலைப்பொழுது படுக்கையிலே எழுந்து உட்கார்ந்து கொண்டு விட்டதைக் காணப் பேத்திக்கு மகிழ்ச்சி பொங்கிக் கொண்டு வந்தது.

அடுத்த இரண்டு தினங்களிலும் படிப்படியாகக் கிழவியின் தேக நிலையில் அபிவிருத்தி காணப்படவே உமாவின் உள்ளத்திலே அமைதி நிலவத் தொடங்கியது.

'பூரண குணமடையட்டும், பாட்டியாரிடம் மெல்ல அந்த விஷயத்தைப் பற்றிப் பேசலாம்' என்ற ஆவலுடன் அந்த நாளுக்காகக் காத்திருந்தாள். ஆனால் விதியின் தீர்மானம் வேறு விதமாக இருந்தது.

குருமூர்த்தியிடம் வைத்தியம் ஆரம்பித்த மூன்றாவது தினம் இரவு, திடீரென்று மறுபடியும் மூச்சுவிட முடியாது தையல்நாயகி திணறத் தொடங்கிவிட்டாள். பேத்தி தங்கள் வீட்டுக் காரை எடுத்துக்கொண்டு பரபரப்பாக ஓடி வைத்தியரை அழைத்து வருமுன் தையல்நாயகி அம்மாள் யாருக்கும் காத்திராது நிம்மதியாகச் சிவபதமடைந்து விட்டாள்.

# 7

**ப**ண்ணையாரின் தாய் வெகு நாட்களாகவே ஆரோக்கியம் குன்றிப் படுத்த படுக்கையாக இருந்தாள் என்பது யாவரும் அறிந்த விஷயம். எனவே, அவளது மரணம் உற்றாருக்கும் உறவினருக்கும் எவ்விதமான அதிர்ச்சியையும் கொடுக்கவில்லை. வெகு நாட்களாக எதிர் பார்த்திருந்த ஒரு சம்பவத்தைப்போல அவர்கள் அதை அசட்டையாக வர வேற்றனர். ஐந்திலே அல்லது பிஞ்சிலே மாண்டு போனாளா என்ன? நன்றாக வாழ்ந்து அலுத்த பின்னர்தானே இறந்து போனாள்? இதற்கென்ன துக்கம்? என்ற எண்ணத்தில், பண்ணையாட்கள் கூட அவ்வளவாக வருந்திப் புலம்ப வில்லை. மகனைப்போல் தாயார் அத்தனை செல்வாக் குடையவளாக இருக்கவில்லையாதலால், அவளது மரணத் திற்குத் துக்கம் விசாரிக்க வந்து போய்க் கொண்டிருந்த உற்றார் உறவினர் கூட்டமும் மிகக் குறைவாகவேதான் இருந்தது.

வரதராஜனைப் பொறுத்தவரை, கிழவியின் மரணம் ஒரு பெரும் பாரம் குறைந்தது போல்தான் இருந்தது. சில வருஷங்களாக நோயாளியாக இருந்து, சாகவும் மாட்டாது பிழைக்கவும் செய்யாது இழுத்துக் கொண்டிருந்த அவளுக்காக, அவர் நினைத்த சமயமெல்லாம் வைத்தியர் வீட்டைத் தேடி ஓட வேண்டியிருந்தது. வெய்யிலிலும் மழையிலும், வயதையும் சிரமத்தையும் பாராது மருந்துக்கு அலைந்து தேடி வாங்கி வர வேண்டியிருந்தது. இனி அந்தத் தொல்லைகள் ஏதும் இல்லையென்ற எண்ணத்திலே அவருக்குப் பெரும் நிம்மதி ஏற்பட்டிருந்தது. ஆனால் வெளிப் பார்வைக்குக் கிழவியின் மரணத்தால் மெத்த மன அதிர்ச்சியுற்று விட்டவர் போல் நடந்து கொண்டார்.



''எவ்வளவோ சீரும் சிறப்புமாக வாழ்ந்தார்கள். மகனுக்கு முன் தான் போயிருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். அவ்வளவுக்குக் கொடுத்து வைக்கவில்லை'' என்று அடிக்கடி கூறி அலுத்துப் புலம்பிய வண்ணம் இருந்தார்.

அன்று காலை போஜனம் முடிந்ததும் வரதராஜன், தமது வீட்டிலிருந்து வழக்கத்தைவிடச் சற்று முன்னதாகவே பண்ணையாரின் மாளிகைக்குப் புறப்பட்டு விட்டார். கிழவிக்குச் செய்து முடிக்க வேண்டிய ஈமக் கடன்களைப்பற்றி விவரமாக உமாவிடம் பேசி, தமக்கு அந்தக் குடும்பத்தில் உள்ள கருத்தை அவள் உள்ளத்திலே பசுமரத்து ஆணியாகப் பதிய வைக்க வேண்டுமென்ற ஆத்திரம் அவருக்கு.

வில் வண்டியினின்று ஆடம்பரமாக இறங்கி, தமது சரிகை அங்கவஸ்திரத்தை ஆசையுடன் தடவிக் கொடுத்துக் கொண்டு, சுற்றுமுற்றும் அலக்ஷியமாகப் பார்த்த வரதராஜன், வாயில் பந்தலின் அருகே நின்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளைக் கண்டதும் திடுக்கிட்டுப் போனார். மானேஜர் அய்யாவைக் கண்டதும், கை கட்டியபடி மிகவும் பணிவோடு அருகில் வந்து, பண்ணைக் கணக்குப் பிள்ளை அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு விழித்தபடி நின்றான்.

''யார் வந்திருப்பது?'' என்று சைக்கிளைக் காட்டி ஜாடை செய்து வினவினார் வரதராஜன்.

''கரும்பு ஆலை சிவகுமார் வந்திருக்கிறார். அம்மாவும் அவரும் நீண்ட நேரமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்'' என்று அவர் கேட்காத ஒரு கேள்விக்கும் சேர்த்து பதில் அளித்தான் கணக்குப்பிள்ளை.

''இவர்களையெல்லாம் யார் உள்ளே அனுமதித்தது? நான்தான் அவனைப்பற்றி முன்பே எச்சரித்திருந்தேனே. வேலையென்ன அவனுக்கு! காலை விடிந்ததும் விடியாததுமா

யாசகத்துக்கு வந்துவிட்டான். ஆசிரமம், அது இது என்று சொல்லிக்கொண்டு, ஏமாந்தவர்களைப் பார்த்துப் பணம் பிடுங்கித் தின்ன வேண்டியதுதான் அவன் தொழில்!'' என்று கோபமாகப் பேசினார் வரதராஜன்.

''உங்கள் உத்தரவு இல்லாது அம்மாவைப் பார்க்க முடியாது என்று கண்டிப்பாகச் சொன்னேன். ஆனால் அவர் அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் ஒரு காகிதத்தில் தமது பெயரை எழுதி வேலையாளிடம் கொடுத்து அனுப்பிவிட்டார். அம்மா உடனே உள்ளே வரச் சொல்லவே, ராஜாங்கமாகப் போய்விட்டார்'' என்று நடந்ததை விவரமாகப் பற்ற வைத்தான் கணக்குப்பிள்ளை. பல வருஷங்களாக ஊழியம் புரிந்துவரும் மானேஜர் ஐயாவுக்குப் பண்ணையிலிருந்த செல்வாக்கை அவன் அறிவான். ஆதலினால், ஐயாவுடன் ஒத்துப்போவதில் அவனுக்கு மிக்க ஆர்வம் இருந்தது இயற்கையே.

''நல்லதிற்கு நரி முட்டையிடவில்லை. உம்! இருக்கட்டும். இதெல்லாம் எவ்வளவு தூரம் போகிறதென்று பார்த்து விடுகிறேன்'' என்று கணக்குப் பிள்ளையின் காதுகளில் விழும்படி கோபத்துடன் தமக்குள்ளே பேசுகிறவர் போல் சொல்லிக் கொண்டார். பிறகு தொண்டையைக் கனைத்து விட்டு, அங்கவஸ்திரத்தை சரிப்படுத்திக்கொண்டு பாதரக்ஷை கனமாக ஓசை செய்ய மிக்க கம்பீரமாக உள்ளே சென்றார்.

மாளிகையின் முன்கட்டு ஹாலின் மத்தியில் கிடந்த இரு ஆசனங்களில் எதிர் எதிராக உமாவும் சிவகுமாரனும் அமர்ந்து கொண்டு மிக்க ஸ்வாரஸ்யமாக வார்த்தையாடிக் கொண்டிருந்தனர். அருகிலிருந்த மேஜை மீது, வெள்ளித் தட்டில் பலகாரமும், வெள்ளிக் கூஜாவில் காப்பியும் வைக்கப் பட்டிருந்ததைக் கண்ணுற்ற மானேஜருக்குக் கோபம் பொங்கிக் கொண்டுவந்தது. 'பண்ணையார் உயிருடன் இருந்த காலத்தில் மாளிகையின் வாயிற்படியைக் கூட மிதிக்க அனுமதியற்றிருந்த



சிவகுமாரனுக்கு, இத்தனை ஆசார உபசாரங்கள் வேறு நடக்கின்றன' என்று தமக்குள் எண்ணி வெகுண்டார். காலடி ஓசையைக் கேட்டு சிவகுமார் பேச்சின் நடுவே திரும்பினான். ''வாருங்கள் மானேஜர் ஸார்! இப்பொழுதுதான் உங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அதற்குள் தாங்களே வந்து விட்டீர்கள்'' என்று மலர்ந்த முகத்துடன் வரவேற்று, கைகுவித்து நமஸ்காரம் செய்தான்.

''அப்படியா'' என்று தமது ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு கபடமாகச் சிரித்தார் வரதராஜன். எஜமானி பக்கம் திரும்பி ஒரு கும்பிடு போட்டுவிட்டு, அருகில் இருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

''அவர் சொல்வது வாஸ்தவமே. தங்களுக்கு ஆயுசு நூறு என்பதில் சந்தேகமே இல்லை. 'எங்கள் மானேஜர் வருகிற நேரம். வந்து விடுவார்' என்று சொல்லிக் கொண்டிருந்தேன். தாங்கள் வந்து விட்டதைக் காண ஆச்சர்யமாக இருக்கிறது'' என்று உற்சாகமாகச் சொன்னாள் உமா. அவளது முகம் என்றுமில்லாத பொலிவுடன் பிரகாசிப்பதை மானேஜர் காணத் தவறவில்லை.

''நூறு வயது நான் வாழ வேண்டுமா, அம்மா? இந்தக் கிழவனுக்கு ஏன் இந்தத் தண்டனை?'' என்று பரிகாசமாகக் கேட்பவர் போல் கேட்டுவிட்டு, புன்முறுவல் செய்தார் வரதராஜன்.

''தங்களைப் போன்ற அனுபவசாலிகள் பல வருஷங்கள் வாழ்வதனால் சமூகத்திற்கும், மற்றோருக்கும் பயன்தானே ஏற்படுகின்றது? அதனால் தங்களை நூறு வருஷம் ஜீவித்திருக்கும்படி உமா அம்மா வேண்டிக் கொள்கிறார்கள்'' என்று உற்சாகமாகச் சொன்ன சிவகுமார் உரக்கச் சிரித்தான். ஏதோ பெரிய ஹாஸ்யத்தைக் கேட்டு மகிழ்ந்து விட்டவள் போல் உமா தனது அழகிய கன்னம் குழிய, முல்லைப் பற்களின் வரிசை பளீரென்று பிரகாசிக்க, 'களுக்'கெனச் சிரித்தாள்.

''உமா அம்மாவுக்கு என்னால் பிரயோஜனம் அதிகம் இருக்குமாகில் நூறு வயதென்ன, இருநூறு வயது வேண்டுமானாலும் ஜீவித்திருக்க விரும்புவேன். அதில் ஆக்ஷேபணை என்ன?'' என்று சற்றுக் காரமான குரலில் பதிலளித்த வரதராஜன் சிவகுமாரனை உறுத்துப் பார்த்தார். ''தம்பி, போதும், வாயை மூடிக்கொள். உன்னை உள்ளே விட்டதே அதிகப் பிசகு. அதற்குமேல் அதிகப் பிரசங்கித்தனமாக என்னுடன் சரிசமமாகப் பேசும் அளவுக்கு உறவு கொண்டாடாதே! ஜாக்கிரதை!' ' என்று பேசாது பேசியது அவரது பார்வை.

கைக்கடிகாரத்தை ஒரு முறை கவனித்துவிட்டு உமா ஆசனத்தினின்று பரபரப்பாக எழுந்திருந்தாள். ''மானேஜர் ஸார் உங்களுக்காகத்தான் நாங்கள் காத்திருந்தோம். நான் இன்று இவர் பார்வையில் நடக்கும் ஆசிரமத்தைப் பார்வையிடப் போகிறேன். ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்தில் திரும்பி விடுவேன். அதுவரை தயவு செய்து தாங்கள் இங்கிருந்து எனக்குப் பதிலாகக் காலைத் தபால்களைக் கவனித்து, மற்ற வீட்டு விவகாரங்களையும் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்றாள். மானேஜர் வரதராஜன் பதில் அளிக்குமுன் அருகில் நின்று கொண்டிருந்த வேலைக்காரனிடம், ''சீக்கிரம் நம் டிரைவரைக் கூப்பிட்டு, காரை எடுத்து வரச் சொல். நேரமாகிறது'' என்று உத்தரவிட்டு மாடிப் பக்கம் விரைந்து சென்று விட்டாள்.

தனியே விடப்பட்ட சிவகுமார் அவருடன் பேசப் பிடிக்காதவனாக எழுந்து வாயிற் பக்கம் சென்று விட்டான். கொஞ்ச நேரத்தில் வெளியே செல்ல ஆயத்தமாகத் தன்னை அலங்கரித்துக்கொண்டு கீழே வந்த உமா அவரிடம், ''நான் வருகிறேன்'' என்று ரத்னச் சுருக்கமாக விடைபெற்றுக் கொண்டு கிளம்பிவிட்டாள். 'துணைக்கு நீங்களும் வாருங்களேன்' என்று உபசாரத்திற்குக் கூடத் தன்னை அழைக்கவில்லை என்பதை உணர்ந்த வரதராஜனுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.



'பணமும் பதவியும் வந்ததும் சோற்றுக்குத் தாளமடித்துக் கொண்டிருந்த நிலைகூட மறந்து போய்விட்டதே. எத்தனை அட்டகாசமான பேச்சு! எத்தனை துணிச்சல்! இருக்கட்டும்' என்று தமக்குள்ளே வெகுண்ட வண்ணம் அவர் எழுந்திருந்து ஹாலுக்குள் யோசனையுடன் முன்னும் பின்னும் உலாவினார். அவர் உள்ளத்தில் அது சமயம் அனல் பிழம்பாகக் கொந்தளித்துக் கொண்டிருந்த ஆத்திரம், எதேச்சையாக அங்கே ஆவலுடன் வந்து எட்டிப் பார்த்த கணக்குப் பிள்ளையின் தலையில் வந்து விடிந்தது!

''ஏண்டாப்பா தம்பி! காலை வேளையில் தீவட்டித் தடியன்போல் வீட்டைச் சுற்றி வளையம் வருகிறாயே. போய்க் கணக்குப் புத்தகங்களை எடுத்து வா. உன் வரவு செலவு கணக்கில் ஏக தப்புகள் இருப்பதாக அம்மா குறை சொல்லுகிறார்கள். நான் அவைகளைக் கவனிக்க வேண்டும். போ, சீக்கிரம்'' என்று உரத்த குரலில் கோபத்துடன் கர்ஜித்தார்.

''சட்டென தரையைக் கூட்டிவிட்டு அப்பால் போ! ஏன் மசமச என்று நிற்கிறாய்?'' என வேலைக்காரப் பெண் மீது எரிந்து விழுந்தார். குடிக்கத் தண்ணீர் கொண்டு வந்து அருகில் வைத்துவிட்டு மரியாதையோடு அவர் உத்தரவுக்குக் காத்து நின்ற சமையற்காரன்மீது அனாவசியமாகச் 'சள்' என்று விழுந்தார். அன்று காலை அவரது சினத்திற்கு இலக்காகாது தப்பியவர்கள் மாளிகையில் ஒரு சிலர்தான் என்று கூற வேண்டும்.

இவ்வாறு வரதராஜன் பண்ணையார் மாளிகையில் கோபமே உருவாகக் கொந்தளித்துத் துடித்துக் கொண்டிருந்த அதே சமயம், பண்ணையாரின் செல்வப் புத்திரி உமா, தான் அன்றுவரை அனுபவித்திராத ஒரு நூதன உணர்ச்சியை நுகர்ந்தவண்ணம், தங்கள் வீட்டுப் பழைய மாடல் காரில் அழகர்நத்தம் எல்லையைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தாள். மானேஜர் வரதராஜன்போல் சிவகுமார் அவளிடம் வழி

நெடுகிலும் தொணதொணவென்று ஏதும் பேசிக் கொண்டிருக்க வேயில்லை. 'விர்' என்று முகத்தின்மீது பறந்த இளந்தென்றலின் இன்னிசையை அனுபவித்தவண்ணம் அவள் காரின் பின் ஆசனத்தில் சாய்ந்து கொண்டு கண்களை மூடியபடி ஒரு தனி இன்ப உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்.

காரின் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த சிவகுமார் அவளது சிந்தனையையும், தனிமையையும் கலைக்க விரும்பவில்லை. ஆசிரமத்திற்குச் செல்லும் வழியைப் பற்றி டிரைவருக்குச் சுருக்கமாக மெல்லிய குரலில் எடுத்துக் கூறிவிட்டு, அவன் வழி முழுவதும் மௌனமாகவேதான் இருந்தான்.

தங்கு தடையின்றி ஓடிக் கொண்டிருந்த வண்டி திடீரென்று நின்றுவிடவே, உமா திடுக்கிட்டுக் கண்களை விழித்துக்கொண்டு சுற்றிலும் பார்த்தாள். மரங்கள் அடர்ந்த ஒரு சிறிய தோப்பிற்குள் ஓர் ஓட்டுக் கட்டடத்தின் முன்பு தாங்கள் வந்து சேர்ந்திருப்பதை உணர்ந்ததும் வியப்புடன் ஆசனத்தில் நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்து கொண்டாள். வண்டியின் கதவைத் திறந்துகொண்டு சிவகுமார் முதலில் கீழே இறங்கினான். காரின் பின் ஆசனத்தருகே வந்து கதவைத் திறந்துவிட்டு "ஆசிரமத்திற்கு வந்து விட்டோம். தயவு செய்து தாங்கள் உள்ளே வர வேண்டும்" என்று மிகவும் மரியாதையுடன் அவளை உபசரித்தான்.

" 'குழந்தைகள் ஆசிரமம்' என்றவுடனேயே தாங்கள் வானளாவிய ஒரு கட்டடத்தைக் கற்பனை செய்து கொண்டிருக்க லாம். குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளவும், அவர்களைக் கருத்தோடு பரிபாலிக்கவும் பல தாதிகளையும், மேற்பார்வை யாளர்களையும் எதிர்பார்த்துக்கொண்டு வந்திருக்கலாம். அதுபற்றித் தங்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டால் தயவு செய்து மன்னிக்கவும். இந்த ஆசிரமம் பொதுப்பணியில் ஆர்வமுள்ள எங்கள் சிலரின் ஆரம்ப வெற்றியாகும். முதல் முதலாக இந்தச் சிறு தோப்பையும் இங்கு ஒரு சிறு கட்டடம் கட்டுவதற்கு



வேண்டிய தொகையையும் இந்த ஊரில் வசித்து வந்த ஓர் அம்மாள் எங்களுக்குக் கொடுத்து உதவினார்கள். கட்டடம் கட்டி முடிக்கும் தருவாயில் காலமாகி விட்டார்கள். அவர்கள் ஞாபகமாக இதற்கு நாங்கள் 'மீனாக்ஷி இல்லம்' என்ற பெயரைச் சூட்டியிருக்கிறோம்" என்று விவரித்தபடி சிவகுமார் முன்னே வழிகாட்டிக் கொண்டு நடந்தான். ஓட்டுக் கட்டடத்தின் வாயிற்படியிலே மிகவும் சிறிய எழுத்தில் ஆடம்பரமற்ற முறையில் 'மீனாக்ஷி இல்லம்' என்ற பெயர் பொறிக்கப் பட்டிருந்ததை உமா கவனித்தாள்.

அது சமயம் உள்ளேயிருந்து வெள்ளை உடை தரித்திருந்த வயது சென்ற ஒரு பெண்மணி வெளியே வந்தாள். சிவகுமாரனுக்கும், ஆசிரமத்தைக் காண வந்துள்ள பெண் மணிக்கும் அவள் கைகுவித்து நமஸ்காரம் செய்து விட்டு, "உள்ளே வாருங்கள்! குழந்தைகள் சாப்பிடும் நேரம். அதை நேரே பார்வையிடலாம்" என்று உவகையோடு அழைத்தாள்.

"இன்று காலை தங்களை நான் காண வந்தபோது உடனே என்னுடன் புறப்பட்டு ஆசிரமத்தைக் காண வருவீர்கள் என எதிர்பார்க்கவில்லை. அதனால் நான் இவர்கள் ஒருவருக்கும் தங்கள் வரவைப் பற்றி முன்கூட்டிச் சொல்ல இயலவில்லை. இவர்கள்தான் ஆசிரமத்துக் குழந்தைகளைக் கண்காணித்துக் கொள்ளும் தலைவி ஸ்ரீமதி வடிவாம்பாள். இவர்கள் கீழ் இரண்டு பெண்கள் பணி செய்கிறார்கள். குழந்தைகள் அனைவரையும் கருத்தோடு கவனிக்க இன்னும் சில பணிப்பெண்கள் எங்களுக்குத் தேவையாகத் தானிருக்கிறது. ஆனால் தற்சமயம் பொருள் வசதி அதற்கு இடம் தரவில்லை. அதனால் நாங்கள் இருப்பதைக் கொண்டு காலத்தைக் கடத்த முயற்சிக்கிறோம்" என்று விவரித்து விட்டுச் சிவகுமார், ஆசிரமத்துத் தலைவிக்கு உமாவை அறிமுகம் செய்து வைத்தான்.

குழந்தைகள் உட்கார்ந்து விளையாடும் இடம், குளிக்கும் இடம் என்று அச்சிறு கட்டடத்திற்குள் தனித் தனியே ஒதுக்கப்பட்டிருந்த பல பாகங்களையும் அவன் விவரித்துச் சொல்ல, பார்த்துக்கொண்டே வந்தாள் உமா. குழந்தைகள் சாப்பிடும் அறையருகே வந்ததும் அவர்கள் சற்று நின்றார்கள். காலை உணவு அருந்தும் நேரமாகிவிட்டதனால் குழந்தைகள் அனைவரும் அறைக்கு வெளியே வராந்தாவில் கும்பலாக நின்று கொண்டிருந்தனர். சிவகுமாரனைக் கண்டதும் அவர்கள் அனைவரும் ஏகக் குரலில் உற்சாகத்துடன் ''அப்பா!'' என்று அழைத்துவிட்டு ஓடி வந்து ஆசையுடன் சூழ்ந்து கொண்டனர்.

உமாவின் முகத்தில் பிரதிபலித்த ஆச்சர்யத்தைக் கண்ணுற்ற சிவகுமார் மெல்லச் சிரித்தான். ஆசையுடன் தன் காலைக் கட்டிக்கொண்ட மூன்று வயதுச் சிறுமி ஒருத்தியைத் தூக்கி அன்போடு தோளில் சாத்திக் கொண்டான்.

''ஸ்ரீமதி வடிவாம்பாள் அவர்களை இந்தக் குழந்தைகள் தங்களுடைய தாயாக எண்ணிக்கொண்டு 'அம்மா' என்று அழைக்கிறார்கள். என்னை ஆசையுடன் 'அப்பா' என்று கூப்பிட்டு, கொண்டாடுகிறார்கள். தாயும் தந்தையுமற்ற இந்த அனாதைக் குழந்தைகள் எங்களுக்கு அன்போடு அளித்துள்ள இந்தப் பட்டத்தை நாங்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு அந்த ஸ்தானத்திற்கு உரிய வகையில் இவர்களுக்குப் பணிபுரிய முயற்சிக்கிறோம்'' என்றான்.

''இவ்வளவு குழந்தைகளும் அப்படி என்றால்...'' என்று உமா ஆவலுடன் கேட்டு முடிக்குமுன், ''இவர்கள் அனைவருக்கும் தங்கள் பெற்றோரைப் பற்றியே தெரியாது. வறுமை காரணமாகப் பிறந்த சில மாதங்களிலேயே தாய் தந்தையரால் கைவிடப்பட்ட ஒரு சில குழந்தைகள் இங்கே இருக்கின்றனர். வேறு சில குழந்தைகள் சமூகக் கட்டுப்பாட்டின் கீழ் அவமானச் சின்னமாகப் பிறந்தவர்கள். அவர்களுக்குத்



தந்தையைப் பற்றியோ தாயைப் பற்றியோ ஒன்றுமே தெரியாது'' என்று கூறி முடித்த அவன், ''குழந்தைகளே இந்த அம்மாவுக்கு வணக்கம் சொல்லுங்கள். உங்களையெல்லாம் காண வந்திருக்கிறார்கள்'' என்றான். ஏகக் குரலில் குழந்தைகள் ஒரே கூச்சலாக, ''நமஸ்காரம் அம்மா!'' என்று உற்சாகத்துடன் உமாவையும் பார்த்துக் கத்திவிட்டுக் கை குவித்து நமஸ்கரித்தார்கள்.

இதற்குள் உணவு பரிமாறும் நேரம் ஆகிவிட்டது என்பதை எச்சரித்தவண்ணம் ஆசிரமத்து வாயிலில் தொங்கிய மணியை வேலைக்காரன் அடிக்கத் தொடங்கினான். கும்பலாக நின்றுகொண்டிருந்த குழந்தைகள் அனைவரும் வரிசையாக ஒருவர் பின் ஒருவராக நின்று கொண்டு போஜன அறைக்குள் ஒழுங்காகச் சந்தடி செய்யாது அமைதியாகச் சென்றனர். ஒவ்வொருவரும் தத்தமக்கு அளிக்கப்பட்ட இடத்தில் அமரிக்கையாக உட்கார்ந்து கொண்டனர். சூடாக இட்லியும், சர்க்கரையும் சமையற்காரி பரிமாறிக்கொண்டு போக, குழந்தைகள் சுவைத்துச் சாப்பிடத் தொடங்கினார்கள். சற்று நேரம் அவர்களையே வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்ற உமா, ''நற்பழக்கங்களைச் சரிவர போதித்தால் குழந்தைகள் எவ்வளவு சீக்கிரம் கற்றுக்கொண்டு விடுகிறார்கள். எத்தனை அடக்கமாகவும், ஒழுங்காகவும் இவர்கள் அனைவரும் ஆசிரமத்துச் சட்ட திட்டங்களுக்கு இந்தச் சின்னஞ் சிறு வயசிலேயே பணிந்து நடக்கிறார்கள். பார்க்க அதிசயமாக இருக்கிறது'' என்றாள் மனவெழுச்சியுடன்.

'' 'தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டில்' என்று அதற்குத்தான் பழமொழி வழங்குகிறது போலும்!'' என்று பதிலளித்த சிவகுமார், அவளை ஆசிரமத்தின் மற்ற இடங்களைச் சுற்றிப் பார்க்க அழைத்துச் சென்றான். தோட்டத்தின் எல்லையைச் சமீபித்ததும் தயக்கமாக நின்று உமாவை மிக்க இரக்கத்துடன் பார்த்தான்.

''உங்களிடம் ஒரு சிறு வேண்டுகோள் விடுத்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் தோட்டத்திற்கு அருகில் உள்ள ஐந்து ஏக்கர் பூமி தங்கள் பண்ணையைச் சேர்ந்ததாக உள்ளது. தற்சமயம் அது தங்களுடைய சொத்தாக இருக்கிறது. அதை விலைக்கு வாங்க நாங்கள் உங்கள் தந்தையிடம் வெகுவாக முயன்று தோற்றுவிட்டோம். அந்த இடம் எங்களுக்கு விலைக்குக் கிடைத்தால் குழந்தைகள் ஓடியாடி விளையாட சகல வசதியுடன் அழகானதொரு விளையாட்டு மைதானம் அமைக்கலாம் என்ற ஆசை உண்டு. தங்கள் தந்தையிடம் அதை விலைக்கு வாங்க முடியவில்லை. தங்களுக்குத் தேவையில்லாதிருந்தால் அந்த பூமியை எங்களுக்கு விற்கலாமா என்று கேட்டறிய விரும்புகிறோம்'' என்றான் மிகவும் சங்கோஜத்துடன்.

உமா அதற்கு நேரிடையாகப் பதில் கூறவில்லை. சிறிது நேரம் அவன் குறிப்பிட்ட திசையிலிருந்து தங்கள் நிலத்தை உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றாள். ''நாங்கள், நாங்கள் என்று பன்மையில் பேசுகிறீர்களே. உங்களைத் தவிர ஆசிரமத்து அபிவிருத்தியில் ஈடுபட்டிருப்பவர்கள் இன்னமும் யார் இருக்கிறார்கள்?'' என்று ஆவலுடன் கேட்டாள்.

''ஓ கோ, அதைச் சொல்ல மறந்துவிட்டேன். மன்னிக்கவும். தற்சமயம் இந்த ஆசிரமத்தை நிர்வகிப்பவர்கள் இரண்டு பேர். ஒன்று நான். மற்றொருவர் டாக்டர் குருமூர்த்தி அவர்கள். உண்மையைச் சொல்லப் போனால், அவரது விடாமுயற்சியால்தான் இந்த ஆசிரமம் இந்த நிலையில் உருப்பெற்று நிற்கிறது'' என்றான்.

''டாக்டர் குருமூர்த்தியா?'' என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள் உமா.

''ஆமாம் அம்மா! அவருக்குப் பொதுப் பணியில் மிக்க ஆர்வம் உண்டு. கடந்த சில வருஷங்களாக அவருடன் ஏற்பட்ட நட்பு என்னையும் இப்பணியிலே இழுத்து விட்டது என்றால் மிகையில்லை. டாக்டர் குருமூர்த்தி பார்வைக்குக் கடின சித்தராகக் காணப்படுகிறாரே ஒழிய, உண்மையில் அவரது உள்ளம் பஞ்சிலும் மிருதுவானது. ஆரம்பத்தில் ஒரே ஒரு குழந்தைக்காக இந்த ஆசிரமத்தை அவர் ஆரம்பித்தார். இப்பொழுது வளர்ந்து இவ்வளவு குழந்தைகளைப் போஷிக்க இடம் பெற்றுவிட்டது. இன்னமும் மேலும் விருத்தி செய்ய வேண்டுமென்ற ஆர்வம் அவருக்கு. வாழ்க்கையில் மிக்க கஷ்டமான அனுபவங்களைப் பெற்றவர். கண்ணியமான மனிதர். மனைவி குழந்தைகளை மரண தேவதையிடம் இழந்து விட்டுப் பல வருஷங்களாகத் தன்னந்தனியாக வாழ்கின்றார். அந்தத் தனிமையே அவரை இக்குழந்தைகள்பால் மெத்தவும் கவர்ந்து விட்டிருக்கிறது'' என்றான் உணர்ச்சி பொங்கிய மெல்லிய குரலில்.



''டாக்டர் குருமூர்த்தி தமது அனுபவங்கள், தனிமை முதலிய பல்வேறு காரணங்களால் இவ்வாறு சமூக சேவையில் ஈடுபட்டது இயற்கையே. ஆனால் தங்களைப் போன்ற ஊக்கமும் உற்சாகமும் நிறைந்த வாலிபர், இந்த வயதில் பொதுப்பணியில் ஈடுபட்டிருப்பது மிகமிக ஆச்சர்யமாக இருக்கிறது'' என்றாள் உமா பதிலுக்கு.

''இதில் ஆச்சர்யப்படுவதற்கு எதுவுமே இல்லை. இந்த அனாதைக் குழந்தைகள் என்னைக் கவர்ந்து கொண்டதற்குக் காரணம் இருக்கிறது. இந்தக் குழந்தைகளைப் போலவே நானும் ஒரு காலத்தில் தாய் தந்தை இருவரையும் அறியாது ஒரு அனாதை ஆசிரமத்திலே வளர்ந்து, வாழ்க்கையில் போராடி வெளிவந்தவன். அவமானத்தின் காரணமாகவோ, வறுமையின் காரணமாகவோ என் தாய் என்னைப் புறக்கணித்து விட்டார்கள். பெற்றோரின் அன்பு என்பதை நாடி என் சிறு உள்ளம் அந்தக் காலத்தில் அனுபவித்த துடிப்பை நான் நன்கு அறிவேன். அதனால், இந்தக் குழந்தைகள்மீது எனக்கு இயற்கையாகவே பாசம் ஏற்பட்டுள்ளது'' என்றான்.

அவனது கண்களிலும் முகத்திலும் படிந்து நின்ற துயரத்தின் சாயை உமாவின் நெஞ்சை உருகச் செய்தது. கொஞ்சமும் ஒளிவு மறைவின்றித் தனது பூர்வீகத்தை அச்சமின்றி எடுத்துச் சொன்ன அவனது உள்ளத் துணிவு அவளுக்குப் பிரமிப்பை உண்டாக்கவே "அப்படியா!" என்று கேட்டு விட்டுப் பெருமூச்செறிந்தாள். சிறிது நேரம் சிந்தனையுடன் வாளா நின்றாள். "மிஸ்டர் சிவகுமார்! உங்களது பொதுப்பணி என் உள்ளத்தைப் பெரிதும் கவர்கின்றது. என்னால் ஆன அந்த உதவியை ஆசிரமத்திற்குச் செய்ய பின்வாங்க மாட்டேன். எனது வக்கீலைக் கலந்து ஆலோசித்து, அந்த பூமியைத் தங்களுக்கு நன்கொடையாகக் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்" என்று கூறிவிட்டுக் கிளம்பினாள்.

மாளிகைவரை கூடவந்து வழியனுப்பி விட்டுச் சென்ற சிவகுமார் விடைபெற்றுக் கொண்டபோது ஏனோ உமாவின் கண்கள் கலங்கின. தன்னைப்போல் அவனும் தாயும் தந்தையுமற்ற ஓர் அனாதை என்ற எண்ணத்தினாலோ என்னவோ அவள் மனம் அவன்பால் மெத்தவும் கனிந்து விட்டிருந்தது.

## 8

அன்று பகல் சூரியன் மிகவும் கடுமையாக அனலை வீசிக் கொண்டிருந்தான். தங்கள் வீட்டு மாட்டு வண்டியினின்று, குதித்து விடுகிறவன் போல் ரங்கதுரை மிகவும் துரிதமாக இறங்கினான். வெளியே சென்றிருந்த மகனுக்காக போஜனம் செய்யாது வரதராஜன் வெகு நேரமாகக் காத்திருந்தார். ரங்கதுரைக்கு ஒரே கோபம். முதலாவதாக, அவன் தொழில் விஷயமாக வெளியே சென்றிருந்த காரியம் கைகூடவில்லை. இரண்டாவதாக, சில தினங்களாக அவன் காதுகளில் விழுந்து கொண்டிருந்த ஒரு விஷயத்தை அவன் கண்கூடாகக் காண



நேர்ந்தது. பக்கத்து நகரத்திற்குச் சென்று திரும்பும் வழியில் அவர்கள் வீட்டு வண்டி 'மீனாக்ஷி இல்லம்' அமைக்கப்பட்டிருந்த பாதை வழியே வரவேண்டியிருந்தது. ஆசிரமத்து வாயிலில் நின்று கொண்டிருந்த பண்ணையார் வீட்டு பழைய மோட்டார் வண்டியைக் கண்டதுமே ரங்கதுரையின் முகம் சுண்டிவிட்டது.

தோட்டத்திற்குள் ஜோடியாக நடந்து சென்று கொண்டிருந்த சிவகுமாரனையும் உமாவையும் கண்ட மாத்திரம் அவன் உடல் ஆத்திரத்தில் அனலாகப் பற்றி எரியத் தொடங்கியது. பண்ணையார் மகளிடம் தான் ஒருத்தன் மட்டும் நட்புரிமை பாராட்டிச் சரிசமமாக நின்று வார்த்தையாடி மகிழ்வதற்கு எந்த விதத்தில் பொருத்தமானவன் என்பதை அவன் ஏனோ எண்ணிப் பார்க்கவேயில்லை. அழகும் அந்தஸ்தும் இளமையும் ஒருங்கே அமைந்திருந்த உமாவிடம் தன்னைத் தவிர வேறு எந்த ஆடவனும் நெருங்கிப் பழகுவதை அவனால் பார்க்கவும் சகிக்கவே முடியவில்லை.

வெளியே தகித்துக் கொண்டிருந்த சூரியனைவிடப் பொறாமையினால் கொந்தளித்தவண்ணம் அவன் உள்ளே நுழைந்தான். பாதரக்ஷைகளை வெறுப்புடன் கழற்றி வைத்து விட்டு அங்கவஸ்திரத்தை நாற்காலிமீது போட்டான். மகனது முகபாவத்தினின்று, அவன் போய்வந்த காரியத்தில் வெற்றி யில்லை என்று உணர்ந்து கொண்டார் வரதராஜன். "பிறகு பேசிக் கொள்வோம். சாப்பிட நேரமாகி விட்டது" என்று பரிவுடன் அழைத்தார்.

சமையற்காரன் பரிமாறுவதை மேற்பார்வையிட்ட வண்ணம் உள்ளிருந்து வந்தாள் வரதராஜனின் சகோதரி ஷண்பகவல்லி. தமையனுக்கு எதிரே சிறிது ஒதுங்கியபடி தரைமீது வந்து உட்கார்ந்து கொண்டாள். ஒரு கண் சமையலறை மீதும் ஒரு கண் கையில் வைத்திருந்த 'எம்பிராய்டரி' பூவேலை மீதும் இருந்த போதிலும், உண்மையில் அவளது கவனம்

முழுவதும் தந்தைக்கும் மகனுக்கும் இடையே ஏற்படக்கூடிய பேச்சு வார்த்தைகளைக் கிரகிப்பதிலேயே இருந்தது.

தயிர்சாதத்தை ஒரே வாயாக அள்ளிப் போட்டுக் கொண்டு விழுங்கிய ரங்கதுரை, "அப்பா! ஊரிலே நம் பண்ணையைப் பற்றிப் பேசும் அவதூறுகள் தங்களுக்குத் தெரியுமா?" என்று கோபத்துடன் கேட்டான்.

மகன் சொல்லப் போகும் விஷயம் என்னவென்பதைக் கண்டு அறிந்த போதிலும் வரதராஜன் லேசாகச் சிரித்தார். "அழகர் நத்தம் கிராமம் பொய் வதந்திகளைப் பரப்புவதில் பிரசித்தி பெற்றது என்பதை நாம் அறிவோம்" என்றார் அசட்டையாக.

"இல்லையப்பா, நீங்கள் சொல்வது தவறு. நீங்கள் தினசரி பண்ணைக்கு இரு வேளைகள் சென்று வந்தும் அங்கு நடக்கும் காரியங்களைக் கவனிக்கவில்லை என்றால் என்னால் நம்பவே முடியாது. பண்ணையார் மகள் சமீபத்தில் நடந்து கொள்ளும் விதம் பண்ணைக்கோ, நமக்கோ மதிப்புக் கொடுப்பதாக இருக்கவில்லை" என்றான் கோபத்துடன்.

"உமா வயது வந்த பெண், படித்தவள், தகப்பனாருக்குப் பின் அந்தஸ்தில் அமர்ந்து ஆட்சி புரிகிறாள். அவளை நாம் எப்படிக் கட்டுப்படுத்த முடியும்" என்று வினவினார் வரதராஜன். மகனுக்கு ஏற்பட்டிருந்த கோபத்தின் காரணத்தை நன்றாகப் புரிந்து கொண்ட போதிலும் அவர் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

"என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? பண்ணையின் மானேஜர் என்ற ஹோதாவில் உமாவுக்கு இது விஷயமாக புத்தி சொல்ல வேண்டியது உங்கள் கடமை. மேலும், அவள் தந்தையின் உயில் பிரகாரம் சொத்துக்களைப் பரிபாலிப்பதில் தாங்கள் முக்கிய ஆலாசனையாளராக வல்லவோ இருக் கிறீர்கள்?" என்றான்.



வரதராஜன் இதற்குப் பதில் சொல்லவில்லை. ஏனெனில் பண்ணையார் கடைசி முறையாக எழுதிவிட்டுப் போயிருந்த உயிலில், தாம் முந்திய உயிலில் நியமித்திருந்த ஆலோசனை யாளரை அறவே நீக்கி விட்டுத் தமது புத்திரிக்கு ஆஸ்தியை இஷ்டப்படி ஆளச் சகல உரிமைகளும் கொடுத்துவிட்டுப் போயிருந்தார். அந்திய காலத்தில் ஏகாம்பரம் இவ்வாறு தம்மை அலக்ஷியப்படுத்துவார் என்பதைக் கிஞ்சித்தும் கருதாத வரதராஜனுக்கு, உயில் வாசிக்கப் பட்டபோது தான் உண்மை தெரியவந்தது. மரணம் அடையுமுன் ஏகாம்பரம் தம்மை ஏமாற்றிவிட்டார், என்ற வன்மம் அவர் உள்ளத்தில் வேரூன்றிப் பாய்ந்துவிட்டிருந்தது. எனவே, உயிலைப்பற்றி மகன் பேசியபோது கோபத்தினால் அவர் முகம் கருத்துவிட்டது.

"என்ன இருந்த போதிலும், வயது வந்த பெண்ணை என்னால் கண்டிக்கக்கூட முடியவில்லை" என்றார் வரட்சியான குரலில்.

ரங்கதுரை ஆக்ரோஷமாகக் கையை ஆட்டிப் பேசினான் "அது எப்படி முடியும்? தங்களது பாதுகாப்பில் ஒரு வருஷகாலம் இருந்து, அதுசமயம் நடத்தையில் திருப்தி தராவிடில் சொத்துக்களில் பாதியைத் தான தர்மங்களுக்கும் மீதியை மற்ற சொந்தக்காரர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கும்படி, அல்லவா அந்த உயிலின் ஷரத்தில் கண்டிருந்தது? தங்களது ஸ்தானத்தில் நான் இருந்திருந்தால் உமாவை இவ்வளவு நேரம் ஆட்டி வைத்து, இருக்க வேண்டிய இடத்தில் இருத்தி வைத்திருப்பேன்" என்றான். ஷண்பகவல்லி கையில் வைத்திருந்த மேஜை விரிப்பைக் கீழே வைத்துவிட்டு, நழுவி விழுந்த மூக்குக் கண்ணாடியைச் சரிபடுத்திக் கொண்டாள். "அண்ணா! ரங்கதுரை இப்படி ஆவேசமாகப் பேசுவதில் அர்த்தம் இருக்கிறது. பண்ணையைப் பற்றி யாரும் கேவலமாகப் பேசினால் அதனுடன் தொடர்பு கொண்டிருக்கும் நமக்கு

மிகவும் அவமானந்தான். ஆனால் நீங்கள் சொல்வதிலும் கருத்து இருக்கிறது. அந்தப் பெண் உமா உங்கள் கண்டிப்பைத் தாளமாட்டாது தூக்கி எறிந்து துச்சமாகப் பேசிவிட்டால் உங்கள் கௌரவம் என்ன ஆகும்? ஆனால் நான் அந்தப் பெண் மீது குறை சொல்ல மாட்டேன்!'' என்றாள்.

''என்ன அத்தை இது? கோமுட்டி சாக்ஷிபோல் எல்லோருக்கும் பரிந்து பேசுகிறீர்களே?'' என்று ஏளனமாகக் கேட்டுவிட்டு எழுந்திருந்தான் ரங்கதுரை.

''பெரிய மாளிகையில் முழுவதும் உட்கார்வதும் சாப்பிடுவதும் தூங்குவதுமாகப் பொழுதைக் கழிக்க வேண்டுமென்றால் மிகவும் சிரமம் தான். தனிமையிலே திண்டாடிக் கொண்டிருக்கும் அந்தப் பெண் அதனால்தான் ஆசிரமம், பொது சேவை என்று வெளியே கிளம்பி விட்டிருக்கிறாள். ஆமாம், அண்ணா! ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே. பண்ணையார் மகள் என்று ஊரெல்லாம் பேசிக் கொள்ளும் அவளை நான் ஒரு முறை பார்க்க நீங்கள் இதுவரை ஏற்பாடே செய்யவில்லை. நான் அவளை தரிசித்து சிநேகம் கொள்ளக் கூடாதா?'' என்று மெத்த மனக் குறையுடன் கேட்டாள்.

அதைக் கேட்டதும் வரதராஜனது மூளை விறுவிறுத்தது. கொடிக் கொடியாக ஒரு புது ஆலோசனை அதில் கிளை விட்டு முளைத்தெழுந்தது.

''உமா வந்ததிலிருந்து என்றாவது ஒரு நாள் நமது வீட்டில் வருவித்து விருந்து செய்விக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் அதற்கு சந்தர்ப்பம் ஏற்படவேயில்லை. ஆமாம், ஷண்பகம், நீ இன்று பண்ணையார் மாளிகைக்கு என்னுடன் கூட வாயேன். அந்தப் பெண்ணை அறிமுகப் படுத்துகிறேன்'' என்றார்.



''நானா அண்ணா!'' என்று திடுக்கிட்டு வினவிய ஷண்பகவல்லி தமையனைச் சற்று பீதியுடன் ஏறிட்டுப் பார்த்தாள்.

''நீ எங்குமே வெளியே வருவதில்லை என்பது தெரிந்தது தான். இருந்தாலும் பெண்ணான நீ சென்று உமாவை வீட்டிற்கு அழைப்பதுதான் நல்லது. நான் அழைப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது'' என்றார். ஷண்பகவல்லி அதற்குப் பதில் கூறவில்லை. தரையில் கிடந்த மேஜை விரிப்பைச் சுருட்டி எடுத்துக் கொண்டு உள்ளே சென்று விட்டாள்.

அன்று மாலை தோட்டத்தைச் சுற்றிப் பார்வையிட மாடியிலிருந்து உமா இறங்கி வந்து கொண்டிருந்தாள். மாளிகையின் முன் ஹாலில் வரதராஜன் தனது வருகைக்காக ஆவலுடன் காத்து நிற்பதைக் கண்டாள்.

''என் சகோதரி தங்களைப் பார்த்துப் போக வந்திருக்கிறாள். தாங்கள் உத்தரவு கொடுத்தால்...'' என்று மிகவும் மரியாதையாகக் கேட்டார் அவர் அவளைக் கண்டதும்.

''அப்படியா! இதற்குத் தாங்கள்கூட உத்தரவு கேட்க வேண்டுமா என்ன? அழைத்து வாருங்கள்'' என்று அன்புடன் பதில் அளித்தாள்.

வரதராஜன் பின்னால் மெல்லச் சந்தடியின்றி நடந்து வந்த நடுத்தர வயதுடைய பெண்மணியைக் கண்டதும் உமாவின் கண்கள் வியப்பினால் விரிந்தன. மானேஜரது சகோதரி இத்தகைய பேரழகியாக இருப்பாள் என்று அவள் சிறிதும் எண்ணவேயில்லையாதலால், மிக்க திகைப்புடன் வைத்த கண் வாங்காது தன் முன் வந்து நின்ற பெண்மணியை உற்றுப் பார்த்தாள்.

வயது நாற்பத்தைந்து ஆகிவிட்டபோதிலும் ஷண்பக வல்லி தோற்றத்தில் முப்பது வயதிற்குமேல் மதிக்க முடியாத

இளமையைப் பெற்றிருந்தாள். கருகருவென்று அடர்ந்து வளர்ந்திருந்த கூந்தலை அள்ளி, கோடாலி முடிச்சிட்டிருந்தாள். பூசினாப்போல் பருத்து விட்டிருந்த மேனி மீது உடுத்தியிருந்த சிவப்புப் பட்டுப் புடவை, அவளது தாழம்பூ நிறத்தை மிகைப்படுத்திக் கொண்டிருந்தது. மிருதுவான கழுத்தில் ஒரு சிறு பொன் சங்கிலி மட்டுமேதான் தரித்திருந்தாள். மாசு மறுவற்றுப் பளபளவென்று பிரகாசித்துக் கொண்டிருந்த முகத்திலே கறுப்பு பிரேமிட்ட மூக்குக் கண்ணாடி தவிர வேறு மூக்கிலோ, காதுகளிலோ எவ்விதமான ஆபரணமும் காணப்படாததையும், நெற்றியில் திலகமின்றிப் பாழாக இருப்பதையும் உமா கவனித்து விட்டு நெஞ்சம் துணுக்குற்றாள்.

''உட்காருங்கள், உங்களை இதற்கு முன் நான் சந்தித்தது இல்லை. உண்மையிலே நமது மானேஜருக்கு ஒரு சகோதரி இருக்கிறார்கள் என்ற விஷயங்கூட எனக்குத் தெரியவே தெரியாது'' என்றாள் வியப்புடன்.

''அண்ணாவின் மேல் குற்றம் சொல்வதற்கு இல்லை. நீங்கள் இங்கே வந்த சமயம் நான் என் நிலங்களைக் கவனித்து வர எங்கள் கிராமத்திற்குப் போயிருந்தேன். இரண்டு தினங்களுக்கு முன்தான் திரும்பி வந்தேன். பண்ணையில் தொடர்ந்து ஏற்பட்ட துக்க நிகழ்ச்சிகளைக் கேட்டு என் மனம் மிகவும் வருந்துகிறது. தங்களை நேரில் சந்தித்து என் அனுதாபத்தைத் தெரிவித்துவிட்டுப் போக வந்தேன்'' என்று அண்ணா பேசுமுன், தங்கை சமாதானம் சொன்னாள். தன் கரத்திலே அதுவரை சுமந்துகொண்டிருந்த பெரிய தட்டை மேஜை மீது இறக்கி வைத்தாள்.

''உட்காருங்கள். நிற்கிறீர்களே!'' என்று உபசரித்த உமா அந்தத் தட்டைக் குறிப்பாகத் திரும்பிப் பார்த்தாள்.

''ஒன்றுமில்லை. கோவிலிலிருந்து குங்குமம் விபூதி பிரசாதமும், கொஞ்சம் வீட்டில் நான் செய்த பலகாரங்களும்



கொண்டு வந்திருக்கிறேன், அவ்வளவுதான்'' என்று அன்போடு பதிலளித்த ஷண்பகவல்லி அருகில் வந்து அமர்ந்து கொண்டாள்.

உமாவுக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. பார்க்கப் பார்க்க சற்றும் தெவிட்டாத ஷண்பகவல்லியின் பேரெழில் அவளை அப்படியே பிரமிக்கச் செய்து விட்டது. அதனின்று விழிப்பு ஏற்பட முடியாது அவள் திணறிக் கொண்டிருந்தாள்.

''ஷண்பகவல்லி எனக்கு ஒரே தங்கை. சிறு வயதிலேயே விவாகம் செய்துவைக்க என் தாயார் மிகவும் விரும்பினார்கள். அவர்கள் நல்லதை எண்ணித்தான் செய்தார்கள். விதி வேறு வகையாகத் தீர்மானித்து விட்டது. சின்னஞ்சிறு வயதிலேயே மகளுக்கு ஏற்பட்ட துக்கம் என் தாயை ஒரேயடியாக ஒடுக்கி விடவே, அவள் அதற்குப்பின் நீண்டநாள் ஜீவிக்கவில்லை.'' என்று துயரம் மிகுந்த குரலில் கூறிவிட்டுப் பெருமூச்சு விட்டார் வரதராஜன்.

''என் அண்ணாவும் பல சோதனைகளுக்கு உள்ளானவர் தான். என் விஷயம் இப்படியாயிற்று என்ற சோகம் அவர் உள்ளத்திலிருந்து ஆறுமுன் என் அண்ணியார் ரங்கதுரையைப் பிரசவித்த சில தினங்களில் இறந்து போய்விட்டார்கள். ஒன்றன் பின் ஒன்றாக ஏற்பட்ட துக்கம் அண்ணாவின் உற்சாகத்தைக் குறைத்து, விரைவில் அவரை வயோதிகர் ஆக்கிவிட்டது'' என்று ஷண்பகவல்லி தமையனுக்குப் பரிந்து பேசினாள். அவளது அழகிய வதனத்தில் துன்பத்தின் சாயையைக் கண்டு உமாவின் உள்ளம் உருகிவிட்டது.

''தங்களைப் பற்றி இதுவரை ஒரு வார்த்தைகூட மானேஜர் என்னிடம் கூறியதில்லை'' என்று மெத்த மனக்குறையுடன் சொன்னாள்.

''என் விஷயம் இப்படி ஆனதிலிருந்து நான் எங்குமே அதிகமாக வெளியே வருவதில்லை. மிகவும் அவசியமான இடங்களுக்கு அபூர்வமாகப் போவது வழக்கம். என்னைப் பற்றிப் பெருமையாகப் பேசுவதற்கு என்ன இருக்கிறது? எல்லோரையும்போல் சீரும் சிறப்புமாக வாழ்ந்து கொண்டிருந்தால் தங்கையைப் பற்றிச் பேச அண்ணாவுக்கு உற்சாகம் இருக்கும். அதனால் அவரைப் பற்றிக் குற்றம் சொல்வதில் பயன் இல்லை'' என்றாள். அவளது பெரும் விழிகளில் கண்ணீர் துளிர்த்து மின்னுவதைக் கண்ட உமா மிக்க மன நெகிழ்ச்சி அடைந்து போனாள். தன்னை மீறி ஏற்பட்ட அனுதாபத்தில் ஷண்பகவல்லியின் கரங்களைப் பிடித்துக்கொண்டு, ''இதையெல்லாம் கேட்க என் மனம் மிகவும் வருந்துகிறது. சின்ன வயதிலேயே தங்களுக்கு ஏற்பட்ட கஷ்டம் வாழ்க்கையை மிக்க பாரமாக்கி விட்டிருக்கும். தாங்கள் ஏதாவது பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்து, உத்தியோகம் செய்ய முயற்சித்திருக்கலாம்'' என்றாள் இரக்கமாக.

மெல்லத் தன் கரங்களை உமாவின் அன்புப் பிடியினின்று நீக்கிக் கொண்டு ஷண்பகவல்லி கண்ணாடியைக் கீழே கழற்றி வைத்தாள். கண்களைத் துடைத்துக் கொண்டு லேசாகப் புன்முறுவல் செய்தாள். ''எங்கள் புக்ககத்தார்கள் மிகவும் கர்நாடகப் பழக்கவழக்கங்களில் மூழ்கியவர்கள். நான் பள்ளியில் சேர்ந்து படிப்பதை விரும்பவில்லை'' என்றாள் பெருமூச்சுடன்.

''நானும் எவ்வளவோ முயற்சித்தேன். அவர்கள் பிடிவாதமாக மறுத்து விட்டார்கள். என்ன இருந்தாலும் அவர்களை விரோதித்துக் கொண்டு ஏதும் செய்யத் தைர்யமில்லை. தாயில்லாத ரங்கதுரைக்குத் தாயாக இருந்து எங்கள் குடும்பத்தை ஷண்பகம் இதுவரை காப்பாற்றி வருகிறாள். பொழுது போக்கிற்காகத் தையல் வேலை கொஞ்சம் கற்றுக் கொண்டாள். நானே என் சகோதரியைப் புகழக் கூடாது.



அந்தக் கலையில் ஷண்பகத்திற்கு ரொம்பவும் தேர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஏன் ஷண்பகம்! உமா அம்மாவுக்கு அந்தப் புது தினுசு சரிகை வேலையில் ஏதாவது உன் ஞாபகமாகச் செய்து கொடுக்கக் கூடாதா?'' என்றார் வரதராஜன்.

''சொல்லி விட்டீர்களே! சொல்லாமல் செய்து கொண்டு வந்து ஆச்சரியப்படுத்தினால் அல்லவா நன்றாக இருக்கும்'' என்று தங்கை பரிகசித்துவிட்டு, தன் வரிசைப் பற்கள் முத்துக்களைப் போல் ஒளி வீச மெல்ல நகைத்தாள். சோகத்திலும் சரி, சிரிப்பிலும் சரி பிரமிக்கத்தக்க அழகுடன் விளங்கிய அந்தப் பெண்மணியை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டிருந்த உமா ''அப்படியா? நீங்கள் தைத்துள்ள சில புது தினுசு வேலைப்பாடுகளைப் பார்வையிட நான் மிகவும் ஆசைப்படுகிறேன். தையல் வேலை என்றால் எனக்கு மிகவும் ஆசை. ஆனால் அதை நன்றாகக் கற்றுக் கொள்ளப் பொழுதுதான் இருக்கவில்லை'' என்றாள்.

''ஏன் ஷண்பகம், நம் உமா அம்மாவுக்கு உனக்குத் தெரிந்த தையல் தினுசுகளை அவ்வப்போது இங்கே வந்து சொல்லிக் கொடேன்'' என்று சட்டென சமயோசிதமாக ஆலோசனை சொன்னார் வரதராஜன்.

குறிப்பாகத் தமையனை ஒருமுறை உற்றுப் பார்த்து விட்டு அழகாகப் புன்னகை செய்தாள் ஷண்பகவல்லி. ''இதென்ன பிரமாதம்! உமா உத்தரவு கொடுத்தால் வாரத்திற்கு இருமுறை இங்கு வந்து எனக்குத் தெரிந்ததை சொல்லிக் கொடுக்கிறேன். இவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க எனக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்'' என்றாள் பகட்டாக.

''உத்தரவு என்ற பெரிய வார்த்தை எதற்கு? தாராளமாக நீங்கள் நினைத்த போதெல்லாம் இங்கே வந்து போகலாம். என்னை வேறு யாரோ என்று எண்ணாது சகோதரிபோல் பாராட்டி நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்கிறேன்'' என்று

மகிழ்ச்சியோடு உமா பதிலளித்தாள். ஷண்பகவல்லியைப் பார்த்ததுமே ஏனோ அவளது மனம் காந்தத்தினால் கவர்ந்துவிடும் இரும்பை நிகர்த்துத் தன் வசம் இழந்துவிட்டது.

"சரி. இனி பெண்கள் பேசும் இடத்தில் அதிக நேரம் நான் நின்று கொண்டு இருப்பது தகாது. உங்களுக்குள் அநேகம் இருக்கும் பேசிக் கொள்ள" என்று பரிகாசமாகச் சொன்ன வரதாராஜன், மெல்ல அவ்விடமிருந்து வாயில் பக்கம் நழுவி விட்டார். தனிமையில் விடப்பட்ட ஷண்பகவல்லி தானே பேச ஆரம்பித்தாள். "முன்பெல்லாம் நாள் முழுவதும் ஓயாது தைத்துக் கொண்டிருப்பேன். இப்போது அப்படிச் செய்ய சாத்தியப்படவில்லை. உடம்பு அடிக்கடி தொந்தரவு செய்வதனால் ஒன்றுமே உற்சாகத்துடன் செய்ய முடிவ தில்லை" என்றாள்.

"தங்கள் உடம்பிற்கு என்ன?" என்று கவலையுடன் விசாரித்தாள் உமா.

"ஒன்றுமில்லை, ரத்த அழுத்தம் கொஞ்சம் அதிகம் ஏற்பட்டு விட்டதனால் அடிக்கடி மயக்கம் போட்டு விழுந்து விடுகிறேன். அதனால் தையல் வேலையில் அதிகம் சிரத்தை கொள்ள முடியவில்லை" என்று அசட்டையாகச் சொன்னாள் ஷண்பகம்.

"அட பாவமே! அதற்கேதாவது வைத்தியம் செய்து கொள்ளக் கூடாதா? இந்த வயதிலே அதைப் புறக்கணித்தால் பிறகு மிகவும் ஆபத்தாயிற்றே" என்று விசாரப்பட்டாள் உமா.

"வைத்தியம் செய்து கொள்வதற்கு இங்கே ஏதம்மா தக்க வசதி? தலைவலி என்றால்கூட டாக்டரைத் தேடிக் கொண்டு அடுத்த ஊருக்கு ஓட வேண்டியிருக்கிறது" என்றாள் அவள் சலிப்புடன். உமா எழுந்து நிமிர்ந்து ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டாள். "நீங்கள் சொல்வது தவறு. இங்கே வசதி இல்லாது



போகவில்லை. ஏதோ மனஸ்தாபம் காரணமாக நாம்..." என்று கூறிமுடிக்குமுன் ஷண்பகவல்லி குறுக்கிட்டு," யாரைச் சொல்கிறீர்கள், டாக்டர் குருமூர்த்தியைப் பற்றித்தானே சொல்லப் போகிறீர்கள்? ஐயையோ! உயிர் போனாலும் அவரை நாங்கள் எங்கள் வீட்டிற்குள் அழைக்கவே மாட்டோம். முதல் முதலாக நாம் சந்திக்கிறோம். அது சமயம் நான் வம்பு பேசுவதாகத் தாங்கள் தவறாக எண்ணிக்கொள்ள வேண்டாம். டாக்டர் குருமூர்த்திக்கு இந்த ஊரில் நல்ல பெயரே கிடையாது. ஒரு காலத்தில் அவர் எங்கள் குடும்பத்தின் வைத்தியராக இருந்தவர்தான். உங்களிடம் சொல்வதற்குக் கூட கூச்சமாக இருக்கிறது" என்று படபடவென்று பேசி விட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தாள். பிறகு குரலை மிகவும் தாழ்த்திக் கொண்டு, "அவர் என்னிடம் முறை தவறி நடக்கத் தொடங்கினார். அண்ணா வெகுண்டுபோய் அவரைச் சக்கையாகக் கைதொட்டு அடித்துவிட்டார். அந்த மனஸ்தாபத்திற்குப் பிறகு அவர் பேச்சைக்கூட எடுக்க எங்களுக்கு மிகவும் அவமானமாக இருக்கிறது. இதையெல்லாம் சிறு குழந்தையான உங்களிடம் கூற வெட்கமாக இருக்கிறது. இருந்தாலும், உங்களுக்கு இந்த ஊரில் உள்ளவர்களின் குணம் தெரிந்திருப்பது நல்லது. டாக்டர் குருமூர்த்தியைப் போல் கேவலமான மனிதன் இந்த உலகிலேயே இல்லை என்று நான் தைரியமாகச் சொல்லுவேன். ஊரில் அவரைப் பற்றி யாரும் கௌரவமாகவே சொல்ல மாட்டார்கள். இவ்வளவு வயதாகியும் அவர் பெண்கள் விஷயத்தில் இன்னமும் விவேகமில்லாது நடந்து கொள்கிறதாகக் கேள்வி" என்றாள்.

இதைக் கேட்டதும் உமா திடுக்கிட்டுப் போனாள். டாக்டர் குருமூர்த்தியைப் பற்றி சிவகுமார் கொடுத்த அபிப்பிராயம், ஷண்பகவல்லி சொல்லிய திடுக்கிடும் உண்மைகளுக்கு நேர் எதிராக இருக்கவே, அவளது மனக் குழப்பம் முன்னைவிடப் பன்மடங்காக அதிகரித்து விட்டது.

# 9

அன்று இரவு முழுவதும் உமா நித்திரையின்றி படுக்கையில் புரண்ட வண்ணமிருந்தாள். அலை அலையாகப் பல்வேறு சிந்தனைகள் அவள் உள்ளத்திலே எழுந்து மனதைக் குழப்பிய வண்ணம் இருந்தன. ஷண்பகவல்லியின் அழகிய முகத்தை எண்ணிய போதெல்லாம் பரிசுத்தமானதொரு தெளிந்த ஓடையின் அமைதிதான் அவளது நினைவுக்குச் சட்டென்று உவமையாக எழுந்தோடி வந்தது. வாழ்க்கையில் பல துன்பங்களை அனுபவித்துள்ள அந்த அம்மாள், முதல் சந்திப்பிலேயே வேண்டாத வீண் கதைகளைப்பற்றிப் பேசி அவளை வேணுமென்றே கலங்கச் செய்திருப்பாளா? சே! சே! இருக்காது! முகத்தைப் பார்த்தால் வம்பு தும்புகள் பேசி வீண்பொழுதைக் கழிக்கும் வேலையற்ற பெண்மணி என்று கொஞ்சமும் தோன்றவில்லையே! அப்படியென்றால் சிவகுமாரன் டாக்டர் குருமூர்த்தியைப் பற்றிப் புகழ்ந்து பேசியதெல்லாம் வெறும் பொய்யுரைகளா?

சிவகுமாரனுடன் பழகிய சில தினங்களில் அவனைப் பற்றி ஓரளவு அறிந்து கொண்டிருந்தாள் உமா. தாய் தந்தையற்ற அனாதையென்று ஆசிரமத்தில் வளர்ந்து, வாழ்வுப் பாதைக்கு வந்தவன் என்ற போதிலும், அவனது நடத்தையில் கண்ணியமும், நேர்மையும் நிறைந்திருந்தன. அவனுடைய கபடமற்ற சுபாவமும், மரியாதையான தன்மையும் அவளைப் பெரிதும் கவர்ந்து விட்டமையால் சிவகுமார் வேண்டுமென்றே பொய் கூறியிருப்பான் என்று மனத்தால் சிந்திக்கவும் முடியவில்லை. ஷண்பகவல்லி சொல்லியது உண்மையாக இருக்கலாம். வெகுளியான சிவகுமாரனுக்கு ஒரு சமயம் குருமூர்த்தியின் கபடத்தன்மை விளங்கவில்லையோ என்னவோ? உமாவின் பாட்டியாருக்கு வைத்தியம் செய்ய



பண்ணைக்கு வந்திருந்த சமயம் கண்யமான மனிதராகத்தான் தோற்றமளித்தார். பெண் பித்துப் பிடித்தவர் போல் நேர்மையற்ற முறையில் கடுகளவும் நடந்து கொள்ளவில்லை!

எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ, யார் கண்டது? எல்லாம் ஒரு சமயம் வெளி வேஷமாகவும் இருக்கலாம். தீர விசாரிக்கும் வரை ஒன்றையும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை.

டாக்டர் குருமூர்த்தியின் நடத்தை ஒரு புறம் இருக்கட்டும்; அவர் மீது மானேஜர் வரதராஜன் மனஸ்தாபப்பட்டுக் கொண்டதற்குக் காரணம் ஷண்பகவல்லியே சொல்லி விட்டாள். ஆனால், பண்ணையார் ஏகாம்பரத்திற்கு அவர் மீது எதற்காக மனஸ்தாபம் ஏற்பட்டதாம்? குருமூர்த்தி பண்ணையில் வைத்தியராக இருக்கும்போது ஏதேனும் முறை தவறி நடந்து கொண்டாரா? இதில் ஏதோ ஒரு மர்மம் அடங்கியிருக்கிறது. குருமூர்த்திக்கும், பண்ணைக்கும் உள்ள தொடர்பு ஏதோ ஒன்று இருந்திருக்கிறது. அதைத் தீர அறிந்து கொண்டு விட்டால் மர்மம் புலனாகிவிடும் என்று பலவிதமாக எண்ணி, நித்திரையின்றி உமா தனது படுக்கையில் வெகு நேரம் புரண்டு கொண்டிருந்தாள்.

மறுநாள் காலை எழுந்ததும் உமா அவசரமாகப் பண்ணை அலுவலகளை மேலெழுந்தவாரியாகக் கவனித்துவிட்டு, காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு வெளியே கிளம்பி விட்டாள். மானேஜர் வரதராஜன் வரவிற்குக் கூடக் காத்திருக்கவில்லை. அன்று தினம் எப்படியாவது சிவகுமாரிடம் பேசி குருமூர்த்தியைப் பற்றி மேலே கொஞ்சம் விவரம் அறிந்து கொள்ள வேண்டுமென்ற அவா அவளுக்கு.

வழக்கத்தைவிட மிகவும் அதிகாலையிலேயே பண்ணையார் மகள் தங்கள் ஆசிரமத்திற்கு வந்திருப்பதைக் கண்டு அதன் தலைவி சற்று அதிசயமடைந்தாள். எனினும் அதை வெளியே

காட்டிக் கொள்ளவில்லை. காலை பத்து மணி சுமாருக்குத்தான் தினசரி ஒரு முறை சிவகுமார் அங்கே வருவது வழக்கம். ஆகவே அவன் வரும் வரை பொழுதை இனிதாகக் கழிக்கும் நிமித்தம் உமா ஆசிரமத்துக் குழந்தைகளுடன் மரத்தடியில் உட்கார்ந்து கதைகள் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தாள். மணி பத்து பதினொன்று பன்னிரெண்டு என்று நேரம் மெல்ல ஊர்ந்து சென்றது.

ஆனால் சிவகுமார் வந்தபாடில்லை. பகல் உணவிற்காகக் குழந்தைகளை எச்சரிக்கும் மணி அடிக்கப் பட்டதும் உமாவைச் சுற்றி விளையாடி மகிழ்ந்த வண்ணமிருந்த குழந்தைகள் அனைவரும் ஓட்டமாக ஆசிரமத்தை நோக்கி ஓடத் தலைப்பட்டனர். அதற்குப் பின்னரும் அங்கே எவ்வளவு நேரம் காத்திருப்பது என்று அவளுக்கு விளங்கவில்லை. குழந்தைகளின் உணவை மேற்பார்வையிட்ட வண்ணம் நின்று கொண்டிருந்த ஆசிரமத்துத் தலைவியிடம் மெல்ல வந்தாள். ''இன்று தினம் குழந்தைகளின் அப்பாவை இன்னமும் காணவில்லை. வழக்கமாக வரும் நேரம் கூடக் கடந்து விட்டதே!'' என்று எதேச்சையாகக் கேட்கிறவள் போல் கேட்டாள். ஆனால் அதைப் பேசி முடிப்பதற்கு முன் அவளது முகம் சங்கோஜத்தினால் லேசாகச் சிவந்துவிட்டது. காரணமற்றதொரு திகிலில் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

உமாவை ஏற இறங்கக் குறிப்பாக ஒரு முறை கவனித்து விட்டுத் தனக்குள் தலைவி மெல்லப் புன்முறுவல் செய்து கொண்டாள். ''டாக்டர் குருமூர்த்தி அவர்கள் வீண் கலாட்டா செய்யக்கூடாது என்று கண்டிப்பாக உத்தரவு போட்டிருந் ததனால் நான் வலிய அதைப்பற்றிப் பேசவில்லை. நீங்களே கேட்கும்போது சொல்லாதிருப்பது தவறு. நேற்று சாயங்காலம் ஒரு காரியமாகப் பக்கத்து நகரத்திற்குப் போயிருந்த சிவகுமார்,



திரும்பி வரும் வழியில் ஒரு விபத்துக்குள்ளாகிவிட்டார். வேகமாக அவர் ஓட்டி வந்த மோட்டார் சைக்கிள் சாலை யோரத்திலிருந்த ஒரு பள்ளத்தில் விழுந்துவிட, ஆசனத்தி லிருந்த அவர் வெகு தூரம் தரையில் தூக்கி எறியப்பட்டு விட்டார். காயம் கொஞ்சம் பலமாகப் பட்டு விட்டதனால் அவருக்கு ஓய்வு கொடுக்க வேண்டுமென்று வைத்தியர் அபிப்பிராயப்படுகிறார். அதனால்தான் நாங்கள் கூட அவரை நேரில் சென்று இன்னமும் பார்த்து வரவில்லை'' என்று அவள் முடிக்குமுன் உமாவினால் தனது பதட்டத்தை அடக்க முடியவில்லை. ''உயிருக்கு ஆபத்து ஒன்றும் இல்லையே?'' எனக் கவலையுடன் பரபரப்பாக வினவினாள். இனம் விளங்காத ஒரு வகைக் கவலையில் அவளது நெஞ்சு வெடித்துவிடும் போல் துடித்தது. முத்துக்களை நிகர்த்த வியர்வைத் திவலைகள் நெற்றியில் அரும்பி இரு கன்னங்கள் மீதும் ஆறாக வழிந்தோடின.

''காயம் கொஞ்சம் பலம்தான் என்று கேள்வி. வீண் கலவரமும் கூட்டமும் கூடாது என்று டாக்டர் கண்டிப்பாகக் கூறி விட்டதனால் நாங்கள் அங்கே போய்ப் பார்க்க முடியவில்லை. ஓயாது துறு துறுவென்று அலைந்து திரிந்து கொண்டிருந்த மனிதர் படுத்த படுக்கையாகக் கிடக்கிறார் என்பதைக் கேட்கும்போதே மனதிற்கு மெத்த வேதனையாகத்தான் இருக்கிறது'' என்றாள் தலைவி.

உமா அவள் தொடர்ந்து பேசியதை அதற்குப்பின் காது கொடுத்துக் கேட்கவேயில்லை. ''தயவு செய்து அவரது வீட்டு விலாசத்தைத் தெரிவிப்பீர்களா? அவரை நான் பார்க்க விரும்புகிறேன்'' என்று கலவரத்துடன் கேட்டாள்.

''அப்படியே செய்கிறேன். நீங்கள் அவர் வீட்டைத் தேடிக்கொண்டு போகும் சிரமம் கூட வேண்டியதில்லை. கூட ஆசிரமத்து வேலையாள் ஒருவனை அனுப்பிவைக்கிறேன்.

வீடும் அப்படித் தொலைவில் இல்லை. இங்கே அருகில்தான் இருக்கிறது'' என்றாள் தலைவி.

ஆசிரமத்து அருகே சற்றுத் தூரத்தில் காணப்பட்ட ஒரு சிறு வீட்டில்தான் சிவகுமார் வசித்துக் கொண்டிருந்தான். காரினின்று இறங்கிய உமா வேகமாகச் சென்று, பாதி மூடியிருந்த வாயில் கதவை மெல்ல விரலால் தட்டினாள்.

''யாரது?'' என்று உள்ளிருந்து அதட்டியபடி டாக்டர் குருமூர்த்தி கதவைத் திறந்தார். அதுசமயம் அவர் அங்கு இருக்கக் கூடும் என்பதைச் சிறிதும் எதிர்பார்க்காத உமா திடுக்கிட்டுப் போய் விட்டாள். ''நேற்று ஏற்பட்ட விபத்தில் சிவகுமார் படுகாயமடைந்திருக்கிறார் என்று வந்தேன்'' என மென்று விழுங்கினாள் அவள் மனக்கிலேசத்துடன்.

குருமூர்த்தி அவளைக் கடுமையாக ஒரு முறை முறைத்துப் பார்த்தார். ''சிவகுமாரைத் தாங்கள் தற்சமயம் வந்து பார்ப்பதில் ஏதும் பிரயோஜனம் இல்லை. தலையில் ஏற்பட்ட காயத்தினால் அவர் நினைவின்றி மயக்கமாகப் படுத்திருக் கிறார்!'' என்று சுருக்கமாகக் கூறி விட்டுத் திரும்பினார்.

உமாவிற்குப் பேச முடியாது துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. பெருகி வர முயற்சித்த கண்ணீரைச் சிரமத்துடன் அடக்கிக் கொண்டாள். சிவகுமாரை ஒரு முறையேனும் பார்த்துவிட்டு வீடு திரும்பாவிடில் அவள் உள்ளம் அமைதியடையாது போல் ஒரேயடியாகத் தவியாகத் தவித்தது.

''மன்னிக்க வேண்டும் டாக்டர். நான் அவரிடம் ஏதும் பேசித் தொந்தரவு செய்யமாட்டேன். ஒரு நிமிஷம் மட்டும் என்னை உள்ளே வர அனுமதியுங்கள். பார்த்து விட்டு உடனே போய் விடுகிறேன்'' என்று மிகவும் மன்றாடிக் கேட்டாள். மீண்டும் ஒரு முறை குருமூர்த்தியிடம் தான் கெஞ்சிக்



கேட்கும்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டதே என்று அவளுக்கு மெத்த அவமானமாக இருந்தது.

''நீங்கள் படித்த பெண். நோயாளிக்கு ஓய்வு அவசியம் என்றால் என்ன அர்த்தம் என்பதை அறிவீர்கள். நீங்களே இப்படிப் பிடிவாதம் செய்தால் நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது?'' என்று வெறுப்பாகப் பேசிய குருமூர்த்தி, கதவை நன்றாகத் திறந்து விட்டு உள்ளே சென்று விட்டார். அவரது கடுமையான வார்த்தைகள் நெஞ்சைச் சுருக்கெனத் தைத்த போதிலும் உமா அவைகளைப் பொருட்படுத்தவில்லை. சப்தமிடாது மெல்ல நடந்து அவரைப் பின் தொடர்ந்து சென்றாள்.

சிவகுமார் வசித்த வந்த வீடு மிகவும் பழைய பாணியில் கட்டப்பட்ட சிறு ஓட்டுக் கட்டடம். முற்றத்தையொட்டியிருந்த கூடத்தில் கயிற்றுக் கட்டிலின்மீது அவன் படுத்திருந்தான். தலையிலும் கைகள் மீதும் பலத்த கட்டுக்கள் போடப் பட்டிருந்தன. விழுந்த அதிர்ச்சியில் முகம் வீங்கி உருமாறிப் போயிருந்தது. கண்களைத் திறக்காது தானே மெல்ல ஏதோ முணமுணத்த வண்ணம் அவன் படுக்கைமீது புரளத் தொடங்கினான். தலைமாட்டில் நின்று விசிறிக் கொண்டிருந்த வயோதிகப் பெண்மணி ஒருத்தி அதைக் கண்டதும் விசிறியைக் கீழே போட்டு விட்டு, அவன் விழுந்து விடா வண்ணம் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

மருந்துப் புட்டியைத் திறந்து சாவதானமாக ஏதோ மருந்தை ஊசிக்குழாயில் ஏற்றிக் கொண்டிருந்த குருமூர்த்தி அவளைத் திரும்பிப் பார்த்தார். ''பயப்படாதீர்கள் அம்மா. அப்படித்தான் கொஞ்சம் அரட்டல் புரட்டல் இருக்கும். இன்னும் சிறிது நேரத்தில் நன்றாகத் தூங்க ஆரம்பித்து விடுவார்'' என்று கூறிவிட்டு, சிவகுமார் அருகில் வந்து மருந்தை அவனது கையில் ஏற்றினார். நாடியையும் இருதயத்

துடிப்பையும் கருத்துடன் சோதித்துவிட்டு, "சாயங்காலம் வந்து மறுபடி பார்க்கிறேன். அவசியம் ஏற்பட்டால் இடையே ஆளை விட்டு அனுப்புங்கள். உடனே வந்து விடுவேன். நன்றாக அவர் தூங்கட்டும். எழுப்பி ஆகாரம் தர வேண்டியதில்லை. பக்கத்திலிருந்து யாராவது ஒருத்தர் கவனித்துக் கொண்டால் போதும்" என்று கூறிவிட்டு மருந்துப் பெட்டியை மூடிக் கையில் எடுத்துக் கொண்டார். அதைக் கண்டதும் தூண் மறைவிலே நின்று கொண்டிருந்த வேலைக்காரப் பையன் ஓடி வந்து பெட்டியை அவரிடமிருந்து வாங்கிக்கொண்டு முன்னே நடந்தான்.

தாழ்வாரத்திலே நின்றபடி கட்டிலில் கிடந்த சிவகுமாரைக் கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்த உமா "டாக்டர் ஸார், வீட்டுக்குத்தானே போகவேண்டும், எங்கள் காரில் கொண்டு போய் விட்டு விடுகிறேன்" என்று வலிய உபசாரம் செய்தாள்.

டாக்டர் குருமூர்த்தி அவள் பக்கம்கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. "வேண்டாம் அம்மா. உங்களுக்கு ஏன் வீண் சிரமம்? என்னுடைய மாட்டு வண்டி வெளியே காத்திருக்கிறது. அதிலே நான் போய் விடுகிறேன். வந்தனம்!" என்று அவளது உதவியை அசட்டையாக மறுத்துவிட்டு, வெளியே சென்றுவிட்டார்.

எவ்வளவோ ஏழைமையில் கஷ்டப்பட்டிருந்த போதிலும் உமா தன் தாயிடம் கூடக் கடுமையான வார்த்தைகளைக் கேட்டறியாது வளர்ந்தவள், அன்பிலே தளிர்த்திருந்த அவளது உள்ளம் பஞ்சை விட மிகவும் மென்மையாக இருந்ததனால் அவமானகரமான பேச்சு, கடும் சொற்கள் முதலியவற்றைப் பிறரிடமிருந்து பெற அவளால் சகிக்கவே முடிவதில்லை. எனவே, குருமூர்த்தியின் அசட்டை அவளின் மிருதுவான நெஞ்சை மிக்க வேதனை செய்தது. அவர் மீது அதுசமயம்



அவளுக்கு மிக்க கோபமும் வெறுப்பும் ஏற்பட்டது இயற்கையே.

டாக்டர் குருமூர்த்தி பெண்கள்பால் மிக்க சபலமுடையவர் என்று ஷண்பகவல்லி கூறியிருந்தாள். ஆனால் குருமூர்த்தி உமாவிடம் நடந்து கொள்ளும் முறையை ஆராய்ந்து பார்த்தால், அவர் பெண்களை விஷம்போல் வெறுக்கும் ஆசாமிபோல் அல்லவா தோன்றுகிறது? அல்லது வெறுப்பது போல் வேஷம் போடுகிறாரோ என்னவோ? உமாமீது தனிப்பட்டதானதொரு வெறுப்பு ஏற்பட ஏதேனும் ஒரு காரணம் இருக்குமோ என்னவோ? முன்பின் இதற்குமுன் சந்தித்தே இராத உமா அவருக்கு என்ன தீங்கு செய்தாள்? ஏன் அவருக்கு அவள்மீது இந்த வெறுப்பு? அவளிடம் பேசும்போது வார்த்தைகளில் ஏன் அந்தக் கண்டிப்பு? முகத்திலே ஏன் அந்தக் கடுமை? அல்லது இவையெல்லாம் அவருடைய ஒரு கைதேர்ந்த நடிப்பா?

இந்தச் சிந்தனையினின்று திடுக்கிட்டு விழித்துக் கொண்டு உமா நிஜ உலகத்திற்கு வந்தாள். நீண்ட நேரம் தான் அங்கே நின்று கொண்டிருப்பது மரியாதைக்கு உகந்ததல்ல என்று தோன்றியது. நோயாளிக்கு விசிறிக் கொண்டு நின்ற வயோதிகப் பெண்மணி அவளை முன்பே அறிந்தவள் போல் மெல்லியதாகப் புன்னகை செய்தாள். "அம்மா நிக்கிறீங்களே? இப்படி உட்காருங்க" என்றாள் அவள்.

கட்டில் அருகில் கிடந்த ஒரு சிறு முக்காலிமீது உமா உட்கார்ந்து கொண்டு முகத்தைக் கைக் குட்டையால் துடைத்துக் கொண்டாள். உஸ் என்று பெருமூச்சு விட்டு விட்டு, கூரை முகட்டை நிமிர்ந்து பார்த்தாள். அவளது மனத்தில் ஓடிய எண்ணத்தை ஊகித்துக் கொண்டவள் போல் அந்தக் கிழவி தானே பேச ஆரம்பித்தாள்.

''ஐயா இந்த வீட்டை வாங்கி ஆறு வருஷமாகிறது. ரிப்பேர் கிப்பேர் ஒண்ணும் செய்யலை, ஓட்டுக் கூரையா இது! கோடை வெப்பம் முழுவதும் ஓட்டைப் பொத்துக் கொண்டு தலையில் கொட்டுகிறது. ஐயாவுக்குத் தன் சொந்த சௌகரியத்தைக் கவனிக்கப் பொழுது எங்கேயிருக்கிறது? சம்பாதிக்கற பணமெல்லாம் தான தர்மத்துக்குப் போய் விடுகிறது'' என்று மிக்க அலுப்போடு சொன்னாள்.

''அப்படியா'' என்று கேட்ட உமா எழுந்திருந்து, கூடத்து மூலையிலிருந்த ஒரு சிறு புத்தக அலமாரி அருகே சென்றாள். அலமாரிக்குள் அழகாக மிகவும் கவனத்தோடு அடுக்கி வைக்கப் பெற்றிருந்த புத்தகங்களைக் கருத்துடன் ஆராயத் தொடங்கினாள்.

''அது மாதிரி இன்னொரு அலமாரிகூட இங்கே இருந்தது. ஆசிரமத்துக்கு வேணுமின்னு கேட்டாங்கனு போனவாரம் அதைத் தூக்கிக் கொடுத்துவிட்டார் ஐயா. நானும் இங்கே வந்து வருஷம் அஞ்சாகப் போகுது. பார்த்துக் கொண்டேதான் இருக்கிறேன். ஐயாவுக்கு தனக்குன்னு ஒரு பொருள் வெச்சிக்கொள்ள இச்சையே கிடையாது. யார் எதைக் கேட்டாலும் 'இல்லை'ன்னு சொல்லாம தூக்கிக் கொடுத்து விடுகிறார். இவர் தாராள குணம் தெரிஞ்சவங்க நல்லா தலையில மிளகா அரைக்கிறாங்க. இவர் மேலே குத்தம் சொல்ல மாட்டேன். காலா காலத்திலே ஒரு பெண்ணைக் கட்டிப் போட்டிருந்தா வீடு இப்படி பாழாப் போக வழியில்லாம இருக்கும். என்ன இருந்தாலும் நான் யார் இவருக்கு? அப்படிச் செய்யாதீங்க, இப்படிச் செய்யுங்க என்று எடுத்துச் சொல்ல எனக்கு என்ன உரிமையிருக்கு? கட்டின பெண்ஜாதி ஒருத்தி வீட்டிலேயிருந்தால் அந்த விஷயமே வேறு அம்மா. நான் சம்பளத்துக்கு வேலை செய்கிற வேலைக்காரி. ஐயாவுக்கு தலையை வலிச்சா, காலை வலிச்சா அவர் கட்டின



பெண்ஜாதிக்கு இருக்கிற அக்கறை வேலை செய்கிறவங் களுக்கு ஏற்படுமா, சொல்லுங்க. பழகின தோஷத்திலே எனக்குத்தான் மனசு அடிச்சுக்குது. அந்தப் பாழாப் போன சைக்கிளிலே ஏறிக் கீழே விழுந்து கைகாலை முறிச்சுக்கிட்டுப் படுத்திருக்கிறாரேன்னு பெத்தவள் போல் மனசு கிடந்து தவிக்குது. எல்லா வேலைக்காரங்களுக்கும் அப்படியிருக்குமா சொல்லுங்க!'' என்றாள் படபடவென்று மூச்சுவிடாது.

புத்தக அலமாரியைப் பார்வையிட்டுவிட்டுத் திரும்பிய உமா, ''நீங்கள் சொல்வது வாஸ்தவந்தான் அம்மா. ஆனாலும் உங்களைப் போல் நல்ல மனசு படைத்த ஆள் வீட்டில் இருப்பது பெரிய அதிர்ஷ்டந்தான். யாருமில்லாது இப்படித் தனியாக இவர் இருப்பதற்கு நன்றாகக் கவனித்துக் கொள்ள உங்களைப்போல் ஓர் அம்மா இல்லாவிட்டால் மிகவும் கஷ்டமாக இருந்திருக்கும்'' என்றாள்.

இந்தப் புகழ்ச்சியுரையைக் கேட்டதும் கிழவியின் சுருங்கிய வதனம் மகிழ்ச்சியினால் மலர்ந்தது. ''சாகிற மட்டும் இங்கேயே இருந்து, ஐயாவுக்கு வேலை செய்து கொண்டிருக்க எனக்குத் திருப்திதான். ஆனால் அம்மா, முன்னைப்போல் என் உடம்பிலே இப்போது வலுவே இல்லை. இந்த ஐயா காலா காலத்திலே ஒரு பெண்ணைக் கட்டிக் கொள்ளட்டும். இந்த சந்தோஷத்தைக் கண்ணால் பார்த்து விட்டு வேலையிலிருந்து 'பின்சன்' வாங்கிக் கொள்ளலாம்னு காத்திருக்கிறேன். எல்லாத்துக்கும் வேளை வரவேண்டாமா?'' என்று மெல்ல நகைத்த கிழவி, திடீரென்று நினைத்துக் கொண்டவள் போல் உமாவை உற்றுப் பார்த்து, ''ஏம்மா! நான் கேட்கிறேன்னு தப்பா நினைக்காதீங்க. நீங்கதானே இந்த ஊர் பண்ணையார் மகள்? பட்டணத்திலிருந்து வந்திருக்கிற பெண்?'' என்று ஆவலுடன் வினவினாள்.

31505

''ஆமாம் அம்மா!'' என்று பதில் அளித்த உமா, தரைமீது வைத்திருந்த தனது கைப்பையை எடுத்துக்கொண்டு வீட்டிற்குக் கிளம்பலானாள். அதற்குமேல் இங்கே நின்று கொண்டு, அந்தக் கிழவியுடன் பேசித் தொந்தரவு செய்வது வைத்தியர் ஆலோசனையை அவமதிப்பதாகும் என்ற எண்ணம் ஏற்படவே, அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

கட்டிலின்மீது அமைதியில்லாது புரண்டு கொண்டிருந்த சிவகுமார், மருந்து வேகத்தில் நிம்மதியாக மெல்லிய குறட்டையை எழுப்பிய வண்ணம் தூங்கத் தொடங்கினான். தான் அங்கே நீடித்து நின்றால் முடுக்கி விட்ட கிராம போனைப்போல் அந்தக் கிழவி தானே பேசி அவனுடைய நித்திரையைக் கலைத்துவிடக்கூடும் என்று அஞ்சிய உமா, ''மறுபடி ஒழிந்தபோது வந்து பார்க்கிறேன். சாப்பாடு தயாரிக்க உங்களுக்கு இன்று சிரமமாக இருந்தால் சொல்லுங்கள். எங்கள் வீட்டிலிருந்து ஆள்வசம் சாப்பாடு அனுப்பி வைக்கிறேன்'' என்று கருணையுடன் கேட்டாள்.

பண்ணையார் மகள் தன்னிடம் காட்டிய பரிவில் கிழவி புளகாங்கிதம் அடைந்து போனாள். ''வேண்டாம் அம்மா வேண்டாம்! ஓர் ஆழாக்கு அரிசி வடித்துக் கொள்ள எனக்கு எத்தனை நேரம் செல்லும்? எனக்கு இன்னிக்கு சாப்பாடே வேண்டாம்போல இருக்குது. ஐயா மயக்கம் தெளிஞ்சு எழுந்திருந்தா அதுவே போதும் எனக்கு'' என்றாள்.

அதற்குமேல் வற்புறுத்த விரும்பாத உமா அவளிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியே வந்துவிட்டாள். அன்று முழுவதும் அவள் மனத்தில் சிறிதும் நிம்மதியே இருக்க வில்லை. நாள்முழுவதும் ஓயாது அவளது சிந்தனை, அனாதைபோல் தன் நினைவின்றிக் கட்டிலின்மீது மயக்கமாகக் கிடந்த சிவகுமாரனிடமே ஓடிச் சென்ற வண்ணமிருந்தது. பண்ணை விவகாரங்களைக் கவனிப்பதில் அவளுக்கு



உற்சாகமே இருக்கவில்லை. உண்ணவும் மனமின்றி, ஓய்வாக நித்திரை செய்யவும் விருப்பமில்லாது பகல் முழுவதும் தோட்டத்தைச் சுற்றி வந்து கொண்டிருந்தாள்.

உமாவுக்குத் தன்னுடைய மனப்போக்கே மிக்க விசித்திரமாகத் தோன்றியது. சிவகுமாரனிடம் அவள் பழகத் தொடங்கிய காலம் மிகவும் குறைவானது. அந்தச் சில தினங்களில் முன்பின் அறியாத அந்த வாலிபனிடம் அவளுக்கு ஏன் இந்தப் பற்றுதல் ஏற்படவேண்டும்? தன்னைப் போல் தாயும் தந்தையும் அற்ற ஓர் அனாதை அவன் என்ற காரணத்தினால் எழுந்த அனுதாபமா இது! அல்லது... உமாவினால் தனது உள்ளத்திலே குமுறிப் போராடிக் கொண்டிருந்த உணர்ச்சிகளை ஆராய்ந்து தன்னையே புரிந்துகொள்ள முடியவில்லை. ஏற்கெனவே அவளது உள்ளத்தை வாட்டிக் கொண்டிருந்த மனக் குழப்பம் அன்று தினம் இன்னும் பன்மடங்காகப் பெருகி நாலாபுறமும் அலை பாய்ந்து கொண்டிருந்தது என்றால் மிகையில்லை.

விபத்து நடந்த ஒரு வார காலத்தில் சிவகுமாரின் தேகநிலை படிப்படியாகக் குணமடைய ஆரம்பித்துவிட்டது. இரண்டே தினங்களில் மயக்கம் தெளிந்து படுக்கையினின்று எழுந்து விட்டான். உடலில் பட்ட காயங்கள் கொஞ்சம் ஆறும்வரை வெளியே சென்று வர வைத்தியர் அனுமதிக் காததனால் அவன் அவர் சொற்படியே ஓய்வாக வீட்டிலிருந்து வரலானான். இதற்கிடையில் ஒழிந்த போதெல்லாம் காலையிலும் மாலையிலும் அவன் வீட்டிற்கு உமா நேரில் வந்து அவனது தேக நிலையைப் பற்றி விசாரித்துக் கொண்டு வந்தாள்.

அழகர்நத்தம் சிறிய கிராமமாதலினால் பண்ணையார் மகள் போன்ற பெரிய அந்தஸ்திலே வாழ்கின்றவர்களது அன்றாட வாழ்க்கை கிராமத்து மக்களுடைய பொது உடமையாக இருந்தது. இன்று தினம் பண்ணையார் மகள் எப்பொழுது

சாப்பிட்டாள், எப்பொழுது உறங்கச் சென்றாள் என்று உமாவின் வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு சிறு சம்பவத்தையும் கிராமத்து ஜனங்கள் கருத்துடன் கவனித்துக் கொண்டிருந் தார்கள். அதனால் விரைவில் ஊரில் சிவகுமாரனைப் பற்றியும் பண்ணையார் மகளைப் பற்றியும் பற்பல கதைகள் பரவத் தொடங்கிவிட்டன. ''கேட்டையா சங்கதியை? பட்டணத்தி லிருந்து வந்திருக்காளே, பண்ணையார் மகள், அவள் தினசரி சிவகுமார் வீட்டைச் சுற்றித் திரிகிறாளாம். கரும்பு ஆலை முதலாளிக்கும் அவளுக்கும் ஏற்கனவே பட்டணத்தில் சினேகிதமாம். எல்லாம் பணத்திமிர். இல்லாவிட்டால் கல்யாணமாகாத இளம் பெண், மணமாகாத வாலிபனுடைய வீட்டிற்குப் போய்வரத் துணிவாளா?'' என்றெல்லாம் பற்பல வம்புகள் ஊரில் பரவலாயின.

உமாவின் காதுகளில் அரை குறையாகப் பண்ணை ஆட்கள் மூலம் இந்த வதந்திகள் விழத்தான் செய்தன. ஊரார் தன்னைப் பற்றிப் பேசும் அவதூறுகளைக் கேட்டு மிக்க மன வேதனையடைந்தாள். ஆனால், அதே சமயம் சிவகுமாரனிடம் கொண்டிருந்த நட்பைத் திடீரென்று துண்டித்துக் கொள்ள அவளால் முடியவில்லை. மேலே என்ன செய்வதென்று தெரியாது இருதலைக் கொள்ளி எறும்பு போல் தத்தளித்துக் கொண்டிருந்தாள்.

## 10

அன்று பகல் உமாவுக்கு மானேஜர் இல்லத்தில் பெரிய விருந்து ஏற்பாடாகியிருந்தது. பல முறை ஷண்பகவல்லி வருந்தி அழைத்ததை மறுக்க முடியாத உமா ஒப்புக் கொண்டிருந்தாள்.

அழகர்நத்தம் கிராமத்திற்கு வந்து சில மாதங்கள் சென்றிருந்த போதிலும் அவள் அன்றுவரை வரதராஜனது வீட்டைப் பார்த்ததே கிடையாது. கடைத் தெருவின் மறுகோடியில் அமைதியானதொரு பகுதியில் அவரது வீடு கட்டப்பட்டிருந்தது. வரதராஜனுக்கு மானேஜர் என்ற பதவியில் கிடைத்த ஊதியத்திற்கும், அவர் வசித்து வந்த வீட்டிற்கும் சற்றும் பொருத்தம் இல்லாதிருந்ததை எடுத்த எடுப்பிலேயே கண்ட உமா ஆச்சர்யமடைந்து போனாள்.

உமாவை விருந்துக்கு அழைத்துவிட்டு அந்த நேரத்தில் வீட்டில் இல்லாது வெளியே ஊரைச் சுற்றப் போயிருந்த ரங்கதுரைமீது மானேஜருக்கு மிக்க கோபம். எந்த நிமிஷமும் மகன் வீடு திரும்பி விடுவான் என்று எதிர்பார்த்த வண்ணம் வாயிலிலேயே அவர் நின்றுகொண்டிருந்தார். உமாவைக் கண்டதும், ''வாருங்கள் அம்மா! வாருங்கள்'' என்று மிகவும் பணிவோடு வரவேற்றார். தமையனுக்குப் பின்னால் கதவு ஓரத்தில் நின்று கொண்டு அவளது வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஷண்பகவல்லி, முத்துக்களை நிகர்த்த தனது அழகுப் பற்கள் வரிசையாக மின்னப் புன்முறுவல் செய்து, ''வாருங்கள் எங்கள் ஏழைக் குடிசை இன்று பெரும் பாக்கியம் பெற்று விட்டது'' என்று பகட்டாகப் பேசி வரவேற்றாள்.

உமாவை எதிர்கொண்டோடி அழைத்து அவளது இரு கரங்களையும் மிகவும் பரிவுடன் பற்றிக்கொண்டு உள்ளே

அழைத்துச் சென்றாள். விஸ்தாரமாக அமைந்திருந்த முன் பக்கத்து ஹாலின் நடுவே தொங்கிக் கொண்டிருந்த பளபளவென்று மின்னிய கருநிற ஊஞ்சல் பலகை மீது அமர்த்திவிட்டுத் தானும் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள். தன்னைச் சுற்றிலும் ஒரு முறை கவனமாகப் பார்த்த உமாவிற்குப் பிரமிப்புத் தாங்கவே முடியவில்லை. பண்ணையார் வீட்டைப் போன்று மானேஜர் இல்லம் பழுதடைந்த ஓட்டைக் கட்டடமாக இருக்கவில்லை. மிகவும் சமீபத்தில் கட்டப் பட்டதைப் போன்று மிகவும் புதிதாகக் காணப்பட்டது. வழுவழுப்பான சிவப்பு சிமெண்டுத் தரை மீது விலையுயர்ந்த காஷ்மீரக் கம்பளங்கள் கருத்துடன் விரிக்கப்பட்டிருந்தன. புதிய மோஸ்தரில் மேஜைகளும், சோபாக்களும், ஹாலுக்குள் ஆங்காங்கே கவனத்தோடு போடப்பட்டிருந்தன. வெள்ளைச் சுண்ணம் தீட்டிய சுவரை அழகான படங்கள் சில அலங்கரித்துக் கொண்டிருந்தன. வெய்யிலில் வந்த களைப்பை நீக்கும் பொருட்டு, குளிர்ந்த இளநீரை வெள்ளி டம்ளரில் நிரப்பி எடுத்துக் கொண்டு வந்து மரியாதையுடன் அருகில் வைத்துவிட்டு அப்பால் சென்றான் ஒரு வேலைக்காரன்.

''ரொம்பக் களைத்து விட்டிருக்கிறீர்கள். முதலில் இதைச் சாப்பிடுங்கள். நான் காப்பி போன்ற பானங்களைச் சாப்பிடுவதை அறவே விட்டு விட்டேன்'' என்று கூறிவிட்டு மெல்ல சிரித்த ஷண்பகவல்லி, டம்ளரில் ஒன்றை எடுத்து உமாவிடம் நீட்டி உபசரித்தாள்.

கண்ணுக்கெட்டிய திக்கு வரை தங்கள் வீட்டு வண்டியைக் காணாது போகவே, வரதராஜனுக்கு மகன் மீது மிகவும் கோபம் வந்தது. 'காலா காலத்தில் வீடு திரும்பாது வெய்யில் பாழாகிறதென்று ஊர் சுற்றித் திரிகிறானே?' என்று தனக்குள் மகனைக் கடிந்துகொண்டு எதேச்சையாக உள்ளே வருகிறவர்போல் மெல்ல வந்தார்.



''ரங்கதுரை இன்னும் பத்து நிமிஷத்தில் வந்து விடுவான். மிகவும் அவசரமாக வெளியே செல்ல நேர்ந்தது. தாமதமானால் உங்களை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டான். உங்களுக்கு நேரம் ஆகி விட்டதென்றால் நாம் சாப்பிட உட்காருவோம்'' என்றார் மானேஜர்.

''அப்படி ஒன்றுமில்லை. அவர் வரும் வரை காத்திருக்கலாம்'' என்று பதிலளித்த உமா எழுந்து ஹாலின் ஒரு மூலையில் கருங்காலி மேஜையின் மீது அழகிற்காக வைத்திருந்த வெள்ளிப் பூத்தொட்டியொன்றை அருகில் சென்று பார்வையிடலானாள். வாயிலில் ஏதோ வண்டிச் சத்தம் கேட்கவே வரதராஜன், மகன் வருகிறானா என்று பார்க்க வாயில் பக்கம் மீண்டும் சென்று விட்டார்.

ஷண்பகவல்லி கூட எழுந்து உமாவின் அருகில் சென்று நின்று கொண்டாள். பண்ணையார் மகளின் மனத்திலே அது சமயம் தோன்றிய சந்தேகத்தை அவளால் ஊகிக்க முடிந்தது.

''என்னைக் கட்டிக்கொடுத்த இடத்தில் பண வசதிக்குக் குறைவேயிருக்கவில்லை. எனது புக்ககத்தார் என் விஷயத்தில் மிகவும் மேன்மையாகத்தான் நடந்து கொண்டார்கள். என் கணவர் அவரது தகப்பனாருக்கு இரண்டாவது பிள்ளை. என் மாமனார் தமக்குப் பின் தமது சொத்தை தமது மூத்த மகனுக்குப் பாதியும், இளைய மகனின் விதவையான எனக்குப் பாதியுமாகப் பிரித்துக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். அதனால் எனக்கு கிராமத்திலே கொஞ்சம் நிலமும், இரண்டு பெரிய வீடுகளும், கனமான ரொக்கமும், ஏகப்பட்ட நகைகளும் கிடைத்தன. இவைகள் எல்லாம் இனி எதற்கு என்ற விரக்தியால் அண்ணன் மகனுக்கே இவைகள் எனக்குப் பின் சேரவேண்டுமென்று ஏற்பாடு செய்து விட்டேன். இதற்கு முன் அண்ணா கடைத்தெருவில் உள்ள முதல் சந்தில் ஒரு சிறு வீட்டில்

கஷ்டப்பட்டுக்கொண்டு வசித்துக் கொண்டிருந்தார். வயது காலத்தில் அவர்தான் கொஞ்ச காலம் சுகப்படட்டுமே என்று தான் என் பணத்தைக் கொண்டு இந்த வீட்டை இரண்டு வருஷங்களுக்கு முன்புதான் கட்டினேன். நிலம், பணம் என்று உலகத்திலே எனக்கு எந்தப் பொருள் மீதும் பற்றுதலே கிடையாது. அதனால் என்னுடைய சகல சொத்துக்களையும் ரங்கதுரையே எடுத்துக் கொள்ளட்டும் என்று விச்ராந்தியாக இருக்கிறேன்'' என்றாள் ஷண்பகம்.

'இவைகள் அனைத்தும் என்னுடையவை. வரதராஜனுக்குப் பண்ணையில் அளக்கும் ஊதியத்திலிருந்து ஒன்றும் சேமித்து விடவில்லை' என சந்தேகமற மறைமுகமாக அவள் பேசியதன் கருத்து உமாவிற்கு நன்றாகப் புரிந்தது. என்றாலும், அவள் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

''வீட்டைச் சுற்றிக் காட்டுகிறேன் வாருங்கள்'' என்று மேலே தொடர்ந்து அழைத்தாள் ஷண்பகம். ரங்கதுரை வந்து தங்களுடன் விருந்தில் கலந்து கொள்ளும்வரை 'காலத்தைக் கொலை செய்ய' வேண்டி உமா, ஷண்பகத்தைத் தொடர்ந்து வீட்டைச்சுற்றிப் பார்வையிடலானாள்.

வீடும், அதிலிருந்த பல விலையுயர்ந்த பொருள்களும், பின் பக்கத்திலிருந்த பெரிய பூந்தோட்டமும், கனிகள் நிறைந்த மரங்களும் சாதாரணமானவர்களின் அந்தஸ்திற்கு மீறிய வாசஸ்தலமாகக் காணப்பட்டன. ''இத்தனை பெரிய பணக்கார அத்தை தனக்குப்பின் இவ்வளவு சொத்துக்களையும் விட்டுப் போகப் போகிறாள் என்ற எண்ணத்தினாலோ என்னவோ, ரங்கதுரை படித்து விட்டும் ஓர் உத்தியோகத்தைத் தேடிக் கொள்ளாது ஊரை சுற்றித் திரிகிறான் போலும்!'' என்று உமா தனக்குள் எண்ணலானாள். வீட்டைச் சுற்றிப் பார்த்த பின்பு அவளை ஷண்பகம் தனது பிரத்யேகமான அறைக்குள் கூட்டிச் சென்றாள். விஸ்தாரமான அந்த அறைக்குள் வரிசையாகச் சில



இரும்பு பீரோக்கள் வைக்கப்பட்டிருந்தன. இடுப்பில் சொருகியிருந்த வெள்ளிச் சாவிக் கொத்தை எடுத்து ஷண்பகம் ஒவ்வொரு பீரோவையும் திறந்து அதில் அடக்கமாகியிருந்த தனது விலையுயர்ந்த ஆபரணங்களையும், பாத்திரங்களையும் உமாவுக்கு ஒன்றன்பின் ஒன்றாகப் பெருமையுடன் எடுத்துக் காட்டினாள்.

''இவை என் புக்ககத்தில் கல்யாணத்தின்போது சீராக வைத்த வெள்ளிப் பாத்திரங்கள். இவைகள் என் மாமியாரின் ஆபரணங்கள். இவைகள் கல்யாணத்தின் போது என் புக்ககத்து மாமா அளித்த பரிசுகள்'' என்று தன்னுடைய ஆடை ஆபரணங்களைப் பற்றி மிகவும் அக்கறையோடு ஒவ்வொன்றாக விஸ்தரித்துக் கொண்டிருந்தாள்.

மந்திரவாதியின் உதவியினால் மர்மக் குகைக்குள் நுழைந்த அரபு நாட்டு அலாவுதீனைப் போல், உமா அவைகள் அனைத்தையும் கண்டு பிரமித்துப் போய் விட்டாள். பண்ணையார் மகள் என்ற ஸ்தானத்தில் தன் வசம் உள்ள ஆடை ஆபரணங்களைவிட ஷண்பகவல்லியிடம் இரட்டிப்பு மடங்கு இவை குவிந்து கிடந்ததைக் காண அவளுக்கு மிகவும் ஆச்சர்யமாகத்தான் இருந்தது.

நகைப் பெட்டிகளைக் கவனமாக எடுத்துத் திரும்ப ஷண்பகவல்லி பீரோவின் தட்டுக்களில் அடுக்கிக் கொண்டேயிருந்தாள். அவைகள் இடையே கிடந்த ஒரு சிறு தந்தப் பேழை மீது செய்திருந்த சித்திர வேலைப்பாடு உமாவின் கருத்தைக் கவரவே, கையை நீட்டி ஆவலுடன் அதை எடுத்தாள்.

''அதில் ஒன்றுமில்லையே'' என்று பரபரப்பாகக் கூவிய ஷண்பகம், சட்டென அந்தப் பெட்டியைத் தன் கையில் வாங்கிக் கொண்டாள். ஆனால் பெட்டி இடையே கை தவறிக் கீழே தொப்பென்று விழுந்து அதன் மூடி திறந்து கொண்டுவிட்டது.

''மன்னியுங்கள், கீழே போட்டுவிட்டேன்'' என்று கவலையுடன் கூறிய உமா, கீழே குனிந்து பெட்டியைக் கையில் எடுத்தாள். அதனின்று வெளிப்பட்ட ஒரு வளையல் தரைமீது உருண்டு ஓடி சிறிது தூரத்தில் போய் விழுந்தது. பதட்டமாக ஷண்பகவல்லி ஓடிச்சென்று அதைக் கையில் எடுத்துக் கொண்டாள். மிகவும் அற்புதமான வேலைப் பாடமைந்த நீலக்கல் இழைத்த அந்த வளையலை உமா ஆச்சர்யத்துடன் பார்த்தாள். விழுந்த வேகத்தில் கற்களுக்கு எதும் பங்கம் ஏற்பட்டு விடவில்லை என்பதைக் கவனத்துடன் ஆராய்ந்து விட்டு, ''இந்த வளையல் என் மாமியார் எனக்கு அளித்த பரிசு. இதில் ஒன்றை நான் கல்யாணமான மறுநாளே காணாமற் போக்கி விட்டேன். இந்த நீலக்கற்களில் ஏதோ தோஷம் இருப்பதாக அண்ணா பார்த்து விட்டு ஒரு பெட்டியில் போட்டு மூடி வைத்து விட்டார். இதை ஒரு முறை கூட நான் அணிந்ததேயில்லை'' என்றாள் ஷண்பகம்.

உமா அந்த வளையலை ஆவலுடன் தன் கையில் வாங்கி அணிந்து கொண்டு ஒரு முறை கையை அழகு பார்த்துக் கொண்டு நின்றாள். ''உங்களுக்கு உபயோகமில்லை என்றால் இதை எனக்கு விற்று விடுங்கள். நான் வாங்கிக் கொள்கிறேன்'' என்றாள் மிகவும் ஆசையுடன். கண்களைப் பறித்த நீலக்கற்களும், அந்த வளையலின் நேர்த்தியான அமைப்பும், நகைகள் மீது ஆசையே இல்லாத உமாவைக் கூடக் கொஞ்சம் சபலம் கொள்ளச் செய்தது என்றே சொல்ல வேண்டும்.

''மன்னியுங்கள்! என் மாமியார் ஞாபகார்த்தமாக இதை வைத்துக் கொண்டிருக்கிறேன்'' என்று சட்டெனப் பதிலளித்த ஷண்பகம் அதை அவசரமாக வாங்கிப் பெட்டிக்குள் வைத்து மூடினாள். பீரோவிற்குள் அதை அடக்கப்படுத்தி, கதவைச் சாத்தி மூடிப் பூட்டினாள். எங்கே அதிக நேரம் அதை வெளியே வைத்திருந்தால், உமா பிடிவாதமாக விலைக்கு வாங்கிக்



கொண்டு விடுவாளோ என்று பயப்படுகிறவள் போலிருந்தது அவளது செய்கை.

வீட்டைச் சுற்றிப் பார்த்து விட்டு மறுபடி இருவரும் ஹாலுக்குள் வருவதற்கும், ரங்கதுரை வெளியிலிருந்து வண்டியில் வந்து இறங்குவதற்கும் சரியாக இருந்தது. வெகு தொலைவிற்குப் போய் வந்தவன் போல் அவனது ஆடைகள் அலங்கிப் புழுதி படிந்திருந்தன. கிராப்புத் தலை 'புஸ்' என்று புதர் போல் மேலே எழும்பி நின்று கொண்டிருந்தது.

''சீக்கிரம் ஸ்நானம் செய்து விட்டு வந்து விடுகிறேன். வெகு நேரமாக உங்களைக் காக்க வைத்ததற்கு மன்னிக்கவும்'' என்ற கூறி விட்டு, பற்களைக் காட்டினான் அவன்.

கொஞ்ச நேரத்தில் அனைவரும் போஜனம் செய்ய உட்கார்ந்து கொண்டனர். வந்திருக்கும் விருந்தாளிக்கு அருகே ஷண்பகவல்லி அமர்ந்து கொண்டு அதி விசேஷமாக உபசரித்துக் கொண்டிருந்தாள். பண்ணையார் மகளுக்காக ஏற்படுத்திய விருந்தாதலினால், சாப்பாடு மிகவும் பலமாக அமைந்திருந்தது. போஜனத்தின் இடையே அதைவிடப் பேச்சு மிகவும் ஆடம்பரமாக நடந்து கொண்டிருந்தது.

பல விஷயங்களைப் பற்றிச் சுவையாகப் பேசி எல்லோரையும் சிரிக்கச் செய்து கொண்டிருந்த ரங்கதுரை, முதலில் தனது சம்பாஷணையை மெல்ல 'மீனாக்ஷி இல்ல'த்தின் மீது திருப்பினான். ''நாட்டரசன் கோட்டை கணபதியை நகரத்துக் கடையொன்றில் இன்று சந்தித்தேன். 'மீனாக்ஷி இல்ல'த்தைப் பற்றி அவன் சொன்ன கதைகளைக் கேட்டு நான் அப்படியே திடுக்கிட்டுப் போய் விட்டேன். அப்பா! நாம் இது விஷயமாக அசட்டையாக இருப்பது ஊருக்கு மெத்த அவமானம்'' என்றான்.

உமா இதைக் கேட்டதும் திகைப்புற்று இலையினின்று நிமிர்ந்து பார்த்தாள்.

''மன்னிக்கவேண்டும், மிஸ் உமா. உங்களுக்கு இந்த ஊர் மிகவும் புதிது. நீங்கள் கூட 'மீனாக்ஷி இல்ல'த்தின் மீது பற்றுதல் கொண்டு பல உதவிகள் செய்ய முன் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். உங்கள் மீது நான் குறை சொல்ல மாட்டேன். அதை நிர்வாகம் செய்கிறவர்கள் தங்களைப் பற்றிப் பிரமாதமாக எண்ணும்படி அவ்வளவு குழைவாகப் பேசியிருப்பார்கள். அப்பாவுக்குச் சண்டை சச்சரவுகள் என்றாலே பிடிக்காது. நமக்கேன் வம்பு என்று எதற்கும் ஒதுங்கிப் போய் விடுவார். ஆனால், என் விஷயம் வேறு. அக்கிரமம் அநியாயங்களைக் கண்டு சும்மாப் பாத்துக் கொண்டிருக்க முடியாது. 'மீனாக்ஷி இல்லம்' என்பது பார்வைக்கு அனாதை ஆசிரமம் என்ற வெளிப் போர்வையைப் போர்த்திக் கொண்டிருக்கிறதேயொழிய, உண்மையில் அதற்குள் நடக்கும் ஊழல்களுக்குக் கங்கு கரையே கிடையாது'' என்றான், மிகவும் காரமான பெருங்குரலில்.

உமாவின் முகம் வாடிச் சிறுத்துவிட்டதைக் கண்ணுற்ற ஷண்பகவல்லி, ''ரங்கதுரை! நீ வாலிபத் துடிப்பில் பதட்டமாகப் பேசுகிறாய். இந்த ஊரார் பொய்க் கதைகள் கட்டி விடுவதில் பிரசித்தி பெற்றவர்கள் என்பதுதான் நமக்குத் தெரியுமே! அனாதைக் குழந்தைகளுக்காகச் சிரமப்பட்டுச் சிலர் முன் வந்து ஓர் ஆசிரமத்தை நடத்தினால் அதைக் கண்டு ஜனங்களுக்கு மனம் பொறுக்கவில்லை போலும்! நல்ல காரியம் செய்ய ஆரம்பித்தாலும் பல இடைஞ்சல்கள் தானே வந்து சேரும்? இது நல்லதற்கே காலமில்லையப்பா'' என்று அனுதாபத்துடன் கூறிப் பெருமூச்செறிந்தாள்.

''இல்லை, அத்தை. உங்களுக்கு உண்மை ஒன்றுமே தெரியாது. அதை நடத்தும் நிர்வாகிகள் இருவரும் இந்த ஊரில் வேறு விஷயங்களில் மிகவும் பிரசித்தி பெற்றவர்கள். 'மீனாக்ஷி இல்ல'த்தின் முக்கிய நிர்வாகிகள் யார் தெரியுமா?'' என்று சவால் விடுத்தான் ரங்கதுரை.



''சாத்தண்ண செட்டியாரும், வீரராகவ ஐயங்காரும் நடத்துகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். 'மீனாக்ஷி இல்லம்' என்று ஓர் ஆசிரமம் இருக்கிறதென்று கேள்வியே ஒழிய நான் அதைக் கண்ணால் ஒரு முறை கூடக் கண்டதில்லை'' என்று அலுப்பாகச் சொன்னாள் ஷண்பகம்.

இதுவரை மௌனமாயிருந்த வரதராஜன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''சாத்தண்ண செட்டியாரும், ஐயங்காரும் ஆரம்பத்தில் நன்கொடை கொடுத்தார்கள். ஆனால், அதை நடத்தும் ஆசாமிகள் வேறு'' என்றார்.

''ஏன் அப்பா, அத்தையிடம் பெயரை மூடி வைக்க வேண்டும்? நீங்கள் சொல்லப் பிரியப்படாவிடில் நான் சொல்கிறேன். டாக்டர் குருமூர்த்தியும், கரும்பு ஆலை முதலாளி சிவகுமாரனும் அதைத் தற்சமயம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். டாக்டர் குருமூர்த்தியின் கீர்த்தியைப் பற்றி நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. நல்ல குடும்பப் பெண்கள் இருக்கும் திக்குக்கூட நடக்க லாயக்கற்ற மனிதன். அவருடைய அந்தரங்க நண்பனான சிவகுமாரனைப்பற்றி மட்டும் சொல்வதற்கு என்ன இருக்கிறது. தாய் தந்தை யார் என்று தெரியாது பிறந்து வளர்ந்த செல்வப்பிள்ளை அவன். கையில் காலணாகூடக் கிடையாது. சில வருஷங்களுக்கு முன் இந்த ஊரில் வந்து முகாம் போட்டான். பொய்யும் புரட்டும் செய்து டாக்டர் குருமூர்த்தியுடன் சேர்ந்து கொண்டு பல அட்டூழியமான வழிகளில் பொருள் சம்பாதித்து, கையில் நாலு ரூபாய் சேர்ந்ததும் ஒரு கரும்பு ஆலையை விலைக்கு வாங்கிவிட்டான். நேற்று வரை அன்றாட சோற்றுக்குத் தவித்துக் கொண்டிருந்தவன் இன்று பெரிய முதலாளி என்று ஊரை ஏமாற்றிக் கொண்டு திரிகிறான். ஆனால் எத்தனை நாட்கள் இவர்கள் இருவரும் ஊராரை ஏமாற்றிக் கொண்டிருக்க முடியும்? ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் இருவருடைய சாயமும் வெளுத்துவிடப் போகிறது! ஆனால், அத்தை ஒரு வேடிக்கை.

இந்த ஊரில் சில வாலிபர்கள் ஒன்றுகூடி சிவகுமார் செய்யும் அக்கிரமத்திற்கு நன்றாகச் சக்கையாக அவனை உதைத்துக் காலை முறித்துப் போட வேண்டும் என்று தீர்மானிப்பதற்குள் அடுத்த கிராமத்து வாலிபன் ஒருவன் எல்லோரையும் முந்திக் கொண்டு விட்டான்'' என்று மூச்சுவிடாது பேசி முடித்தான் மானேஜரின் செல்வ மகன்.

குளிர்ந்த நீரைக் கடகடவென்று பருகிக் கொண்டிருந்த வரதராஜன் திடுக்கிட்டு, மகன் பக்கம் திரும்பிப் பார்த்தார். நீரை விழுங்கிய வேகத்தில் அவருக்குப் புரை ஏறிக்கொண்டு விடவே 'லொக்''லொக்' கென்று இருமுறை இருமித் தொண்டையை சரிப்படுத்திக் கொண்டார். ''என்னப்பா தம்பி புதிர் போடுகிறாய்?'' என்று புன்னகையுடன் வினவிவிட்டு, கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

''புதிர் ஒன்றுமில்லை, அப்பா! எல்லாம் உண்மை. ஒரு வாரத்திற்கு முன் அடுத்த ஊரில் ஓர் இளம் பெண்ணிடம் சிவகுமார் தாறுமாறாக நடந்து கொண்டிருக்கிறான். அதைக் கண்டு பொறுக்காத அவளுடைய தமையன் அவனை நன்றாக நையப் புடைத்துவிட்டான். தலையிலும் உடம்பிலும் நல்ல சக்கையான அடி. ஆள் எழுந்திருக்கவும் மாட்டாது படுக்கையில் கிடக்கிறானாம்'' என்று கோபமாகக் கூறிவிட்டு ரங்கதுரை சிரித்தான்.

உமாவின் நெஞ்சு ஆத்திரத்தில் படபடவென்று துடிக்கத் தொடங்கியது. ரங்கதுரைக்கு சிவகுமார் மீது ஏதோ காரணம் பற்றிக் குரோதம் ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் இப்படிப் பச்சையாக ஒரு பொய்யைச் சொல்கிறான் என எண்ணி அவள் வெகுண்டாள். ''மிஸ்டர் ரங்கதுரை, சிவகுமார் சைக்கிளிலிருந்து கீழே விழுந்து காயம் பட்டதாகவல்லவோ சொல்லிக் கொள்கிறார்கள்?'' என்று துடிப்பாகச் சொல்லிவிட்டு இலையைவிட்டு எழுந்திருந்தாள்.



போஜனத்தை முடித்துக் கொண்டு கூட எழுந்திருந்த ரங்கதுரை, இதைக் கேட்டதும் இடிஇடியென்று நகைத்தான். ''பின் அவன் உண்மையை ஒப்புக்கொள்ள முடியுமா என்ன? ஆசிரமத்துக் குழாம் ஒன்று கூடி 'மோட்டார் சைக்கிளில் விபத்து ஏற்பட்டு விட்டது' என்று கதை கட்டியிருக்கிறார்கள். ஆனால் உண்மை வேறு. நாங்கள் அறிவோம். மிஸ் உமா! உங்களை ஒன்று கேட்டுக் கொள்கிறேன். 'மீனாக்ஷி இல்ல'த்துடன் எவ்விதமான தொடர்பும் நமது பண்ணைக்கு வேண்டியதே இல்லை. தயவு செய்து விட்டு விடுங்கள். மனம் இரங்கி, உங்கள் தந்தை பாடுபட்டுத் திரட்டி வைத்துள்ள பணத்தை இந்தப் பாதகர்கள் நடத்தும் ஒரு பாவ இல்லத்திற்குக் கொடுத்து உதவாதீர்கள்'' என்றான்.

கையைக் கழுவிக் கொண்டு மேல் துண்டில் துடைத்தபடி நின்ற வரதராஜன், மகன் முகத்தைக் குறிப்பாகப் பார்த்துவிட்டு, ''சிவகுமார் எத்தனையோ முறை பண்ணையாரை அண்டி ஆசிரமத்திற்கு நன்கொடை அளிக்கும்படி மிகவும் கேட்டுக் கொண்டான். ஆனால், அவர் 'மீனாக்ஷி இல்ல'த்திற்கு ஒரு செப்புத் தம்பிடி கூடக் கொடுக்க மறுத்துவிட்டார்'' என்றார்.

''ஸ்ரீமான் ஏகாம்பரம் ஒரு முறை ஓர் ஆளைப் பார்த்தாலே போதும். அவன் எப்படிப்பட்ட நடத்தையுடையவன் என்பதை அக்குவேறு ஆணி வேறாக அறிந்துகொண்டுவிடும் தனியாற்றல் படைத்தவர். 'மீனாக்ஷி இல்லம்' என்பது ஸ்திரீலோலர்கள் ஒன்றுகூடி மகிழ அமைக்கப்பட்ட ஒரு கேளிக்கிரம் என்பதை அவர் நன்கு அறிந்து கொண்டிருந்தார். அதனால் அவர் சிவகுமாரன் மாளிகைக்குள் அடிக்கடி வரக்கூட சம்மதிக்க வில்லை'' என்றான் ரங்கதுரை.

நாவுக்கும் வயிற்றுக்கும் திருப்தி தரும் வண்ணம் சுவைமிக்கதாகத் தயாரித்திருந்த விருந்து சாப்பாடு உமாவுக்கு இப்பொழுது விஷம்போல் வெறுப்பாக இருந்தது.

சிவகுமாரனைப் பற்றிக் கேட்ட தூஷணைகள் அவள் செவிக்கு நாராசமாக இருக்கவே, இந்த விருந்திற்கு ஏன் வந்தோம் எனத் தன்னை நொந்து கொண்டவளாகக் கையைக் கழுவிக்கொண்டு ஊஞ்சலில் வந்தமர்ந்தாள்.

வெற்றிலைத் தட்டை அருகில் வைத்துவிட்டுப் பக்கத்தில் வந்து அமர்ந்த ஷண்பகம், மிக்கக் கவலையுடன் உமாவின் கரத்தைப் பற்றி அன்போடு மெல்ல வருடினாள். "அம்மா உமா! வயதில் நீங்கள் என் குழந்தைக்குச் சமமானவர். அதனால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். குருமூர்த்தி, சிவகுமார் இரண்டு பேர்களிடமும் நீங்கள் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும். ரங்கதுரை பேசியதிலிருந்து அவர்கள் ஆசிரமம் சம்பந்தமாக உங்களை ஏதோ உதவி செய்யக் கோரி அணுகி உள்ளார்கள் என்று தெரிகிறது. இந்த ஊரார் மிகவும் பொல்லாதவர்கள். இரண்டொரு தடவை அவர்கள் இருவரும் உங்கள் மாளிகைக்கு வருவதைப் பார்த்தால்கூடப் போதும், பொய்க் கதைகள் கட்டி வாழ்க்கையை நாசமாக்கி விடுவார்கள்" என்றாள். இதைப் பேசி முடிக்குமுன் அவள் அழகிய விழிகள் முத்துக்களைப் போல நீர்த்திவலைகளைக் கன்னங்கள்மீது உருளவிட்டன.

அன்று விருந்திற்குப் பிறகு வீடு திரும்பிய உமாவின் உள்ளத்திலே பண்ணை மானேஜர் வரதராஜனது குடும்பத்தாரைப் பற்றி நல்ல அபிப்பிராயம் சிறிதும் ஏற்படவே இல்லை. முதல் சந்திப்பிலே மனத்தைக் கவர்ந்த ஷண்பகவல்லி, இந்த இரண்டாவது சந்திப்பிலே உமாவின் உள்ளத்திலே வெறுப்பை ஊட்டிவிட்டிருந்தாள். அவள் பேச்சு கண்ணீர் எல்லாம் வெறும் பசப்பு, பசுத்தோல் போர்த்திய பெரிய பெண் புலி அவள் என்று மனதில் தோன்றிவிட்டது. சிவகுமார் பற்றிக் கொஞ்சமும் அஞ்சாது தூஷணைகள் பேசிய ரங்கதுரை மீது கடுகளவும் நல்ல அபிப்பிராயமே ஏற்பட இடமிருக்கவில்லை. அதிகம் பேசாவிடினும் மானேஜர்



வரதராஜனும் எல்லாவற்றையும் நெஞ்சில் புதைத்து வைத்துக் கொண்டு, சமயத்திற்குக் கழுத்தை அறுக்கக் கூடிய பெரிய குள்ளநரி என்று மனதில் பட்டது. இதையெல்லாம் விட இந்த வஞ்சகர்கள் நிரம்பிய குடும்பத்திற்கும் சிவகுமாரனுக்குமிடையே ஏதோ ஒரு தொடர்பு இருக்கிறது என்பதை உமா உணர்ந்து கொண்டாள்.

இந்தத் தொடர்பைத் தானே சிரமப்பட்டுக் கண்டு பிடித்து விடவேண்டும் என்ற ஆத்திரம் அவளுக்கு ஏற்பட்டது இயற்கையே.

## 11

**சி**வகுமார் சில தினங்களில் பூரண குணம் அடைந்து எழுந்து நடமாடத் தொடங்கி விட்டான் எனினும், தினசரி ஒரு முறை அவனைக் கண்டு க்ஷேமம் விசாரிப்பதை உமா நிறுத்தவேயில்லை. மானேஜர் வீட்டு விருந்தின்போது அவனைப்பற்றிக் கேட்ட தூஷணைகள் அவள் மனத்தைச் சற்று உறுத்திக் கொண்டிருந்த போதிலும், தான் சிவகுமார்மீது கொண்டிருந்த நல்ல அபிப்பிராயத்தை அதன் பொருட்டு மாற்றிக்கொள்ள அவள் கொஞ்சமும் விரும்பவேயில்லை.

அன்று காலை வழக்கம் போல் பண்ணை விவகாரங்களை முடித்துக் கொண்டு சிவகுமாரனைக் காண அவள் சென்றிருந்தாள். நோயாளியென்று படுக்கை மீது ஓய்வாகச் சாய்ந்து கிடக்காது, அன்று காலை வெகு சீக்கிரமே ஸ்நானம் செய்து விட்டுச் சுத்தமான ஆடை அணிந்துகொண்டு சிவகுமார் கூடத்திலிருந்த மேஜையருகே அமர்ந்து கொண்டிருந்தான். கதவைத் திறந்துகொண்டு உமா உள்ளே வந்ததைக்கூட அவன் கவனிக்கவேயில்லை. கருத்துடன் ஏதோ ஒரு வேலையில் மிகவும் தீவிரமாக அவன் ஈடுபட்டிருந்ததைக் காண உமாவுக்கு

மெத்த ஆச்சரியமாக இருந்தது. சப்தமிடாது மெல்ல நடந்து வந்து பின்பக்கத்தில் நின்று கொண்டு மேஜை மீது கிடந்த பல பொருள்கள் யாதென ஆவலுடன் எட்டிப் பார்த்தாள். அவளது அழகிய கருவிழிகள் இரண்டும் வியப்பில் விரிந்தன.

''மிஸ்டர் சிவகுமார்! நீங்கள் ஒரு சைத்திரிகர் என்பது எனக்கு இவ்வளவு நாட்களாகத் தெரியவே தெரியாதே!'' என்று ஆச்சர்யத்துடனும் உற்சாகத்துடனும் கூவி, தன் இரு கரங்களையும் சேர்த்து பலமாகத் தட்டினாள்.

மிகவும் கவனமாக வர்ணத்தைத் திரைமீது தீட்டிக் கொண்டிருந்த சிவகுமார் திடுக்கிட்டுத் திரும்பினான். பண்ணையாரின் செல்வப் புதல்வியின் முகத்திலே துள்ளி நின்ற மகிழ்ச்சிக் குறி அவன் உள்ளத்தை நிறைக்கச் செய்தது.

''அப்படி பிரமாதமானதொரு சைத்திரிகன் அல்ல நான். பொழுது போக்கிற்காகச் சித்திரம் தீட்டக் கற்றுக் கொண்டேன். அது அடியோடு மறந்து விடாதிருக்க ஏதோ ஒரு சமயம் ஏதாவது எழுதிப் பார்ப்பது வழக்கம். அவ்வளவு தான்'' என்று கூறிவிட்டுப் புன்முறுவல் செய்தான்.

இது சமயம் காலை ஆகாரத்தைத் தட்டில் வைத்து எடுத்து வந்த வேலைக்காரக் கிழவி பொன்னம்மாள், தன் பொக்கை வாயைத் திறந்து 'களுக்'கென்று சிரித்தாள். சுபாவத்தில் வாயாடியான அவளால் உமாவைக் கண்டதும் பேசாது இருக்கமுடியவில்லை. ''ஐயாவுக்குப் படம் எழுதறதுன்னா உயிர், அம்மா. ஒழிஞ்சபோது வீட்டுக்கு வந்தா இந்த வேலையையும் இழுத்துப் போட்டுக் கொண்டு விடுவார். அடுத்த அறையிலே உள்ள பெரிய மரப்பெட்டியிலே ஐயா எழுதின அத்தனை படங்களும் குவிஞ்சு கிடக்கு'' என்றாள்.

''அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். அதை முழுவதையும் நம்பிவிட வேண்டாம்'' என்று மெல்லச் சிரித்த



சிவகுமார், ''உட்காருங்கள், நிற்கிறீர்களே!'' என்று உமாவை உபசரித்து விட்டு சுவர் ஓரமாகக் கிடந்த ஒரு முக்காலியை இழுத்து மேஜை அருகில் போட்டான்.

''அப்படியா?'' என்று பதில் அளித்த உமா அதன் மீது அமர்ந்து கொண்டாள். மேஜை மீது அரை குறையாகத் தீட்டப்பட்டிருந்த சித்திரத் திரையைக் கையில் தூக்கி எடுத்து அழகு பார்க்கத் தொடங்கினாள்.

''இந்த நிலையில் உங்களுக்கு அது என்னவென்றே புரியாது. இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறேன்'' என்று விளக்கம் தெரிவிக்கும் தோரணையில் சிவகுமார் சொன்னான்.

உமா பதிலுக்குத் தன் அழகிய முகத்தை லேசாக மெல்லக் குலுக்கினாள். ''எனக்குச் சித்திரக் கலையைப் பற்றியே எதும் தெரியாது. அத்தோடு மட்டுமல்லாது சித்திரங்களின் நயத்தையும், உயர்வையும் அனுபவிக்கும் ரஸனையும் எனக்குச் சிறிதும் கிடையாது. ஒரு சமயம் என் சிநேகிதி ஒருத்தியுடன் நான் ஒரு சித்திரக் கண்காட்சிக்குச் சென்றிருந்தேன். மேனாட்டுச் சைத்திரிகர் ஒருவர் வரைந்திருந்த பிரசித்தி பெற்ற ஓவியம் என்று ஒரு குறிப்பிட்ட படத்தைப் பார்த்து அவள், 'ஆஹா! ஊஹு' என்றெல்லாம் பிரமாதமாகப் புகழ்ந்தாள். அவளது ரஸனைக் கண்களை இரவல் வாங்கிக்கொண்டு அந்தச் சித்திரத்தின் அற்புதத்தை அனுபவிக்க நான் மிகவும் முயற்சித்தேன். கொஞ்சமும் முடியவில்லை. என் கண்களுக்கு அந்தச் சித்திரம் மிகவும் சாதாரணமாகத் தோன்றியது. உண்மையைச் சொல்லப் போனால் கரடு முரடான ஒரு படுதாமீது வர்ணக் குழம்பைக் கண்மூடித்தனமாக வாரி வீசியிருந்தது போல்தான் தோன்றியது. என் ரஸனை உணர்ச்சி அவ்வளவு மகா மட்டமாக இருக்கிறது என்று நீங்கள் நினைத்துக் கொண்டாலும் சரி. எனக்கென்னவோ சங்கீதத்தின் மேல் உள்ள அத்தனை அபிமானம் சித்திரக் கலைமீது கிடையாது'' என்றாள் உற்சாகமாக.

சிவகுமார் இதைக் கேட்டுவிட்டு மனம் விட்டு உரக்கச் சிரித்தான். வெளிப் பகட்டிற்காகத் தனக்குப் பலவிதமான கலைகள் பற்றியும் ரஸனை உணர்ச்சியுண்டு என்று நடிக்காது, கள்ளங் கபடமின்றிப் பச்சிளங் குழந்தைபோல், மனத்தைத் திறந்து உண்மையை உமா சொன்னதைக் கேட்க அவனுக்கு மிகவும் பிடித்தது.

''உங்கள் மீது அதற்காக நான் குறை கூற மாட்டேன், எல்லாக் கலைகள் மீதும் எல்லோருக்கும் அபிமானம் ஏற்படுவது என்பது சாத்யமானதல்ல. உதாரணமாக சித்திரக் கலை மீதுள்ள பற்றுதல் எனக்குச் சங்கீதத்தின் மீது கிடையாது. அதனால் என்னைப் பண்பற்றவன், ரஸனை இல்லா மூடன் என்று பிறர் பழித்து விட முடியுமா? நிற்க, இது என்னவென்று சொல்லி விடுகிறேன். இந்தச் சிறு புகைப் படத்தில் உள்ள உருவத்தை, பல அளவில் பெரியதாக இந்தப் படுதாவில் தீட்ட முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்'' என்று கூறிவிட்டு, புத்தகங்களின் இடையே சொருகி வைக்கப்பட்டிருந்த ஒரு சிறு புகைப்படத்தை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

ஆவலுடன் கையில் அதை வாங்கிய உமா திடுக்கிட்டுப் போனாள். ''டாக்டர் குருமூர்த்தியின் படம்போல் அல்லவா காண்கிறது?'' என்று கேட்டாள் வியப்புடன்.

''ஆமாம்? டாக்டர் குருமூர்த்தி அவர்களது புகைப்படம் தான் இது. பல வருஷங்களுக்கு முன் எடுத்தது. இதைப் பல அளவில் பெரியதாக்கி ஆசிரமத்து பொது ஹாலில் மாட்டி வைக்க உத்தேசித்திருக்கிறேன். வளர்ந்து வாழ்க்கைப் பாதையில் தனியே விடப்படப் போகிற ஆசிரமத்துக் குழந்தைகளுக்கு, இவர் வழிகாட்டி போன்று என்றும் நினைவிலிருந்து உதவி செய்வார் என்பது என் நம்பிக்கை. குருமூர்த்தி அவர்களுக்கு இது தெரிந்தால் சம்மதிக்கவே மாட்டார். இந்த ஒரு விஷயத்தில் நான் அவரது சொற்களுக்கு எதிராகச் செய்வதென்று தீர்மானித் திருக்கிறேன்'' என்றான்.



உமா சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். மெல்லிய குரலில் ''உங்களுக்கு டாக்டர் குருமூர்த்தி மீது அதிக பற்றுதல் உண்டு என்பது இதிலிருந்து புரிகிறது'' என்றாள்.

''பற்றுதலா! பக்தி என்று சொன்னால்கூடப் போதாது. அவரை நான் என் குல தெய்வமாகப் போற்றித் துதித்து வருகிறேன். கடந்த சில வருஷங்களாக அவருடன் கொண்ட நட்பு என்னைப் பலவிதத்திலும் மேன்மைப்படுத்தியுள்ளது என்பது உண்மை. அவரது ஆலோசனைகளும், புத்திமதிகளும் எனது குறுகிய மனத்தை விசாலமடையச் செய்தன. என் குறைகள் பலவற்றை நீக்கி என் மனத்தைப் பண்படையச் செய்தன என்றால் மிகையில்லை. அவரைப் போன்ற கண்ணியமான நல்ல மனிதரை உலகில் நாம் அடிக்கடி சந்திப்பது மிகவும் அபூர்வம்'' என்றான். அவன் கூறியதில் கள்ளமோ, பொய்யோ ஏதும் இல்லை என்பதை உணர்ச்சி வசத்தில் தடுமாறிய அவனது குரலும், தீக்ஷண்யமான ஒளியுடன் பிரகாசித்த கண்களும், மாசற்ற முகமும் தெள்ளென விளக்கின.

தொடர்ந்து சட்டென்று குருமூர்த்தியைப் பற்றி மேலே பல கேள்விகள் கேட்கவேண்டும் என்று உமாவிற்கு ஆவலாக இருந்த போதிலும், அதைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''மிஸ்டர் சிவகுமார்! உங்களுடைய ஏனைய சித்திரங்களை நான் பார்வையிடலாமோ?'' என்று சம்பாஷணையை சட்டென வேறு திக்கில் மாற்றினாள்.

''ஓ! பார்வையிடலாமே! தாங்கள் அவைகளைப் பார்த்து, விமர்சனம் செய்வதுபற்றி எனக்குச் சிறிதும் ஆக்ஷேபணை இல்லை'' என்று பதில் அளித்த சிவகுமார் சட்டென எழுந்து அடுத்த அறைக்குள் சென்றான். பல நாட்களாகப் பூட்டிக் கிடந்த பெரிய மரப் பெட்டியொன்றைத் திறந்து, காகிதச் சுருளில் சுற்றி வைக்கப்பட்டிருந்த சில படங்களை வெளியே எடுத்து வந்தான். அவைமீது படிந்து கிடந்த தூசியைத் தட்டி

சுத்தப்படுத்திவிட்டு, அவை ஒவ்வொன்றையும் மிகவும் ஜாக்கிரதையாகப் பிரித்து மேஜை மீது போட்டான்.

உமா அவைகளை மிக்க கருத்துடன் ஆராய்ந்து கவனித்தாள். அவைகளில் பெரும்பாலானவை வெளிப்புறக் காட்சிகளைச் சித்தரிக்கும் படங்களாக இருந்தன. ஒன்றிரண்டு உருவப் படங்களும் அதில் இருந்தன. அந்தச் சித்திரங்கள் உமாவின் கருத்தை அப்படியொன்றும் பிரமாதமாகக் கவர்ந்துகொண்டு விடவில்லை. எனினும், அவள் மரியாதைக் காக, "மெத்தவந்தனம், இவைகளை நீங்கள் சிரமப்பட்டு எழுதியிருக்கவேண்டும்" என்றாள். சிறிதுநேரம் அவர்களது சம்பாஷணை சித்திரக் கலைமீதும், பிரபல சைத்திரிகர்கள் மீதும் சென்றது. அதற்குப் பின்னர் பல பொது விஷயங்களைப் பற்றிக் கொஞ்ச நேரம் பேசிவிட்டு, உமா விடை பெற்றுக்கொண்டு திரும்பிவிட்டாள்.

அடுத்தடுத்த தினங்களில் அவள் அங்கு வந்தபொழுது ஒவ்வொரு முறையும் குருமூர்த்தியைப்பற்றிப் பேசவேண்டு மென்ற ஆவல் அவளுக்கு அதிகமாகத்தான் இருந்தது. ஆனால், எப்படி அதைத் துவக்குவது என்றே புரியாது நாளைக்கு, நாளைக்கு என்று தனது சந்தேகத்தைத் தெளிவு செய்து கொள்ளாமல் தள்ளிப் போட்டுக் கொண்டேயிருந்தாள்.

இவ்வாறு பல நாட்கள் இடையே ஓடிச் சென்று விட்டன. நன்கு குணமடைந்துவிட்ட சிவகுமார் முன்போல் தனது அன்றாட அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கி விட்டான் என்றாலும், அவனை தினசரி சந்தித்து க்ஷேமம் விசாரிப்பதை உமா இன்னமும் நிறுத்தவில்லை.

ஒரு நாள் மாலை தங்கள் நிலங்களைச் சுற்றிப் பார்த்துவர அவள் தனியாகத் தங்கள் வீட்டுக் காரில் கிளம்பியிருந்தாள். அன்று காலை 'மீனாக்ஷி இல்ல'த்திற்கு அவள் சென்றபொழுது சிவகுமார் அங்கு வந்து வேண்டிய அலுவல்களைச் சீக்கிரம்



முடித்துக்கொண்டு தனது கரும்பு ஆலைக்குச் சென்று விட்டிருந்தான். அன்று பகல் பொழுது உணவருந்த அவன் வீட்டிற்கு வரவேயில்லை. அதனால் பகல் வேளை அவனை அவன் வீட்டிலும் சந்திக்கவே முடியவில்லை. உமாவுக்கு அவனை அன்று முழுவதும் பார்க்காதிருந்தது மெத்த ஏமாற்றமாக இருந்தது. எனவே, அந்தி மங்கும் வேளை அவர்கள் வீட்டுக் கார், சிவகுமார் வசித்த வீட்டுப் பாதை வழியே செல்லத் தொடங்கியதும் அவளால் ஆவலைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. சூரியன் அஸ்தமித்து இருள் பரவத் தொடங்கிவிட்டது என்பதை உணர்ந்த போதிலும் அவள் பிடிவாதமாகத் தங்கள் காரைச் சிவகுமார் வீட்டின் முன் நிறுத்தும்படி டிரைவருக்கு உத்தரவிட்டாள். சப்தமிடாது வாயிற்கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள். கூடத்தில் சிறு அரிக்கேன் விளக்கை மேஜைமீது பொருத்தி வைத்துவிட்டு, புத்தகமொன்றைப் பிரித்து வைத்துக் கொண்டு படிக்க உட்கார்ந்தான் சிவகுமார், மெல்லியதாகக் காற்றின் ஊடே மிதந்து வந்த கதம்பத்தின் வாசனையை உணர்ந்து திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். மங்கிய விளக்கொளியில் அழகு பிம்பம் போல எதிரே வந்து நின்ற பண்ணையாரின் புத்திரியைக் கண்டதும் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது.

"வாருங்கள்! உட்காருங்கள்!" என்று உபசரித்து விட்டு மரியாதையுடன் எழுந்து நின்றான். அவன் குரலில் உற்சாக மில்லாததையும் முகம் சோர்ந்து காணப்படுவதையும் கவனித்த உமா துணுக்குற்று, "மிஸ்டர் சிவகுமார்! உங்களுக்கு உடம்பிற்கு என்ன? எப்படியோ இருக்கிறீர்களே!" என்று கவலையுடன் கேட்டாள்.

மேஜையை ஒட்டிக்கிடந்த நாற்காலியைச் சுவர் ஓரமாகத் தள்ளி இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்த சிவகுமார், சிறிது நேரம் தயக்கத்துடன் தரையைப்பார்த்தபடி வாளா இருந்தான். பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "மிஸ்

உமா! நீங்கள் என்பால் காட்டும் சிரத்தைக்கும், கருத்திற்கும் மெத்த வந்தனம். உங்களிடம் ஒரு கசப்பான விஷயத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சொல்லி உங்கள் மனத்தை வேதனைப்படுத்துவது அழகா என்று யோசித்தால், சொல்லாமல் இருப்பது பெரும் குற்றமாகத் தெரிகிறது'' என்று ஆரம்பித்தான்.

என்னத்திற்கு இந்தப் பூர்வ பீடிகை என்று உமாவுக்கு விளங்கவில்லை. கலவரமும் திகிலும் ஒருங்கே எய்திவிட்ட அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ளத் தொடங்கியது. திகில் மிகுந்தவளாக அவன் முகத்தை ஆவலுடன் பார்த்தாள்.

''நோயாளியாகப் படுத்திருந்ததனால் சில நாட்களாக எனக்கு வெளி விவகாரம் ஒன்றுமே தெரியாதிருந்தது. உடல் குணமாகி வெளியே சென்று வரத் தொடங்கியதும், நாலைந்து தினங்களாக என் காதில் படும் செய்தி கேட்பதற்கு நாராசமாக இருக்கிறது. என்மீது தாங்கள் காட்டி வரும் பரிசுத்தமான நட்பையும், அன்பையும் இவ்வூரிலுள்ள சில வம்பர்கள் சந்தேகித்து மிகவும் கேவலமான முறையில் பல அவதூறுகளை எழுப்பிவிட்டிருக்கிறார்கள். தங்களது பரிசுத்தமான பெயருக்கு என்னால் வீண் இழுக்கு ஏற்பட்டு விட்டதே என்பதை நினைக்கும்போதே என் நெஞ்சு ஆத்திரத்தில் வெடிக்கிறது'' என்றான் பதட்டமாகச் சிவகுமார்.

தன்னையும், கரும்பு ஆலை முதலாளியையும் பற்றி ஊரார் சிலர் வம்பு பேசுகிறார்கள் என்பதை உமா ஏற்கெனவே அறிந்திருந்த போதிலும், அதைச் சிவகுமார் வாயால் கேட்கும்போது அவமானத்தினால் உடல் குன்றிப் போய் விட்டாள். தாங்க முடியாத ஒரு துக்கம் அவள் நெஞ்சை அடைத்துக் கொண்டது? கை கால்கள் பயத்தில் நடுங்கின.



''மிஸ்டர் சிவகுமார்! தவறு ஏதும் செய்யாது குற்ற மற்றவராக இருக்கும்போது இந்த வீணர்களைக் கண்டு நீங்கள் ஏன் அஞ்ச வேண்டும்? இந்த மாதிரி வதந்திகள் எழும்பக்கூடும் என்பதை நான் முன் கூட்டியே எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். அதனால் நான் இதைக் கேட்டு ஆச்சரியம் அடையவில்லை. ஆனால், இந்த வதந்திகளைக் கண்டு உங்களைப் போன்ற ஓர் ஆண்மகன் அஞ்சுவதைக் காணத்தான் எனக்கு மெத்த வியப்பாக இருக்கிறது'' என்று கோபத்துடன் கூறினாள். அவளது கண்களில் லேசாகத் துளிர்த்த கண்ணீர், மங்கிய அரிக்கேன் விளக்கொளியில் நீல மணிபோல் 'பள பள' வென்று மின்னிக் கொண்டிருந்தது.

தன் வார்த்தைகள் உமாவின் உள்ளத்தை நோகச்செய்து விட்டதை அறிந்த சிவகுமார் மிகவும் மனவேதனை அடைந்தான். ''மிஸ் உமா! நான் இந்த வீணர்களைக் கண்டு ஒரு போதும் அஞ்சமாட்டேன். என்னைப் பற்றி மட்டும் பழிச் சொற்கள் பரவுவதாக இருந்தால், நான் சிறிதும் கலக்கம் அடைந்திருக்க மாட்டேன். ஏனெனில், எல்லோருக்கும் நல்லவனாக ஒருவனும் உலகில் வாழ முடியாது என்பது என் சித்தாந்தம். இந்த ஊரில் ஒரு சிலர் நான் சொந்த முயற்சியில் முன்னுக்கு வந்ததைக் காணச் சகிக்காது வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நான் செய்யும் எந்தக் காரியத்தையும் பழித்து, வம்பு பேச அவர்கள் எந்தச் சமயமும் தயாராகக் காத்திருப்பதையும் நான் அறிவேன். அவர்களைப்பற்றி நான் சிறிதும் கவலைப்படவேயில்லை. ஆனால் நான் கவலைப் படுவது உங்களைப் பற்றித்தான். பழிச் சொற்களும் வீண் கதைகளும் என் மீது எவ்வளவு சுமத்தப்பட்ட போதிலும், ஆண் பிள்ளை என்ற பாரபக்ஷத்துடன் சமூகம் மறந்து விடும். ஆனால் தங்களது மாசற்ற பெயர் வீண் பழியால் சூழப்பட்டால் தங்கள் வருங்காலத்தை மெத்தவும் பாதித்து விடுமே என்பதுதான் என் கவலை. தங்களது நன்மைக்காகத்தான் இந்த உண்மையைச்

சொன்னேன்!'' என்றான் மிகவும் இரக்கம் ததும்பிய மெல்லிய குரலில்.

உமா இதைக் கேட்டுத் துயரம் மிகுந்த நீண்டதொரு பெருமூச்செறிந்தாள். ''மிஸ்டர் சிவகுமார்! என் பொருட்டுத் தாங்கள் எடுத்துக்கொள்ளும் கருத்திற்கு மெத்த வந்தனம். ஆனால் ஒரு முக்கிய காரணம் பற்றி நான் இந்த ஊரார் பழிச்சொல்லை இதுசமயம் காதில் போட்டுக்கொள்ளாது அசட்டையாக இருக்க வேண்டியுள்ளது. தாயும் தந்தையும் அற்ற அனாதைப் பெண் நான் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அளவற்ற செல்வமும், அதனால் ஏற்படக்கூடிய சகல சுகங்களும் என் வாழ்வில் நிறைந்து கிடந்த போதிலும் எனக்கு மனத்தில் நிம்மதியே இல்லை. ஆனந்தம் என்பது கடுகளவும் இல்லை.

''பண்ணையார் மகள் என்ற நிலைக்கு முன், வறுமையிலே வாடிக்கொண்டு நகரத்தில் ஒரு மூலையில் நோயாளித் தாயுடன் திண்டாடிக் கொண்டிருந்தபோது நான் எவ்வளவோ சந்தோஷத்துடன் இருந்தேன்'' என்று கூறிவிட்டு முடிக்க முடியாது துக்கத்துடன் திணறினாள். கட்டுப்படுத்த முடியாது கண்ணீர் வெள்ளமென அவள் விழிகளினின்று பெருகி ஓடியது.

இதைக் கண்டு பச்சாதாபத்தினால் மனம் உருகிவிட்ட சிவகுமாருக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. ''மிஸ் உமா! உங்கள் மனத்தில் ஏதோ ஒரு பெரும் துயரம் குடி கொண்டிருக்கிறது என்று தெரிகிறது. நான் ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று தெரிவித்தால்...'' என்று முடிக்காது மென்று விழுங்கினான்.

கண்களைத் துடைத்துக்கொண்ட உமா அவனை நிமிர்ந்து பார்த்தாள். ''சிவகுமார்! உங்களைச் சந்தித்த முதல் நாளே, நீங்கள் எனது கஷ்டங்களில் உண்மையாக உதவி செய்யக் கூடிய மனிதர், உங்களைப் பூரணமாக நம்பலாம் என்று



எனது உள்ளுணர்வு எனக்கு அறிவுறுத்தியது. தாயும் தந்தையுமற்ற அனாதையான நான் அளவற்ற ஆஸ்திக்கு அதிபதியாக இருக்கிறேன். நான் ஏவியதைச் செய்ய ஏகப்பட்ட ஆட்களும் பணிப் பெண்களும் இருக்கிறார்கள். நான் புன்னகை செய்தால் அதைப் பிரசாதமாகக் கருதி ஏற்கவும், நான் கூறியதற்கு ஆமாம் என்று தலையசைக்கவும் என்னைச் சுற்றிப் பலர் இருக்கிறார்கள். ஆனால் நம்பிக்கைக்கு உகந்த மனிதர் என்று எனக்குக் கஷ்டங்களில் உதவி செய்ய உங்களைத் தவிர யாருமே கிடையாது? உங்கள் மூலமாக எனக்கு ஒரு உதவி தேவையாக உள்ளது. அதைத் தாங்கள் தடையின்றிச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையிலே தங்களுடன் பரிசுத்தமான நட்பு ஏற்படுத்திக் கொள்ள முயன்றேன். என் உள்ளத்திலே கள்ளம் ஏதும் இல்லாததனால் எனக்கு யாரைப் பற்றியும் அக்கறையில்லை'' என்றாள் மிகவும் தீவிரமாக.

மனவெழுச்சி மிக்க அடைந்த சிவகுமார் உமாவை இரக்கத்துடன் நிமிர்ந்து பார்த்தான். ''மிஸ் உமா! உங்களது நல்ல அபிப்பிராயத்திற்குப் பாத்திரமாகி உள்ளதை அறிந்து நான் மிக்க பெருமிதம் அடைகிறேன். கடைசிவரை இந்த நல்ல அபிப்பிராயத்தை எப்பாடு பட்டும் காப்பாற்ற முயற்சிப்பேன். தங்களுக்கு என்னால் ஆன உதவி எதுவானாலும் செய்யச் சித்தமாக இருக்கிறேன்'' என்றான் உணர்ச்சி குமுறிய குரலில்.

''நான் கூறப் போவதைத் தாங்கள் அறிவீர்கள். எனது தாயார் எனது தந்தையுடன் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு நான் சிறு குழந்தையாக இருக்கும்போது பிரிந்து சென்று விட்டார்கள் என்பது ஊரறிந்த ரகஸியம். அவர்கள் பிரிவின் காரணத்தை எனக்குக் கூறாது மர்மமாக வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். அதைக் கண்டுபிடித்தால் ஒழிய என் வாழ்க்கையில் அமைதி ஏற்படாது போல் இருக்கிறது. அதனால்...'' என்றாள் உமா, முடிக்காது.

''இதில் நான் எப்படி உதவி செய்யக்கூடும் என்று விளங்கவேயில்லையே?'' எனத் திகைப்புடன் சிவகுமார் வினவினான்.

''உங்களால் செய்ய முடியும். என் தாயார் மனஸ்தாபப் பட்டுக் கொண்டு என் தந்தையிடமிருந்து பிரிந்து சென்ற அதே சமயம், டாக்டர் குருமூர்த்தியவர்கள் என் தந்தையுடன் மனஸ்தாபப்பட்டுக் கொண்டு பண்ணையிலிருந்து விலகி விட்டதாகப் பழைய கணக்குப் புத்தகங்களை ஆராய்ந்ததில் புலனாகிறது. டாக்டர் குருமூர்த்திக்கும் பண்ணை மானேஜருக்கும் வேறு பெரிய மனஸ்தாபம் அதற்குப் பின்னர் ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பற்றி யோசிக்கும்போது டாக்டர் குருமூர்த்திக்கும் பண்ணையார் வாழ்விற்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது என்று தோன்றுகிறது. அதனால் எனக்குக் குருமூர்த்தி அவர்களின் கடந்தகால வாழ்க்கையைப் பற்றியும், பண்ணையாருடன் அவருக்கு ஏற்பட்ட தகராறின் உண்மை பற்றியும் தாங்கள் தெரிவிக்க வேண்டும். இதில் ஏதும் ஒளிவு மறைவு கூடாது'' என்றாள் உமா.

''மிஸ் உமா! உண்மையில் எனக்குத் தங்களது தாயார் மனஸ்தாபப்பட்டுக் கொண்டு சென்று விட்டார்கள் என்ற செய்தியைத் தவிர, வேறு ஏதுமே தெரியவே தெரியாது. பண்ணையாருக்குப் பல வருஷங்களாக குருமூர்த்தி வைத்தியம் செய்வதில்லை என்பது தெரிந்த போதிலும், ஏன் எதற்காக என்று நான் காரணம் கண்டுபிடிக்க முயன்றதேயில்லை. குருமூர்த்தி அவர்களை எனக்குச் சில வருஷங்களாகத்தான் தெரியும். அதற்கு முன்னால் அவர் வாழ்வில் நடந்த எந்தச் சம்பவம் பற்றியும் எனக்கு ஒன்றும் தெரியாதே'' என்றான் திகைப்புடன் சிவகுமார்.

''தெரியாது என்ற கூறி விடுவதுடன் பிரச்சினை தீர்ந்து விடாது மிஸ்டர் சிவகுமார். குருமூர்த்தியின் கடந்த கால வாழ்க்கையைக் கண்டு பிடிப்பதில் எனக்கு உதவி செய்வதாக



வாக்களிக்கவாவது முடியுமா?'' என்று உமா கடுமையாகக் கேட்டாள்.

''உதவி செய்கிறேன் என்று ஒப்புக்கொண்டு விட்டதில் சகலமும் அடங்கியிருப்பதால், அதைப்பற்றி மீண்டும் கேட்க வேண்டியது அவசியமில்லை. என் நண்பருக்கு மன வருத்தமோ அவமானமோ ஏற்படாத வகையில் மெல்ல ஆராய்ந்து, அவரது கடந்தகால வாழ்வு பற்றியும் அவருக்கும் பண்ணையாருக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்தின் காரணம் பற்றியும் கண்டுபிடித்துச் சொல்கிறேன். அதுவரை தாங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்'' என்றான் சிவகுமார்.

தான் வந்த காரியத்தில் ஒரு சிறிது வெற்றியைக் கண்ட திருப்தியில் உமா சமாதானமடைந்தவளாக எழுந்திருந்தாள். ''மிஸ்டர் சிவகுமார்! தாங்கள் எனக்குச் செய்யப் போகும் இந்த உதவியை ஒரு நாளும் மறக்கமாட்டேன். பதிலுக்கு எதுவும் செய்யத் தயாராக இருப்பேன்'' என்றாள் நன்றிப் பெருக்குடன்.

''கொஞ்ச நாட்கள் நாம் இருவரும் சந்திக்காது இருக்க முயற்சிப்போம். ஊரார் கட்டிவிட்ட வீண் கதைகள் சற்று அடங்கட்டும். இதற்கிடையில் உங்களுக்கு எந்தச் சமயம் என் உதவி தேவையோ அதை ஒரு சிறு கடிதத்தில் எழுதி, ஆள்வசம் அனுப்புங்கள். உடனே மாளிகைக்கு ஓடோடி வந்து சேருகிறேன்'' என்றான்.

வேறு வழியின்றி இந்த நிபந்தனையை உமா ஒப்புக் கொள்ள வேண்டியிருந்தது. ''அப்படியே ஆகட்டும்'' என்று பதில் அளித்துவிட்டுக் கைகூப்பி நமஸ்கரித்து விடைபெற்றுக் கொண்டாள்.

வயல் ஓரமாக உலாவச் சென்றிருந்த ரங்கதுரை ரஸ்தாவிற்குக் குறுக்காகப் போய்க் கொண்டிருந்த ஒத்தையடிப் பாதைமீது வந்துகொண்டிருந்தான். சிவகுமார் வீட்டு முன்

தோட்டத்திலிருந்து பேச்சுக் குரல் எழும்புவதைக் கேட்டு திடுக்கிட்டு அந்தத் திசையைப் பார்த்தான். அரிக்கேன் விளக்கைத் தூக்கிக்கொண்டு சிவகுமார் வழி காட்ட, பின்னால் அன்னநடை போட்டவண்ணம் பண்ணையார் மகள் இருட்டில் அவன் வீட்டிலிருந்து வந்து காரில் ஏறிக் கொள்வதைக் கண்டதும் அவன் நெஞ்சு ஆத்திரத்தில் குமுறிக் கொந்தளித்தது. ''இந்தக் காதல் நாடகத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி விரைவில் வைக்காவிட்டால் என் பெயர் ரங்கதுரை இல்லை'' என்று அவன் தனக்குள்ளே கறுவிக் கொண்டு வேகமாகத் தன் வீட்டை நோக்கி நடந்தான்.

## 12

பகல் போஜனத்திற்குப் பிறகு மோகனாம்பாள் தங்கள் வீட்டுக் கூடத்துத் தரையில் கிடந்த பாய்மீது வந்து உட்கார்ந்து கொண்டாள். இரட்டை நாடியாகப் பருத்து விட்டிருந்த அவளது சரீரம், வெளியில் காய்ந்த வெயயிலைச் சகிக்காது வியர்வையை வடித்துக் கொண்டிருந்தது. காலையில் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்துவிட்டு அள்ளி முடிந்து கொண்டிருந்த தன் கூந்தலை அவிழ்த்துக் காயப் போட்டுவிட்டு, காலை நீட்டியபடி சுவரில் ஆதாரமாகச் சாய்ந்து கொண்டாள். வெற்றிலைப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு வந்து பாயின்மீது 'பொத்' தென்ற சப்தத்துடன் வைத்துவிட்டு, அசட்டையாக உள்ளே நடந்தாள் வேலைக்காரப்பெண் வேலம்மாள். மோகனாம்பாள் தனது விழிகள் இரண்டும் தெறித்துவிடும்போல் தன்னைக் கோபமாக முறைத்துப் பார்த்ததை அந்தப் பெண் சட்டை செய்ததாகவே தெரியவில்லை. நான்கு மாதங்களாக அவளது சம்பளம் பாக்கியாக நின்று கொண்டிருந்தது. 'இன்று ஒரு சமயம் பூராத் தொகையும் கிடைத்துவிடும், நாளைக்குக் கொடுத்து விடுவார்கள்' என்ற ஆசை காரணமாக அந்தப் பெண், பல்லைக் கடித்துக்கொண்டு வேலை செய்துவந்தாள். ஒழுங்காகச் சம்பளம் அளிக்காத எஜமானிமீது அவளுக்கு மதிப்பு மங்கிக் கொண்டு வந்ததில் வியப்பில்லை.



வேலைக்காரப்பெண் கோபமாக வைத்து விட்டுப்போன வெள்ளி வெற்றிலைப் பெட்டியைக் கையில் எடுத்து மிகவும் பத்திரமாக மோகனாம்பாள் திறந்தாள். ஒரு காலத்தில் அவள் பிரபல நாடக நட்சத்திரமாகத் துலங்கியபோது, நூறாவது நாள் ''அல்லி தர்பார்'' நாடகத்தை வெற்றிகரமாக நடத்தி வைர விழாக் கொண்டாடிய கொட்டகை முதலாளி, அப்போது முக்கிய பெண் வேடதாரியான அவளுக்கு அன்பளிப்பாக அந்தப் பெட்டியைக் கொடுத்திருந்தார். அதிக உபயோகத்தினால் மெருகு அழிந்து, மூடிதேய்ந்து நசுங்கி, பூட்டு கடகடத்துப் போயிருந்த போதிலும், மங்கி மறைந்து போன அவளது பழைய புகழை அது ஞாபகப்படுத்திக் கொண்டிருந்ததனால் அதைக் கடையில் போட மனமில்லாது வைத்துக் கொண்டிருந்தாள்.

ஒருபிடி வாசனைப் பாக்கை அள்ளி வாயில் போட்டுக் கொண்டு, ஒரு கற்றை வெற்றிலையைக் கையில் எடுத்துக் கொண்டாள். ''நாளை விடிந்தால் ஒண்ணாந்தேதி பிறக்கப் போகிறது. பால்காரனுக்கும் மளிகைக் கடை பாக்கிக்கும் என்ன வழிசெய்வோம்?'' என்று அவளது உள்ளம் அடுத்த மாதம் ஆரம்பத்திலேயே பயமுறுத்திக் கொண்டு நின்ற செலவைப் பற்றிக் கணக்கிட்டுக் கொண்டிருந்தது.

கிரீச்சென்று வாயிற் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு பட்டு சேலைக்கடை விற்பனையாளர் பங்காரு செட்டியார், கணக்குப் புத்தகங்கள் சகிதம் உள்ளே வந்தார். ஆறு மாதங்களுக்கு முன் கடனாக அளித்த ஜவுளியின் பாக்கிக்காக, தள்ளாத வயதில் செட்டியார் வெய்யிலைப் பார்க்காது ஒரு மைல் தூரம் நடந்து வந்திருந்தார். ஓரம் கிழிந்து தொங்கிய தமது

செருப்புகளை நடையில் சுழற்றி வைத்துவிட்டு, மேல் துண்டால் முகத்தைத் துடைத்துக்கொண்டு, எவ்வித உபசாரமுமின்றித் தானே கூடத்துத் தரை மீது உட்கார்ந்து கொண்டார்.

கையில் பிடித்திருந்த கும்பகோணம் தளிர் வெற்றிலையை ஒருமுறை அழகு பார்த்துவிட்டு, சுருட்டி வாயில் அடைத்துக்கொண்ட மோகனாம்பாள், வந்த மனிதரை வெறித்துப் பார்த்தாள்.

''வெய்யில் பாழாப் போகுதேன்னு ஓடி வந்தியா அய்யா? நான்தான் போன மாசமே சொல்லிவிட்டேனே?கையில் பணம் வந்ததும் முதலில் உங்க கடை பாக்கியைத் தலையைச் சுற்றி வீசிவிட மாட்டேனோ?'' என்று கோபமாகக் கர்ஜித்தாள்.

விற்பனை மும்முரத்தில், வசூலிக்க முடியாத புள்ளிகளுக்கு ஜவுளியை வாரி வழங்கிவிட்டு, உள்ளங்கால் வெள்ளெலும்பு தேய நடந்து கொண்டிருந்த பங்காரு செட்டியாரின் நிலை இருபக்கமும் இடிபடும் மத்தளத்திற்கு ஒப்பாக இருந்தது.

பணத்தை வசூலிக்காது கடைக்குச் சென்றால் முதலாளி 'வள்' என்று எரிந்து விழுவார். வசூலிக்கப் போன இடத்தில் பணம் வரட்சியாயிருந்த புள்ளிகள் வேட்டை நாயாகப் பாய்ந்தார்கள். எப்படியாவது பணம் வந்தால் போதும் என்ற நினைப்பில் அவர் மோகனாம்பாளின் சுடு மொழிகளைக் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை.

''சுலோசனா அம்மா சௌக்கியந்தானே அம்மா!'' என்று பல்லை இளித்து குசலம் விசாரித்துவிட்டு செட்டியார் கணக்குப் புத்தகத்தை அவிழ்த்தார். '' இரண்டாயிரத்து எழுபத்திரண்டு ரூபாய் பத்தணா'' என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டு காகிதத்தை எடுத்து அவள் முன் நீட்டினார். தலைக்குமேல் வெள்ளமாக மோகனாம்பாளுக்கு நாலா பக்கமும் கடன் சுமை



பெருகிக் கொண்டு நின்றது. இந்த நிலையில், அந்தக் காகித்தில் கண்டிருந்த விவரம் அவளைக் கொஞ்சமும் பயமுறுத்த வேயில்லை.

''ஒரு நூறாவது இன்று கொடுத்துவிட்டால் வரவு வைத்துக்கொள்ள சௌகர்யமாக இருக்கும்'' என்று செட்டியார் இழுத்தார்.

அது சமயம் ஜிகுஜிகு என்று சப்தமிட்டவண்ணம் உடம்பைக் குலுக்கிக்கொண்டு வெள்ளைப் பூப்பந்தைப்போல் தோற்றமளித்த குச்சு நாய்க் குட்டி ஒன்று உள்ளிருந்து ஓடி வந்து, புதிதாக வந்திருந்த அந்த மனிதரைக் கண்டு மிரண்டு கோபம் கொண்டு, இருமுறை குரைத்துவிட்டு எஜமானி மடியில் போய் தொப்பென்று விழுந்தது.

''அடி என் ராஜாத்தி, பாலு குடிச்சியாடி கண்ணு?'' என்று கொஞ்சியபடி மோகனாம்பாள் அதைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். ''ஏ வேலாயி! ரோஸி குட்டிக்குப் பால் வச்சியா! வயிறு குழைஞ்சு கிடக்கிறதே, பாவம் பட்டினி போலயிருக்கே!'' என்று உட்புறம் திரும்பி உரத்த குரலில் ஒரு கூப்பாடு போட்டாள்.

''நான்தான் ரோஸிக்குப் பால் வச்சேன், நல்லாச் சாப்பிட்டுதே அம்மா!'' என்று கீச்சுக் குரலில் பதிலளித்தபடி, பதினெட்டு வயது இளம்பெண் ஒருத்தி, நீலப்பட்டுப் பாவாடை சலசலக்க மஞ்சள் நிற வாயில் தாவணியின் தலைப்பைக் காற்றில் பறக்கவிட்டுக் கொண்டு' மாடிப்படிகளை இரண்டே தாவலில் தாண்டிக் கூடத்திற்குள் வந்து குதிநடை போட்டபடி நின்றாள். ''என்ன செட்டியாரே சௌக்கியமா? புது தினுசு சேலை ஏதாச்சும் கொண்டு வந்திருக்கிறீங்களா?'' என்று விசாரித்து விட்டு, கூடத்துத் தூணைப்பிடித்துக் கொண்டு சொகுசாக நின்றாள். இடைவரை தொங்கிய அவளது பின்னலின் முடிவில்

கட்டியிருந்த பட்டுக் குஞ்சலங்கள் இப்படியும் அப்படியுமாக அவளது உடல் நெளிவுக்குத் தக்கபடி ஊசலாடிக் கொண்டிருந்தன.

முழங்கைவரை அவள் கரங்களில் குலுங்கிய தங்க வளையல்களையும், கழுத்தில் மின்னிய வைர அட்டிகையையும் வெறுப்போடு விறைத்துப் பார்த்த செட்டியார், ''என்னவோ உங்கள் புண்ணியத்திலே சௌக்கியம் அம்மா!'' என்று விரக்தியாகக் கூறினார். 'வைரமும் தங்கமுமாக ஆபரணங்களை வாங்கிப் போட்டுக் கொள்ளப் பணம் இருக்கிறது, புடவை பாக்கியைத் தீர்க்க மட்டும் பணமில்லை போலிருக்கிறது!' என்று தமக்குள் கோபத்துடன் எண்ணிக் கொண்டார். பாவம், அந்தப் பத்தாம்பசலிக்கு சுலோசனாவின் மேனியை அலங்கரித்த அந்த நகைகள் அத்தனையும் பித்தளை என்ற ரகசியம் எங்கே தெரியப் போகிறது?

''வீணாக ஏன் உட்கார்ந்து பொழுதை ஓட்டுறீங்க, அய்யா? நாங்க ஊருக்குப் புதியவங்களா? உங்கள் கடைக்குத் தான் புதிய வாடிக்கைக்காரங்களா? மாசூல் பணம் வந்ததும் கொடுத்து அனுப்புகிறேன்'' என்று விறைப்பாகப் பேசினாள் மோகனாம் பாள், வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு.

செட்டியார் பெருமூச்சு விட்டுக்கொண்டு எழுந்தார். வீட்டையும் கூரை முகட்டையும் சுற்றித் தமது கண்களை ஒருமுறை ஓடவிட்டார். கெட்டியான காரக் கட்டடம். அரை விலைக்குப் போனாக்கூட முப்பதாயிரத்துக்குத் தேறும், பணம் உள்ள புள்ளிகள்தான். பாக்கியைக் கொடுக்க ஏனோ இழுத்தடிக்கிறார்கள்?'' என்று தமக்குள் ஆராய்ச்சி செய்து கொண்டு திரும்பினார். உண்மையில் அந்த வீட்டின்மீது மோகனாம்பாள் கழுத்து மட்டும் கடன் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் என்ற ரகசியம் ஒருவருக்குமே தெரியாது.



''வருகிறேன் அம்மா, ஞாபகம் வச்சுக் கொள்ளுங்கள்!'' என்று வறட்சியாகக் கூறிவிட்டு, ஒரு கும்பிடு போட்டு விடை பெற்றுக்கொண்டு சோர்ந்த மனதுடன் செட்டியார் சென்றார்.

''சுலோ! உன்னைத்தானே, மக்குப் பிளாஸ்திரி, வாசல் கதவைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு வா. திறந்த வீட்டில் நாய் நுழைவது போல இந்தக் கடன்காரப் பாவிகள் உள்ளே நுழைந்து விடுகிறார்கள்'' என்று எரிந்து விழுந்தாள் தாயார்.

தூணின் மீது சாய்ந்தபடி கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த மகள் துள்ளிக்குதித்து ஓடி கதவைச் சாத்தி விட்டுத் தாயின் மடி மீது வந்து விழுந்தாள்.

''என்னம்மா, ரொம்பக் கோவிச்சுக்கிறே!'' என்று கொஞ்சிக் கொண்டு தாயைக் கட்டிக் கொண்டாள்.

வாயிற் கதவு தடதடவென்று இடிபடும் ஓசை கேட்டது. மோகனாம்பாள் கலவரத்துடன் மகள் முகத்தைக் குறிப்பாகப் பார்த்தாள். 'இன்னும் எந்தப் பழைய பாக்கிக் கடன்காரன் 'பில்' காகிதத்தைத் தூக்கிக் கொண்டு வந்துவிட்டானோ' என்ற பயம் அவளுக்கு. நாய்க்குட்டியை இடையில் தூக்கிக் கொண்டு சுலோசனா ஓடிச் சென்று கதவைத் திறந்தாள். வற்றிக் காய்ந்த குச்சி போன்ற மெலிந்த திரேகியான வயோதிக மனிதர் ஒருவர் தள்ளாடிக் கொண்டு உள்ளே வந்தார்.

''அம்மா அப்பாதான் வந்திருக்கிறார்'' என்று கிரீச்சிட்டாள் மகள்.

''ஆமாம்! அவர் தூக்கமாட்டாத பொருளைத் தூக்கிட்டு வந்திருக்கிறார். பெண்ணே நீ போய் வாங்கி உள்ளே வை. வயசு காலத்திலே போட்டதைத் தின்னுவிட்டு நிழலோடு கிடக்காம ஊர் சுத்திகிட்டு திரிகிறதைப் பார்! சரி!சரி! கைகாலைக் கழுவிக் கொண்டு, வேலம்மா வீட்டுக்குப் போகிறதுக்கு முந்தி சாப்பிடுங்கள்'' என்று கோபத்துடன் கத்தினாள் மோகனாம்பாள்.

மனைவி தனக்கு அளித்த இந்த வரவேற்பு வடிவேலு விற்குப் புதிதல்ல. முப்பது வருஷ காலத்தை எப்படியோ அவளுடன் ஓட்டி விட்டிருந்தான். நாடகக் கம்பெனியொன்றில் ஆர்மோனியக்காரனாக இருந்த சந்தர்ப்பத்தில் பிரபல நடிகை மோகனாம்பாளை அவன் சந்திக்க நேர்ந்தது. அந்தச் சந்திப்பு இணை பிரியாத வாழ்க்கைத் துணைவர்களாக அவர்களை மாற்றி விட்டது. மோகனாம்பாளின் புகழ் மங்கி மறைய தொடங்குவதற்குப் பல வருடங்களுக்கு முன்பே வடிவேலுவின் புகழ் மங்கி மறைந்து போய் விட்டது. மனைவி சம்பாதித்துப் போட்டதைக் கொண்டு வாழ வேண்டிய துர்க்கதி ஏற்பட்டிருப்பதினால் அவனால் மனைவியை ஓங்கி அதட்டி அதிகாரம் செய்ய முடியவேயில்லை.

கிழவன் உள்ளே சாப்பிடச் சென்றதும் வெற்றிலைப் பெட்டியை மூடிவிட்டுத் தலையை கைக்கு ஆதாரமாக வைத்துக்கொண்டு, பாய்மீது சாய்ந்து படுத்து விட்டாள் மோகனாம்பாள். சுவரில் மாட்டியிருந்த பழைய போட்டோக்கள் அனைத்தையும் ஒருமுறை உற்றுப் பார்த்தபோது அவளுக்கு ஆத்திரத்தில் வயிறு பற்றி எரிந்தது. அடுக்கடுக்காக மெடல்களை அணிந்துகொண்டு நாடக உடைகளில் காட்சியளித்த அந்தப் புகைப்படங்கள் ஒவ்வொன்றும் அவள் வாரி வாரிச் சம்பாதித்துக் குவித்த செல்வத்தை நினைப் பூட்டிக்கொண்டிருந்தன. எத்தனை பணம் சம்பாதித்தாள் அவள்? அப்பப்பா! என்ன செல்வாக்கு அப்பொழுது? ஆமாம்? அத்தனையும் இப்போது எங்கே போயிற்று?

பணம்தான் போயிற்றே என்றால், குழந்தையில்லை என்று தவமிருந்து, கெஞ்சாது கெஞ்சி தர்ம ஆஸ்பத்திரி ஒன்றிலிருந்து தத்து எடுத்து ஆசையோடு வளர்த்தாளே அந்தப் பெண் சுலோசனாவால்தான் ஏதாவது பலன் உண்டா? வாட்டசாட்டமாக குதிர்போல் திண் என்று வளர்ந்து நின்ற அந்தப் பெண்ணுக்குப் பாலும் தயிரும் போட்டு, பட்டு ஆடைகள் கட்டி அவளைத்



தன்னைப்போல் ஒரு பிரபல நக்ஷத்திரமாக்க எத்தனையோ முயற்சிகள் செய்தாள்.

சங்கீதத்தை வீசை என்ன விலை என்று கேட்டாள் சுலோசனா! நாட்டியத்தையோ 'நாழியால் அளக்கலாமா?' என்று விசாரிக்கும் பரம ஞானத்தை பகவான் அவளுக்கு அளித் திருந்தார். பாட்டும் நடனமும் இல்லாவிட்டால் போகிறது. பார்ப்பதற்குப் பெண் கொஞ்சம் லக்ஷணமாக இருக்கிறாள். படவுலகிலாவது பெயர் எடுக்கட்டும் என்று பெண்ணை அழைத்துக் கொண்டு பட்டணத்திற்குச் சென்று ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு இரண்டு வருஷ காலம் முகாம் போட்டுப் பார்த்தாள் தாயார்.

ஒரு சாதாரண படத்தில், ஓர் இடத்தில் சிறிது நேரம் தலை காட்டும் யோகம், மிக்க அரும்பாடுபட்டுக் கிடைத்தது. அவ்வளவுதான், புற்றிலிருந்து ஈசல் புறப்பட்டதுபோல் எங்கிருந்தோ சுற்றத்தார்கள் உறவு கொண்டாடிக் கொண்டு நாலா பக்கத்திலிருந்தும் வந்து வீட்டிற்குள் டேரா போட்டு விட்டார்கள். இதற்கு முன் கண்டதுமில்லை கேட்டதுமில்லை என்ற மனிதர்கள் எல்லாம் அத்தையம்மாள் என்றும், பெரியம்மாள் என்றும் உறவுமுறை சொல்லிக்கொண்டு மாதக் கணக்கிலே விருந்தாளிகளாகத் தங்கிவிட்டனர். மகள் ஒரு குட்டி நக்ஷத்திரமாக சினிமாவில், வானில் ஒரு தடவை கண் சிமிட்டி மறைவதற்குள், பெரிய வீடு, சமையற்காரர், தோட்டக்காரன், புடவை மடிக்க வேலைக்காரி,ஷூட்டிங் போய்வர சொந்தக் கார், நாட்டியத்திற்கு ஒரு நட்டுவனார், சங்கீதத்திற்கு ஒரு பாட்டு வாத்தியார், ஹிந்தியைக் கரைத்துப்போட ஒரு தனி ஆசிரியர் என்று குடும்பம் பெருத்து விட்டது.

வீட்டில் வந்து முகாமிட்டிருந்த உறவினர்களின் பட்டாளம் போதாதென்று பட உலகில் சந்தர்ப்பம் கொடுப்பதாகக் கூறி வந்த ஆசாமிகளுக்கு கூஜா நிறையக் காப்பியும், பலகாரமும்

படைக்க வேண்டியிருந்தது. சுலோசனா ஒரு கணம் தோன்றி மறைந்த படம் வெள்ளித்திரையிலேயே வராது தகரப் பெட்டிக்குள்ளே தங்கிவிட்டதனால் அடுத்தடுத்து சந்தர்ப்பம் எதுவுமே அவளுக்குக் கிட்டவில்லை. இந்தப் படத்தில் கிடைக்கும் சந்தர்ப்பம், அந்தப் படத்தில் ஒரு சமயம் கிடைக்கலாம்' என்று நம்பிக்கையை விடாது மகளுடன் பட்டணத்திலே வருவா யின்றிப் பணத்தைப் படாடோபமாகச் செலவழித்துக் கொண் டிருந்தாள் மோகனாம்பாள்.

நாடகத்தில் ஆடி சேமித்து வைத்திருந்த அவளது பணம் நாளா வட்டத்தில் பாங்கியிலிருந்து குறைந்து கொண்டு வந்தது. உடலை அலங்கரித்த விலையுயர்ந்த வைர ஆபரணங்கள் ஒவ்வொன்றாக மெல்ல மறையத் தொடங்கின. மோட்டார் கார் அவசியமல்லவென்று அதை விற்று வந்த பணத்திலே கொஞ்ச நாட்களைக் கடத்திப் பார்த்தாள். பிறகு, வீட்டிலிருந்த பீரோ, கட்டில், மேஜை என்று ஒவ்வொரு பொருளாக விற்கும் பயங்கர நிலைமை வந்துவிட்டது. மழைக்கு அடைந்து கொள்ளும் பறவைகள்போல் எங்கிருந்தோ பணம் இருந்த பொழுது வந்து கூடிக் கும்மாளமிட்ட உறவினர்கள் ஒவ்வொருவராக நழுவ ஆரம்பித்தனர். ஆறுமாத வாடகையை விரைவாகக் கொடுக்கா விட்டால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போவதாக வீட்டுக்காரா மிரட்டி ஒரு நோட்டீஸ் கொடுத்து விடவே கடைசியாகக கையிலிருந்த நகைகளை விற்று, பட்டணத்தில் ஏற்பட்ட கடன்களை அடைத்துக் கொண்டு, தலை தப்பியது தம்பிரான் புண்ணியமெனத் தாயும், தந்தையும், மகளும் சொந்த ஊருக்கு வந்து சேர்ந்திருந்தனர்.

அந்தக் காலத்தில் பணம் மிஞ்சிக் கிடந்தபோது வாங்கிப் போட்டிருந்த காரைக் கட்டடந்தான் சமயத்திற்குக் கை கொடுத்து உதவியது. மார்வாரி ஒருத்தரிடம் அதை அடமானமாக வைத்துப் பணம் வாங்கி, கொஞ்ச நாட்களை எப்படியோ கழித்துவிட்டிருந்தாள். 'இனிமேல் என்ன செய்யப் போகிறோம்'



என்று கலங்கிக் கொண்டிருந்த சமயத்தில்தான் அடுத்த கிராமமாகிய அழகர்நத்தம் பண்ணை மானேஜர் மகன் ரங்கதுரையின் பரிச்சயம் அவர்கள் குடும்பத்திற்கு எதிர்பாராத வகையில் வலிய வந்து கிடைத்தது. நாள் ஒரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பருத்துக் கொண்டு வந்த சுலோசனாவை வைத்துக்கொண்டு, இனி எப்படி வாழ்க்கையில் முன்னேற முடியும் என்று ஏங்கிக் கொண்டிருந்த மோகனாம்பாளுக்கு ரங்கதுரையின் நட்பு பெரிய ஆறுதலையும் நம்பிக்கையையும் அளித்தது.

சுலோசனாமீது ஒரே மோகமாக மயங்கி விட்டிருந்த மானேஜர் மகன் அடுத்த கிராமத்திலிருந்து வாரத்திற்கு இருமுறை அவர்கள் வீட்டிற்கு தப்பாது விஜயம் செய்து கொண்டு வந்தான். கொஞ்சம் சாமர்த்தியத்தை உபயோகித்து அந்தப் பையனைத் தன் மகளுக்குக் கட்டி வைத்து விட்டால் வருங்காலத்தைப் பற்றிக் கொஞ்சமும் அஞ்சவேண்டியதில்லை என்று திட்டம் போட்டிருந்தாள் மோகனாம்பாள்.

ரங்கதுரையின் தொடர்பு ஏற்பட்டு வருஷம் ஒன்று விளையாட்டாக ஓடி மறைந்து விட்டது. ஆனால் இந்தத் தொடர்பு திருமணத்தில் போய் முடியும் என்பதன் அறிகுறி கடுகளவும் காணவேயில்லை. மிக்க உரிமையுடன் வீட்டிற்கு வந்து, "சுலோ! சுலோ" என்று அருமையாக உறவு கொண்டாடி, "சும் பாலும் நெய்ப் பலகாரமும் வயிறு நிறைய உண்டுவிட்டுக் கடைசியில் மகளைக் கல்யாணம் செய்துகொள்ளாது சென்று விடுவானோ ரங்கதுரை என்ற கிலி சமீபத்தில் அவளுக்கு ஏற்பட்டிருந்தது. அன்று காலைதான் அழகர்நத்தத்திலிருந்து அவன் ஏதோ வேலையாக நகரத்திற்கு வந்திருந்தான். வழக்கம் போல் நேரே அவர்கள் வீட்டில்தான் வந்து இறங்கியிருந்தான். சொந்த வீட்டைப்போல் ஸ்நான அறைக்குள் சென்று பிரயாணக் களைப்புப் போக வெந்நீரில் நன்றாக ஸ்நானம் செய்தான். வேலம்மாள் தயாரித்திருந்த போஜனத்தைச் சுவைத்துச்

சாப்பிட்டான். செருப்பை மாட்டிக்கொண்டு, வெளியே போய் வருவதாகக் கூறிவிட்டு அன்று பகல் பொழுது எங்கேயோ போய் விட்டான். திருமணத்தைப்பற்றிய பிடி கொடுத்துப் பேசாது அவன் நாட்களைக் கடத்திக்கொண்டு நழுவி வருவதைக் காண மோகனாம்பாள், கையில் காசுமின்றி, கல்யாணமுமின்றி அதோ கதியாகத் தன் வளர்ப்பு மகள் தவிக்க நேரிட்டால் என்ன செய்வது என்று திகிலடைந்து போனாள்.

''ஏய் சுலோ!'' என்று மகளை அதட்டிக் கூப்பிட்டாள். ''ஏம்மா'' என்று தலையைச் சொறிந்துகொண்டு கொஞ்சலாக வினவிய மகள், மேலே சாய்ந்து கொண்டு அருகில் வந்து உட்கார்ந்தாள். ''காலையில் மானேஜர் மகன் வந்தானே, ஏதாவது விசாரிச்சியா? என்ன சொன்னான்? நினைச்சபோது வந்து தங்குகிறதுக்கு இது என்ன ஓட்டலா?தர்ம சத்திரமா?'' என்று அதட்டிக் கேட்டாள் தாயார்.

''குளிக்கிற அறையிலே சட்டையை கழட்டிப் போட்டிருக்கிறேன். துவைச்சு வைக்கச் சொல்லுன்னாரு. திரும்பி வரதுக்கு இன்னிக்கு ரொம்ப நாழியாகுமாம்'' என்றாள் மகள் புருவங்களை நெளித்துக்கொண்டு.

''வண்ணாத்தி வேலைவேறே நமக்கு வச்சு விட்டானாக்கும். இதோ பாரு. இந்தப் பயல் நம்மை ஏமாத்துகிறதுக்குத்தான் இப்படி இழுத்தடிக்கிறான். இன்னிக்கு வந்ததும் ஒண்ணு இரண்டுனு கறாராக் கேட்டுத் தெரிஞ்சுகொண்டுவிடு. ஆமாம் சொல்லிவிட்டேன், அப்புறம் அழுதுகொண்டு என்கிட்டே வந்து முட்டிக் கொண்டால் பிரயோசனமில்லை'' என்று கடுமையாகப் பேசினாள் மோகனாம்பாள்.

வேலையை முடித்துக்கொண்டு வீட்டிற்குக் கிளம்பிய வேலம்மாள் தடதடவென்று அங்கே வந்தாள். ''இந்தாங்க, இந்தக் காகிதம் ஐயாவுடைய சட்டையிலே கிடந்தது. துவைக்கிறபோது பார்த்தேன்'' என்று கோபத்துடன் முணுமுணுத்துவிட்டு வெளியேறினாள்.



''நன்றி கெட்ட ஜன்மம், கல்போல் ரெண்டு புடவையைத் தூக்கிக் கட்டிக்கொள்ளக் கொடுத்தேன். என்னவோ சம்பளம் நாலு மாதமா சரியாக்கொடுக்கலைன்னு முகத்தாலே கட்டுத் தள்ளுகிறாளே இந்த வேலைக்காரக் குட்டி'' என்று ஆத்திரத்துடன் கூறிய மோகனாம்பாள், எழுந்து உட்கார்ந்து கொண்டு, கூந்தலை வாரி அள்ளி முடித்துக் கொண்டாள்... அலட்சியமாகக் கடிதத் துண்டைப் பிரித்து தனக்குள் எழுத்துக்கூட்டி மெல்ல வாசிக்கலானாள்.

''ஐயோ! இந்த அநியாயத்தைக் கேட்டியா?'' என்று கடிதத்தைப் படித்து முடித்தவுடன் தேள் கொட்டியவள் போல் தாயார் அலறினாள்.

''என்னம்மா? ஏன் இப்படிப் பதறுகிறே!'' என்ற மகள் மெல்ல நிதானமாக வினவினாள்.

''அன்புள்ள அத்தையவர்களுக்கு,

வணக்கம். ஒரு முக்கிய காரியமாக நான் இங்கேயே இரண்டு தினங்கள் தங்கும்படி நேர்வதால் நான் உடனேயே திரும்பிவர இயலாது. நேற்று தினம் தங்களிடம் கூறியவைகள் ஞாபகத்தில் இருக்குமென்று நினைக்கிறேன். என் பொருட்டுத் தாங்கள் உமாமகேஸ்வரியிடம் மெல்லப் பேசி அவள் மனத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்று மிகவும் கேட்டுக் கொள்கிறேன். உமாமீது எனக்குள்ள பற்றுதலைத் தாங்கள் அறிவீர்கள். ஆதலால் என் வேண்டுகோளைப் புறக்கணிக்க மாட்டீர்கள் என நினைக்கிறேன். நேரிடையாக அதைப் பேச வெட்கமாக இருந்ததினால் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். மற்றவை பிறகு.

தங்கள் அன்புள்ள,

**ரங்கதுரை''**

"அம்மா இது என்ன?" ஆச்சரியத்துடன் கேட்டாள் மகள், கடிதத்தை ஒரே மூச்சில் படித்துவிட்டு.

"அடி, முட்டாள் பெண்ணே! இன்னுமா உனக்குப் புரியவில்லை? மானேஜர் மகன் நம்மை உதறிவிட்டு, யாரோ உமா என்கிற பெண்ணைக் கட்டிக்கொள்ளத் திட்டம் போட்டிருக்கிறான். அந்த ரம்பையின் மனத்தை அறிந்துவரத் தன் அத்தையம்மாளைத் தூதாகப் போகவேண்டி இந்தக் கடிதத்தை அவசரமாக எழுதியிருக்கிறான். தபாலில் அனுப்ப மறந்து சட்டைப் பையிலே வைத்துவிட்டுப் போய் விட்டிருக்கிறான். இருக்கட்டும் இந்த மோகனாம்பாளை இவன் ஏமாற்றிவிட முடியுமா என்று பார்த்துவிடுகிறேன்" என்று கோபத்துடன் கர்ஜித்தாள் தாயார்.

"உமா என்கிறது யாரம்மா? இந்தப் பெயரை நான் கேட்டதேயில்லையே?" என்று குமுறினாள் துக்கமும் பொறாமையும் தாள முடியாது சுலோசனா. அவள் கண்களில் கண்ணீர் பெருகிவர பிரயத்தனம் செய்தது.

"அவள் யார் என்பதை நொடிப்பொழுதிலே கண்டு பிடித்து விடுகிறேன். நீ சித்த சும்மா அழாம இரு. வஞ்சனையாக நம்மை ஏமாற்ற இவன் பார்க்கிறான். நாமும் வஞ்சகமாகத்தான் இருந்து இவனை ஜெயிக்க வேண்டும். இந்த கடிதாசியை நாம் பார்த்ததாகவே காட்டிக்கொள்ள வேண்டாம். அவன் வருகிற நேரமாச்சு, கண்ணைத் துடைத்துக்கொண்டு மூஞ்சியைக் கழுவிப் பளிச்சினு பொட்டு வச்சுக்கொள். நமக்கு ஒன்றுமே தெரியாததுபோல இருப்போம்!" என்று பற்களைக் கடித்துக்கொண்டு மகளுக்கு உத்தரவிட்டாள் அன்னை.

அன்று மாலை, பொழுது அஸ்தமிக்கும் வேளை அந்த வீட்டிற்குத் திரும்பிய ரங்கதுரையை மிக்க மலர்ந்த முகத்துடன் மோகனாம்பாள் வரவேற்றாள்.



"வாங்கோ! காலையிலே ஒரு பிடி சாப்பிட்டது இப்படி பட்டினியா உடம்பை வாடப்போட்டா என்னத்துக்காகும்? சுலோ! சீக்கிரம் கொஞ்சம் ஒவல் கலக்கிக்கொண்டு வா. இந்தாங்க, உங்களைத்தானே, அந்த விசிறியைக் கொஞ்சம் திருப்பி விடுங்க, வேலாயி! சீக்கிரம், ஐயா பசியோட வந்திருக்கிறார்" என்று இல்லாத உபசாரங்களெல்லாம் செய்தாள். அவள் மனத்திற்குள் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்த ஆத்திரத்தைச் சிறிதும் அறியாத ரங்கதுரை, குளிர்ந்த காற்றைச் சுழற்றி எழுப்பிய மின்சார விசிறியடியில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு தன் உள்ளத்திலே காதல் கனலை எழுப்பிவிட்டிருந்த உமாமகேஸ்வரியின் அழகிய முகத்தைக் கற்பனையில் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தான்.

## 13

ஜன்னல் மட்டத்தின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு கதைப் புத்தகம் ஒன்றை உமா படிக்க முயற்சித்தாள். சிவகுமாரின் வேண்டுகோளின்படி அவள் கொஞ்ச நாட்களாக ஆசிரமத்திற்குச் சென்று அவனைச் சந்திப்பதையும், வீட்டிற்குச் சென்று க்ஷேமம் விசாரிப்பதையும் அடியோடு நிறுத்திக் கொண்டிருந்தாள். பண்ணை விவகாரங்களைக் கவனிப்பதும், உண்பதும், தோட்டத்தைச் சுற்றி வருவதும், உறங்குவதுமாகப் பொழுது மிகவும் சாரமற்றுக் கழிந்து கொண்டு வந்தது. குருமூர்த்தியைப் பற்றி விசாரித்து அறிந்து சொல்வதாகச் சிவகுமார் அவளிடம் கூறிப் பல தினங்கள் சென்றும் அதைப்பற்றி ஏதும் தகவலே கொடுக்கவில்லை. இது விஷயத்தில் அவசரப்படுவதில் ஒன்றும் பயனில்லை என்று உமா மிகவும் பொறுமையுடன் நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தாள். வெளியில் எங்குமே செல்லாது வீட்டிற்குள்

சிறைச்சாலைக் கைதிபோல் சுற்றி வர அவளுக்கு மிகவும் சிரமமாகத்தான் இருந்தது.

கதைப் புத்தகத்தின் ஏடுகளை விரல்கள் திருப்பிக் கொண்டிருந்தனவேயொழிய கதையில் அவளது கருத்து அமையவில்லை. புத்தகத்தை வெறுப்புடன் மூடிக் கையில் பிடித்துக்கொண்டு ஜன்னல் வழியாக வெளியே தெரிந்த மாளிகைத் தோட்டத்தைப் பார்க்கலானாள். பண்ணையார் மாளிகை உட்புறம் பாழடைந்து கிடந்த போதிலும் சுற்றிலுமிருந்த தோட்டம் பச்சைப் பசேலென்று, கண்கள் பார்த்து அனுபவிக்க ஒரு பெரும் விருந்தாகத் திகழ்ந்தது. தோட்டத்தின் வளமைக்கும், செழுமைக்கும் காரணம் தோட்டக்கார சின்ன முத்து தம்பதியின் சலியாத உழைப்புத்தான் என்பதை வந்த நாளிலிருந்தே உமா நன்கு உணர்ந்து கொண்டிருந்தாள்.

மாலைச் சூரியனின் மஞ்சள் வெயிலை ரஸித்தபடி தோட்டக்காரச் சின்னமுத்து சற்று தொலைவிலிருந்த சிமெண்ட் மேடைமீது உட்கார்ந்திருந்தான். கணவனுடன் கூட செடிகளுக்கு நீர் ஊற்றிக் கொண்டிருந்த வீராயி இரும்புத் தொட்டியைக் கீழே வைத்து விட்டு அவன் அருகில் நகர்ந்து வந்தாள். அவளது இடதுகால் கட்டை விரலில் ரத்தம் பெருகிக்கொண்டு வந்தது. ''மச்சான்! பீங்கான் ஓடு காலைப் பொத்துவிட்டது'' என்று கூவிவிட்டு, குனிந்து கால் விரலை அழுத்திப் பிடித்து கொண்டாள்.

மேடையிலிருந்து தொப்பெனக் குதித்த சின்னமுத்து மனைவியருகில் ஓடி வந்தான். இரும்புத் தோண்டியில் எஞ்சியிருந்த நீரை விட்டுக் காயத்தைக் கழுவினான். பிறகு இடுப்பில் சொருகிக் கொண்டிருந்த வெற்றிலைப் பையை எடுத்துப் பரபரப்பாக ஒரு காகிதப் பொட்டலத்தை எடுத்தான். அதற்குள்ளிருந்த வெண்ணிறமான பொடியை எடுத்து



காயத்தின் மீது வைத்து தன் முண்டாசுத் துணியின் ஓரத்தைக் கொஞ்சம் கிழித்துக் கொண்டு பலமானதொரு கட்டுப் போட்டான்.

கணவன் தனக்குச் செய்த சைத்தியோபசாரங்களில் மிக்க திருப்தி அடைந்து போன வீராயி பதிலுக்குப் புன்முறுவல் செய்துவிட்டு, இரும்புத் தோண்டியைத் தூக்கிக் கொண்டு வேலை செய்யப் புறப்பட்டாள். ''போதும் பிள்ளை! நீ சித்த சும்மா உட்காரு. இன்னிக்கு செடிகளுக்குப் பாய்ச்சின தண்ணீர் போதும்!'' என்று உத்தரவிட்டு விட்டு, தோண்டியை அவள் கரத்திலிருந்து பிடுங்கி அப்பால் வைத்தான் சின்னமுத்து.

வீராயி சிமெண்டு மேடையில் படிமீது வந்து உட்கார்ந்து கொண்டாள். தன் இடுப்பில் சொருகியிருந்த துணிப் பையை எடுத்து அவிழ்த்தாள். பகல் பொழுது கடைத்தெருவிற்குச் சாமான் வாங்கச் சென்றிருந்த அவள் தன் கணவனுக்குப் பிடிக்குமென்று ஒரு பொட்டலம் காரமான சுண்டலை வாங்கிக் கொண்டு வந்திருந்தாள். ''இந்தாங்க!'' என்று ஆசையுடன் அழைத்து அவன் கரத்திலே சுண்டலை அள்ளி வைத்தாள் அவள்.

''நீயும் சாப்பிடு!'' என்று அன்புடன் கூறிய சின்னமுத்து ஒரு பிடி சுண்டலை அள்ளி அவள் வாயில் கொஞ்சம் போட்டுவிட்டு, மீதியைத் தன் வாயில் போட்டுக் கொண்டு சுவைத்துத் தின்னத் தொடங்கினான்.

இந்தக் காட்சியை ஒன்று விடாது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த உமா ஜன்னல் மட்டத்தினின்று இறங்கினாள். புத்தகத்தை மேஜை மீது வைத்துவிட்டு அறையினின்று வெளியே வந்தாள். வீட்டிற்குள்ளேயே மாலை முழுவதும் அடைந்து கிடப்பதை விட்டு, தோட்டத்திற்கு வந்து அந்த தம்பதியுடன் ஏதாவது சற்றுப் பேச வேண்டும்போல் ஓர் ஆவல் எழுந்தது.

அருகில் 'சரக் சரக்'கென்று பாதரட்சை ஓசையைக் கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தான் சின்னமுத்து. எஜமானி அம்மாள், தங்கள் இருவரும் உட்கார்ந்திருந்த திக்கை நோக்கி வருவதைக் கண்டதும் பரபரப்பாகக் கையை மேல் துண்டின் மீது துடைத்துக் கொண்டு, பணிவாக எழுந்து நின்றான். வீராயியும் தன் கணவனுடன் சட்டென எழுந்து எஜமானி அம்மாளுக்கு ஒரு பெரிய கும்பிடு போட்டாள்.

''என்ன சின்னமுத்து! செடி கொடிகளைப் பார்த்துக் கொள்ளத்தான் உனக்குத் தெரியும் என்றிருந்தேன். கொஞ்சம் வைத்தியம் கூடத் தெரியும் போலிருக்கிறதே!'' என்று கேலியாகக் கேட்டு விட்டுச் சிரித்தாள் உமா.

எஜமானியம்மாள் சிறு பச்சிளங் குழந்தை போல் முத்துப் பற்கள் தெரிய மனம் விட்டுச் சிரித்துத் தங்களுடன் சமதையாக நின்று பேசுவதைக் கண்டு சின்னமுத்து பரவசமடைந்து போனான். உமா தங்களுடன் வந்து இப்படி சகஜமாகப் பேசக்கூடும் என்று அவன் ஒரு நாளும் நினைக்கவேயில்லை. ஏனெனில், தனது புது எஜமானியைப் பற்றி அவன் கொண்டிருந்த அப்பிராயமே வேறாக இருந்தது.

பண்ணையார் மரணமடைந்த சில தினங்களுக்குப் பிறகு ஒருநாள் மானேஜர் அய்யா பண்ணை ஆட்கள் அனைவரையும் ஒருங்கே திரட்டி வாயில் பந்தலில் வரிசையாக நிற்கும்படி உத்தரவிட்டிருந்தார். பந்தலின் நடுவே போட்டிருந்த நாற்காலியில் பண்ணையார் மகள் கம்பீரமாக வீற்றிருந்தாள். மானேஜர் ஐயா அருகில் உட்கார்ந்து கொண்டு, ஒரு காகித ஜாபிதாவிலிருந்து அவர்கள் பெயரை ஒவ்வொன்றாக வாசித்தார். பெயர் வாசிக்கப்பட்ட நபர் அவர்கள் முன் வந்து நின்றதும், அவன் பெயர், செய்யும் வேலை போன்ற விவரங்களை எஜமானிக்கு எடுத்துச் சொன்னார் மானேஜர்.



இவ்வாறுதான் சின்னமுத்துவும் தன் புது எஜமானிக்கு அறிமுகப் படுத்தப் பட்டிருந்தான். அதற்குப் பின்னர் எத்தனையோ முறை எஜமானியை அவன் தோட்டத்திலே சந்தித்தான். கைகட்டி வாய் புதைத்து, பின்னால் நாய்க்குட்டி போல் தோட்டம் முழுவதும் துணையாகச் சுற்றி வந்த அவனை எஜமானியம்மாள் ஒருமுறை கூடத் திரும்பிப் பார்த்ததில்லை. ஒரு வார்த்தை பேசியதில்லை. பேசாமடந்தையாக உலவி வந்த எஜமானியைத் திமிர் பிடித்த பெரிய கர்வி என்றுதான் அவன் இதுகாறும் எண்ணிக் கொண்டிருந்தான். முதன் முதலாகத் தன் பெயரைச் சொல்லி மிகவும் அன்போடு அழைத்து அவள் சகஜமாகப் பேசுவதைக் கேட்க அவனுக்கு மிக்க விந்தையாக இருந்தது; மிக்க மகிழ்ச்சியாகவும் இருந்தது.

''ஒண்ணுமில்லை, போன வாரம் என் காலிலே முள் குத்தி சீழ் கட்டிகிட்டபோது வைத்தியர் அய்யா இந்த மருந்துப் பொடியைக் கொடுத்தார். கொஞ்சம் பாக்கி இருந்திச்சு, அது இப்போ சமயத்துக்கு உதவிச்சு'' என்றான் பற்களை இளித்துக்கொண்டு.

''அப்படியா? எந்த வைத்தியர் உனக்கு இந்த சர்வரோக நிவாரணியைக் கொடுத்து உதவினார்'' என்று பரிகாசமாக உமா வினவினாள்.

வீராயியின் முகத்தைப் பார்த்தான் சின்னமுத்து, தலையைச் சொறிந்து கொண்டு, தயக்கமாகச் சிறிது நேரம் நின்றான். பிறகு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ''எனக்கு ஒரு சின்னத் தலைவலின்னாக் கூட நம்ப குருமூர்த்தி ஐயா கிட்டத்தான் போய் மருந்து வாங்கிப் பூசிக்கிறது வழக்கம். அவர் வெறும் மண்ணை அள்ளிக் கொடுத்தாலும் அது மருந்தாகப் பளிச்சிடும்'' என்றான் பெருமையாக. டாக்டர் குருமூர்த்தி கொஞ்ச நாட்களுக்கு முன்பு பண்ணைக்கு வந்து, கிழவி தையல்நாயகிக்கு வைத்தியம் செய்ததை அவன்

அறிவான். அதனால் தைரியமாக எஜமானியிடம் ஒளிக்காது உண்மையைச் சொன்னான்.

''அப்படியா?'' என்று கேட்ட உமா அருகிலிருந்த ரோஜாச் செடியினின்று ஒரு மலரை மெல்லக் கிள்ளி எடுத்து தலையில் சொருகிக் கொண்டாள். சட்டெனத் தொடர்ந்து அவனிடம் சில கேள்விகள் கேட்க வேண்டுமென்ற ஆவல் அவளுக்கு உடனே ஏற்பட்டது. எனினும் நேரடியாகக் கேட்டுத் தன்னைப் பற்றி அகௌரவமாக எண்ணும்படி இடம் கொடுக்க விரும்பவில்லை. எனவே, ஏதேச்சையாகப் பேசுகிறவள் போல் நிதானமான குரலில் ''சின்னமுத்து! நீதான் அந்த வைத்தியரை அப்படி சிலாகித்துக் கொள்கிறாய். எங்கள் விஷயத்தில் அவர் கைராசி ஒன்றும் பலிக்கவேயில்லை. பாட்டியம்மாளுக்கு அவர் வைத்தியம் செய்தாரே என்ன ஆயிற்று?'' என்று கேட்டாள்.

''அதுக்கென்ன செய்வோம் அம்மா, அவங்களுக்கு ஆயுசு அவ்வளவுதான். வைத்தியர் வியாதியைக் குணப்படுத்த முடியுமே ஒழிய, உசிரைக் கூட எமன்கிட்டே இருந்து திருப்பி வாங்கித் தர முடியுமா? எங்க ரெண்டாவது மகளுக்கு அவர் தான் வைத்தியம் செய்தார். ஆனா பிள்ளை பிழைக்கலை. அதற்கு அவர் மேலே குத்தம் சொல்ல முடியுமா?'' என்று வீராயி கணவனுக்குப் பதிலாக சட்டென்று பேசினாள்.

''அப்படியா? நீங்க ரெண்டு பேரும் அவரை ஒரேயடியாகப் புகழ்கிறீர்கள். ஆனால் ஊரில் அவரை அப்படி யாரும் புகழ்ச்சியாகப் பேசுவதாகக் காணோமே?'' என்றாள் உமா சாமர்த்தியமாக.

''நீங்க சரியாக அவரைப் பத்தி விசாரிச்சிருக்க மாட்டீங்க. இந்த ஊர் ஜனங்கள் அத்தனை பேரும் அவரைத் தங்கள் தெய்வமாகக் கொண்டாடிக்கிட்டிருக்கிறார்கள். ஏழை எளியவங்க கிட்ட அன்பாக நடந்துக்கிற புண்ணியவான்னு அவருக்குப் பெயராச்சே!'' என்றான் சின்னமுத்து. இதைப் பேசி



முடிப்பதற்குள் அவனது குரல் உணர்ச்சி வசத்தில் தடுமாறியது. நரைத்துத் தொங்கிய மீசை துடிதுடித்தது.

வீராயியையும், சின்னமுத்துவையும் ஒருமுறை ஏற இறங்க கவனித்து விட்டு, உமா லேசாகப் புன்முறுவல் செய்தாள். ''வைத்தியருக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு நீயும் உன் மனைவியும் ரொம்பப் பரிந்து பேசுகிறீர்கள். ஆனால் நீ சொல்கிறபடி அவரைப் பற்றி அவ்வளவு புகழ்ச்சியாக நான் ஏதும் கேள்விப் பட்டதே கிடையாதே. டாக்டர் குருமூர்த்தி மிகவும் பொல்லாதவர். நடத்தைப் பிசகானவர் என்றும் நான் கேள்விப்பட்டேன்!'' என அசட்டையாகக் கூறுவது போல் சொல்லிவிட்டு அவன் முகத்தையே ஆவலுடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

''அம்மா! இப்படி யாரம்மா சொன்னாங்க? அவரைப் பற்றிப் பொய் ஏதும் சொன்னா கண் அவிஞ்சு போயிடும் அம்மா! நம் பண்ணையைத் தவிர அவர் இந்த ஊரில் யாருக்கும் வேண்டாதவரே இல்லையம்மா. ஊர் ஜனங்கள் அத்தனை பேருக்கும் அவர்மேல் உயிர். உங்களுக்குச் சொன்னவங்க அவர் விரோதியாய் இருக்க வேணும். என் பேச்சை நம்புங்க அம்மா. எனக்கு அவரை முப்பது வருஷமாகத் தெரியும்'' என்றான் உணர்ச்சி வெள்ளத்தில் குமுறிய சின்னமுத்து.

''உனக்கு அந்த வைத்தியர் மேலே அதிக அன்பு போலிருக்கிறது. அதனால்தான் இப்படிப் பேசுகிறாய்'' என்று விடாப்பிடியாகச் சொன்ன உமா லேசாகச் சிரித்தாள்.

''என் பெரிய குழந்தையின் உசிரை இரண்டு வாட்டி காப்பாத்திக் கொடுத்தாரம்மா. ஒரு தடவை நான் சாகக் கிடந்தேன். அந்த மகாராஜன் ராத்திரின்னு பார்க்காம ஓடிவந்து ஊசி போட்டு என்னைக் காப்பாத்தினாரம்மா, அவருக்கு நான் என்ன பிரமாதமாச் செய்துவிட்டேன்! வீராயி தன் காதுக் கம்மலை வித்து ஐந்து ரூபாயை எடுத்துக்கிட்டுப் போனாள்.

''நீயே வச்சுக்கம்மா; உன் புருஷனுக்கு இந்தப் பணத்துக்கு நல்ல பாலு வாங்கிச் சாப்பிடக்கொடு, சீக்கிரம் உடம்பு தேறும்னு சொல்லி அனுப்பிவிட்டார். அவர் மட்டும் பணம் பணம்னு அடிச்சுப் பிடிச்சு வாங்குகிற ஆசாமியா இருந்தால் இந்த ஊரிலே மாடி மேலே மாடி வச்சு பெரிய வீடு கட்டிப் போட்டிருப்பார். ஆனால் அவருக்குக் குழைஞ்ச மனசு. ஏழை எளியவர்களோட அன்பு என்னிக்கும் நிலைக்கும்னு அவர் நினைப்பு'' என்று படபடவென்று பேசினான்.

''நீ இத்தனை புத்திசாலித்தனமாகப் பேசுவேன்னு நான் நினைக்கவேயில்லை. தேவலையே சின்னமுத்து! நீ பேசுகிறதைக் கேட்க ரொம்ப சுவாரஸ்யமாக இருக்கிறது!'' என்று உமா அவனைப் புகழ்ந்தாள்.

தோட்டக்காரனின் சுருங்கிய வதனம் இதைக் கேட்டுப் பிரகாசமடைந்தது.நன்றி பெருகிய கண்களால் எஜமானியை நோக்கி, வெற்றிலைக் காவியேறிய பற்கள் அனைத்தையும் காட்டி மகிழ்ச்சியுடன் சிரித்தான்.

''ஆமாம் சின்னமுத்து! நீ தான் பல வருஷங்களாக இங்கே வேலைசெய்து கொண்டிருக்கிறாயே, உனக்கு எல்லா விவரமும் தெரிஞ்சிருக்கும். பண்ணைக்கு வைத்தியராக ஒரு காலத்திலே குருமூர்த்தியை வேலைக்கு அமர்த்தியிருந்தாங்கன்னு கேள்விப்பட்டேன். பின்னால் ஏன் விலகிப் போனாராம்? இங்கே ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு தினுசாக அதைப் பற்றி பேசுகிறார்கள்'' என்றாள் உமா யதேச்சையாகக் கேட்கிறவள்போல்.

வீராயி கணவன் முகத்தைக் கலவரத்துடன் பார்த்தாள். ''எங்களுக்கு அதைப்பத்தி ஏதும் விவரம் தெரியாதம்மா, பண்ணை எஜமானருக்கு வைத்தியர் மேலே ஏதோ கோபம். வேண்டாம்னு அவரை வேலையிலிருந்து நிறுத்திவிட்டார். நமக்கேன் பெரிய இடத்துப் பொல்லாப்புன்னு நாங்க அதைப்பற்றி விசாரிச்சுக் கொள்ளலை'' என்று சட்டென்று பதில் அளித்தாள்.



31505
4757969

ஆனால் சின்னமுத்து அவளைத் தொடர்ந்து பேசவிடாது இடைமறித்தான். ''நீ சும்மா இரு பிள்ளை, அம்மா உண்மையைத் தெரிஞ்சுக்கக் கேட்கிறாங்க. நமக்குத் தெரிஞ்சதை மறைக்காம சொல்லிட்டுப் போவோமே! நாம் என்னத்திற்கு வீணாக பயப்படணும்?'' என்று மனைவியை அதட்டினான். பிறகு எஜமானி பக்கம் திரும்பி, ''நான் தெரிஞ்சதை ஒளிக்காம சொல்றேன், கேட்டுக்கங்க. டாக்டர் அய்யாதான் பண்ணைக்கு வெகுகாலமாக வைத்தியராக இருந்து வந்தார். இப்போ போல எனக்கு ஞாபகம் வருது. நீங்க பிறந்தபோது அம்மாவுக்கு உடம்பு அதிகம் கோளாறாயிடுச்சு. ஒரு நாள் ராத்திரி ஆச்சு போச்சுனு போயிடவே, எஜமானர் எங்களை ஓடி டாக்டர் ஐயாவை இட்டு வரச் சொன்னார். கொட்டுகிற மழை, நல்ல இருட்டு, நான் வேலைக்கார முனியனோட விளக்கை எடுத்துக்கிட்டு ஓடினேன், அவரை அழைச்சு வர.

அப்போவெல்லாம் மோட்டார் கார் ஏது? மாட்டு வண்டியிலேதான் டாக்டர் ஐயாவை இட்டுக் கொண்டு வந்தேன். அப்போ மட்டும் சமயத்திற்கு அவர் வந்து உதவி செய்திருக்காட்டா எஜமானியம்மா கட்டாயம் செத்து விட்டிருப்பாங்க. பெண்ஜாதி உயிரைக் காப்பாத்திக் கொடுத்ததற்கு பண்ணையார் அவருக்கு ஒரு தங்கக்கடிகாரம் வாங்கி இனாம் செய்தார். டாக்டர் ஐயாவுக்கும் நம்ப பண்ணை மேலே ரொம்ப விசுவாசம் இருந்திச்சு, யார் வச்ச கண்ணோ தெரியலை. நீங்க ரெண்டு வயசுக் குழந்தையா இருக்கச்சே எஜமானர் திடீர்னு கோவிச்சிக் கிட்டு டாக்டர் ஐயாவை வேலையிலிருந்து நிறுத்தி விட்டார்'' என்றான் மூச்சு விடாது.

''சரிவர வைத்தியம் செய்யவில்லையினு ஏதாவது குறை கண்டிருப்பார். அதனால் நிறுத்தியிருக்கலாம்'' என்று உமா சட்டென பதில் அளித்தாள். கதையின் முக்கியமான கட்டத்திலே சின்னமுத்து நிறுத்திவிட்டதை அவளால் பொறுக்க முடியவில்லை.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை, அவரை வேலையை விட்டு நிறுத்தினதுபத்தி இங்கிருந்த ஆள்படைகள் ஒவ்வொருத்தரும் ஒவ்வொன்று பேசிக் கொண்டாங்க. ஆனால் என் ஒருத்தனுக்குத்தான் உண்மை கொஞ்சமாவது தெரியும். நான் பொய் சொல்லவே மாட்டேன். என் காதாலே கேட்டதைச் சொல்கிறேன், நம்புங்க. கடைசியாக வைத்தியர் இந்தப் பண்ணைக்குள் வந்துவிட்டுப் போனபோது எஜமானரோடு இந்தத் தோட்டத்தில்தான் நின்று பேசினார். செடிக்குத் தண்ணீர் ஊத்திக்கிட்டிருந்த என் காதுகளில் யாரோ உரத்துக் கோபமாகப் பேசுகிறது கேட்டது. நான் வேலையை நிறுத்திவிட்டு அதை உற்றுக் கேட்டேன். 'நீங்க எத்தனை என் மீது கோவிச்சுக் கிட்டாலும் சரி, உங்க இஷ்டத்திற்கு என்னால் நடக்க முடியாது. மனச்சாட்சிக்கும் கடவுளுக்கும் பதில் சொல்ல நான் கடமைப் பட்டவன்' அப்படின்னு டாக்டர் ஐயா கோபமாகப் பேசினார். 'அப்படின்னா இன்றையிலிருந்து பண்ணை வேலையைவிட்டு நீங்கள் விலகிக் கொள்ளலாம். உங்கள் தயவு எனக்குத் தேவையில்லை' என்று எஜமானர் அதிகக் கோபமாகப் பதில் சொன்னார். அதுக்கப்பால் அவர்கள் பேசியது என் காதில் கேட்கவில்லை. எஜமானியம்மாளுக்கு விஷம் வைத்துக்கொல்ல எஜமானர் சூழ்ச்சி செய்தார்ன்னும், அதுக்கு வைத்தியர் ஒப்பவில்லைன்னும் ஊர் ஜனங்கள் கதைகட்டி விட்டார்கள். ஆனால் உண்மை என்னவோ எங்க ஒருத்தருக்கும் நிச்சயமாகத் தெரியாது'' என்றான்.

சுவாரஸ்யமாகக் கேட்டு வந்த உமா பெருமூச்செறிந்தாள். ''பண்ணையிலிருந்து வைத்தியரை எஜமானர் கோபத்துடன் விலக்கி விட்டதற்கு ஏதோ காரணம் இருக்கலாம். ஆனால் இந்த மானேஜர் ஐயாவுக்கு வைத்தியர் மேலே ஏன் இத்தனை துவேஷம்?'' என்று மெல்லக் கேட்டாள்.

''பண்ணையார் அவர்களே வேண்டாம்னு விலக்கிவிட்ட வைத்தியர் கிட்ட சிகிச்சை பண்ணிக்கிட்டா பண்ணையாருக்கு



ஒரு சமயம் கோபம் ஏற்படலாம்னு பயந்து கொண்டுதான் மானேஜர் குருமூர்த்திகிட்ட வீணா விரோதம் பாராட்டுகிறார்னு நினைக்கிறேன். அம்மா முக்கால்வாசிப் பண்ணை ஆட்கள் கூட எஜமானருக்குப் பயந்து கொண்டு அவர்கிட்ட வைத்தியத்துக்குப் போகிறதில்லை'' என்று விவரித்தான்.

ஓரளவு குருமூர்த்தியைப் பற்றி விவரம் இவ்வாறு அறிந்து கொண்டதில் உமாவுக்கு மிகவும் திருப்தி ஏற்பட்டிருந்தது. எனவே தொடர்ந்து ''ஆமாம் சின்னமுத்து நீதான் இங்கே வெகு காலமாக இருக்கிறாயே, அதனால் உனக்கு என் தாயாரைக்கூட நன்றாகத் தெரியும் அல்லவா?'' என்று நிதானமாகக் கேட்டாள். தாயார் என்ற பேச்சை எடுத்ததுமே எவ்வளவு அமைதியாக இருக்க முயன்றபோதிலும் அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ளத் தொடங்கியது.

''ஏன் தெரியாமல்?... நன்றாகத் தெரியும்மா! அவங்களுக்கு பூச்செடிகள் என்றால் உயிர். சதா தோட்டத்தைச் சுத்திக்கிட்டேதான் இருப்பாங்க. வந்த புதுசிலே உங்களைத் தோட்டத்திலே முதல்லே பார்த்தபோது அப்படியே என்னைத் தூக்கிவாரிப் போட்டிடுச்சு. ஏன்னா, ஜாடையிலே அம்மாவையே அச்சிலே வார்த்தாப்பல நீங்க இருந்ததிலே அப்படியே பயந்து போயிட்டேன்'' என்றான்.

இதுவரை பேசாது மௌனமாக நின்றுகொண்டிருந்த வீராயி ''குணத்திலே அவங்க தங்கக் கம்பிதான். மகாலட்சுமி மாதிரி இந்த வீட்டுக்கே ஒரு களையாக இருந்தாங்க. நாங்கள் தான் குடுத்துவைக்கலை'' என்றாள் வருத்தத்துடன்.

''வேலைக்காரங்க அத்தனை பேரிடமும் ரொம்ப அன்பா நடந்துக்குவாங்க, பெரிய அந்தஸ்திலே இருந்தும் கருவமே கிடையாது அம்மா. எஜமானர் கல்யாணத்தின்போது நான் வேலைக்கு வந்தவன். அதனாலே எனக்கு எல்லாம் தெரியும். ஐயாவும் அம்மாவும் ஆரம்பத்திலே பூவும் மணமுமாத்தான்

இணை பிரியாம இருந்தாங்க. எந்தப்பாவி வச்ச வினையோ...'' என்று முடிக்காது நிறுத்தினான் சின்னமுத்து. ''தோட்டத்திலே வந்து குந்திகிட்டு சதா அழுதுக்கிட்டேயிருப்பாங்க. 'பிள்ளைத்தாச்சிப் பொண்ணு ஏம்மா அழுகிறீங்க'ன்னு நான் கேட்டா, 'ஒண்ணுமில்லை வீராயி' அப்படின்னு சொல்லிட்டு எழுந்து போயிடுவாங்க. நீங்க பிறக்கிற சமயத்திலே எஜமானருக்கும் அம்மாவுக்கும் பேச்சு வார்த்தைகூடக் கிடையாது'' என்றாள் வீராயி குறுக்கிட்டு.

''ஐயாவுக்கும், அம்மாவுக்கும் இடையே ஏற்பட்டிருந்த கோபம் முத்திக்கிட்டே போய் நீங்க இரண்டு வயசுக் குழந்தையா இருக்கறச்சே அம்மா வீட்டைவிட்டு வெளியே போயிட்டாங்க. அந்தச் சமயம் ஐயா வெளி ஊருக்குப் பத்து நாள் வேலையாப் போயிருந்தார். அம்மா தன்னோட அப்பாவுக்குக் கடுதாசி போட்டு வரவழைச்சிருந்தாங்க. குழந்தையைத் தூக்கிக்கிட்டு அப்பாவோட கிளம்பிப் போனவங்கதான். அப்புறம் அவங்களை நாங்க திரும்பப் பார்க்கவே இல்லை'' என்றான் சின்னமுத்து.

''ஊருக்குப் போகிறதுக்கு முன்னாடி தோட்டத்துக்கு வந்தாங்க அம்மா. அவங்களைப் பார்த்தபோது எனக்கு பகீர்னு இருந்திச்சு. நகை நட்டு ஒண்ணுமில்லாதபடியே சேலை ஒண்ணைக் கட்டிகிட்டு பரதேசிபோல இருந்தாங்க. 'வீராயி! நான் ஊருக்குப் போயிட்டு வரேன், என் மாங்கன்னுக்கு மறந்து போகாம தண்ணி ஊத்தி வளர்த்துக் கிட்டுவா' அப்படின்னாங்க. 'சரிம்மா!' அப்படின்னேன் நான். அவங்க ஒரேயடியா வாழ்வை வெறுத்துட்டுப் புறப்பட்டாங்கன்னு அப்போ எனக்குப் புரியலை'' என்று தழதழத்த குரலில் கூறிய வீராயி பழைய நினைவுகளால் துன்பமுற்றவளாகத் தன் கண்களைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

''அம்மா தன் பொன்னான கையால் நட்டு வச்ச மாங்கன்னுதான் இத்தனை பெரிய மரமாகிப் பழுத்துக் குலுங்கிக் கிட்டு நிக்குது. இதன் பழத்தை வாயிலே போடும்போதெல்லாம்



அம்மா நினைப்பு வராம இருக்கிறதில்லை'' என்று அருகிலிருந்த பெரிய மாமரத்தைச் சுட்டிக் காட்டினான் சின்னமுத்து.

மறந்துபோன தன் தாயைப்பற்றி அவர்கள் இருவரும் கனிவாகப் பேசியதைக் கேட்டு உமாவின் மனம் மிகவும் கரைந்து விட்டது. மாமரத்தின் அருகில் நெருங்கித் தரை மீது உதிர்ந்து கிடந்த இலைச் சருகுகளில் சிலவற்றைப் பொறுக்கி எடுத்துக் கொண்டாள். அவளது கண்கள் கலங்கின.

''வருகிறேன்'' என்று சுருக்கமாக அந்தத் தம்பதியிடம் விடைபெற்றுக்கொண்டு மாளிகையை நோக்கி வேகமாக நடந்தாள். வாயிற்படி மீது ஏறி நின்றுகொண்டு தோட்டத்தை மீண்டும் திரும்பிப் பார்த்தாள். சூரியன் அஸ்தமித்துச் சிறிது நேரம் கழிந்து விட்டிருந்ததால் எங்கும் மெல்லிய இருள் பரவிக்கொண்டு நின்றது. சற்றுமுன் மஞ்சள் வெயிலில் மிகவும் ரம்யமாகத் தோன்றிய தோட்டம் இப்போது பொலிவுகுன்றிப் புதர் மலிந்த ஒரு காடுபோல் அவள் கண்களுக்குத் தோன்றியது. கவ்விக்கொண்டு வந்த அந்த இருள் அவள் மனத் துயரை மிக்க அதிகமாக்கியது. மிகப்பெரிய மாளிகை, பூச்செடிகள் நிறைந்த பெரிய தோட்டம், ஏவிய பணி புரிய வேலையாட்கள் என்று செல்வத்திலே திளைத்துக் கொண்டிருந்தும் தன் தாய் இல்வாழ்க்கையில் இறுதி காலத்தில் கொஞ்சமும் சந்தோஷமாக இருக்கவில்லை. சதா கண்ணீர் வடித்துக் கலங்கியபடி இருந்திருக்கிறாள் என்பதைத் திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்தாள். உமாவின் நெஞ்சு துக்கத்தில் வெடித்தது. தாயாருக்கு ஏன் இந்தத் துக்கம்? காரணம் என்ன?

குமுறிக்கொண்டு உள்ளத்தில் போராடிய உணர்ச்சி களைச் சமாளிக்க முடியாது கண்களில் நீர் பெருக, ''அம்மா'' என்று தன்னையும் மீறி பைத்தியக்காரிபோல் அவள் கூவிவிட்டாள். ''என்ன வேணும்?'' என்று கேட்டுக் கொண்டு வேலைக்காரப் பெண் விரைவாக அருகில் வந்தாள். ''ஒன்றுமில்லை'' என்று பதில் அளித்துவிட்டு, உமா மாடியறைக்கு வேகமாக ஓடினாள்.

# 14

இரண்டு தினங்கள் ஓடிச் சென்றன. அன்று பகல் தபாலில் வந்த கடிதத்தை உமா சாவதானமாகப் பிரித்துப் பார்க்கலானாள். கடிதத்தின் முடிவில் 'சிவகுமார்' என்ற கையெழுத்தைக் கண்டதும் உற்சாகம் மிக்கவளாக ஆசனத்தில் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு, மிகவும் கருத்துடன் வாசிக்க ஆரம்பித்தாள்.

அன்புள்ள உமா அவர்களுக்கு,

வணக்கம். நான் அவசர காரியமாகப் பட்டணம் வரை சென்று வரவேண்டியிருந்தது. புறப்படுமுன் தங்களிடம் தெரிவிக்க இயலவில்லை. கடிதத்தை நகரத்தில் நான் தங்கியிருக்கும் நண்பர் இல்லத்தி லிருந்து எழுதுகிறேன். நிற்க,

தங்களுக்கு அன்று வாக்களித்தபடி குருமூர்த்தி அவர்களின் கடந்த கால வாழ்வைப்பற்றி மிகவும் கஷ்டப்பட்டுச் சில உண்மைகளைக் கண்டு பிடித்திருக்கிறேன். உங்களிடம் இதை விரைவாகச் செய்து முடிப்பதாக ஒத்துக் கொண்டிருந்தபோதிலும் இந்த வேலை அவ்வளவு சுலபமானதாக இருக்கவில்லை என்ற உண்மையையும் நான் ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது. முதலாவதாக அத்யந்த நண்பர் அவர்களின் வாழ்க்கையைப் பற்றி அவருக்குத் தெரியாது திருட்டுத்தனமாக ஆராய்ச்சிகள் செய்கிறோமே என்று என் மனச்சாட்சி உறுத்திக்கொண்டேயிருந்தது. இரண்டாவதாக, குருமூர்த்தியைப் பற்றி யாரிடம் விசாரித்த போதிலும் பலன் தரும் செய்தி ஏதும் யாரும் சொல்ல மறுத்து விட்டனர். எனினும் என் முயற்சியைக்



கைவிடாது நான் சில நாட்களாக இதே வேலையாக இருந்து சில விஷயங்களை அறிந்துகொண்டிருக்கிறேன். இவைகள் உண்மை என்று நான் மனப்பூர்வமாக எண்ணுகிறேன். அவை பின் வருவன:

டாக்டர் குருமூர்த்தி சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு அழகர்நத்தத்தில் வைத்தியர் பணிபுரிந்து வாழ தமது மனைவி, இரு மக்களுடன் வந்து குடியேறினார். அழகர்நத்தம் சிறுகிராமம். முப்பது வருஷங்களுக்கு முன்பு இப்போதிருக்கும் அவ்வளவு முற்போக்கான நிலையில் இருக்கவில்லை. குருமூர்த்திக்கு அவர் எதிர் பார்த்த அளவு வருவாய் கிராமத்தில் கிட்டவுமில்லை. ஆரம்பத்தில் தமது குடும்பத்தையே போஷிக்க முடியாது மிகவும் திண்டாடிப் போய்விட்டார். இந்த சந்தர்ப்பத்தில் ஒரு சமயம் பண்ணையார் ஏகாம்பரத்திற்கு அவர் வைத்தியம் செய்ய நேரிட்டது. பண்ணையாருக்கும் அந்தக் காலத்தில் இப்போதிருந்த செல்வாக்கும் ஆஸ்தியும் இருக்கவில்லை. இந்தப் பணமும், பிரபலஸ்தர் என்ற வாழ்க்கையும் அவருக்குக் கடந்த யுத்தத்தின்போது தான் ஏற்பட்டவைகளாம்.

குருமூர்த்தியவர்களின் சிகிச்சை முறையில் மிகவும் திருப்தியடைந்த பண்ணையார், வருவாய் இல்லை யென்று வைத்தியர் மூட்டையைக் கட்டிக்கொண்டு வேறு ஊருக்குப் பிரயாணப்படாதிருக்க அவருக்கு உற்சாகம் காட்ட விரும்பினார். அந்த எண்ணத்துடன் தமது பண்ணைக்கும் குடும்பத்திற்கும் வைத்தியராக அவரை நியமித்துக்கொண்டு, வருஷத்திற்குப் பத்து கலம் நெல்லும், நூறு ரூபாய்களும் சம்பளமாகக் கொடுக்க ஒப்புக் கொண்டாராம். மேலும், தமது முயற்சியால் குருமூர்த்தியின் பெயர் அக்கம்பக்கத்துக் கிராமங்களில் பரவி, அவருக்குத் தொழிலில் நல்ல அபிவிருத்தி

ஏற்படும்படி உதவிகள் பலவும் செய்தாராம். எனவே குருமூர்த்தி ஓரளவிற்கு என்றென்றும் ஏகாம்பரத்திற்கு மிகவும் கடமைப்பட்டவராகத்தான் இருக்கிறார். வைத்தியருக்கும் பண்ணையாருக்கும் இடையே ஏற்பட்ட தொடர்பு நெருங்கிய நட்பாக மாறியது. இரு குடும்பத்தவர்களும் பல நாட்கள் பழகியவர்கள்போல் உறவு கொண்டாடி வந்தனர்.

இது சமயம் தொடர்ந்து வைத்தியர் வாழ்விலே துக்க சம்பவம் நடந்தது. அவரது இரு குழந்தைகளும் ஒருவர்பின் ஒருவராக இறந்து போனார்கள். அதே வருஷம் அவரது மனைவியும் குழந்தைகளைப் பின் தொடரவே, துன்பச் சுமை தாள முடியாது குருமூர்த்தி தன்னந்தனியராக மிகவும் தத்தளித்துக் கொண்டிருந்தார்; அந்தச் சமயம் நண்பர் என்ற முறையில் பண்ணையார் ஏகாம்பரம் தம்மால் ஆன ஆறுதல் கூறி அவரை மிகவும் தேற்றி வந்தார்.

பண்ணையில் வைத்தியர் உத்தியோகம் ஒப்புக் கொண்ட ஆண்டுதான் ஏகாம்பரத்திற்குத் திருமணம் நடந்தது. ஆரம்பத்தில் அவர் இல்வாழ்க்கையில் மிகவும் இன்பகரமாகத்தான் இருந்து கொண்டிருந்தார். ஒரு குழந்தை பிறந்தவுடன் என்ன காரணத்தினாலோ அவருக்கும் மனைவிக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு விட்டது. பண்ணையார் தமது மனைவியைத் தள்ளி வைத்துவிட்டு, இரண்டாவது முறை திருமணம் செய்துகொள்ள விரும்பினார் என்றும், முதல் மனைவியை ஒதுக்கி வைப்பது சுலபமான காரியமல்ல என்பதைக் கண்டதும் அவளை வேறு வழியில் தமது வாழ்வினின்று அகற்றிவிட முயன்றார் என்றும் வதந்திகள் உலவுகின்றன.



இது நிச்சயமாயின் மிகவும் பயங்கரமானதொரு உண்மையாகும். ஏனெனில் பண்ணையார் ஏகாம்பரம் தமது மனைவியை விஷம் வைத்துக் கொள்ள முயற்சித்தார் என்றும், அதற்காக வைத்தியர் குருமூர்த்தியின் உதவியை நாடினார் என்றும் கூறப்படுகிறது! குருமூர்த்தி இத்தகைய ஒரு பயங்கர காரியத்தில் பிரவேசிக்க மறுத்துவிட்டதனால், பண்ணையாருக்குக் கோபம் ஏற்பட்டு விட்டது என்றும், அதனால் இருவரிடையே பெரிய மனஸ்தாபம் ஏற்பட்டு விட்டதென்றும் தெரிகிறது. ஏகாம்பரம் தமது மனைவிக்கு விஷம் வைத்துக் கொல்லத் தமக்கு உதவி செய்யும்படி கோரி எழுதியிருந்த ஒரு கடிதம் இன்னமும் வைத்தியர் வசம் சிக்கிக்கொண்டு இருப்பதால் பண்ணையாருக்கு என்றுமே அவரைப்பற்றி பயம் என்றும் அறிந்து கொண்டேன். தாம் செய்ய நினைத்த அக்கிரம செயலை என்றாவது அம்பலப்படுத்தி விடுவாரோ என்ற கிலியில், ஏகாம்பரம் வைத்தியரை ஊரைவிட்டு ஓட்ட பலவிதத்திலும் முயன்று பார்த்தார் என்றும், ஆனால் குருமூர்த்தி எக்காரணம் கொண்டும் அழகர்நத்தத்தை விட்டு நகர்வதில்லை என்று பிடிவாதமாக இருந்துவிட்டதனால் பண்ணையாரின் முயற்சிகள் பலன் அளிக்கவில்லை என்றும் சொல்லிக் கொள்கிறார்கள்.

இவைகள் அனைத்தையும் டாக்டர் குருமூர்த்திக்கு மிகவும் நெருங்கிய நண்பர்கள் இருவர் மூலம் நான் மிகவும் சாமர்த்தியமாக அறிந்துகொண்டேன். நேரடியாக குருமூர்த்தியிடம் நான் ஏதும் விசாரிக்கவே இல்லை. மற்றபடி வைத்தியர் பற்றி ஏதும் குற்றம் குறைகள் கூற முடியாது. நடத்தையில் பிசகானவர் என்றோ, வைத்தியத் தொழிலைப் பணத்திற்காகத் தவறான முறைகளில் அப்பியசிக்கிறவர் என்றோ யாரும் கடுகளவும் தப்புக் கண்டுபிடிக்க முடியாது.

பண்ணையார் வைத்தியருடன் மனஸ்தாபப் பட்டுக் கொண்டு விட்டதை அறிந்ததும் பண்ணையில் ஊதியம் பெற்று வந்த மானேஜர் தமது எஜமானருக்கு எதிராக வைத்தியரை வீட்டிற்கு அழைத்து உறவு கொண்டாடவோ, சிகிச்சை செய்து கொள்ளவோ விரும்பவில்லை. வேறு தனிப்பட்டதொரு விரோதம் மானேஜருக்கு வைத்தியர் மீது ஏற்பட எந்தக் காரணமும் இருக்கவில்லை என்று தெரிகிறது. பண்ணையாருக்கும் அவர் மனைவிக்கும் மனஸ்தாபம் ஏற்பட்ட காரணம் யாருக்குமே விளங்காத மர்மமாக உள்ளது. ஒருவருக்காவது ஏன் என்றே தெரியவில்லை. அதைப்பற்றி நிதானமாக ஆராய்ந்துதான் அறிய வேண்டும். அவசரப்பட்டுப் பயன் இல்லை. நான் இங்கே சில தினங்கள் தங்கியிருந்துவிட்டு, அடுத்த வாரம்தான் வருவேன். மற்றவை நேரில்.

தங்கள் உண்மையுள்ள,
சிவகுமார்.

கடிதத்தைப் படித்துவிட்டு உமா பத்திரமாக மடித்துத் தன் மேஜையறைக்குள் வைத்துப் பூட்டினாள்.

தோட்டக்கார சின்னமுத்துவிடம் எதேச்சையாகப் பேச்சுக் கொடுத்து அறிந்து கொண்டிருந்த உண்மைகளை விட சிவகுமார் ஒன்றும் புதிதாக அதிகப்படியாகக் கண்டு பிடித்து விடவில்லை என்பதை உணர்ந்ததும் அவளுக்கு மெத்த மன அயர்ச்சி ஏற்பட்டது. தோட்டக்காரன் சின்னமுத்து கூறியதிலிருந்து வைத்தியர், பண்ணையார் மனைவிக்கு விஷம் வைத்துக் கொல்ல மறுத்ததனால் வேலையிலிருந்து நீக்கப்பட்டார் என்று தெரிய வந்தது. சிவகுமாரனும், வைத்தியர் மீது பண்ணை யாருக்குத் துவேஷம் ஏற்பட்டதற்கு இதுதான் காரணம் என்று கடிதத்தில் எழுதியிருந்தான். இருவரும் ஒரே தினுசாகக்



கூறுவதனால் ஒரு சமயம் உண்மையாக இருக்கலாம். உண்மை அதுவானால் ஏகாம்பரத்திற்கு, மனைவியை விஷம் வைத்துக் கொல்லத் திட்டமிடும் அளவு அத்தனை துவேஷம் ஏன் ஏற்பட வேண்டும்? என்ன காரணத்திற்காக அவர் தனது மனைவியை இந்தப் பயங்கர சூழ்ச்சியின் மூலம் தமது வாழ்க்கையினின்று அகற்ற விரும்ப வேண்டும்? ஏன்? ஏன்? தனக்குள் பலவாறு இதைப்பற்றி எண்ணி சஞ்சலத்துடன் உமா ஹாலுக்குள் முன்னும் பின்னும் கூண்டில் அடைக்கப்பட்ட புலிபோல் உலவிக் கொண்டிருந்தாள். சப்தமிடாது நுழைந்த வேலைக்காரன், "அம்மா" என்று கூப்பிட்டு விட்டுப் பின்னால் வந்து நின்றான். சிந்தனையில் மூழ்கிக் கிடந்த அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

"மானேஜர் ஐயா வீட்டிலிருந்து அம்மா வந்திருக்காங்க" என்று பராக்குக் கொடுத்தான் அவன்.

"உள்ளே வரச் சொல்லேன்" என்று அவள் கூறி முடிக்கு முன், "மன்னிக்க வேண்டும். முன்கூட்டியே தகவல் கொடுக்காது நானே வந்துவிட்டேன்" என்ற இனிமையான குரல் கேட்டது. தன் தங்க நிற மேனிக்கு எடுப்பாக அணிந்திருந்த கரும்பச்சை நிறப் பட்டுச் சேலைத் தலைப்பை இழுத்து, முதுகைப் போர்த்தி மூடிக்கொண்டு, மிகவும் அடக்க ஒடுக்கமாக உள்ளே வந்தாள் மானேஜரின் அருமைச் சகோதரி ஷண்பக வல்லி. அவளைக் கண்டதும் உமாவுக்கு அன்றிருந்த மன நிலையில் அதிக நேரம் உற்சாகத்துடன் வார்த்தையாட வெண்டுமென்ற ஆவல் ஏற்படவில்லை. எனினும், வலிய வீடு தேடிவந்த பெண்ணிடம் அவள் தன் உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை. "வாருங்கள், உட்காருங்கள்" என்று எதிரே கிடந்த ஆசனத்தைக் காட்டி உபசரித்தாள்.

பத்திரமாகத் தன் கரத்தில் சுருட்டிக் கொண்டு வந்திருந்த காகிதப் பொட்டலத்தை அவிழ்த்து, அதிலிருந்து ஒரு சிறு

வெல்வெட் துணியை உமாவிடம் கொடுத்து விட்டு ஷண்பகவல்லி சாவதானமாக ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள்.

''இதெல்லாம் என்ன?'' என்று உமா கேட்டு முடிப்பதற்குள் லேசாக சிரித்தாள் ஷண்பகம். தன் அழகு முகத்தைத் தளுக்காகக் குலுக்கிக்கொண்டு ''ஒன்றும் பிரமாதமான விஷயமல்ல. அன்று தாங்கள் எங்கள் வீட்டிற்கு விருந்து சாப்பிட வந்தபோதே இதை தங்களுக்கு அளிக்க வேண்டும் என்று ஆவலாக இருந்தேன். ஆனால் விரைவாக முடிக்க முடியவில்லை. இன்று காலைதான் தைத்து முடித்தேன். உடனே கொண்டு வந்து கொடுக்க வேண்டுமென்று ஆசையாக இருந்தது. ஓடிவந்தேன்'' என்று முடித்தாள்.

நீலநிற வெல்வெட் துணிமீது, கைகளுக்கும் கழுத்திற்கும் அழகு செய்ய பூங்கொடி போன்று சரிகையில் மிகவும் அற்புதமான வேலைப்பாடு செய்யப்பட்டிருந்தது. ''வந்தனம், இதை மிகச் சிரமப்பட்டு செய்திருப்பீர்கள். ரொம்ப அழகாக இருக்கிறதே!'' என்று ஆச்சரியத்துடன் பகர்ந்த உமா, அருகில் வந்து அமர்ந்து கொண்டாள். அழகும் அதே சமயம் தையல் கலையில் அபாரத் திறமையும் படைத்திருந்த அந்தப் பெண்மணியைத் தனக்குள் வியந்து கொள்ளாதிருக்க அவளால் முடியவில்லை

''அதிக சிரமம் ஏதும் கிடையாது. இதென்ன அப்படிப் பிரமாதமான வேலை?'' என்று சூள் கொட்டிய ஷண்பகம் நிமிர்ந்து ஆகாயத்தைப் பார்த்தாள். மனம் போல் வெடித்திருந்த சுவரையும், காரை உதிர்ந்து செங்கல் தெரிய நின்ற கூரை முகட்டையும் அசட்டையாகக் கண்காணித்து விட்டு, ''இப்பொழுது நடந்தது போலிருக்கிறது. ஆனால் வருஷம் எப்படி ஓடிவிட்டது என்பதை இவைகளைப் பார்க்கும்போது தான் தெரிகிறது'' என்று கூடகமாகத் தனக்குள் மெல்லப் பேசிவிட்டுப் பெருமூச்சு விட்டாள்.



'என்ன கூறுவதற்கு இந்தப் பூர்வ பீடிகை போட்டாள்' என்பதை உமாவினால் சிறிதும் உணர்ந்து கொள்ள முடியவில்லை. எனவே, ''நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே'' என்று ஆவலுடன் கேட்டாள். ஷண்பகவல்லி தன் வரிசைப் பற்கள் தெரிய மெல்லியதாகப் புன்முறுவல் செய்தாள். ''சில சமயம் நமக்குத் திடீரென்று எதையோ பார்த்தால், கடந்து போன சில சம்பவங்கள் கோர்வையாக அதன் மூலம் தொடர்ச்சியாக ஞாபகத்தில் எழுந்து விடுகின்றன இல்லையா? பழுதாகி விட்டிருக்கும் இந்தச் சுவரையும், பெயர்ந்து கிடக்கும் காரைப் பூச்சையும் பார்த்தேன். உடனே தொடர்ந்து இந்த வீட்டைக் கட்டி முடித்ததும் உங்கள் தகப்பனார் நடத்திய கிரஹப்பிரவேசம் ஞாபகத்திற்கு வந்தது.''

''அப்படியென்றால் நீங்கள்....?'' என்று உமா பேச வாயைத் திறக்குமுன் ஷண்பகவல்லி, எதிரேயிருந்த ஜன்னல் வழியே தெரிந்த தோட்டத்தை வெறித்துப் பார்த்த வண்ணம் பேசலுற்றாள். ''நான் விதவையாகி விட்ட பின்னர் எங்கும் செல்வது கிடையாது. ஆனால் உங்கள் தந்தை இந்த வீட்டைக் கட்டியதும் மிகவும் அமர்க்களமாகக் கிரஹப்பிரவேசம் நடத்தினார். எங்கள் வீட்டில் என்னைத் தவிர பெண்கள் யாரும் இல்லாததனால் நான் கட்டாயம் தங்கள் வீட்டு கிரஹப்பிரவேச வைபவத்திற்கு வந்தாக வேண்டும் என்று உங்கள் தாயார் என்னை மிக்க பலவந்தப்படுத்தினார்கள். அன்றுதான் முதன் முதலாக நான் வீட்டை விட்டு வெளிக் கிளம்பி ஒரு வைபவத்தில் கலந்துகொண்டேன் என்றால் மிகையில்லை. வீட்டைக்கட்டி முடித்த பண்ணையார் மிகவும் விமரிசையாகக் கொண்டாடிய வைபவமும் அதுதான் முதலாவதாகும்- அதுவே கடைசியாகவும் இருந்தது'' என்று கூறிவிட்டு, மீண்டும் ஒரு பெரிய பெருமூச்சை விடுத்தாள்.

''அப்படியா?'' என்று கேட்ட உமா நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு ஆவலுடன் ஷண்பகத்தின் முகத்தைப்

பார்த்தாள். இன்னும் ஏதேதோ தொடர்ந்து அவள் பேசப் போகிறாள் என்று எதிர்பார்த்ததனாலோ என்னவோ பண்ணை யார் மகளின் நெஞ்சு படீர்படீர் என்று ஆவல் துடிப்பில் அடித்துக் கொள்ளத் தொடங்கியது.

''கிரஹப்பிரவேசத்திற்குப் பிறகு இந்த மாளிகையில் எவ்விதமான சுப காரியமும் நடக்கவில்லை. திருமணம் நடந்த சில வருஷங்களிலேயே அவருக்கு இல்வாழ்க்கை கசந்து விட்டது'' என்றாள் ஷண்பகம்.

உமாவுக்குக் குறுக்கிட்டு ஏதோ கேள்விகேட்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்ட போதிலும், சொல்ல வந்ததை சொல்லட்டும் என்று பிடிவாதமாக இருந்தாள்.

ஷண்பகம் மறுபடியும் சோகமயமானதொரு பெருமூச் செறிந்தாள். ''ஊரில் பலர் இவைகளையெல்லாம் பற்றிப் பலவிதமாகப் பேசக்கூடும். ஆனால் உண்மை, பண்ணையார் குடும்பத்துடன் நெருங்கி உழைத்துக் கொண்டிருந்த என் சகோதரர் ஒருவருக்குத்தான் தெரியும். இறந்து போன உங்கள் தாய் ஓர் அசடு. உங்களிடம் உண்மையைக் கூறிவிட்டுச் சென்றிருக்கலாம். ஆனால் பண்ணையார் ஏகாம்பரம் அதற்குப் பிறகு கடைசிவரை அந்த விஷயத்தைப்பற்றி யாரிடமும் பேசியதில்லையாம். மனம் உடைந்து வாழ்க்கையில் விரக்தியடைந்தவராக, அவர் தமது எஞ்சிய நாட்களைக் கோயில் திருப்பணிகள், பொதுநல சேவை முதலியவற்றிற்கு அர்ப்பணித்துக் கொண்டிருந்தார். வாழ்க்கையிலேயே கொஞ்சமும் உற்சாகமில்லாது நடைப்பிணமாக அவர் வாழ்ந்து வந்ததனால்தான், பணமும் அந்தஸ்தும் இருந்தும் எத்தனையோ முறைகள் என் தமையன் வேண்டிக் கொண்டும் இந்த மாளிகையைப் பழுது பார்க்கக் கூட விரும்பாது இந்தப் பாழான நிலைக்கு வந்து விட இதைப் புறக்கணித்து விட்டார்.



''அண்ணாவுக்கு மட்டும் மனம் அடித்துக் கொள்ளும். 'ஐயா எவ்வளவோ ஆசையுடன் தமது அருமை மனைவியோடு இன்பமான இல்வாழ்க்கை நடத்தப் போவதாகக் கட்டினாரே இந்த மாளிகையை. அது இடிந்து தரை மட்டமாகும்படி அலட்சியமாகப் பழுது பார்க்காது விட்டு விடலாமா? நாளைக்கு வாரிசாக வரப் போகும் புத்திரிக்காவது வசிக்க வசதியாக இருக்க வேண்டாமா?' என்று சொல்லி அடிக்கடி என்னிடம் வருத்தப்படுவார். பண்ணையாரிடம் மாளிகையைப் பற்றி எது சொன்னாலும் விட்டு விடப்பா! ஏன் கவலைப்படுகிறாய்? என் வாழ்க்கையே சீர் கெட்டுப் பாழாகிப் போனது. அதை நான் பழுது பார்த்துச் சீர்திருத்திக்கொள்ளவில்லை. கேவலம் இந்த வீட்டைப் பற்றி ஏன் வருந்த வேண்டும். இடிந்து மண்ணோடு மண்ணாகப் போகட்டும்' என்று விரக்தியாகக் கூறிவிடுவாராம். ஒரு சமயம் வாழ்க்கையில் அவருக்கு திருப்தியும் இன்பமும் நிலவி யிருந்தால் இன்னும் நீண்ட காலம் உயிரோடு இருந்தாலும் இருந்திருப்பார். துக்கமும், மன வேதனையுமே அவரை நாளடைவில் அரித்துக் கொன்றுவிட்டன'' என்றாள்.

தனது பெற்றோரின் இடையே ஏற்பட்ட மனஸ் தாபத்தைப்பற்றிக் குறிப்பாக அப்படிச் சுற்றி வளைத்து அவள் பேசுகிறாள் என்பதை உணர்ந்துகொண்ட உமாவின் நெஞ்சு எந்த நிமிஷமும் நின்றுவிடும்போல் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது. எத்தனைக் கட்டுப்படுத்தியும் அவமானத்தினால் முகம் சிவந்து போயிற்று. உடல் முழுவதும் குப்பென்று வியர்த்துவிட்டது.

''தாங்கள் கூறுவது ஒன்றும் எனக்குப் புரியவில்லை. என் தந்தை பல வருஷங்களாகத் தம் மனத்தில் மீளாத் துயரத்தைப் புதைத்து வைத்துக்கொண்டு வாழ்ந்தார் என்பதைத் தங்கள் பேச்சிலிருந்து அறிகிறேன். என்னைப் பொறுத்த வரை அவரைப்பற்றி நான் இங்கு வரும்வரை ஏதும் அறியேன்'' என்று தடுமாற்றத்துடன் சொன்னாள் உமா.

''உங்கள் பெற்றோரிடையே எழுந்த மனஸ்தாபத்தையும் தொடர்ந்து ஏற்பட்ட பிரிவையும் பற்றித்தான் சொல்கிறேன். பண்ணையார் குடும்பத்துடன் நெருங்கிப் பழக சந்தர்ப்பம் என் தமையன் ஒருவருக்குத்தான் இருந்தது. அவர் ஒருவர்தான் மனஸ்தாபத்தின் காரணத்தை உண்மையாக அறிந்தவர்'' என்று கூறிவிட்டு நிறுத்தினாள்.

உள்ளத்திலே கொந்தளித்த உணர்ச்சிப் பெருக்கில் உமாவுக்குத் தன் துடிக்கும் இருதயம் வாயினின்று வெளி வந்து குதித்துவிட்டதுபோல் பிரமை ஏற்பட்டது. மரணதண்டனையை எதிர்நோக்கி நிற்கும் குற்றவாளிபோல் அவள் ஷண்பகத்தின் வாயையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''தலைவிதிப் பயன் என்பதைத் தவிர நான் அவர்கள் இருவர்மீதும் குற்றம் சொல்ல மாட்டேன். உங்கள் தாயார் சுபாவத்திலே மிகவும் வெகுளி. கள்ளங் கபடமற்றவர். நீங்கள் சிறு குழந்தையாக இருக்கும்போது அடிக்கடி உங்களைத் தூக்கிக்கொண்டு எங்கள் வீட்டிற்கு வருவது வழக்கம். 'ஷண்பகம்! என் மகளை என் ரங்கதுரைக்குத் தான் கட்டிக் கொடுக்கப் போகிறேன்' என்று ஆசையோடு சொல்வார்கள். 'நாம் எப்படித் தீர்மானிக்க முடியும்? அவர்கள் காலத்தில் தங்கள் வாழ்க்கைத் துணைவர்களை மணமக்கள் தாங்களே தேடிக்கொள்வது என்ற பழக்கம் ஏற்பட்டாலும் ஏற்பட்டுவிடும். நம் காலம்போல் பெற்றோர் தான் குழந்தைகளுக்கு வாழ்க்கைத் துணைவர்களைத் தேடித் திருமணம் செய்வது என்பது அப்போது பழக்கத்தில் இருக்காது போய்விட்டால்' என்று நான் பதிலுக்குக் கேலியாகச் சொல்வது வழக்கம். 'செக்கச் செவேலென்று ராஜாபோல் இருக்கிறானே ரங்கதுரை. புத்திசாலியாகவும் காணப்படுகிறான். இவனைக் கட்டிக் கொள்ளக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே. நிச்சயமாக இவனுக்குத்தான் என் பெண்ணைக் கொடுக்கப் போகிறேன்' என்று மிகவும் ஆசையுடன் சொல்வார்.

''ரங்கதுரை மீதும் என்மீதும் அவருக்கு ரொம்பவும் பிரியம்.



''எத்தனையோ அந்நியோன்யமாகத்தான் வாழ்ந்தார்கள். பாழும் தலைவிதி அவர்களைப் பிரித்து வைத்து வேடிக்கை பார்த்துவிட்டது. பண்ணையார் மீதும் நான் குறை சொல்லமாட்டேன். மொத்தத்தில் புருஷர்கள் எல்லோருமே அப்படித்தான் அந்த சந்தர்ப்பத்தில் நடந்து கொள்வார்கள். இல்வாழ்க்கையில் ஒரு பெண் எந்தவிதமான தவறு செய்தாலும் பரவாயில்லை. ஆனால் கணவன் தன் நடத்தையைப் பற்றிச் சந்தேகிக்கும்படி துளியும் இடம் கொடுக்கக் கூடாது. உங்கள் தாயாரின் வெகுளித்தன்மையும், கபடமற்ற சுபாவமுமே அவரது வாழ்க்கைக்கு எமனாக வந்து சேர்ந்தன. முன்பே உங்களிடம் நான் கூறியிருக்கிறேன் அல்லவா. டாக்டர் குருமூர்த்தி மிகவும் பொல்லாதவர், நடத்தையில் பிசகினவர் என்று!

''உங்கள் தாயார் பார்ப்பதற்கு மிகவும் லட்சணமாக இருப்பார்கள். மேலும் இளம் வயது- அந்தச் சண்டாளன் குருமூர்த்திக்கு பண்ணையார் மனைவிமீது ஒரு கண். குடும்ப வைத்தியன் என்று அந்தப் பாவி பண்ணைக்குள் காலை வைத்ததுமே எல்லோருக்கும் சனீச்வரன் பிடித்துக்கொண்டு விட்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

''வைத்தியரது வஞ்சனையை அறியாது வைதேகியம்மாள் அவருடன் சிரித்துப் பேசுவது வழக்கம். அவனும் வைத்தியம் செய்வதாகச் சொல்லிக்கொண்டு நேரமில்லாத நேரமெல்லாம் பண்ணைக்கு வருவது வழக்கமாக இருந்தது. என்னிடம் தவறாக நடந்ததிலிருந்து குருமூர்த்திமீது அண்ணா மிகவும் கோபமாக இருந்தார். பண்ணைக்கு அவன் வரும்போதெல்லாம் மிகவும் கவனமாக அவனைக் கண்காணித்துக் கொண்டுதான் இருந்தார். வைத்தியர் பண்ணையில் பெண்களிடம் நெருங்கிப் பழகுவதைக் கண்டு அண்ணா அஞ்சினார். ஆனால் வெளியில் சொல்லவும் முடியாது, எஜமானிக்கு எடுத்து புத்தி போதிக்கவும்முடியாது திண்டாடிப்

போனார். தமது மனைவியிடம் மிகவும் உரிமை பாராட்டி வைத்தியர் நெருங்கிப் பழகியது பண்ணையாருக்குப் பிடிக்கவில்லை. எந்த ஆண் பிள்ளைக்குத்தான் பிடிக்கும்? நாளாவட்டத்தில் ஏகாம்பரம் அவர்களுக்கு சந்தேகம் ஏற்படும்படி சில சம்பவங்கள் நடந்தன. அவைகளைப்பற்றி விவரிக்கவும் மனம் கூசுகிறது. ஒரு சமயம் நீங்கள் அவைகளைக் கேட்டதும் என்மீது கோபம் கொண்டாலும் கொள்வீர்கள்'' என்று மூச்சுவிடாது இடையிடையே கண்ணீர் விட்டும், பெருமூச்சுவிட்டும் பேசி நிறுத்தினாள்.

தன் தாயைப்பற்றி இதுவரை அவள் கேட்டறியாத இந்தப் புதிய கதை உமாவின் நெஞ்சத்தைப் பதறச் செய்தது. அவமானத்தினாலும், ஆத்திரத்தினாலும் அவள் உடல் அனலாகத் தகித்தது. எனினும் ஷண்பகவல்லி கூறவிருந்த முக்கியமான அந்தப் பாகத்தை அவள் கேட்டறிய விரும்பினாள். எனவே, திடீரென்று கதையை நடுவில் அவள் நிறுத்தியதைக் கண்டதும் மன அயர்ச்சி தாளாது உமா, ''மேலே சொல்லுங்கள். உண்மையைக் கேட்க நான் ஏன் தயங்க வேண்டும்? உங்களிடம் ஏன் கோபப்பட வேண்டும்? தாராளமாக நடந்ததைச் சொல்லுங்கள்'' என்று நிதானமான குரலில் கேட்டாள்.

''ஒரு சமயம் பண்ணையார் வெளியூருக்குப் போயிருந் தார். வர சில நாட்கள் செல்லும் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்தார்கள். வேண்டுமென்றே ஊருக்குப் போன அடுத்த தினமே பண்ணையார், இரவு பத்துமணி சுமாருக்கு திடுதிப்பென்று திரும்பி வந்து விட்டார். அதே சமயம் எஜமானி அம்மாள் வீட்டில் இருக்கவில்லை. அகால வேளையில் தன்னந் தனியாக அவர்கள் வைத்தியர் வீட்டிற்குச் சென்றிருந்தார்கள். குருமூர்த்தி, மனைவி மக்களை இழந்து அது சமயம் தனியாக கடைத் தெருக்கோடியிலிருந்த ஒரு வீட்டில் வசித்துக் கொண்டிருந்தார். எஜமானி அம்மாள் எங்கே போயிருக்கிறார்கள் என்பது வீட்டிலிருந்த வேலைக்காரர் ஒருவருக்குமே



தெரியாதிருந்தது. ஆனால் பண்ணையாருக்கு மட்டும் அவர்கள் வைத்தியர் வீட்டுக்குத்தான் போயிருக்க வேண்டுமென்ற சந்தேகம். உடனே கால் நடையாகவே அவர் தனியாக இருட்டில் ஓட்டமும் நடையுமாக வைத்தியர் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினார். வாயிற்கதவை அடைத்துக்கொண்டு அகால வேளையில் அந்நிய புருஷனுடன் பேசிப் பொழுதைக் கழிப்பதைக் கண்கூடாகக் கண்ட எந்த கணவனுக்குத்தான் சந்தேகம் ஏற்படாது?

''வைதேகியம்மாள் கூறிய காரணங்களையோ, வைத்தியர் சொன்ன சமாதானத்தையோ பண்ணையார் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அன்று தினமே குருமூர்த்தியைப் பண்ணை வேலையிலிருந்து நீக்கிவிட்டார். மனைவிக்கும் புருஷனுக்கும் இடையே பேச்சுவார்த்தை நின்றுவிட்டது. முடிவில் கைக்குழந்தையுடன் வைதேகியம்மாள் வீட்டை விட்டு வெளியேறி விட்டார்கள். உறவினர்கள் எவ்வளவோ சொல்லியும் பண்ணையார் மறுமணம் செய்து கொள்ளவேயில்லை. அதற்குப்பின் அவர் யாரிடமும் கலகலவென்று சிரித்து கூடப் பேசியதில்லை என்று அண்ணா சொல்கிறார்'' என்று முடித்துவிட்டு, உமாவின் முகத்தைப் பார்த்தாள். தன் தாயைப்பற்றிய இந்தப் பழிச்சொல்லை உமாவினால் தாள முடியவில்லை. எவ்வளவு கட்டுப்படுத்தியும் அவமானத்தைப் பொறுக்க முடியாது அவள் கண்கள் கலங்கிவிட்டன.

''மன்னித்துக் கொள்ளுங்கள். எனக்குத் தலையைச் சுற்றிக்கொண்டு வருகிறது. நான் என் அறைக்குச் சென்று கொஞ்சம் ஓய்வாகப் படுத்திருக்க விரும்புகிறேன்'' என்று படபடவென்று பதில் அளித்துவிட்டு உமா மாடியறைக்கு ஓட்டமாக ஓடினாள். தன் படுக்கைமீது போய்த் தொப்பென்று விழுந்தாள். கட்டுப்படுத்த முடியாத துயரத்தில் ஓவென்று வாய்விட்டு அழலானாள்.

ஷண்பகவல்லி பண்ணையார் மகளிடம் விடைபெற்றுக் கொண்டு போவதற்குச் சிறிது நேரம் கீழே காத்திருந்து பார்த்தாள். பிறகு நேரம் கழிவதைக் கண்ணுற்று, வந்த வழியே தானே சென்று விட்டாள். உமாவின் மனம் நோகப் பேசி விட்டோமே என்ற வருத்தமோ, பயமோ அவளிடம் சிறிதும் காணப்பட வில்லை. அதற்குப் பதில் மகிழ்ச்சி நிறைந்த அழகிய புன்னகையொன்று அவளது பவழ இதழ்களில் நடம் புரிந்து கொண்டிருந்தது.

## 15

**மோ**கனாம்பாளினால் தனது ஸ்தூல சரீரத்தைத் தூக்கிக் கொண்டு சட்டென்று குனிந்து நிமிர்ந்து வேலை செய்ய இயலவில்லை. மேலும் அவள் சமையல் அறைக்குள் சென்று நெருப்பு அருகில் நின்று எவ்வளவோ வருஷங்கள் சென்று விட்டிருந்தன. வேலைக்காரி வேலம்மாள் திடீரென்று வராது நின்று விட்டாள். சம்பளப் பாக்கியை வசூலிக்கவாவது அடுத்த நாள் வரக்கூடும் என்று மோகனாம்பாள் அவளை ஒவ்வொரு தினமும் எதிர்பார்த்து ஏமாந்து போனாள். இனி சம்பளம் வராவிட்டாலும் சரி, இந்த வீட்டில் மறுபடி காலை எடுத்து வைப்பதில்லை' என்ற வைராக்கியத்தில் வேலைக்காரப் பெண் மோகனாம்பாள் வீட்டு வேலைக்கு முழுக்குப் போட்டு விட்டுப் போய் விட்டிருந்தாள்.

சமையலுக்கு ஆள் இல்லையென்றதும் முதல் சில நாட்கள் அந்தக் குடும்பத்தினர் காலைக் காப்பியிலிருந்து இரவு போஜனம்வரை அருகில் இருந்த ஹோட்டலிலிருந்து தருவித்துக் கொண்டனர். ஆனால் தொடர்ந்து குடும்பத்தை அவ்வாறு நடத்துவது என்பது தங்களது தற்காலப் பொருளாதார நிலைக்குக் கட்டி வராது என்று உணர்ந்த மோகனாம்பாள்



சுயம்பாகத்தில் ஈடுபடத் தொடங்கி விட்டாள். ஆனால், பெண் சுலோச்சனா அருகில் இருந்து சாமான்களை எடுத்துக் கொடுக்க, அடுப்பருகில் காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்த வாக்கில் முதலில் சில நாட்கள் எப்படியோ சமையலை ஒரு வழியாக ஓட்டிவிட்டிருந்தாள்.

ஆனால் அன்று காலை அவள் அப்படிச் செய்ய முடியவில்லை. அழகர்நத்தத்திலிருந்து பண்ணை மானேஜர் மகன் வேறு விருந்தாளியாக வந்துவிட்டிருந்தான். அவர்கள் வீட்டிற்கு அப்போதைக்கப்போது வெளி விவகாரங்களைத் துப்பறிந்து வந்து துலக்கிக் கொடுக்கும் துரைசாமி வேறு பகல் சாப்பாட்டிற்கு வந்து விடுவதாக முன் எச்சரிக்கை விடுத்துவிட்டு வெளியே சென்றிருந்தான். கையில் அதிகப் பணப் புழக்கம் இல்லாதபோது விருந்தாளிகள் வந்து குவிகின்றனரே என்ற சினம் ஒரு புறமும், இடுப்பு ஒடியக் குனிந்து நிமிர்ந்து வயதான காலத்தில் அடுப்பருகில் அனலில் கிடந்து வாட நேரிட்டதே என்ற ஆத்திரம் ஒரு புறமும் கொந்தளித்துக் கொண்டிருந்த மோகனாம்பாள், எதிரே குதிர் போல் வந்து நின்ற மகள்மீது எரிந்து விழுந்தாள். ''அரிசியைக் களைஞ்சு எடுத்துவா இத்தனை நாழியா- நல்ல பெண்ணடி நீ! ஒன்றுக்கும் துப்பு இல்லாது என் கழுத்திலே கருங்கல்போல பாரமா ஏறி உட்கார்ந்திருக்கிறே! நம்மோட மட்டும் என்றிருந்தால் ஒரு சோற்றைப் பொங்கி ஒரு துவையலை அரைத்துப் போட்டு விட்டு எழுந்து விட்டிருப் பேன். அந்தப் பாவிப் பயல் மானேஜர் மகனுக்கு நாக்கு நீளம். நாலு வகைப் பதார்த்தங்கள் இல்லாவிட்டால் சோறு தொண்டையில் இறங்காது. துரைசாமி பெரிய சாப்பாட்டு ராமன். கூடையில் வச்சிருந்த கத்தரிக்காயைக் கண்டதும் அவன் நாக்கில் தண்ணி ஊறி விட்டது. 'எண்ணெய்க் கத்தரிக்காய் கறி செய்து வையுங்கள்! சீக்கிரம் சாப்பிட வந்து விடுகிறேன்' என்று சொந்த வீட்டில் ஏவுவது போல் எனக்கு உத்தரவு போட்டுவிட்டு போகிறான் அந்தத் தடியன்! இருக்கிறபடி நான் இருந்தால் இந்த

உதவாக்கரைகள் என் வீட்டுக்குள் காலை வைக்கவும் நடுநடுங்க மாட்டான்களா? என் தலைவிதி, உன்னை மலைபோல் நம்பி ஆயிரம் ஆயிரமாகச் சம்பாதிச்சு வச்சிருந்த காசை அள்ளி அள்ளிச் செலவிட்டு விட்டு இப்போ திண்டாடுகிறேன்!'' எனப் படபடவென்று பொரிந்து தள்ளினாள். இவ்வளவையும் கேட்டு விட்டுத் தன் பெண் சுலோசனா கொஞ்சமும் உணர்வின்றி மரக்கட்டை போல் நிற்பதைக் கண்டதும் தாயாருக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது.

''அடி மக்கு! ஏன் அப்படிச் சிலையா நிக்கறே? அதைக் கொடு'' என்று அதட்டிவிட்டு மகள் கரத்திலிருந்த பாத்திரத்தை வாங்கி அரிசியை எடுத்து உலையில் இட்டாள். ஆனால் அடுப்பருகே சென்று பழக்கமில்லா அவளது மென்மையான சரீரம் புண்ணாக எரிந்தது. வியர்வை ஆறாக உடம்பு முழுவதும் வழிந்தோடியது. ''அந்த விசிறியை எடு! காது செவிடா என்ன? மூஞ்சியைத் தூக்கிக்கிட்டு நிக்க இப்போ நான் உன்னை என்ன சொல்லி விட்டேன்? இந்தக் கதையெல்லாம் என்கிட்ட வச்சுக்க வாணாம்'' என்று இரைந்து கூப்பாடு போட்டாள்.

''என்ன அண்ணி! ரொம்ப கோபமாக இருக்கிறாய் போல இருக்குதே! அதுக்கு என்ன தெரியும்? சமையல் கட்டை எட்டிக்கூடப் பார்க்காது சொகுசா வளர்ந்த குழந்தை'' என்று மிகவும் உரிமையோடு பரிந்து பேசிய வண்ணம் தளுக்கு நடையில் வற்றிச் செத்த காய்ந்த குச்சி போன்ற தோற்றத்தில் ஒரு வாலிபன் உள்ளே வந்தான். அவனுடன் கூட மருக்கொழுந்து அத்தரின் மனம் மூக்கைத் துளைக்கும் அளவிற்கு உள்ளே வேகமாகப் பரவி ஓடி வந்தது. இருபுறமும் பம்மென்று உயரப் பரக்க வாரி அழகு செய்து கொண்டிருந்த தனது சுருண்ட கிராப்புத் தலையை நாசூக்காகத் தடவியபடி வெற்றிலைக் காவியேறிய முப்பத்திரண்டு பற்களும் தெரிய நகைத்தபடி அவன் மோகனாம்பாள் அருகில் வந்தான். பட்டுக்கரை வேஷ்டிமீது அணிந்திருந்த மல் ஜிப்பாவின்



பைக்குள் கைவிட்டு, கைகுட்டை ஒன்றை எடுத்தான். வேண்டாத பாத்திரங்களைப் போட்டு மூடி வைத்திருந்த கள்ளிப் பெட்டிமீது அதை விரித்துவிட்டு மிகவும் பத்திரமாக அதன்மீது அமர்ந்து கொண்டான்.

''என்ன அண்ணி! சமையல் அப்படி ஜரூராக நடக்கக் காணோமே! வெளியில் போய்ச் சுத்தி வந்ததும் எனக்கு ஒரே பசியாக இருக்கே! கொஞ்சம் சூடாக 'ஸ்ட்ராங்' காப்பி கிடைக்குமா!'' என்று உல்லாசமாகக் கேட்டுவிட்டு, சுலோசனா பக்கம் திரும்பி, ''தங்கச்சி! அந்த பிஸ்கோத்து பாட்டிலை எடு, எப்படியிருக்குது பார்க்கலாம்!'' என்று உத்தரவிட்டான். தாயின் முகத்தை குறிப்பாகப் பார்த்து விட்டுத் திருதிருவென்று விழித்த சுலோசனா, எதிரே அலமாரித்தட்டில் வைத்திருந்த ஒரு பெரிய கண்ணாடி ஜாடியை எடுத்து அவன் அருகில் வைத்தாள்.

''அண்ணி! நீங்க கேட்ட விவரம் எல்லாத்தையும் நொடிப்பொழுதில் விசாரித்துக் கொண்டு வந்துவிட்டேன்!'' என்று கொண்டு வந்திருந்த விஷயத்தின் ஒரு கோடியை எடுத்து வெளியில் போட்டான் துரைசாமி. ஜாடிக்குள் கையை விட்டு வேண்டிய அளவு பிஸ்கோத்துக்களை வாரி அருகில் வைத்துக்கொண்டு ஒவ்வொன்றையும் விரைவாக இரண்டாக ஒடித்து வாயில் போட்டுத் தின்று முடிப்பதில் ஈடுபட்டு விட்டான்.

அவசரத்திற்கு இருக்கட்டுமே என்று முதல் நாள் தான் வாங்கி வைத்திருந்த பிஸ்கோத்துகளை இவ்வாறு அவன் அரை நொடியில் அரைத்துத் தள்ளுவதைக் கண்டதும் மோகனாம் பாளுக்கு ஆத்திரம் தாங்க முடியாது குமுறிக்கொண்டு வந்தது. எனினும், அதை வெளியில் காட்டிக் கொள்ளாது, ''தம்பி! சாப்பாட்டு நேரம்! கண்டதைத் தின்னு ஏன் பசியை கெடுத்துக்கிறே?'' என்று கேட்டு விட்டுச் சிரித்தாள். தன் உடல் பாரத்தை பொருட்படுத்தாது எழுந்து வந்து கண்ணாடி ஜாடியை

மூடி அலமாரிக்குள் எடுத்து வைத்தாள். ''அடி! சுலோ! அண்ணனுக்குக் கொஞ்சம் தண்ணி எடுத்துக்கொடு. பாவம் அவசரத்தில் விக்கல் வந்து விட்டது'' என்று உத்தரவிட்டாள்.

ஒரு வாய் தண்ணீரை விழுங்கித் தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்ட துரைசாமி, மீதமிருந்த பிஸ்கோத்துக்களை ஒன்றுவிடாது முதலில் தின்று முடித்தான். ''அண்ணி! நான் உங்கிட்ட விஷயத்தைச் சொல்லி விட்டு உடனே திரும்பியாக வேணும். மேலத்தெரு ஜானகி வீட்டிலே இன்னிக்கு மத்தியானம் கட்டாயம் சாப்பாட்டுக்கு வரணும்னு ரொம்ப இம்சைப் படுத்தினாங்க. சரின்னு ஒப்புக் கொண்டு விட்டேன். அதனால் எனக்காக வீணா நீங்க சமையல் அதிகம் செய்ய வேணாம்'' என்று சூள் கொட்டினான்.

''சாப்பாட்டுக்குத் தங்கிவிட்டுப் பகல் டிபனையும் முடித்துக்கொண்டு போகாது இப்போதே ஒழிகிறானே'' என்ற அளவில் மோகனாம்பாளுக்கு உள்ளூரத் திருப்திதான். எனினும் உவப்பாக, ''என்ன தம்பி! உனக்குன்னு தனியாக என்ன பஞ்சபக்ஷ பரமான்னம் செய்துவிட்டேன்! ஏதோ நாங்க சாப்பிடுகிற கஞ்சியில் உனக்கும் ஒரு லோட்டா கொடுக்கலாம்னு நினைச்சேன். சரி! அது கிடக்கட்டும் ஜானகி வீட்டில் என்ன விசேஷம்!'' என்று ஆவலுடன் வினவினாள்.

ஊர் வம்பையெல்லாம் அவ்வாறு சுலபமாக அவிழ்த்து விட்டு விட்டால் பிறகு துரைசாமி எப்படிப் பிழைக்க முடியும்? எனவே அவள் ஆவலைத் தூண்டிவிட்டு விட்டுத் தன் தொண்டையைப் பலமாகக் கனைத்துக் கொண்டான். ''காப்பி கேட்டேனே! எங்கே, சூடா சீக்கிரம் கொண்டு வாம்மா!'' என்று பகட்டாகச் சிரித்தபடி சுலோசனா பக்கம் திரும்பிப் பார்த்தான்.

''அகால வேளையிலே காப்பிக்கு எங்கே போவோம். தம்பி!'' என்று தேன் ஒழுக இனிமையாகக் கேட்ட மோகனாம்பாள் தனக்குள் எழுந்த கோபத்தைச் சாமர்த்தியமாக அடக்கிக்



கொண்டு, மேடையருகில் சென்று, விரைவாக ஒரு டம்ளரில் கொஞ்சம் பாலை விட்டு சர்க்கரையைப் போட்டுக் கலக்கினாள். துரைசாமி வேறு பக்கம் திரும்பியிருந்த சமயம் பார்த்து பானையில் கொதித்துக் கொண்டிருந்த வெந்நீரில் இரண்டு கரண்டி முகர்ந்து தாராளமாக பாலில் விட்டுக் கலக்கிப் பரிவுடன் எடுத்துக்கொண்டு வந்தாள். இந்தப் பாலையாவது சாப்பிடு. தாகம் தீரட்டும். பாவம் நல்ல வெய்யில்! ஊரைச் சுத்திவிட்டுக் களைப்பா வந்திருக்கிறே'' என்று உபசரித்தாள்.

துரைசாமி அதை ஒரே மூச்சில், கடகடவென்று குடித்து முடித்துவிட்டுப் பாத்திரத்தைக் கீழே வைத்தான். ''அண்ணி அவசரமாக டவுன்வரை வேறே போக வேண்டியிருக்கிறது. உங்க காரியமாகக் காலையிலே போன இடத்திலே அஞ்சு ரூபா வேஸ்டாயிடுத்து. அதனால் ஒரு பத்து ரூபா இருந்தா கை மாத்தா கொடுங்க'' என்று அதிகாரமான குரலில் அதட்டிக் கேட்டான்.

பணத்தை எடுத்துக்கொடுக்காத வரையில் துரைசாமி வாயிலிருந்து விஷயங்கள் ஏதும் வெளிவராது என்பதை மோகனாம்பாள் அறிவாள். எனவே வேறு வழியின்றி இடுப்பில் சொருகியிருந்த சுருக்குப் பையைக் கையில் எடுத்தாள். மெல்லத் துழாவி சில்லறையாகவும் நோட்டாகவும் ஐந்து ரூபாய்களை எடுத்து, ''தம்பி! கையில் இதுதான் இருக்கு. இன்னொரு சமயம் மிச்சத்தைக் கொடுக்கிறேன்'' என்று கூறிவிட்டு அரை மனதாகப் பணத்தை அவனிடம் அளித்தாள். துரைசாமி அலக்ஷியமாக அதைத் தனது ஜிப்பா பைக்குள் போட்டுக் கொண்டான்.

''ஜானகி மகள் சுந்தரவல்லிக்கு இப்போ நல்ல யோக காலம் அண்ணி! பட்டணத்திலிருந்து ஒரு பெரிய பட முதலாளி அந்தப் பெண்ணை ஒரு பெரிய படத்திற்கு 'புக்' செய்திருக்கிறான். இத்தனைக்கும் அது பார்க்கிறதுக்கு அப்படிப் பிரமாதமான அழகிகூட இல்லை. நோஞ்சலா, உசிர் போயிடும்

போல ஒடிஞ்சு விழுகிறாப்பல இருக்கும். இதிலெல்லாம் அதிர்ஷ்டம் என்று ஒன்று தனியா இருக்கு. அந்த முதலாளிக்குத்தான் இன்னிக்கு அவங்க வீட்டிலே விருந்தாம். என்னையும்கூட வந்து கலந்துக்கச் சொன்னாங்க ஜானகியம்மா. பெரிய முதலாளிகளை இது மூலமா பரிச்சயம் செய்து கொண்டா எனக்கும் அந்தப் படத்திலே ஒரு 'சான்ஸ்' கிடைச்சாக்க... ஹி...ஹி...'' என்று முடிக்காது இளித்தான்.

''உன் அவலக்ஷண முகத்தைப் படத்திலே காட்ட ஆசை வேறே பார்க்கிறியா!'' என்று மோகனாம்பாள் தனக்குள் எண்ணி வெகுண்டாள். ஜானகியம்மாளின் மகளுக்கு வந்த யோகத்தை அறிந்ததும் அவள் வயிறு அனலாகப் பற்றி எரிந்தது. எனினும், தன் உணர்ச்சிகளை வெளியே காட்டிக்கொள்ளாது லேசாகச் சிரித்தாள். ''தம்பி! நம்ப சுலோவுக்குப் படம், நாடகம் இதெல்லாம் இனிமேலே வேண்டியதேயில்லை. மானேஜர் மகன் இந்தப் பெண்ணைத்தான் கட்டிப்பேன்னு ஒரே காலில் நிக்கிறார். அவர் குணம் நடவடிக்கை எல்லாம் விவரமா தெரிஞ்சுக்காம குழந்தையைக் கட்டிக் கொடுக்க எனக்கு மனமில்லை. எனக்கு இது ஒரே ஒரு பொண்ணு, பணத்துக்கு ஆசைப்பட்டுப் பாழுங்கிணத்திலே தள்ளிவிட முடியுமா?'' என்று தளுக்காகக் கேட்டாள்.

துரைசாமி பதிலுக்கு பலமாகச் சிரித்தான். ''நல்லாச் சொன்னீங்க, அண்ணி! நீங்க நினைக்கிறது வாஸ்தவம். காலாகாலத்திலே ஒரு கண்ணியமான இடத்திலே அதைக் கட்டிக் கொடுத்துடலாம்னு நீங்க கேட்ட விஷயங்களைப் பத்தித் துப்புத் துலக்கி விட்டேன். மானேஜர் மகன் நல்ல சொத்துக்காரன்தான். வீடு வாசல் ரொக்கம் எல்லாம் ஒரு அஞ்சு லக்ஷத்திற்குத் தேறும்னு கேள்வி. ஆனால் ஆள் கொஞ்சம், உல்லாசப் பேர்வழிபோலத் தோணுது. கீழத்தெருக்கோடியிலே ஒரு குடும்பம் புதுசா அஞ்சாம் நம்பரில் குடி வந்திருக்கிறாங்க. அந்த வீட்டில் மூணு பெண்கள் இருக்கிறாங்க. கடைசிப் பெண்



மேலே மானேஜர் மகன் கண்ணாயிருக்கிறார்னு ஒரு பேச்சு காதிலே விழுந்தது'' என்றான்.

''காலாகாலத்திலே கல்யாணமாகாவிட்டால் அப்படித்தான் இல்லாததும் பொல்லாததும் ஊரில் பேசுவாங்க. அதை விட்டுத் தள்ளு. அந்த உமாமகேஸ்வரியைப் பத்தின சமாசாரம் என்ன? அதை முதல்லே சொல்லு'' என்று ஆவலுடன் கேட்டாள் மோகனாம்பாள்.

''ஓகோ! அதைத்தானே முக்கியமா விசாரிக்கப் போனேன்? உமாமகேஸ்வரி என்பவள், காலம் சென்ற அழகர்நத்தம் பண்ணை ஏகாம்பரத்தின் புத்திரி. பட்டணத்திலே தன் தாயோடு இதுவரை இருந்தாளாம். பண்ணையார் சாகும் சமயம் வந்தாளாம். தகப்பன் தன் மகளுக்கு அவ்வளவு சொத்துக்களையும் எழுதிவைத்து விட்டுப் போய்விட்டான். வயது இருபத்துமூணு, அல்லது இருபத்து நாலுக்குள் இருக்கும். பார்க்க ஜிலுஜிலுவென்று அத்தனை அழகாக இருக்கிறாள். ஏகாம்பரமும், பண்ணை மானேஜர் வரதராஜனும் ரொம்ப சிநேகிதர்களாம். சாகும்போது தன் பெண்ணை அவர் மகனுக்குக் கட்டிக்கொள்ள வேண்டும்னு வாக்கு வாங்கிக் கொண்டு செத்தாராம் பண்ணையார். அதனாலே விரைவாக உமாவைத் தம் மகனுக்குக் கட்டி வைக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறாராம் மானேஜர். ஆனால் மகன் மனசைப்பற்றி அறிஞ்சவங்க நீங்கதான். அதனாலே உமாமகேஸ்வரியை அவர் கட்டிக் கொள்ளப் போகிறாரா, அல்லது சுலோச்சனாவைக் கட்டிக் கொள்ளப் போகிறாரா என்பது உங்களுக்குத்தான் தெரியும். அதைப்பத்தி அதிகம் சொல்ல ஒண்ணுமில்லை'' என்று கூறிவிட்டுக் கலகலவென்று சிரித்தான்.

உண்மையில் துரைசாமி உமாவைப்பற்றி இரண்டொரு விஷயங்கள்தான் அன்று காலை அறிந்து கொண்டிருந்தான். பட்டணத்திலிருந்து வந்து தன் தந்தையின் அபாரமான

சொத்துக்களை ஆண்டு கொண்டிருக்கிறாள் என்பதற்குமேல் அவனுக்கு அதிகம் செய்தி கிடைக்கவில்லை. ஊருக்குப் புதிதாக வந்துள்ள பெண்ணைப்பற்றி அறிய மோகனாம்பாள் ஆவல்படுகிறாள் என்றால் அதில் விஷயம் ஏதோ இருக்க வேண்டும் என்று அவனது ஊகம் உணர்த்தியது. மற்றச் செய்திகளைத் தனது அபாரமான கற்பனையின் உதவியால் புனைந்துகொண்டு அளந்துவிட்டான். மோகனாம்பாளை அடுத்தமுறை சந்திக்கும்போது அப்படி அவனது பொய்க் கதைகள் ஏதேனும் வெளியாகி விட்டிருந்தால் வேறு வகையில் சமாளித்துக் கொள்ளலாம் என்ற தைரியம் அவனுக்கு. "சரி! நான் வரட்டுமா, அண்ணி!" என்று பற்களைக் காட்டி ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு எழுந்தான். கைக்குட்டையைத் தட்டி மடித்துப் பையில் திணித்துக் கை நிறைய வாசனைப் பாக்கை அள்ளி வாயில் போட்டுக் கொண்டான். "வரேன்!" என்று குழறிவிட்டு, போதிய அளவு வெற்றிலைகளைக் கத்தையாக அள்ளி எடுத்துக் கொண்டு வேகமாக வெளியேறினான்.

இதுவரை கட்டுப்படுத்திக் கொண்டிருந்த ஆத்திரத்தை இனியும் அடக்க முடியாது வெளியே விட்டாள் மோகனாம்பாள். "சரி, சரி! தரித்திரம் பிடிச்சாப்போல தலையைச் சொறிந்து கொண்டு ஏன் நிக்கிறே? ஜானகி மகள் அந்த சோனிக்குட்டிக்கு இருக்கிற சாமர்த்தியம்கூட உனக்கில்லை. வெண்டைக்காயை அறிஞ்சு வச்சுவிட்டு, மசாலாவை அரைச்சுக் கொடுத்துட்டு, போய் மூஞ்சியைக் கழுவிக் கொண்டு இரு. மானேஜர் மகன் சாப்பாட்டுக்கு வர நேரம் ஆயிடுச்சு. வந்ததும் இலை போடணும்னு அவன் இறக்கையைக் கட்டிக்கிட்டு பறப்பான். சாப்பாடு போட்டதும் உடனே அவன் வெளியே கிளம்பிவிடப் போகிறான். அதுக்கு முன்னாடி எப்படியாவது பேசி இன்னிக்கு உன் விஷயத்தை உண்டு இல்லையின்னு தெரிஞ்சுக்கோ. மசமசன்னு நின்னியோ, தெரியும் சேதி! குழந்தையின்னு பார்க்க மாட்டேன். கோபம் வந்தால், நான் எப்படிப்பட்டவள்னு



உனக்குத் தெரியும். தெரிஞ்சுதா, பெருமாள் மாடுபோல தலையை ஆட்ட வேண்டாம். காரியத்திலே கெட்டியாயிரு?" என்று கோபத்துடன் உபதேசித்தாள்.

வாயிற்கதவை யாரோ தள்ளித் திறக்கும் சப்தம் கேட்டதும் உரத்த குரலைத் தாழ்த்திக்கொண்டு, "அந்தப் பாவி அதுக்குள்ளே வந்து விட்டான்போல் இருக்கு. ஓடு, மூஞ்சியைக் கழுவிக்கொண்டு வா. எண்ணெய் வடியுது மூஞ்சியிலே" என்று பற்களைக் கடித்தாள்.

தாயின் உபதேசத்தைச் சிரமேற்கொண்ட மகள், தன் பெட்டியில் இருந்த ஆடைகளில் மிகவும் பகட்டான சேலையொன்றைத் தேர்ந்தெடுத்துத் தன்னை மிக்க நேர்த்தியாக அலங்கரித்துக் கொண்டாள்.

வெளியே சென்று சுற்றிவிட்டுக் களைப்பாக மிக்க பசியுடன் வந்திருந்த ரங்கதுரை, முற்றத்தில் இறங்கிக் கைகால்களைக் கழுவிக்கொண்டு தயாராக கூடத்து மேஜை அருகே வந்து உட்கார்ந்து கொண்டான். அடுப்பருகில் அமர்ந்தபடி தாயார் தட்டுகளில் உணவை எடுத்துக் கொடுக்க, மகள் அவைகளைச் சுமந்து கொண்டு வந்து இதமான குரலில் பேசி மிகவும் ஆசையுடன் தனது அன்பனுக்குப் பரிமாறினாள். சுவை மிகுந்த உணவை வயிறாரத் திருப்தியாக உண்டு முடித்த ரங்கதுரை நீண்டதொரு ஏப்பம் விட்டுக்கொண்டு எழுந்து கையைக் கழுவிக் கொண்டான். வெற்றிலையைச் சுருட்டிக் கொண்டு, காலில் செருப்புகளை திணித்தபடி அவன் வெளியே கிளம்புவதைக் கண்ணுற்ற சுலோசனா திகிலடைந்து போனாள்.

தாயார் சொன்னபடி விஷயத்தை ஒன்று அல்லது இரண்டு என்று அறிந்து கொள்ளாவிடில் தன் நிலைமை மோசமாகிவிடும் என்று அஞ்சி, "அத்தான், அதற்குள் கிளம்பி விட்டீர்களே! உட்காருங்கள்" என்று கெஞ்சியபடி அவன் கரத்தைப்பற்றி

அருகிலிருந்த ஆசனத்தில் வற்புறுத்தி அமரச் செய்தாள். மின்சார விசிறியைச் சுழல விட்டுவிட்டு, அருகில் வந்து ரங்கதுரை நெற்றியில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளைத் தன் புடவைத் தலைப்பால் துடைத்து விட்டாள்.

சுபாலத்தில் புத்திசாலித்தனம் குறைவான அவளால் அவனிடம் மிகவும் சாமர்த்தியமாகத் தன் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்ளத் தெரியவில்லை. எனவே மிகவும் வெளிப்படையாக "அத்தான், நீங்க எப்போ என்னைக் கல்யாணம் செய்துகொள்ளப் போறீங்கன்னு அம்மா தெரிஞ்சுகொள்ள ஆசைப்படுகிறாங்க. சும்மா இப்படியே நாள் தள்ளிக்கிட்டுப் போறதேன்னு அவங்களுக்குக் கவலையாக இருக்கு" என்றாள்.

வெளியே சுற்றிவிட்டு வந்து தங்குவதற்கு மிகவும் ஏற்ற இடமாக இருக்கிறது என்ற ஒரு காரணத்திற்காகவே அவன் மோகனாம்பாள் வீட்டிற்கு விஜயம் செய்துகொண்டிருந்தான். ஆரம்பத்தில் சுலோசனாமீது ஏற்பட்டிருந்த அன்பும் ஆசையும் அவனுக்கு தற்சமயம் குறைந்து விட்டிருந்தன. எனவே மோகனாம்பாள் தன்னை வருங்கால மருமகனாக வரித்துக்கொள்ள திட்டமிட்டிருப்பதை அறிந்ததும் அவன் திடுக்கிட்டுப் போனான். கொஞ்ச நாட்கள் நெருங்கிப் பழகியதிலிருந்து அவனுக்கு சுலோசனாவின் தாயின் குணம் நன்கு தெரிய வந்திருந்தது. தான் ஏமாற்றப்பட்டதை அறிந்தால் அவள் ஆளை உயிருடன் வைக்கமாட்டாள். எந்த விதமான பஞ்சமா பாதகத்திற்கும் அஞ்சாத உள்ளம் படைத்தவள் என்ற உண்மையை அவன் அறிவான். எனவே, பகிரங்கமாக மோகனாம்பாளை எதிர்த்து உதறி விட்டுவிட அவனுக்குக் கொஞ்சம் அச்சமாக இருந்தது. மேலும் சில காரணங்கள் பற்றி சுலோசனாவின் உதவியும் அவனுக்கு அந்த சமயம் தேவையாக இருந்தது. எனவே, அவன் சாமர்த்தியமாக மிகவும் அன்பான



குரலில், "சுலோ கண்ணு! இப்படி அருகில் வந்து உட்கார், அம்மா. உன்னைத் தவிர வேறு யாரையும் நான் திருமணம் செய்து கொள்வதில்லை என்று உன்னைப் பார்த்த முதல்நாளே தீர்மானித்து விட்டேன். இதில் உனக்கு என் சந்தேகம்? ஆனால், ஒன்று நீ என் சொல்படி நடப்பதாக இருந்தால்..." என்று கூறிவிட்டு, முடிக்காது நிறுத்தினான்.

ஆவலுடன் அவன் வாயையே பார்த்துக் கொண்டிருந்த சுலோசனா அருகில் நெருங்கி அவன் தோள் மீது முகத்தைப் பதித்துக் கொண்டு சாய்ந்து கொண்டாள். அழகும் அந்தஸ்தும் உள்ள அந்த வாலிபன் தன்னைத் தவிர பிற பெண்ணைக் கண்ணாலும் ஏறெடுத்துப் பார்க்கமாட்டான் என்றதை அவன் வாயாலேயே கேட்டதும், அவள் உள்ளம் ஆனந்தத்தில் மூழ்கி விட்டது. "அத்தான்! நீங்கள் என்னை நெருப்பிலே குதிக்கச் சொன்னாலும் நான் உங்க உத்தரவுக்கு எதிராப் பேச மாட்டேன். என்ன செய்யணும், சொல்லுங்க" என்றாள் கொஞ்சும் குரலில்.

"அத்தனை பெரிய தியாகம் வேண்டாம். கண்மணி சுலோ! நீ எனக்கு செய்ய வேண்டியது ஒரு சிறு உதவிதான். என் தந்தை, உறவினர்கள் முதலானவர்கள் எனக்கு வேறு இடத்தில் பெண் பார்க்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். எனக்கு அந்தப் பெண்ணைக் கட்டிக் கொள்ளப் பிரியம் இல்லை. ஆனால், சம்மதிப்பது போல் பாசாங்கு செய்து கொண்டிருக்கிறேன். முடிவில் உன்னைத்தான் கட்டிக் கொள்ளப் போகிறேன். நான் சொல்கிறது உன் வரைக்கும் ரகஸ்யமாக இருக்கட்டும். உன் தாயாருக்குக்கூடத் தெரிய வேண்டாம்" என்று சொல்லிவிட்டு, மிகவும் அருகில் நெருங்கி, அவள் காதோடு சில விஷயங்களை ரகஸ்யமாகச் சொன்னான்.

ஆச்சர்யத்துடன் கேட்டுக் கொண்டிருந்த சுலோசனாவின் முகம் சந்தோஷத்தினால் மலர்ந்து போயிற்று. தன்னை அவன் கட்டாயம் முடிவில் திருமணம் செய்து கொள்வான் என்று தீவிரமாக அவளது பேதையுள்ளம் நம்பியது.

''அத்தான்! சத்தியமாக என்னை நம்புங்கள். நீங்கள் சொன்னபடி நான் நடப்பேன். அம்மாவிடம்கூடச் சொல்ல மாட்டேன்'' என்று உணர்ச்சி பொங்கக் கூறி விட்டு, அவன் கரங்களை ஆர்வத்துடன் பற்றிக் கொண்டாள்.

''உன்னுடைய அன்பின் ஆழத்தை நான் அறிவேன். கலோ! உன்னைப்போன்ற உத்தமமான பெண் மனைவியாகக் கிடைக்க ஒரு மனிதன் ரொம்பக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். நான் வருகிறேன். எல்லாம் ஞாபகத்தில் இருக்கட்டும். ஜாக்கிரதை!'' என்று எச்சரித்து விட்டு எழுந்து ரங்கதுரை தன் பையிலிருந்து ஒரு கத்தை ரூபாய் நோட்டுகளை அவள் கரத்தில் வைத்து அழுத்தி விட்டு, வேகமாக வெளியேறினான்.

கதவை மூடிக்கொண்டு மான்போல் துள்ளி உள்ளே வந்த மகளைச் சற்று அதிசயமாகப் பார்த்தாள் மோகனாம்பாள். ''மினுக்கித் தளுக்கறது அப்புறம் இருக்கட்டும். அவன் என்ன சொன்னான்?'' என்று எரிந்து விழுந்தாள் மகள் மீது தாய்.

''அடுத்த மாதம் விரைவாக விவாகத்திற்குத் தேதி வைக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறாராம். வீட்டுச் செலவுக்கு வைத்துக் கொள்ளும்படி இதைக் கொடுத்தார்'' என்றாள் மகள்.

சுபாவத்தில் அசடு என்ற போதிலும் சுபகாரியம் என்றதும் அவளுக்குத் திடீரென்று புத்திசாலித்தனம் வந்து விட்டது. தன்னிடம் அத்தான் கூறிய அந்தரங்கங்களைத் தாயிடம் சொல்லாது மறைத்து விட்டாள்.

மோகனாம்பாள் ரூபாய் நோட்டுக்களை எண்ணிப் பார்த்தாள். ஏறக்குறைய ஐந்நூறு ரூபாய்கள் இருந்ததைக் கண்டதும் நலிந்து போன அவளது நம்பிக்கை துளிர்க்க ஆரம்பித்தது. ''போகட்டும்; இன்னிப்பொழுது நாம் விழித்த முகம் நல்ல முகம்தான்'' என்று முணமுணத்துவிட்டுத் திருப்தியுடன் உள்ளே சென்றாள்.

# 16

அன்று இரவு உமா உணவு கொள்ளாது படுக்கச் சென்றுவிட்டாள். ஷண்பகவல்லி கூறிச் சென்ற அந்தப் பயங்கரமான செய்தி அவளது காதுகளில் ஓயாது ரீங்காரம் செய்த வண்ணம் இருந்தது. உறக்கம் வராது, படுக்கையிலே அனலிலிட்ட புழுவாகத் துடித்துக் கொண்டு புரண்ட வண்ணமிருந்தாள்.

ஒன்று இரண்டு மூன்று என்று அருகிலிருந்த கோவில் மணி இரவின் நிசப்தத்தைக் கலைத்தபடி முழுங்கியபோது தான் விடியும் நேரம் சமீபித்து விட்டதை அவள் உணர்ந்தாள். இரவின் முற்பகுதியில் பலமாகப் பொழிந்த மழையினால் பூமி நன்றாகக் குளிர்ந்து விட்டிருந்தது. தோட்டக்கார சின்னமுத்து மிகவும் அருமையாகப் பயிரிட்டு வளர்த்திருந்த 'இரவின் ராணி' ஜன்னல் அருகே பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்ததனால், அந்த மலரின் மணம் குளிர்ந்த காற்றில் கலந்து உள்ளே வந்து மிகவும் பலமாக வீசியது. உமா படுக்கையினின்று எழுந்து சென்று விளக்கைப் போட்டுவிட்டு ஜன்னல் கதவுகளை மூடினாள். நிலைக் கண்ணாடியருகே மேஜை மீது சாய்ந்த வாக்கில் வைத்திருந்த தன் தாயின் புகைப்படத்தின் அருகே வந்து நின்றுகொண்டாள். சிறிது நேரம் கண் கொட்டாது அதையே பார்த்தபடி செயலற்று நின்றுவிட்டாள்.

குளிர்ந்த அந்த முகத்தையும் கருணை பொங்கிய அந்த அழகிய விழிகளையும் பார்க்கப் பார்க்க அவளால் ஷண்பகவல்லியின் கூற்றை நம்பவே முடியவில்லை. அன்பும் அடக்கமும் உருவான தன் தாய், புருஷனுக்குத் துரோகம் செய்த மகாபாவி என்று மனத்தால் சிந்திக்கவும் முடியவில்லை. அப்படியானால் மானேஜர் சகோதரி சொன்னது முழுவதும் பொய்யாக இருக்க வேண்டும்? அதுவானால் இறந்துபோன

பண்ணையாரின் மனைவி மீது அபாண்டமானதொரு பழிச்சொல்லைக் கட்டி விட்ட கதையை நம்பி, பண்ணையார் தமது மனைவி மீது சந்தேகங்கொண்டு விட்டாரோ? எந்த விதமாக யோசித்துப் பார்த்த போதிலும் உண்மை பெரும் புதிராக இருந்ததனால் உமாவின் தலை சுற்றியது. இந்நிலையிலே போய்க்கொண்டிருந்தால் விரைவில் அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போல் ஒரே கலக்கமாக இருந்தது. ''யாரையும் நம்பிப் பயன் இல்லை. இதற்கு நாமே ஒரு முடிவு காண வேண்டும்'' என்ற தீர்மானத்துடன் விளக்கை அணைத்துவிட்டு மீண்டும் வந்து மஞ்சத்தில் படுத்தாள்.

வைதேகியின் ஆடைகள் சொந்த சாமான்கள் முதலிய வற்றைப் பெட்டிகளில் போட்டுப் பூட்டி மாளிகையின் பின்புறத்தில் இருந்த ஒரு பாழடைந்த அறையில் பண்ணயார் அடக்கம் செய்திருந்தார். தன் தாயின் படங்களைத் தேடி எடுக்கப் புறப்பட்ட பொழுது இந்த உண்மை உமாவுக்குத் தெரிய வந்தது. எனவே, தாமதம் செய்யாது மறுநாட் காலைப் பொழுது விடிந்ததும் முதல் அலுவலாகத் தன் தாயின் பொருள்களைச் சேமித்து வைத்திருந்த அறையைத் திறந்து இரண்டு வேலையாட்கள் உதவியுடன் சோதனை போடலானாள்.

பல தகரப் பெட்டிகள் ஒன்றன்மீது ஒன்றாக அந்த அறைக்குள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இடையே கழிந்த பல வருஷங்களின் பயனாகப் பெட்டிகளின் மூடிகளும் அடிப்பாகமும் துருப்பிடித்து ஓட்டையாகி விட்டிருந்தன. சில பெட்டிகளின் தகரம் ஓட்டையாகி உள்ளிருந்த ஆடைகள் மீது துரு படிந்து அவற்றை ஆங்காங்கே கரைத்து விட்டிருந்தது. காலையிலிருந்து பகல்வரை சலிக்காது பெட்டிக்குள் ஒவ்வொன்றிலும் இருந்த சாமான்களைத் தட்டிக் கொட்டித் தேடிக் கொண்டிருந்தாள். தூசியிலும், தும்மலிலும் வியர்வை வழிந்தோட அவள் பிடிவாதமாகச் செய்த ஆராய்ச்சி



கடைசியில் பலன் அளிக்காது போகவில்லை. ஒரு பெரிய தகரப் பெட்டியின் அடியில் கிடந்த ஒரு புத்தகத்திற்குள் பாதியாகக் கிழிந்து விட்டிருந்த ஒரு பழைய கடிதம் கிடைத்தது. உமா அதை மெல்லப் பிரித்து கவனமாகப் படிக்கலானாள்.

''தாங்கள் மேற்கொண்டுள்ள தீர்மானத்தை அறிந்து மெத்த மன அதிர்ச்சியடைகிறேன். எனினும் இது சம்பந்தமாக நான் எந்தவிதமான ஆலோசனைகளும் சொல்ல அருகதையற்றவன். பண்ணையாருக்கு இத்தனை பிடிவாதம் வேண்டியதில்லை. ஆனால் இவைகள் எதற்காக, ஏன் ஏற்படுகின்றன, என்பது நமது சிற்றறிவுக்கு எட்டாத சிந்தனைகள் ஆகும். தாங்கள் எங்கிருந்த போதிலும் எனது மனப்பூர்வமான ஆசி தங்களுக்கு எப்போதும் உரித்தாகும்''.

தங்கள் அன்புள்ள,
குருமூர்த்தி.''

கடிதத்தின் தலைப்பு காணப்படவில்லை என்றபோதிலும், கிடைத்த மீதிப் பகுதியிலிருந்து அது தன் தாயாருக்கு டாக்டர் குருமூர்த்தி எழுதிய கடிதங்களில் ஒன்றாக இருக்க வேண்டும் என்பது உமாவுக்கு நன்றாக விளங்கியது. கடிதம் எழுதப் பட்டிருக்கும் தோரணையைப் பார்த்தால் வைதேகி தன் குடும்ப வைத்தியரிடம் ஏதோ ஆலோசனை கேட்டிருக்கிறாள். அதற்கு அவ்வாறு அவர் பதில் எழுதியிருக்கிறார் என்று விளங்கியது. தனது அந்தரங்கங்களை அவரிடம் மனம் விட்டுப் பேச வேண்டும் என்றால் அவர்கள் இருவருக்குள்ளும் அவ்வளவு ஒரு நல்ல நட்பு ஏற்பட்டிருக்க வேண்டும்.

வயதில் மிகவும் மூத்தவரான குருமூர்த்தி வைதேகியைத் தமது சொந்த மகள் அல்லது சகோதரிபோல் நேசித்திருக்கலாம். வைதேகி அவரைத் தன் தந்தையாகப் பாவித்து தன் உள்ளப் போராட்டங்களை எடுத்துக் கூறிப் புத்திமதிகளும்

ஆலோசனைகளும் பெற்று, மன ஆறுதலடைந்திருக்கலாம்.இந்த உண்மையைச் சரியாகப் புரிந்து கொள்ளாது, தமது மனைவியின் நடத்தையில் பண்ணையார் வீண சந்தேகம் கொண்டிருக்கலாம். அவ்வாறாயின் பாவம் வைதேகி! வீண் அபவாதத்திற்குத் தன் வாழ்க்கையின் சுகத்தையே அல்லவா பறிகொடுத்து விட்டாள்! இவ்வாறு தனக்குள்ளே பலவும் எண்ணிக் குழம்பிய உமா முடிவில் ஒரு தீர்மானத்துடன் அறையை விட்டு வெளியே வந்தாள்.

அன்று பிற்பகல் பண்ணையார் வீட்டுப் பழைய மாடல் மோட்டார் வண்டி, டாக்டர் குருமூர்த்தியின் வைத்தியசாலை முன்பு வந்து நின்றது. கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த உமா ஒரு கணம் மலைத்துப் போய் நின்று விட்டாள். அவள் உள்ளத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்த துடிப்பிற்கும் ஆவலுக்கும் எதிராக நிலைமை அங்கு வேறு விதமாகக் காணப்பட்டது. அழகர்நத்தம் கிராமமே,அன்று மாலை ஒன்று திரண்டு குருமூர்த்தியைக் காணவந்து விட்டது போன்று ஒரு பெரிய கூட்டம் உட்புறத்திலும், வெளி வராந்தாவிலும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

'வைத்தியருடன் தான் பேச வந்த விஷயம் மிகவும் அந்தரங்கமானது. மேலும் கொஞ்ச நேரம் இருந்து ஆறஅமரப் பேச வேண்டிய சங்கதி, எனவே அவசரப்படுவதில் பயன் இல்லை' என்று சமாதானமடைந்தவளாக, வேறுவழியின்றி வராந்தாவில் கிடந்த ஒரு பெஞ்சின் ஓரத்தில் சென்று அமர்ந்து கொண்டாள். ஐந்து நிமிஷத்திற்கு ஒருமுறை வரிசையாக ஒவ்வொருவராக சேவகன் உள்ளேவிட, நோயாளிகள் வைத்தியசாலைக்குள் போய்க்கொண்டிருந்தார்கள். வேதனை தோய்ந்த முகத்துடன் உள்ளே சென்று கொண்டிருந்தவர்களையும் மருந்துப்புட்டி சகிதம் வெளியே போய்க் கொண்டிருந்தவர் களையும், வேடிக்கை பார்த்த வண்ணம்



பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தாள் உமா. பெஞ்சியின் ஓரத்தில் கடைசியாக உட்கார்ந்திருந்த உமாவின் அருகே சேவகன் வந்து நின்று, ''நீங்கள் உள்ளே போகலாம், அம்மா!'' என்று முடிவில் சொன்னான். அப்பொழுது சூரியன் நன்றாக அஸ்தமித்து இருள் பரவிக் கொண்டு வரும் நேரம் ஆகிவிட்டது.

உமாவிற்குக் கதவைத் திறந்துவிட்டு முன்னால் சென்ற சேவகன் மின்சார விளக்கை ஏற்றினான். மேஜையருகே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுவிட்டு, சப்தமிடாது நடந்து வெளியே சென்று கதவைச் சாத்திக் கொண்டு போய் விட்டான். வராந்தாவில் டாக்டர் குருமூர்த்தியின் குரல் கேட்டது. ''எல்லோரையும் அனுப்பி விட்டாய் அல்லவா?'' என்று வினவினார் வைத்தியர்.

''ஒரே ஒரு அம்மாதான் பாக்கி. அவங்க உங்களுக்காக அறையிலே காத்திருக்காங்க'' என்றான் சேவகன் பதிலுக்கு.

''அப்படியா?'' என்று கேட்ட டாக்டர், எதிர்ப்புறத்திலிருந்த இன்னொரு கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார். உமாவைக் கண்டதும் அவர் ஒரு கணம் திடுக்கிட்டுப் போய் நின்றார்! பிறகு தம்மைச் சமாளித்துக் கொண்டு, எழுந்து நின்று வணங்கிய பண்ணையார் புத்திரியை அமரச் சொல்லி விட்டு, ''உங்கள் உடம்பிற்கு என்ன?'' என்று விசாரித்துக் கொண்டே மேஜையருகேயிருந்த கைப்பையைத் திறந்து தமது சோதனைக் குழாயை எடுத்தார்.

நெற்றி மீது துளிர்த்த வியர்வையைக் கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டாள் உமா. தான் கேட்க வந்த விஷயத்தை ஆரம்பிக்குமுன் அவள் நெஞ்சு வெடித்து விடும்போல் துடிக்கத் தொடங்கியது. வறண்டு காய்ந்து போன தொண்டையை இருமிச் சரிப்படுத்திக் கொண்டு, ''டாக்டர் ஸார்! நான் உங்களை வைத்திய விஷயமாகப் பார்த்துப் பேச

வரவில்லை வந்து...'' என்று மேலே கூற முடியாது உணர்ச்சிப் போராட்டத்தினால் தடுமாறினாள். மூர்ச்சையடைந்து விடுவாள் போல் அவள் மூச்சு நெஞ்சிற்குள் முட்டிக் கொண்டது. கண்களில் லேசாகத் துளிர்த்த கண்ணீரில் நனைந்த கண் இமைகள்,பனிமலர் மீது படிந்த போது தமது சிறகில் ஏற்பட்ட ஈரத்தை உதற முயற்சிக்கும் பட்டுப் பூச்சியைப்போல் படபடவென்று துடித்துக் கொண்டன.

ஆடாது அசையாது பொம்மை போல் வீற்றிருந்த டாக்டர் குருமூர்த்தியின் முகத்தில் இதைக் கேட்டதும் எந்த விதமான சலனமும் ஏற்படவில்லை. 'அந்தப்பெண் கேட்க வந்ததைத் தானே கேட்கட்டும்!' என்று விரக்தியாக முகவாயில் கையை வைத்த வண்ணம் அவர் மேஜையைப் பார்த்தவாறு குனிந்தபடி இருந்தார்.

தான் பேசவந்ததைப் பேச முடியாது உமாவும் சில வினாடிகள் தரையைப் பார்த்தபடி திணறிக் கொண்டிருந்தாள். பிறகு தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு, ''டாக்டர் ஸார்! பல வருஷங்களுக்கு முன்பு நீங்கள் எங்கள் பண்ணையில் குடும்ப வைத்தியராக இருந்தீர்கள் என்பதை அறிவேன். ஏதோ மனஸ்தாபத்தினால் பண்ணையினின்று தாங்கள் விலகிக் கொண்டீர்கள் என்பதையும் அறிவேன். தாங்கள் பண்ணை உத்தியோகத்திலிருந்து ஏன் விலகிக் கொண்டீர்கள் என்ற உண்மையைத் தயவு செய்து தாங்கள் எனக்குச் சொல்ல வேண்டும். அதை அறிந்து கொள்ளவே முக்கியமாக நான் இன்று உங்களைக் காண வந்தேன்'' என்றாள் படபடப்புடன்.

வைத்தியர் தலையை நிமிர்த்தி அவளைச் சிறிது ஆச்சர்யத்துடன் உற்றுப் பார்த்தார். ''பல வருஷங்களுக்கு முன் என் உத்தியோக சம்பந்தமாக நான் ஏற்படுத்திக் கொண்ட மாறுதல்களுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம் என்று எனக்கு விளங்கவில்லை. இந்தக் கேள்விக்கு உங்களுக்கு நான்



எதற்காகப் பதில் சொல்ல வேண்டும் என்று புரியவில்லையம்மா?'' என்றார் மிகவும் நிதானமாக.

இரு முறைகள் ஏற்பட்ட அனுபவங்களின் பயனாக குருமூர்த்தியின் பிடிவாத மனோபாவம் உமாவுக்கு நன்கு தெரியுமாதலால் அவள் தான் கேட்ட கேள்விக்கு உடனே பதில் எதிர்பார்த்து விடவில்லை. எனவே அவள் ஏமாற்றமடையவில்லை. வைத்தியர் பேசப் பிடிவாதம் செய்தால் தான் வெளியே போக மறுத்துப் பிடிவாதம் செய்வது என்ற திடமான தீர்மானத்துடன்தான் வந்திருந்தாள். ஆகவே அவள், ''எனக்கு இதில் மிகவும் சம்பந்தம் இருப்பதனால்தான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். தாங்கள் என்பொருட்டு, எனது வருங்கால க்ஷேமத்தின் பொருட்டு எனக்குப் பதிலளிக்க மெத்தவும் கடமைப்பட்டிருக்கிறீர்கள்'' என்றாள் சற்றுக் கோபம் கலந்த குரலில்.

''கடமையா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்ட குருமூர்த்தி லேசாக நகைத்தார்.

''ஆமாம், ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாழாக்காது, அவள் இனியேனும் சுகமாக வாழ, அவள் வழி முன்னே மறைத்து நின்று மருட்சியளிக்கும் இந்த உண்மையைத் தாங்கள் தெள்ளத் தெளிய வைக்க வேண்டியது தங்களின் கடமை. இதைக் கூறாவிடில் அனாவசியமாக ஓர் அபலைப் பெண்ணின் வாழ்க்கையையே தாங்கள் பாழ் அடித்து விட முடியும்'' என்றாள் கோபத்துடன்.

''அந்தப் பெண் யார் என்று நான் அறியலாம் அல்லவா?'' என்று கேட்ட வைத்தியர் மீண்டும் ஒரு முறை வரட்சியான குரலில் மெல்ல நகைத்தார்.

உமா தலையை நிமிர்ந்து, தன்னைச் சீண்டிச் சீண்டிவிட்ட சிறுவனை உறுத்து விழிக்கும் பூனைக்குட்டிபோல்

சினத்துடன் வைத்தியரைத் தன் அழகிய விழிகளால் உருட்டிப் பார்த்தாள். ''அந்த அபலைப் பெண் இதோ உங்கள் முன்னால் இருக்கும் நான்தான், ஏற்கனவே உங்களுக்கு எல்லா விஷயங்களும் தெரியும். ஆதலால் நான் சுற்றி வளைத்துப் பேச வேண்டியது அனாவசியம். எனவே சுருக்கமாகக் கூறிவிடுகிறேன், கேளுங்கள். நகரத்திலே ஒரு மூலையில் ஒரு சிறு வீட்டில் வறுமையின் நடுவே என் தாயாரோடு நான் வாழ்ந்து வந்த அத்தனை வருஷங்களில், எனக்கு ஒரு தந்தை ஜீவியவந்தராக இத்தனை செல்வ சுகத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பது கனவிலும் தெரியாதிருந்தது. என் தாயார் மரணமடையும் முன்தினம்தான் இந்த அதிர்ச்சியூட்டும் சங்கதியை என்னிடம் தெரிவித்துவிட்டுச் சென்றார்கள். அதற்குப் பின்னர் என் தந்தையின் ஏற்பாட்டின்படி, என் தாயின் வேண்டுகோளின்படியும் அழகர்நத்தம் வந்து சேர்ந்தேன். விதிப்பயனால் நாங்கள், தந்தையும் மகளும் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளுமுன் மரணம் அவரைத் தன்னுடன் அழைத்துக் கொண்டுவிட்டது. அதற்குப் பின்னர் என் தந்தையின் இறுதிக்கால ஏற்பாட்டின் பயனாக அவரது திரண்ட ஆஸ்திக்கும், அந்தஸ்திற்கும் நான் அதிபதியாகி விட்டேன்'' என்று கூறிவிட்டு மூச்சு வாங்க நிறுத்தினாள்.

''தமது அத்தனை சொத்துக்களையும் தமது ஒரே புத்திரிக்கு தந்தை எழுதி வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார் என்பதைக் கேட்க எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. வறுமையிலே பல வருஷங்கள் கஷ்டப்பட்ட தாங்கள் இனி செல்வ சுகத்திலே சந்தோசமாக இருக்க வேண்டும்''என்றார் வைத்தியர்.

உமா படபடப்போடு குறுக்கிட்டாள். ''அதைத்தான் சொல்லவந்தேன் டாக்டர் ஸார்! வறுமையில் உழன்றபோது நான் எவ்வளவோ மனத்திருப்தியோடு என் ஏழைத் தாயோடு சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தேன். இப்பொழுது எனக்கு அளவற்ற ஆஸ்தி இருக்கிறது. ஆனால், ஒரு துளி நிம்மதியோ சந்தோஷமோ இல்லையே!'' என்றாள் ஆத்திரத்துடன்.



''ஏனோ?'' என்று கேட்டார் வைத்தியர் ஆச்சர்யப் படுகிறவர் போன்ற பாவனையில்.

''என் தாயின் கடைசிக் காலத்தில்தான், அவள் என் தந்தையை விட்டுப் பிரிந்து வாழ்ந்து வந்தாள் என்ற உண்மை எனக்குத் தெரிய வந்தது. ஆனால் அவர்களுக்குள் ஏன் மனஸ்தாபம் ஏற்பட்டுப் பிரிவு ஏற்பட்டது என்ற உண்மையை நான் என் தாயிடமிருந்து அறிய முடியவில்லை. என் தந்தையிடம் அறிந்து கொள்ளலாம் என்றிருந்தேன். இங்கே அவர் மரணம் குறுக்கிட்டு என் முயற்சியின் மீது மண்ணை வாரி வீசிவிட்டது. என் பாட்டியாரிடம் அறிந்து கொள்ளலாம் என்று பதறிக் கொண்டிருந்தேன். என்னிடம் மனம் விட்டுப்பேசவும் பிரியமில்லாது அவரும் காலமாகி விட்டார். நான் அறிந்துகொள்ள வேண்டும் என்று துடியாகத் துடித்த இந்த அந்தரங்கத்தை அறியுமுன் என் முயற்சிகளுக்கு தோல்விக்கு மேல் தோல்விதான் ஏற்பட்டது. ஆனால் கடைசியாக எனக்கு ஒரு வழி புலனாகியது. தங்களை நாடி எப்படியும் உண்மையை அறிந்து கொண்டு விடுவது என்பதுதான் அந்த வழி. தயவு செய்து தாங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும் டாக்டர் ஸார். அழகர்நத்தத்திற்கு வந்ததிலிருந்து என் உள்ளம் அமைதியில்லாது தவிக்கும் தவிப்பைத் தாங்கள் அறிந்தால்...'' என்று கூறி முடிக்க முடியாது துயரமிக்கவளாய்த் திணறிக்கொண்டு நிறுத்தினாள்.

மௌனமாக எல்லாவற்றையும் கேட்டுவந்த டாக்டர் குருமூர்த்தி நீண்டதொரு பெருமூச்செறிந்தார். தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ''நீங்கள் இதுவரை கூறிவந்த அனைத்தும் உங்கள் குடும்பத்தில் நடந்த சொந்த விஷயங்கள். அதில் எந்தவிதமான சம்பந்தமும் எனக்கு இருப்பதாகத் தோன்றவில்லை. நான் எந்த வகையில்

உங்களுக்கு இதில் உதவி செய்ய முடியும் என்பதும் விளங்க வில்லையே?'' என்றார்.

கட்டுப்படுத்த முடியாது கன்னங்களில் பெருகிவந்த கண்ணீரை உமா ஆத்திரத்துடன் கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டாள். நெஞ்சத்திலே அலைபாய்ந்து குமுறி நின்ற துயரத்தோடு இப்போது அவளுக்கு ஆத்திரமும் சேர்ந்து கொண்டது. எனவே, சற்று உரத்த குரலில் மிகவும் கடுமையாக, ''டாக்டர் ஸார்? நீங்கள் இன்னமும் இதையெல்லாம் புரிந்து கொள்ளவில்லை போல் பதிலளிப்பதைக் கேட்க எனக்கு மிகவும் வியப்பாக இருக்கிறது. உங்களுக்கும் என் பெற்றோர்களுக்கு மிடையே ஏற்பட்ட மனஸ்தாபத்திற்கும் ஒரு தொடர்பு இருக்கிறது என்கிறவரை நான் ஆராய்ந்து அறிந்து கண்டு கொண்டிருக்கிறேன். தாங்கள் ஒன்றுமறியாததுபோல் பாவிப்பதனால் நான் ஒன்றும் ஏமாந்துவிடப் போவதில்லை. உண்மையைச் சொல்லுங்கள்! தாங்கள் ஏன் பண்ணை உத்தியோகத்திலிருந்து விலகினீர்கள்? அல்லது விலக்கப் பட்டீர்கள்? ஏன்?' ஏன்?'' என்று கேட்டுவிட்டு, மேஜை மீது ஆக்ரோஷமாகத் தன் உள்ளங்கையால் தட்டினாள்.

''பண்ணையில் கொடுத்த ஊதியம் போதவில்லை என்று நான் விலகிக் கொண்டேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். அல்லது பண்ணையாருக்கு என் வைத்தியத்தின் மீது திருப்தி ஏற்படாததால் விலக்கி விட்டார் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த சிறு சங்கதியை அறிந்து கொள்வதனால் உங்கள் வாழ்க்கைக்கு எந்த விதத்தில் அமைதி ஏற்படப்போகிறது என்பது எனக்கு ஒரே புதிராக இருக்கிறது'' என்றார் டாக்டர் சாந்தமாக.

''பொய்! டாக்டர், ஸார், நீங்கள் கூறுவது சுத்தப்பொய்! சுமார் இருபத்தி நான்கு வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு பண்ணைத் தோட்டத்திலே கடைசி முறையாக என்



தந்தையோடு பேசியதை நினைத்துப் பாருங்கள். அவர் விடுத்த வேண்டுகோளை நீங்கள் செய்து முடிக்க மறுத்ததனால் உங்களை என் தந்தை வேலையினின்று விலக்கினார் அல்லவா? அந்த வேண்டுகோள் என்ன? மனசாக்ஷியை மறந்து செய்ய வேண்டும் என்று என் தந்தை தங்களுக்கு இட்ட அந்தக் கட்டளை என்ன? அதையாவது சொல்லுங்கள்'' என்றாள் உக்கிரமாக.

டாக்டர் குருமூர்த்தி, தம் முன் ஆவேசம் பிடித்தவள் போன்று படபடவென்று பேசியபடி அமர்ந்திருந்த அந்தப் பெண்ணை இரக்கமாக ஏற இறங்க ஒருமுறை பார்த்தார். ''பல வருஷங்களுக்கு முன் நடந்ததை போட்டோ எடுத்து வைத்திருப்பவர் போலும், தத்ரூபமாகப் பார்த்தவர் போலும் தாங்கள் பேசுகிறீர்கள் அம்மா. உங்கள் தந்தை என்னைத் தமது பண்ணை வேலையினின்று விலக்கிவிட்டது உண்மை என்று ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அதன் காரணத்தைத் தாங்கள் அறிய வேண்டியது அனாவசியம்'' என்றார்.

''என் தந்தை என் தாயாருக்கு விஷம் வைத்துக் கொல்ல முயற்சித்ததாகவும், அதற்குத் தாங்கள் உதவி செய்ய மறுத்ததாக வும் அதனால் வேலையினின்று விலக்கப் பட்டதாகவும் ஓர் ஆராய்ச்சியில் எனக்குப் புலனாகியது. அது உண்மையா என்று முதலில் எனக்குத் தெரிந்தாக வேண்டும். என் தந்தை என் தாயை ஏன் விஷமிட்டுக் கொல்ல முயற்சித்தார் என்பது அடுத்தபடியாகத் தெரிய வேண்டிய விஷயம்'' என்றாள் உமா ஆத்திரத்துடன்.

''உங்கள் தந்தை என்னைப் பண்ணை உத்தியோகத்தி லிருந்து விலக்கிவிட்டார் என்பது உண்மை. அதை ஒப்புக் கொள்கிறேன். எதற்காக விலக்கினார் என்ற விஷயம் உங்கள் வாழ்க்கைக்கு அவசியமல்லவாதலால் அதைக் கூற மறுக்கிறேன். இவ்வளவுதானே அம்மா, தாங்கள் என்னிடம் பேச

வந்த விஷயம்'' என்று கூறிவிட்டு வைத்தியர், பொறுமையற்றவராகத் தமது கைக்கடிகாரத்தை உற்றுப் பார்த்துக் கொண்டார்.

தான் பேசி முடிக்கு முன் எழுந்து சென்று விடுவாரோ என்ற அச்சம் திடீரென்று உமாவுக்கு ஏற்படவே,''இன்னும் சில கேள்விகள் இருக்கின்றன. அதையும் கேட்டு விடுகிறேன்'' என்று பரபரப்பாகக் கூறிவிட்டுத் தன் இடையே சொருகியிருந்த அந்தக் காகிதத்தை எடுத்தாள்.அதைப் பிரித்து விரல்களால் தடவி சரிப்படுத்தி, வைத்தியர் முன் மேஜை மீது வைத்தாள்.

''இதைப் பாருங்கள், முடிவில் உள்ள கையெழுத்தி லிருந்து இது தாங்கள் எழுதிய கடிதம் என்பதை மறுக்க மாட்டீர்கள் என நினைக்கிறேன். இந்தக் கடிதத்தைத் தாங்கள் என் தாயாருக்கு எழுதினீர்கள் என்பதையும் தாங்கள் மறுக்க முடியாது. இது அவர்களுடைய சொந்த சாமான்கள் வைக்கப் பட்டிருந்த பெட்டியிலிருந்து கண்டெடுக்கப்பட்டது. என் தாயார் தங்களிடம் ஏதோ ஓர் ஆலோசனை கேட்டிருந்தார்கள் என்பதை இதிலிருந்து ஊகிக்க முடிகிறது. அந்த ஆலோசனை யாது? என் தாய் அப்படித் தங்களிடம் யோசனை கேட்க வேண்டிய அந்த முக்கிய விஷயம் என்ன? அந்த ஆலோசனைக்குப்பின் என் தாய் என் தந்தையிடமிருந்து பிரிந்து சென்றதற்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா?இவை அனைத்தையும் தாங்கள் எனக்கு விளக்கமாக ஒளிக்காது கூறவேண்டும்'' என்றாள் மூச்சு விடாது.

டாக்டர் குருமூர்த்தி தனது வழுக்கைத் தலையைச் சொறிந்து கொண்டு அவளை மிகவும் நிதானமாகப் பார்த்தார். ''வைத்தியர் என்பது ஒருபுறம் இருக்க, வயதில் முதிர்ந்தவர் என்ற ஹோதாவில் உங்களுக்கு நான் இது சமயம் ஒரு புத்தி சொல்ல விரும்புகிறேன். பல வருஷங்களுக்கு முன் எத்தனையோ விஷயங்கள் நடந்திருக்கலாம். அவைகள் அனைத்தும் இப்பொழுது மறந்து, ஞாபகத்தினின்று அகன்ற சங்கதிகள் ஆகும்.



''தாங்கள் பிறப்பதற்கு முன்பு நடந்த விஷயங்களைப் பற்றியும், பிறந்தபோது நடந்த விஷயங்கள் பற்றியும், இப்பொழுது ஆராய்ந்து அறிந்து ஆத்திரமோ துக்கமோ பட்டு வாழ்க்கையின் அமைதியை வீணே குலைத்துக் கொள்வதில் பயன் இல்லை. கடவுள் கிருபையால் தற்சமயம் உங்களுக்கு அனைத்தும் ஒருங்கே வந்து வாய்த்திருக்கின்றன. நான் சொல்வதைக் கேளுங்கள். உங்கள் பெற்றோரின் கடந்த காலம் பற்றியோ, என் போன்ற சம்பந்தமற்ற மனிதனின் கடந்த காலத்தைப் பற்றியோ ஆராய்ந்து, மூடி மண்மேடிட்டு விட்ட பழைய சங்கதியைக் கிளறி மூளையைக் குழப்பிக் கொள்வதைவிட்டு, வாழ்க்கை அளித்துள்ள சுக போகங்களை நிம்மதியாய் அனுபவிக்க முயற்சி செய்யுங்கள். அதுதான் உங்களைப் போன்ற படித்த புத்திசாலிகளுக்கு அழகு'' என்று கூறிவிட்டு எழுந்தார்.

தான் இத்தனை பாடுபட்டும் ஒரு வழியிலும் பிடிகொடுத்துப் பேசாது அவர் எழுந்து செல்ல முயற்சிப்பதைக் கண்டதும் உமாவிற்குக் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ''அமைதியாக வாழ் அம்மா என்று அழகாக வாயால் சொல்லிவிட்டீர்களே, டாக்டர் ஸார்! என் தாய் மீது அபாண்டமானதொரு பழி சுமத்தப்பட்டிருக்கிறது. அதன் பயனாக என் தந்தையிடமிருந்து அவள் பிரிந்து வாழ நேர்ந்தது என்ற உண்மையைத் தாங்கள் அறிவீர்கள். அந்தப் பழிக்குக் காரணபூதமும் தாங்கள் தான் என்பதைத் தங்கள் மனச்சாட்சி வலியுறுத்தும். அவைகள் அனைத்தையும் நான் அறிந்து கொண்டு உண்மையைத் தெரிந்து கொள்ளாதிருக்கும்போது எனக்கு எப்படி மனத்தில் சாந்தி ஏற்படும்? பெற்ற தாய், புருஷனுக்குத் துரோகம் செய்த பாவி என்ற ஒரு சந்தேகத்திலே உண்மை அறியத் தத்தளிக்கும் ஓர் உள்ளத்தின் வேதனையை நீங்கள் எப்படி உணரப் போகிறீர்கள்!'' என்று உரத்த குரலில் அதட்டினாள்.

பேசி முடிக்குமுன் தொண்டையைப் பலமாக அமுக்கிய துக்கம் கங்கையைப்போல் அவளது கண்களைப் பிரவாகிக்க வைத்தது.

வைத்தியர் இதற்கு ஏதும் பதில் பேசாது அவள் வெளியே எழுந்து செல்ல வேண்டும் - நேரமாகிவிட்டது என்று எச்சரிப்பவர்போல் அறையின் கதவைத் திறந்து அவளுக்காக வழி விட்டு நின்றார். இதைக் கண்டதும் உமா ஆவேச முற்றவள்போல் எழுந்து கதவு அருகில் சென்றாள். டாக்டர் குருமூர்த்தியை எரித்து பஸ்மீகரம் செய்து விடுபவள்போல் நீர் தோய்ந்த கண்களால் குரோதமாக விழித்தாள். ''டாக்டர் ஸார்! உங்களைப் போன்ற கல் நெஞ்சரை நான் இதுவரை என் ஜன்மத்திலே கண்டதேயில்லை. எனக்கு எவ்விதத்திலும் பதில் சொல்ல மறுப்பது நியாயமேயில்லை. நீங்கள் தலையிட்டுக் குழப்பியதால், ஒரு பாவமும் அறியாத என் பேதைத் தாயின் வாழ்க்கையே பாழாகி நாசமடைந்து நிர்மூலமாகிவிட்டது! உமது பயங்கரமான பிடிவாதத்தினால் என் வாழ்க்கை அமைதியும் குலைந்து, ஆனந்தம் அஸ்தமனமாகிவிடப் போகிறது. தாய், மகள் இரண்டு பேர் வாழ்க்கையையும் பாழாக்கிவிட்டோம் என்று உமது பேய் நெஞ்சம் நன்றாகப் பரமானந்தம் அடையட்டும். உம்மைப் போன்ற பசுத்தோல் போர்த்திய புலிகள் பலர் சமூக சேவகர்கள் என்று பொய்கூறி உலகிலே உலவி வருகிறார்கள். ஆனால் விரைவில் உமது வெளிவேஷம் அம்பலத்திற்கு வந்துவிடும் என்பதை எச்சரிக்கிறேன். பாருங்கள், கூடிய சீக்கிரம் நீங்கள் இந்தக் கிராமத்தில் அடையப் போகும் கதியை!'' என்று கிரீச்சிட்டு உரத்த குரலில் அலறினாள்.

நெஞ்சு படபடவென்று அடித்துக்கொள்ள, கண்களில் நீர் கரை புரண்டோட உணர்ச்சிக் குமுறலால் உ[illegible] முழுவதும் பதற, தடுமாறிக்கொண்டு வெளியே வந்தாள். தன்னைச் சுற்றிலும் உள்ள பூமி வேகமாகச் சுழல்வது போல் தோன்றவே



கீழே விழுந்துவிடா வண்ணம் ஓடி அருகிலிருந்த தூணை ஆதாரமாகப் பிடித்துக் கொண்டாள். அவ்வளவுதான், அடுத்த கணம் உமா மூர்ச்சையாகிக் கீழே விழுந்துவிட்டாள்.

கண்ணை விழித்துப் பார்த்தபோது மீண்டும் தான் வைத்தியர் அறையில் ஒரு நாற்காலியில் சாய்ந்தபடி அமர்ந்திருப்பதை உமா அறிந்தாள். அவள் முகத்தின்மீது தான் வாரி இறைத்த தண்ணீரை ஒரு துண்டினால் மெல்ல வைத்தியசாலைச் சேவகன் துடைத்துக் கொண்டிருந்தான். ஏதோ ஒரு மருந்தை அவளது கரத்தில் ஊசி மூலம் செலுத்திய பிறகு டாக்டர் குருமூர்த்தி பஞ்சினால் மெல்லத் துடைத்து விட்டு அப்பால் சென்று நின்று கொண்டார். சில வினாடிகளில் களைப்பு சிறிது நீங்கிய உமா வெறுப்புடன் ஆசனத்தைவிட்டு எழுந்தாள். ''டாக்டர் ஸார்! உங்கள் சிகிச்சைக்கும் உதவிக்கும் மெத்த வந்தனம். என்னைப் பற்றித் தாங்கள் இவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை'' என்று கடுமையாகக் கூறிவிட்டு வெளியே சென்றாள்.

டாக்டர் குருமூர்த்தி அவளுக்கு நேரிடையாக ஏதும் பதில் கூறவில்லை. ஆனால் சேவகன் பக்கம் திரும்பி ''ஜாக்கிரதை! மறுபடியும் அம்மா கீழே விழுந்து விடப் போகிறார்கள். அவர்கள் மோட்டார் வண்டிவரை கூடச் சென்று ஏற்றிவிட்டு வா. பத்திரம்'' என்று உத்தரவிட்டு, அதுவரை ஒன்றுமே நடக்காதது போன்று விச்ராந்தியாகத் தமது வைத்தியசாலைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே சென்றுவிட்டார்.

தடுமாறியபடி தங்கள் மோட்டார் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்ட உமா திரும்பி வைத்தியசாலையை ஒரு முறை வெறுப்பாகப் பார்த்தாள். இதுவரை அவள் யாரையும் அத்தனை துவேஷத்துடன் வெறுத்ததே கிடையாது. இந்தச் சம்பவத்திற்குப் பிறகு டாக்டர் குருமூர்த்தியை அவள் விஷம்போல் மிகமிக வெறுத்தாள்.

# 17

ஒரு வார காலம் ஓடிச்சென்றுவிட்டது. குருமூர்த்தியின் வைத்தியசாலையில் நிகழ்ந்த அந்தச் சம்பவத்திற்குப் பிறகு, உமா உடல் அயற்சியும் மனச்சோர்வும் மிக்கவளாக, நோயாளிபோல் மாளிகையைவிட்டு எங்குமே செல்லாது உண்பதும் உறங்குவதுமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டு, எதிலும் உற்சாகமின்றி இருந்தாள். அன்று காலை 'மீனாக்ஷி இல்ல'த்திலிருந்து சிவகுமார் அனுப்பியிருந்த சிறு கடிதத்தைப் பார்த்த பின்னர்தான் அவளுக்குக் கொஞ்சம் தெம்பு ஏற்படத் தொடங்கியது. பட்டணத்திலிருந்து தான் திரும்பி வந்து விட்டதாகவும், விரைவில் சந்திக்க முயற்சிப்பதாகவும் அவன் அதில் குறிப்பிட்டிருந்தான்.

வஞ்சகர்களும் சூழ்ச்சிக்காரர்களும் நிறைந்த அவளது சூழ்நிலையில், சிவகுமார் போன்ற ஓர் உண்மையான நண்பன் இருந்தது அவளுக்கு மெத்த ஆறுதலைக் கொடுத்தது. சிவகுமார் எழுதியிருந்த அந்தச் சிறு லிகிதத்தைப் பன்முறை அன்று காலை அவள் திரும்பத் திரும்ப படித்துவிட்டு மிகவும் திருப்தியுடன் மேஜைமீது வைத்துவிட்டு எழுந்து, தோட்டத்தைச் சுற்றிப் பார்வையிட வெளியே சென்றாள்.

தந்தையுடன் கூட அடிக்கடி சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் மாளிகைக்குத் தப்பாது விஜயம் செய்து கொண்டிருந்த ரங்கதுரை, ஒருசில தினங்களாகத் தன் சொந்த அலுவல்களின் சிக்கல்களினால் பண்ணையின் பக்கமே வராதிருந்தான். அடுத்த நகரத்திலிருந்து ஊர் திரும்பியதும் அவனது உள்ளம் உமாவைச் சென்று காணவேண்டும் என்று தவியாகத் தவித்தது. எனவே, அன்று காலை வழக்கம்போல் தந்தை பண்ணை அலுவல்களைக் கவனிக்க வந்தபோது, மகனும் அவருடன் கூடப் புறப்பட்டு வந்திருந்தான்.



தந்தையும் மகனும் பண்ணை மாளிகையின் ஹாலுக்குள் நுழைந்தார்கள். அங்கே உமாவைக் காணவில்லை. அவளது வருகைக்காகக் காத்துக் கொண்டு நின்ற ரங்கதுரையின் கண்களில் மேஜை மீது கிடந்த அந்தச் சிறு காகிதம் தென்பட்டது.

உமாமகேஸ்வரிக்கு அதிகாலையிலே யார் கடிதம் எழுதியிருக்கக்கூடும் என்ற ஆவலை அடக்கமாட்டாது சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, அதைச் சட்டென எடுத்துப் பிரித்து அவசரமாகப் படித்துப் பார்த்தான். தன் உள்ளத்தையும் உணர்வையும் வந்த நாளிலிருந்து ஒரேயடியாகக் கொள்ளை கொண்டு விட்ட பண்ணையாரின் செல்வ மகளுக்கு, அந்தஸ்தும் கௌரவமும் இல்லாத அனாதைச் சிவகுமார் மிகவும் உரிமையான பாவத்தில் அன்பு ததும்ப எழுதியிருந்ததைக் காண, அவன் நெஞ்சு பொறாமைத் தீயில் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது. முகவாயைத் தடவிக் கொண்டு ஆலோசனையாக நின்ற தந்தையின் பக்கம் ஆத்திரமாகத் திரும்பிய மகன், ''அப்பா! இதைப் பாருங்கள்!'' என்றான் தாழ்ந்த குரலில்.

வரதராஜன் பரபரப்பாக அந்த லிகிதத்தைப் படித்து விட்டு மடித்து மேஜை மீது அது முன்னிருந்தது போலவே வைத்தார். 'இதையெல்லாம் நாம் எப்படித் தடுக்க முடியும்?' என்ற பாவனையில் மகனைக் குறிப்பாகப் பார்த்தார்.

தந்தை பதில் பேசாது மௌனமாக இருப்பதைக் கண்ட ரங்கதுரைக்கு எரிச்சல் தாள முடியவில்லை. 'பண்ணையிலே மானேஜர் என்ற பதவியிலே அவருக்கிருந்த செல்வாக்கிற்கு அவர் மட்டும் மனம் வைத்தாரானால், அனுபவமும், தன்னைக் காத்துக் கொள்ளத் திடமும் இல்லாத அபலையான உமாவைக் கைப்பொம்மையாக ஆட்டிவைக்க முடியும். அப்படியிருந்தும், தமது செல்வாக்கைக் கொஞ்சமும் பிரயோகிக்காது

பண்ணையார் புத்திரிக்கு அநாவசியமான சுதந்திரத்தை அள்ளிக் கொடுத்து அவளை இஷ்டப்படியல்லவா நடக்கும்படி விட்டுவிட்டார் என தந்தைமீது மகனுக்கு மகத்தான கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

" ஏன் தடுக்க முடியாது? மானேஜர் என்ற ஹோதாவில் உமாவுக்கு ஆலோசனையும், புத்திமதியும் சொல்ல நீங்கள் கடமைப்பட்டவர் அல்லவா? உங்கள் புத்திமதிகளை ஏற்க மறுத்தால் தாங்கள் பண்ணை உத்தியோகத்திலிருந்து விலகிக்கொண்டு விடுவதாகப் பயமுறுத்த வேண்டும். பண்ணையின் சகல விவகாரங்களின் அந்தரங்கங்களையும் தந்திரங்களையும் தெரிந்த மனிதரான நீங்கள் வேலையினின்று விலகிக் கொண்டு விட்டால் உமாமகேஸ்வரியின் கதி என்னவாகும்? இந்த அழகர்நத்தம் கிராமத்தில் அனுபவமே இல்லாத பத்தாம்பசலியான இந்தச் சிறு பெண், இவ்வளவு ஆட்படைகளை நிர்வகித்துத் திறமையுடன் வேலை வாங்கி, பண்ணையை ஒழுங்காக நடத்த முடியுமா? இந்தப் பெண் நமது புத்திமதிகளை ஏற்க மறுத்துப் பிடிவாதம் செய்தால், சாம, தான, பேத, தண்டமென்ற சதுர் உபாயங்களையும் பிற்பாடு கையாள வேண்டியதுதான். வயதிலே பெரியவரும், திறமையிலே மிக்கவருமான பண்ணையாரை உங்கள் உள்ளங்கைக்குள் ஆட்டிக் கொண்டிருந்தீர்களே, அப்பா! அந்தத் திறமை இப்போது எங்கே போயிற்று? இந்தச் சிறுபெண்ணை அடக்கியாள உங்களால் முடியாது இருப்பதைக் காண எனக்கு மிகவும் வெட்கமாக இருக்கிறது!" என்றான் மிகவும் கடுமையாக.

வரதராஜன் பதிலுக்கு மெல்லியதொரு புன்னகை செய்தார். "வாலிப வயது, அனுபவம் குறைவு உனக்கு. அதனால் இப்படி ஆத்திரப்பட்டுப் பேசுகிறாய். யார் யாரை எப்படி நடத்த வேண்டும். எப்பொழுது என் ஸ்வயரூபத்தைக் காட்ட வேண்டும் என்பதை நான் அறிவேன். அதனால் மகனே,



31505
4757969

சற்றுப் பொறு! அவசரப்படாதே. இந்தக் கிழவனை அலக்ஷியப்படுத்தித் துச்சமாக நடந்துகொண்டுவரும் இந்த அகம்பாவம் பிடித்த பெண்ணுக்கு நான் போகப் போக எப்பேர்ப்பட்ட பாடத்தைக் கற்பிக்கிறேன் என்பதைப் பார்" என்றார் கோபத்துடன்.

தோட்டத்திலே கேட்ட உமாவின் பேச்சுக் குரல் அருகில் நெருங்கி வருவதைக் கண்டதும் ரங்கதுரை சட்டென்று மேஜையில் கிடந்த காலைப் பத்திரிகையை எடுத்துக் கொண்டு படிப்பவன் போல் பாவித்துக் கொண்டு நின்றான்.

ஹாலுக்குள் நுழைந்த உமா, மானேஜரின் மகனைக் கண்டதும் மிகவும் உற்காசமுற்றாள் என்று சொல்வதற்கில்லை. அவர்கள் வீட்டில் அளித்த விருந்தின்போது அவன் சிவகுமாரனைப் பற்றி அசட்டையாகப் பேசியதைக் கேட்டதிலிருந்து உமாவுக்கு அவன் மீது மிகவும் மனக்கசப்பு தான் ஏற்பட்டிருந்தது. "காலை வேளையில் இவனுக்கு இங்கே என்ன வேலை?" என்ற அளவிற்கு அவள் உள்ளத்தில் அவன் வருகையைக் குறித்துக் கொஞ்சம் வெறுப்புக்கூட ஏற்பட்டது. எனினும், மரியாதையை உத்தேசித்து, தந்தையையும் மகனையும் கரம் குவித்து வணங்கி விட்டு, "உட்காருங்கள்" என்று உபசரித்தாள்.

எதிரே வந்து அமர்ந்து கொண்டிருந்த பண்ணையாரின் புத்திரியை ஏற இறங்க கவனித்தான் ரங்கதுரை. முகம் வெளுத்து உடல் இளைத்து ஆரோக்கியம் குன்றியவள்போல் காணப்பட்டாள் அவள். மானேஜர் மகனுக்கு அதைக் குறித்து எல்லையில்லாக் கவலை ஏற்பட்டு விட்டது. மிகவும் அக்கறையாக, "மிஸ் உமா! உங்கள் உடம்பிற்கு என்ன? அழகர்நத்தத்திற்கு வந்தபோது தாங்கள் இருந்ததற்கும் இப்போது இருப்பதற்கும் மிகவும் வித்தியாசம் காணப்

படுகிறதே! உடல் மிகவும் இளைத்திருக்கிறீர்களே?' என்றான் கவலையுடன்.

தன்பால் அவன் காட்டிய சிரத்தையை உமா கவனிக்கவும் இல்லை. ''அப்படியா?'' என்று கேட்டுவிட்டு அலக்ஷியமாக நகைத்தாள்.

''ரங்கதுரை கூறுவது முற்றிலும் உண்மைதான் அம்மா, தாங்கள் நாளுக்கு நாள் ஏனோ இளைத்து வருகிறீர்கள்! தங்கள் ஆரோக்கியத்தை வேலை மும்முரத்தில் அலக்ஷியப் படுத்தினால் பிறகு விபரீதமாகப் போனாலும் போகலாம்'' என்று ஒத்துப் பாடினார் வரதராஜன்.

''இந்த ஊர், அதன் சீதோஷ்ணம் இரண்டும் உமா அவர்களுக்கு ஒத்துக் கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். கொஞ்ச நாட்கள் எங்கேயாவது வெளியூரில் இடமாற்றமாகப் பத்து நாட்கள் தங்கியிருந்து விட்டு வந்தார்களானால் சௌகரியமாக இருக்கும்'' என்று மகன் சாதுர்யமாக ஒரு யோசனையை எடுத்து வெளியே விட்டான்.

வரதராஜன் முகம் இதைக் கேட்டதும் பிரகாசமடைந்தது. மின்னல் வேகத்தில் அவர் மூளையில் ஓர் எண்ணம் கொடிவிட்டு ஓடியது. ''நல்லவேளை ஞாபகப்படுத்தினான் ரங்கதுரை! நானே உமா அவர்களுக்கு எடுத்துக் கூற விரும்பினேன். அழகர்நத்தம் வந்ததிலிருந்து அவர்களுக்கு ஓய்வு ஏதும் கிடையாது. அக்கம் பக்கத்துக் கிராமங்களுக்குச் சென்று பார்வையிடக்கூடப் பொழுது இருக்கவில்லை. ஒரு பத்து நாட்கள் பண்ணை வேலைகளை மறந்து, விச்ராந்தியாக உனது அத்தையவர்கள் கிராமத்துக்குச் சென்று தங்கிவிட்டு வந்தார்களானால்...'' என்று முடிக்காது நிறுத்தினார்.

''ஆமாம், அப்பா! நல்ல யோசனைதான் இது! அத்தை இதைப்பற்றிக் கேள்விப்பட்டால் இன்றே புறப்பட



மகிழ்ச்சியுடன் மூட்டை கட்டி விடுவார்களே? தமது புக்ககத்து வீட்டில் உமா அவர்களை ஒரு சில தினங்கள் விருந்தாளியாக வைத்துக் கொள்வதை அவர்கள் தமது வாழ்க்கையிலேயே கிடைக்கக் கூடாத ஒரு பாக்கியம் என்று கருதுவார்கள்'' என்று புகழ்ச்சியாகப் பேசினான் மகன்.

''ஆமாம், அம்மா! தாங்கள் இது சமயம் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். அழகர்நத்தத்தில் இருந்தபடியே ஓய்வாக இருப்பது என்பது சாத்தியப்படாது. அதனால் அடுத்த கிராமங்கள் எதற்காவது புறப்பட்டுச் சென்றுவிட வேண்டும். முன்பின் தெரியாத எந்த இடத்திற்கும் தாங்கள் சென்று தங்கி அவதிப்படவே வேண்டாம். ஷண்பகவல்லியின் புக்ககம் இங்கிருந்து முப்பது மைல் தூரத்தில்தான் உள்ளது. அழகர் நத்தத்தை விட இரு மடங்கு பெரிதான வளம் பொருந்திய அழகிய கிராமம். அங்கே தாங்கள் என் தங்கையுடைய வீட்டில் சென்று சௌகரியமாகத் தங்கிவிட்டு வரலாம். உத்தரவு கொடுத்தால் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நொடிப் பொழுதில் செய்து கொடுக்கிறேன்'' என்றார்.

''அத்தையவர்களின் புக்ககத்துக் கிராமத்தை ஒரு முறை நீங்கள் பார்த்தீர்களானால் அதை விட்டு வர உங்களுக்குப் பிறகு கொஞ்சமும் மனம் இருக்காது. எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலேன்று வயல்களும், மாஞ்சோலைகளுமாக, பார்க்கப் பார்க்க அந்தக் கிராமம் கண்களுக்கு ஒரு பெரும் விருந்தாக இருக்கும். அத்தையவர்களின் வீடு ஆற்றங்கரைக்கு மிகவும் சமீபத்திலே இருக்கின்றது. காற்றோட்டம் மிகுந்த சுகமான வாசஸ்தலம்.

''தினம் காலையில் எழுந்ததும் ஆற்றிலே சென்று மனம் குளிர ஸ்நானம் செய்யலாம். ஊருக்கு ஒரு மைல் அருகிலே பிரசித்திபெற்ற ஒரு சிவாலயம் வேறு இருக்கிறது. க்ஷேத்திராடனத்தில் பற்று உள்ளவர்களுக்கு நல்லதொரு

பொழுது போக்கும் இடமாகும். அருகிலே ஓர் அழகான சிறு குன்று வேறு இருக்கிறது. அத்தையவர்கள் வீட்டுச் சமையற்காரன் செய்து கொடுக்கும் சித்திரான்னங்களுடன் ஒரு நாள் பொழுதை அந்தக் குன்றிலே மிகவும் உல்லாசமாகக கழிக்கலாம். தன்னந்தனியாக அங்கே பொழுது எப்படிப்போகும் என்று கவலைப்பட வேண்டாம். அத்தையவர்களுடன் கூடத் துணைக்கு நானும் சில ஆட்களும் வருவோம். இங்கிருந்து நம் பண்ணையின் காரை எடுத்துக் கொண்டு புறப்பபட்டால் முக்கால் மணி நேரத்தில் கிராமம் போய்ச் சேர்ந்து விடுவோம். என்னைக் கேட்டால் நீங்கள் கொஞ்சமும் யோசிக்காது நாளையே புறப்பட்டாலும் நல்லதுதான்'' என்று மூச்சு விடாது பேசி முடித்தான் ரங்கதுரை.

தந்தையும் மகனும், தனது விருப்பத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூடக் கேட்காது இவ்வாறு வெளியூர்ப் பிரயாணம் ஒன்றுக்கு திட்டம் போடுவதைக் கேட்ட உமாவுக்கு சிரிப்பும் கோபமும் கலந்து வந்தன. வரதராஜன் பக்கம் திரும்பி மெல்லிய குரலில், ''என் ஆரோக்கியத்தைப் பற்றித் தாங்கள் எடுத்துக் கொள்ளும் சிரத்தைக்கு மெத்த வந்தனம். ஆனால் இது சமயம் பண்ணையை விட்டு நான் எங்கும்போக விரும்பவில்லை. அடுத்த வாரம் நடக்கப்போகும் 'மீனாக்ஷி இல்லத்து ஆண்டு விழா'வில் குழந்தைகளுக்குப் பரிசளிக்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். அதைச் செவ்வனே நடத்திக் கொடுக்க ஆசையாக இருப்பதால் ஊரைவிட்டு வெளியே போகத் தற்சமயம் எனக்கு நேரமும் இல்லை'' என்றாள் மிகவும் அசட்டையாக.

எந்த மனிதர்களின் உறவை அவள் நாடுவதைக் காண வெறுத்தானோ, அதே மனிதர்களுடன் உமா சென்று மேலும் மேலும் நெருக்கமாகத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதைக் காண ரங்கதுரையின் உள்ளம் அனலாகப் பற்றி எரிந்தது. 'சரி! சரி!



இதற்கு ஒரு முடிவு கட்டாவிடில் எல்லையை மீறிவிடும்' எனத் தனக்குள் எண்ணிக் கறுவியவனாக, ''அதனால் என்ன? மீனாக்ஷி இல்லத்துப் பரிசளிப்பு விழா முடிந்த பிறகு, இந்த வெளியூர்ப் பிரயாணத்தைப் பற்றி யோசித்தால் போகிறது!'' என்று பகட்டாகக் கூறினான். அன்று தந்தையும் மகனும் அவ்விடத்தை விட்டு மிகுந்த மன அதிருப்தியுடன் வெளியேறினார்கள்.

அன்று பிற்பகல் போஜனத்திற்குப் பிறகு மிகவும் அயர்வாக உமா வெகு நேரம் தூங்கிவிட்டாள். ஜன்னல் அருகே ஏதோ பேச்சுக் குரல் கேட்டதும் நித்திரை கலைந்து திடுக்கிட்டு எழுந்தாள் மாலைப் பொழுது மறைந்து சூரியன் அஸ்தமித்து இருள் பரவி வெகு நேரமாகிவிட்டதை உணர்ந்ததும் ஆச்சரியமடைந்தவ ளாகப் படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்து கொண்டு, ஜன்னலை மறைத்த திரைச் சீலையை விலக்கி விட்டுத் தோட்டத்தை எட்டிப் பார்த்தாள். கீழ்வானத்திலேயே லேசாக மேகத்தின் படலத்திலே மறைந்து கொண்டிருந்த நாலாம் பிறைச் சந்திரனின் மங்கிய ஒளியில், ஜன்னல் அருகே படர்ந்திருந்த மல்லிகைப் புதர் அருகே இருவர் நிற்பது கண்களுக்குப் புலனாகியது. மிகவும் தாழ்ந்த குரலில் அவர்கள் பேசிய போதிலும் உமாவுக்குக் காற்று வாக்கில் அவர்களது சம்பாஷணை மிகவும் தெளிவாகக் கேட்கவே, ஆச்சரியத்துடன் ஜன்னல் அருகே காதை வைத்து உற்றுக் கேட்கலானாள்.

''அப்படின்னா நேத்தைவிட உடம்பு இன்னிக்கு ரொம்ப ஜாஸ்தியாயிடுச்சுன்னு சொல்லு!'' என்றது ஒரு குரல்.

''என்ன செய்வேன் நான்? அந்த இடத்தைவிட்டு வெளியே போகக்கூட நமக்கு விதியில்லாம இருக்கு. இந்தப் பிழைப்பைவிட எங்க ரெண்டு பேருக்கும் சாவு வந்து விட்டாகூட மேலுன்னு நினைக்கிறேன்'' என்றது பதிலுக்கு மிகவும் வருத்தத்துடன் இன்னொரு குரல்.

''வருத்தப்படாதே காலையிலே கட்டாயம் மருந்தும் பார்லி அரிசியும் வாங்கிட்டு வந்துவிடுகிறேன். யாராவது பார்க்க போறாங்க...அந்தப் பாவிகள் கண்ணுலே பட்டு விடாதே! போ!'' என்று எச்சரித்தது முதல் குரல்.

மறுகணம் தோட்டத்துச் சருகுகள் மிதிபடும் மெல்லிய ஓசை கேட்டது. மல்லிகைப் புதர் அருகே நின்றுகொண்டிருந்த இருவரில் ஓர் ஆசாமி, செடி மறைவில் இங்குமங்கும் பதுங்கியபடி தோட்டத்தைவிட்டு, மெதுவாக வெளியேறுவதை உமா கவனித்தாள். அவளுக்கு ஆச்சர்யம் தாள முடியவில்லை. 'அந்த இருவர் யாராக இருக்கமுடியும்? அப்படி பயந்து சாகும் அளவிற்கு என்ன ரகஸ்யத்தை அவர்கள் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டார்கள்!' என்று எண்ணி பிரமித்தபடி அவள் தோட்டத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மல்லிகைப் புதர் அருகே நின்று கொண்டிருந்த முதல் ஆசாமி சற்று நேரம் சென்றதும் மெல்ல நடந்து ஜன்னல் ஓரமாக அப்பால் சென்றதுபோல் தோன்றவே, உமா ஆவலுடன் எட்டிப்பார்த்தாள். அடுத்த அறையில் எரிந்து கொண்டிருந்த மின்சார விளக்கின் ஒளி அந்த ஜன்னல் வழியே தோட்டத்திற்குள் வீசிக் கொண்டிருந்ததனால் தன் அறை ஜன்னலைத் தாண்டி அப்பால் சென்ற அந்த ஆசாமி, தோட்டக்கார சின்னமுத்துவின் மனைவி வீராயி என்பதை நன்றாகக் கண்டு கொண்டுவிட்டாள். ''அப்படியானால் ரகஸ்யமாகத் தோட்டத்தில் சந்தித்துப் பேசிய அந்த இரண்டாவது ஆசாமி யார்? ஒரு சமயம் தோட்டத்திலே விளையும் காய்கறிகளைத் திருட்டுத்தனமாக யாருக்கேனும் வீராயி விற்பனை செய்கிறாளோ என்னவோ? அப்படியென்றால் இதைவிடக் கூடாது. விசாரித்துத் தண்டிக்க வேண்டும்'' என்று ஒரு தீர்மானம் உமாவுக்குச் சட்டென்று ஏற்பட்டது.

மறுநாள் காலை தோட்டத்தைச் சுற்றிப் பார்வையிட உமா வந்தபொழுது வீராயியைக் கண்டதும் பதட்டமாக ''நேற்று



தோட்டத்திலே இருட்டிலே யாரோடு நீ அப்படி ரகஸ்யம் பேசிக் கொண்டிருந்தே?'' என்று கடுமையாக அதட்டிக் கேட்டு விட்டாள்.

புதிதாகக் கீரை பயிரிடப் பாத்தி கொத்திக் கொண்டிருந்த சின்னமுத்து, எஜமானியின் முகத்திலே படிந்து நின்ற கோபத்தைக் கண்டதும் பயந்து நடுநடுங்கிப் போய் விட்டான். கொலைக் குற்றம் செய்தவள்போல் வீராயி எஜமானியைப் பார்த்து மிரண்டு விழித்தாள். அதைக் கண்டதும் உமாவின் சந்தேகம் வலுக்கத் தொடங்கியது.

''உங்களுக்கு ஒரு குறைவுமில்லாது நல்ல சம்பளம், தங்க வசதியான இடம் எல்லாம் கொடுத்து வருகிறேன். அப்படியிருந்தும் திருப்தியில்லாது பேராசையுடன் தோட்டத்துக் காய்கறிகளைப் பறித்து திருட்டுத்தனமாக வெளியே கொடுத்து வியாபாரம் செய்து பணம் திரட்ட முயற்சி செய்கிறதைக் காணும்போது....'' என்று கூற முடியாது கோபத்தோடு நிறுத்தினாள்.

''ஐயோ அம்மா! இந்த மாதிரி ஈன வேலை செய்கிறதாக உங்களுக்கு யார் சொன்னாங்க? நான் ஒரு பாவமும் அறியேன், அம்மா!'' என்று வீராயி அழுது விடுகிறவள்போல் அரற்றினாள்.

''அப்படியானால் நேற்று நீ இங்கே யாரையோ சந்தித்து மிகவும் ரகஸ்யமாகப் பேசினாயே, அது என்ன என்பதைக் கூறிவிடு, பயப்படுவானேன்?'' என்ற மிரட்டினாள் உமா விடாப்பிடியாக.

சின்னமுத்து மனைவியின் முகத்தைப் பார்த்து 'சொல்லி விடு' என்பதுபோல் ஜாடை செய்தான். வீராயி தொண்டையை இருமிச் சரிப்படுத்திக் கொண்டாள். ''அம்மா! நான் பூரா விஷயத்தையும் சொல்லிவிடுகிறேன். அப்பத்தான் உங்களுக்கு விளங்கும். நேற்று என்னைப் பார்க்க மாந்தோப்பிலிருந்து

கட்டையன் பெண்ஜாதி அஞ்சலை வந்திருந்தா. அவளோட புருஷனுக்கு ரெண்டு நாளா காய்ச்சல் மும்முரமாக வீசுதாம். மருந்து வாங்க முடியாம பார்லி அரிசிகூட வாங்க முடியாதபடி தவிச்சுகிட்டுக் கிடந்தாளாம். அதுக்காத்தான் என்கிட்ட ஓடி வந்தா அம்மா'' என்றாள் தயக்கமாக.

உமா வியப்பாக அவளை உறுத்து விழித்தாள். ''அவ்வளவு பயந்து கொண்டு பதுங்கி இங்கே வரக் காரணம்? கொலைக்குற்றம் செய்துவிட்டவள்போல ஏன் அப்படி நடுங்கினாள் அவள்?'' என்ற பிரமிப்புடன் கேட்டாள்.

''பண்ணை மானேஜர் ஐயாவுக்கோ அவர் மகனுக்கோ அஞ்சலை வெளியே வந்தது தெரிஞ்சா தோலை உரிச்சுப்பிடுவாங்க அம்மா. கட்டையனும் அஞ்சலையும் மாந்தோப்பு பங்களாவை விட்டு உசிர் போனாலும் வெளியே வரவே கூடாதுன்னு கடுமையான உத்தரவு அம்மா!'' என்றாள் வீராயி.

''இதென்ன வேடிக்கையாக அல்லவா இருக்கிறது. அவர்கள் இருவரும் அப்படி என்ன கைதிகளா? நீ சொல்கிறது ஒன்றும் விளங்கவில்லையே? வெளியே வந்தால் என்ன குற்றமாம்!'' என்று வியப்பாகக் கேட்டாள் உமா.

மண்வெட்டியைக் கீழே வைத்துவிட்டுக் கையில் படிந்திருந்த மண்ணை உதறிக்கொண்டு சின்னமுத்து எஜமானி அருகே வந்தான். ''அம்மா உங்களைப் போல நல்ல மனசு படைச்சவங்க எங்களுக்கு எஜமானியாக வந்தது கடவுள் அருள்தான். அம்மா, எங்க மனக்குறைகளை உங்ககிட்ட தாராளமா பயமில்லாம சொல்லிக்கிடலாம்னு நம்பிக்கை ஏற்படுகிறது. கட்டையனை நீங்க சீக்கிரமா மாந்தோப்பு வேலையிலிருந்து நீக்கி விட்டீங்கன்னா நல்லா இருக்கும். அவனுக்கு வேறே வேலைகூட வேணாம். கையிலே கொஞ்சம் ஏதாச்சும் கொடுத்து அனுப்பினா அவனும் அவன் பெண் ஜாதியும் சந்தோஷமா உங்களை மனசார வாழ்த்திக்கிட்டு அவுங்க கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்துடுவாங்க'' என்றான்.



''ஏன்? கட்டையனுக்குத் தன் வேலையில் என்ன குறை? சம்பளம் போதவில்லையா? வேலை கஷ்டமாக இருக்கிறதா?'' என்று உமா வினவினாள்.

''அதெல்லாம் ஒன்றுமில்லையம்மா, நீடிச்சு அந்தப் பங்களாவிலே வேலை செய்தால் அவனுக்கு நிச்சயமாக சீக்கிரம் பைத்தியம் பிடித்துவிடும்'' என்றான் சின்னமுத்து.

''அந்தப் பங்களாவிலே ஏதோ ஒரு பெரிய பேய் வாசம் செய்கிறதாம் அம்மா, அதிலே போய்த் தங்கி வாழ்ந்தவங்க யாரும் உருப்பட்டதில்லையம்மா, கட்டையன் பெண் ஜாதிக்கு ராத்தூக்கமே கிடையாது. ராவிலே ஒரு இடத்திலே படுத்தா அந்த இடத்திலேயே மனுஷங்க இருக்க முடியாதாம். திடீர் திடீர்னு தூக்கிப் போடுமாம். ஏதோ ஒண்ணு வந்து காத்து போல தலைமுடியைப் பிடிச்சு அலாக்காத் தூக்கி வந்து வாசலிலே போட்டுடுதாம். ஆச்சு, அவங்களும் அந்தப் பங்களாவிலே குறைஞ்சது இருபத்து அஞ்சு வருஷம் போல இருந்து விட்டாங்க. ஒவ்வொரு நாளும் பேய்க்கு பயந்து வாழறதுன்னா யாராலே அம்மா முடியும்? இதனாலேயே கட்டையனுக்கு அடிக்கடி காய்ச்சல் வந்துவிடுது'' என்றாள் வீராயி.

''பேய்க்கும், கட்டையன் பங்களாவை விட்டு வெளியே வரக்கூடாது என்ற தடை உத்தரவுக்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டாள் ஆச்சரியத்துடன் உமா. மாந்தோப்பு பங்களாவைப்பற்றித் தோட்டக்கார தம்பதிகள் கூறியதைக் கேட்க அவளுக்கு வேடிக்கையாகத்தான் இருந்தது.

மனைவி இதற்குப் பதில் அளிக்குமுன் சின்னமுத்து குறுக்கிட்டான்.

''ஆரம்பத்திலே கட்டையன் எங்களோடு தோட்டத்திலே வேலை செய்து கொண்டிருந்தான். அம்மா, சில சமயம் எஜமானியம்மாவுக்கு அவன் வண்டி ஓட்டிக் கொண்டு போவான். மத்த வேளைக்குத் தோட்டத்திலே என்னோடு கூட வேலை செய்வான். அவன் பெண்ஜாதி ஒரு விதத்திலே என் பெண்ஜாதிக்கு உறவுப் பொண்ணு. அதனாலே நாங்க நாலு பேரும் ஒண்ணாகத் தோட்டத்து வீட்டிலே சந்தோஷமாக வாழ்ந்துக்கிட்டிருந்தோம்.

''ஒரு சமயம் கட்டையனை மானேஜர் அய்யா இந்தத் தோட்டத்து வேலையிலிருந்து மாத்தி மாந்தோப்பு பங்களா தோட்டத்து வேலைக்கு அமர்த்தினார். அதுக்கப்பாலே அங்கேயே அவனை நிரந்தரமாக பெண்ஜாதியோட வேலை செய்யும்படி உத்தரவு போட்டு விட்டாங்க. மாந்தோப்பு பங்களாவுக்குப் போனதும் ஒரே மாசத்திலே கட்டையன் ரொம்ப மாறிப் போய்விட்டானுங்க. ஏதோ காத்து தோஷத்துல அவன் மூளையே கலங்கிப் போயிடுச்சு. திடீர் திடீர்னு நாலு மாசம் அஞ்சு மாசத்துக்கு ஒரு வாட்டி அவனுக்குப் பைத்தியமே பிடிச்சுப் போயிடுது. காச்சு மூச்சுன்னு கத்திக்கிட்டு தோட்டத்தைச் சுத்தி ஓடுவான். கையில கிடைத்த பொருளை உடைச்சு நாசப்படுத்துவான்.

''எத்தனையோ வாட்டி அஞ்சலை மானேஜர் ஐயாகிட்ட இதைப்பத்தி முறையிட்டுக் கொண்டாங்க. ஆனால் அவர் ஒரே பிடிவாதமாகக் கட்டையன் அந்த வேலையை விட்டு அப்பால் போகக் கூடாதுன்னு கடும் உத்தரவு போட்டு விட்டார். பங்களாவை விட்டு புருஷனோ, பெண்ஜாதியோ வெளியே தலையைக் காட்டக் கூடாதுன்னு மானேஜர் உத்தரவு. அப்படி வெளியே வந்தது தெரிஞ்சா, மானேஜர் தயவு பார்க்காது தோலைப் பிய்ச்சு எடுத்து விடுவார். நான் மட்டும் கட்டையனாக இருந்தா இந்த மானேஜர் ஐயாவுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு எப்பவோ வேலையை விட்டு போயிருப்பேன்.



ஆனால் கட்டையன் ஏனோ அவர் பெயரைக் கேட்டாக்கூடப் பயப்பட்டுச் சாவறான். அவரு மூஞ்சியைக் கூட நிமிர்ந்து பார்க்கப் பயப்படுகிறான். நீங்களே சொல்லுங்க அம்மா, கட்டையன் வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? பேய்க்கும் பிசாசுக்கும் பயந்துகிட்டு சதா அதே வீட்டிலே எத்தனை நாள்தான் ஒரு மனுசன் வாழ முடியும்?'' என்று கடகடவெனப் பேசிவிட்டுப் பெருமூச்சு விட்டான்.

''அப்படியா? நீ சொல்வதையெல்லாம் கேட்க மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. இருந்த போதிலும் மானேஜர் ஐயா பிடிவாதமாகக் கட்டையனை அந்தப் பங்களாவில் கைதிபோல் இருத்தி வைத்திருக்கும் காரணம்தான் புரியாத புதிராக இருக்கிறது. கேட்க வேடிக்கையாகவும் இருக்கிறது'' என்றாள் உமா.

''ஏன் அவனுக்கு இந்த விதமான தண்டனையின்னு எங்க ஒருத்தருக்குமே விளங்கலை அம்மா. இதைப்பத்தி நீங்க தான் தீர விசாரிச்சு, கட்டையனுக்கு ஓர் ஆதரவு கொடுக்கணும்'' என்று விநயமாகக் கேட்டுக் கொண்டான் சின்னமுத்து.

''அப்படியே செய்கிறேன்'' என்று கூறிவிட்டு உமா மாளிகைக்குள் திரும்பி சென்றாள்.

அன்று இரவு இதைப்பற்றி அவள் வெகுவாகச் சிந்தித்த வண்ணம் உறக்கமின்றி, படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். மானேஜர் வரதராஜன் கட்டையன் விஷயத்தில் கடுமையாக நடந்து கொள்வதில் ஏதோ மர்மம் இருப்பதாக அவளுக்குத் தெள்ள தெளிவாக விளங்கியது. அனுபவமும், சாதுர்யமும், புத்திசாலித்தனமும் மிகுந்த மானேஜர் அனாவசியமாக ஒரு வேலைக்காரன் மீது வன்மம் காட்ட மாட்டார். அதற்கு முக்கியமாக ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும் என்று அவளது ஊகம் தெளிவாக எடுத்துக் காட்டவே, அதைப்பற்றி ஆராய்வது என்ற தீர்மானத்தை உடனே மேற்கொண்டாள்.

கட்டையன் மீது மானேஜர் காட்டும் துவேஷத்திற்கும், பண்ணை வாழ்க்கைக்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இருப்பதாக அவளது உள்ளுணர்வு கூறவே, உமா மறுநாளே சென்று மாந்தோப்பில் கட்டையனைக் கண்டு விசாரிப்பது என்ற முடிவுக்கும் வந்து விட்டாள். அதற்குப் பின்னர்தான் அவளுக்கு அன்று இரவு உறக்கம் வந்தது.

## 18

பகல் போஜனத்திற்குப் பிறகு, வரதராஜன் தங்கள் வீட்டின் முற்பகுதியை அலங்கரித்துக் கொண்டிருந்த அழகிய ஊஞ்சல் பலகைமீது வந்து அமர்ந்து கொண்டார். அண்ணன் அருகில் நின்று உபசாரம் செய்து கொண்டிருந்த ஷண்பக வல்லி, தன் தமையன் அன்று மிகவும் உற்சாகக் குறைவாக இருப்பதைக் கண்டாள். ஏற்கனவே வயோதிகத்தில் நலிந்துவிட்டிருந்த அவரது முகம் அன்று மிகவும் வாட்டமாகக் காணப்பட்டது. வெள்ளித் தட்டில் துளிர் வெற்றிலையையும், வாசனைப் பாக்கையும் நிரப்பிக்கொண்டு வந்து அவர் அருகே வைத்துவிட்டு, ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்துக்கொண்டு சகோதரி நின்றாள். தமையன் தலையைக் குனிந்தபடி சிந்தனையே உருவாக வீற்றிருப்பதைக் காண அவளால் சும்மா இருக்க முடியவில்லை.

''அண்ணா உங்கள் உடம்பிற்கு என்ன?'' என்று தங்கை மிகவும் பரிவுடன் கேட்டாள்.

வெற்றிலைமீது படிந்திருந்த நீர்த்துளிகளை மிக்க கவனமாகத் தனது மேல் துண்டினால் துடைத்துக் கொண்டிருந்த வரதராஜன் தலையை நிமிர்த்திப் பார்த்தார்.

''உடம்பிற்கு ஒரு கேடும் இல்லை. உள்ளத்தில்தான் எல்லாக் கேடும் வந்து சேர்ந்திருக்கிறது'' என்றார் வெறுப்பாக.



ஓர் அளவுக்கு அவருடைய மன வேதனையின் கருத்தை ஷண்பகம் புரிந்து கொண்ட போதிலும் விடாப்பிடியாக ''மர்மமாகப் பேசினால் புரியவில்லையே அண்ணா! உங்கள் மனத்தை வாட்டும் வேதனையை என்னிடம் சொல்லக் கூடாதா?'' என்று தேன் போன்ற குரலில் மிகவும் அன்பாகக் கேட்டாள்.

வரதராஜன் பதிலுக்குத் தன் தங்கையின் முகத்தை அர்த்த பாவத்துடன் உற்றுப் பார்த்தார். ''எல்லாம் உனக்குத் தெரிந்த விஷயந்தான் ஷண்பகம். அதைத் திருப்பித் திருப்பிப் பேசவும் கசப்பாக இருக்கிறது. ரங்கதுரையிடமிருந்து நாம் எதிர்பார்த்த பயனைப்பற்றியும், அவன் தற்சமயம் நடந்து கொள்ளும் முறையைப் பற்றியும் எண்ணும்போது என் நெஞ்சம் ஆத்திரத்தில் கொதிக்கின்றது. அவனது வருங்கால க்ஷேமத்திற் காக நீயும் எவ்வளவோ தியாகங்கள் செய்திருக்கிறாய். இல்லையா? யோசித்துப்பார்! நீயும், நானும் அவனுக்காக இதுநாள் வரை பட்ட பாடெல்லாம் விழலுக்கு இறைத்த நீராகவல்லவா வீணாகிக்கொண்டு வருகிறது? போனால் போகிறான் என்று இதுவரை நானும் பொறுத்துக் கொண்டுதான் வந்தேன். ஆனால் சமீபகாலமாக அவன் நடந்துகொள்ளும் முறை என் பொறுமை எல்லாவற்றையும் சோதித்துவிட்டது'' என்றார் மிகவும் வெறுப்பாக.

ஷண்பகம் பதில் பேசாது மௌனமாகத் தரையைப் பார்த்த வண்ணம் நின்றுகொண்டிருந்தாள்.

வரதராஜன் தொடர்ந்து தமது மனத்தாங்கலைப்பற்றிப் பேசலுற்றார். ''பணத்தைத் தண்ணிபோல் வாரிச் செலவு செய்கிறான். துஷ்டர்கள் சகவாசமும், துர்ப்பழக்கங்களும் மிகவும் அதிகமாகிவிட்டன. தலைக்கு மிஞ்சிய பிள்ளையாகி விட்டதனால் என்னால் அடக்கி ஆளவும் முடியவில்லை.

கண்டிப்பாகப் பேசக்கூட அச்சமாக இருக்கிறது. ரங்கதுரை இப்படியே தான் தோன்றியாகப் போய்க்கொண்டிருந்தால் சில நாட்களில் நீயும் நானும் அழகர்நத்தம் தெருவிலே பிச்சை எடுத்துச் சாப்பிடும் கதிக்கு வந்துவிடுவோம் ஷெண்பகம்!'' என்றார் மிகவும் கோபத்துடன்.

''காலாகாலத்தில் ஒரு கால்கட்டு போட்டு விட்டால் சரியாகிவிடும், அண்ணா. வாலிப வயசு, அப்படித்தான் எல்லோரும் இருப்பார்கள்'' என்றாள் ஷெண்பகம் புரிந்து கொண்டு.

வரதராஜன் பதிலுக்கு சூள் கொட்டினார். ''ரங்கதுரை விஷயம் இப்படி இருக்கிறதென்றால், அந்தப் பண்ணையார் மகள் சங்கதியோ அதற்குமேல் இருக்கிறது. தகப்பன் சொத்து முழுவதையும் தான் ஒருத்தியே ஆளப் பிறந்திருக்கிறோம் என்று கர்வம் அந்தப் பெண்ணின் தலையை ஒரேயடியாகத் திருப்பிவிட்டிருக்கிறது. என் வயதிற்கோ, பதவிக்கோ அந்தப் பெண் மதிப்புக் கொடுப்பதில்லை. பண்ணை மானேஜர் என்ற பதவியில் அந்த ஏகாம்பரத்தை என் கைப் பொம்மையாக ஆட்டிவைத்த காலம்போய், இந்தச் சின்னஞ்சிறு குட்டியிடம் அடிமையாகக் கைகட்டி வாழ நேர்ந்ததே என்பதை நினைக்கும்போது என் நெஞ்சு குமுறுகிறது'' என்று கோபத்துடன் சற்று உரத்த குரலில் பேசினார்.

ஷெண்பகவல்லி தன் கீழ் உதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டாள். பால்போன்ற அவளது முகம் ஒரு கணம் குப்பென்று சிவந்து போயிற்று. ''நீங்கள் சொல்வதைக் கேட்டால் இந்தப் பெண் அவள் தாயாருக்கு மேல் பலே கர்வியாக இருப்பாள் போலிருக்கிறதே!'' என்று கேட்டாள்.

''தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாய்கிறது. இவளைச் சொல்லிக் குற்றமில்லை. அந்தப் பாவி ஏகாம்பரம்



கடைசியில் என்னை மோசம் செய்துவிட்டுப் போய்விட்டான். அதைப் பற்றிப் பேசும்போது என் உடல் எல்லாம் அனலாகப் பற்றி எரிகிறது. அதற்கு இப்பொழுது நேரம் இல்லை'' என்றார் ஆத்திரத்துடன்.

ஷெண்பகம் பதில் கூறாது வெள்ளித்தட்டை எடுத்துக் கொண்டு உள்ளே போக ஆயத்தமானாள். அது சமயம் யாரோ வாயில் கதவை மெல்ல உள்ளே தள்ளித் திறக்க முயற்சிப்பதைக் கண்ணுற்ற வரதராஜன், தாம் மேலே கூற வந்ததைச் சட்டென்று நிறுத்திக் கொண்டார்.

பண்ணை வேலையாள் பங்காருசாமி அடக்க ஒடுக்கமாக உள்ளே நுழைந்து சுவர் ஓரமாக பயபக்தியுடன் வந்து நின்றான். மானேஜர் அய்யாவைக் கண்டதும் பெரிய கும்பிடு போட்டுவிட்டு மேல்துண்டை எடுத்து இடைமீது கட்டிக் கொண்டான்.

''என்ன சமாசாரம்?'' என்று அதட்டலாகக் கேட்கும் பாவனையில் தமது புருவங்களை உயர்த்தூக்கி, மானேஜர் அவனை முறைத்துப் பார்த்தார்.

''பண்ணையம்மா தங்களைக் கையோட உடனே கூட்டிவரச் சொன்னாங்க'' என்று திணறினான் பங்காருசாமி.

''கையோட கூட்டிவரச் சொன்னாங்களா? அப்படி என்ன அவசரம்?'' என்று வியப்பாகக் கேட்டார் வரதராஜன்.

உள்ளே போகத் திரும்பிய ஷெண்பகம் அவன் வாயைப் பார்த்துக்கொண்டு ஆவலாக நின்று விட்டாள். பங்காருசாமி அசட்டுச் சிரிப்புடன் தன் தலையைச் சொறிந்து கொண்டான். ''அது என்னவோ தெரியாதுங்க! அம்மா தங்களை உடனே புறப்பட்டு வரும்படி சொல்லச் சொன்னாங்க'' என்றான்.

சற்று யோசனைக்குப்பின் ''சரி, நீ போ! இன்னும் கொஞ்ச நேரத்தில் வருகிறேன்'' என்று அவனுக்கு விடை கொடுத்துவிட்டு, வரதராஜன் சகோதரி அருகில் வந்தார்.

''நான் சொன்னதை நீ நம்பாவிட்டாலும் இப்போதாவது புரிந்து கொண்டாயா? இந்தப் பெண்ணுக்கு எத்தனை ஆணவம்? என் வயசென்ன? என் கௌரவமென்ன? பண்ணையில் பணிபுரிகிறேன் என்பதனால் இவளது அடிமையா நான்? எதற்காக, ஏன் என்று ஒரு கடிதத்தில் விவரமாக எழுதிக் கொடுத்தனுப்பாது இந்தப் படை படைக்கும் வெய்யிலில் 'ஓடி வா!' என்று உத்தரவிட்டிருக்கும் அகங்காரத்தைப் பார்?'' என்று கோபத்துடன் கூறிவிட்டு முன்னும் பின்னும் ஹாலில் உலாவினார்.

''அம்மாவுக்கு இருந்த அத்தனை கர்வமும் மகளிடமும் குடிகொண்டிருக்கிறதே!'' என்று இகழ்ச்சியாகச் சொன்ன ஷண்பகம் தன் முத்துப் பற்கள் ஒளி வீசச் சிரித்தாள்.

''தாயைப் போன்று அகங்காரியாக இருந்தால், தாய் அடைந்த கதியைத்தான் மகளும் அடைய நேரிடும்'' என்று ஆத்திரமாகக் கூறிய வரதராஜன் ஆணியில் மாட்டியிருந்த தமது மேல் சட்டையையும் அங்கவஸ்திரத்தையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

அவரது வரவிற்காக மிகவும் ஆவலுடன் காத்துக் கொண்டு நின்ற உமா மானேஜரைக் கண்டதும் பணிவாக வரவேற்று ஆசனத்தில் அமரும்படி உபசரித்துவிட்டுத் தானும் அவர் எதிரே வந்து உட்கார்ந்து கொண்டாள். அவளது தோற்றம், அவளிடம் காணப்பட்ட ஓர் அமைதி இன்மை, அனைத்தும் அவள் ஏதோ ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றிப் பேசப் போகிறாள் என்பதை வரதராஜனுக்கு முன்கூட்டியே எச்சரித்தன.



சற்று முற்றும் கவனித்துவிட்டு, உமா தனது தொண்டையை இருமிச் சரிப்படுத்திக் கொண்டாள். தனது துணிவு முழுவதையும் ஒருங்கே திரட்டிக்கொண்டு மிகவும் அமைதி நிறைந்த குரலில் ''நமது மாந்தோப்பு பங்களாவைக் காத்துவரும் கட்டையன் மிகவும் வியாதியாக இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவனுக்கு வயதும் அதிகமாகிவிட்டது. அடிக்கடி வியாதியாகப் படுத்து விடுகிறான். அதனால் அவனுக்கும் அவன் மனைவிக்கும் இம்மாதத்துடன் உபகாரச் சம்பளம் கொடுத்து அனுப்பி விடுவது நலம் என்று நினைக்கிறேன்'' என்றாள்.

வரதராஜன் தமக்குள் எழுந்த சினத்தைச் சிரமப்பட்டு கட்டுப்படுத்திக் கொண்டார். ''தாங்கள் மிகவும் அவசரமாக உடனே வரும்படி அழைத்ததைக் கேட்டதும் நான் ஏதோ முக்கியமான விஷயம் என்று பதறிக்கொண்டு ஓடி வந்தேன்'' என்று இழுத்தாற் போல் கூறிவிட்டு கபடமாகச் சிரித்தார்.

உமா நிமிர்ந்து அவரை நேருக்குநேர் மிக்கத் துணிவாகப் பார்த்தாள். ''மிகவும் முக்கியமான விஷயமாதலால்தான் உங்களை உடனே கையோடு வரவழைத்தேன். கட்டையன் நாளுக்கு நாள் இளைத்துத் துரும்பாகிக் கொண்டு வருகிறானாம். அவன் செய்து வரும் இந்த வேலை அவனது மனத்திற்கும், உடலுக்கும் ஒத்து வரவில்லையென்றும் அறிகிறேன். மாந்தோப்பு பங்களாவை விட்டு வெளியேறினால்தான் தன் உடல்நிலை குணமாகும் என்று அவன் நம்புகிறான். அதனால் அவனை உடனே அங்கிருந்து அப்புறப்படுத்தவும், தக்க வைத்தியம் செய்து குணப்படுத்தவும் தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். நமது பண்ணையில் வேலைசெய்யும் எந்தத் தொழிலாளியும் தன்னை எஜமானி நன்றாகப் பராமரிக்க வில்லை என்று எண்ணக் கூடாது. அதனால்...'' என்று முடிக்காது நிறுத்தினாள்.

கட்டுக்கடங்காது எழுந்த கோபத்தில் வரதராஜனின் உதடுகள் துடித்தன. ''கட்டையனுக்கு எந்தவிதமான குறையும் கிடையாது அம்மா! நீங்கள் கேள்விப்பட்ட சங்கதி அனைத்தும் வீண் கதைகள். ஒன்றுமட்டும் நான் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். இந்தப் பண்ணையில் வேலை செய்யும் எல்லா ஆட்களும் மொத்தத்தில் திருப்தியற்றவர்கள். கொடுக்கிறவர் களைக் கண்டால்தான் இந்த ஆட்கள் தங்கள் வாலை ஆட்டுவார்கள். ஒவ்வொருவருக்கும் நாம் குறைவில்லாது வேலைக்குத் தகுந்த கூலி கொடுக்கிறோம். தீபாவளி பொங்கல் போன்ற பண்டிகைகளுக்குத் தனிப்பட வேறு பரிசுகள் பல வழங்குகிறோம். இவ்வளவு பெற்றுக் கொண்டும் இவர்கள் ஒருவருக்காவது திருப்தியோ நன்றியோ இருப்பதில்லை. இன்னமும் கொஞ்சம்கூட சம்பளம் கேட்கலாம் என்ற கெட்ட எண்ணத்துடன் அடிக்கடி இவர்கள் இப்படிப் பொய்யாக ஏதாவது குறைகள் கூறிக்கொண்டு திரிவார்கள். கட்டையன் சுபாவத்தில் மகா சோம்பேறி. வேலை செய்யாது மாதச்சம்பளத்தை மட்டும் வாங்கிக் கொண்டு, சுகமாகத் திரிந்து கொண்டிருந்தான். கொஞ்சம் அதிக வேலை கொடுக்கப்பட்டு விட்டால் வியாதி என்று வேஷம் போடுகிறான். அவ்வளவுதான். அவன் விஷயத்தில் தாங்கள் இரக்கப்பட வேண்டிய அவசியமே இல்லை'' என்று கடுமையாகச் சொன்னார் மானேஜர்.

''அப்படியென்றால் இஷ்டப்படாத வேலையாட்களை நாம் இங்கே வைத்துப் பராமரிக்க முயற்சிப்பது தவறு அல்லவா? வேலை செய்ய இஷ்டமில்லாவிடில் கட்டையன் நமது பண்ணையிலிருந்து நின்றுவிட வேண்டியவன். அவனை நிர்ப்பந்தித்து மாந்தோப்பைக் கவனித்துக் கொள்ள நாம் வற்புறுத்துவது அனாவசியம் அல்லவா?'' என்று துணிவுடன் கேட்டாள் உமா.



வரதராஜன் பதிலுக்குத் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ''கட்டையன் மீது தாங்கள் இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொள்ளத் தேவையில்லை என்பதுதான் இதற்கு எனது பதில். அவனை உடனே வேலையிலிருந்து நீக்கி விடமுடியாது என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்'' என்று பதில் அளித்த வரதராஜன் தமது அங்கவஸ்திரத்தை மெல்ல ஒரு முறை தடவிக் கொண்டார்.

''ஏனோ?'' என்று உமா விடாப்பிடியாகக் கேட்டது அவரது சினத்தைக் கிளறி விட்டது. ''தாங்கள் இவ்வாறு வற்புறுத்திக் கேட்பதனால் நான் மனம் விட்டுப் பேச விரும்புகிறேன். இந்தப் பண்ணையில் மானேஜர் என்ற பதவியில் நான் பல வருஷங்களாக ஊழியம் புரிந்து வருகிறேன். திரு. ஏகாம்பரம் அவர்களுக்கு நான் அந்தரங்கக் காரியதரிசியாகவும் வேலை பார்த்து வந்திருக்கிறேன். ஆனால் பண்ணையாரைப் பற்றிய அந்தரங்கங்களை அறிய நான் முயன்றதே இல்லை. அவரது வாழ்க்கையில் பிறர் கண்ணுக்கும், காதுகளுக்கும் எட்டாது மூடிவைக்க வேண்டிய சில ரகசியங்கள் இருந்திருக்கின்றன. அவை யாது என்று என்னைக் கேட்காதீர்கள். அவை என்ன என்று யாருக்குமே தெரியாது. அதில் சம்பந்தப்பட்ட ஒரு சிலரிடம் அவருக்கு என்றுமே பயம் உண்டு. அவர்களைக் கண்டு அஞ்சி வாழ்ந்து கொண்டிருந்தார் என்று மட்டும் நான் அறிவேன்.

''இந்தக் கட்டையன் தங்கள் தந்தையைக் கண்டு மிகவும் அஞ்சினான். தங்கள் தந்தை இவனைக் கண்டு ஏனோ அஞ்சி வாழ்ந்தார்! உங்களுக்கு இதைக் கேட்டால் அதிசயமாக இருக்கலாம். ஆனால், இது உண்மை. உங்கள் தந்தைக்கும், அவரிடம் பணிபுரிந்து வந்த வேலைக்காரனுக்கும் இடையே என்ன ரகஸ்யம் இருந்ததோ எனக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் இருவரிடையே ஓர் ஒப்பந்தம் இருந்திருக்கிறது. அதன் பயனாக கட்டையன் தன் காலம் முழுவதும் மாந்தோப்பு

பங்களாவில் வேலை பார்க்க வேண்டுமென்று பண்ணையார் உத்தரவிட்டிருந்தார்'' என்றார் வரதராஜன்.

அவர் முடிக்கு முன் பொறுமையற்ற உமா குறுக்கிட்டாள். ''தாங்கள் கூறுவதற்கும் நான் கேள்விப்பட்டதற்கும் அதிகம் வித்தியாசம் இருக்கிறது. கட்டையன் என் தந்தையிடம் ஏதோ ஒரு காரணத்திற்காகப் பயந்து கொண்டு வாழ்ந்தான் என்கிறீர்கள். ஆனால் கட்டையன் தற்சமயம் தங்களிடம் மிகவும் அஞ்சி வாழ்வதாக அல்லவா தெரிகிறது? தங்களிடம் அவனுக்கு ஏன் பயம்? வெளியே செல்லக்கூட உரிமைஇன்றி அவனைச் சதா மாந்தோப்பு பங்களாவிலேயே வாழ வேண்டும் என்று தாங்கள் உத்தரவிட்டிருக்கிறீர்களாமே. அது ஏன்? அவன் தங்களுடைய கைதி அல்லவே!'' என்று கோபமாகக் கேட்டாள்.

வரதராஜனின் முகம் சிவந்து போயிற்று. நரைத்த மீசை துடித்தது. ''தவறான செய்திகள் பலவற்றைக் கேட்டு விட்டுத் தாங்கள் என்னிடம் தாறுமாறாகக் கேள்விகள் கேட்டு, மனத்திற்குச் சஞ்சலம் கொடுக்கிறீர்கள். இந்தக் கேள்விகளுக்கு நான் பதில் அளிக்கக் கடமைப்பட்டவன் அல்ல. இவை எனது உத்தியோகத்திற்குச் சம்பந்தமற்றவை. உங்கள் தந்தை மரணமடைவதற்குச் சில தினங்களுக்கு முன்பு, கட்டையன் விஷயமாக ஓர் அந்தரங்கத்தை என்னிடம் எடுத்துக் கூறினார். அதன் காரணமாக நான் கட்டையனிடம் சற்றுக் கடுமையாக நடந்துகொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டேன். மாந்தோப்பை விட்டு அவன் வெளியே நடமாடக்கூடாது என்று கடுமையாக உத்தரவு இட்டதற்கும் ஒரு காரணம் உள்ளது.

''உங்கள் குடும்பத்தைப் பற்றிய மிகவும் பயங்கரமான ஒரு ரகசியத்தைக் கட்டையன் அறிவான். ஆனால் அவன் ஒரு பெரிய தவறு செய்திருப்பதனால் பண்ணையாரிடம் என்றுமே அவனுக்குப் பயம். அவனை வெளியே விட்டால் பண்ணையின் அந்தரங்கம் அம்பலமாகிவிடும் என்ற நோக்கத்துடன்



அவனை மாந்தோப்பிலே இருத்தி வைக்கும்படி பண்ணையார் என்னைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவ்வளவுதான். சுருக்கமாகக் கூற வேண்டுமானால், எங்கே தன்னைக் கொன்று விடுவானோ என்று அஞ்சி ஓடுகிற சர்ப்பத்தைப் போலவும், எங்கே அந்தச் சர்ப்பம் தன்னைத் தீண்டி விடுமோ என அஞ்சி ஓடுகிற மனிதனைப் போலவும் பண்ணையார் கட்டையன் தொடர்பு இருந்து வந்திருக்கிறது. பண்ணையாருக்குக் கட்டையனைப் பற்றித் தெரிந்திருந்த அந்த விஷயம் எனக்குத் தெரியும் என்பதை அறிந்துள்ள கட்டையனுக்கு என்னைக் கண்டால் பயம் ஏற்படுவது இயற்கையே! ஆனால், எனக்கு அவனைக்கண்டு பண்ணையார் போல் எந்தவிதமான பயமும் இல்லை. ஆதலால் அவனைச் சுலபமாக அடக்கி ஆள முடிகிறது.

''ஆகவே, அம்மா! தாங்கள் கட்டையன் பொருட்டு கிஞ்சித்தும் இரக்கம் காட்டி மனம் கசிந்து உருகத் தேவையே இல்லை. அவனுக்கு இரக்கம் காட்டினீர்களானால் பிறகு நீங்கள் வருந்த நேரிடும் என்பதை மட்டும் எச்சரிக்க விரும்புகிறேன்'' என்று படபடவென்று பேசித் தள்ளினார்.

வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்த உமா பெருமூச்செறிந்தாள். ''என் தந்தை கடைசிக் காலத்தில் தங்களிடம் வெளியிட்ட அந்த அந்தரங்கத்தை நான் அறியலாமா? அதை நான் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமல்லவா?'' என்று கேட்டாள்.

வரதராஜன் தமது அங்கவஸ்திரத்தைக் கழுத்திலிருந்து எடுத்து உதறிவிட்டு, மீண்டும் அணிந்து கொண்டு எழுந்தார். ''அந்த ரகஸ்யத்தை யாரிடமும் நான் வெளியிடக்கூடாது என்று பண்ணையார் என்னிடம் சத்தியவாக்கு வாங்கிக் கொண்டிருப்பதால் நான் அதை உங்களிடம் கூற முடியாத நிலையில் இருக்கிறேன். மேலும் அவைகளை அறிந்து கொள்வதனால்

தங்களுக்கு எந்தவிதமான பயனும் ஏற்படப் போவதில்லை. தாங்கள் இன்று அவசரமாக என்னைக் காண விரும்பிய விஷயம் வேறு ஏதேனும் இருந்தால்...'' என்று நிறுத்தினார்.

அகந்தையாகவும், தன் தந்தையைப்பற்றிய ஒரு பெரும் ரகஸ்யம் தனக்குத் தெரியும் என்ற இறுமாப்பு தொனிக்கவும் அவர் பேசி முடித்ததைக் கண்ட உமாவுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. எனினும், ''வேறு ஏதும் இல்லை. இவ்வளவுதான். தங்களைப் பிறகு நாளை பார்க்கிறேன்'' என்று கூறிவிட்டு கைகுவித்து நமஸ்கரித்துவிட்டு விர் என்று உள்ளே சென்று விட்டாள்.

ஏற்கெனவே மனம் வெகுண்டு போயிருந்த வரதராஜன் அவள் தன்னைத் துச்சமாக நடத்தும் முறையை உணர்ந்து நெஞ்சம் குமுறினார். கால் செருப்பை மாட்டிக் கொண்டு சரிகை அங்கவஸ்திரத்தை இரு கைகளாலும் ஆதாரமாய்ப் பிடித்துக்கொண்டு கம்பீரமாக அவர் வெளியே வந்து தமது வண்டியிலே ஏறிக்கொண்டார். வெளிப் பார்வைக்கு அமைதியாகக் காணப்பட்ட அந்தக் கிழவர் உள்ளத்தில் வெடித்து எரியும் எரிமலைபோல் துவேஷம் பொங்கிக் குமுறிக் கொண்டிருந்தது உண்மையே.

வரதராஜன் கூறிய பழைய விஷயங்களைக் கேட்டு உமாவின் மனக் குழப்பம் முன்னைவிடப் பன்மடங்காக அதிகரித்துப் போய்விடவே, அவள் தாமதம் செய்யாது அன்று சாயங்காலம் சூரியன் அஸ்தமிக்கும் தறுவாயில் தங்கள் வீட்டுக் காரில் மாந்தோப்பு பங்களாவிற்குப் பிரயாணமானாள். இரவு முழுவதும் தூங்காது பிதற்றிக் கொண்டிருந்த கட்டையன் அஞ்சலை கொடுத்த கஞ்சியையும் மருந்தையும் சாப்பிட்டு விட்டு அப்பொழுதுதான் கயிற்றுக் கட்டிலின்மீது சாய்ந்தான். வெட்டிச் சாய்த்த மரம்போல் அசையாது அவன் கிடந்த



தோற்றத்தையும், மெல்லியதாக அவன் எழுப்பிய குறட்டையையும் வேடிக்கை பார்த்தவண்ணம் நின்ற அஞ்சலை, வெளியே நல்லான் மிகவும் ஆக்ரோஷமாகக் குரைப்பதைக் கேட்டுப் பதட்டமாக வாயில் பக்கம் ஓடி வந்தாள். சூரியன் மறைந்து இருள் பரவி நிற்கும் அந்த வேளையில் தங்கள் எஜமானியம்மாள் காரிலிருந்து இறங்குவதைக் கண்டதும் அவள் திடுக்கிட்டுப் போய்விட்டாள். ''வாங்க அம்மா! வாங்க!'' என்று பணிவுடன் உபசரித்து வரவேற்றுவிட்டு, சங்கிலியை இழுத்துக் கொண்டு பாயத் தயாராக நின்ற நல்லானைத் தடவிக் கொடுத்து சமாதானப்படுத்தினாள்.

அஞ்சலை பயபக்தியுடன் துடைத்து எடுத்துப் போட்ட ஆசனத்தின்மீது உமா உட்கார்ந்து கொண்டாள். சுற்றி வளைத்து ஊர்க் கதைகளைப் பேசிப் பொழுதை அவள் வீணாக்க விரும்பவில்லை. எனவே எவ்வித பூர்வ பீடிகையுமின்றி வந்த விஷயத்தைப் பற்றிப் பேசினாள். ''அஞ்சலை! உன் புருஷன் உடம்பிற்கு எப்படி இருக்கிறது? உடம்பு சுகமில்லை என்று கேள்விப்பட்டேன். பார்த்துப்போக வந்தேன். கட்டையனைப் பற்றிச் சில விஷயங்கள் நான் முன்னதாகவே கேள்விப்பட்டேன். அதனால் அவைகளை எல்லாம் தீர விசாரித்து அறிந்து கொண்டு போக வந்திருக்கிறேன். ஆமாம், கட்டையனுக்கு உண்மையில் என்ன உடம்புக்கு? அடிக்கடி ஜுரம் வந்து பித்தம் பிடித்தவன் போல் பேசுகிறானாம். உங்கள் இருவருக்கும் இந்தப் பங்களாவில் வேலை செய்ய இஷ்டமில்லை என்றும் கேள்விப்பட்டேன்!

''அஞ்சலை நான் இங்கே உனது எஜமானி என்ற தோரணையில் வந்திருக்கவில்லை. உன்னுடைய கஷ்டங்களை நேரில் கேட்டுத் தெரிந்து உனக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடனேயே வந்திருக்கிறேன். அதனால் நீ கொஞ்சமும் பயப்படாது என்னிடம் மனம்விட்டு

உங்கள் இருவரின் கஷ்டங்களைத் தாராளமாகச் சொல்லலாம். என்னை உன் எஜமானி என்று நினைக்காதே; உன் சகோதரி என்று பாவித்துக்கொள்'' என்றாள்.

பண்ணையில் பல காலம் ஊழியம் புரிந்து வயோதி கத்தின் வாயிலை அடைந்து விட்டிருந்த அஞ்சலை அது நாள் பரியந்தம் எஜமானர் என்ற ஸ்தானத்திலிருந்த யாரிடமும் அப்படிப்பட்ட கருணைமிக்க வார்த்தைகளைக் கேட்டதே யில்லை. எஜமானி என்ற ஸ்தானத்தில் வந்திருந்த பண்ணையார் புத்திரி இவ்வளவு இரக்கமாகவும் அன்போடும் பேசக்கூடும் என்று அவள் சிறிதும் எதிர்பார்க்கவேயில்லை.

கண்களில் பெருகி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்ட அஞ்சலை, நடுங்கும் கரங்களால் கைகுவித்து உமாவை வணங்கினாள். ''அம்மா! உங்களைக் கண்டதும் எங்க கஷ்டத்துக்கெல்லாம் ஒரு முடிவு வந்துடிச்சுனு அன்னிக்கே நினைச்சுக்கிட்டேன். இப்ப நீங்க சொன்னதைக் கேட்டதும் மனசிலே நம்பிக்கையும் தெம்பும் ஏற்பட்டுடிச்சு. உண்மைதான் அம்மா! இங்கே நீடிச்சு வேலை பார்க்க எனக்கும் என் புருஷனுக்கும் கொஞ்சமும் பிரியமில்லை தான்'' என்றாள்.

''அதற்குக் காரணம்?'' என்று உமா சட்டென மேலே கேட்டாள். கிழவி சற்றுத் தயங்கினாள். இங்குமங்கும் பீதியுடன் சுற்றிப் பார்த்துவிட்டு மெல்லிய குரலில், ''அது ஒரு பெரிய கதை அம்மா! முதல்லே பிடிச்சு சொன்னால்தான் புரியும்'' என்றாள்.

''எனக்கு அவசரமில்லை. நீ நிதானமாக எல்லாவற்றையும் ஆரம்பத்திலிருந்தே சொல், கேட்கிறேன்'' என்று ஆவலுடன் கூறி உமா அவளை உற்சாகப்படுத்தினாள்.

அஞ்சலை சிறிது நேரம் தயக்கமாக நின்றாள். பிறகு தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டு ஆரம்பித்தாள்.



''இங்கே முதல் முதல் நாங்கள் முப்பது வருஷத்துக்கு முன்னாடி வேலை தேடிக்கொண்டு வந்தோம் அம்மா. அப்போ பண்ணையிலே தோட்டத்துக்கு இன்னொரு ஆள் தேவையாக இருந்திச்சு. சின்னமுத்து பெண்ஜாதி வீராயி எனக்கு ஒரு வகையில் உறவுக்காரப் பொண்ணு. அவங்க சிபாரிசு மேலே எங்களுக்குப் பண்ணைத் தோட்டத்திலே வேலை கிடைச்சுது. அப்போ வந்து...'' என்று அவள் மிகவும் நிதானமாக பூர்வ பீடிகையுடன் கதையை மேலே சொல்லிக்கொண்டு போகும் போது 'அஞ்சலை!' என்று அதட்டி அழைக்கும் குரல் உள்ளிருந்து மிகவும் கடுமையாகக் கேட்டது.

முக்கியமானதொரு ரகஸித்தை அறியப் போகிறோம் என்ற ஆவலுடன் மூச்சுவிடவும் அஞ்சி, கருத்தோடு கேட்டுக் கொண்டிருந்த உமா திடுக்கிட்டு மெய் பதறிப் போனாள்.

''எங்கே போய் விட்டே?'' என்று ஆத்திரத்துடன் உள்ளிருந்து ஒரு மனிதன் கூவும் குரல் கேட்டதும் அதிர்ச்சியுற்று எழுந்து நின்றாள். ''பயப்படாதீங்க, அம்மா! தூங்கிக்கிட்டிருந்த அவர் முழுச்சுக்கிட்டார் போலிருக்கு. இன்னிக்கு இந்தச் சமயம் மன்னிச்சுக்குங்க. மறுபடி இன்னொரு சமயம் எல்லாத்தையும் பூராவும் சொல்றேன். நான் இதைப்பத்தி பேசுகிறது என் வீட்டுக்காரருக்குத் தெரியக்கூடாது! தெரிஞ்சா என்னை உசிரோட வைக்கமாட்டார்'' என்றாள் அஞ்சலை கலவரத்துடன்.

''அஞ்சலை! அஞ்சலை!'' என்று உள்ளிருந்து கட்டையன் தொடர்ந்து கத்தவே, வேறு வழியின்றி அந்தக் கிழவி உள்ளே ஓடினாள். பின்தொடர்ந்து அவன் படுத்திருந்த அறை வாயில்வரை சென்ற உமா உள்ளே எட்டிப் பார்த்தாள். கட்டையன் வெடவெடவென்று நடுங்கியபடி கட்டிலில் புரண்டு கொண்டிருந்தான். இருட்டில் வாயிலருகில் நின்ற உமாவை அவன் அறிந்து கொள்ள முடியவில்லை. ''யார் அது?'' என்று மட்டுமே அதட்டினான்.

''ஒருத்தருமில்லை. நீங்க சும்மா இருங்க'' என்று சமாதானப்படுத்திய அஞ்சலை அப்பால் போய்விடும்படி உமாவிற்கு ஜாடை செய்தாள். நல்ல சமயத்தில் இவ்வாறு ஏற்பட்ட ஒரு தடங்கல் உமாவிற்கு மெத்த ஏமாற்றத்தைக் கொடுத்த போதிலும் அஞ்சலை வழியாக மெல்ல உண்மையை அறிந்துகொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் வெளியே வந்தாள்.

அது சமயம் நன்கு இருட்டிவிட்டிருந்தது. மாந்தோப்பு பங்களா வாயிலில் நின்றிருந்த தனது கார் அருகே வந்த போது அதன் டிரைவர் ஹரிக்கேன் விளக்கைப் பொருத்தி வைத்துக்கொண்டு வண்டியடியில் ஏதோ பழுது பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். எஜமானியைக் கண்டதும், ''திடீரென்று வண்டி பழுதாகிவிட்டது... வந்து...'' என்று இழுத்தாற்போல் கூறினான் டிரைவர்.

திடுக்கிட்டுப் போன உமா, ''அப்படியென்றால் சரிப்படுத்த எத்தனை நேரம் ஆகும்?'' என்று கவலையுடன் கேட்டாள்.

''ஒரு மணி நேரத்தில் முடித்துவிடுவேன்!'' என்று டிரைவர் அவளுக்குத் தைரியம் கூறியதும், பங்களாவின் வாயில் திண்ணைமீது சில நிமிஷங்கள் உமா பொறுமையுடன் உட்கார்ந்து காத்திருந்து பார்த்தாள்.

ஹரிக்கேன் விளக்கைத் தூக்கிக்கொண்டு டிரைவர் முன்னும் பின்னும் காரைச் சுற்றிப் பிரதக்ஷிணம் செய்து கொண்டு வந்தானே ஒழிய, அவன் ஏதும் பழுது பார்த்ததாகப் புலப்படவில்லை. பொறுமையிழந்து போன உமா திண்ணை யிலிருந்து இறங்கினாள். அது சமயம் அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. கைப் பையைத் திறந்து பேனாவையும் ஒரு துண்டுக் காகிதத்தையும் எடுத்து சில வரிகளில் தன் காருக்கு ஏற்பட்ட கதியைப் பற்றிக் குறிப்பிட்டு உடனே வண்டியைக்



கொடுத்தனுப்பி உதவும்படி சிவகுமாரனுக்கு ஒரு கடிதம் எழுதி முடித்தாள்.

மாந்தோப்பு பங்களாவுக்கு சற்றுத் தொலைவில்தான் சிவகுமாரன் வசித்துக் கொண்டிருந்ததனால் டிரைவர் கால் நடையாகச் சென்றுவரச் சுலபமாக இருந்தது. விரைவாக சிவகுமாரனிடமிருந்து வண்டியை எடுத்துக்கொண்டு டிரைவர் வந்துவிடுவான் என்று காத்துக் காத்து அவள் சோர்ந்தே போய்விட்டாள். பல சொந்த அலுவல்கள் காரணமாக சிவகுமார் அன்று இரவு பத்து மணிக்குத்தான் வீட்டிற்கு வந்தான். வெகு நேரமாகத் தனக்காகப் பண்ணை டிரைவர் காத்திருப்பதைக் கண்டதும் பரபரப்புற்று தங்கள் ஆசிரமத்து வில்வண்டியை தாமதம் செய்யாது உடனே அனுப்பி வைத்தான்.

காரைப் பழுதுபார்த்து எடுத்து வரும்படி டிரைவருக்கு உத்தரவிட்டு, சிவகுமார் அனுப்பிய மாட்டுவண்டியில் ஏறிக்கொண்டு உமா பண்ணை மாளிகைக்குத் திரும்பினாள். இரவு வெகு நேரமாகி விட்டதனால் வழி முழுவதும் ஜன நடமாட்டம் ஏதுமே காணப்படவில்லை. பங்களாவிற்கும் பண்ணை மாளிகைக்கும் இடையே இருந்த நீண்ட சாலையின் இருமருங்கிலும் அடர்ந்து வளர்ந்திருந்த மரங்கள் இருட்டு வேளையில் மிகவும் பயங்கரமாக உமாவின் கண்களுக்குத் தோன்றின.

வண்டியில் பொருத்தியிருந்த எண்ணெய் விளக்கின் மங்கிய ஒளியைத் தவிர எங்கும் ஒரே அந்தகாரமாக இருந்தது. வயல்களின் வரப்பிலே தத்திக் குதித்துக்கொண்டிருந்த தவளைகள் எழுப்பிய ஓசையும், அதற்கு எதிரொலி செய்வது போல் 'சோ' வென்று கத்திக் கொண்டிருந்த சுவர்க்கோழி களின் சப்தமும் இரவின் நிசப்தத்தைப் பயங்கரப்படுத்திக் கொண்டிருந்தன.

உமாவிற்கு ஏனோ திடீரென்று அச்சம் ஏற்பட்டது. அதை உறுதிப்படுத்துவது போன்று ''நிறுத்து!'' என்று எங்கிருந்தோ கடுமையாக யாரோ அதட்டுவது கேட்டது. உமா திடுக்கிட்டு நிமிர்ந்து எழுந்து உட்கார முயற்சிப்பதற்குள் சாலை இருளிலிருந்து தடதடவென்று பலர் ஓடிவரும் காலடி ஓசை கேட்டது.

அடுத்த கணம் விளக்கு சுக்கல் தூளாகி உடைந்து அணைந்து போய்விட்டது. ''கத்தினாயோ ஒன்னை மிதிச்சிடுவேன்'' என்று யாரோ முரட்டுக் குரலில் வண்டிக் காரனை அதட்டினார்கள். உமா வியர்த்து விறுவிறுத்துப் போனாள். என்ன ஏது என்று அவள் ஊகிக்குமுன் மிகவும் முரட்டுத்தனமாக ஒரு மனிதன் அவள் கரத்தைப் பற்றி வண்டியினின்று இழுப்பதை உணர்ந்தாள். ''ஐயோ! திருடன்! வாருங்கள்! வாருங்கள்!'' என்று தன்னையும் மீறி அலறிவிட்டாள்.

## 19

**மோ**கனாம்பாள் சாவதானமாக விழித்துக்கொண்டு எழுந்து படுக்கையில் உட்கார்ந்தாள். விடிந்து வெகு நேரமாகி விட்டது என்பதை அறிவித்த வண்ணம் காலைச் சூரியனின் பொற்கிரணங்கள் ஜன்னல் வழியே அவள் முகத்தின் மீது சுரீர் என்று வீசிக்கொண்டிருந்தன. தனக்கு முன் தெரிந்த நீண்ட கண்ணாடியில் உருவத்தைப் பார்த்துக் கொண்டாள். ஒரு காலத்தில் எலுமிச்சம் பழத்தை நிகர்த்த பொன் நிறமாகப் பிரகாசித்த அவளது மேனி முதுமையின் தளர்வினால் கறுத்துச் சுருங்கி வாடிவிட்டிருந்தது. கண்களைச் சுற்றிப பெரிதாக வட்டமிட்டிருந்த கருந்திரைகளும், கழுத்திலே மடிப்பிட்டுத்



தொங்கிய சதைப் பிடிப்பும் அவளது போக வாழ்க்கையின் முத்திரைகளாகக் காணப்பட்டன.

நீண்ட நேரம் தன் உருவத்தை ஊன்றிப் பார்த்துக் கொண்டிருக்க அவளுக்கே மிகவும் அருவருப்பாக இருந்தது. சோம்பல் முறித்துவிட்டு, நீண்ட கொட்டாவி விட்டுக் கொண்டு படுக்கையினின்று அரை மனதாக எழுந்திருந்தாள். ''சுலோசனா!'' என்று அதட்டி ஒரு குரல் கொடுத்து விட்டுத் தாறுமாறாகத் தொங்கிய கூந்தலை அள்ளிச் சீர்படுத்தி முடிந்து கொண்டு வெளியே வந்தாள்.

உள்ளங்கையில் பற்பொடியை எடுத்துக் கொட்டிக் கொண்டு முற்றத்திற்கு வந்தவள் வழக்கம்போல் அங்கே தயாராக முகம் துடைக்கும் துண்டும், சோப்புப் பெட்டியும், செம்பில் பல்துலக்க வெந்நீரும் இல்லாததைக் கவனித்து விட்டாள். உடனே ''அடி சுலோசனா! உனக்குக் காது செவிடா! எத்தனை வாட்டி கூப்பிடுகிறது?'' என்று உரத்த குரலில் ஓர் அதட்டல் போட்டு விட்டுக் கோபத்துடன் சுற்றும் முற்றும் பார்த்தாள். கூடத்து அறையில் குளிருக்கு அடக்கமாகப் பெரிய கம்பளித் துண்டை தலையில் சுற்றி முக்காடு இட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த வடிவேலு மனைவியின் அபயக் குரலைக் கேட்டு மெல்ல வெளியே வந்தான்.

''சுலோசனா இன்னும் எழுந்திருக்கலை போலிருக்கிறது. அதைக் கீழே காணவில்லை. நான்தான் வெந்நீர் அடுப்பைப் பத்தவச்சேன். உனக்கு என்ன வேணும்?'' என்று மிகவும் தாழ்வாக வினவினான்.

''இன்னுமா தூங்குகிறா அவ? இப்படித் தின்னுவிட்டு தூங்கித் தூங்கித்தான் என் குடும்பத்தையே தூங்க வச்சுட்டா! எனக்கு ஓர் எழவும் வேண்டாம். போய் அந்தக் கழுதையை எழுப்பிகிட்டு வாங்க! நல்ல பொண்ணு இவ!'' என்று கோபத்துடன் கணவனுக்கு உத்தரவிட்டாள். முற்றத்துத்

தொட்டியில் நிரப்பியிருந்த பச்சைத் தண்ணீரை வெறுப்புடன் செம்பில் முகர்ந்து அவசரமாக முகத்தைக் கழுவிக்கொண்டு அடுப்பங்கரைக்குள் சென்றாள்.

முதல் நாள் இரவு போஜனத்திற்குப் பின் அங்கே போட்ட சாமான்கள் போட்டபடி மிகவும் அலங்கோலமாகக் கிடந்தன. தனக்குள் எழுந்த சினத்தை அடுப்பருகில் கிடந்த பாத்திரங்கள் மீது அவள் காட்டினாள். இடைஞ்சலாக இருந்த சாமான்களைக் காலால் உதைத்து அப்புறப்படுத்திவிட்டு மிகவும் சிரமத்துடன் தன் ஸ்தூல சரீரத்தை அடக்கிக்கொண்டு உட்கார்ந்தாள். காலைக் காப்பிக்காக அடுப்பைப் பற்றவைத்து விட்டுத் திரும்பிப் பார்த்தாள். மழையில் நனைந்த கோழிபோல் குளிரால் வெடவெடவென்று நடுங்கிக்கொண்டு வடிவேலு சமைய லறைக்குள் மெல்லத் தலையை நீட்டினான்.

''சுலோசனாவைப் படுக்கை அறையிலே காணவில்லை. கீழே குளிக்கும் அறையிலும் காணவில்லை. பின்கட்டிலும் காணவில்லை'' என்று இழுத்தாற்போல் கூறிவிட்டு, கிழவன் சந்தேகத்துடன் விழித்தான்.

''என்ன?'' என்று திடுக்கிட்டுக் கேட்ட மோகனாம்பாள், ஒரே துள்ளலில் மலைபோலிருந்த தன் சரீரத்தைத் தூக்கிக் கொண்டு எழுந்து நின்றாள். அதிர்ச்சியூட்டும் இந்தச் செய்தி அவளது நெஞ்சத்தையும், உடலையும் பதறச் செய்து விட்டது. பயத்திலே முகம் வெளுத்து விட்டது.

''ஆமாம்! உண்மைதான்! சுலோசனாவை வீடு முழுவதும், தேடிப் பார்த்து விட்டேன். காணலை! காலை வேளையிலே இந்தப் பொண்ணு எங்கேதான் போயிருக்குமோ, தெரியலை!'' என்று மென்று விழுங்கினான் கிழவன்.

மோகனாம்பாள் அதற்குமேல் அங்கே நிற்கவில்லை. விடுவிடென்று மாடிக்குப் பாய்ந்து சென்று தன் அறையின்



பக்கத்திலுள்ள சுலோசனாவின் படுக்கையறைக்குள் போய்ப் பார்த்தாள். அங்கே சாமான்கள் வைத்த நிலையில் அப்படியே இருந்தன. ஆனால் அவளது அருமை மகளை மட்டும் காணவில்லை. தோட்டம், கிணறு, பின்கட்டு எல்லா வற்றையும் மூச்சுவிடாது சென்று தேடிப் பார்த்துவிட்டு, திகில் பிடித்தவளாக உள்ளே வந்தாள். மனைவியுடன் கூடவே நிழல்போல் பின்னால் சென்று மீண்டும் ஒரு முறை மகளைத் தேடியலைந்த வடிவேலு, ''காலையிலே எழுந்தபோது வாசல் கதவு தாளிடாது திறந்து கிடப்பதைப் பார்த்தேன்...'' என்று முணமுணத்தான்.

''பார்த்துவிட்டு, சும்மா கம்னுபோய் கம்பளியைச் சுத்திக்கிட்டு படுத்துக்கிட்டயாக்கும். இதை இப்ப வந்து சொல்ல வந்துட்டியா? போதும், எரிகிற நெருப்பிலே எண்ணெயை ஊத்தவேண்டாம்'' என்று கணவன் மீது எரிந்து விழுந்த மோகனாம்பாள் ஏமாற்றம் தாளமுடியாது வீட்டின் கூடத்துத் தரைமீது வந்து தொப்பென்று உட்கார்ந்து கொண்டாள்.

'கண்ணுக்குக் கண்ணாக ஆசையுடன் வளர்த்த சுலோசனா சொல்லாமல் கொள்ளாமல் வீட்டை விட்டு ஓடி விட்டாள்' என்பதை அவளால் நம்பவே முடியவில்லை. 'இனி என்ன செய்வது' என்று யோசனையே தோன்றாது கூடத்துத் தரையில் படுத்துக் கொண்டு விட்டாள்.

வடிவேலு மனைவியின் உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டு சற்று நேரம் அங்குமிங்கும் வளையவந்தபடி வீட்டிற்குள் சுற்றிக்கொண்டிருந்தான். வெட்டிச் சாய்த்த மரம் போல் கிடந்த மோகனாம்பாளிடமிருந்து பேச்சு எதுவுமே வரவில்லை. கிழவனுக்கு நேரம் ஆக ஆகப் பசி வயிற்றைக் கிண்டியது. சமையலறைக்குள் சென்று மெல்ல எட்டிப் பார்த்தான். மோகனாம்பாள் சிரமத்துடன் பற்றவைத்திருந்த

அடுப்பு எரிந்து சாம்பலிட்டு அவிந்து கிடந்தது. சப்தமிடாது மெல்லப் புழக்கடை வழியே வெளியே தெருவுக்குள் வந்தான். அருகிலிருந்த காப்பி ஹோட்டலுக்குள் சென்று தன் கையிலிருந்த கொஞ்சம் சில்லறைக்குச் சூடான ஒரு கோப்பை காப்பியும் இரண்டு இட்லிகளும் வாங்கித் தன் பசியைத் தணித்துக் கொண்டான்.

மோகனாம்பாள் எழுந்திருந்து தன்னைத் தேடப் போகிறாள் என்ற அச்சம் அவனது மனத்தை உலுக்கவே, நீண்டநேரம் அங்கே தங்கியிருக்கப் பயந்து அவசரமாக வந்த வழியே பூனைபோல் நடந்து வீட்டிற்குத் திரும்பிவிட்டான். தரைமீது குப்புறப் படுத்துக் கொண்டு தலைவிரிகோலமாகக் கிடந்த மனைவி அருகில் வந்து வாத்ஸல்யமாக ''மோகனா! பச்சைத் தண்ணீர் கூடப் பல்லில் படாது பட்டினியாகக் கிடக்கிறாயே! நான் போய் ஓட்டலிலிருந்து ஏதாச்சும் வாங்கி வரட்டுமா?'' என்று வினயமாகக் கேட்டான்.

மோகனாம்பாள் அடியுண்ட வேங்கை போல் சீறிக் கொண்டு எழுந்தாள். ''உனக்கு எப்பவும் பாழும் வயித்தைப் பத்திதான் கவலை! அந்தப் பாவிப் பொண்ணு என் தலையிலே கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டுப் போயிருக்கிறதுங்கறதைப் பத்தி உனக்கு ஏதாச்சும் அக்கறை இருக்கிறதா? உன்னைச் சொல்லிக் குத்தமில்லை. இந்தப் பாவி கடவுள் என்னை இப்படிப் படைச்சானே, அதைச் சொல்லணும்'' என்று ஆவேசம் பிடித்தவள்போல் கத்திவிட்டு, தலையில் படீர் படீர் என்று அடித்துக் கொண்டு உருண்டு உருண்டு விழுந்தாள்.

வடிவேலுவிற்குத் தன் மனைவியைத் தேற்றுவது எப்படி என்றே புரியவில்லை. கையைப் பிசைந்துகொண்டு திருதிருவென விழித்தபடி கூடத்தில் நின்றுகொண்டிருந்தான். வாயில் வந்ததையெல்லாம் கூறி பிதற்றியபடி மோகனாம்பாள் யாரோ இறந்துவிட்டதுபோல் முகத்தில் அறைந்து கொண்டு



வாய்விட்டுப் புலம்பி அழுதுகொண்டிருந்தாள். இந்த நிலையில் அன்று பூராவும் அவள் ஓயமாட்டாள் போலிருக்கவே, வடிவேலு திக்பிரமையுடன் மேலே என்ன செய்வது என்ற யோசனை தோன்றாது கூரை முகட்டைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

இது சமயம் வாயில் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. மோகனாம்பாள் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டாள். அவசரமாகப் புடவைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வடிவேலுவுக்கு சைகை செய்து தன் அருகே அழைத்தாள். ''போய் யாருன்னு பார், எவனாவது கடன்காரன் வந்திருந்தால் இப்ப ஒண்ணும் பார்க்க முடியாதுன்னு கண்டிப்பாகச் சொல்லி அனுப்பிவிடு. வேறு யாராச்சும் வந்திருந்தால் சமயத்துக்குத் தக்கபடி பதில் சொல்லி அனுப்பிவிடு, தெரிஞ்சுதா?'' என்று உத்தரவிட்டு விட்டு, உள்ளே சென்றாள். முகத்தைக் கழுவிக் கொண்டு கூந்தலை வாரி சீர்படுத்திக் கொண்டாள்.

கூடத்திலே கேட்ட பேச்சுக் குரல் அவளைத் திடுக்கிட வைத்து விட்டது. விடிந்ததும் விடியாததுமாக அதுவும் வீடு இருந்த அலங்கோல நிலையில் பண்ணை மானேஜர் மகன் ரங்கதுரை அதுசமயம் அங்கு வரக்கூடும் என்று அவள் எதிர்பார்க்கவேயில்லை. நிலைமையை எப்படி சமாளிப்பது என்று யோசனை தோன்றாது அவள் மெய்பதறி சோர்ந்து விட்டாள்! சுலோசனாவை ஆசையுடன் கண்டுவிட்டுப் போக வந்திருக்கும் அவனிடம் என்ன சொல்வது என்றே அவளுக்குத் தோன்றவில்லை.

''உட்காருங்கள்! ஏது ரொம்ப காலையிலே கிளம்பிவிட்டாப்பலே இருக்குது? காப்பி பலகாரம் கொண்டு வரவா?'' என்று வாய் நிறைய உபசாரம் செய்து கொண்டு வடிவேலு நிலைமையைச் சமாளிக்க முயன்று கொண்டிருந்தான். புடவைத் தலைப்பை எடுத்து அடக்கமாகப்

போர்த்திக் கொண்டு, முப்பத்திரண்டு பற்களும் தெரிய நகைத்த வண்ணம் மோகனாம்பாள் முடிவாகத் துணிவுடன் உள்ளிருந்து வந்தாள். ''வாங்க, வாங்க! ஏது இந்தக் காலையிலேயே வந்துவிட்டாப்பல'' என்று அன்பு நிறைந்த குரலில் வரவேற்றுவிட்டு, கை குவித்து ஒரு பெரிய நமஸ்காரம் செய்தாள். வடிவேலு கூடத்திலிருந்த நாற்காலியை மேல் துண்டினால் தட்டிச் சரிப்படுத்தி சுவர் ஓரமாக இழுத்துப் போட்டான். ''உட்காருங்க! நிக்கிறீங்களே!'' என்று உபசரித்தான்.

அலைகள்போல் சரிந்து நின்ற தன் கிராப்புத் தலையை நாசுக்காகக் கோதிக்கொண்டு ரங்கதுரை சுற்றும்முற்றும் யாரையோ தேடுகிறவன்போல் பார்த்தான். ''விடிஞ்சு இவ்வளவு நேரம் ஆகியும் இன்னும் தூங்கி எழுந்த பாடில்லை போலிருக்கிறது'' என்று பரிகாசமாகக் கேட்டுவிட்டு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். சட்டைப்பையில் சாவதானமாகக் கையைவிட்டு ஒரு பெரிய மணிபர்ஸை எடுத்தான். அதைத் திறந்து பச்சை நோட்டுகளாக ஒரு பெரும் கத்தையை அவன் அலக்ஷியமாக வெளியே இழுப்பதைக் கண்டு மோகனாம்பாளின் கண்கள் வியப்பினால் விரிந்தன.

''சுலோசனா தூங்கிக் கொண்டிருந்தால் போய் எழுப்பி தொந்தரவு செய்ய வேண்டாம். நான் அடுத்த வாரம் மறுபடி வருவேன். தற்சமயம் இந்த மூவாயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு கல்யாணத்திற்கு வேண்டிய நகைகள், துணிமணிகள் முதலியவற்றைத் தயாரிக்கத் தொடங்குங்கள். மேற்கொண்டு ஆகும் செலவுத் தொகையை நான் பிறகு சரிபார்த்து கொடுத்து விடுகிறேன். அவசரமாக இங்கே ஒரு காரியத்தைக் கவனிக்க வந்தேன். இப்போது காப்பி பலகாரம் சாப்பிட நேரமில்லை. மன்னிக்கவும்'' என்று கூறிவிட்டு எழுந்தான்.



தன்முன் நீட்டிய பணக் கத்தையைப் பேராசையுடன் மோகனாம்பாள் அவசரமாகப் பெற்றுக் கொண்டாள். பத்திரமாக அதை இடுப்பில் சொருகிக்கொண்டு, ''ஒரு விஷயம், உங்கள் உத்தரவு இல்லாமல் ஒரு காரியம் செய்து விட்டேன். மன்னிக்கவேணும்'' என்று ஆரம்பித்தாள்.

''என்ன விஷயம் அது?'' என்று ரங்கதுரை மிக்க ஆவலுடன் கேட்டான்.

''ஒன்றுமில்லை. எங்கள் அத்தை ஊரிலிருந்து வந்திருந்தாங்க. சுலோசனாமீது அவங்களுக்கு ரொம்பப் பற்றுதல். ஒரு பதினைஞ்சு நாள் தன்னோட வீட்டிலே வைச்சுக் குழந்தையைச் சீராட்டி அனுப்ப ஆசைப்பட்டாங்க. ஆதியிலே என் தாயார் தவறிப் போனப்போ என்னை எடுத்து வளர்த்தவங்க அவங்கதான். அதனால் அவங்க பேச்சைத் தட்டமுடியலை. நேத்து சாயங்காலம் அவங்களோட சுலோசனாவைக் கூட்டி அனுப்பிச்சிருக்கேன். உங்க உத்தரவைக் கேட்கலாம்னா அதுக்கு நேரம் இல்லாது போயிடுச்சு'' என்று இழுத்தாற்போல் கூறிவிட்டு மிகவும் தயக்கமாக தரையைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

ரங்கதுரை இதைக் கேட்டு வாய்விட்டுச் சிரித்தான். ''என்னவோ ஏதோ என்று நினைத்தேன். இவ்வளவு தானே? அதுக்கென்ன! சுலோ போய் அங்கே அத்தையம்மாளுடன் பதினைந்து நாள் என்ன, ஒரு மாதம் வேண்டுமானாலும் தங்கிவிட்டு வரட்டும். உறவு முறையார் வீட்டுக்குச் சென்று வருவதையெல்லாம் சுலோ இப்பவே முடித்துக் கொள்ளட்டும். பிறகு கல்யாணம் ஆனதும் அடிக்கடி அங்கெல்லாம் சென்று வர சாத்தியப்படாது அல்லவா?'' என்று கேலியாகக் கூறிவிட்டு மீண்டும் நகைத்தான்.

தான் எதிர்பார்த்ததற்கு மாறாக அவன் மிகவும் உற்சாகமாக இருப்பதைக் கண்டதும் மோகனாம்பாளுக்குப் போன உயிர்

மீண்டும் வந்தது. நெஞ்சில் துணிவு அதிகம் ஏற்பட்டது. "அப்படி ஒரு மாசம் போய் தங்கியிருக்க நாங்க சம்மதிப்போமா? ஒரு சமயம் அடுத்த வாரத்திலே இவர் போய்க் கூட்டி வந்தாலும் வந்து விடுவார். வீட்டிலே எல்லோரும் சௌக்கியந்தானே?" என்று மிகவும் சகஜமாக விசாரித்தாள்.

"எல்லோரும் சௌக்கியம்தான். உடம்பை நல்லாக் கவனிச்சுக்கும்படி நான் சொன்னதாக சுலோவுக்குக் கடிதம் போடுங்க. புதிய ஊர். அந்தத் தண்ணி சில சமயம் உடம்புக்கு ஒத்துக்காம போனாலும் போகலாம். அதனால் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க சொல்லுங்க. சரி, நான் வரட்டுமா?" என்று கேட்ட வண்ணம் எழுந்து வாயிற் பக்கம் நடையைக் கட்டினான் ரங்கதுரை.

மானேஜர் மகனுக்குத் தன் வளர்ப்பு மகள் மீதிருந்த அன்பைக் கண்டு மோகனாம்பாள் மனம் மெத்த கனிந்து விட்டது. வரவிருக்கும் ராஜபோகத்தையும் செல்வச் சிறப்பையும் உதறி விட்டு இந்த அசட்டுப் பெண் சொல்லாமல் கொள்ளாமல் எங்கே சென்றிருப்பாள் என எண்ணித் தனக்குள் கலங்கினாள். ஆனால் தன் மன விசாரத்தை வெளிக்கு காட்டிக் கொள்ளாது, ரங்கதுரையை வழியனுப்பிவிட்டுக் கதவை நன்றாகத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்தாள்.

"பதினைந்து நாள் எப்படியோ காலத்தை ஓட்டி விடலாம். அதுக்கு அப்பாலே, மானேஜர் மகனுக்கு நாம் என்ன பதில் சொல்ல முடியும்? உண்மை தெரிஞ்சா நம்மை அவன் சும்மா வைப்பானா?" என்று கிலியுடன் வடிவேலு கேட்டான். அவனுக்கு எப்பொழுதுமே பெரிய இடம் என்றால் மகத்தான பயம்!

"பதினைந்து நாளும் நாம் சும்மா தின்னுவிட்டு வீட்டில் அடைந்தா கிடக்கப் போகிறோம்? உனக்குப் புத்தி கொஞ்சங்கூட



இல்லையே? நாலைஞ்சு நாளுக்குள்ளே அந்தக் கழுதையைத் தேடிப் பிடிச்சு எப்படியாகிலும் வீட்டுக்குக் கொண்டு வந்துவிட வழி பார்க்க வேண்டாமா? அதுக்கு ஏதேனும் முயற்சி பண்ணியாகணும். போனால் போகிறதுன்னு விட்டு விடுகிற காரியமா இது?" என்று பற்களைக் கடித்துக் கொண்டு கோபத்துடன் அதட்டினாள் மோகனாம்பாள்.

வடிவேலு தலையைச் சொறிந்து கொண்டான். "மோகனா! எனக்கு ஒரு யோசனை தோணுது. நம்ப பொண்ணு காணாம போயிட்டதைப் பத்திப் போலீசிலே எழுதி வச்சுவிட்டா ஒரு நொடிப் பொழுதிலே அவங்க கண்டு பிடிச்சுக் கொடுத்து விடுவாங்க. நமக்குச் செலவு மிச்சம், வீண் அலைச்சலு மில்லை" என்றான்.

மோகனாம்பாள் முகவாயைத் தன் தோள் பட்டை மீது இடித்துக் கொண்டாள். "போயும் போயும் உன் புத்தி போச்சுதே! போலீசுக்குத் தகவல் கொடுக்கிறதாம்! யோசனையைப் பார்! கொள்ளிக் கட்டையை எடுத்துத் தலையைச் சொறிஞ்சுகிட்ட கதையாகத்தான் போய்விடும். விஷயம் மானேஜர் மகன் காதுக்கு எட்டினா உன்னையும் என்னையும் அதுக்குப் பிறகு உயிரோட விட்டு வைப்பானா? வயது ஆச்சுதே ஒழிய உனக்கு விவேகம் ஏதுமே இல்லை. போய் முதல்லே ஓட்டலிலிருந்து சூடாகக் கொஞ்சம் பலகாரமும் காப்பியும் எடுத்து கிட்டு வா. பின்னாடி அந்த ஊர்சுத்திப் பயல் துரைசாமியைப் போய் நான் கூப்பிட்டதாகக் கையோட கூட்டி வா. என்ன செய்யணும்கிறது எனக்குத் தெரியும். எல்லாம் நான் கவனிச்சுக்கிறேன். நீ மட்டும் சொன்னதைச் செய், போதும்" என்று கடுமையாக உத்தர விட்டாள்.

இடுப்பில் சொருகியிருந்த சிறு சுருக்குப் பையை எடுத்து அவிழ்த்து கொஞ்சம் சில்லறையை எடுத்து அவனிடம் நீட்டினாள். வடிவேலு மனைவியின் உத்தரவைத் தலைமேல்

தாங்கியவனாக, சமையல் அறைக்குள் புகுந்து பெரிய வெள்ளி கூஜாவை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

அழுத களைப்புத் தீர இட்டலிகளை ஒன்றன் பின் ஒன்றாக பிட்டு வயிறு கொண்ட மட்டும் தின்று விட்டு, அரைகூஜா காப்பியை ஆனந்தமாகக் குடித்துவிட்டு எழுந்திருந்தாள் மோகனா. இடுப்பில் சொருகிக்கொண்டிருந்த மானேஜர் மகன் கொடுத்த பணத்தின் கனம் அவள் மனத்திலே குடிகொண்டிருந்த பயத்தை விரட்டியடித்து விட்டது.

''எங்கே போயிருப்பாள் இந்தப் பெண்! எப்படியாவது கண்டுபிடித்து விடமுடியும்'' என்ற துணிவு ஏற்படவே முற்றத்திற்குள் இறங்கி முகத்தைச் சோப்புப் போட்டு நன்றாகக் கழுவிக் கொண்டாள். காலணா அளவு குங்குமப் பொட்டொன்றை நெற்றிமீது தீட்டிக்கொண்டு, பெட்டிக்குள் கிடந்த பழைய பட்டுச்சேலை ஒன்றை எடுத்து உடுத்திக் கொண்டாள். வெற்றிலைப் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு கூடத்திற்கு வந்து தயாராக உட்கார்ந்து கொண்டாள். காலை நீட்டியபடி வெற்றிலைப் பெட்டியைத் திறந்து பாக்கை அள்ளி வாயில் திணித்துக்கொண்டு வெற்றிலையையும் சுவைக்கத் தொடங்கினாள்.

வாயிற் கதவைத் திறந்துகொண்டு வடிவேலு மெல்லப் பூனைபோல் நுழைந்தான். பின்னால் செருப்பு சத்தம் பலமாக ஒலிக்க அத்தர் மணத்தை அள்ளி வீசிக்கொண்டு உல்லாச நடையுடன் துரைசாமி உள்ளே வந்தான்! ''என்ன அண்ணி, காலை வேளையிலே நமக்கு வாரண்ட் வந்திடுச்சி! ஏதோ அவசர சங்கதியில்லாட்டி அத்தான் இப்படி அலறிப் பிடிச்சுக்கிட்டு ஓடிவர மாட்டாரென்று நினைச்சேன். என் ஊகம் சரிதானே!'' என்று கேலியாகவும் குத்தலாகவும் வினவிக் கொண்டு மிகவும் உரிமையுடன் அருகில் வந்து பாய்மீது உட்கார்ந்து கொண்டான்.



வெற்றிலைப் பெட்டியை அவன் அருகில் தள்ளி வைத்து விட்டு, காலை மடக்கிக் கொண்டு மோகனாம்பாள் நிமிர்ந்து உட்கார்ந்தாள். வடிவேலு இப்படியும் அப்படியும் பார்த்து விட்டு மிகவும் பயந்தவனாக பாயின் ஓர் ஓரத்தில் மெல்ல உட்கார்ந்து கொண்டான்.

''வா, தம்பி வா! உனக்கு வாய் ஜாஸ்தியாப் போச்சு. உன்னைச் சொல்லிக் குத்தமில்ல. வாலிபத் திமிர் அப்படி உன்னைப்பேச வைக்கிறது!'' என்று கூறிவிட்டு மெல்ல நகைத்த மோகனாம்பாள், ''வெற்றிலை போட்டுக்கோ, ஏன் சும்மா என்னைப் பார்த்து முழிக்கிறே'' என்று உரிமையுடன் அதட்டினாள்.

வெற்றிலையை அள்ளி தாராளமாக வைத்துக்கொண்டு, துரைசாமி மிகவும் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டான். ''என்ன அண்ணி! இனி விஷயத்தை ஆரம்பிக்கலாம். எங்கே சுலோ! அதைக் கண்ணிலே காணும்!'' என்று குசலம் விசாரித்தான்.

மோகனாம்பாள் அதற்குமேல் பொழுதை வீண் செய்ய விரும்பவில்லை. ''சுலோசனாபத்தி பேசத்தான் உன்னைக் கையோட கூப்பிட்டு அனுப்பினேன். தம்பி! நேற்று ராத்திரி கொஞ்சம் நான் கோபமா சுலோகிட்ட பேசிவிட்டேன். அந்தப் பொண்ணுக்கு ரோஷம் தாங்கல்லை. காலை விடிஞ்சு பார்த்தா வீட்டிலே காணும். மனசு உடைஞ்சு போய் அது எங்கேயாவது ஆத்திலே குளத்திலே விழுந்துவிட்டா...'' என்று கூறி முடிக்காது, பொலபொலவென்று கண்ணீரை உகுத்துவிட்டுத் திணறினாள்.

''போங்க அண்ணி! நீங்க ஒண்ணு! இந்தக் காலத்துப் பெண்களை நீங்க என்ன நினைச்சுகிட்டிருக்கீங்க? ஆத்திலே குளத்திலே அவங்க ஏன் போய் விழுகிறாங்க. அண்ணி! வெளிப்படையாகக் கேட்கிறேன்னு கோவிச்சுக்காதீங்க.

சுலோவுக்கு மானேஜர் மகன் தவிர வேறு யார் மேலாச்சும்...'' என்று கேட்டு நிறுத்தினான்.

மோகனாம்பாள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். துணிவாக துரைசாமி கேட்ட கேள்வி அவளுக்கு அச்சத்தையோ அருவருப்பையோ கொடுக்கவில்லை. ''மானேஜர் மகன் பரிச்சயமாகு முன் சுலோவுக்கு ஒரு வாலிபப் பையன் மீது கொஞ்ச நாட்டம் இருந்தது உண்மைதான். ஏன் பொய் சொல்லணும்? அவனைத்தான் கட்டிப்பேன்னு ஒரே பிடியாக்கூட அப்போ இருந்தாள். அது சமயம் பட சம்பந்தமாக நாங்க ரொம்ப மும்முரமாக இருந்ததால் நான் பிடிகொடுத்துப் பேசலை. பட்டணத்தை விட்டு வந்ததும் சுலோ அவனைப்பத்தி நாளாவட்டத்திலே மறந்து விட்டாள். பகவான் அறியச் சொல்கிறேன் தம்பி, மானேஜர் மகனைத் தவிர அவ தற்சமயம் வேறு யாரையும் கனவிலே கூட நினைச்சது இல்லை'' என்றாள் படபடப்புடன்.

''வீட்டுக்குள்ளேயே அடஞ்சு கிடக்கிறீங்க. உங்களுக்கு உலக விவகாரம் அதிகம் தெரியாது அண்ணி. மேலத்தெருவு சிங்காரத்தின் பெண் அபரஞ்சியைத் தெரியுமா? அவங்க அம்மா இப்படித்தான் நம்பிக்கொண்டிருந்தாங்க. அதைக் கட்டிக்கொள்ள ஒரு பணக்காரப் பையன் ஒற்றைக் காலில் தபசு செய்துகிட்டிருந்தான். அதுவும் அவன்மேலே உசிராயிருப்பது போல நடிச்சிக்கிட்டிருந்தது. கல்யாணத்துக்குத் தேதி வச்ச சமயம் பார்த்து அது சொல்லாம கொள்ளாம கம்பி நீட்டிவிட்டது'' என்றான்.

''பின்னாலே, என்ன நடந்தது!'' என்று திகிலுடன் மோகனாம்பாள் கேட்டதும். ''சிங்காரம் ஓடிவந்து என் காலிலே விழுந்தான். இரண்டாயிரம் வரை பணம் தண்ணியாக செலவாச்சு. ஆனாலும் காதும் காதும் வைத்தாப் போல மூணே



நாளில் பெண்ணைத் தேடிப் பிடிச்சு இழுத்துக் கொண்டு வந்து கல்யாணத்தை நடத்திவிட்டோம். இப்போ அது நாலைஞ்சு பிள்ளை குட்டிகளோட நல்லா வாழ்ந்து கிட்டு இருக்கு'' என்றான் அலட்சியமாக.

''கடவுள் அறியச் சொல்கிறேன். எங்க சுலோசனா அப்படியெல்லாம் தப்பாப் போகிற பெண்ணல்ல. நான் கோவிச்சது தாங்காது வீட்டைவிட்டு வெளியே போயிடுச்சு. அக்கம்பக்கத்தார் காதிலே விழுந்து, அவங்க ஒண்ணைப் பத்தாக்கி வம்பு பேசுகிறதுக்கு முந்தி அதைக் கண்டுபிடிச்சு வீட்டுக்குக் கூட்டி வந்துவிடணும். இது விஷயமா உன் உதவி தேவை. இதைப்பத்தி போலீசு வரை போக எனக்குப் பிரியமில்லை. அவளுடைய சிநேகிதிகள் வீடு, மற்ற இடங்கள் எல்லாம் பத்தி விவரமாக உனக்குத் தகவல் கொடுத்திருக்கிறேன். நாலைஞ்சு நாளில் எப்படியோ பெண் நம்ப வீடுவந்து சேர்ந்துவிடவேணும்'' என்றாள்.

கருமியிலும் கருமியான மோகனாம்பாள் தன் வசம் பலமாகச் சிக்கிக் கொண்டிருக்கிறாள் என்பதை உணர்ந்த துரைசாமி தொண்டையைக் கனைத்துக்கொண்டு எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தான். ''அண்ணி! நீங்க பாட்டிலே சுலபமாக சொல்லி விட்டீங்க. ஆனால் இது சும்மா சட்டுனு ஆய்விடுகிற காரியமா? ஹோட்டல்கள், ரயில் வண்டிகள், அக்கம்பக்கத்து ஊர்கள் அனைத்திலும் சல்லடை போட்டு சலித்தாக வேண்டும். ஒருத்தன் செய்யக்கூடிய வேலையில்லை. பத்து ஆட்களை வைத்துக் கண்குத்திப் பாம்புபோல கவனிக்க ஏற்பாடு செய்யணும். அதுக்கெல்லாம் வெள்ளையப்பனைத் தாராளமாக வெளியே எடுத்து வைக்கணும். சுமார் இரண்டாயிரம் இல்லாம காரியம் நடக்காது!'' என்றான்.

மோகனாம்பாள் இதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனாள். ''அத்தனை பணத்திற்கு நான் எங்கேயப்பா போவேன்?

அவ்வளவு இருந்தா நான் ஏன் இந்த ஊரில் திண்டாடிக் கொண்டு காலக்ஷேபம் செய்ய வேணும்? ஏதோ கூடக் குறைய வச்சுக்கொண்டு காரியத்தை முடிக்கப்பார்'' என்று பேரம் பேசினாள்.

''நான் வேண்டுமானால், அண்ணி என்ற உறவுக்காக, எல்லாம் இனமாகச் செய்து முடிப்பேன். மற்றவங்க அப்படிச் செய்வாங்களா? ஓர் ஆயிரம் இல்லாது ஒண்ணுமே நடக்காது. வீண் பேச்சு என்னத்துக்கு? பணம் செலவழிக்க மனம் இல்லாட்டி விட்டு விடுங்க. பேசாம போலீசுக்குத் தகவல் கொடுத்துவிட்டு நிம்மதியாக இருங்க. தானே பெண் உங்க வீட்டைத் தேடிக்கிட்டு வந்து நிற்பா'' என்றான்.

''அது தெரியாமல் இல்லை. இந்த விஷயம் ஊராருக்கெல்லாம் தெரியவேண்டாம் என்பதற்காகத்தானே உன்னைக் கூட்டிவந்தேன்?'' என்று வடிவேலு குறுக்கிட்டான்.

மோகனாம்பாளுக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது. ''தம்பி! ரொம்ப ஓங்கி ஓங்கிப் பேசாதே! என்னாலே இது விஷயமாக ஒரு ஐந்நூறு ரூபாய்தான் செலவழிக்க முடியும். அதுக்கு சம்மதமின்னா ஒப்புக்கொள். இல்லாட்டி நடையைக் கட்டு. தலைக்குமேலே வெள்ளம் ஓடும்போது சாண் போனால் என்ன முழம் போனால் என்ன?'' என்று கோபத்துடன் கூறி விட்டு எழுந்திருந்தாள்.

துரைசாமிக்கு காலை வேளையில் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை வீணே நழுவ விட மனம் இல்லை. ''உட்காருங்க, அண்ணி! உங்களுக்கு இத்தனை பதட்டம் ஏன்? சரி, நீங்க சொல்கிறபடியே இருக்கட்டும். பணத்தை இன்றே கையில் கொடுத்துவிட்டால் காரியத்தை விடுவிடுவென்று இரண்டே நாளில் முடித்துக் கொடுக்கிறேன். அதைப் பத்திக் கவலைப்பட வேண்டாம்'' என்றான்.



''அப்படி முழுத்தொகையையும் முன்னாடியே கொடுக்க முடியுமா, தம்பி! மேலும் என் கையில் தற்சமயம் அத்தனை பணமும் கிடையாது. நான் உள்ளே போய்ப் பார்க்கிறேன். கிடைச்சதைக் கொடுக்கிறேன். நீ வேலையை ஆரம்பி. சுலோ வந்து இங்கே சேர்ந்ததும் மீதிப்பணத்தை எண்ணி உன் கையிலே நான் கொடுத்துவிடுவேன். சத்தியம், நீ என்னை நம்பலாம்'' என்றாள்.

அதற்குமேல் துரைசாமி பதில் பேசாதிருக்கவே உள்ளே சென்று சில நிமிஷங்கள் பொறுத்து வந்தாள். சில்லரையும் நோட்டுமாக ஐம்பது ரூபாய் எடுத்து வந்து அவன் முன்னிலையில் வைத்து, ''இந்தா இதை வச்சுக்கொள். வீணாக நேரத்தைப் போக்காம சட்டுபுட்டுனு கவனி. சுலோவை இன்னும் சித்த நேரத்தில் கண்டுபிடிச்சுக் கொண்டு வந்தாலும் சரி, நான் சொன்ன வாக்கைத் தவறமாட்டேன்'' என்றாள். அதற்குமேல் அவளிடம் பேரம் பேசிப் பயன் இல்லை என்பதைக் கண்ட துரைசாமி பேசாது அந்தத் தொகையை எடுத்துத் தன் சட்டைப் பையில் அடைத்துக் கொண்டான்.

''அண்ணி, சுலோவினுடைய போட்டோ ஒண்ணு இருந்தாக் கொடுங்க. எங்கள் ஆட்களுக்குக் காட்ட உபயோகமாக இருக்கும்'' என்றான். மாடி அறையில் மாட்டியிருந்த புகைப்படம் ஒன்றைத் தேடி எடுத்துக்கொண்டு வந்து மோகனாம்பாள் கொடுத்தாள். கொஞ்ச நேரம் ஊர்க் கதைகளைப் பேசிவிட்டு துப்பறியும் துரைசாமி மோகனாம்பாளிடம் காலை வேளையில் கவர்ந்துகொண்ட பணத்தைப்பற்றி திருப்தியடைந்தவனாக வெளியேறினான்.

மோகனாம்பாள் இப்படி மனத்தை அலட்டிக்கொண்டு மகளைக் கண்டுபிடிக்க பல முயற்சிகள் செய்து கொண்டிருந்த அதே சமயம், நகரத்தினின்று கிழக்கே சென்றுகொண்டிருந்த ராஜபாட்டையில் ஒரு மோட்டார் வண்டி கன வேகமாக

ஓடிக்கொண்டிருந்தது. அதனுடைய பின் ஆசனத்திலே அமர்ந்திருந்த இரண்டு ஆண்களுக்கு நடுவிலே சுலோசனா உட்கார்ந்திருந்தாள். கட்டுமஸ்தான தேகமும், நீண்ட மீசையும் கொண்டு, வாட்டசாட்டமாக இடது பக்கத்திலே உட்கார்ந்திருந்த மனிதனை நேருக்கு நேர் பார்க்க அவளுக்கு அச்சமாக இருந்தது. வலது பக்கத்திலே உட்கார்ந்திருந்தவனோ தாடியும் மீசையும் தலையில் பெரிய முண்டாசுமாக வட தேசத்திலிருந்து வந்த ஒரு முரடன் போல் காட்சியளித்தான். அவனைக் கடைக்கண்ணால் பார்க்கவும் அவளுக்குப் பயமாக இருந்தது. வண்டி சென்ற திக்கும் திசையும் அவளுக்குப் புரியவில்லை.

முன் ஏற்பாட்டின்படி அவள் முதல் நாள் இரவு தன் தாயார் படுக்கச் சென்றதும், சந்தடியின்றி கீழே இறங்கிச் சென்று வாயிற் கதவைத் திறந்துகொண்டு வந்து தூண் மறைவில் இருட்டில் நின்றாள். சொல்லி வைத்ததுபோல் அவளுக்காக எதிர்பார்த்த வண்ணம் ஒரு குதிரை வண்டி வந்து வாயிலில் நின்றது. இருட்டிலே மறைந்துகொண்டு மிகவும் பயத்துடன் அதில் ஏறிக் கொண்டாள். சந்தும் பொந்துமாகச் சென்ற வண்டி சில நிமிஷங்களில் ஒரு வீட்டிற்கு முன் வந்து நின்றது. அங்கே தயாராக ஒரு மோட்டார் வண்டி காத்துக்கொண்டு இருந்தது. குதிரை வண்டியிலிருந்து அவள் மோட்டார் வண்டிக்கு மாற்றப்பட்டாள். இருட்டில் வண்டி ஓட்டிய மனிதனையோ, தன்னுடன் கூட வந்த இருவரையுமோ அவள் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. விடிந்து வெளிச்சம் பரவத் தொடங்கிய போதுதான் தன்னுடைய இரு பக்கத்திலும் உட்கார்ந்திருந்த அவர்கள் இருவரையும் முதல் முதலாக நன்றாகப் பார்க்க நேரிட்டது. கடுமையான முகமும், வலுவான உடலுமாகத் தென்பட்ட அந்த இருவரையும் கண்ட பயத்திலே அவள் நெஞ்சு உலர்ந்துவிட்டது. 'முன்பின் தெரியாத முரடர்கள் வசம் அகப்பட்டுக்கொண்டு விட்டோமே. எங்கேயாவது



கண்காணாத இடத்தில் அழைத்துக்கொண்டு போய்க் கழுத்தைத் திருகிப் புதைத்துவிட்டால் என்ன செய்வது' என்ற பயத்திலே வியர்த்து விறுவிறுத்துப் போய் உணர்ச்சியற்ற மரக்கட்டைபோல் செயலற்று அமர்ந்திருந்தாள்.

மோட்டார் வண்டி புழுதியை எழுப்பிக்கொண்டு வெகு வேகமாகப் போய் முடிவில் ஓர் ஊருக்குள் பிரவேசித்தது. 'எங்கேயிருக்கிறோம்' என்று சுலோசனா கண்களை ஓட்டி ஆராய்ந்தறியுமுன் கார் ஒரு பெரும் குலுக்கலுடன் மரங்கள் அடர்ந்த ஒரு தோப்பிற்குள் பாய்ந்தோடி ஒரு சிறு வீட்டிற்கு முன் போய் நின்றது. "இறங்கு!" என்று அதட்டியபடி மீசைக்காரன் காரின் கதவைத் திறந்து விட்டான். "சீக்கிரம்" என்று அதட்டினான் முண்டாசு ஆசாமி. சுலோசனாவின் இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. கால்கள் தரையில் பாவ மறுத்தன. கொலைக் களத்திற்குச் செல்லும் கைதி போல் தன் நினைவு இன்றி வண்டியினின்று இறங்கி உள்ளே சென்றாள்.

"அடாடா! காண்பது கனவுதானோ?" என்று பரிகாசமாய்ப் பகர்ந்தவண்ணம் ரங்கதுரை உல்லாசமாகச் சிரித்துக் கொண்டு தன் இரு கரங்களையும் நீட்டி அவளை வர வேற்றான்.

"அத்தான்!" என்று கிரீச்சிட்டு கூவிக்கொண்டு சுலோசனா மயக்கமாக அவன்மீது விழுந்துவிட்டாள். வீட்டைவிட்டுப் புறப்பட்டதிலிருந்து ஏற்பட்ட திகிலை அவளால் தாள முடியவில்லை. பச்சைத் தண்ணீரைத் தெளித்து மெல்ல விசிறி அவள் களைப்பைப் போக்கினான் ரங்கதுரை.

கண் விழித்துக் கொண்ட சுலோசனா, "அத்தான் எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது. அம்மாவை ஏமாத்திவிட்டு வந்தது பற்றி மனசு ரொம்பக் கஷ்டப்படுகிறது" என்று கூறிவிட்டு விக்கினாள்.

"பயப்படாதே கலோ, என் பேச்சின்படி நீ நடந்து கொள்வதானால் விரைவில் சகல செளபாக்கியத்தையும் பெற்றுச் சுகமாக வாழப் போகிறாய். இப்போது உன் வீட்டை விட்டு என் பொருட்டு ஓடி வந்தது பெரிதல்ல, நான் மேலே சொல்லப்போகும் இரண்டொரு காரியங்களில் எனக்குக் கைகொடுத்து உதவி செய்ய வேண்டும்" எனக் கூறிவிட்டுக் கொஞ்சினான்.

"அத்தான்! உங்களுக்காக என் உயிரையே வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். என் வார்த்தையை நம்புங்கள்" என்றாள், தனக்குக் கொஞ்ச நாட்களில் வரப் போகும் ஆபத்துக்களை கொஞ்சமும் அறிந்து கொள்ளாத அந்தப் பேதைப் பெண்.

## 20

டாக்டர் குருமூர்த்தி அன்று மிகவும் களைத்து விட்டிருந்தார். காலையில் எழுந்ததிலிருந்து தொடர்ந்து வந்து குவிந்த தொழில் அலுவல்களைக் கவனித்துவிட்டு, அவர் போஜனத்திற்கு உட்காரும்பொழுது இரவு வெகு நேரமாகி விட்டிருந்தது. வயோதிகத்தின் காரணமாக உடலில் முன்னைவிட அலுப்பு மிஞ்சிவிட்டிருந்தது. உள்ளத்திலே நாளடைவில் அதிகரித்துக் கொண்டுவந்த உற்சாகக் குறைவினால் வாழ்க்கை அவருக்குப் பெரிய சுமையாகத் தோன்றியது.

இலையில் வேலைக்காரன் வட்டித்த போஜனத்தின் மீது கையை வைத்தார். ஒரு கவளம் அள்ளி வாயில் போடக் கூட ஆரம்பிக்கவில்லை. வாயிற் கதவைப் படபடவென்று பலர் தட்டும் சப்தம் எழுந்தது. எஜமான் முகத்தைக் குறிப்பாகக் கவனித்துவிட்டு வேலைக்காரன் கதவைத் திறக்க ஓடினான்.



எப்பொழுதும் அடிக்கடி அவர் வாழ்க்கையிலே நடக்கும் சம்பவம்தான் அது. களைத்துச் சோர்ந்து பசி தாளாது சாப்பிட உட்காரும்பொழுது ஆபத்து நிலையில் இருக்கும் ஒரு நோயாளிக்காக யாராவது அவசரமாக அழைக்க வந்திருப்பார்கள். பல நாளையப் பழக்கத்தினால், வந்தவர்கள் கூறு முன்பே குருமூர்த்திக்கு அவர்கள் வந்த காரணம், காரியம் யாது என்பதை உள்ளுணர்வு ஒன்று, தானே உணர்த்தி விடுவது உண்டு. கசமுச என்று வாயிற்பக்கம் பேச்சுக்குரல்களும், வேலைக்காரன் ஏதோ சமாதானம் கூறுவதும் கேட்டது. நீண்ட நேரம் அமைதியாக அவரால் இருக்க முடியவில்லை. அவசரமாக போஜனத்தை முடித்துக் கொண்டு கையைக் கழுவிவிட்டு வெளியே வந்தார்.

வாயில் வராந்தாவை அடைத்துக்கொண்டு ஒரு பெரும் கூட்டம் நின்றுகொண்டிருந்தது. ஒரு கையில் லாந்தரும், ஒரு கையில் ஒரு பெரிய தடியும், தலையில் பலமான முண்டாசுமாகத் தோற்றமளித்த ஆசாமி, வைத்தியரைக் கண்டதும் கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு முன் வந்தான். நெற்றி முழுவதும் வழிந்த வியர்வையும், பேசுமுன் அவனுக்கு ஏற்பட்ட பதட்டமுமே அவன் நோயாளிக்கு நெருங்கிய உறவினன் என்பதை அறிவுறுத்திக் கொண்டிருந்தன.

"நான்கு நாளாக வேதனைப்படுகிறாங்க. இன்னி பகல் ரொம்ப ஜாஸ்தியாயிடுக்க, உள்ளூர் மருத்துவ அம்மா கை விட்டுட்டாங்க. நீங்க உடனே வந்தாக்க..." என்ற கூறி முடிக்க முடியாது நாத் தடுமாறினான் அவன்.

இதுவும் குருமூர்த்தி தமது வைத்தியத் தொழில் அனுபவத்திலே கேட்டு அலுத்துவிட்டிருந்த பழைய கதையேதான்.

திறமையும், தயாள குணமும் ஒருங்கே கூடிய வைத்தியர் அருகில் இருந்தும் சில சமயம் கிராமத்து மக்கள் அவருடைய உதவியை தக்க சமயத்தில் ஏற்பதில்லை. நோயாளியின் உடல்

பலஹீனமாகி, இனி ஒன்றும் முடியாது என்ற நிலை வந்ததும், நோயாளி உயிருக்கு எமனுடன் போராடும் கடைசி நிமிஷத்தில் குருமூர்த்தியைத் தேடிக்கொண்டு பெரும் கோஷத்துடன் கூக்குரலும் அழுகையுமாக ஓடி வருவார்கள். அலட்சியம் செய்யாது உடனுக்குடன் ஓடினாலும், சில சமயம் வைத்திய உதவியைப் பெறுமுன்னே நோயாளி மரணமடைந்து விடுவதும் உண்டு. ஒரு கடைசி முயற்சி என்று வைத்தியர் போராடிப் பார்ப்பதற்குக் கூட சந்தர்ப்பமே சில சமயங்களில் இருந்ததில்லை. "காலையிலிருந்து இவ்வளவு நேரம் என்ன செய்தீர்கள்; சற்று முன்னதாக வந்திருக்கக் கூடாதா?" என்று துயரமும் கோபமும் தாள முடியாது. உறவினர்களைக் கடிந்துகொள்வதைத் தவிர வேறு ஏதும் வைத்தியர் செய்யமுடியாது போய்விடுவதும் உண்டு.

ஆகவே குருமூர்த்திக்கு ஒரே நொடியில் தம்மை அழைத்துப்போக வந்தவர்களின் கருத்து புரிந்து விட்டது. அவர் வீணே பொழுதைப் பேசிக் கழிக்க விரும்பவில்லை. "எத்தனாவது குழந்தை!" என்று மட்டும் கேட்டார், நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டு.

முண்டாசு ஆசாமி, "எட்டாவதுங்க" என்றதும், "ம்!" என்று பதிலுக்கு உறுமிய குருமூர்த்தி வேகமாக உள்ளே சென்று தமது மருந்துவப் பைக்குள் வேண்டிய சாமான்களை வைத்து அடுக்கி மூடினார். நிழலைப்போல் பின்னால் ஓடி வந்த வேலைக்காரப் பையன் டாக்டர் அய்யாவின் பெட்டியை எடுத்து, வாசலில் தயாராக நின்று கொண்டிருந்த மாட்டு வண்டிக்குள் வைத்தான். உள்ளே பரப்பியிருந்த வைக்கோலை சரிப்படுத்திவிட்டு, அதன் மீது ஒரு ஜமுக்காளத்தை விரித்து, நிதானமாகச் சாய்ந்து கொள்ள ஒரு தலையணையை வைத்துவிட்டு, வீட்டுக் கதவுகளைப் பூட்டிக் கொண்டு மிகவும் பயபக்தியுடன் வைத்தியர் அருகே வந்து நின்றான்.



வண்டிக்குள் ஏறி உட்கார்ந்துகொண்ட குருமூர்த்தி தலையணைமீது சாய்ந்து கொண்டார். "இங்கிருந்து நாம் எங்கே போகிறோம்!" என்று அப்போதுதான் போகுமிடத்தைப் பற்றி விசாரித்தார். பதில் அவர் எதிர்பார்த்ததே. அதனால் திடுக்கிடவில்லை.

"பக்கத்து கிராமம், பன்னிரண்டுகல்லு தூரம் தானுங்க" என்று மிகவும் அமைதியாக பதில் அளித்தான் முண்டாசு ஆசாமி. "ம்! சீக்கிரம், ஆகட்டும்" என்று குருமூர்த்தி அதட்டவே வண்டி புறப்பட்டது.

ஊரே புரண்டு வந்து விட்டதுபோல் திரண்டு நின்ற கூட்டத்திலே பாதிப்பகுதி இப்போது கரைந்துவிட்டது. டாக்டர் அய்யாவைத் தேடிக்கொண்டு வந்தபோது ஊரில் நுழைந்த சமயம் ஆங்காங்கே விசாரிக்கையில் ஒவ்வொருவராகத் தொடங்கிக் கொண்டவர்களின் எண்ணிக்கை அந்தக் கூட்டத்திலே பாதிக்கும்மேல் இருந்தது. ஆபத்து, என்னவோ ஏதோ என்ற அறிந்துகொள்ள ஆவலுடன் கூடியிருந்தோர்கள் அவர்கள். வைத்தியர் புறப்பட்டு விட்டதும், அவர்கள் ஆவலும் தணிந்துவிட்டது. ஒருவர்பின் ஒருவராக நாலா புறமும் கலைந்து சென்று விட்டனர். மற்றொரு பகுதி மட்டும் அடுத்த கிராமத்தில் நோயாளி வீட்டிலிருந்து புறப்பட்டு வந்தவர்கள். அவர்கள் எண்ணிக்கையில் வழக்கம்போல் இருபது பேர்களுக்கு மேற்கொண்டு இருந்தார்கள். நோயாளிக்கு நெருங்கிய உறவினனான முண்டாசு ஆசாமி மட்டும் வண்டியோட்டுபவன் அருகே ஏறி உட்கார்ந்து கொண்டான். மற்றவர்கள் வண்டிக்குள் முன்னும் பின்னுமாக இரு பகுதிகளாகப் பிரிந்து கொண்டு வண்டியுடன் பாதி ஓட்டமும், பாதி நடையுமாகச் சென்று கொண்டிருந்தார்கள்.

அழகர்நத்தத்தின் முக்கிய தெருக்களை விரைவாகக் கடந்து சென்றுவிட்டது அந்த வண்டி. ஆனால் ராஜ

பாட்டையைத் தாண்டி குறுக்கே செல்ல வேண்டிய பாதை முழுவதும் மண்ணும் கற்களும் நிறைந்து கிடந்ததனால் சக்கரங்கள் மண்ணிற்குள் புதைந்து எழும்பி நகர்வதற்குள் யுகமாகத் தோன்றியது. மேட்டிலும் பள்ளத்திலும் ஏறி இறங்கிக் குலுங்கியபடி போய்க்கொண்டிருந்த வண்டியில் கண்களை மூடியபடி சிந்தனையே உருவாக குருமூர்த்தி உட்கார்ந்திருந்தார். இரவின் அமைதியான அந்த வேளையில் எங்கிருந்தோ ஒரு பயங்கரமான அலறல் கேட்கவே, வண்டியோட்டி உட்பட அனைவரும் திடுக்கிட்டு அரண்டுபோய்ச் செயலற்று விட்டனர்.

கண்களை விழித்துக்கொண்டு, வண்டியினின்று தலையை நீட்டி வெளியே எட்டிப் பார்த்தார் குருமூர்த்தி. கூட வந்தவர்கள் அனைவரும் அப்படியே நின்று விட்டனர். அருகிலே யாரோ ஒரு பெண் பயங்கரமாக உதவி தேடும் அபயக்குரல் காற்றின் ஊடே மிகவும் கணீரென்று எல்லோர் காதுகளிலும் கேட்கும்படி விழுந்தது. ''யாரோ பொம்பளையைக் கொலை செய்யறாப்போலே தோணுதுங்க!'' என்றான் நடுக்கத்துடன் முண்டாசு ஆசாமி.

மறுபடியும் காற்றினூடே 'வீல்' என்ற அலறல் கேட்கவே, டாக்டர் குருமூர்த்தி வண்டியினின்று துள்ளிக் கீழே குதித்தார். சற்று நின்று சப்தம் வந்த திசையை நிதானித்து விட்டு, ''வாருங்கள் ஓடி வாருங்கள், இந்தப் பக்கம் தான்!'' என்று குறிப்பிட்ட பாதையைக் காட்டிவிட்டு தாம் வேகமாக முன்னே ஓடினார்.

சுற்றிலும் சூழ்ந்து கொண்டிருந்த காரிருளில் உமாவுக்கு ஒன்றுமே புலப்படவில்லை. தான் ஒரு பயங்கரமான ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறோம் என்று மட்டும் புரிந்தது. அவளது உடல் பயத்தில் கிடுகிடுவென்று நடுங்கியது. நெஞ்சு வெடித்து



31505
4757969

விடும்போல் அடித்துக் கொண்டது. மேலே அதிகம் கத்தவும் முடியாது போல் கிலி தொண்டையை அடைத்துக் கொண்டது.

''அண்ணாச்சி, இன்னிக்கு முழிச்ச மூஞ்சி நல்ல மூஞ்சிதான்'' என்று கேலியுடன் கூவிய முரடன் ஒருவன், உமாவின் கரத்தைக் கெட்டியாகப் பற்றிப் பலவந்தமாக வண்டியினின்று அவளை வெளியே இழுத்தான்.

''ஐயோ'' என்று உமா பதிலுக்குக் கிரீச்சிட்டு அலறினாள். ஆச்சரியத்திற்கு அறிகுறியாக 'விஷ்' என்று ஒருவன் சீட்டியடித்தான். கையில் பிடித்திருந்த டார்ச் விளக்கை அவள் முகத்துக்கு எதிரே ஒரு கணம் மின்ன விட்டான் இன்னொருவன். ''பேஷ் பேஷ்! பெண்ணும் மாப்பிள்ளையும் சேர்ந்தாற்போல் கிடைச்சுட்டாங்க. மேலே முகூர்த்தத்தை நடத்தி வைக்க வேண்டியதுதான் பாக்கி தம்பி!'' என்று பரிகாசமாகக் கொக்கரித்தான் கூட்டத்தில் ஒருவன்.

''உதவிக்கு யாராவது வாருங்கள், ஐயோ! ஐயோ!'' என்று இரவின் நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு மீண்டும் உமா அலறினாள். ''ஸ்! சும்மா இரு, இல்லாட்டி மண்டை சிதறிவிடும்'' என்று அதட்டிய முரடர்களில் ஒருவன், இடது கரத்தால் அவள் வாயை அழுத்திப் பொத்தினான். வலது கரத்தினால் அவள் கழுத்தில் அணிந்து கொண்டிருந்த ஆபரணங்களைக் களைவதில் அவன் மும்முரமாக ஈடுபட்டு விட்டான். ''மாப்பிள்ளை! இறங்கைய்யா வண்டியை விட்டு! வெத்திலை பாக்கு வைக்கணும்னு காத்திருக்கிறாயா?'' என்று கேலியாகக் கேட்ட வண்ணம் அவர்களில் ஒருவன் வண்டிக்குள் பாய்ந்து இருட்டில் கையை நீட்டித் துழாவிக் கொண்டிருந்தான். வண்டியில் வேறு யாரும் காணப்படாதது அவனுக்கு ஆச்சரியத்தை விளைவிக்கவே, ''மச்சான்! மாப்பிள்ளையைக் காணவில்லையே! இதென்ன கூத்து!'' என்று வியப்புடன் கூறினான்.

"நமக்கென்ன? கிடைச்சது ஆதாயம்" என்று ஒருவன் அதற்குச் சமாதானம் கூறும் குரல் கேட்கவே அனைவரும் வண்டியைவிட்டு உமாவைச் சுற்றிக் கொண்டனர்.

உயிருக்கும், மானத்திற்கும் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டவுடனே எங்கிருந்தோ பண்ணையார் மகளுக்கு உடலில் அபாரமானதொரு சக்தி ஏற்பட்டு விட்டது. தன்னை இறுகப்பிடித்திருந்த முரடன் கையிலிருந்து ஒரு சிறு பந்துபோல் அப்பால் துள்ளி இருட்டில் தலைதெறிக்க ஓடினாள். "ஐயோ! ஐயோ! உதவிக்கு யாருமில்லையா?" என்று அண்டசராசரம் எல்லாம் எதிரொலிக்க அபயக்குரல் கொடுத்து பீறிட்டு அலறத் தொடங்கிவிட்டாள்.

"அடா! பயந்துடுவமோ? எங்கே போறே பார்ப்போம்?" என்று அதட்டிக் கொண்டு முரடர்கள் அவளைப் பின்பற்றி ஓடத் தொடங்கினார்கள். மேலாடை நழுவி விழ, முள்ளும் புதர்களும் காலைக் கிழிக்க, வேடன் கையினின்று மீண்ட பறவை தன் உயிருக்கு மன்றாடி ஓட முயற்சிக்கையில் ஏற்படும் அந்தப் பெரும் கடைசி முயற்சியை உமா மேற்கொண்டு விட்டாள்.

இது சமயம் கையில் லாந்தர்களும் தடிகளுமாகப் பல ஆட்கள் நாலாபுறத்தினின்று தங்கள் திசையை நோக்கி ஓடிவருவதை அறிந்ததும், அவளைத் துரத்திக் கொண்டு பின்னால் வந்த முரடர்கள் பாடு திண்டாட்டமாகிவிட்டது. கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல் தங்கள் நிலை திடீரென்று அபாயமாகி விட்டதை அறிந்ததும் அவர்கள் மேலே தொடர்வதை நிறுத்திவிட்டு, ஆளுக்கொரு திக்கில் மரங்கள் பின்னால் பதுங்கித் தலைதெறிக்க ஓடித் தப்பித்துக்கொள்ள முயன்றனர். டாக்டர் குருமூர்த்தியை அழைக்கவந்த கோஷ்டியினர் சிலருக்கு ஏற்பட்ட அபார உற்சாகத்திலே உமாவைத் தாக்க நின்ற முரடர்கள் பாடு பெரும்பாடாகி விட்டது. அகப்பட்டுக்கொண்டால் உயிர் தப்பாது என்ற



கிலியினால் காற்றிலும் கடுவேகமாக ஓடி வெகு தூரத்திலே சாலைக்குள் சென்று மறைந்து விட்டனர்.

கடவுளது கிருபையினால் தன் உயிருக்கும் மானத்திற்கும் ஏற்பட்ட பெரிய ஆபத்து திடீரென்று எதிர்பாராத உதவியினால் பஞ்சாகப் பறந்தோடிவிட்டதை உணர்ந்த உமாவுக்கு அதற்கு மேல் தாளமுடியவில்லை. தன் அருகே வந்துநின்ற வைத்தியரை அவளால் இருட்டில் சட்டென அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. தாயை வெகு நேரம் பிரிந்திருந்த குழந்தை மீண்டும் பார்க்கும் போது துக்கம் நெஞ்சை அடைத்துக் கொள்வது போல், சமயத்திற்கு வந்து உதவிய அந்தக் கூட்டத்தில் அனைவரையும் கண்டு துக்கம் தாளமுடியாது அவள் விம்மினாள். "ஐயா! நீங்கள் எல்லோரும் எனக்குச் செய்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேனோ தெரியவில்லை! இதை நான் என்றென்றும் மறக்கமாட்டேன்!" என்று தடுமாறினாள். அதற்கு மேல் அவளால் பேசமுடியவில்லை. ஆயாசமும் பயத்தினால் ஏற்பட்ட சோர்வும் தாளமுடியாது அப்படியே மயக்கமாகக் கீழே சாய்ந்துவிட்டாள்.

வண்டிக்குள் கிடந்த ஆசனத்தைச் சரிப்படுத்தி அவளை மெல்லத் தூக்கி அதற்குள் போட்டுவிட்டு, ஹரிக்கேன் விளக்கை முகத்து அருகே அந்த ஆட்கள் பிடித்தபொழுது தான் டாக்டர் குருமூர்த்திக்கு அந்த அபலைப் பெண் யார் என்று விளங்கியது. தமக்குள் எழுந்த ஆச்சர்யத்தையோ வியப்பையோ அவர் எதும் வெளிக்காட்டவேயில்லை. தமது மருந்துப் பெட்டியை அவசரமாகத் திறந்து மயக்கம் தெளிவிக்க ஒரு மருந்தை எடுத்து ஒரு சிறு கிண்ணத்தில் விட்டுக் கொஞ்சம் தண்ணீர் சேர்த்துக் கலக்கி உமாவின் வாய்க்குள் மெல்ல சிரமப்பட்டு செலுத்தினார். அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியினால் நரம்பு ஸ்தானம் பலஹீனமடையாதிருக்க ஒரு நல்ல தூக்க மருந்தை ஊசி மூலம் செலுத்திவிட்டு, பெட்டியை மூடிக்கொண்டு கீழே இறங்கினார்.

இதற்குள் பாதையோரத்தில் மயக்கமாகத் தன் நினைவு இன்றிக் கிடந்த வண்டியோட்டிக்குச் சிலர் சைத்யோபசாரங்கள் செய்து அவன் மயக்கத்தைத் தெளிவிக்க முயற்சித்தனர்.

வைத்தியரும் மற்ற எல்லோரும் கூடிச் செய்த உபசாரத்தில் அவன் விரைவில் தன் நினைவு பெற்று எழுந்து விட்டான். எனினும், மேலே வண்டியை ஓட்டிக்கொண்டு மறுபடி அவன் தனியே போக குருமூர்த்தி அனுமதிக்கவில்லை. அவரது யோசனையின் பேரில் வந்திருந்த ஆட்களில் பாதிப்பேர்கள், உமா வந்த வண்டியைப் பாதுகாத்து, அவளைப் பத்திரமாக அவளது மாளிகையில் கொண்டு ஒப்படைக்கும் பொறுப்பை உற்சாகத்துடன் ஏற்றுக் கொண்டனர்.

எனவே கூட்டம் இரு பகுதிகளாகப் பிரிந்தது. ஒரு பகுதியினர் குருமூர்த்தியுடன் அடுத்த கிராமத்து நோயாளியைக் கவனிக்க வேறு திக்கில் விரைந்தனர். ஒரு பகுதியினர் பண்ணையார் மகளுக்கு பராக்குக் காட்டியவண்ணம் அவளை பத்திரமாக மாளிகைக்குக் கொண்டு செல்லும் பணியில் மற்றொரு திக்கில் பிரிந்தனர்.

இந்தச் சம்பவம் நடந்து ஒரு வார காலமாகிவிட்டது. உமா அன்று படுக்கையாகப் படுத்தவள் நரம்பு அதிர்ச்சி தாள முடியாது நோயாளியாகப் படுத்துவிட்டாள். அவள் எவ்வளவோ முயற்சித்தபோதிலும் இந்த விஷயம் ஊர் முழுவதும் எப்படியோ பரவிவிட்டது. 'பண்ணையார் மகளை யாரோ போக்கிரிகள் வளைத்துக்கொண்டு இம்சை செய்யப் பார்த்தார்களாமே! கள்வர்கள் கையில் பண்ணையார் மகள் சிக்க இருந்தாளாமே!' என்றெல்லாம் கதைகள் பல விதமான உருவத்தில் அழகார்ந்தம் காற்றில் பரவி மிதந்து கொண்டிருந்தன. வழக்கம்போல் வேலையற்ற வம்பர்கள் ஒன்றைப் பத்தாகத் திரித்து, வெவ்வேறு வர்ணப் பூச்சுப் பூசி அதை மேலும் மேலும் பரப்பும் கைங்கரியத்தில் துரிதமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.



தன்னுடைய வண்டியில் சென்ற உமாவுக்கு ஏற்பட்ட ஆபத்தை அடுத்த நாள் காலையிலேயே சிவகுமாரன் டாக்டர் குருமூர்த்தி வாயிலாக அறிந்து கொண்டுவிட்டான். தான் கூடத் துணைக்கு செல்லாதிருந்தது தவறு என்று அவன் உள்ளம் மிகவும் வேதனைப்பட்டது. கள்வர்கள், முரடர்கள் முதலிய யாரோ அன்னியர்கள் உமாவைத் தாக்க முயற்சித்தார்கள் என்பதை அவன் மனம் நம்ப மறுத்தது. மலைபோல் ஏற்பட்ட ஆபத்து கடவுள் கருணையால் எதேச்சையாக வைத்தியர் குருமூர்த்தி மற்றவர்களின் மூலமாகத் தகர்க்கப்பட்ட போதிலும், சிவகுமாரனுக்கு மட்டும் உமாவைச் சுற்றிலும் ஒரு பெரிய ஆபத்து ஆரம்பமாகியிருக்கிறது. இந்த முதல் தாக்குதல் அதன் அறிகுறி, என்றவரைக்கும் உள்ளுணர்வு ஒன்று எச்சரிக்கை செய்யத் தொடங்கிவிட்டது. எனவே அவன், உமாவை ஒவ்வொரு நிமிஷமும் பாதுகாத்து அந்த பயங்கரத்திலிருந்து மீட்டுவிட வேண்டும் என்ற தீர்மானத்தை மேற்கொண்டான். அவ்வாறு செய்வது தன் கடமையும் கூட என்று எண்ணினான்.

அதன் பயனாக, டாக்டர் குருமூர்த்தி அடுத்த தினம் பண்ணையார் மகளது ஆரோக்கியத்தை அறிந்துபோகத் தானே மாளிகைக்கு விஜயம் செய்திருந்த போது கூடவே சிவ குமாரனும் வந்திருந்தான். அதற்குப் பின்னர் தினம் இருவேளைகள் அங்கே தானே வலியச் சென்று உமாவைக் கண்டு அவளது க்ஷேமலாபங்களை விசாரித்து அவளது ஆரோக்கியத்திலும் பாதுகாப்பிலும் கருத்து எடுத்துக் கொள்ளலானான்.

பத்து நாட்கள் படுத்த படுக்கையாக இருந்துவிட்டு, அன்று காலைதான் ஸ்நானம் செய்து சுத்தமான ஆடைகள் உடுத்தி முதல் முதலாக உமா எழுந்து வீட்டிற்குள் மெல்ல நடமாட ஆரம்பித்திருந்தாள். சமையற்காரன் தயாரித்துக் கொண்டு வந்து சூடாகப் பரிமாறிய கஞ்சியை மெல்ல

உட்கொண்டவண்ணம், மாளிகையின் பின்கட்டு ஹாலில் அவள் ஓய்வாக ஆசனமொன்றில் சாய்ந்துகொண்டு அமர்ந்திருந்தாள். முரடர்களால் தாக்கப்பட்ட அந்த பயங்கரத்தின் அதிர்ச்சியினின்று அவள் வெளியேற முயற்சித்துக் கொண்டிருந்த அந்தப் பத்து நாட்களில் அவளுக்கு ஓய்வு என்பது உண்மையில் ஒரு நிமிஷமும் இருக்கவில்லை. பண்ணையார் மரணமடைந்த பின்னர் துக்கம் விசாரிக்க வந்து போய்க் கொண்டிருந்த உற்றார் உறவினர் நண்பர்களின் கூட்டத்தைப்போல் இருமடங்கு அனுதாபிகளின் கூட்டம் ஓயாது பண்ணை மாளிகைக்கு வந்து போய்க்கொண்டிருந்த வண்ணமேதான் இருந்தது. உமா எவ்வளவோ கண்டிப்பாக இருந்தும் அவளால் சிலரைத் தவிர்க்க முடியவில்லை.

''தன்னந்தனியாக ஒரு பெண் இத்தனை பெரிய அந்தஸ்திலே வாழ்வதைக் காண எந்தப் பாவியோ பொறுக்காது இந்த அக்கிரமம் செய்திருக்கிறான் அம்மா!'' என்று வந்து போனவர்கள் ஓயாது அவளிடம் புலம்பி அனுதாபம் தெரிவித்து அவளது மனக்குழப்பத்தை அதிகரித்த வண்ணமிருந்தனர்.

பலர் பலவிதமாகப் பேசியதையெல்லாம் கேட்டுப் பண்ணையார் மகள் தனது வருங்காலத்தைப்பற்றி மிகவும் கலங்கிவிட்டிருந்தாள். முன்னைப்போல் அவளுக்குத் தன்னந்தனியாக அந்த பங்களாவினுள் வசிக்க மிகவும் பயமாக இருந்தது. அவளது மனப்போராட்டத்தை ஒருவாறு உணர்ந்துகொண்ட வைத்தியர் குருமூர்த்தி, சிவகுமாரனிடம் அதைப்பற்றிப் பக்குவமாகப் பேசினார். அதன் பயனாக சிவகுமாரன், அவளைப் போலி பயத்திலிருந்தும், உண்மையான ஆபத்திலிருந்தும் தன் உயிரைக் கொடுத்தேனும் காப்பாற்றி விடுவது என்று தீர்மானித்துவிட்டான்.

அன்று தினம் அவளைக் காண அங்கு வந்தபோது சில முன் ஏற்பாடுகளுடனேயே அவன் வந்திருந்தான்.



பின்னால் ஏற்பட்ட காலடி சப்தத்தைக் கேட்டு அவள் அரண்டுபோய் எழுந்து உட்கார்ந்தாள். புயல்காற்றில் அகப்பட்ட தளிர்க்கொடிபோல் அவளது மேனி நடுங்குவதைக் கண்ட சிவகுமாரன் நெஞ்சம் நெகிழ்ந்துவிட்டது. ''மன்னிக்கணும். உங்களை நான் பயமுறுத்தி விட்டேன் என நினைக்கிறேன்'' என்று கூறிவிட்டுப் புன்முறுவலித்தபடி எதிரே வந்து அமர்ந்து கொண்டான்.

''ஆனாலும், நான் இப்படி ஒரு கோழையாக இருக்கக்கூடாது. காற்று அசைவுக்கும், காலடி ஓசைக்கும் பயந்தால் வாழ்க்கையை எப்படித்தான் சமாளிக்கப் போகிறேனோ?'' என்று கூறிவிட்டு சங்கோஜத்துடன் மெல்லச் சிரித்தாள். பத்து நாட்கள் படுத்த படுக்கையாக இருந்த அலுப்பு, ஏற்கெனவே தந்தம் போலிருந்த அவளது மேனியை மிகவும் வெளிறடையச் செய்திருந்தது. ஓடிக் களைத்து விட்டு வந்து நிற்கும் குழந்தையின் முகத்திலே கொஞ்சி விளையாடும் சுருண்ட கேசத்தைப்போல், அவளது சுருண்ட கூந்தல் நெற்றி மீதும் கன்னங்கள் மீதும் கலைந்து வந்து தொங்கிக் கொண்டிருந்தது.

அந்நிலையில் கன்னங்குழிய கபடமற்று அவள் சிரித்த போது ஏற்பட்ட முகபாவம் சிவகுமாரனது உள்ளத்திலே குமுறிய பாசத்தைப் பெருகச் செய்தது என்றால் மிகையில்லை. அந்தஸ்து இருந்தும் ஆடம்பரமே இல்லாத அந்தப் பெண் மீது அவனுக்கு நாளடைவில் அன்பு பெருகிக் கொண்டுதான் வந்தது. ஆனால் சமீபத்தில் அந்த அன்பு காதலாகப் பரிணமித்து விட்டதை அறிந்தபோது அவனுக்கு ஏற்பட்ட சஞ்சலம் கொஞ்சநஞ்சமல்ல. பண்ணையார் மகளுக்கும் தனக்கும் நடுவே இருந்த வேற்றுமைகளை எண்ணிய போது அவன் மனம் உணர்ச்சிப் போராட்டத்திலே குமுறிக் கொந்தளித்தது. தன்னைப்போன்ற நிலையில் உள்ள மனிதன், உமாவைப் போன்ற நிலையில்

இருந்த பெண்ணைக் காதலிப்பது மனிதத்தன்மைக்கே ஒவ்வாதது என்றவரைக்கும் தனக்குள்ளே எண்ணிப் புழுங்கி, அந்த அன்புப் பிணைப்பைத் தன் உள்ளத்தினின்று தகர்த்தெறிய அவன் ரகசியமாகப் பாடுபட்டுக் கொண்டிருந்தான்.

''நானும் டாக்டர் குருமூர்த்தியும் யோசித்து ஒரு திட்டத்திற்கு வந்தோம். தங்களுக்கு மன அமைதி அதிகம் ஏற்படும் நிமித்தம் பண்ணையில் தங்கள் அருகே அதிகம் உதவி செய்ய இன்னும் சில ஆட்களை நியமிக்கலாம் என்பது எங்கள் அபிப்பிராயம். அதற்குத் தாங்கள் ஒப்பினால்...'' என்று கூறிவிட்டு நிறுத்தினான். பண்ணை நிர்வாகத்தில் திடீரென்று தான் தலையிட்டு அதிகப்பிரசங்கித்தனமான ஆலோசனைகள் கூற அவனுக்கு மிகவும் சங்கோஜமாக இருந்தது.

பாத்திரத்தில் மீதம் இருந்த கஞ்சியைச் சுவைத்துக் குடித்துவிட்டுத் திருப்தியுடன் வாயைக் கைக்குட்டையால் மெல்லத் துடைத்துக் கொண்டாள் உமா. ''தாங்களும்... டாக்டர் குருமூர்த்தியும் கூறப்போகும் எந்தவிதமான ஆலோசனையையும் நான் எவ்வித மறுப்புமின்றி ஏற்கத் தயாராக இருக்கிறேன். எனது பாதுகாப்பிற்கு இன்னும் சில புதிய ஆட்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் அப்படிச் செய்ய எனக்கு ஆக்ஷேபணையேயில்லை. மிஸ்டர் சிவகுமார்! நீங்கள் இதுபற்றித் தயக்கமின்றித் தாராளமாக ஏற்பாடு செய்யலாம்'' என்றாள் உற்சாகத்துடன்.

''பங்களா தோட்டத்தில் ஒரு புது ஆளை நியமிப்பது என்று தீர்மானித்தோம். உங்களுடன் சதா கூட இருந்து உதவி செய்வதற்கு ஒரு நல்ல வேலைக்காரியையும் கூட நியமிப்பது என்பது எங்கள் திட்டம். இந்த இரண்டு ஆட்களும் எங்களுக்கு மிகவும் தெரிந்து பழக்கமானவர்களாக இருக்க வேண்டும். நம்பிக்கைக்கும் உகந்தவர்களாக இருக்க வேண்டும் என்பது எங்கள் அவா'' என்றான் சிவகுமார்.



''டாக்டர் குருமூர்த்தியை நான் எனது அறியாமையினால் மிகவும் அவமானப்படுத்தி துச்சமாகப் பேசி விட்டேன். ஆனால் அந்த மகானுபாவர் உதவியால்தான் அன்றைய தினம் நான் காப்பாற்றப்பட்டேன் என்பதை அறிந்தபோது நான் பட்ட பச்சாத்தாபமும் அதன் வேதனையும் கொஞ்சநஞ்சமல்ல. பார்வைக்குக் கடின சித்தர் போலவும், பேசும்போது கண்டிப்பானவர் போலவும் தென்படும் டாக்டர் குருமூர்த்தி உண்மையிலேயே மிகவும் தங்கமான மனிதர் என்பதை இப்போதுதான் உணர்கிறேன். அவ்வளவு துச்சமாக நான் அவரைக் கடிந்து கொண்டிருந்தும் அவர் அதைச் சிறிதாவது வெளிக் காட்டிக் கொள்கிறாரா, பாருங்கள். அன்று ஏற்பட்ட ஆபத்திலிருந்து என்னைக் காப்பாற்றிய பின்னர் இன்றுவரை எனது உடல் நிலையிலும் ஆரோக்கியத்திலும் கருத்துக்காட்டி, தானாக வலிய வந்து வைத்தியம் செய்துவிட்டுப் போகிறார்.

''நாம் சில சமயம் வெளித்தோற்றத்தைக் கண்டு சட்டெனத் தவறாக ஒருவரைப்பற்றி எண்ணி விடுகிறோம்; அவமானப் படுத்தி விடுகிறோம். உண்மையில் அந்த மனிதர் வேறு விதமான தன்மையினர் என்று அறியும் போது நமக்கு ஏற்படும் வெட்கமும் துக்கமும் கொஞ்சநஞ்சமல்ல. டாக்டர் குருமூர்த்தியை நான் எனது துடுக்கான பேச்சுக்களால் அவமானப் படுத்தியதை எண்ணி எண்ணி ஒவ்வொரு நாளும் வருந்துகிறேன். அதற்கு நான் என்ன விதமாகப் பிராயச்சித்தம் செய்யப் போகிறேனோ, தெரியவில்லை'' என்றாள் உணர்ச்சி பொங்கும் குரலில்.

''டாக்டர் குருமூர்த்தி விஷயமாக நீங்கள் எந்தவிதமான வழியிலும் பிராயச்சித்தம் செய்ய வேண்டியதில்லை. தங்களிடம், அவர் அதிகம் நெருங்கிப் பழகாவிட்டாலும் தங்களது கபடமற்ற உள்ளத்தை அவர் தெள்ளென அறிவார். இதையெல்லாம் பற்றி இப்போது தாங்கள் கவலைப்படுவது

தகாது'' என்று சமாதானம் கூறிவிட்டு சிவகுமார், சம்பாஷணையை வேறு திக்கில் திருப்பி சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு விடை பெற்றுக் கொண்டு சென்றான்.

கொஞ்ச நேரத்திற்குப் பின்னர் மானேஜர் வரதராஜனது வில்வண்டி மிகவும் வேகமாக மாளிகைத் தோட்டத்திற்குள் வந்து வாசலில் நின்றது. பண்ணையார் மகளது க்ஷேமலாபங்களை நேரில் கேட்டறிந்து போக ஷண்பகவல்லியம்மாள், ரங்கதுரை, அண்ணன் இருவர் துணையுடன் அங்கே வந்திருந்தாள்.

''என்ன சொல்லியும் கேட்கவேயில்லை, அம்மா. தாங்கள் மன்னிக்க வேண்டும். ஓய்வாக இருக்கும் தங்களைப் பேசி இம்சிக்கக்கூடாது என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன்'' என்று பூர்வபீடிகை போட்டுவிட்டு தனது சகோதரியின் வருகையை அறிமுகப் படுத்தினார் மானேஜர் வரதராஜன்.

உமா பதில் பேசு முன் ஷண்பகவல்லி முத்துப் பற்கள் ஒளி வீச கலகலவென்று நகைத்தாள். ஒரு பட்டுத்துணி போட்டு மிகவும் பத்திரமாக மூடியெடுத்து வந்த வெள்ளித் தட்டை அருகில் இருந்த மேஜை மீது வைத்தாள். பட்டுப் போர்வையை அதனின்று நீக்கிவிட்டு, தட்டில் கொண்டு வந்திருந்த கோயில் பிரசாதங்களினின்று கொஞ்சம் விபூதியைக் கையில் எடுத்து மிக்க உரிமையுடன் உமா அருகில் வந்து அவள் நெற்றி மீது பூசினாள். ''பாவிகள்! வீணாக பயத்தைக் கொடுத்து உடம்பை எப்படி அலட்டி விட்டார்கள்! அண்ணா வந்து சொன்னதைக் கேட்டதிலிருந்து என் உயிர் என் கூண்டிலேயே இல்லையம்மா. நீங்கள் நம்பினாலும் சரி நம்பாவிட்டாலும் சரி, தினமும் உங்களைப்பற்றியே கனவுதான்; பேச்சுதான். இப்பொழுது எப்படியிருக்கிறீர்கள்!''

''அத்தையவர்கள் நினைவு முழுவதும் இங்கேயேதான் இருந்தது. அப்பாவின் கண்டிப்பினால் நான் கூட உடனே வந்து



விசாரித்து தொந்தரவு செய்யப் பிரியப்படவில்லை. இப்போது எப்படியிருக்கிறீர்கள்?'' என்று மிகவும் அன்புடன் வினவினான் ரங்கதுரை.

''நன்றாக சௌகரியமாக இருக்கிறேன். வந்தனம், உட்காருங்கள்'' என்று உபசரித்துவிட்டு உமா வாளா இருந்தாள்.

''டாக்டர் குருமூர்த்தியைப்பற்றி எங்கள் அபிப்பிராயம் வேறுவிதமாக இருந்த போதிலும், தங்களுக்கு சமயத்திற்கு வந்து அவர் உதவினாரே அதை எண்ணும்போது அவர் மேல் எனக்குக்கூடக் கொஞ்சம் கனிவு ஏற்பட்டு விட்டது'' என்று கொஞ்சலாக மொழிந்த ஷண்பகவல்லி சிரித்தாள்.

பண்ணையார் மகளை சமயத்தில் காப்பாற்றினார் என்ற இந்த ஒரு செய்கை அவருக்கு கிராமத்திலே ஏற்பட்ட அபகீர்த்தியை ஓர் அளவுக்கு நீக்கிவிட்டது என்றால் கூட மிகையில்லை.

''அவர் செய்த உதவிக்குப் பிரதியாக, பண்ணையின் ஞாபகமாக நாம் ஏதாவது ஒரு பரிசு கொடுத்து விடவேண்டும். இல்லையா, அண்ணா'' என்றாள் ஷண்பகவல்லி.

இத்தனைக்கும் உமா ஏதுமே பதில் கூறவில்லை. டாக்டர் குருமூர்த்தியைப்பற்றி அவர்கள் செய்த விமர்சனம் மட்டும் அவளுக்குப் பிடிக்கவில்லை. எனவே, ''அதையெல்லாம் பற்றிப் பிறகு நான் யோசித்துக் கொள்கிறேன். நீங்கள் ஏன் இப்போது தர்க்கம் செய்து மனத்தை அலட்டிக் கொள்ள வேண்டும்?'' என்று காரமாகச் சொல்லிவிட்டு, நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

சமய சந்தர்ப்பங்களில் பெரிய ராஜ தந்திரியான வரதராஜன், உமா முகத்திலே அலைபாய்ந்த கோபத்தின் தன்மையைப் புரிந்துகொண்டு மிகவும் சாவதானமாக சம்பாஷணையை வேறு திக்கில் திருப்பினார். ''பத்து நாட்களில் அம்மா மிகவும் இளைத்து விட்டார்கள். மேலும் அன்று ஏற்பட்ட

மன அதிர்ச்சி இன்னமும் அவர்களைப் பூராவும் விட்ட பாடில்லை. ஏன் ஷண்பகம், இந்த பயந்த கோளாறுகளுக்கு நீ ஏதோ ஒரு கை வைத்தியம் செய்வாயே. அதைக் கொஞ்சம் அம்மாவுக்குச் செய்தால்...'' என்று ஒரு கோடி எடுத்துவிட்டார்.

''ஆமாம். அத்தை! நான் கூடச்சொல்ல வேண்டுமென்று இருந்தேன். ஒரு சமயம் நான் ஒரு மோட்டார் விபத்து ஒன்றில் சிக்கி நரம்பு அதிர்ச்சியில் படுத்துவிட்ட போது நீங்கள் ஒரு கஷாயம் செய்து கொடுத்தீர்களே?'' என்று ஞாபகப்படுத்தினான் ரங்கதுரை.

தனது அழகிய புருவங்களை உயர்த்தி யோசனையில் ஈடுபட்ட ஷண்பகம் திடீரென்று நினைத்துக் கொண்டவள் போல் ''ஆ! நல்லவேளை ஞாபகப்படுத்தினாய்'' என்றுகைகொட்டி ஆர்ப்பரித்துவிட்டு, உமா பக்கம் மிகவும் கனிவுடன் திரும்பி ''நான் ஒரு சிறு கை வைத்தியம் செய்தேன். அதில் தான் தம்பிக்கு குணமாயிற்று. அந்தக் கஷாயத்தை தயாரிப்பது சிரமமல்ல. இன்றே தயாரித்து அனுப்புகிறேன். ராத்திரி படுக்கப் போகு முன் ஒரு வேளை உட்கொண்டு விட்டுத் தூங்குங்கள். மறு நாளே குணம் தெரியும்'' என்றாள்.

''நீங்கள் வீணாகச் சிரமப்பட வேண்டாம். டாக்டர் குருமூர்த்தி தற்சமயம் எனக்கு வைத்தியம் செய்து கொண்டிருக்கிறார். அவர் ஆலோசனையைக் கேட்காது நான் வேறு எதையும் உட்கொள்ள விரும்பவில்லை'' என்று உமா மிகவும் அசட்டையாகப் பதில் சொன்னாள்.

ஷண்பகவல்லியின் உதட்டிலே தவழ்ந்த மோகனப் புன்னகை மறைந்து போயிற்று. தனக்குள் ஏற்பட்ட சினத்தை அடக்கிக் கொண்டு, ''அதற்கென்ன பரவாயில்லை. எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். ஏற்க வேண்டுமென்று நிர்ப்பந்த மில்லை'' என்றாள் பகட்டாக.



''என் ஆலோசனையை உமா அவர்கள் ஏற்க மறுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். தற்சமயம் நமது மாளிகையில் உள்ள பாதுகாப்பு போதுமானதாக இல்லை. அதனால் உங்கள் சொந்தப் பாதுகாப்பிற்காக மாளிகையில் இன்னும் சில புதிய ஆட்களை நியமிக்க வேண்டுமென்பது எனது கோரிக்கை. எங்களுக்கு மிகவும் பழக்கமான நம்பிக்கைக்கு உகந்த இரண்டொரு வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். ஏன் அப்பா! நம்ம சோமுவையும், கார்த்திகேயனையும் இங்கே இரவு காவல்காரர்களாக நியமித்தால் என்ன?'' என்று ரங்கதுரை மடமடவென்று உற்சாகமாகப் பேசிக் கொண்டு போனான்.

உமாவுக்கு அதற்குமேல் பொறுக்க முடியவில்லை. முகம் சிவக்க, நெஞ்சு படபடக்கக் கோபத்துடன் ஆசனத்தினின்று எழுந்திருந்தாள். ''மிஸ்டர் ரங்கதுரை, உங்கள் ஆலோசனைக்கு மெத்த வந்தனம். தாங்கள் என் பண்ணை மானேஜர் அவர்களின் புத்திரர் என்ற நிலையோடு நின்றால் போதுமானது. நான் யாரை நியமிக்க வேண்டும், எப்படிப் பண்ணைக் காரியங் களை நிர்வகிக்க வேண்டும் என்றெல்லாம் வீண் யோசனைகள் கூறி, உங்களுக்குச் சம்பந்தமில்லாத விவகாரங்களில் தலையிட முயற்சிக்க வேண்டாம். என்னை எப்படிப் பாதுகாத்துக் கொள்வது என்பது எனக்குத் தெரியும்'' என்று ஆக்ரோஷமாகக் கூறிவிட்டு, 'விர்' என்று மாடி அறைப்பக்கம் சென்று விட்டாள்.

எதிர்பாராத இந்தத் தாக்குதலைக் கேட்டு அதிர்ச்சி அடைந்துபோன அந்த மூவரும், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு செயலற்றுச் சிறிது நேரம் நின்று விட்டனர்.

## 21

ஏஜமானியின் உத்தரவுப்படியே விஸ்தாரமாக இருந்த அந்த அறையைப் பெருக்கி சுத்தமாக்கிவிட்டு பீரோவை ஒரு வழிப்படுத்த ஆரம்பித்தாள் சுலோசனா. தட்டுகள்மீது அடுக்கடுக்காகக் குவிக்கப்பட்டிருந்த நானாவித உயர்ந்த பட்டுச் சேலைகளைக் கண்டதும் அவளது கண்கள் வியப்பில் விரிந்தன. சற்றுத் தொலைவில் வராந்தாவின் மீது ஒரு பிரம்பு நாற்காலியில் உல்லாசமாகச் சாய்ந்து கொண்டு, கதைப் புத்தகம் ஒன்றைப் படிக்க முற்பட்டுக் கொண்டிருந்த பண்ணையாரின் செல்வ புத்திரியை அவள் ஏற இறங்க ஒரு முறை ஊன்றிக் கவனித்தாள். அடி வானத்தில் மறையத் தொடங்கிய அந்திச் சூரியனின் தங்கமயமான கதிர்கள் வராந்தா மீது லேசாக வீசிக்கொண்டிருந்தன. அதன் ஒளியில் உருக்கி வார்த்த பொற்சிலைபோல் அழகே உருவாக உமா உட்கார்ந்திருந்த காட்சி சுலோசனாவின் உற்சாகத்திலே பொறாமைத் தீயைத் திகுதிகுவென எரியச் செய்தது.

பண்ணையாரின் புத்திரிக்கு வாழ்க்கையில் என்ன குறை இருக்கிறது? கண்டவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அழகு இருந்தது. அதற்கு ஏற்ற இளமையும் இருந்தது. இவை இரண்டும் போதாதுபோல் அபரிமிதமான செல்வாக்கும் அந்தஸ்தும் அல்லவா கூட இருந்தன? தனக்குள் பலவாறு எண்ணியபடி சுலோசனா தன் உருவத்தை அருகிலிருந்த பெரிய நிலைக்கண்ணாடியில் ஒருமுறை பார்த்துக் கொண்டாள்.

வீட்டை விட்டுப் புறப்பட்டதிலிருந்து நல்ல தூக்கமும் சரியான உணவுமின்றி பயத்திலும், கவலையிலும் அவள் உடல் மிகவும் இளைத்துவிட்டிருந்தது. ஆனால் அந்தப் பாழும் இளைப்பு அவள் முகத்தில் கொஞ்ச நஞ்சமிருந்த பொலிவையும்



விழுங்கிவிட்டிருந்தது. கறுத்துச் சோர்ந்து காணப்பட்ட தன் முகத்தை நீண்டநேரம் ஆராய்ந்து பார்த்திருக்க மனமின்றி பீரோவின் பக்கம் திரும்பி, தன் வேலையைக் கவனிக்கலுற்றாள்.

ரங்கதுரை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், வாக்குக் கொடுத்திருந்தும் அவளாலே நம்பமுடியவில்லை. அழகும் அந்தஸ்தும், செல்வமும் ஒருங்கே படைத்த உமாமகேச்வரியை 'வேண்டாம்' என்று உதறிவிட்டு, இவை ஒன்றுமேயில்லாத தன்னை அவன் மனமாரக் காதலிக்கிறான் என்பதைப் பூரணமாக ஒப்புக்கொள்ள அவள் மனம் அடிக்கடி மறுத்து, புரட்சி செய்தவண்ணமிருந்தது. தன்னையும், உமாவையும் அவள் பல தடவைகள் ஒப்பிட்டுப் பார்த்த வண்ணமிருந்தாள். 'ஒரு சமயம் பொய் சொல்லி ஏமாற்றி ரங்கதுரை முடிவில் வஞ்சித்து விடுவானோ!' என்ற பயம் அவளது அந்தராத்மாவில் குடியேறிவிட்டது. வீட்டை விட்டு ஓடி வந்து, அவன் கூறும் அனைத்தையும் ஒப்புக் கொண்டு, அவனது சூழ்ச்சிகளுக்குக் கைகொடுத்து உதவிய பின்னர், முடிவில் கல்யாணம் செய்துகொள்ள மறுத்து அடித்து விரட்டி விட்டால் அவள் திரும்ப எந்த முகத்துடன் தாயாரிடம் போவாள்! ஹா... இதை எண்ணிய மாத்திரம் சுலோசனாவின் கண்களில் நீர் பொங்கி வந்தது. துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டது.

"சுலோ!" என்று எஜமானி தன்னை அழைப்பதைக் கண்டு திடுக்கிட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். "இதோ வந்துவிட்டேன் அம்மா" என்று பதில் கொடுத்து விட்டு வராந்தாவிற்கு விரைந்தாள்.

புத்தகத்தை மூடிவிட்டு நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்த உமா, அவளது கண்கள் கலங்கியிருப்பதைக் கவனித்து விட்டாள். "அழுதுகொண்டிருந்தாயா? ஏன் சுலோ! நான் தான் உனக்கு ஆரம்பத்திலேயே அன்று எடுத்துச் சொன்னேனே?

கடந்து போனதையெல்லாம் மறந்துவிடு. எங்களோடு விருப்பமானவரை தங்கியிரு. பிறகு உனக்கு எங்களால் ஆன உதவிகள் செய்து உன் வாழ்க்கையை வளமாக்க முயற்சிப்போம் என்றேன். என் பேச்சில் உனக்கு நம்பிக்கையில்லையா'' என்று மிகவும் அனுதாபத்துடன் விசாரித்தாள்.

மடைதிறந்தாற்போல் பெருகி, கன்னங்களில் வழிந்த கண்ணீரை அவசரமாகத் துடைத்துக் கொண்டாள் சுலோசனா, ''இல்லையம்மா என் குடும்பத்தாரை நினைத்துக் கொண்டேன். துக்கமாக இருந்தது அவ்வளவுதான்'' என்று ஒரு பொய்யை சாமர்த்தியமாகச் சொன்னாள்

பட உலகிலே நடிப்புக் கலையை எடுத்துக்காட்டத் திறமையில்லாதிருந்த அவளுக்கு இப்போது அந்தக் கலையில் மிதமிஞ்சிய ஆற்றல் ஏற்பட்டு விட்டிருந்தது.

ரங்கதுரையின் மேற்பார்வையில் வீட்டை விட்டு ஓடிவந்து தங்கியிருந்த சில தினங்களில், அவனுடைய போதனையினால், அவன் செய்யப்போகும் சூழ்ச்சிகளுக்கு ஒத்துழைப்பதாக வாக்களித்திருந்தாள்.

ரங்கதுரை தன் அருமைக் காதலியைக் கொண்டு நடத்தவிருந்த சூழ்ச்சியே வேறுவிதமானதாக இருந்தது. அவனது ஆரம்பத்திட்டப்படி - சுலோசனா ஒரு நாள் காலையில் அழுத கண்ணீரும் சிவந்த முகமாக அலங்கோல நிலையில் மீனாக்ஷி இல்லத்திற்குச்சென்று அடைக்கலமடைய வேண்டியது. வஞ்சகன் ஒருவன் பேச்சைக் கேட்டுத் தன் பெற்றோரைத் துறந்து பல மைல்களுக்கு அப்பாலிருந்த ஒரு கிராமத்திலிருந்து ஓடி வந்து விட்ட ஓர் அபலைப் பெண்ணாக அவள் நடிக்க வேண்டியது. கல்யாணம் செய்து கொள்வதாக வாக்களித்து அழைத்து வந்த அந்த வஞ்சக வாலிபன் நடுவழியில் கைவிட்டு, காணாமற் போய் விட்டதாகக் கதை



அளக்க வேண்டியது. எவ்வளவு வற்புறுத்திய போதிலும் தனது பெற்றோரின் பெயர், வசித்த கிராமம், வஞ்சித்த வாலிபன் இவர்களைப் பற்றிய விவரத்தைச் சொல்ல மறுத்துவிட வேண்டும். மீனாக்ஷி இல்லம் பொதுவாக அனாதைக் குழந்தைகளை வைத்துப் போஷிக்கும் ஆசிரமம் என்ற போதிலும், மேற்கூறியபடி அல்லலுற்ற சகோதரிகளுக்கும் அவ்வப்போது கைகொடுத்து ஆதரிக்கும் இடமாதலால், சுலோசனாவின் கதையைக்கேட்டு அதன் தலைவியும், சிவகுமாரும் கட்டாயம் அவளை அங்கே இருத்திக் கொள்வார்கள்.

அங்கே தங்கியிருக்கும் சுலோசனா நாளாவட்டத்தில் சிவகுமார்மீது கற்பனைப் பழிகளை சிருஷ்டிக்க ஆரம்பிக்க வேண்டும். ஆசிரமத்தில் இடம் கொடுத்து ஆதரிப்பதாகக் கூறிவிட்டு, தன்னிடம் மிகவும் கேவலமாக நடக்க முயற்சிப் பதாக அங்குள்ளவர்களும் மற்றவர்களும் நம்பும்படி அவள் நடிக்க வேண்டும். இந்தக் கதையை வெளியே ஊருக்குள் தீயைப்போல் பரப்பும் கைங்கரியத்தை ரங்கதுரை ஏற்றுக்கொள்வான். கரும்பு ஆலை முதலாளி என்றும், மீனாக்ஷி இல்லத்தின் ஆத்ம நண்பன் என்றும் ஊருக்குள் அவன் வகிக்கும் மதிப்பு இந்தக் கதையைக் கேட்டபின் பஞ்சாகப் பறந்தோடிவிடும். இந்நிலையில் சுலோசனாவின் தாயாரை அணுகி அவள் மகளைக் கடத்திச் சென்ற கயவன் சிவகுமார் என்பதை நம்பும் வகையில் ரங்கதுரை எடுத்துச் சொல்லி, கரும்பு ஆலை முதலாளி மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தூண்டுவான்.

இந்த இருபுறத் தாக்குதலில் சிவகுமாரின் அந்தஸ்தும், அவன் வகித்துவரும் பதவியும் பொடிப் பொடியாகி, கிராமத்தில் அவன் தலைகாட்ட முடியாதபடி போய்விடும். கோபம் கொண்ட கிராம மக்கள் ஒரு சமயம் மீனாக்ஷி இல்லத்தையே இடித்துத்தள்ளி தரைமட்டமாக்கினாலும் ஆக்கிவிடுவார்கள். அனாதை ஆசிரமம், கரும்பு ஆலை

இரண்டையும் சிவகுமார் கைவிட்டு செத்தோம் பிழைத்தோம் என்று ஊரைவிட்டு ஓடினாலும் ஓட நேரிடும். சிவகுமார் மீது இவ்வாறு பழி தீர்த்துக்கொள்ள சுலோசனா ஒத்துழைத்து உதவினால் அவளைத் தன் மனைவியாக ஏற்று, கால முழுவதும் கண்யமாகவைத்து போஷிப்பதாக ரங்கதுரை அவளுக்கு வாக்களித்திருந்தான்.

ஆரம்பத்திலே, சுலோசனாவுக்கு இந்தச் சூழ்ச்சியில் மாட்டிக்கொள்ள கொஞ்சமும் விருப்பம் இருக்கவில்லை. ஆனால் வீட்டை விட்டுத் துணிவாக வெளியே வந்துவிட்டு, மானேஜர் மகன் தயவில் ஒளிந்து வாழ நேர்ந்த நிலையில் அவளால் மறுத்துப் பேசவும் முடியவில்லை. எனவே முடிவில், தனது மனசாக்ஷிக்கு விரோதமாகக் காணப்பட்ட இந்தக் காரியத்தில் ஒத்துழைக்க ஒப்புக் கொண்டாள்.

தனது அன்பனின் போதனைப்படி ஒரு நாள் விடியற் காலை, சுலோசனா கண்ணீரும் கம்பலையுமாக மீனாக்ஷி இல்லத்தில் வந்து அடைக்கலம் புகுந்தாள். அவளது கற்பனை மிகுந்த சோகக் கதை இல்லத்துத் தலைவி, சிவகுமார் இருவரது மனத்தையும் மெத்த உருக்கி விட்டது. வழக்கம் போல் கைவிடப்பட்ட காரிகைகளுக்கு அளிக்கும் ஆதரவை அவளுக்கு அளித்து பலவிதத்திலும் உதவி புரிய இருவரும் முன்வந்தார்கள். எத்தனையோ ஆறுதல் கூறியும் அன்பாகப் பேசியும், கருத்துடன் கவனித்தும், வந்த தினத்திலிருந்து அந்த அபலைப் பெண் ஓயாது அழுதவண்ணமாகவே இருந்தாள். இதைக் கவனித்த சிவகுமாருக்கு ஒரு யோசனை தோன்றியது. ஆசிரமத்து சூழ்நிலையால் அந்தப் பெண்ணுக்கு மன ஆறுதல் கிடைக்கவில்லை போலும், அதனால் வேறு இடத்தில் மாற்றி வசிக்க ஏற்பாடு செய்து கொடுத்தால் ஒரு சமயம் அவள் தன் கஷ்டங்களை மறந்து விடக்கூடும் என்று எண்ணினான்.



பண்ணையார் மகளைச் சந்தித்து க்ஷேமலாபங்களை விசாரிக்கச் சென்ற தினம், தங்கள் ஆசிரமத்திற்குள் வந்துள்ள அபலைப் பெண்ணின் சோகக் கதையைக் கூறி அந்தப் பெண்ணை, பண்ணை மாளிகையில் உமாவுக்கு உதவிசெய்யும் பணிப் பெண்ணாகக் கொஞ்ச காலம் விட்டு வைக்க விரும்புவதாகவும் தெரிவித்தான். சுலோசனாவின் சோகக் கதை பண்ணையார் புத்திரியின் வெள்ளை உள்ளத்தை மெத்தவும் உருக்கிவிட்டது. ஆக்ஷேபணை எதுவும் கூறாது அந்த தினமே தனக்கு அருகில் இருந்து, ஏவிய வேலைகளை கவனிக்கும் பணிப்பெண் உத்தியோகத்தில் அவளை நியமித்துவிட்டாள் உமா.

தான் ஒன்று நினைக்க, விதி வேறுவிதமாகத் திட்டமிட்டு விட்டதை கவனித்த ரங்கதுரை திடுக்கிட்டுப் போய்விட்டான். பண்ணையார் மாளிகைக்குள் வந்து குடியேறிய இரண்டு தினங்களில் சுலோசனா ரகசியமாக ஒரு கடிதம் எழுதி அவன் விலாசத்திற்கு தபாலில் யாருக்கும் தெரியாது சேர்த்து விட்டாள்.

''அன்பரே!

தாங்கள் கூறியபடி நான் நடக்கச் சித்தமாக இருந்தேன். ஆனால் விஷயம் எதிர்பாராத விதமாக நடந்து விட்டது. தற்சமயம் நான் பண்ணையார் மாளிகையில் உமாமகேஸ்வரி அம்மாளின் அந்தரங்கத் தோழியாக வேலைக்கு அமர்த்தப் பட்டிருக்கிறேன். இங்கே நான் எவ்வளவு காலம் இருப்பது, என்ன செய்வது, எப்படி வெளிவருவது என்றே தெரியவில்லை. ஒரே குழப்பமாக இருக்கிறது. யோசனை சொல்லவும்.

தங்கள் காதலி''

அந்தக் கடிதத்தைக் கண்டதும் மானேஜர் மகனின் மூளை வேறு பல புதிய திட்டங்களைப் பற்றித் தீவிரமாக சிந்திக்கத் தொடங்கியது. பண்ணையார் மாளிகைக்கு

எதேச்சையாக வருகிறவன் போல் அடுத்த நாளே அங்கு வந்தான். யாரும் காணாத சமயம் தனது புதிய திட்டத்தைப் பற்றிய குறிப்புகளை ஒரு கடிதத்தில் எழுதி சுலோசனாவிடம் நேரிடையாகச் சேர்த்துவிட்டான். அக்கடிதத்தின்படி மாளிகையில் நடக்கும் அன்றாட சம்பவங்களை சுலோசனா கண்குத்திப் பாம்பாகக் கவனித்து அவனுக்குக் கடிதம் மூலம் தெரிவித்துவிட வேண்டும். மேற்கொண்டு எப்படி நடப்பது என்பதற்கு ஆலோசனைகளை அவன் அவளுக்கு அப்போதைக்கப்போது தெரிவித்துக் கொண்டிருப்பான். பண்ணையார் மாளிகைக்கு அவன் விஜயம் செய்யும் பொழுது சுலோசனா மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். முன் பின் தெரிந்தவர்கள் போல் அவர்கள் கொஞ்சமும் காட்டிக் கொள்ளவே கூடாது.

தன் காதலனது புதிய திட்டத்திற்கு ஒத்துக்கொண்ட சுலோசனா, அவனது யோசனைகளின்படியே நடக்கலுற்றாள். பண்ணை மாளிகையில் அவள் பணிப்பெண்ணாக அமர்ந்து இருபது தினங்கள் கூடப் பூர்த்தியாகவில்லை. அதற்குள் அவ்வப்போது அங்கே நடந்த ஒவ்வொரு சிறு காரியத்தையும் தன் காதலனுக்குத் தகவல் அனுப்பியவண்ணமாக இருந்தாள். தனது நடத்தையிலோ, போக்கிலோ, பேச்சிலோ உமாவுக்கு எவ்விதமான சந்தேகமும் ஏற்படாவண்ணம் மிகவும் தந்திரமாக நடந்து கொண்டாள். உண்மையில் சுலோசனாவுக்குத் தனது திறமையைப் பற்றியே மிகவும் ஆச்சரியமாக இருந்தது. பட உலகில் காட்ட மறுத்த இந்த நடிப்புக் கலை எங்கிருந்தோ திடீரென்று அவளை அபாரமாகப் பற்றிக் கொண்டுவிட்டது.

''சீப்பையும், தைலத்தையும் எடுத்து வந்து, என் கூந்தலைச் சற்று வாரிப் பின்னி விடுகிறாயா?'' என்று உமா அவளுக்கு உத்தரவிட்டாள். வாசனைத் தைலத்தைத் தடவி மெல்ல சீப்பினால் வாரியபடி உமாவின் பின்னால் வந்து நின்று



கொண்ட சுலோசனா, அலையெனச் சரிந்த கூந்தலின் அழகை பிரமிப்புடன் பார்த்தவண்ணம் இருந்தாள்.

''சுலோ, உனக்கு தம்பி தங்கைகள் யாரேனும் உண்டோ?'' என்று மிகவும் கனிவுடன் விசாரித்தாள் உமா.

தன்னைப்பற்றி அதிகம் பேச விரும்பாதவள் போல சுலோசனா மிகவும் சாமர்த்தியமாக, ''அம்மா, என்னை மன்னியுங்கள். தாங்கள் இந்த அபலையிடம் எவ்வளவோ அன்பாக நடந்து கொள்கிறீர்கள். என் உயிர் உள்ளவரை இதற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவள். ஆனால் தயவு செய்து கொஞ்ச நாட்கள் என் பூர்வோத்திரங்களை விசாரிக்காது இருந்தால் நலமாக இருக்கும். என் குடும்பத்தவர்களை நினைத்துக் கொண்டாலும் என் மனம் சொல்ல முடியாத வேதனைப்படுகிறதம்மா'' என்று கூறிவிட்டு விம்மினாள்.

கனிவுடன் இருந்து ஆறுதல் சொல்லி, மெல்ல அந்த அபலைப் பெண்ணின் சோக சரித்திரத்தை அறிந்து, அவளுக்கு உதவி செய்து பெற்றோரிடம் கொண்டு சேர்த்துவிட வேண்டும், என்ற நல்ல எண்ணத்தினால் உந்தப்பட்டு உமா அவளைப்பற்றி விசாரித்தாளே ஒழிய, பொழுது போக்கிற்காக வம்பு பேசும் நிமித்தம் இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. எனவே அவளுக்கு மெத்த மனவெழுச்சி ஏற்பட்டுவிட்டது.

''சுலோ! வருத்தப்படாதே, அம்மா. எப்பொழுது உனக்கு உன்னைப்பற்றி எல்லா விவரமும் ஒளிவுமறைவின்றிப் பேச விருப்பமோ அப்பொழுது கூறினால் போதும். மன்னித்துக் கொள். தெரியாமல் கேட்டுவிட்டேன்'' என்று கூறி அந்த சம்பாஷணைக்கு முற்றுப்புள்ளி வைத்தாள்.

சுலோசனா எஜமானியின் கூந்தலை வாரி அழகாகப் பின்னிவிட்டுத் தன் காரியங்களைக் கவனிக்க உள்ளே சென்று விட்டாள். புத்தகத்தை மூடி வைத்துவிட்டு உள்ளே சென்ற உமா

தன் முகத்தைக் கழுவி, வேறு ஆடை உடுத்தித் தன்னை அலங்கரித்துக் கொண்டு தயாராக வந்து மாடி வராந்தாவில் அமர்ந்து கொண்டாள்.

அடிவானத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்த அந்தி சூரியன் மறைந்து சில நிமிஷங்களில், கீழ்வானத்தினின்று வெள்ளித் தட்டைப்போன்று பூர்ணிமை மேலே எழும்பி, வானவீதியின் முகட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. வெண்ணிலாவின் இன்பமான தண்கதிர்கள் பால்போல் வராந்தா மீது வீசிக்கொண்டிருந்தன. ஆசிரமத்து வேலைகளையும், தன் சொந்த அலுவல்களையும் கவனித்துவிட்டு அப்பொழுதுதான் சிவகுமார் பண்ணையாரின் புத்திரியைக் காண அங்கு வந்திருந்தான். அவனது வருகைக்காக ஒவ்வொரு நிமிஷமும் காத்திருந்த உமாவின் உள்ளம் அவனைக் கண்டதும் உற்சாகத்துடன் பூரித்துப் பொங்கி மகிழ்ந்தது. நாளுக்கு நாள் விஷம்போல் தன் உள்ளத்தில் அவன்பால் அதிகரித்துவரும் பாசத்தை உமா உணராது இருக்கவில்லை. 'வெறும் நட்பு என்பதன் தொடர்பாக ஏற்பட்ட அன்பல்ல; அதற்கப்பாற்பட்ட ஒரு பிணைப்பு இது!' என்றவரைக்கும் அவள் தனக்கு அவன்மீது ஏற்பட்ட கங்கு கரையற்ற பரிவைப்பற்றி எண்ணத் தொடங்கிவிட்டாள்.

தன் மனத்திலே பல நாட்களாகக் குமுறிக் குமுறிக் கொந்தளித்துப் போராட்டமிட்டுக் கொண்டிருந்த இந்தப் பாச உணர்ச்சியை அவள் வெளியே காட்டிக் கொள்ள விரும்பவில்லை. ஒரு சமயம் சிவகுமார் அவளிடம் சாதாரணமான முறையில் நட்புரிமை பாராட்டி அன்பு காட்டி வருகிறானோ என்னவோ! பண்ணையார் மகள் தன் மீது எல்லையற்ற பாசம் கொண்டுவிட்டாள் என்பதை அறிந்து அவனது களங்கமற்ற மனம் திடுக்கிட்டுவிட்டால்? உமாவுக்கு எத்தனை அவமானம்? அவளைப்பற்றித் தவறாக எண்ணும்படி அவள் சிறிதும் இடம் கொடுக்கவே கூடாது.



இவ்வாறு உமாவும், சிவகுமாரும் தங்கள் உள்ளத்திலே பொங்கியெழுந்த அன்பை ஒருவருக்கொருவர் அறிந்து கொள்ள அனுமதிக்காது மனத்திலேயே ரகசியமாக அடக்கிப் பூட்டிக் கொண்டனர். எனினும், ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கும்போதும், பேசும்போதும் அவர்களை அறியாது வெளிப்படும் அந்தப் பாசத்தையும், பரிவையும் அவர்களால் அணை போட்டுத் தடுக்கக்கூடவில்லை. எத்தனையோ முறை இரவில் தன் படுக்கை மீது சாய்ந்தவண்ணம் சிவகுமாரனது வசீகரமான முகத்தையும், கருணை ததும்பும் விழிகளையும் எண்ணி எண்ணி உமா பிரமிப்படைந்து அதனுடைய தாத்பரியத்தை ஆராய்ந்து அறிய முடியாது சஞ்சலத்திலே துடிப்பாள். வேலை நடுவே திடீரென்று பண்ணையார் மகளை நினைத்துக்கொண்டு சிவகுமார் தன் வசமிழந்து செயலற்ற பொம்மையாகி விடுவான்; கனிவு நிறைந்த அவளது வார்த்தைகளில் தேங்கி நின்ற அர்த்தத்தைப் பூராவும் அறிய முடியாது அவனது மனம் எல்லையில்லாத சங்கடத்தை அனுபவிக்கும். சுருங்கக் கூறின் இருவரது மன நிலையும் கண்ணாமூச்சி விளையாடி, ஓடி ஒளிந்து பிடிக்க முயற்சிக்கும் இரு குழந்தைகளின் மன நிலையை ஒத்திருந்தது.

''சுலோசனா, கொஞ்சம் சூடாக காபி தயாரித்து எடுத்துக் கொண்டு வா!'' என உத்தரவிட்ட உமா, தன் எதிரே ஒரு பிரம்பு நாற்காலியை இழுத்துப்போட்டு உட்காரும்படி சிவகுமாரை உபசரித்தாள்.

''இப்பொழுதுதான் வீட்டில் சாப்பிட்டுவிட்டு வருகிறேன். உங்களுக்கு ஏன் இந்த வீண் சிரமம்!'' என்று கூறியவண்ணம் சிவகுமார் அவள் எதிரே அமர்ந்து கொண்டான்.

''எனக்கு என்ன சிரமம்? சுலோ சென்று தயாரித்து எடுத்து வரப் போகிறாள்'' என்று கூறிவிட்டு, கலகலவென்று நகைத்தாள் உமா.

கொஞ்ச நேரத்தில் எஜமானி உத்தரவுப்படியே, சூடான காப்பியையும், ஒரு தட்டில் அதற்கேற்ற பலகாரங்களையும் சுலோசனா சுமந்துகொண்டு வந்து, அருகிலிருந்த மேஜைமீது வைத்துவிட்டு, கடைக்கண்ணால் அவர்கள் இருவரையும் கண்காணித்தபடி, வராந்தா ஓரத்திலிருந்த பூத்தொட்டியை இழுத்து வேறு இடத்தில் வைப்பவள் போல் அனாவசியமானதொரு வேலையில் ஈடுபட்டு நின்றுகொண்டிருந்தாள். கூஜாவிலிருந்த காபியை டம்ளரில் ஊற்றி நிரப்பித் தன் கையால் எடுத்து மிகவும் அன்போடு அதைச் சிவகுமாரனுக்குக் கொடுத்து உமா உபசரிப்பதைக் கண்டு அவளுடைய பெண் உள்ளத்தில் பற் பல சந்தேகங்கள் கொடிவிட்டுப் படரலாயின.

உமா, சிவகுமாரனுடன் சில முக்கிய விஷயங்கள் பேச விரும்பினாள். ஆகவே, அவள் சுலோசனா பக்கம் திரும்பி, ''சுலோ! நீ அறையில் உள்ள மற்ற வேலைகளைப் போய்க் கவனி, பொழுது போய்விட்டது. சீக்கிரம் ஆகட்டும்'' என்று ஜாடையாகக் கூறினாள்.

தாங்கள் இருவரும் அந்தரங்கமாகப் பேசிக் கொள்வதை, அவள் கேட்டுக்கொண்டு நிற்பதை எஜமானி விரும்பவில்லை என்பதை சுலோ உணர்ந்து கொண்டாள். உமாவின் உத்தரவு அவள் உள்ளத்தைச் சுருக்கெனத் தைக்கவே அவளுக்குக் கோபமும் பொறாமையும் தாளமுடியவில்லை. ''ஆகட்டும் அம்மா!'' என்று அடக்கமாகப் பதில் அளித்துவிட்டு விர் என்று உள்ளே சென்றாள். பீரோவைத் திறந்து அதிலிருந்த சாமான்களை ஒழுங்குபடுத்துவதில் அவள் ஈடுபட்டபோதிலும் தன் இரு காதுகளையும் தீட்டிக் கொண்டு வராந்தாவில் அவர்கள் இடையே நடக்கும் சம்பாஷணையைக் கூர்மையாகக் கேட்பதில் நாட்டமாக இருந்தாள். காற்றின் ஊடே சில வார்த்தைகள் அவள் காதுகளில் நன்றாகக் கேட்காத போது வேலையை விட்டு விட்டுக் கதவு ஓரத்தில் வந்து நின்று கொண்டு, துணிவாக ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாள்.



உமா தனது குரலைத் தாழ்த்திக்கொண்டுபேசலுற்றாள். ''அன்றைய தினம் என்னைத் தாக்கிய முரடர்கள் பற்றித் தங்களது அபிப்பிராயம் என்ன? சில தினங்களாக இதைப்பற்றி நான் பலவிதமாக சிந்தித்துப் பார்த்தேன். அது என் ஆபரணங்களைக் கவர்ந்து அவமானப்படுத்தத் துணிந்த கள்வர்களின் வேலையல்ல என்று எனக்கு நிச்சயமாகத் தோன்றுகிறது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

சிவகுமாரனும் அதைப்பற்றி கொஞ்ச நாட்களாக தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருந்தான். ''நானும் தங்களைப் போலவேதான் நினைக்கிறேன். முதலாவதாக அம் முரடர்கள் தங்களைத் தாக்கும் நோக்கத்துடனேயே புறப்படவில்லை என்று நினைக்கிறேன். ஏனெனில் தங்களைத் தாக்கி வழிப்பறிக் கொள்ளை செய்ய நினைத்திருந்தால், தங்களை அந்த மாட்டு வண்டியில் எதிர்பார்த்திருக்க முடியாதல்லவா? ஆகவே, அன்று அவர்கள் தாக்கி சூறையாடவோ அல்லது காயப் படுத்தவோ விரும்பி எண்ணி கட்டியிருந்த ஆசாமியே வேறு'' என்றான்.

''நானும் அவ்வாறுதான் ஊகிக்கிறேன். ஏனெனில் அவர்கள் வழிமறித்து இம்சை செய்ய ஆரம்பித்தபோது பேசிக்கொண்ட சில வார்த்தைகளிலிருந்து, அந்த வண்டியில் அவர்கள் என்னைச் சிறிதும் எதிர்பார்க்கவேயில்லை என்பது புலனாகிறது. மொத்தத்தில் அவர்கள் வழிப்பறி செய்யவந்த கள்வர்களே அல்ல. அந்த வில்வண்டி யாருடையது என்பதை அவர்கள் நன்றாக அறிந்திருந்தார்கள். ஒரு சமயம் அந்த வழியே வண்டிக்கு உடையவர் அன்று வெளியே போகக்கூடும் என்பதை முன்கூட்டியே எதிர்பார்த்திருக்கிறார்கள். தனியே அந்த ஆசாமியைப் படுகாயமடைய நன்றாகப் புடைத்துத் தீர்த்துவிடுவது என்பது அவர்களது திட்டமாக இருந்திருக்க வேண்டும்'' என்றாள்.

''நீங்கள் நினைத்தபடியேதான் நானும் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். அன்று தினம், ஒன்பது மணிக்கு மேல் நான் அடுத்த கிராமத்திற்கு ஒரு காரியமாக வண்டியில் போகத் திட்டமிட்டிருந்தேன். நான் அடுத்த ஊர் போகிற விஷயம் ஆசிரமத்தில் வேலை செய்யும் சிலருக்குத் தெரியும். இது எப்படியோ அந்த முரடர்களுக்கு எட்டி விட்டிருக்கிறது.

''ஆசிரமத்தில் என் அருகே என்னிடம் நெருங்கிப் பழகி என்னிடம் வேலை செய்துவரும் ஆட்களில் யாரோ ஒருத்தன், நன்றி கெட்ட துரோகியாக இருந்து வருகிறான் என்பதை இந்தத் தாக்குதலிலிருந்து நான் புரிந்து கொண்டேன். அன்று தினத்திலிருந்து நான் என் சூழ்நிலையில் உள்ள இந்த ஐந்தாம் படையைத் தேடிக் கண்டுபிடிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்.

''இரண்டாவதாக, என்னை அடித்துப் படுகாயமடையச் செய்து காலை முறித்து, ஒன்றுக்கும் உதவாதபடி செய்து விடவேண்டும் என்ற ஆத்திரம் கொண்டுள்ள ஆசாமி வேறு ஒருத்தன். தங்களை அன்று தாக்கிய இந்த முரடர்கள் அவனுடைய கையாட்களாக இருக்க வேண்டும். என் மீது பொறாமை கொண்டு, என் வாழ்க்கைக்கு உலைவைக்கத் திட்டமிட்டுள்ள இந்த ஆசாமி ஒரே ஒரு தனி மனிதனா, அல்லது ஒரு குழாத்தைச் சேர்ந்த நாலைந்து பேர்களா என்பதை நான் கண்டுபிடித்தாக வேண்டும்.

''எது எப்படியான போதிலும் இந்த விஷயத்தை நான் அலக்ஷியமாக விட்டுவிடப் போவதில்லை. ஏனெனில் ஒரு முறை தோற்று விட்ட என் விரோதிகள் அடுத்த முறை வேறு வழியாகத் தங்கள் வஞ்சத்தை தீர்த்துக்கொள்ள முயற்சிக்காது இருக்க மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம். பாயப் பதுங்கி நிற்கும் புலிபோல் அவர்கள் சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டு காத்திருக்கலாம். அதனால் நான்



அவர்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது'' என்றான் மிகவும் பரபரப்பான குரலில்.

தன்னைச் சுற்றிலும் ஒருமுறை பார்த்துக்கொண்ட உமா பயத்துடன் தன் மேனியைச் சிலிர்த்துக் கொண்டாள். ''உங்கள் மீது விரோதம் கொண்டிருக்கும் அந்தக் குழாத்திற்கு தற்சமயம் என் மீதும் விரோதம் ஏற்பட்டிருக்க வேண்டும். தங்களுடன் நெருங்கிப் பழகி தங்கள் உதவியை நாடுகிறேன் என்ற ஆத்திரம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம்.

''எதுவானபோதிலும் நம் இருவரையும் ஆபத்து சூழ்ந்து நிற்கிறது. நாம் அசட்டையாக இருக்கக்கூடாது. தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு மறைமுகமாக இருந்து நம்மைத் தாக்க முயற்சிக்கும் இந்த அல்ப விரோதிகளைக் கண்டுபிடித்து அம்பலப்படுத்த வேண்டும். அதுவரை எனக்குத் தூக்கம் கூட வராது போலிருக்கிறது'' என்றாள் கோபத்துடன் உமா.

''தாங்கள் அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டு விடுங்கள். கவலையை உதறிவிடுங்கள். இந்த பங்களாவில் வசிக்கும் வரை தங்களை எந்தவிதமான ஆபத்தும் நெருங்க முடியாது. புதிதாக நாம் நியமித்திருக்கும் ஆட்கள் மிகவும் நம்பிக்கைக்கு உகந்தவர்கள். தாங்கள் வெளியே செல்லும் பொழுது துணையின்றி எங்கும் போகவேண்டாம். அவசர காரியமாக இருந்தால் எனக்குச் சொல்லியனுப்பினால் நான் இரண்டு ஆட்களுடன் கூட வந்து உதவி செய்யத் தயங்கவே மாட்டேன். கொஞ்ச நாட்கள் நாம் இருவரும் ஜாக்கிரதையாக இருந்தோமானால், எல்லாம் நாளடைவில் சரியாகி விடும்'' என்றான்.

''பட்டணத்தைவிட்டு நான் முதல் முதலாக இந்த ஊருக்கு வந்தபோது இப்படியெல்லாம் நடக்கப்போகிறதென்று எதையும் கனவில் கூட நினைக்கவில்லை. கிராமத்து மக்கள்

எல்லோரும் கள்ளங் கபடமற்றவர்கள்; மிகவும் அன்பாகவும் பிரியமாகவும் நடந்துகொள்வார்கள். அப்படி இப்படி யென்றெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தேன். என் உயிருக்கு உலை வைக்கக்கூடிய அளவு இங்குள்ள ஒரு சிலரது உள்ளத்திலே விரோதம் விஷமாக மூண்டுவிடும் என்று கிஞ்சித்தும் நினைக்கவேயில்லை. இதையெல்லாம் பற்றி எண்ணும்போது எனக்கு ஆச்சரியம் தாளவே முடியவில்லை. நான் யாருக்கு என்ன தீங்கு செய்தேன்? என் மேல் ஏன் இந்த விரோதம்?'' என்றாள் உமா ஆத்திரத்துடன்.

''நான் யாருக்கு என்ன கெடுதி செய்தேன்? என் மேல் ஏன் அவர்களுக்கு விரோதம். இதற்குத் தங்களால் பதில் சொல்ல முடியுமா? உங்களது அந்தஸ்தையும் செல்வாக்கையும் கண்டு அந்த ஆசாமிகள் உங்கள்மீது பொறாமை கொண்டு விரோதம் பாராட்டுகிறார்கள். ஊருக்கு நல்லது செய்து என் வாழ்க்கையை நல்வழியில் செலுத்த முயற்சிப்பது கண்டு என் மீது அவர்களுக்குப் பொறாமை. இந்த விஷயத்தில் எனக்கு ஒரு குறிப்பிட்ட ஆசாமி மீது சில காலமாகச் சந்தேகம். ஆனால் உண்மையைக் கண்டுபிடிக்காது அனாவசியமாகச் சந்தேகித்து பெரிய தவற்றைச் செய்ய நான் விரும்பவில்லை. அதனால்...'' என்று கூறிவிட்டு நிறுத்தினான் சிவகுமார்.

''என்ன ஆச்சர்யம்? நானும் தங்களைப்போலவே ஒரு குறிப்பிட்ட ஆசாமியைப் பற்றியே சந்தேகிக்கிறேன். உண்மை வேறுவிதமாக இருந்தால் வீண் சந்தேகத்தினால் குற்றமற்ற மனிதர் மீது பழி சுமத்துவது பாவம் என்று நான் தற்சமயம் அந்த ஆசாமி பெயரை வெளியிட விரும்பவில்லை'' என்றாள்.

இருவரும் குறிப்பாக ஒரு கணம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர். சிவகுமார் மேலே பேசாது மௌனமாகிவிட்டான். கொஞ்ச நேரம் தன் திருஷ்டியை வானத்துப் பக்கம் திருப்பி வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த உமா மீண்டும் அவன் பக்கம் திரும்பினாள்.



''நாளைக்கு மாலை தங்களுக்கு ஓய்வு இருந்தால் என்னுடன் கூட கொஞ்சம் மாந்தோப்பு பங்களாவுக்கு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கட்டையன் மனைவி என்னிடம் சில முக்கிய விஷயங்கள் பற்றிப் பேச விரும்புகிறாள். அவைகளை அறிந்து கொள்ள மிக்க ஆவலாக இருக்கிறேன்'' என்றாள்.

''நாளை மாலை சரியாக ஐந்து மணிக்கு நான் இங்கே வந்து விடுகிறேன். பொழுது அஸ்தமிப்பதற்குள் திரும்பி விட நாம் முயற்சிக்க வேண்டும். தங்களுடைய மோட்டார் வண்டியிலேயே சென்று விரைவாகத் திரும்பி விடுவோம்'' என்றான் சிவகுமார்.

கொஞ்ச நேரம் சென்றதும் அவன் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினான். அவனுடன் கூட கீழே இறங்கி வாயில்வரை சென்று வழி அனுப்பிவிட்டு வந்த உமா அவனது வில்வண்டி தோட்டத்தினின்று வெளியேறி மறையுமட்டும் பார்த்துக்கொண்டே நின்றாள். வண்டியோட்டியைத் தவிர, கூட அவனுடன் வண்டிக்குள் இரண்டு ஆட்கள் துணைக்கு இருந்ததைக் கவனித்த போதுதான் அவளுக்கு மனம் நிம்மதி அடைந்தது.

இவ்வளவு நேரம் அவன் அருகே இருந்தபோது உள்ளத்தில் ஏற்பட்ட துணிவும், தைரியமும் திடீரென்று எங்கேயோ பறந்து ஓடி விட்டன போல் அவளுக்கு பிரமை ஏற்பட்டது. பட்டப்பகல் போல் நிலவு காய்ந்த போதிலும் தோட்டத்திலே தனியே நிற்க அவளுக்கு பயமாக இருந்தது. சில்லென்று சுகமாக வந்து வீசிய பூங்காற்று கூட அவளது உடலைக் குளிராய் சிலிர்க்கச் செய்யவே, பின்னால் இடைவரை தொங்கிய புடவைத் தலைப்பை இழுத்து நன்றாகப் போர்த்திக் கொண்டு உள்ளே வந்தாள். இரவு போஜனத்தைச் சுருக்கமாக

முடித்துக் கொண்டு, கதவுகளைப் பத்திரமாகத் தாளிட்டு விட்டுச் சீக்கிரமாகப் படுத்து விட்டாள்.

துணையாக அதே அறைக்குள் சற்றுத் தொலைவில் ஒரு படுக்கைமீது படுத்திருந்த சுலோசனாவுக்கு உறக்கம் வரவில்லை. விடிவிளக்காக அறைக்குள் எரிந்து கொண்டிருந்த சிறிய மின்சார விளக்கு வீசிய மங்கிய ஒளியில் அவள் தன் எஜமானியின் முகத்தை ஊடுருவிப் பார்த்தாள்.

தன்னைச் சுற்றிலும் பலமான பாதுகாப்பு உள்ளது என்ற நினைவில் நிச்சிந்தையாக உமா ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். அதைக் கண்டதும் கவலை தீர்ந்தவளாக சுலோசனா ஒரு காகிதத்தையும், பேனாவையும் எடுத்துக் கொண்டு, அவசரமாக ஒரு சிறு கடிதம் எழுதலுற்றாள்.

''அன்பரே! இன்று தினம் மாலை இங்கே சிவகுமார் வந்திருந்தார். வெகு நேரம் தனிமையாக உமாமகேஷ்வரியுடன் வார்த்தையாடிச் கொண்டிருந்தார். அவர்கள் இருவரும் பேசுவதையும், பார்த்துக் கொண்டு பரிகாசம் செய்து மகிழ்வதையும் ஊன்றி கவனித்தால் பல நாட்கள் மிகவும் நெருங்கிப் பழகியவர்கள் என்று புரிகிறது. இவர்களது சிநேகிதம் வெறும் கள்ளம் கபடமற்ற நட்பு என்று என்னால் நம்ப முடியவில்லை. நிழலைப் போல சதா உமாவின் அருகிலேயே இருப்பதால் அவர்களது செய்கை ஏதும் என் பார்வையினின்று தப்ப முடியாது. அவ்வப்போது தங்களுக்குத் தெரியப் படுத்துகிறேன். நிற்க, நாளை மாலை அவ்விருவரும் தனியே மாந்தோப்பு பங்களாவிற்குச் சென்று வருவதாக ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். மற்றவை பிறகு.

தங்கள் காதலி.''

கடிதத்தை எழுதி ஒரு உறையில் இட்டு ஒட்டிப் பத்திரமாகத் தன் தலையணையின் கீழ் வைத்து விட்டு, சுலோசனா படுக்கை மீது சாய்ந்து கொண்டாள். பண்ணையார் மகள் மீது ரங்கதுரைக்கு ஏதேனும் கொஞ்சம் பற்றுதல் இருந்தால் அதை வேரோடு அறுத்துக் களைந்து விடவேண்டும் என்று அவளது பொறாமை பிடித்த உள்ளம் கறுவியது. அதனால் தான் அந்தக் கடிதத்தில் சிவகுமாரனைப் பற்றிக் கொஞ்சம் பொடிவைத்து அப்படி எழுதினாள்.



கடிதத்தை மறுநாள் எப்படித் தன் காதலனிடம் சேர்ப்பது? அதைக் கண்டு அவன் என்ன செய்வான்? மேற்கொண்டு அவனது புதிய சூழ்ச்சிகள் எதுவாக இருக்கும்? இவ்வாறு பற்பல எண்ணிய சுலோசனா படுக்கையில் உறக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்தாள்.

## 22

கட்டையன் உடல் நிலையில் எவ்விதமான அபிவிருத்தியும் ஏற்படவேயில்லை. அஞ்சலை தன்னால் முடிந்தவரை பலவிதமான சிகிச்சைகள் செய்து பார்த்தாள். அவனது உடலை வருத்திக் கொண்டிருந்த நோய் விட்டபாடில்லை. இரண்டு நாட்கள் குணம் அடைந்தவன் போல் எழுந்து நடமாடுவான். மூன்றாவது தினம் மறுபடி குளிர் ஜுரமும் பேத்தலும் ஜன்னியுமாகப் படுத்துவிடுவான். இந்த முறை ஆரம்பித்த நோய் எந்த மருந்திற்கும் மசியாது மிகவும் கடுமையாகிக் கொண்டு போவதை அஞ்சலை கண்டு மெத்தக் கவலைப்படலானாள். அன்று தினம் காலையில் மறுபடியும் கட்டையனுக்கு ஜுரமும் ஜன்னியும் கண்டுவிட்டன. 'வைத்தியர் அய்யாவை'வைக் கண்டு வாங்கி வந்த மருந்தை மிகவும் சிரமப்பட்டு அவனைச் சாப்பிடச் செய்திருந்தாள். மருந்திலே கலந்திருந்த போதைப் பொருளினாலோ அல்லது நோயின் கடுமையால் ஏற்பட்ட களைப்பினாலோ, அவன்

கட்டிலின்மீது தன் நினைவின்றி உரக்கக் குறட்டை விட்டவண்ணம் தூங்கிக் கொண்டிருந்தான். கட்டையன் குழந்தைபோல் அன்பு பாராட்டி மிகவும் ஆசையுடன் வளர்த்து வந்த அவர்கள் வீட்டு நாய் நல்லான், தன் எஜமானது நோயின் கடுமையைப் பூரணமாக உணர்ந்து கொண்டிருந்தது. விளையாட்டிலோ, உணவிலோ விருப்பமின்றி அது எஜமான் படுத்திருந்த கட்டிலின் கீழ் தரையில் உடலைச் சாய்த்து சுருட்டிக் கொண்டு கிடந்தது.

இரவு போஜனத்திற்காகக் கீரை ஆய்ந்துகொண்டு அஞ்சலை கட்டிலின் அருகே சற்றுத் தூரத்தில் தரை மீது உட்கார்ந்திருந்தாள். காலையில் பீங்கான் கிண்ணத்தில் ஊற்றிவைத்த பாலை முகர்ந்து கூடப் பார்க்காது நல்லான் பட்டினியுடன் வந்து கட்டிலடியில் படுத்துக்கொண்டதைக் கண்டு, அவள் மனம் மிக்க வேதனை அடைந்தது. வயிறு ஒட்டி எலும்புக் கூடு தோளின் மீது நன்றாகத் தெரிய களைத்துக் கிடந்த அந்த நாயையும், தன் நினைவு இன்றிப் படுத்திருந்த கணவனையும் மாறிமாறிப் பார்த்த அஞ்சலைக்குத் துக்கம் தாள முடியவில்லை. கட்டையன் இந்தத் தடவை நோய் குணமாகி மீண்டும் எழுந்து நடமாடுவான் என்ற நம்பிக்கை அவளுக்குக் கொஞ்சமும் இல்லை. தங்களது வாழ்க்கையில் அது நாள் வரை அவர்கள் இருவரும் அனுபவிக்க நேர்ந்த பலவித துன்பங்களைப் பற்றி அவளது உள்ளம் சிந்திக்கத் தொடங்கியது. வயோதிகத்தினாலும் வறுமையின் கொடுமையாலும் சுருங்கி வாடியிருந்த அவளது கன்னங்கள் மீது, தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தோடத் தலைப்பட்டது.

'கிர்' என்று மோட்டார் வண்டி வந்து நிற்கும் ஓசை கேட்டதும் நல்லான் கண்களை விழித்து உடம்பை சிலிர்த்தபடி பாய்ந்து எழுந்து நின்றது. காதுகளை நிமிர்த்தி மூக்கைச் சுருக்கிக்கொண்டு வாயில் பக்கம் திரும்பி நின்ற நல்லானைச்



சட்டென இடது கரத்தால் அஞ்சலை பிடித்து நிறுத்தினாள். ''ஸ்! நல்லான், ஐயா தூங்கும்போது குலைத்து எழுப்பினாயோ, கொன்னு போடுவேன். சும்மா இரு'' என்று அதட்டி விட்டு, அதன் கழுத்தில் தொங்கிய சங்கிலியை எடுத்துக் கட்டிலின் முன்னங்கால் ஒன்றில் நன்றாகப் பிணைத்துக் கட்டினாள். கழுத்தின் மீது அவிழ்ந்து தொங்கிக் கொண்டிருந்த கூந்தலைத்தட்டி அள்ளிச் சொருகிச் சரிப்படுத்திக் கொண்டு பதட்டமாக வாயில் பக்கம் விரைந்தாள்.

மோட்டார் காரிலிருந்து அது சமயம் இறங்கி உள்ளே வந்துகொண்டிருந்த பண்ணையார் மகளையும், அவள் பின்னால் தொடர்ந்து வந்த சிவகுமாரனையும் கண்டதும் ஏனோ அஞ்சலையின் நெஞ்சு படபடவென்று பயத்தில் அடித்துக் கொள்ளத் தொடங்கியது. ''வாங்க! உட்காருங்க'' என்று உபசரித்தபடி கைகுவித்து எஜமானிக்கும், வந்த மனிதருக்கும் ஒரு பெரிய கும்பிடு போட்டாள்.

உமா முன் தடவை போல் பூர்வ பீடிகைகள் போட்டு பொழுதைக் கழிக்க விரும்பவேயில்லை. எனவே ''அஞ்சலை! நாங்கள் வந்த விஷயத்தைச் சொல்கிறேன். மற்றொரு சமயம் எல்லாவற்றையும் ஒளிக்காது சொல்வதாகக் கூறியிருந்தாயே! அதை இன்று கேட்டுத் தெரிந்து கொள்ளவே வந்திருக்கிறோம். பயப்படாது, ஒளிவுமறைவு இன்றி எல்லாவற்றையும் கூறினால் எங்களால் ஆன எல்லா உதவிகளையும் செய்து உங்கள் இருவரையும் காப்பாற்றுவதாக நான் வாக்குக் கொடுக்கிறேன்'' என்றாள்.

பொழுது சாயும் நேரம் நெருங்கி வருவதை உணர்ந்த அஞ்சலை, முன் ஹாலின் மின்சார விளக்கைப் பொருத்திவிட்டு, உமாவின் அருகில் வந்து தரை மீது உட்கார்ந்து கொண்டாள். கட்டையனுடைய தேக நிலையையும் தன் வருங்காலத்தையும்

தனக்குள்ளே ஒருவாறு சிந்தித்துப் புழுங்கிக்கொண்டிருந்த அவளுக்கு, அந்த சமயம் மனத்திலே குமுறிக்கொண்டிருந்த தன் துயரத்தையெல்லாம் அவர்களிடம் சொல்லிவிடவேண்டும் என்று ஓர் ஆத்திரம் ஏற்பட்டது. ஆனால் துயரத்தின் சுமையினால் அவளால் சட்டென்று பேசமுடியவில்லை. நெஞ்சை வந்து அடைத்த வருத்தத்தைக் கட்டுப்படுத்தும் நிமித்தம், தரைமீது கிடந்த ரத்ன கம்பளத்தின் ஓரத்தை நகத்தால் வருடியபடி குனிந்த நிலையில் சில நிமிஷங்கள் வாளா இருந்தாள்.

"அஞ்சலை! பயப்படாதே! என்னைப் பூரணமாக நம்பு. என்னால் உனக்கு ஒருவிதக் கஷ்டமும் இராது" என்று உமா தைரியம் சொன்னாள்.

நரைத்துத் தளர்ந்துவிட்ட தன் புருவங்களை ஆச்சரியத்துடன் தூக்கி, நீர் நிறைந்த கண்களால் அஞ்சலை எஜமானியை ஏறிட்டுப் பார்த்தாள். பயத்திலே படபடவென்று துடித்துக் கொண்டிருந்த அவளது அதரங்களில் ஒரு புன்னகை நெளிந்து ஓடி மறைந்தது. தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக் கொண்டு, துணிச்சல் முழுவதையும் ஒருங்கே திரட்டிக்கொண்டு பேச ஆரம்பித்தாள்.

"அம்மா! மூடி மூடி வைப்பதனால் யாருக்கும் ஏதும் உதவியில்லை. உண்மை முழுவதையும் சொல்லிவிடறேன். ஆனா என்னையும், என் புருஷனையும் தாங்கள் காப்பாற்றிக் கொடுத்தால் ரொம்ப புண்ணியமாக இருக்கும். எங்க ரெண்டு பேருக்கும் வயசு ஆயிடுச்சு. இன்னும் எத்தனை காலம் நாங்க உசிரோடு இருக்கப் போகிறோம்! அவருக்கு வந்திருக்கும் சீக்கைப் பார்த்தால் இந்தக் கண்டம் தப்பாது போலத் தோணுது" என்றாள் துக்கத்துடன்.

"வருத்தப்படாதே. அஞ்சலை கொஞ்ச நாளாக என் உடம்பு சரியில்லாது போனதில் உன்னைப்பற்றிக் கவனிக்க



முடியவில்லை. உன் புருஷனுக்கு நல்ல வைத்தியம் செய்து குணப்படுத்த ஏற்பாடு செய்கிறேன் கவலைப்படாதே. உன் மனத்தை வருத்தும் எல்லாவற்றையும் மறைக்காது தயவு செய்து சொல்" என்றாள் உமா.

கண்களைத் துடைத்துக்கொண்டு அஞ்சலை நிமிர்ந்து உட்கார்ந்தாள். தளர்ந்து விட்டிருந்த அவளது முகத்திலே திடீரென்று துணிவின் சாயை பரவி நிற்பதை உமா கண்டாள்.

"அம்மா அது பெரிய கதை. ஆனால் கூடியமட்டும் சுருக்கிச் சொல்கிறேன்" என்று ஆரம்பித்தாள்.

அஞ்சலையும் கட்டையனும் முதன் முதலாக அழகர் நத்தத்திற்கு வந்தபோது தோட்டக்கார சின்னமுத்து உதவியால் அவர்கள் இருவருக்கும் தோட்டத்திலே ஒரு வேலை கிடைத்தது. சின்னமுத்துவுடன் கட்டையனும் தோட்டத்தைக் கவனிக்கும் வேலையும், வண்டியோட்டும் வேலையும் செய்துவந்தான். வீராயியுடன் அஞ்சலை பண்ணையார் மாளிகையில் பாத்திரம் துலக்கி, வீடுகூட்டி, மற்றும் சிறு அலுவல்கள் அனைத்தையும் கவனித்து வந்தாள். இருவர் செய்து வந்த வேலைக்கும் வருஷத்திற்கு ஒண்ணரைக் கலம் நெல்லும், மாதம் இரண்டு ரூபாய்களும், பொங்கல் புது தினத்திற்குச் சேலையும் வேஷ்டியும் வருவாயாகக் கிடைத்து வந்தன.

பண்ணையார் மாளிகைத் தோட்டத்திலே இருந்த குடிசைகள் ஒன்றில் கட்டையனும் அஞ்சலையும் வாடகையின்றி வசிக்க அனுமதிக்கப்பட்டனர். அந்தச் சில வருஷங்களைப்பற்றி அவள் ஏதும் குறை கூற முடியாது. உண்ணவேண்டிய உணவும், தங்க இடமும், செலவழிக்க தாராளமாக கையில் காசும் இருந்ததனால் அவர்கள் வாழ்வு மிக்க சந்தோஷகரமாக இருந்தது. கட்டையன் சுபாவத்திலே மிகவும் வெகுளி. எடுப்பார் பிள்ளை. இதைச் செய்தால் இது கிடைக்கும்

என்று வெளி மனிதர்கள் ஆசை காட்டினால் சட்டென்று மயங்கி விடுவான். எத்தனையோ முறை பண்ணை வேலையைவிட்டு வேறு இடங்களில் அதிக சம்பளத்திற்கு வேலை தேடிச் செல்ல வேண்டுமென்ற ஆசையில் அடிக்கடி அவன் துடித்தது உண்டு. அஞ்சலை மட்டும் அந்தச் சமயங்களில், கூட இருந்து புத்தி சொல்லியிருக்காவிடில் கட்டையன் ஓரிடத்தில் நிலைத்து வேலை செய்யாது சுற்றி வந்து கொண்டிருந்திருப்பான்.

சுருங்கச் சொன்னால், கட்டையனுக்குப் பணத்தின் மீது கொள்ளை ஆசை. தோட்ட வேலையோ வேறு வண்டியோட்டும் வேலையோ செய்து சட்டென்று பொருள் திரட்டி அதைக் கொண்டு சொந்தமாக ஒரு வெற்றிலைபாக்குக் கடை வைத்து வியாபாரம் செய்யவேண்டும் என்பது அவனது வெகு நாளைய ஆசை. அந்த ஆசை தீவிரமாக அவனது உள்ளத்தை நாளா வட்டத்தில் அரிக்கத் தொடங்கியது. அதனால் அடிக்கடி தான் செய்து வந்த தோட்ட வேலையைப் பற்றிக் குறைபட ஆரம்பித்தான். ''பிறருக்குக் கைகட்டிச் சேவகம் செய்வது ஒரு பிழைப்பா? கஞ்சியோ கூழோ குடித்தாலும் நமக்கு நாமே ராஜா என்று தனியே வாழவேணும். இது என்ன வாழ்வு, அஞ்சலை? எனக்குப் பிடிக்கவேயில்லை'' என்று அடிக்கடி புலம்பத் தொடங்கினான்.

நிற்க நிழலும், உண்ண உணவும் கொடுத்து ஆதரித்து வந்த பண்ணையார் குடும்பத்தின் மீது அஞ்சலைக்கு மிகவும் பக்தி ஏற்பட்டிருந்தது. தன் கணவன் நன்றி கெட்டவனாக, அவர்கள் அளிக்கும் உப்பைத் தின்றுவிட்டு, வேலையைப் பற்றிக் குறைவாகப் பேசுவதைக் கேட்க அவளுக்குச் சகிப்பதில்லை. இதன் பயனாக, அவர்களுக்குள் அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்படத் தொடங்கின. பூசல்களும் அதற்குப் பின்னர் சமரசமுமாகக் கொஞ்ச காலம் அவர்கள் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது.



இதற்குப் பின்னர் அஞ்சலை தன் கணவன் நடத்தையில் சில புதிய மாறுதல்களைக் கவனிக்கத் தொடங்கினாள். முன்போல் பண்ணை வேலையைப்பற்றி அவன் அலுத்துப் பேசுவது நாளடைவில் குறைய ஆரம்பித்தது. தோட்டத்தில் சின்னமுத்துவுடன் வேலை செய்வதை விட்டு, நாளின் பெரும்பாகமும் வெளியே வண்டி ஓட்டிச் செல்லவும், மற்ற பண்ணை சிறு அலுவல்களைக் கவனிக்கவும் அவன் நியமிக்கப்பட்டான்.

ஒரு நாள் வெளியே அடுத்த ஊருக்கு வண்டியை ஓட்டிச் சென்று விட்டு, அவன் குடிசைக்குத் திரும்பி வந்தான். உற்சாகமாக பரபரப்புடையவனாகத் தென்பட்ட கணவனைக் கண்டு அஞ்சலைக்கு ஒரே ஆச்சர்யமாக இருந்தது.

அஞ்சலை! விடிவதற்குள் நமது சாமான்களை எடுத்து மூட்டை கட்டிக்கொள்ள வேண்டும். நாளைக் காலையிலிருந்து எனக்கு மாந்தோப்பு பங்களாவில் வேலை. நீயும் நானும் பங்களாவுக்குப் பின்னால் உள்ள பெரிய ஓட்டு வீட்டில் போய்க் குடியேறப் போகிறோம். சம்பளம் இதைப் போல இரண்டு பங்கு, தெரிஞ்சுதா? அங்கே நாம் வச்சது தான் சட்டம். வேலையோ ரொம்பவும் கொஞ்சம். பூட்டிக் கிடக்கும் வீட்டையும் தோட்டத்தையும் பார்த்துக் கொள்ள வேண்டியது அவ்வளவு தான்!'' என்றான் சந்தோஷத்துடன்.

அஞ்சலைக்குத் தங்களுக்கு ஏற்பட்ட உத்தியோக மாற்றத்தைப் பற்றி ஒரே பிரமிப்பு. நியாயப்படி பார்த்தால், இந்த உத்தியோக உயர்வு கட்டையனுக்கு முந்தியே பல வருஷங் களாக உழைத்து வந்திருக்கும் தோட்டக்கார சின்னமுத்துவுக்கு அளிக்கப்பட வேண்டியது. பாரபட்சமாகத் தன் கணவனுக்கு அளிக்கப்பட்ட இந்த புது உத்தியோகமும், சம்பள உயர்வும் அஞ்சலைக்கு உண்மையில் சந்தோஷத்தை உண்டாக்கு வதற்குப் பதில் மெத்த மனச் சஞ்சலத்தையும் கவலையையும்

கொடுத்தன. எனினும் அவள் தன் கணவனுடன் ஏதும் தர்க்கம் செய்யவில்லை. தங்களுக்குச் சொந்தமான தட்டுமுட்டுச் சாமான்களை விரைவாக எடுத்துச் சேகரித்துக் கொண்டு மறு தினம் காலை, அவர்கள் இருவரும் மாந்தோப்பு பங்களாவில் சென்று குடியேறிவிட்டனர். சில நாட்கள் அவர்கள் வாழ்க்கை அமைதியாக நடந்தது.

ஒரு நாள் இரவு வெளியே ஏதோ அலுவலாகச் சென்ற கட்டையன் வெகுநேரம் சென்ற பின்னரும் வீடு திரும்ப வில்லை. கணவன் வருகைக்காக வாயில் பக்கமே விழி வைத்தவளாக நெடுநேரம் காத்திருந்த அஞ்சலைக்கு நேரம் செல்லச் செல்ல ஒரே திகிலாக இருந்தது.

நல்ல நட்ட நடு ஜாமத்தின்போது பரபரப்பாகக் கதவை யாரோ தட்டும் ஓசை கேட்டு அரைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்த அஞ்சலை திடுக்கிட்டு எழுந்து சென்று கதவைத் திறந்தாள். நெற்றியிலும் முகத்திலும் வியர்வை ஆறாக வழிய, தலையில் சுமந்த சிறு கூடையுடன் கட்டையன் நின்றுகொண்டிருந்தான். வாயைத் திறந்து அவள் ஏதும் பேசு முன் கட்டையன் மிகவும் பீதியுடன், ''அஞ்சலை கதவைச் சட்டுனு சாத்திவிடு. யாராச்சும் பின்னாலே வந்து விடப் போறாங்க'' என்று கூறிவிட்டு உள்ளே அவசரமாக நுழைந்தான். கதவைத் தாளிட்டுவிட்டுப் பின்னால் மெல்ல வந்தாள் அஞ்சலை.

அதற்குள் சாமான் வைக்கும் அறையிலிருந்து மண் வெட்டி ஒன்றை எடுத்துக்கொண்டு கட்டையன் தலையிலிருந்த சுமையைக் கீழே இறக்கி வைக்காது தோட்டத்திற்கு ஓடினான். ''ஹரிக்கேன் விளக்கைப் பொருத்தி எடுத்துக்கொண்டு ஏற்றக் கிணற்றுக்கு அப்பால் ஓடிவா!'' என்று மிகவும் பதட்டமாக உத்தரவிட்டுவிட்டு அவன் இருளில் ஓடி மறைந்தான்.

அஞ்சலைக்கு ஒரே குழப்பம். ஏதோ ஒரு தவறான காரியத்தை கணவன் செய்கிறான் என்றவரைக்கும் அவளது



சந்தேகம் ஊர்ஜிதமாகியிருந்தது. அவசரமாகச் சிறு ஹரிக்கேன் விளக்கைப் பொருத்தி எடுத்துக் கொண்டு, காற்றிலும் கடுகி கிணற்றை நோக்கி ஓடினாள். இருட்டில் தடுமாறிக் கொண்டு மிகவும் ஆத்திரத்துடன் ஒரு ஆழமான குழியை வெட்டி முடித்திருந்தான் கட்டையன். அவன் கூடையிலிருந்த துணியை நீக்கி அதற்குள்ளே கம்பளியில் சுற்றியிருந்த பொருளைக் கையில் எடுத்தபோது அஞ்சலை பயம் தாள முடியாது ''ஐயோ!'' என்று கிரீச்சிட்டு அலறி விட்டாள். கம்பளிக்கு வெளியே நீட்டிக் கொண்டிருந்த இரு சிறு கால்களைக் கண்டதும் அவளுக்கு அது ஒரு சிறு குழந்தையின் சவம் என்று விளங்கிவிட்டது. ''மூதேவி! மூடு வாயை! சப்தம் போட்டியோ, உன்னையும் வெட்டி இந்தக் குழியில் புதைத்து விடுவேன்'' என்று கட்டையன் பயங்கரமாக அதட்டவே, நடுநடுங்கிப்போன அஞ்சலை, பேசவும் சக்தி யிழந்து மேலே நடந்து கொண்டிருந்த காரியங்களைக் கவனித்தாள்.

கம்பளியிலிருந்த சவத்தைக் குழியில் போட்டு மண்ணைத் தள்ளி நன்றாக மூடிவிட்டு, நேரே சென்று ஒரு பெரிய போர்வையையெடுத்து உடல் முழுவதும் போர்த்திக் கொண்டு படுத்து விட்டான். அவன் செய்த அடாத காரியத்தைப் பற்றி விசாரிக்கவோ, அவன் அருகில் சென்று பார்க்கவோ, அஞ்சலைக்குத் துணிச்சல் இருக்கவில்லை. கைகளும் கால்களும் நடுங்க, சமையல் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு சுவரில் சாய்ந்தபடி உட்கார்ந்து கொண்டாள். கட்டையன் பயமுறுத்தியதுபோல் எங்கே தன்னை வெட்டிப் புதைத்து விடுவானோ என்ற அச்சத்தில் அன்று இரவு அதற்குப் பின்னர் அவள் தூங்கவேயில்லை.

அன்று இரவு படுத்த கட்டையனுக்கு மறு நாள் விடிவதற்குள் நல்ல குளிர் ஜுரமும் ஜன்னியும் வந்து விட்டன. நோயாளியான அவன் வாயில் வந்தபடி பிதற்றிக்கொண்டு,

அன்ன ஆகாரமின்றி ஒரு மாத காலம் படுத்துக் கிடந்தான். தன்னையறியாத மயக்க நிலையில் அவன் பிதற்றியதிலிருந்து அஞ்சலை சில விஷயங்களை கிரகித்துக் கொண்டாள். பிறந்த சிசு ஒன்றின் மரணத்திற்குத் தன் கணவன் காரண பூதமாக இருந்தான் என்பதை அவன் பிதற்றியதிலிருந்து அறிந்து கொண்ட அஞ்சலைக்கு அன்றிலிருந்து மன அமைதியே போய் விட்டது. பஞ்சமாபாதகங்களில் மிகக் கோரமான சிசு ஹத்தியைத் தன் கணவன் பண ஆசை காரணமாக செய்து விட்டான் என்பதையறிந்து அவள் அனலிலிட்ட புழுவாகத் துடித்துப் போனாள். ஆனால் அதைப்பற்றி அவள் வெளியே யாரிடமும் சொல்லிக் கொள்ள முடியவில்லை. எந்த நிமிஷமும் உண்மையை அறிந்து போலீஸார் வீட்டைச் சோதனை போட்டுச் சவத்தைக் கண்டுபிடித்துக் கட்டையனையும், அவளையும் ஜெயிலுக்கு இழுத்துச் சென்று விடுவார்களோ என்ற பயத்தில், அதற்குப் பின்னர் அவள் இரவு வேளைகளில் சரியாகவே தூங்கியதில்லை.

கட்டையன் உடம்பு குணமாகி எழுந்திருந்த பின்னர், மிகவும் மாறிவிட்டிருந்தான். அவன் முகத்தில் சந்தோஷக் களையே அஸ்தமித்துப் போய்விட்டிருந்தது. அர்த்தமற்றுச் சில சமயங்களில் பைத்தியக்காரனைப்போல் பேசுவான். சிரிப்பான். இரவு வேளைகளில் தூக்கத்திலிருந்து எழுந்து கூச்சலிட்டுக் கத்துவான். அன்று ஆரம்பித்த குளிர் ஜுரமும், ஜன்னியும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அவனை விஜயம் செய்ய ஆரம்பித்தன.

அஞ்சலைக்கும் வாழ்க்கை மிகவும் பயங்கரமானதாகி விட்டது. உண்ண உணவும், தங்க நல்ல இடமும், செலவழிக்க கை நிறையப் பணமும் இருந்த போதிலும், அவளுக்கு அமைதி என்பதே ஒரு நிமிஷமும் இருக்கவில்லை. எத்தனையோ முறை மாந்தோப்பு பங்களா வேலையை விட்டு விட்டு சொந்த கிராமத்திற்குத் திரும்பி விடுவோம் என்று அவள் கணவனுக்கு



யோசனை சொல்லிப் பார்த்தாள். கட்டையன் அவள் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை. "வேலையை விட்டுப் போவதா? சாகும் மட்டும் நாமிருவரும் இந்தத் தோப்புக் குள்ளேயே ஜெயில் வாசம் செய்யணும். வாயை மூடிக் கொண்டிரு. உனக்கு ஒண்ணும் தெரியாது" என்று மட்டும் சில சமயங்களில் கோபத்தில் அவன் கத்துவதுண்டு.

இது நடந்து இரண்டு வருஷங்கள் சென்றன. ஒரு நாள் இரவு மாந்தோப்பு பங்களாவிற்குள் திரையிட்ட ஒரு வண்டி வந்து நுழைந்தது. கட்டையன் அன்று தினம் மாலையிலிருந்தே கிலி பிடித்தவனாகக் காணப்பட்டான். அஞ்சலையிடம் காரணமில்லாத சிறு விஷயங்களுக்கெல்லாம் கோபத்துடன் கூச்சலிட்டு அதட்டிக் கொண்டிருந்தான். சமையலறையினின்று வெளியே வந்து எட்டிப் பார்த்த மனைவியை அவன் பலவந்தமாகப் பிடித்து உள்ளே நெட்டித் தள்ளினான். "நான் வந்து கூப்பிடும்வரை வெளியே வரக்கூடாது. உனக்குச் சம்பந்த மில்லாத காரியங்களில் தலையிடவேணாம், தெரிஞ்சுதா?" என்று அதட்டி ஓர் உத்தரவிட்டு விட்டு, அவன் பங்களாவின் முன்புறம் ஓடினான்.

மங்கி எரிந்து கொண்டிருந்த கை விளக்கில் எண்ணெய் குறைந்து விட்டதினால் அது அணையும் தருவாயிலிருந்தது. கதவைத் தாளிட்டுக்கொண்டு தூக்கமின்றி அச்சத்துடன் அறைக்குள் உட்கார்ந்திருந்த அஞ்சலை விளக்கைத் தூண்டிவிட எழுந்தாள். அப்போது நல்ல நடுநிசிப் பொழுது இருக்கும். எங்கிருந்தோ காற்றின் வழியே பிறந்த குழந்தையின் அழுகைக் குரல் ஒரே ஒரு தடவை கேட்டது. கைகால்கள் பதற, நெஞ்சு தடதடவென்று அடித்துக்கொள்ள, கதவை மெல்லத் திறந்து கொண்டு ஆவல் தாள முடியாது அஞ்சலை வெளியே எட்டிப் பார்த்தாள். விர் என்று வீசிய குளிர் காற்றில் அணைய முயற்சித்துக் கொண்டிருந்த விளக்கு நன்றாக அணைந்து

விடவே, எங்கும் ஒரே இருள் மயமாகிவிட்டது. சுவர் ஓரமாக நகர்ந்து வெளியே தோட்டத்திற்கு வந்தாள். பங்களாவின் முன்புற ஹாலின் மூடிய ஜன்னல் வழியே வெளிச்சம் தோட்டத்திற்குள் சிறிதளவு வீசிக் கொண்டிருந்தது. தைர்யம் முழுவதையும் வரவழைத்துக்கொண்டு, மெல்ல இருட்டில் சுவரோடு சுவராக நகர்ந்து அந்த ஜன்னல் வழியே தெரிந்த சிறு ஓட்டைக்குள் கண்ணை வைத்து உள்ளே கூர்ந்து பார்த்தாள்.

அறைக்குள் நடுவில் கிடந்த ஒரு பெஞ்சியின் மீது தலையிலிருந்து கால்வரை போர்வையால் மூடிக்கொண்டு யாரோ படுத்திருந்தார்கள். கட்டையன் தரையில் உட்கார்ந்தபடி சிறு துணியினால் பிறந்த சிசு ஒன்றின் சவத்தை மூடிச்சுருட்டிக் கட்டுவதில் முனைந்திருந்தான். அவன் முகத்தில் பேய்க் கோலம் தாண்டவமாடுவதை விளக்கொளியில் கவனித்த அஞ்சலைக்கு பயத்தில் மூச்சே நின்றுவிடும்போல் இருந்தது. தன் கணவன் மறுபடி பணத்தாசையினால் உந்தப்பட்டு அடாத ஒரு காரியத்தைச் செய்துவிட்டான் என்பதை எண்ணியபோது, அவள் உயிரே போய்விடும் போன்ற பயங்கர உணர்ச்சி ஏற்பட்டது. துணிமூட்டையைக் கையில் எடுத்துக்கொண்டு அவசரமாக அந்த அறையை விட்டு அவன் வெளிக் கிளம்புவதைக் கண்ணுற்ற அஞ்சலை பயத்துடன் அங்கிருந்து போகப் புறப்பட்டாள். அது சமயம் பெஞ்சி மீது படுத்திருந்த உருவத்தின் மேல் போர்த்தியிருந்த போர்வை நழுவி விழுந்தது. விளக்கொளியில் ஜன்னல் பக்கமாகத் திரும்பியிருந்த அந்தப் பெண்மணியின் முகத்தைக் கூர்ந்து கவனித்த அஞ்சலை ஆச்சரியத்திலும் திகைப்பிலும் வாய்விட்டுக் கத்திவிடுவாள் போன்ற நிலையை அடைந்து விட்டாள். அந்தப் பெண் வேறு யாருமல்ல!

கதையை சுவாரஸ்யமாகக் கேட்டுவந்த உமாவும், சிவகுமாரனும் மேலே அவள் என்ன சொல்லப் போகிறாளோ



என்ற ஆவலில் தங்களை மறந்து செயலற்ற பொம்மைகளாக உட்கார்ந்திருந்தனர். தங்களுக்குப் பின்னாலிருந்த உட்புறக் கதவு திறக்கப்படுவதை அவர்கள் கவனிக்கவில்லை. மேலே பேச வாயைத் திறந்த அஞ்சலையின் முகம் வெளுத்து விட்டது. ''ஐயோ அம்மா! என்னைக் காப்பாத்துங்க!'' என்று கிரீச்சிட்டு அவள் அலறி முடிப்பதற்குள், டணார் என்ற ஓசையுடன் ஒரு பெரும் இரும்புச் சட்டம் அவள் இருந்த திக்கில் வந்து விழுந்தது. அடுத்த கணம் அஞ்சலையின் முகத்திலே ரத்தம் வெள்ளமாக வழிந்தோட அவள் அப்படியே மயக்கமாகச் சாய்ந்து விட்டாள். ''பாதகி! செத்துப் போ! புருஷனைக் காட்டிக் கொடுக்கவா பார்க்கிறாய்'' என்று பயங்கரமாகக் கூக்குரலிட்ட கட்டையன் வெறி பிடித்தவன் போல் தலையைப் பிய்த்துக்கொண்டு அறையின் கதவருகே நின்றான்.

''என்னை என்ன செய்வீர்கள்! கிட்ட வந்தால் நான் என்ன செய்வேன் தெரியுமா?'' என்று இரைந்து கத்தியபடி கட்டையன் முன்னே வந்தான். உமா நடுநடுங்கி விட்டாள். ''மிஸ்டர் சிவகுமார்! பயமாயிருக்கிறதே!'' என்று பதறியபடி அவன் கையைப் பிடித்துக்கொண்டு பின்னால் மறைந்து கொள்ள முயற்சித்தாள்.

''பயப்படாதீர்கள்! கட்டையனுக்குச் சித்தம் சுவாதீனமில்லை'' என்று தைரியம் கூறிய சிவகுமார், அங்கிருந்தபடியே, ''டிரைவர் இங்கே ஓடி வா,'' என்று ஓர் அபயக்குரல் கொடுத்தான்.

''எல்லோரும் வாருங்கள். என்னை என்ன செய்ய முடியும்?'' என்று அட்டகாசமாகச் சிரித்த கட்டையன் கதவைப் பிடித்துக்கொண்டு கால்கள் தடுமாற நிற்க முயற்சித்தான். தரையில் நினைவிழந்து கிடந்த மனைவியை அவனது கண்கள் வெறித்துப் பார்த்தன! ''அஞ்சலை! நீ செத்துவிட்டாயா!'' என்று கூவி விட்டு, அவள் அருகே வரக் கால்களை முன் எடுத்து

வைத்தான். அவ்வளவுதான். வெட்டுண்ட மரம்போல் கீழே விழுந்து விட்டான்.

மோட்டார் டிரைவர் உதவியுடன் மயக்கமாகக் கிடந்த அஞ்சலைக்கும் கட்டையனுக்கும், உமாவும் சிவகுமாரும் தங்களால் ஆன 'முதல் உதவி'யைச் செய்து முடித்தனர். சிவகுமார் அவசரமாக எழுதிக் கொடுத்த கடிதத்தை எடுத்துக்கொண்டு டிரைவர் நேரே சென்று, டாக்டர் குருமூர்த்தியைக் கையோடு அழைத்து வந்தான். ரத்தப் பிரவாகத்திலே தன் நினைவு இன்றிக் கிடந்த அஞ்சலைக்கு வைத்தியர் முதலில் சிகிச்சை செய்தார். பிறகு கட்டையனைக் கவனிக்க ஆரம்பித்தார்.

டாக்டர் குருமூர்த்தியின் வேலைக்காரன் மேற்பார்வையில் அவர்கள் இருவரையும் கவனித்துக்கொள்ள விட்டு விட்டு; அவர்கள் அனைவரும் இரவு வெகுநேரம் சென்ற பின்னர் வீடு திரும்பினார்கள். இரவு முழுவதும் கருத்துடன் கவனித்தும், மறுநாள் பொழுது விடியும் தருவாயில் கட்டையன் தன் உணர்வு திரும்பப் பெறாது மரணமடைந்து விட்டான்.

மூளையில் பட்ட காயத்தினால் உணர்வின்றிக் கிடந்த அஞ்சலையின் நிலைமையும் மோசமாகி வருவதைக் கண்ட டாக்டர், அவளை அருகிலிருந்த நகரத்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கும்படி யோசனை சொன்னார். கட்டையனது ஈமக்கடன்களை முடித்துவிட்டு, அஞ்சலையை ஆஸ்பத்திரிக்கு அப்புறப்படுத்திவிட்டு, மாந்தோப்பு பங்களாவை நன்றாகப் பெருக்கிக் கழுவிச் சுத்தமாக்கிப் பூட்டிவிடும்படி உமா ஏற்பாடுகள் செய்தாள். கட்டையன் அந்த வீட்டிற்குள் வசித்த காலத்தில் பயந்து கூச்சலிட்டதற்கும், அடிக்கடி ஜுரம் வந்து பிதற்றிக்கொண்டு திரிந்ததற்கும் காரணம் ஓரளவு இப்பொழுது அவளுக்கு நன்றாக விளங்கிவிட்டது. கட்டையனது மனக்



குழப்பத்திற்கும், அடாத செயல்களுக்கும் காரணகர்த்தாவாக இருந்த அந்தப் பெண்மணியின் பெயரைத் தெரிந்து கொள்வதற்குள் நிலைமை விபரீதமாகி விட்டதை எண்ணி அவள் வருந்தினாள். அஞ்சலை பிழைத்து எழுந்தால் எப்படியும் அதைத் தெரிந்துகொண்டு விடலாம் என்ற நம்பிக்கையில் அவள் சற்று ஆறுதல் பெற்றிருந்தாள்.

ஒரு வார காலம் ஓடிச் சென்றது. ஒருநாள் காலை மானேஜர் வரதராஜன் தன்னுடன் வேறு இரு மனிதர்களை அழைத்துக் கொண்டு அவளைக் காண மாளிகைக்கு வந்திருந்தார். வந்தவர்கள் இருவரும் வயதில் ஏறக்குறைய மானேஜரைப் போலவே முதுமைப் பருவத்தினராக இருந்தனர். தோற்றத்தில் கிராமத்தில் உள்ள கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போல் காணப்பட்டனர். "இவர்கள் இருவரும் இந்த கிராமத்திலே நமது பண்ணைக்கு அடுத்தபடியான அந்தஸ்து வகிக்கும் பெரிய மிராசுதார்கள். தங்களது தந்தைக்கு மிகவும் ஆப்த நண்பர்கள். தங்களைக் கண்டு ஒரு முக்கிய விஷயம் பேசிவிட்டுப் போக வந்திருக்கிறார்கள்." என்று அவர்களை அறிமுகப்படுத்தினார் மானேஜர்.

"அப்படியா!" என்று கேட்ட உமா வந்தவர்களை வணங்கி உட்காரும்படி உபசரித்தாள். வந்த இருவரில் மிகவும் வயதானவராகக் காணப்பட்ட மனிதர் தொண்டையைக் கனைத்துக்கொண்டு "அம்மா! நாங்கள் கொஞ்சம் கடுமையாகப் பேசுவதைப் பற்றித் தாங்கள் மனம் நொந்து கொள்ளக் கூடாது; உங்கள் நன்மைக்கும் காலஞ்சென்ற எங்கள் நண்பர் பொருட்டும் நாங்கள் புத்தி சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம். தாங்கள் நல்ல படித்த பெண்; அறிவாளி; இத்தனை பண்ணைக்கு ஏக வாரிசு. ஆனால் தாங்கள் நடந்து கொள்ளும் முறை தங்கள் கௌரவத்திற்கு நாசம் விளைவிக்கும் வகையில் உள்ளது. பார்ப்பவர்கள் பரிகாசத்துக்கு இடமாக உள்ளது" என்றார் கோபமாக.

உமாவின் முகம் சிவந்து போயிற்று. நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. "என் நடத்தையில் கௌரவம் பாழாகும்படி என்ன தவறைக் கண்டுவிட்டீர்கள்? என் விஷயத்தில் தலையிடத் தாங்கள் யார்?" என்று கோபத்துடன் கேட்டுவிட்டு எழுந்து நின்றாள்.

"கிராமத்திலே பொதுமக்கள் ஆதரவில் வசிக்க வேண்டிய தாங்கள் பொதுமக்களின் அபிப்பிராயத்திற்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டும். அந்தத் தறுதலைப் பிள்ளை சிவகுமாருடன் தாங்கள் சரிசமமாகப் பழகி அடிக்கடி வெளியில் கூடச் செல்வதைக் கண்டு கிராமத்தாரே பண்ணையைப் பற்றி மிகவும் கேவலமாகப் பேசுகிறார்கள். இதைத் தாங்கள் தவிர்க்க வேண்டும்" என்றார் இரண்டாவது வயோதிகர்.

கோபம் தாள முடியாத உமா, அவர்கள் இருவரையும் சுட்டெரித்து விடுகிறவள் போல் உறுத்துப் பார்த்தாள். பிறகு மானேஜர் வரதராஜன் பக்கம் திரும்பி, "என்னுடைய சொந்த விஷயத்தில் தலையிட்டுக் குழப்ப இவர்களுக்கு என்ன உரிமை? இவர்களை இங்கே அழைத்து வரும்படி உங்களிடம் யோசனை சொன்னது யார்? மிஸ்டர் வரதராஜன், நீங்கள் என் தந்தைக்கு மிகவும் வேண்டிய ஊழியர். வெகு காலமாகப் பண்ணையில் வேலை பார்த்து வருகிறவர் என்ற மரியாதைக்காக நான் பதட்டமாக ஏதும் பேச விரும்பவில்லை. என் நடத்தையில் கிராம மக்களோ, நீங்களோ தவறு ஏதும் காண வேண்டிய அவசியமில்லை. தறுதலை என்றும், பூர்வீகம் தெரியாத அனாதையென்றும் தாங்கள் அவமதிப்பாகப் பேசும் சிவகுமாரன் அவர்களை நான் திருமணம் செய்து கொள்வதாகத் தீர்மானித்திருக்கிறேன். வருங்காலத்தில் கணவராகப் போகும் மனிதருடன் நெருங்கிப் பழகி அவர் குணத்தை அறிய முயற்சிப்பது உங்களுக்குத் தவறான நடத்தையாகக் காணப்பட்டால், அதற்கு நான் பொறுப்பாளி அல்ல. நான் யாரை



மணந்து கொள்ள வேண்டும், எப்படி வாழ வேண்டும் என்றெல்லாம் கிராம மக்கள் என்னைக் கட்டுப்படுத்த முடியாது. என் நலனைக் கருதி யோசனை கூறவந்த இந்த இருவரையும் தயவு செய்து அழைத்துக்கொண்டு தாங்கள் போய்வரலாம்" என்று படபடவெனப் பேசிவிட்டுச் சினத்துடன் உள்ளே சென்றுவிட்டாள்.

வரதராஜன் மேலே ஏதும் பேச முடியாது கூடவந்த இருவரையும் திருதிருவென்று பார்த்தவண்ணம் விழித்துக் கொண்டு நின்றுவிட்டார்.

## 23

அன்றைய சம்பவத்திற்குப் பிறகு அடுத்த நாள் வழக்கமாகப் பண்ணை அலுவல்களை கவனிக்க வரும் மானேஜர் வரதராஜன் வரவில்லை. தொடர்ந்து நாலைந்து தினங்கள் சென்றன. அவர் வருவதாக எவ்வித அறிகுறியும் காணப்படவில்லை. நான் துடுக்காகப் பேசிய சொற்களால் மனம் வெகுண்டு அந்தக் கிழவர் மனஸ்தாபப்பட்டுக் கொண்டு தலைமறைவாக இருக்கிறார் என்று எண்ணிய உமா, அதைப்பற்றி அசட்டையாக இருந்து விட்டாள்.

ஒரு வார காலம் சென்றது. ஒரு நாள் காலை அவள் பெயருக்கு ஒரு கவர் வந்தது. வரதராஜனது கையெழுத்துப் போல் காணப்படவே ஆவலுடன் திறந்து அதை வாசித்தாள்.

"திருமதி உமாமகேஸ்வரி அவர்களுக்கு,

வணக்கம். தங்களது தந்தை ஜீவியவந்தராக இருந்த காலத்தில் என்னிடம் கேட்டுக்கொண்ட ஒரு சிறு வேண்டுகோளுக்கு இசைந்து, தள்ளாத என் வயதையும் உடல் அலுப்பையும் பொருட்படுத்தாது இது நாள் வரை

தங்கள் பண்ணையில் தொடர்ந்து மானேஜர் வேலையைச் செய்துவந்தேன். நான் வயதான மனிதன். மெத்தப் படித்தவன் அல்ல. கர்நாடக பழக்க வழக்கங்களும், பழங்காலக் கொள்கைகளும் உடையவன். தாங்கள் மெத்தப் படித்தவர்; முற்போக்கு சிந்தனையாளர். தங்களுக்கு நல்ல ஆலோசனை கூறி, பண்ணை விவகாரங்களைக் கவனிப்பது என்பது இனி சாத்யப்படாத செய்கையாகும். நமக்குள் ஏற்பட்ட அபிப்பிராய பேதம் பெரும் மனக் கசப்பாக முடியுமுன் நான் பண்ணையிலிருந்து விலகிக்கொள்வது தான் என் வயதிற்கும் என் கௌரவத்திற்கும் முறையாகும் என்று நம்புகிறேன். ஆனால் தயவுசெய்து இத்துடன் நான் அனுப்பியுள்ள எனது ராஜினாமா கடிதத்தை ஏற்று, என்னைத் தங்கள் பண்ணை உத்தி யோகத்திலிருந்து விடுவித்து விடும்படி கேட்டுக் கொள்கிறேன். எனது சம்பளப் பாக்கியை தயவுசெய்து என் வீட்டிற்கு அனுப்பி வைத்தால் மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன்.

தங்கள் உண்மையுள்ள ஊழியன்,
**வரதராஜன்''.**

கடிதத்தை ஒருமுறை படித்தாள் உமா. இரண்டாவது முறை ஆழ்ந்து படித்தபோது அதில் அடங்கியிருந்த ஏளனம் அவளது மனத்தைத் தைத்தது. ''பூனை கண்களை மூடினால் பூவுலகம் அஸ்தமித்து விடுமோ!'' என்று தனக்குள் எண்ணி வெகுண்டவளாக, மானேஜர் வரதராஜன் ராஜினாமாவை அலக்ஷியமாக அப்பால் வைத்துவிட்டு வாளா இருந்தாள்.

உலக அனுபவம் என்பதே அதிகம் இல்லாத அவளுக்கு, மானேஜருக்கு, பண்ணையிலிருந்த செல்வாக்குப் புரிவதற்கு அதிக நாட்கள் செல்லவில்லை. உமா வாயைத் திறந்து ஏதும் கூறாவிடினும் மானேஜர் அய்யா வேலையிலிருந்து விலகிக் கொண்டு விட்டார் என்ற செய்தி வேலையாட்களிடம்



எப்படியோ தீயைப்போல் விரைவாகப் பரவி விட்டது. வரதராஜனின் ராஜினாமாக் கடிதம் வந்து சேர்ந்த நான்காவது நாள், நெடுநாளாகச் சமையல் வேலை பார்த்து வந்த தவசுப்பிள்ளை தங்கசாமி தனது வேலையினின்று விலகிக் கொண்டு விட்டதை ஒரு நொடிப் பொழுதில் அறிவித்துவிட்டு மூட்டையைக் கட்டிக்கொண்டு வேளியேறினான். அவனுடன் கூட உதவி செய்து வந்த சமையல்காரப் பையன் தானும் உடனே விலகிவிட்டதாக அறிவித்து விட்டு, அரைகுறையாகச் சமையலறையைப் பாதி வேலையில் போட்டுவிட்டுக் கிளம்பிவிட்டான். வீடு கூட்டும் வேலைக்காரி, தண்ணீர் எடுத்து வைக்கும் வேலையாள், மாடுகளை மேய்த்து கவனித்துக் கொள்ளும் மாட்டுக்காரப் பையன்கள் என்று முறையே ஒவ்வொருவராகத் திடீர் திடீரென்று வேலையை விட்டு வெளியேறத் தொடங்கிவிட்டார்கள். எதிர்பாராது ஏற்பட்ட இந்த வேலை நிறுத்தத்தை உமா சமாளிக்கத் தடுமாறிக் கொண்டிருந்த சமயம் ஒரு நாள் காலை, பண்ணையாட்கள் அனைவருக்கும் தலைமை உத்யோகம் செய்து வந்த பண்ணை பார்த்தி, சதாசிவம் தலையைச் சொறிந்துகொண்டு மிகவும் தயக்கமாக எஜமானி முன் வந்து நின்றான். அவனது தோற்றம், பார்வை, தவிப்பு எல்லாம் அவன் ஏதோ முக்கியமான விஷயத்தைச் சொல்ல வந்திருக்கிறான் என்பதை உணர்த்தவே உமா சற்றுக் கோபத்துடன் ''நீயும் வேலையிலிருந்து விலகிவிட உத்தேசித்திருக்கிறாய் என்பதைச் சொல்ல வந்திருக்கிறாய் இல்லையா?'' என்று அதட்டிக் கேட்டாள்.

''இல்லையம்மா? இந்தக் கட்டை காடு போகும்வரை இந்த இடத்தைவிட்டுப் போவதாகவே கனவில் கூட நினைக் காது அம்மா! அறுவடை சமயம் நெருக்கத்திலே இருக்கும்போது நம் ஆட்கள் பலர் நேத்து திடீர்னு சொல்லாம கொள்ளாம வேலையிலிருந்து விலகிக் கொண்டு விட்டார்கள். அறுவடையை எப்படி ஒப்பேத்தப் போகிறோம்னு ராத்திரி

முழுக்க நான் தூங்கலையம்மா!'' என்று அழமாட்டாத குறையாகக் கூறினான் அவன்.

''திடீரென்று வேலையிலிருந்து விலக அவர்களுக்கு நாம் என்ன தவறு செய்தோம்? ஏன் இவர்கள் எல்லோரும் புத்தியில்லாது இப்படி நடந்து கொள்கிறார்கள்?'' என்று உமா மிகவும் சினத்துடன் கேட்டாள்.

''மானேஜர் அய்யா இங்கே வேலை பார்த்த காலத்திலே அவர் கொண்டு வந்து வச்ச ஆள் படைகள் அவங்க. எஜமான் வேலையிலிருந்து விலகிவிட்டதும் தாங்களும் கூடவே விலகி விடுவதுதான் உத்தமம் என்று நினைச்சு விலகிப் போய் விட்டார்கள். இது மாதுரி கஷ்ட காலம் பண்ணைக்கு எப்போதுமே வந்ததில்லை அம்மா'' என்றான் அவன் விசனத்துடன்.

''போனால் போகட்டும், அதற்காக நாம் ஏன் கவலையில் இடிந்து போக வேண்டும்? இவர்கள் எல்லோரும் இனாமாக நமது பண்ணைக்கு உழைத்துவிடவில்லை. தக்க கூலி கொடுத்தோம். வேலை செய்தார்கள். புத்தியற்றவர்கள், வேலை கிடைப்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை இவர்கள் அறிந்துகொள்ளவில்லை. கால தாமதம் செய்யாது புதிய ஆட்களைத் தேடிப் பிடித்து வேலைக்கு அமர்த்திவிடு. இந்த நிலையில் நாம் வேறு என்ன செய்ய முடியும்?'' என்று கடுமையான குரலில் உத்தரவிட்டாள்.

பண்ணை பார்த்தி தலையைப் பலமாக சொறிந்து கொண்டான். அவனது முகத்தில் படிப்படியாக அசடு வழிந்தோடத் தொடங்கியது.

''அம்மா மன்னிச்சுக்கோங்க, தாங்கள் சொல்கிறபடி செய்ய அடியேன் சித்தமாக இருக்கிறேன். ஆனால் அது அவ்வளவு சுலபமான காரியமல்லவே'' என்றான்.



31505
4757969
99.

உமாவுக்கு அவன் சுற்றி வக்காலத்துப் பேசுவது பிடிக்கவில்லை. ''என்னப்பா உளறுகிறாய்! ஊரில் ஜனங்கள் வேலைக்குப் பறந்துகொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்கள் போனால் இன்னும் இரட்டை மடங்கு புதிய ஆட்களை நியமித்துக் கொள்கிறது. அவ்வளவுதானே! பார்க்கப்போனால் ஒரு வழியில் இவர்கள் வேலையிலிருந்து நின்றது நல்லதற்கு என்பேன். பல வருஷங்களாகப் பண்ணைப் பணத்தை வாங்கித் தின்றுவிட்டு இதில் பாதிப் பெயர்களுக்கு உடம்பில் சோம்பேறித்தனம் குடியேறிவிட்டிருந்தது. புதிய வேலைக்காரர்கள் வந்த புதிசிலாவது கொஞ்சம் சுறுசுறுப்பாக வேலை செய்வார்கள். எத்தனை பேர் வேலையை விட்டு நின்று விட்டார்களோ அதைப்போல் ஒண்ணரை மடங்கு புதிய ஆட்களைச் சட்டென்று தேடி அமர்த்தி விடு. இனி காலதாமதம் வேண்டாம். வேலையிலிருந்து விலகிச் சென்ற இவர்களில் யாரேனும் திரும்ப வர முயற்சித்தால் கண்டிப்பாக இங்கே இடமில்லையென்று அனுப்பிவிடு. இருக்கட்டும். இவர்கள் அனைவரும் விரைவில் உமா அம்மாள் யார் என்பதை உணர்வார்கள்!'' என்று மிகவும் ஆக்ரோஷமாகப் பேசினாள்.

பண்ணை பார்த்தி மறுபடியும் தலையை வேகமாகச் சொறிந்து கொண்டான். ''வேலையாட்களைத் தேடிப்பிடித்து அமர்த்திவிடுவது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. அப்படியே நான் அடுத்த ஊரிலிருந்து ஆட்களைத் தேடிக் கொண்டு வந்தாலும் பண்ணையைவிட்டு விலகியிருக்கும் ஆட்கள், நமது புதிய ஆட்களை வேலை செய்ய விடமாட்டார்கள். நமது காவல்காரன் முனுசாமி அடி ஆட்கள் தயார் செய்து கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன் அம்மா'' என்றான் மிகவும் விசனத்துடன்.

''அடி ஆட்களா? அது என்னப்பா? புதிய பெயராக இருக்கிறது!'' என்று உமா சற்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''நாம் புதிய ஆட்களை நியமித்தால் அவர்கள் வேலை செய்யாது தடுத்துப் பயமுறுத்தி அடித்துத் துன்புறுத்த ஒரு சில போக்கிரிகளை அவன் தயார் செய்வதாகக் கேள்விப்பட்டேன். இப்படிப்பட்ட போக்கிரிகளை இந்த ஊரில் 'அடியாட்கள்' என்பார்கள் அம்மா'' என்று விவரித்தான் அவன்.

''நீ சொல்வதைப் பார்த்தால் நாம் எங்கேயோ காட்டுப் பிரதேசத்தில் வசிப்பது போல்தான் தோன்றுகிறது. நமது புதிய ஆட்களைப் பழைய ஆட்கள் துன்புறுத்தினால் நாம் சும்மா பார்த்துக்கொண்டு இருந்துவிடுவோமா? என்னப்பா உளறுகிறாய்? இது கேள்வி முறையற்ற ராஜ்யமா?'' என்று கோபத்துடன் கேட்டாள்.

''நான் உண்மையைச் சொல்கிறேன் அம்மா, நீங்கள் பட்டணத்து வாசி. உங்களுக்கு கிராமத்து நிலவரம் ஒண்ணும் புரியாது. இம்மாதரி சிறு மனஸ்தாபம் பெரிய கலகமாகி ஊர் ரெண்டுபட்டு அடிதடியில் வந்து முடிவில் கொலையில் கூட முடிவதுண்டு. என் மனசு ரொம்பக் கலங்கி கிடக்குது. அம்மா!'' என்று பிரலாபித்தான் அவன்.

''வரது வரட்டும், போய் நான் சொன்னபடி புதிய ஆட்களைத் தேடி வேலைக்கு அமர்த்து. கலகமும் கொலையும் நடக்காதபடி நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்று மிகவும் துணிவாக உத்தரவிட்டு உள்ளே சென்றாள்.

உண்மையில் உமா வெளிப்பார்வைக்கு அப்படித் துணிவாக அதட்டிப் பேசினாளே ஒழிய சதாசிவம் சொன்ன விஷயங்களைக் கேட்டதும் அவள் மனம் மெத்த கவலையில் ஆழ்ந்து விட்டது. பட்டணத்திலே பெருங்காலம் வாழ்ந்து பழகியவள் என்ற போதிலும், நிலத்தகராறு, தண்ணீர்த் தகராறு இவைகள் மூலமாகக் கிராமங்களில் ஏற்படும் பலவித கலகங்கள் பற்றி அவள் கேள்விப்பட்டிருந்தாள். தன்னந்தனியாக



இதையெல்லாம் எப்படிச் சமாளித்து, காரியத்தை நடத்தப் போகிறோம் என்ற பீதி அவளது உள்ளத்தில் குடியேறிவிட்டது. ஆசிரமத்து காரியமாக சிவகுமார் ஒருவார காலத்திற்கு முந்திதான் பட்டணம் சென்றிருந்தான். அவன் திரும்பிவர மேலும் பத்து தினங்களுக்குமேல் ஆகும் என்று அன்றுதான் அவள் அறிந்து கொண்டிருந்தாள். பண்ணை விவகாரங்கள் இப்படித் தாறுமாறாக நடக்கும் சமயத்தில், கூட இருந்து கைகொடுத்து உதவி செய்ய சிவகுமாரனும் அருகில் இல்லையே என்று அவளுக்கு வருத்தம் தாளவே முடியவில்லை. என்ன செய்வது என்று விளங்காது தனது அறைக்கு முன்னாலிருந்த பெரிய ஹாலில் முன்னும் பின்னுமாக உலாவிக் கொண்டிருந்தாள்.

அந்தரங்கத் தோழியாக அமர்த்தப்பட்டிருந்த சுலோசனா, பண்ணை மாளிகையில் நடந்துகொண்டிருந்த விவகாரங்கள் அனைத்தையும் அப்போதைக்கப்போது தந்தியடிப்பதுபோல் தன் அன்பனுக்குக் கடித மூலம் எழுதி அனுப்பிக் கொண்டிருந்தாள். மாளிகையிலிருந்து கடிதங்களை ரங்கதுரைக்கு எடுத்துச் செல்லவும் அவனிடமிருந்து கடிதங்களை எடுத்துக்கொண்டு வருவதற்கும் வண்டியோட்டும் சங்கரன் உதவி புரிந்து கொண்டிருந்தான். மானேஜர் வேலையை விட்டு நீங்கிவிட்ட பிறகும், வண்டி ஓட்டிக்கொண்டு பண்ணையில் ஊழியம் புரிந்த சில வேலையாட்களில் அவன் ஒருவன்.

சமையல் ஆட்கள் திடீரென்று நின்று விட்டதனால் புதிய ஆட்கள் நியமிக்கப்படும் வரை, வீட்டிலிருந்த மற்ற ஆட்களைக் கொண்டு உமா சமையல் வேலையை சமாளித்துக் கொண்டு வந்திருந்தாள். புதிதாக அடுக்களைக்குள் புகுந்த இந்த வேலையாட்களுக்குச் சமையல்கலை என்ன என்பதைப் பற்றி எதுவுமே தெரியாதிருந்ததனால் அவர்களுடன் கூட

இருந்து உதவி செய்து ஆலோசனை கூறத் தன் அந்தரங்கத் தோழியான சுலோசனாவை நியமித்திருந்தாள். சுலோசனா தனது வீட்டிலேயே இந்தத் தொழிலை மிகவும் வெறுப்பாள். வந்த இடத்தினில் தனக்கு இப்படிப்பட்ட ஒரு வேலை வந்து லபித்தது கண்டு அவளுக்கு அடக்க முடியாத ஆத்திரம். மற்ற வேலையாட்கள்போல் திடீரென்று மூட்டையைக் கட்டிக் கொண்டு கிளம்பிவிட அவளும் தயார்தான். ஆனால் ரங்கதுரைக்குக் கொடுத்த வாக்கையும், தனது வருங் காலத்து சுபிட்சத்தையும் உத்தேசித்து அவள் பொறுமை யுடன் அங்கே உமாவின் கட்டளைப்படி நடக்க வேண்டி யிருந்தது.

மாடியறையைப் பெருக்கிச் சுத்தமாக்கிவிட்டு அன்று சுலோசனா கீழே வந்தாள். சமையற்கட்டில் பாத்திரம் துலக்கும் வேலைக்காரியும், துணி துவைக்கும் வேலைக்காரப்பெண்ணும் பகல் போஜனத்தைத் தயாரிப்பதில் முனைந்திருந்தார்கள். சாமான் அறையைத் திறந்து சமையலுக்கு வேண்டிய பொருள்களை எடுத்து அவர்களிடம் கொடுத்து விட்டுப் பின்பக்கம் தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு அவள் வரவிற்காக வண்டியோட்டி சங்கரன் காத்திருந்தான்.

சுற்று முற்றும் பார்த்துவிட்டு அவளிடம் ஒரு சிறு கடிதத்தைக் கொடுத்துவிட்டு, அவன் மின்னலைப்போல் மறைந்தோடி விட்டான். சில நாட்கள் செய்த வாசத்தின் பயனாக அவளுக்கும் பண்ணை மாளிகையின் மூலை முடுக்குகள் அனைத்தும் நன்றாகத் தெரிந்திருந்தது. தோட்டக்காரன், அவன் மனைவி இருவர் கண்களிலும் தென்படாது இருக்கத் தோட்டத்து மறுகோடியிலிருந்த பாழும் கிணற்றின் மேடையை நோக்கிச் சென்றாள். வெய்யில் தெரியாது செழிப்பாக வளர்ந்திருந்த பெரிய வேப்ப மரத்தின் அடியில் கிடந்த பாறாங்கல்லின் மீது வந்து அமர்ந்து கொண்டாள்.



ரங்கதுரை அனுப்பியிருந்த கடிதத்தை உடனே படிக்க வேண்டுமென்ற ஆவல்கூட அவளுக்கு இருக்கவில்லை. சற்றுத் தொலைவிலிருந்த மாட்டுக் கொட்டிலில் நின்று கொண்டிருந்த இளம் பசுவொன்றை வைத்த கண் வாங்காது வெறித்துப் பார்த்த வண்ணம் அவள் யோசனையில் ஆழ்ந்து போய்விட்டாள். தோட்டத்திற்குள் அங்குமிங்கும் துள்ளிக் கொண்டு ஓடிய பசுவின் கன்று ஒரே பாய்ச்சலில் தாய் அருகே ஓடிவந்து நின்றது. கழுத்தில் கட்டியிருந்த தும்பை அறுத்துக்கொண்டு புறப்பட்டு விடும்போல் உம் என்று பெருமூச்சு விட்டவண்ணம் தாய்ப்பசு ஆவலுடன் தன் நாக்கை நீட்டிக் கன்றை நக்கிக்கொடுக்க முன் வந்தது. இந்தக் காட்சியைக் கண்ட சுலோசனாவுக்கு தன் தாயின் நினைவு சட்டென ஏற்படவே, துக்கத்தினால் திணறியபடி அவள் தன் கண்களில் பொங்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

முதல் நாள் காலையில் ரங்கதுரை அனுப்பியிருந்த நீண்ட கடிதத்தைப் படித்ததிலிருந்து அவள் மனம் ஒரே குழப்பத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தது வாஸ்தவமே. பண்ணையார் மகள் என்று செல்வத்திலே திளைத்துக் கொண்டிருந்த உமா மீது அவளுக்கு ஒரு பொறாமை உணர்ச்சி நாளுக்கு நாள் தீபோல் வளர்ந்து கொண்டிருந்தது. ஆனால் ரங்கதுரையுடன் சேர்ந்து கொண்டு அவன் சொன்ன சூழ்ச்சிகளுக் கெல்லாம் தான் கைகொடுத்து உதவுவது தகாத செய்கையாகும் என்று அடிக்கடி அவளது மனச்சாட்சி உறுத்திக் கொண்டிருந்தது. இதன் இடையே தன் தாயைத் தவிக்க விட்டு வெளியேறிவிட்ட வஞ்சகச் செயலை நினைத்து நினைத்து அவள் உள்ளூர வேதனைப்பட்டுப் புழுங்கிக் கொண்டிருந்தாள்.

ஆய்ந்தோய்ந்து பாராது தானே வலியவந்து ஒருபெரும் சங்கடத்தில் சிக்கிக்கொண்டதை எண்ணி மன வேதனை

யுற்றவளாக அவள் மெல்ல அந்தக் கவரைத் திறந்து கடிதத்தை வாசிக்கலுற்றாள்.

"அன்புள்ள சுலோ! நேற்று நான் அனுப்பியிருந்த நீண்ட கடிதத்தைக் கவனமாகப் படித்திருப்பாய் என்று நினைக்கிறேன். சிவகுமாரன் பட்டணத்திலிருந்து நாலைந்து தினங்களில் திரும்பிவிடுவான் எனத் தெரிகிறது. அதற்குள் நான் எழுதியிருந்தபடி நீ நடந்துகொண்டு நமது காரியத்தை வெற்றிகரமாக முடித்து விடவேண்டும். இனி தாமதம் செய்வது தவறு. அதனால் கணமும் வீணாக்காது இன்றே நான் சொன்னபடி ஆரம்பித்து விடு. இந்தக் காரியம் கைகூடிய உடனே உன்னை மாளிகையினின்று அப்புறப்படுத்தி விடுவேன். அதற்குப் பின்னர் சில தினங்களில் நமது திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றுவிடும். நீ என்னைப் பூரணமாக நம்பி ஒத்துழைத்தால் நாம் இருவரும் சந்தோஷமாக வாழப் பல சௌகர்யங்கள் ஏற்படும்." மற்றவை பிறகு.

இப்படிக்கு அன்பன்

**ரங்கதுரை."**

கடிதத்தைப் பல முறைகள் படித்து விட்டுச் சுக்கல் சுக்கலாகக் கிழித்துப் பாழும் கிணற்றுக்குள் விசிறிப் போட்டாள் சுலோசனா. ரங்கதுரை, நாள்க்கு ஒரு உத்தரவு போட்டுத் தன்னை பொம்மையைப்போல் ஆட்டி வைப்பதை எண்ணி அவளுக்கு மிக்க ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது.

நீண்ட கடிதத்திலே அவன் எழுதியிருந்தபடி நடந்து கொள்வதை ஒருபுறம் அவள் மனச்சாட்சி உறுத்தியது; மற்றொரு புறம் அவளுக்கு மிகவும் அவமானமாகக் கூட இருந்தது. ஆனால், முடியாது என்று மறுத்துத்துணிவாகக் காதலனை எதிர்த்துக்கொண்டு அந்த மாளிகையை விட்டு வெளியே கிளம்பிவிட அவளுக்கு தைரியம் இருக்கவில்லை.



மெல்லவும் முடியாது, விழுங்கவும் முடியாது, சங்கடப்படுவது போல் தன் நிலையை பெரும் எக்கச்சக்கமாகி விட்டதை எண்ணி அவள் துக்கமும் கோபமும் தாளாது குமுறிக் கொண்டு இடத்தைவிட்டு எழுந்திருந்தாள். பங்களா தோட்டத்தின் மறுகோடியிலிருந்து வேலைக்காரப்பெண் தன் பெயரைச் சொல்லிக் கூவியழைப்பது கேட்கவே அவள் அலுப்புடன் போகத் திரும்பினாள்.

வேப்பமரத்து வேர் ஓரத்திலே குவிந்து கிடந்த குப்பை நடுவே ஒரு சிறு தகரப் பெட்டி துருவேறிக் கிடந்ததை அவள் கவனிக்கவேயில்லை. மாளிகைக்கு விரைந்து செல்லும் அவசரத்திலே கீழே பார்க்காது, காலை, அதன் மீது அழுத்தமாக வைத்துவிட்டாள். மறுகணம், "ஐயோ அப்பா!" என்று அலறிக்கொண்டு அவள் அப்படியே கீழே உட்கார வேண்டி வந்து விட்டது. ஒடிந்து கிடந்த தகரப் பெட்டியின் நுனி ஆழமாக உள்ளங்காலில் பதிந்து விட்டதனால் குபு குபுவென்று ரத்தம் வழியத் தொடங்கிவிட்டது. தகரம் குத்திய வேதனை தாள முடியாது சுலோசனாவுக்குக் கண்களில் நீர் பெருகிவிட்டது. இடுப்பிலிருந்த கைக்குட்டையைப் பரபரப்பாக இழுத்து, காலில் வழிந்த உதிரத்தைத் துடைத்துக் கொண்டு பலமாக ஒரு கட்டு போட்டுக் கொண்டாள். இதற்குள், "சுலோ! சுலோ!" என்று தன் பெயரைச் சொல்லி எஜமானி பின் கட்டிலிருந்து உரக்கக் கூப்பிடுவது கேட்கவே, அச்சமுற்றுச் சட்டென எழுந்து போவதற்குத் திரும்பினாள். ஒரு கணப்பொழுதிலே தனக்கு இத்தகைய ஒரு விபத்தை கொண்டுவந்து விட்ட அந்தத் தகரப்பெட்டி மீது அவளுக்குக் கோபம் தாள முடியவில்லை. ஆத்திரத்துடன் தன் காலடியில் கிடந்த அதை எட்டி அப்பால் விழும்படி உதைத்துத் தள்ளினாள். டங்கென்ற ஓசையுடன் அவள் அமர்ந்திருந்த பாறாங்கல்லின் மீது அந்தப்பெட்டி மோதிக்கொண்டு சற்றுத் தொலைவிலிருந்த மண்தரையில் போய் விழுந்தது. அதற்குள்ளிருந்து வெளியே விழுந்த, சூரிய

ஒளியில் பளபளவென்று மின்னிய வட்ட வடிவமான ஒரு பொருளைக் கண்டதும், சுலோசனாவுக்குத் திகைப்புத் தாள முடியவில்லை.

காலில் ஏற்பட்ட காயத்தின் வலியையும் எஜமானி அழைப்பதையும் மறந்து ஆவலுடன் முன்னால் ஓடி கீழே குனிந்து அந்தப் பொருளைக் கையில் எடுத்துப் பார்த்தாள். அதன்மேல் படிந்திருந்த மண்ணைத் தன் புடவைத் தலைப்பால் துடைத்துவிட்டு, ஆச்சரியத்துடன் பார்த்தாள். நெஞ்சும் இருதயமும் பயத்திலும், சந்தோஷத்திலும் படபடவென்று அடித்துக் கொண்டன. மிகவும் அபூர்வமான வேலைப்பாடுடன் அமைந்த விலையுயர்ந்த நீலக் கற்கள் பதித்த ஓர் அழகான வளையல் அது. நகை, புடவைகள் பற்றிச் சுலோசனாவுக்கு ஓரளவிற்கு மதிப்புப் போடத் தெரியும். அந்த வளையல் மிகவும் விலையுயர்ந்த ஓர் ஆபரணம் என்பதைக் கணப்பொழுதில் அவள் உணர்ந்து கொண்டு விட்டாள்.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ஆவலுடன் அந்த ஒடிந்த தகரப் பெட்டியை உள்ளே துழாவிப் பார்த்தாள். துருவேறி பழுப்பாகிக் கிழிந்து போன காகிதங்களைத் தவிர வேறு அதற்குள் எதையும் காணவில்லை. வேப்பமரத்தின் அடிப் பக்கத்தை நாலாபுறமும் மிகவும் கவனத்துடன் ஆராய்ந்து பார்த்தாள். இதைத் தவிர வேறொன்றும் காணப்படவில்லை.

தனது ஜோடியை இழந்து அனாதைபோல் ஒண்டியாகக் கிடந்த அதைக் காண அவளுக்கு--கொஞ்சம் வருத்தமாகவும் இருந்தது. அதனுடைய மறு ஜோடி வளையலும் சேர்ந்து கிடைத்திருந்தால் எத்தனை பெரிய பாக்கியமாக இருந்திருக்கும் என்று எண்ணிப் பெருமூச்செறிந்தாள்.

''சுலோ!''என்று எஜமானி உரத்துக் கூப்பிடும் குரல் அருகில் ஒலிக்கவே பரபரப்புடன் வளையலைச் சட்டென இடுப்பில் செருகி மறைத்துக் கொண்டாள். ''இதோ வந்து



விட்டேன் அம்மா!'' என்று குரல் கொடுத்துவிட்டுஒரு கால் காயத்தின் வேதனையைப் பொருட்படுத்தாது தத்திக் கொண்டு பங்களாவை நோக்கி ஓடினாள்.

அன்று இரவு முழுவதும் சுலோசனாவுக்குத் தூக்கமே வரவில்லை. சற்று அருகில் கட்டிலின் மீது சுகமாக நித்திரை செய்து கொண்டிருந்த எஜமானியின் முகத்தை அடிக்கொரு தடவை கூர்ந்து பார்த்த வண்ணமிருந்தாள். ''குப்பை மேட்டில் எதேச்சையாக இந்த ஆபரணத்தைக் கண்டு எடுத்தேன்'' என்று கூறி அந்த வளையலை அவளிடம் ஒப்படைத்துவிட்டு, உமாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி விட்டால் என்ன என்று ஒருபக்கம் அவள் மனம் அடித்துக் கொண்டது. ''சே!சே! கையில் கிடைத்த பெரும் அதிர்ஷ்டத்தை அனாவசியமாகப் போக்கிக் கொள்வானேன்? உமா மகேஸ்வரிக்கு என்ன குறைச்சல்! ஆசைதீர அணிவதற்கு விதவிதமான விலையுயர்ந்த ஆபரணங்கள் பெட்டி நிரம்பி இருக்கின்றன. அந்த ஒரு வளையலை சுலோசனா தன்னுடையதாக எடுத்துக்கொண்டால் என்ன குறைந்துவிடப்போகிறது?'' என்று இன்னொரு பக்கமும் மூளை விவாதித்துக் கொண்டிருந்தது. இந்தப் பிரச்னை நடுவே தூக்கம் வராது தத்தளித்துக்கொண்டு அவள் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். திடீரென்று விழித்துக் கொண்ட உமா மேஜையருகேயிருந்த படுக்கை விளக்கைப் போட்டாள்.

''சுலோ! நீ தூங்கவில்லையா? கால் காயம் மிகவும் வலி கொடுக்கிறதா?'' என்று அனுதாபத்துடன் கேட்ட வண்ணம் அருகே வந்தாள்.

''இல்லையம்மா, தூக்கம் வரவில்லை'' என்று மென்று விழுங்கிய சுலோசனா பயத்துடன் எழுந்து படுக்கையில் உட்கார்ந்து கொண்டாள்.

''என் இன்று முழுவதும் நீ ஒரு மாதிரியாக இருந்தாய்? உன் உடம்பிற்கு ஏதாவது உபாதையா? கால் காயத்தின் வலியா?

வேறு என்னத்தினால் நீ இப்படி இருக்கிறாய்? இரவு கூட நீ சரியாகச் சாப்பிடவில்லை'' என்ற அனுதாபத்துடன் விசாரித்துக் கொண்டு அருகில் வந்த உமா அவளது படுக்கைத் தலையணை மீது கையை வைத்தாள். அன்று பகல்தான் கண்டெடுத்த அந்த அழகிய ஆபரணத்தை ஒரு காகிதத்தில் சுற்றி பத்திரமாகத் தலையணை அடியில் சுலோசனா வைத்திருந்தாள். எஜமானி எங்கே தலையணையைப் புரட்டி அதைப் பார்த்து விடுவாளோ என்று அவள் மனம் பயத்திலே படீர் படீர் என்ற அடித்துக் கொள்ளத் தொடங்கியது. படுக்கையினின்று குபீரென்று எழுந்து உமாவின் பாதத்திலே விழுந்து, அவைகளைக் கெட்டியாகத் தன் கைகளால் பற்றிக் கொண்டாள்.

''அம்மா! என்னை மன்னித்தேன் என்று சொல்லுங்கள். இல்லாவிட்டால் என் மனம் ஆறுதல் அடையாது!'' என்று திணறிவிட்டு விக்கி விக்கி அழத் தொடங்கினாள்.

உறக்கத்தின் கலக்கத்தினின்று பூரணமாக விடுபடாத உமாவிற்கு ஒன்றுமே புரியவில்லை. கீழே குனிந்து சுலோசனாவை மிகவும் சிரமப்பட்டுத் தூக்கி நிறுத்தினாள். ''சுலோ! என்னம்மா? என்ன நடந்தது? ஏன் இப்படி வருந்துகிறாய்? ஏன் இந்தக் கண்ணீர்? உட்கார் ஆற அமரப் பேசுவோம்'' என்று மிகவும் அன்புடன் கூறி அவளை அருகிலிருந்த ஓர் ஆசனத்திற்கு அழைத்துச் சென்றாள்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்ட சுலோசனா திக்கலும் திணறலுமாகப் பேசலுற்றாள். ''அம்மா! உங்கள் உப்பைத் தின்று ஜீவிக்கும் நான் உங்களிடம் உண்மையைக் கூறாவிடில் பெரும் பாவியாகிவிடுவேன். வந்த நாளிலிருந்து நீங்கள் என்னிடம் காட்டும் அன்பைக் கண்டு நான் உண்மையைக் கூறாது மறைத்து வைப்பதை எண்ணி எண்ணி மனம் புழுங்கிப் போகிறேன். என்னை மன்னித்ததாக முதலில் சொல்லுங்கள், அம்மா! சொல்லுங்கள்'' என்று குலுங்கக் குலுங்க அழுதாள்.



என்ன கூறுவதற்கு இந்தக் கண்ணீரும் கம்பலையும் பூர்வ பீடிகைகளாகப் புறப்பட்டிருக்கின்றன என்பதைச் சிறிதும் ஊகிக்க முடியாத உமா, 'சுலோ! மன்னிப்பதாவது எதற்கு? நன்றாக விளக்கமாக சொல் அம்மா!'' என்று மிகவும் அன்புடன் வினவினாள்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தொண்டையை இருமி சரிப்படுத்திக் கொண்டு சுலோசனா எஜமானியை மிகவும் இரக்கமாகப் பார்த்தாள். ''எத்தனையோ முறைகள் என்னிடம் தாங்கள் அன்பாகப் பேசி என் வரலாற்றை அறிய முயற்சித்தீர்கள். நான் பிடிவாதமாகச் சொல்ல மறுத்து விட்டேன். அப்படிச் செய்தது தவறு என்று என் மனச்சாக்ஷி கூறுவதால் இப்போது சொல்லிவிடுகிறேன். அதைக் கேட்ட பின் எனக்குத் தாங்கள் உதவி செய்வீர்களா அம்மா!'' என்று திக்கினாள். உமா அந்தப் பெண்ணின் முதுகை அன்போடு தட்டிக்கொடுத்தாள். ''பயப்படாதே! நான் உனக்கு என்னால் ஆன உதவி செய்கிறேன்'' என்று தைரியம் சொன்னாள்.

எஜமானியை நன்றி விசுவாசத்தோடு உற்றுப் பார்த்து விட்டு சுலோசனா தலையைக் குனிந்து கொண்டாள் ''அம்மா, பிறப்பிலேயே நான் மிகவும் ஏழை. ஆனால் என் பெற்றோர் மானத்துக்கு அஞ்சி நடப்பவர்கள். நான் வீட்டிற்கு மூத்த பெண். என் நடத்தையால் என் தகப்பனார் மனம் ஒடிந்து போய் விட்டிருப்பார் என்பது திண்ணம். பட்டணத்திற்கு அருகே இருபது மைலுக்கப்பாலுள்ள சிறு கிராமத்தில் நாங்கள் வசித்துக் கொண்டிருந்தோம். அப்பா ஒரு சிறு சாப்பாடு ஹோட்டல் வைத்து நடத்திக் கொண்டிருந்தார்.

''பட்டணத்திலிருந்து கிராமத்துக்கு வருகிறவர்கள், போகிறவர்கள் அநேகர் எங்கள் ஹோட்டலில்தான் வந்து தங்குவது வழக்கம். அடிக்கடி பட்டணத்திற்குப் போக்கு வரத்தாக இருந்த ஒரு வாலிபர் எங்கள் ஓட்டலில் வந்து தங்கத்

தொடங்கினார். அப்பாவுக்கு கூடமாட சிலசமயம் நான் ஒட்டலில் உதவி செய்வது உண்டு. வயது வந்த பெண்ணை ஏன் அங்கே அழைத்து வேலை செய்யச் சொல்லுகிறீர்கள் என்று அம்மா கோபிப்பது வழக்கம். ஆனால், அப்பாவின் கண்களுக்கு நான் என்றும் பச்சைக் குழந்தையாக இருந்தேன். பட்டணத்திற்கு போக்குவரத்தாக இருந்த வாலிபருக்கும், எனக்கும் நாளா வட்டத்திலே நட்பு ஏற்படத் தொடங்கியது. சாதாரணமாகப் பேசிச் சிரித்துப் பழகத் தொடங்கிய நான் விரைவில் அவரது அழகிற்கும் பேச்சிற்கும் மயங்கி மனதைப் பறிகொடுத்து விட்டேன்.

''எங்களுக்குள் அடிக்கடி கள்ளச் சந்திப்பும், கடிதங்கள் பரிமாறிக் கொள்வதும் அதிகரிக்கத் தொடங்கின. என் தந்தைக்கும் தாய்க்கும் தெரியாது வீட்டை விட்டுப் புறப்பட்டுத் தம்மோடு வந்துவிட்டால் தாம் விவாகம் செய்து கொள்வதாக அவர் ஆசை காட்டினார். அவர் பேச்சைக் கேட்டு நம்பிக் கொண்டு நான் ஒரு நாள் இரவு அவருடன் புறப்பட்டு வீட்டை விட்டு ஓடிவந்து விட்டேன். ஒருமாதம், இரண்டு மாதம் என்று காலம் ஓடியதே ஒழிய அவர் கல்யாணம் என்ற பேச்சையே எடுக்காதிருந்து விட்டார். ஒரு நாள் மனம் பொறுக்காது எப்போது திருமணம் என்று அவரைக் கேட்டதற்கு அந்தக் கயவன் 'கல்யாணமா? உன்னையா? வேடிக்கைதான் போ' என்று ஏளனமாகப் பேசி என்னை அவமானப்படுத்தவும் செய்தான். இந்நிலையில்தான் என்ன செய்வது என்று தத்தளித்துக் கொண்டிருந்த சமயம் தாங்கள் எனக்கு அடைக்கலம் அளித்தீர்கள். தங்களால் ஆக முடியாத காரியம் எதுவும் இல்லை. தங்களுக்கு அந்தஸ்து இருக்கிறது. தாங்கள் மனம் வைத்தால் என்னை வஞ்சித்த அந்தப் பாவியை மிரட்டி உருட்டி என்னைத் திருமணம் செய்துகொள்ளச் செய்து என் வாழ்க்கையைச் சீர்திருத்த முடியும். அம்மா, உங்களை நான் மிகவும் கெஞ்சிக் கேட்கிறேன். என் வாழ்விலே ஒரு விளக்கை ஏற்றி வையுங்கள். அம்மா!'' என்று படபடவென்று கூறிவிட்டு விக்கி விக்கி அழுதாள்.



பச்சாதாபமுற்ற உமா, ''உன்னை வஞ்சித்த அதர்மன் பெயர், ஊர் எல்லாவற்றையும் விவரமாகச் சொல். நான் என்னால் ஆன உதவியைச் சத்தியமாகச் செய்கிறேன்'' என்றாள்.

மிகவும் சங்கோஜத்துடன், ''இங்கே என்னைக் கொண்டு வந்து விட்டுப் போயிருக்கும் அந்தப் பாவி சிவகுமாரன்தான், அம்மா, என்னை வஞ்சித்தவன்!'' என்றாள்.

தன் முகத்திலே நெருப்பை வாரி யாரோ வீசிவிட்டதைப் போன்ற ஒரு பயங்கர உணர்ச்சி உமாவுக்கு ஏற்படவே அவள் திடுக்கிட்டுப்போய் எழுந்து நின்றாள்.

## 24

**சி**வகுமார் எத்தனையோ முறை தன் சொந்த அலுவல்கள் காரணமாகவும், ஆசிரமத்தின் சார்பாகவும் அழகர்நத்தத்தை விட்டு நகரத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. ஆனால் ஒரு முறையும் அவன் இவ்வளவு ஆத்திரத்துடன் பொறுமை யற்றவனாக அவசரமாகக் கரியங்களை முடித்துக் கொண்டு கிராமத்திற்கு வர முயற்சி செய்ததில்லை. குலசேகரன் பேட்டையில் ரயில் வண்டியை விட்டு இறங்கியதுமே, ஒரே கணப்பொழுதில் அழகர்நத்தத்திற்கு இறக்கை கொண்டு பறந்து வந்துவிட வேண்டும்போல் அவனது உள்ளம் தவியாய்த் தவித்தது. ஆசிரமத்திலிருந்து தயாராக வந்து காத்திருந்த மாட்டு வண்டியில் பாய்ந்து ஏறிக்கொண்டான். வண்டி ஏனோ அன்று மெதுவாக ஊர்ந்து செல்வது போல் அவனுக்குப் பிரமையாக இருந்தது! பண்ணையார் மாளிகையினின்று ஒவ்வொரு

கணமும் அவனது உள்ளத்தைக் காந்தத்தைப்போல் கவர்ந்து தன்பால் இழுத்துக்கொண்டிருந்த உமாமகேஸ்வரியின் அன்பு, நேரத்தை யுகமாகத் தோன்றச் செய்ததில் வியப்பில்லை.

சிவகுமார் வீட்டை அடைந்தபொழுது காலை வேளை மாறி நடுப்பகலாகி விட்டிருந்தது. அவன் வருகையை முன்கூட்டியே அறிந்திருந்த வேலைக்கார ஸ்திரீ அவனுக்கு ஸ்நானத்திற்கு வெந்நீர் எடுத்துச் சித்தமாக வைத்திருந்தாள். பட்டணத்திலே பத்து தினங்கள், கண்ட ஹோட்டல்களில் உணவருந்தி நாக்கு மரத்து வந்திருப்பான் என்று, மிகவும் கனிவுடன் அந்த மூதாட்டி அவனுக்குப் பிடித்தமான போஜன வகைகளைத் தயார் செய்து வைத்திருந்தாள்.

சிவகுமார் அவசரமாக ஸ்நானத்தை முடித்துக் கொண்டு, போஜனத்தை விரைவாகச் சாப்பிட்டு முடித்து, பட்டணத் திலிருந்து தான் கொண்டு வந்த பெட்டியை எடுத்து கூடத்தின் மத்தியில் வைத்துக்கொண்டு, மெல்லத் திறந்தான். இதுநாள்வரை பட்டணத்துக் கடைத் தெருக்களில் அவன் சுற்றியலைந்த போதெல்லாம் எவ்விதமான சாமான்களையும் தன் வீட்டிற்கு வாங்கிவர வேண்டும் என்று ஆவல் கொண்டதே கிடையாது. ஆனால், இந்த முறை அவன் நகரத்தில் பிரபலமான தெரு ஒன்றில் வந்துகொண்டிருந்த போது ஒரு கடையின் முன் பக்கத்திலே தொங்க விடப்பட்டிருந்த ஓர் அழகிய படத்தைக் கண்டு வியப்புற்று உள்ளே நுழைந்தான்.

வடநாட்டு சைத்ரிகர் ஒருவரால் தீட்டப்பட்ட ஓவியம் அது. தாமரை மலர்கள் நிரம்பிய தடாகத்தின் ஓரத்திலே புல் தரை மீது, சிந்தனையே உருவாக அமர்ந்திருந்தாள் ஓர் அழகிய இளம் பெண். வலது கையில் அவள் ஒரு தாமரை மலரைக் கொய்து நாசியருகில் முகர்ந்தபடி வீற்றிருந்தாள். அவளது இடது கரம் தண்ணீர் எடுக்க சுமந்து வந்த குடத்தின் கழுத்தைத் தழுவிய நிலையில் இருந்தது.



துன்பம் அல்லது இன்பம் என்று விவரிக்க முடியாத ஒரு முகபாவம் அந்தச் சித்திரத்தின் அழகை மிகைப்படுத்திக் கொண்டிருந்தது. கடைக்காரன் கூறிய விலையைப்பற்றி பேரம் செய்யாது சிவகுமார் அதை வாங்கினான். பட்டணத்திலிருந்து திரும்பி வந்ததும் பண்ணையார் புத்திரிக்கு அதைப் பரிசாக எடுத்துச் செல்ல அவன் உள்ளம் மிகவும் விரும்பியது. நண்பன் என்ற ஹோதாவில் சித்திரம், புத்தகங்கள் போன்றவைகளைப் பரிசாக அளிப்பதில் தவறில்லை என்று அவன் மனம் சமாதானமடைந்திருந்ததனால் வழி நெடுகிலும் உமா படத்தைக் கையில் வாங்கியதும் என்னவிதமாக விமரிசனம் செய்வாள் என்ற கற்பனையிலேயே பொழுதைப் போக்கிவிட்டிருந்தான்.

பெட்டியைத் திறந்து மிகவும் பத்திரமாகக் கடிதத்தில் சுற்றியிருந்த அந்தச் சித்திரத்தை வெளியே எடுத்து, மீண்டும் ஒருமுறை அழகு பார்த்தான். பலவித படங்களின் மத்தியிலே மாட்டப்பட்டிருக்கும் சமயம் அந்தச் சித்திரத்தின் பூரண அழகு அவ்வளவு தெளிவாக அப்போது தெரியவில்லை. தன்னந் தனியாக வெள்ளைச் சுவர் அருகே கொண்டு வைத்து, தூர நின்று ஊன்றிப் பார்த்த பொழுது அந்த அழகிய ஓவியத்தின் பற்பல புதிய கருத்துக்கள் புலனாகின.

'பகல் பொழுது பண்ணையார் மகள் போஜனம் அருந்தி விட்டுக் கொஞ்சம் களைப்பாறத் தன் அறைக்குச் சென்றிருப்பாள். அது சமயம் போய், தான் வந்திருப்பதாகக் கூறி அவளைத் தொந்தரவு செய்வது தகாது' என்று எண்ணிய சிவகுமார் தன் உள்ளத்து ஆவலைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு மாலை வரை காத்திருக்க எண்ணி, படத்தை எடுத்து பத்திரமாகக் காகிதத்தில் சுற்றி மேஜைமீது தயாராக எடுத்துப் போக வைத்தான்.

பெட்டியை மூடிவிட்டுச் சாய்வு நாற்காலியில் ஓய்வாக வந்து அமர்ந்து கொண்டான். கூடத்துச் சுவரில் மாட்டியிருந்த

கடிகாரம் டிக் டிக் என்ற ஓசையுடன் மெல்ல நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தது. முற்றத்திலே காய்ந்து கொண்டிருந்த வெய்யில், பகல் பொழுது இன்னும் வெகுநேரம் வரை நீண்டு போகும் என்பதை உணர்த்தவே, அலுப்புடன் கண்களை மூடிக்கொண்டு உறங்க முயற்சித்தான். அலையெனச் சரிந்த கூந்தலும், முத்துக்களைப் போன்ற பல்வரிசையும், தந்தத்தை நிகர்த்த அழகு மேனியும் கொண்ட பண்ணையாரின் செல்வப்புத்திரி அவனது கண்களை உறக்கத்தில் ஆழ்த்த விடவில்லை. களுக்கென்று சிரித்தபடி உமா கன்னங்குழிய அவனது கற்பனையில் தோன்றித் தோன்றி மறைந்தவண்ணம் இருந்தாள்.

படபடவென்று யாரோ வாயிற் கதவைத் தட்டும் ஓசை கேட்டுத் திடுக்கிட்டு, தன் கனவினின்று விழித்துக் கொண்டான் சிவகுமார். முகத்தின் மீது வழிந்து ஓடிய வியர்வையைத் துண்டால் துடைத்துக்கொண்டு எழுந்திருந் தான். அதற்குள் அடுப்பருகில் வேலையாக இருந்த வேலைக்கார ஸ்திரீ விரைவாகச் சென்று கதவைத் திறந்து விட்டாள். பலமாகப் பாதரக்ஷை ஓசை செய்ய பம்மென்று தலைக்கு மேல் படர்ந்து நின்ற கிராப்புச் சிகையை இடது கரத்தால் தடவி சரிப்படுத்திக் கொண்டு உள்ளே வந்த ஆசாமியை சிவகுமாரன் அதுவரை பார்த்ததேயில்லை. ரேழி நடையிலேயே செருப்புக்களைக் கழற்றி வைத்துவிட்டு, சரிகை அங்கவஸ்திரத்தை உதறித் தோள் மேல் போட்டுக்கொண்டு வெற்றிலைக் காவி படிந்த முப்பத்திரண்டு பற்களும் தெரிய நகை செய்தவண்ணம் வந்த ஆசாமி தன் இரு கரங்களையும் தூக்கி, ''நமஸ்காரம்! தாங்கள்தானே கரும்பு ஆலை முதலாளி திரு. சிவகுமாரன் அவர்கள்?'' என்று வினவினான்.

'ஆமாம்' என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்த சிவகுமார் அருகில் கிடந்த சிறு முக்காலி ஒன்றை எடுத்துக்



கூடத்தில் சுவரோரமாகப் போட்டான். ''ஆமாம் இப்படி உட்காருங்கள். தாங்கள் யார் என்று கூறினால் சௌகரியமாக இருக்கும்'' என்று வினயமாகச் சொல்லிவிட்டு, தனது சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். வேகமாகத் தாண்டிக் குதித்தபடி நடந்து வந்த அந்த மனிதன் முக்காலி மீது அமர்ந்துகொண்டு சுவரின்மேல் நிம்மதியாகச் சாய்ந்து கொண்டான். ''என்ன வெய்யில்! என்ன அலைச்சல்!'' என்று தனக்குள்ளே பேசிவிட்டு, சிவகுமாரனைப் பார்த்து முன்பின் மிகவும் பழக்கமான நண்பனைப் போல் வாய்விட்டுச் சிரித்தான்.

''தாங்கள் யாரென்று இன்னமும் சொல்லவில்லையே?'' என்று சிவகுமாரன் அவனுக்கு மறுபடியும் ஞாபகப்படுத்தினான்.

பதிலுக்கு பகபகவென்று கோரமாகச் சிரித்துவிட்டு அந்த மனிதன் தன் கிராப்புத் தலையைப் பலமாகக் குலுக்கிக் கொண்டு ''ஒரு வகையில் உங்களுக்கு மிகவும் நெருங்கிய உறவினன் என்று என்னை அறிமுகப்படுத்திக் கொள்ளலாம். பத்துத் தினங்களுக்குமேல் பட்டணத்தில் தங்கிவிட்டீர்கள் என்று கேள்விப்பட்டேன். இந்த வீட்டைத் தேடி நடையாக நடந்து என் கால்கள் கூட ஓய்ந்து விட்டன. உங்களைப்போல படிச்சவங்க எல்லோரும் இது மாதிரி காரியம் செய்ய வேண்டியதில்லை. நேரே 'ரைட்டாய' லாக வந்து அண்ணியிடம் கேட்டிருந்தால் உடனே சம்மதம் கொடுத்திருப்பாங்க'' என்றான், கேலி மிகுந்த உற்சாகமான குரலில்.

அவன் பேசுவது என்னவென்றே புரியாததனால் சிவகுமாரன் திகைப்படைந்து போய்விட்டான். ''தாங்கள் யார் என்று இன்னமும் விளங்கவில்லை. தாங்கள் கூறுவதும் ஒன்றும் விளங்கவில்லை!'' என்றான் ஆச்சர்யத்துடன்.

''ஏன் தம்பி, உங்களுக்கு விளங்கும்? நீங்கதான் தற்சமயம் தலைசுற்றும் அந்த போதை உலகத்திலே இருக்கிறீங்க.

அதனாலே இந்த உலகத்து விவகாரம் ஏதும் புரியாதுதான். என் பெயர் துரைசாமி. இந்த கிராமத்துக்குப் பக்கத்து நகரத்திலே நான் இருக்கிறேன். சுலோசனாவுடைய அம்மா ஒரு வழியிலே எனக்குத் தூர பந்துவாக வேணும்'' என்று கூறிவிட்டு, பற்களைக் காட்டினான், துப்பறியும் துரைசாமி.

மோகனாம்பாள் மகளைச் சடுதியிலே கண்டு பிடித்துக் கொண்டு வந்து வீட்டில் சேர்ப்பதாகக் கூறி அவளிடம் பணம் பெற்றுக்கொண்டு அன்று புறப்பட்டவன் இரண்டு மாதங்களை வீணே கழித்துவிட்டு, அவளுக்கு என்ன பதில் கூறுவதென்று கலங்கிக் கொண்டிருந்தான். இது சமயம் ஏதேச்சையாகப் பண்ணை மானேஜர் மகன் ரங்கதுரையை சந்திக்க நேரிட்டது. அவன் மூலமாக சுலோசனா தங்கியிருக்கும் இடம் தெரிய வந்தது. மானேஜர் மகனுக்குத் தெரியாது ஒளித்து வைக்க விரும்பிய அந்த விஷயம், அவனுக்கு முதலில் தெரிந் திருந்ததைக் காண துரைசாமிக்கு மெத்த வியப்புத்தான். இருந்தபோதிலும் மோகனாம்பாளுக்கு வாக்குக் கொடுத்தபடி பெண்ணைக் கண்டுபிடித்து மிரட்டி உருட்டி அழைத்துச் சென்று தாய் வசம் ஒப்படைத்துவிட்டுத் தனக்குச் சேர வேண்டிய பாக்கியை வாங்கிவிட வேண்டும் என்று பணத்திலே குறியாக இருந்தது அவன் மனம்.

ரங்கதுரை வலியக் கூறிய துப்பைத் தனக்கு உபயோகித்துக் கொள்ள அவன் சிறிதும் தயங்கவில்லை. அவசர அவசரமாக, சிவகுமாரன் வீட்டைத் தேடிக் கொண்டு ஓடி வந்தபொழுது அவன் பட்டணம் சென்றிருப்பதை அறிந்து ஏமாற்றம் அடைந்தான். இருந்த போதிலும் முயற்சியைக் கைவிட மனமின்றி பொறுமையுடன் பத்து தினங்கள் அழகர்நத்தம் கிராமத்தைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டு, ஊரில் அகப்பட்ட வம்பு தும்புகளைச் சேகரித்தபடி பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தான். அன்று காலை வண்டியில் கரும்பு ஆலை



முதலாளி ஊருக்குத் திரும்புகிறார் என்றதைக் கேள்விப் பட்டதும், தாமதம் செய்யாது உடனே அவனைக் காணப் புறப்பட்டு வந்துவிட்டான்.

கொஞ்சமும் மரியாதையின்றி அட்டகாசமாகச் சிரித்தபடி கூடகமாகப் பேசிக்கொண்டு தன் பொழுதை அவன் விரயம் செய்வதைக் காணச் சிவகுமாரனுக்குப் பொறுக்க முடியவில்லை. ''சுலோசனா என்ற பெண்ணுக்குத் தாங்கள் உறவினர் என்பதை அறிய சந்தோஷம். தங்களுக்கு நான் செய்யக்கூடியது என்னவென்பதைத் தெளிவாகச் சொன்னால் உபகாரமாக இருக்கும்'' என்று சற்றுக் கடுமையாக அதட்டிக் கேட்டான்.

துரைசாமி அவனது கோபத்தை லக்ஷ்யம் செய்யவில்லை. தனக்கே உரித்தான பசப்புச் சிரிப்புடன் பேசினான் ''தம்பி! இத்தனை கோபம் ஏன்? மைனர் பெண் அது. அம்மாவுக்குத் தெரியாமல் அதைக் கடத்திக் கொண்டு வந்துவிட்டீங்க. அவங்க கோபத்திலே உங்க மேலே கோர்ட்டிலே வழக்குத் தொடரப் போவதாக ஒரே ஆர்ப்பாட்டம் பண்ணிக் கிட்டிருக்காங்க. கேஸ் போட்டாக்க உங்க கதி என்னவாகும்னு நான் சொல்லித் தெரியவேண்டாம். ஆனால் உலகத்திலே நடக்காத செய்தி இல்லை இது. இதை எத்தனையோ கௌரவமாக நீங்க செய்திருக்கலாம். சுலோ மேலே உங்க மனது லயிச்சுப் போயிருந்தா அம்மாகிட்டச் சொல்லி நேரேயே கட்டிக்கொள்ள ஏற்பாடு செய்து கொண்டிருக்கலாம்.

''மோகனாம்பாள் அம்மாள் ஒரு காலத்தில் நாடகம் ஆடி பிழைச்சாங்க என்றாலும், ரொம்ப கௌரவமான குடும்பத்து மனுஷி. கண்ணின் கருமணிபோல் அந்தப் பெண்ணை வளர்த்தாங்க. நம்ம பண்ணை மானேஜர் மகன் ரங்கதுரைக்கு அதைக் கட்டிக் கொடுப்பதாக ஏற்பாடு ஆகியிருந்தது. மானேஜர்

மகனுக்கு நீங்க எந்தவிதத்திலும் தாழ்ந்தவர் இல்லை. ஆனால், இப்படித் தாறுமாறாக நீங்க நடந்து கொண்டிருக்க வேண்டாம். சுலோசனாவுக்கும், உங்களுக்கும் எப்படி சிநேகிதம் ஆரம்பிச்சுது. அந்தப் பெண் உங்களை நம்பி எப்படி வீட்டை விட்டுப் புறப்பட்டு ஓடிவரத் துணிஞ்சது என்கிறதுதான் இன்னமும் எனக்கும், மோகனாம்பாளுக்கும் புரியவில்லை. அத்தனைக் கட்டுக் காவலில் அந்தப் பெண்ணை வச்சு வளர்த்தாங்க எங்க அண்ணியார். ஆனால், காதல் என்கிறது ஏற்பட்டதுன்னா கட்டாவது, காவலாவது? எல்லாம் எகிறிப் போய் விடுகிறது. இல்லையா?'' என்று கேட்டுவிட்டு உரக்கச் சிரித்தான்.

சிவகுமாரன் முகம் கோபத்தில் ரத்தமாகச் சிவந்து போய்விட்டது. ''ஐயா! நிறுத்தய்யா உன் அபத்தமான பேச்சை! சுலோசனா என்ற ஒரு சிறுபெண் எங்கள் ஆசிரமத்தில் வந்து அடைக்கலம் புகுந்தது உண்மை. அந்தப் பெண்ணுக்கும் நீங்கள் உறவினர் என்பதை முதலில் நிரூபிக்க வேண்டும். நீங்கள் சொல்கிற கதைக்கும் அந்தப் பெண் கூறுகிற விருத்தாந்தத்திற்கும் கொஞ்சமும் பொருத்தமே இல்லை. அந்தப் பெண்ணின் தாயார் அல்லது தந்தை தானே பெண்ணை அழைத்துப் போக வலிய வந்தால், தீர விசாரித்து பெண்ணை அவர்களிடம் ஒப்படைப்பதில் எங்களுக்கு எந்தவிதமான ஆக்ஷேபணையும் இல்லை!'' என்றான் கோபத்துடன்.

துரைசாமி இதைக் கேட்டு லேசாகச் சிரித்தான். ''என்ன தம்பி, எங்க அண்ணியார் ஆடின நாடகங்களுக்கு மேலே பலே நாடகம் போடுகிறீங்க! இப்ப நான் இங்கே எதற்காக வந்தேன்னு வெட்ட வெளிச்சமாகச் சொல்லி விடுகிறேன். சுலோசனாவை முதலிலே அவ தாய்க்கிட்டே ஒப்படைக்கணும், ஊரார் அறிந்து கைகொட்டிச் சிரிக்காமல் காதுங் காதும் வச்சாப்பல இதைச் செய்யணும். அதற்காகத்தான் அண்ணி என்னை அனுப்பி



யிருக்காங்க. பெண்ணை ஒப்படைச்சதோட உங்க பொறுப்பு விட்டு விட்டுதுன்னு நினைக்க வேணாம். வேறு ஒருத்தருக்கு நிச்சயம் செய்த பொண்ணு அது. இப்படி நடந்து விட்டதனாலே அதை அந்த மனுஷன் இனிமேலே கட்டிக்கொள்ள விரும்ப மாட்டான். ஒரு பொண்ணு வாழ்க்கையை அவசரப்பட்டுப் பாழாக்கி விட்டீங்க. ஆனாலும் பாதமில்லை. ரங்கதுரைக்குச் கட்டிக்கொடுக்கத் தீர்மானித் திருந்த அந்த முகூர்த்தத்திலேயே நீங்க சுலோசனாவைக் கட்டிக் கொண்டு விட்டால் சரியாப் போயிடும். இது விஷயமாக அவங்க அம்மாவுக்கும், எனக்கும் தேடாத இடமெல்லாம் தேடியதிலே கொஞ்சம் பணச்செலவு ஏற்பட்டிருக்கிறது. அதை நீங்கதான் கொடுத்துச் சரிப்படுத்த வேணும்.

''இந்த மூன்று விஷயங்களுக்கும் நீங்க சரின்னு ஒத்துக்கொண்டால் இது வெளியே பரவாதபடி அப்படியே நான் அமுக்கிவச்சுவிடறேன். இல்லாவிட்டால் என்ன நடக்கும்னு நான் சொல்ல வேண்டியதில்லை. மைனர் பெண்ணைக் கடத்திச் சென்றீங்கன்னு கோர்ட்டிலே கேஸ் 'பை'லாகி விட்டால் என்ன நடக்கும்ங்கிறது உங்களுக்குத் தெரியாதா?'' என்று மூச்சுவிடாது பேசினான்.

ஆசிரமத்திலே அடைக்கலம் புகுந்து வந்து குடியேறிய பெண்களைத் தேடிக்கொண்டு வரும் உறவினர்கள் கூறும் பலவிதமான விசித்திரக் கதைகள் சிவகுமாரனுக்கும் புதியவை அல்ல. ஆனால் இதுவரை இப்படிப்பட்ட அபாண்டமானதொரு கற்பனையுடன் அவனை யாரும் அணுகியது இல்லை. எனவே, அவனால் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ''என்னய்யா உளறுகிறீர்கள்? இதெல்லாம் என்ன கற்பனை? சுலோசனாவை நான் கடத்திக்கொண்டு வந்தேன் என்பது எல்லாம் யாருடைய அபாரக் கட்டுக் கதை? கோர்ட்டு போலீசு என்றெல்லாம் பயமுறுத்த வேண்டாம். உம்மால் ஆனதைப்

பார்க்கலாம். போதும், வெட்டிப் பேச்சிலே என் பொழுதை வீணாக்க வேண்டாம்! தயவு செய்து என் கோபம் முற்றும் முன் எழுந்து போய் விடுங்கள்'' என்றான் மிகவும் கடினமான குரலில்.

வாட்டசாட்டமாக தன் எதிரே அமர்ந்திருந்த அந்த மனிதன் கோபத்தில் கையை ஓங்கி எங்கேயாவது அடித்து விடப் போகிறான் என்று துரைசாமிக்குத் திடீரென்று பயம் ஏற்பட்டுவிட்டது. அவனது மிரட்டலும் உருட்டலும் வாய்ப் பேச்சுடன் சரி. இது மாதிரி விவகாரங்களால் விஷயம் முற்றிக் கைச் சண்டையாகிவிடும்போல தோன்றினால் அவன் எப்பொழுதும் தன் நடையைக் கட்டிக்கொண்டு கிளம்பிவிடுவது வழக்கம். எனவே, சிவகுமாரனது கோபம் அவனது நெஞ்சைப் படபடவென்று அடித்துக்கொள்ளச் செய்தது. உடல் முழுவதும் குப்பென்று வியர்த்துவிட்டது. கடைசியாக எஞ்சியிருந்த துணிச்சலை முழுவதும் வரவழைத்துக்கொண்டு, ''என்னவோ தம்பி நல்லதனமாகச் சொல்கிறேன். பதட்டப்படாது சொன்னதைக் கேட்டால் இரண்டு பேருக்கும் லாபம்'' என்றான்.

''ஐயா வெளியில் எழுந்து போகிறீர்களா? இல்லாவிட்டால்...'' எனறு கூவிய சிவகுமார், துள்ளிக் குதித்தபடி தன் ஆசனத்தினின்று கையை ஓங்கிக்கொண்டு எழுந்தான்.

உடலும் உள்ளமும் கிடுகிடுவென்று நடுங்க துரைசாமி ஒரே பாய்ச்சலில், குபீரென்று முக்காலியினின்று தாவி ரேழியருகில் குதித்தோடி செருப்புக்களைக் காலில் விரைவாக மாட்டிக்கொண்டான். ''அடித்துவிடுவேன் என்று மிரட்டுகிறீங்க. உடம்பிலே வலுவு இருக்கிற கர்வம் அப்படி செய்யச் சொல்கிறது. இருக்கட்டும், கோர்ட்டில் பேசிக்கொள்வோம்!'' என்று திணறிக்கொண்டு சவால் விடுத்து விட்டு கதவைத் திறந்துகொண்டு பாய்ந்து வெளியேறிச் சென்றான். குறுக்குப் பாதையைக் கடந்து பாட்டையில் வெகுதூரம் வந்த பின்னரும்,



பின்னால் சிவகுமாரன் துரத்தி வந்து எங்கே அடித்து நொறுக்கி விடுவானோ என்ற பயம் அவனை விட்டபாடில்லை. மேலே என்ன செய்தால் இந்த முயற்சியில் வெற்றிபெற முடியும் என்று சிந்தித்தவண்ணம் அவன் நடந்து கொண்டிருந்தான்.

தனக்குள் ஏற்பட்ட இந்தப் புதிய அனுபவத்திற்குப் பின்னர் சிவகுமாரனுக்கு வீட்டில் தங்கியிருக்க விருப்பமிருக்கவேயில்லை. மாலைவரை காத்திருக்கப் பொறுமையின்றி அவன் உடனே நன்றாக உடுத்திக்கொண்டு உமாவைக் கண்டு இது விஷயமாகப் பேசக் கிளம்பினான். வழக்கம் போல் தனது மோட்டார் சைக்கிளை வாயில் பந்தல் அருகே நிறுத்திவிட்டு, உள்ளே சென்றான். தான் வந்திருப்பதை வேலையாளிடம் கூறிவிட்டு விச்ராந்தியாக மாளிகையின் முன்கட்டிலிருந்த பெரிய ஆசனமொன்றில் சாய்ந்துகொண்டு அமர்ந்தான்.

சொல்லியனுப்பி அரைமணிக்கு மேலாகியும் பண்ணையார் புத்திரியை அங்கே காணவில்லை. ஒரு சமயம் தூங்கிக் கொண்டிருக்கிறாளோ என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக்கொண்டு மேஜை மீது கிடந்த பத்திரிகை ஒன்றைப் படிப்பதில் ஈடுபட்டான். அவன் அங்கே வந்து காத்திருக்கத் தொடங்கி சுமார் ஒரு மணி நேரம் சென்ற பின்னர் மாடிப்படிகள் மீது யாரோ மெல்ல நடந்துவரும் ஓசை கேட்டது.

உமா எதிரில் வந்ததும், சில நாட்களாகப் பிரிந்திருந்த பின்னர் சந்திக்க வந்திருக்கும் ஆவலில் மிகவும் உற்சாகத்துடன் கையில் பிடித்திருந்த பத்திரிகையைக் கீழே வைத்துவிட்டு, கைகளைத் தூக்கி வணங்கியபடி எழுந்து நின்றான் சிவகுமார். பலநாட்கள் உறக்கம் இல்லாதவள் போல் வெளிறடைந்த முகமும், துயரம் நிறைந்த கண்களுமாகக் காணப்பட்ட உமாவைக் கண்டதும் அவன் அப்படியே திடுக்கிட்டுப் போய்விட்டான்.

''தங்கள் உடம்பிற்கு அசௌகர்யம் ஏற்பட்டிருந்ததா என்ன? எப்படியோ இருக்கிறீர்களே?'' என்று ஆச்சர்யமும் கவலையும் ஒருங்கே எய்தி மிகவும் அக்கறையாக விசாரித்தான்.

பதிலுக்கு உமா சூள் கொட்டினாள் ''ஒன்றுமில்லை நன்றாகத்தான் இருக்கிறேன்'' என்று மிகவும் வரட்சியாகப் பதில் அளித்துவிட்டு, எதிரே கிடந்த ஆசனம் ஒன்றில் வேண்டா வெறுப்பாக அமர்ந்துகொண்டாள்.

அவளுடைய முகபாவம், பேச்சு எல்லாமே திடீரென்று மிகவும் புதுமையாக இருப்பதைக் காண சிவகுமாரனுக்கு பிரமிப்பாகிவிட்டது. ''பண்ணையில் நடந்த குழப்பங்கள் அனைத்தும்பற்றி அறிந்தேன். திடீரென்று மானேஜர் வேலையைவிட்டு விலகி உங்களை மிகவும் சங்கடத்தில் ஆழ்த்திவிட்டதை அறிந்து மெத்த வருந்துகிறேன். நானும் அருகில் இருந்து உதவி செய்ய முடியாது போய்விட்டதே என்று எண்ணி மிகமிக வருந்துகிறேன்'' என்றான்.

உமா அதற்கு நேரடியாகப் பதில் கூறவில்லை. அவன் முகத்தைக் கூட ஏறெடுத்துப் பார்க்க அவள் விரும்பவில்லை. ஒன்றுமே தெரியாதவர் போல் எத்தனை பகட்டாகப் பேசுகிறார் இந்த மனுஷர்? என்று தனக்குள் எண்ணி ஆத்திரமடைந்தாள். தன் அன்பையெல்லாம் கொள்ளை கொண்டுவிட்டு, மிகவும் துரோகமான இழிச்செயலைப் புரிந்து விட்டிருக்கும் அந்த மனிதனைப் பார்த்துப் பேசுவது கூட பாவம் என்று எண்ணி அவள் மனம் வெகுண்டது. ''என்னைப்பற்றித் தாங்கள் எப்பொழுதும் கவலைப்பட்டுக் கொண்டிருக்க முடியுமா? உங்களுக்குச் சொந்த அலுவல்கள் தலைக்குமேல் கிடக்கின்றனவே?'' என்று மிகவும் ஏளனமான குரலில் கூறிவிட்டு, முகத்தை மறுபடியும் திருப்பிக்கொண்டாள். அவன்



மனத்தை நன்றாகக் குத்தும்படி பேசிவிட்ட திருப்தியில் அவள் நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொண்டது.

திடுக்கிட்டுப் போனசிவகுமார் அவளை நிமிர்ந்து நன்றாக உற்றுப் பார்த்தான். சிவந்த அவளுடைய முகமும் வேகமாக வெளி வந்த மூச்சும் அவள் மிகவும் கோபமடைந்திருப்பதை உணர்த்தின. அதன் காரணம் அவனுக்குக் கொஞ்சமும் விளங்கவில்லை.

கையில் கொண்டு வந்திருந்த படத்தை மேஜை மீது வைத்துவிட்டு ''தங்களுக்கு ஒரு சிறு பரிசு கொண்டு வந்திருக்கிறேன். ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்றான்.

உமா வெடுக்கென்று அவன் பக்கம் திரும்பினாள். ''மிஸ்டர் சிவகுமார், மெத்த வந்தனம்! ஆனால், தங்களது பரிசை நான் ஏற்க முடியாத நிலையில் இருக்கிறேன். தயவு செய்து அதைத் தாங்களே எடுத்துப் போகலாம். ஆனால் போகுமுன் ஒரு சிறு விஷயத்தைப் பற்றித் தங்களிடம் பேச விரும்புகிறேன்'' என்றாள் கடுமையாக.

சிவகுமார் திகைப்பும் வெட்கமும் அடைந்தவனாகப் பேசாது சிலைபோலாகிவிட்டான். உமா தொடர்ந்து பேசலானாள்.

''சுலோசனா என்ற பெண்ணை இங்கே கொண்டு வந்து விடும்போது தாங்கள் என்ன சொன்னீர்கள்? தங்களது அனாதை ஆசிரமத்தில் வலிய வந்து அடைக்கலம் அடைந்தவள் என்றும், யாரோ ஒரு வாலிபன் அவளை வஞ்சித்து விட்டதாகவும் அல்லவா கதையளந்தீர்கள்? ஆனால் அவளை நேரிடையாக விசாரிக்கும்போது வேறு விதமாகவல்லவா நான் கேள்விப் பட்டிருக்கிறேன்? நான் ஊருக்கு வந்த புதிதில் இங்கிருக்கும் சில அனுபவஸ்தர்கள் தங்களது ஆசிரமத்தைப் பற்றி இழிவாகப் பேசி, அதனுடைய தொடர்பை நான் கொள்வது ஆகாது என்று

புத்திமதிகள் கூறினார்கள். பொறாமையினால் அவ்வாறு கூறுவதாக முதலில் எண்ணி அவர்களது ஆலோசனைகளை உதறித் தள்ளினேன். மெத்தப் படித்தவர், நாணயமான மனிதர் என்று தங்களுடன் நட்புரிமை பாராட்டினேன்'' என்று உணர்ச்சி வசத்தில் பேசிவிட்டு கோபத்தில் திணறினாள்.

ஏதோ விஷயம் விபரீதமாக நடந்திருக்கிறது; பண்ணையார் புத்திரி அதைக் கண்டு மிகவும் மனம் கலங்கி விட்டிருக்கிறாள் என்பதை நொடிப் பொழுதில் ஊகித்துக் கொண்ட சிவகுமார் ''நான் தங்களுக்கு எந்த விதத்தில் தவறு இழைத்துவிட்டேன் என்பதைத் தயவு செய்து வெளிப் படையாகக் கூறுங்கள். உண்மையாயின் ஒப்புக் கொள்ளச் சித்தமாக இருக்கிறேன்'' என்றான் மிகவும் மெல்லிய குரலில்.

''என் விஷயத்தில் தாங்கள் தனிப்பட ஏதும் தவறு செய்யவில்லை. பொதுவாக, பெண் குலத்திற்கே பெரும் துரோகம் செய்திருக்கிறீர்கள். ஆசிரமத்துக் காரியமாக அடிக்கடி பட்டிணம் செல்வதாக இங்குள்ளவர்களை நம்பச் செய்துவிட்டு, நகரத்தின் அருகில் உள்ள கிராமத்திற்குச் சென்று பேதைச் சிறுமி சுலோசனாவுடன் நாளடைவில் நட்புக் கொண்டீர்கள். கல்யாணம் செய்து கொள்வதாக வாக்களித்து, அந்தப் பெண்ணை இங்கே கடத்திக் கொண்டு வந்துவிட்டீர்கள். இப்பொழுது அவளுடைய கதி என்ன?'' என்று ஆத்திரத்துடன் உரத்த குரலில் அதட்டிக் கேட்டாள்.

சிவகுமாரனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து சட்டென்று ஒரு வழியாகத் தன்னை சமாளித்துக்கொண்டு ''தாங்கள் என் மீது சுமத்தும் பழி மிகவும் அபாண்டமானது. இப்படிப்பட்ட பொய் வதந்தியை யாரோ என் விரோதிகள் வேண்டுமென்றே பரப்பிவிட்டிருக்கிறார்கள்!'' என்றான் பதட்டமாக.

''உண்மை என்று நான் நிரூபித்துவிட்டால் தாங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று மிகவும் அதட்டலாக வினவிய



உமா, எழுந்து மாடிப் படியருகில் போய் நின்றுகொண்டு, ''சுலோ! சுலோ!'' என்று கைதட்டிக் கூவி அழைத்தாள்.

''வந்துவிட்டேன் அம்மா!'' என்று சட்டென்று பதில் அளித்த சுலோசனா தடதடவென்று வேகமாக ஓடிவந்து பெருமூச்சு விட்டவண்ணம் நின்றாள். பிடிப்பின் மீது ஒரு கையை வைத்துக்கொண்டு மிகவும் அகங்காரமாக நின்ற உமா, அவள் பக்கம் திரும்பி, ''சுலோ! இதோ உட்கார்ந்திருக்கும் இந்த மனிதரை நன்றாகப் பார்! இவர் யார் என்பது உனக்குத் தெரியுமா? என்ன நடந்தது என்பதை இவர் காதுபட ஒளிக்காது சொல்'' என்று உத்தரவிட்டாள்.

கலவரமும் பீதியும் நிறைந்த தன் முகத்தைத் தூக்கி மெல்ல சிவகுமாரனைப் பார்த்தாள் சுலோசனா. திடீரென்று அவளுக்குத் துணிவு ஏற்பட்டது.

''அம்மா! இவர்தான் அம்மா, இவர்தான்!'' என்று கூறிவிட்டு கிரீச்சிட்டு அலறி அழத் தொடங்கினாள்.

எதிர்பாராத இந்தத் தாக்குதலில் மிரண்டு போன சிவகுமார் இடத்தைவிட்டு எழுந்து நின்றான். விம்மி அழுத சுலோசனாவை அணைத்துச் சமாதானப்படுத்தியபடி நின்ற உமா, அவன் பக்கம் திரும்பி, ''முழுவதையும் கேட்டுவிட்டுப் போகலாம் அவசரப்பட வேண்டாம்'' என்று கோபத்துடன் சீறி விழுந்தாள். ''சுலோ அழுது என்ன பிரயோசனம்? காரியத்தைக் கவனிக்க வேண்டும். இந்த விஷயத்தை நான் லேசில் விடப் போவதில்லை. தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் போகிறேன்'' என்று படபடவென்று பொரிந்து கொட்டிவிட்டு, ''சொல் மீதியுள்ள விஷயத்தை. அவர் கேட்டு அறியும்படி தெளிவாகச் சொல்'' என்று உத்தரவிட்டாள்.

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு சுலோசனா சிவகுமாரனை வெறித்துப் பார்த்தாள். ''அம்மா! இவர்தான்

என்னை மணம் செய்து கொள்வதாக ஆசைகாட்டி, பெற்றோர்களை விட்டு ஓடி வரும்படி தூண்டியவர். இங்கே வந்ததும் என்னை உதாசீனப்படுத்திக் கைவிட்டு விட்ட கயவர், அம்மா! எனக்கு ஒரு வழி செய்யுங்கள், இல்லா விட்டால் இந்த பங்களாவில் உள்ள பாழுங் கிணற்றில் தள்ளிக் கொன்று விடுங்கள்'' என்று துக்கமும் திணறலுமாகக் கூறிவிட்டு ஓவென்று வாய்விட்டுக் கதறத் தொடங்கினாள்.

சிவகுமாரனுக்கு ஆச்சரியம் தாளமுடியவில்லை. பற்களைக் கடித்துக் கொண்டு பொறுமையாகத் தன் மீது சுமத்தப்பட்ட பழியைக் கேட்டுக்கொண்டு நின்றான். பிறகு சற்றுமுன் நகர்ந்து சுலோசனா அருகில் வந்து, ''அம்மா சுலோசனா! என்னை நன்றாகப் பாருங்கள். இதற்கு முன் என்னைத் தாங்கள் அறிவீர்களா, என்பதை யோசித்துப் பாருங்கள். அனாதை ஆசிரமத்திற்குத் தாங்கள் அன்று தன்னந் தனியாக வந்தபொழுது என்ன சொன்னீர்கள் என்பதை மறக்க வேண்டாம்!'' என்றான் கோபத்துடன்.

''அம்மா, இவர் பேசுவது அத்தனையும் பொய், பொய்!'' என்று சுலோசனா கிரீச்சிட்டு அலறினாள். உமா மிகவும் ஆத்திரமாக சிவகுமார் பக்கம் திரும்பி ''ஐயா போதும். துஷ்டத்தனமாக ஒரு காரியம் செய்துவிட்டு, அதை மறைக்க வீண் பொய்களையும் பேசுகிறீர்கள். தக்க நாணயமான மனிதராக இருந்தால் இந்தப் பெண்ணை அழைத்துச் சென்று பெற்றோரிடம் ஒப்புவித்து முறைப்படி திருமணம் செய்துகொண்டு இனியாகிலும் நல்லபடி வாழ முயற்சிப்பீர்கள் என நம்புகிறேன். தாங்கள் இந்த அபலைக்கு ஒரு வழியும் செய்யாவிட்டால் இந்த ஊரில் உள்ள நாங்கள் உம்மைச் சும்மாவிட மாட்டோம்'' என்றாள் கடினமாக.

சிவகுமாரனுக்கு அவமானமும் கோபமும் தாங்கக்கூட வில்லை. ''மிஸ் உமா! போதும், தங்களிடம் நான் கொண்டுள்ள



மரியாதைக்காக நான் அதிகம் பேச விரும்பவில்லை. இந்தப் பெண் வேண்டுமென்றே என்மீது பெரிய பழியைச் சுமத்தியிருக்கிறாள். அதைத் தாங்கள் நம்பி என்னை அவமானப்படுத்த விரும்பினால் அப்படியே செய்து கொள்ளலாம். இதையெல்லாம் கண்டு அஞ்சுகிறவன் நான் அல்ல. இந்தப் பெண்ணின் தாயார் பிரபலமானதொரு நாடகக்காரியாம். அதனால் தாயைவிடப் பன்மடங்கு திறமையுடன் நாடகம் போட்டிருக்கிறாள். இது விஷயமாக உங்களால் ஆனதைச் செய்து கொள்ளலாம். நான் வருகிறேன்'' என்று படபடவென்று பேசிவிட்டு, மேஜைமீது கிடந்த சித்திரத்தை எடுத்துக்கொண்டு விர் என வெளியேறிவிட்டான்.

கோபம், துக்கம், ஆத்திரம் என்ற பல்வேறு உணர்ச்சிகள் பெரும் கடல்போல் உள்ளத்திலே கொந்தளிக்கத் தொடங்கவே, உமா தன் வசம் இழந்து சிறிது நேரம் சிலைபோல் நின்று கொண்டிருந்தாள். வாசலினின்று படபடவென்று எழுந்த ஓசை சிவகுமாரின் மோட்டார் சைக்கிள் புறப்பட்டுச் செல்வதை உணர்த்தியது. அத்துடன் அவளது இருதயத்திலே தழைத்து ஓங்கி வந்த அன்புக்கும் அஸ்தமனம் ஏற்பட்டுவிட்டதை எண்ணியமாத்திரம் அவள் கண்கள் கலங்கின. உமா சிவகுமாரனை வெறுத்தாள். ஆனால், என்ன அதிசயம்? அவளது இருதயம் அந்த வெறுப்பை ஏற்க மறுத்துப் புரட்சியல்லவா செய்தது!

விர் என்று மாடியறைக்குள் ஓடித் தன் படுக்கை மீது பொத்தென்று விழுந்தாள். அதுவரைக் கட்டுப் படுத்தி வைத்திருந்த துயரம் பீறிக்கொண்டு பெரும் விம்மலாக அடுக்கடுக்காக எழுந்து அவளது தளிர்மேனியைக் குலுக்கியது.

## 25

உமா மாளிகைக்குள் நுழைவதற்கும், வானத்திலே திரண்டு குவிந்துகொண்டு வந்த கருமேகக் கூட்டம் பெருமழையாகத் திடீரென்று பொழியத் துவங்குவதற்கும் சரியாக இருந்தது. பளிச்சென்று இடையே கண்ணைப் பறித்த மின்னல்களும், தொடர்ந்து அண்டசராசரமே கிடுகிடுக்கும் வண்ணம் ஒலித்த இடியோசையும் எதிரொலி செய்வது போல் அவளது உள்ளத்தில் உணர்ச்சி அலை மோதிக்கொண்டிருந்தது. மழைச்சாரலினால் சிறிது நனைந்து விட்டிருந்த தனது கூந்தலைத் துண்டினால் துடைத்தவண்ணம் தனது அறைக்குள் அமைதி யின்றி முன்னும் பின்னும் உலாவிக் கொண்டிருந்தாள்.

சந்தடி செய்யாது பூனைபோல் மெல்ல வந்து பின்னால் நின்றாள் சுலோசனா. எஜமானி மிகவும் சிந்தனை வசப் பட்டிருப்பதைக் காண அவளுக்குக் கொஞ்சம் வியப்பாகவே இருந்தது. அன்று மாலை உமா எங்கேயோ அவசரமாகப் புறப்பட்டுச் செல்வதைக் கண்டாள். அவள் எங்கே செல்கிறாள் என்பதை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் சுலோசனாவுக்கு. பண்ணை மோட்டார் வண்டியோட்டும் குப்புசாமி மிகவும் சிடுசிடுக்கும் சுபாவம் உள்ளவன். மேலும், எங்கே சென்றார்கள், எதற்காகச் சென்றார்கள் என்பதை எவ்வளவு முறை கேட்டாலும் வாய் திறந்து யாரிடமும் சொல்ல மாட்டான். அங்கே நடந்ததை அங்கேயே விட்டு விடுவான். இங்கே நடப்பதை இங்கேயே உதறி விட்டு விடுவான். கண்டதைக் காணாதது போல் அவன் நடந்து கொண்டதனால் தான் பண்ணையில் மற்ற எல்லா வேலை யாட்களையும் விட நீண்ட காலமாக அவன் உத்தியோகத்தில் இருந்து வந்தான்.



எஜமானி வெளியே எங்கு சென்று வந்தாள் என்பதை எப்படியாவது தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலில் மோட்டார் வண்டியை விட்டு உமா இறங்கி மேலே சென்றதும், சுலோசனா அவசரமாக உள்ளிருந்து ஓடிவந்தாள். ''குப்புசாமி! கொட்டும் மழையில் எங்கே போய் வந்தாப்பலே?'' என்று முகத்தைக் குலுக்கிக்கொண்டு மிகவும் தளுக்காக விசாரித்தாள். மேல் துண்டை உதறி, களைந்துவிட்டிருந்த தலையையும் முகத்தையும் துடைத்துக் கொண்டான் டிரைவர். நரைத்துப் போன தனது மீசையைத் தடவி விட்டுக் கொண்டவண்ணம் அவளை மிகவும் அசட்டையாக முறைத்துப் பார்த்தான். ''வாய் முத்து உதிர்ந்துவிடும் போல் பேசப் பயப்படுகிறாயே? ரொம்ப தூரம் போய்வந்தது போல் களைச்சு இருக்கிறாயே!'' என்று மிகவும் கனிவுடன் கேட்டுவிட்டுச் சிரித்தாள், சுலோசனா.

''உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ, அம்மா. நமக்குச் சம்பந்தமில்லாத விஷயத்திலே தலையிட்டுக் குழப்புகிறது நமக்கே நல்லதில்லே'' என்று எரிச்சலுடன் பதில் அளித்துவிட்டு அப்பால் சென்றுவிட்டான். அவனிடம் தன் ஜாலம் ஏதும் பலிக்காது என்பதை உணர்ந்து கொண்ட சுலோசனா ஏமாற்றத்துடன் மெல்ல மாடிப்பக்கம் வந்தாள்.

''அம்மா, தங்களுக்குச் சூடாக ஏதேனும் சாப்பிடக் கொண்டு வரவா?'' என்று அன்புடன் அவள் கேட்டதும், உமா திடுக்கிட்டுத் திரும்பினாள். நகரத்து ஆஸ்பத்திரியிலிருந்து அவள் அப்பொழுதுதான் திரும்பி வந்திருந்தாள். கட்டையன் மனைவி அஞ்சலை கூறிய சில திகைப்பான உண்மைகளைக் கேட்ட பின்பு உமாவுக்கு ஏற்பட்டிருந்த மன அதிர்ச்சி கொஞ்ச நஞ்சமல்ல. தன் காலடியிலிருந்த பூமி பெயர்ந்து விழுந்து விட்டதைப் போலவும், தான் அதலபாதாளத்தை நோக்கி விழுந்து கொண்டிருப்பது போலவும் அவளுக்கு ஒரே பிரமிப்பாக இருந்தது. தன் முன்வந்து நின்ற சுலோசனாவை அவள் முன்பின்

அறியாதவள் போல் வெறித்துப் பார்த்தாள். ''எனக்குத் தற்சமயம் ஒன்றும் தேவையில்லை. தயவுசெய்து நீ கீழே சென்று மற்ற காரியங்களைக் கவனி. நான் சிறிது நேரம் தனியாக இருக்க விரும்புகிறேன்'' என்று கடினமான குரலில் அதட்டி உத்தரவிட்டாள்.

சுலோசனா அதற்குமேல் அங்கே நிற்க பயந்தவளாகக் கீழே இறங்கிச் சென்றுவிட்டாள். பித்தம் பிடித்தவள் போல் பண்ணையாரின் செல்வப்புதல்வி அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாகப் பன்முறை உலாவத் தொடங்கினாள். அவளைச் சுற்றிலும் உள்ள பொருள்கள் அனைத்தையும் சுக்கல் சுக்கலாக உடைத்துப் பண்ணை மாளிகையைத் தவிடு பொடியாக்கிவிட வேண்டும்போல் ஆத்திரம் அவள் உள்ளத்தில் எரிமலையாகக் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

கட்டையன் மனைவி அஞ்சலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப் பல நாட்கள் சென்றபோதிலும், எவ்விதமான குணமும் அடையவில்லை. பல தினங்கள் தொடர்ந்தாப்போல அவள் தன் நினைவு இன்றிக் கிடந்தாள். நினைவு சற்றுத் தெளியத் தொடங்கியதும், இருமலும் ஜுரமும் ஏற்பட்டு அவளது ஆரோக்கியத்தை மெத்த பாதித்தன. எந்தவிதமான சிகிச்சைக்கும் குணமாகாது நாளடைவில் நலிந்துகொண்டு வந்த அவளது தேக நிலையைக் கண்டு வைத்தியர்கள் நம்பிக்கையை விட்டுவிட்டனர். தனக்குக் கொஞ்சம் நினைவு வரத் தொடங்கியதும் அஞ்சலை தன் எஜமானியம்மாளைக் கண்டு பேச மிகவும் ஆசைப்பட்டாள். உடம்பு நன்றாகத் தேறியதும் தானே பண்ணையார் மாளிகைக்கு சென்று எஜமானி அம்மாளைக் கண்டு தன் உள்ளத்திலே அதுவரை புதைத்து வைத்திருக்கும் ரகசியங்கள் அனைத்தையும் கூறிவிடுவது என்று அவள் தனக்குள் தீர்மானித்தாள். ஆனால், நாளடைவில் அவளது உடல் பலம் குன்றத் தொடங்கிவிட்டது.



தன் உடல்நிலை மிகவும் கேவலமாகிவருவதை உணர்ந்ததும் அஞ்சலை தன் நினைவு மறுபடி அழிந்து போகுமுன் உமாவைக் கண்டு பேச மிகவும் விரும்பினாள். தனது விருப்பத்தை ஆஸ்பத்திரி பெரிய வைத்தியரிடம் தெரிவிக்கவே, அவர் பண்ணையார் மகளுக்கு அஞ்சலையின் அந்தியநாள் வேண்டுகோளை விவரமாக எடுத்து எழுதி ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். உமா அதைக் கண்டதும் காலதாமதம் செய்யாது நகரத்து ஆஸ்பத்திரிக்கு விரைந்தாள்.

இளைத்துத் துரும்பாகி விட்டிருந்த அஞ்சலை, எஜமானியம்மாளை மிகவும் சிரமப்பட்டு தனது நலிந்த கண்களால் ஊன்றிப் பார்த்தாள். தன் எதிரே கிடந்த நாற்காலியில் உட்காரச் சொல்லி கரத்தால் சுட்டிக்காட்டிவிட்டு, மிகவும் கஷ்டத்துடன் எழுந்து படுக்கை மீது சாய்ந்தபடி உட்கார்ந்து கொண்டாள். இறந்துபோன தன் கணவனையும் தாங்கள் அதுவரைப் பட்ட பலவித துயரங்களையும் நினைத்துக் கொண்டதும் அவளது கண்களை நீர் மறைத்துக் கொண்டது. துக்கம் நெஞ்சை அடைத்தது.

''அம்மா நீங்கள் இந்த ஏழையின் வேண்டுகோளை ஏற்று இங்கே வந்தது பற்றி ரொம்ப சந்தோஷம். எனக்குத் தெரிஞ்ச சில விஷயங்களை நான் ஒன்றும் விடாது சொல்லிவிடுகிறேன். கேட்டுக் கொள்ளுங்கள். இதுவரை உங்கள் உப்பைத் தின்னு நானும் என் புருஷனும் வாழ்ந்து விட்டோம். எல்லாத்தையுமா ஒளிக்காது சொல்லி விட்டுச் செத்துப் போனால்தான் என் மனசு நிம்மதியடையும். என்னால் அதிகம் உரத்துப் பேசமுடிய வில்லை. அதனாலே சித்த கிட்ட வந்து நல்லா கேட்டுக்கோங்க, அம்மா'' என்றாள்.

என்னவெல்லாம் அவள் கூறப்போகிறாளோ என்று பலவிதமாகக் கற்பனை செய்து கொண்டிருந்த உமாவின் நெஞ்சு உணர்ச்சி வசத்தில் படபடத்தது. நாற்காலியை அவளது

படுக்கையருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு அவள் மிகவும் ஆவலுடன் நெருங்கி அமர்ந்துகொண்டாள். பேசவிடாது தொடர்ந்து எழுந்த இருமலை ஒரு வழியாகச் சமாளித்துக் கொண்டு அஞ்சலை கிணற்றிலிருந்து பேசுவது போல் மிகவும் மெல்லிய குரலில் பேசலுற்றாள். அவள் தொடர்ந்தாற் போல் கூறி வந்த விவரங்கள் அனைத்தையும் உமா ஒன்று விடாது மிகவும் கூர்மையாகக் கேட்டு வந்தாள். குறுக்கே கேள்வி கேட்டால் எங்கே அஞ்சலை கூற வந்ததை நிறுத்திவிடப் போகிறாளோ என்ற கிலியில் அவள் எதுவுமே பேசவில்லை.

கேட்கக் கேட்க அந்த விவரங்கள் அனைத்தும் அவளுக்கு ஆச்சரியத்தையும், ஆத்திரத்தையும் உண்டாக்கின. திடுக்கிடும் சம்பவங்கள் அடுத்தடுத்து வந்து கொண்டிருந்த, ஒரு சுவாரஸ்யமான கதையைப் படிக்கும்போது ஏற்படுகின்ற ஒரு பயங்கரமான உணர்ச்சிதான் முடிவில் அவளது உள்ளத்திலே குவிந்து எழுந்தது. நெற்றி மீது ஆறாக வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு, பேசவொட்டாது துடித்த தன் அதரங் களைக் கோபத்துடன் கடித்துக்கொண்டு சிறிது நேரம் அவள் அப்படியே சிலைபோல் இருந்தாள்.

''அவ்வளவுதான்! எல்லாவற்றையும் சொல்லி விட்டேன். அம்மா! எனக்குக் கடைசியாக உங்களிடம் ஒரே ஒரு வேண்டுகோள்தான் உண்டு'' என்று கூறிவிட்டு மிகவும் ஆயாசத்துடன் படுக்கைமீது சாய்ந்து கொண்டாள், அஞ்சலை. சிரமப்பட்டு அவள் மூச்சு விடுவதைக் கண்ணுற்ற உமா திடுக்கிட்டு எழுந்து அருகில் சென்று குனிந்துகொண்டு மிகவும் ஆதரவுடன் ''உன் விருப்பத்தைச் சொல் அம்மா, தப்பாமல் செய்து வைக்கிறேன்'' என்று கேட்டாள்.

''ஒன்றுமில்லை! எங்கள் நல்லானைக் கொஞ்சம் கவனிச்சுக்கோங்க, அதுக்கு எங்க ரெண்டு பேர் மேலேயும் உசிருங்க'' என்றாள் அந்தக் கிழவி, தடுமாற்றத்துடன்.



அதைச் சொல்லி முடிக்குமுன் அவளது முகத்திலே அரும்பி நின்ற புன்னகையைக் கண்ட உமாவுக்கு மனம் மெத்தவும் கரைந்துவிட்டது.

கட்டையன் மரணமடைந்ததை உணர்ந்த நல்லான் ஒரே பிடிவாதமாகச் சோறு உண்ண மறுத்துப் பட்டினியாகக் கிடந்து ஏழு தினங்களில் எஜமானனைப் பின்பற்றி விட்டது. அந்த உண்மையைத் தற்சமயம் சொல்லி உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் அஞ்சலைக்கு வருத்தத்தை உண்டாக்க அவள் விரும்பவில்லை. எனவே அவள், அதை நன்றாகக் கவனித்துக் கொள்வோம். நீ கவலைப்படாதேயம்மா. இன்னும் ஏதேனும் உனது விருப்பம் இருந்தால் அதையும் தயங்காமல் தெரிவித்துக் கொள்'' என்றாள் அனுதாபத்துடன்.

அஞ்சலை பதிலுக்கு நீண்டதொரு பெருமூச்சு விட்டாள். ''ஒன்றுமில்லையம்மா. உங்களது புண்ணியத்தில் என் உறவுக்காரர்கள் எல்லோரும் சுகமாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் செய்யக்கூடியது ஏதும் இல்லை'' என்று கூறிவிட்டு எஜமானிக்குக் கையெடுத்துப் பெரிய கும்பிடு ஒன்று போட்டாள். சிறிதுநேரம் அவளுக்கு ஆறுதலாகக் கொஞ்சம் பேசிவிட்டு உமா விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டாள். காரில் வந்து அமர்ந்ததும் அவளது உள்ளத்தில் மீண்டும் சிந்தனைகள் போராடத் தொடங்கிவிட்டன. அஞ்சலை, கட்டையன், அவர்கள் இருவரும் நடத்திய துன்ப வாழ்க்கையின் மர்மம். அதற்குக் காரணமானவர்கள், அஞ்சலை கூறிய ரகஸ்யங்கள் அனைத் தையும், திரும்பத் திரும்ப நினைத்து அவள் மனம் ஆத்திரத்தில் கொதித்தது. வண்டி பங்களா வாயிலை அடைந்து நின்றதுகூட அவளுக்கு தெரியவில்லை. டிரைவர் கதவைத் திறந்து அவளுக்கு வழிவிட்டபோதுதான் வீடு வந்துவிட்டதை உணர்ந்து செயலற்றவளாக இறங்கி உள்ளே சென்றாள்.

சிந்தனையுடன் உலாவிக் கொண்டிருந்த உமா ஜன்னல் அருகே சென்று திரைச் சீலையைப் பிடித்து இழுத்துவிட்டு வெளியே எட்டிப் பார்த்தாள். ஜன்னல் திரைச் சீலைக்குப் பின்னாலிருந்து ஒரு காகித உறை தொப்பென்று கீழே விழுந்ததைக் கண்டு ஆச்சர்யமுற்று அதைக் கையில் எடுத்தாள். உறைக்குள் ஏதோ கனமான வஸ்து ஒன்று வைக்கப் பட்டிருப்பதுபோல் தோன்றவே மிகவும் வியப்புடன் அதை வெளிச்சத்தில் பிடித்துத் திருப்பிப் பார்த்தாள். காகித உறைமீது காணப்பட்ட விலாசம் அவளுக்கு மிகவும் வியப்பையும் சந்தேகத்தையும் உண்டாக்கின. அங்கே அந்த இடத்தில் அந்தக் காகித உறை மறைவாக வைக்கப் பட்டிருப்பதற்குத் தக்க ஆதாரம் இருந்திருக்க வேண்டுமென்று அவளது உள்ளுணர்வு கணப்பொழுதில் உணர்த்தவே, அதை அலட்சியம் செய்யாது பார்த்தாள். கடித உறையினின்று மெல்லிய காகிதத்தில் சுற்றப்பட்ட மிகவும் கனமானதொரு வஸ்து முதலில் வெளியே விழுந்தது. அதைக் கையில் எடுத்து மேலே போர்த்தியிருந்த ஜவ்வுத் தாளை நீக்கிவிட்டுப் பார்த்தபொழுது உமாவுக்கு ஏற்பட்ட ஆச்சரியம் கொஞ்சம் நஞ்சமல்ல. சில மாதங்களுக்கு முன்பு ஒருநாள் மானேஜர் வரதராஜன் இல்லத்தில் அவளுக்கு அளித்த விருந்தின்போது ஏதேச்சையாகத் தந்தப் பெட்டியொன்றிலிருந்து கீழே விழுந்து உருண்டோடிய அதே அழகிய நீல வளையல்தான் இதுவும்! ஷண்பகவல்லியின் பெட்டியில் அடக்கமாகியிருந்த அந்த அற்புத ஆபரணம் இங்கே எப்படி வந்திருக்கக்கூடும்? கண்களை அகல விரித்து பன்முறை அதை வியப்புடன் உற்றுப்பார்த்தாள். அவளால் நம்பவே முடியவில்லை. கடித உறைக்குள்ளிருந்து ஒரு சிறு காகிதம் வெளியே நீட்டிக் கொண்டிருப்பதைக் கண்டு அதையும் வெளியே எடுத்துப் பார்த்தாள்.

"அன்புள்ள அத்தானுக்கு, சுலோசனா மிக்க வணக்கத்துடன் எழுதியது. தாங்கள் அந்த நீண்ட கடிதத்தில்



விவரமாகக் குறிப்பிட்டிருந்தபடியே நான் காரியத்தைச் செய்து முடித்து விட்டேன். என் தாயார், 'எனக்கு நடிப்புத் திறமை கிடையாது; அதனால்தான் பட உலகிலே சந்தர்ப்பம் கிடைக்கவில்லை' என்று அடிக்கடி இடித்துக் கூறுவது வழக்கம். ஆனால் அன்றைய தினம் நான் நடித்த நடிப்பை, நீங்களாவது அல்லது என் தாயாராவது பார்த்திருந்தால் மிகவும் திகைத்துப் போயிருப்பீர்கள். தத்ரூபமாக வஞ்சிக்கப்பட்ட ஒரு பெண்மணி போல நான் அழுத அழுகை கொஞ்சநஞ்சமல்ல. என்னை எனது பெற்றோரிடமிருந்து சிவகுமார் கடத்திக்கொண்டு வந்து விட்டதாக நான் கூறிய கதையை உமா அவர்கள் அப்படியே நம்பி விட்டார்கள். சிவகுமார் சில தினங்களுக்கு முன் இங்கே மாளிகைக்கு வந்தபொழுது உமா என்னை அழைத்து நேரிடையாக நிருபிக்கச் செய்தார்கள். சிவகுமாரனுக்கோ, பண்ணையார் மகளுக்கோ நான் கொஞ்சமும் பயப்படவில்லை. ஒரே பிடிவாதமாக 'என் வாழ்வை கெடுத்தபாவி அவன் தான்' என்று கிரீச்சிட்டு அலறி ஆர்ப்பாட்டம் செய்தேன். தாம் இதைப்பற்றி ஏதும் அறியாதவர், நிரபராதி என்று சிவகுமார் தம்மைப்பற்றி எவ்வளவோ கூறியும் உமா நம்பவேயில்லை. அவரிடம் மிகவும் கடுமையாகப் பேசி பங்களாவினின்று கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக அவரை வெளியே அனுப்பிவிட்டார்கள். அதற்குப் பின்னர் அவர்கள் கொஞ்ச நேரம் என்னிடம் கூடப்பேசவில்லை. தமது அறைக்குள்ளே வந்து வெகு நேரம் அழுது கொண்டிருந்தார்கள் என்று நினைக்கிறேன். சிவகுமார் அதற்குப் பின்னர் இங்கே வருவதேயில்லை. இன்று தினம் மாலை உணவு அருந்திவிட்டு அவசரமாகக் காரில் எஜமானியம்மாள் எங்கேயோ போனார்கள். எங்கே போனார்கள், எதற்காகப் போனார்கள் என்பதைப் பிற்பாடு விசாரித்து எழுதியனுப்புகிறேன்.

இந்தக் கடிதத்திற்குள் சாமான் ஒன்றைப் பத்திரமாக அனுப்பி வைத்திருக்கிறேன். இது எனக்குக் கிடைத்தது ஓர்

ஆச்சரியம். நீங்கள் அன்று அனுப்பியிருந்த கடிதத்தை மறைவாகப் படிக்கும் நிமித்தம் நான் இந்த மாளிகையின் தோட்டத்து மூலையில் உள்ள ஒரு பாழுங்கிணற்றடிக்குச் சென்று உட்கார்ந்து படிக்க ஆரம்பித்தேன். கடிதத்தைப் படித்து முடித்ததும், அங்குள்ள குப்பை மேட்டின் குறுக்கே மாளிகையை நோக்கி வரத் திரும்பியபோது, ஒரு பழைய ஓட்டைத் தகரப் பெட்டியின் மூடி என் காலில் குத்தி ரத்தம் வரச் செய்துவிட்டது. கோபத்துடன் அதை உதைத்துத் தள்ளினேன். உள்ளிருந்து இந்த அழகிய நீலநிற வளையல் வெளியே வந்து தரை மீது விழுந்து உருண்டோடியது. முதலில் இதை வெறும் பித்தளை ஆபரணம் என்று அசட்டையாகப் பார்த்தேன். மேலே படிந்திருந்த மண்ணைத்துடைத்துவிட்டு நன்றாகக் கூர்ந்து கவனித்த போது அழகிய வேலைப்பாடு அமைந்த உயர்ந்த நீலக் கற்கள் பதித்த ஒரு விலையுயர்ந்த ஆபரணம் என்று தெரிய வந்தது. அதற்குமேல் அதிக நேரம் அதை ஆராய்ந்து பார்க்க முடியாதபடி உமா அம்மா என்னை உள்ளிருந்து கூப்பிட்டு விட்டார்கள்.

நேற்று தினம் எஜமானி வெளியே வயல் பக்கம் கவனிக்கச் சென்றிருந்த சமயம், வளையலை எடுத்து நன்றாக சோப்புப் போட்டுக் கழுவித் துடைத்துவிட்டு வெளிச்சத்திலே வைத்து அழகு பார்த்தேன். வளையலின் உள்புறத்திலே 'வைதேகி' என்றதொரு பெயர் பொறிக்கப்பட்டிருப்பது நன்றாகத் தெரிய வந்தது. மெல்லப் பேச்சுக் கொடுத்தபோது இங்குள்ள வேலைக்காரி ஒருத்தி, இறந்துபோன பண்ணையாரது மனைவியின் பெயர் வைதேகி என்று எனக்கு எடுத்துச் சொன்னாள். அதைக் கேட்டதிலிருந்து எனக்கு மெத்த கவலையாகி விட்டது. இந்த வளையல் பண்ணையைச் சேர்ந்த ஆபரணம். இறந்துபோன எஜமானி அம்மாவுடையது என்பது நிச்சயம். இதை நான் இங்கே வைத்திருப்பது அபாயம். விலையுயர்ந்த இந்த ஆபரணத்தை உமாவிடம் கொண்டு



கொடுத்து 'கண்டெடுத்தேன்' என்று ஒப்புக்கொள்ள மனமில்லை. அதனால் இதையும் காகிதத்தில் வைத்து தங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். என் பொருட்டு இதைப் பத்திரமாகப் பாதுகாத்து வைக்கவும்.

தாங்கள் கூறியபடி காரியத்தைச் செய்து முடித்து விட்டேன். இங்கிருந்து என்னைத் தாங்கள் எப்பொழுது அழைத்துப் போகப் போகிறீர்கள்? எப்பொழுது நமது திருமணம்? என் தாயாருக்குத் தெரியாது தங்களை நம்பி வீட்டைவிட்டுப் புறப்பட்டு வந்துவிட்டேன். என்னைக் கடைசிவரை காப்பாற்ற வேண்டியது தங்களது பொறுப்பாகும். மற்றவை பிறகு.

தங்கள் அன்புள்ள,
**சுலோசனா.''**

கடிதத்தை ஒரு முறை, இருமுறை என்று உமா மறுபடி மறுபடி கவனமாகப் படித்தாள். அஞ்சலையிடமிருந்து அவள் அன்று மாலை அறிந்த பல ரகசியங்களை விட சுலோசனாவின் கடிதத்தில் கண்டிருந்த விஷயங்கள் அவளுக்குப் பிரமிப்பையும் அதிர்ச்சியையும் உண்டாக்கின. பார்வைக்கு உலகமே தெரியாத கபடமற்ற சிறுமி போல் தென்பட்ட அந்தப் பெண் உண்மையிலே அடுத்துக் கெடுக்கும் பெரும் குடிகேடி என்பதை அறிந்த போது அவளுக்கு ஏற்பட்ட பிரமிப்பை வார்த்தைகளாலேயே விவரிக்க முடியாது. சிவகுமாரனது வாட்டமடைந்த முகத்தை எண்ணி, பச்சாத்தாபமும் வெட்கமும் அடைந்தாள். உண்மையானதொரு நண்பனாக இருந்து, பலவிதத்திலும் உதவிகள் செய்து வந்த அந்த மனிதனை ஆத்திரத்தில் பொறாமை வசப்பட்டு, எவ்வாறெல்லாம் நிந்தித்து விட்டோம் என்று எண்ணிய மாத்திரம் அவளது அடி மனநிலையில் நீறுபூத்த நெருப்பாக மறைந்திருந்த காதல் உணர்ச்சி கட்டுக்கடங்கா ஆற்று வெள்ளம்போன்று குமுறிக்கொண்டு எழுந்து, பெரும்

துயரமாக மாறி அவளது விழிகளைக் கலங்க வைத்தன. இனி அவள் செய்வது என்ன? சுலோசனாவை அழைத்துக் கடுமையாக அதட்டி அவளும், ரங்கதுரையும் செய்துள்ள பெரும் துரோகத்தை தான் அறிவதாகக் காட்டிக்கொள்வதா? அல்லது ஒன்றும் தெரியாதது போல இருந்துவிட்டு இந்த வஞ்சகர்கள் அனைவரையும் தக்கபடி தண்டிப்பதா? கண்ணீரைத் துடைத்துக்கொண்டு உமா மிகவும் தீவிரமாக யோசித்தாள்.

அன்று இரவு போஜனம் உண்ட பின்னர் வழக்கம் போல் வரதராஜன் சீக்கிரமாக உறங்கச் சென்றுவிட்டார். வெள்ளித் தட்டில் வெற்றிலையையும் பாக்கையும் குவித்து வைத்துக் கொண்டு ஊஞ்சல் மீது அமர்ந்து கொண்டாள் ஷண்பகம். எதிரே தினசரி பத்திரிகையைப் புரட்டிய வண்ணம் காலை நீட்டிக்கொண்டு ரங்கதுரை ஒரு சோபாவின் மீது சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தான். சாயங்காலம் தன் பெயருக்கு வந்த கடிதத்தைக் கண்டதிலிருந்து ஷண்பகத்திற்கு மகிழ்ச்சியும், ஒரு வித திகிலும் ஏற்பட்டிருந்தன. ஏகாம்பரத்தின் புத்திரிக்குத் திடீரென்று தன்மேல் ஏற்பட்டிருந்த வாத்ஸல்யத்தின் தாத்பரியத்தை அவளால் அறிந்துகொள்ள முடியவில்லை. அதே சமயம் அந்தக் கடிதத்திலே கண்டிருந்த வேண்டுகோளை உதாசீனம் செய்யவும் அவளுக்கு மனம் வரவில்லை. கர்வத்தைக் கைவிட்டு, பண்ணையார் மகள் வலிய தனக்கு மிகவும் பணிவாக ஒரு கடிதம் எழுத நேர்ந்ததை எண்ணி ஒரு பக்கம் அவளுக்குப் பூரிப்பாகவும் இருந்தது.

''தம்பி! இன்று ஓர் அதிசயம் நடந்தது, கேட்டால் நீ நம்பக்கூட மாட்டாய். பண்ணையார் மகள் எனக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பியிருக்கிறாள்!'' என்றாள் மிகவும் உற்சாகத்துடன்.

பத்திரிகையைக் கீழே போட்டுவிட்டு, சட்டென ரங்கதுரை நிமிர்ந்து உட்கார்ந்தான். ''உங்களுக்கா?'' என்று நம்ப முடியாதவன் போல் ஆச்சர்யத்துடன் கேட்டான்.



''ஆமாம், எனக்கேதான்! 'வேண்டுமென்றால் நீ தாராளமாக இந்தக் கடிதத்தைப் பார்க்கலாம். என்னாலேயே முதலில் நம்ப முடியவில்லை!'' என்று கூறிவிட்டு, பகபகவென்று சிரித்தாள். இடையில், வெள்ளிச் சாவிக் கொத்துடன் சொருகிக் கொண்டிருந்த கசங்கிப்போன ஒரு கடிதத்தை எடுத்து அவனிடம் நீட்டினாள். ரங்கதுரை ஆவலுடன் அதைத் திறந்து படிக்கலுற்றான்.

''அன்புள்ள திருமதி ஷண்பகவல்லி அவர்களுக்கு வணக்கம். தாங்கள் என்னிடமிருந்து இந்தச் சிறு கடிதத்தைக் கண்டு மிகவும் அதிசயமடையக்கூடும்.

விஷயத்தை மேலும் கூறு முன், தங்களிடம் நான் மன்னிப்புக்கோர விரும்புகிறேன். எத்தனையோ முறை தாங்கள் சகோதரி பாவத்தில் என்னை அணுகி அன்பு காட்டி புத்தி சொல்ல முற்பட்டவர்கள். தங்களது மேன்மையான குணத்தைப் புரிந்து கொள்ள முடியாது நான் ஒவ்வொரு சமயமும் தங்கள் மனம் நோகும்படி பேசிவிட்டேன். வயதில் தங்களுக்கு நான் மிகவும் சிறியவள். உலக அனுபவம் இல்லாதவள் என்பதற்காக என்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். நிற்க தங்களிடம் நான் சில விஷயங்களை மனம்விட்டுப் பேச விரும்புகிறேன். தங்களது உதவியும் தற்சமயம் எனக்குத் தேவையாக உள்ளது. என் உடல் நிலை சரியாக இல்லாததனாலும், மேலும் தங்கள் தமையனார் எங்கள் பண்ணையை விட்டு விலகி விட்டார் என்பதனாலும் நான் தங்கள் இல்லத்தில் வந்து தங்களைச் சந்திக்க முடியாதவளாக இருக்கிறேன். அதனால் தயவு செய்து நாளைக் காலை தங்களுக்கு ஒய்வு இருக்கும் சமயம் இங்கே ஒருமுறை வந்து போகவேண்டும் என்று மிகவும் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் தமையனார் பண்ணையைவிட்டு விலகியது பற்றி மிகவும் மனம் சோர்ந்து கவலையடைந்து போயிருக்கிறேன். அது விஷயமாகவும், இன்னும் வேறு சில சொந்த விஷயங்கள் பற்றியும் தங்களிடம் பேசி, தங்களது உதவியையும், ஆலோசனையையும் மெத்தவும் ஏற்க விரும்புகிறேன். எனது வேண்டுகோளைத்தட்டாது தாங்கள் இங்கே வருவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.''

உமாமகேச்வரி

கடிதத்தைப் படித்துவிட்டு ரங்கதுரை உற்சாகத்துடன் அத்தையம்மாள் பக்கம் திரும்பி கையைக் கொட்டிச் சிரித்தான். ''இதை நான் எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். எனக்கு இந்தக் கடிதம் ஆச்சர்யத்தையோ வியப்பையோ உண்டாக்க வில்லை. தன்னந்தனியாக அந்தப் பண்ணையை அந்தச் சிறு பெண் எப்படி நிர்வகிக்க முடியும். அப்பா அங்கிருந்து விலகியதும் அவள் திணறிப்போய் விட்டிருக்கிறாள். அறுவடை காலம் நெருங்கி வருகிறது. ஆட்கள் கிடைக்காது திண்டாடிக் கொண்டிருக்கிறாள். உங்களை வரவழைத்து உங்களிடம் குழைவாகப் பேசி, மறுபடி அப்பாவைப் பண்ணை மானேஜர் பதவியை ஏற்கும்படி செய்ய வேண்டுமென்பது அவளது திட்டம்'' என்றான் ஆர்ப்பாட்டமாக. 'தானும் சுலோசனாவும் சேர்ந்து செய்த சூழ்ச்சி உமாவின் உள்ளத்தைக் கலங்க வைத்திருக்க வேண்டும். தன் உள்ளத்திலே குமுறும் உணர்ச்சிகளைத் தன் போன்ற ஒரு பெண்ணிடம் பேசி ஆறுதல் பெற விரும்புகிறாள். அவ்வளவுதான்!' என்று தனக்குள் எண்ணி அவன் மெத்த மகிழ்ச்சியடைந்தான். ''தாங்கள் சென்று அவளைக் கண்டு பேசிவிட்டு வருவது தான் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. பிறகு உங்கள் இஷ்டம் '' என்று நகைத்தான் ரங்கதுரை.

ஷண்பகவல்லி தன் உதட்டைப் பற்களால் கவ்விக் கொண்டு சிறிது நேரம் சும்மா இருந்தாள். தன்னை இரண்டொரு



முறை உதாசீனம் செய்த அந்தப் பெண் வலியத் தன் காலடியில் விழுந்து உதவி கோரிக் கெஞ்சிக் கடிதம் எழுதியிருப்பதை எண்ணி அவளுக்குப் பெருமிதம் ஏற்பட்டது உண்மை. எனினும், வெளிப்படையாக அதைக் காட்டிக்கொள்ள விரும்பாது கொஞ்சம் அழுத்தமாக, ''வேண்டுமென்றால் தானே இங்கே வலிய வருவதுதானே? என்னை அவர்கள் மாளிகைக்கு வரும்படி உத்தரவு போடுகிறாளே. இவளுக்கு என்ன நெஞ்சழுத்தம்?'' என்றாள்.

அத்தையம்மாள் நேரே சென்று இதுசமயம் உமாவிடம் பேசினால் தன் விஷயமாகவும் அனுகூலம் ஏற்படலாம் என்று எண்ணிய ரங்கதுரை. ''அத்தை! ரொம்பவும் பிகு செய்துகொள்ள வேண்டாம். மிகவும் அகங்காரமும், கர்வமும் கொண்டிருந்த அந்தப் பெண் இப்போது பெட்டிப்பாம்பாக அடங்கி விட்டிருக்கிறாள். உடம்பு சுகமில்லை என்கிறாள். ஒருசமயம் அப்பா முகத்தில் விழிக்க அவளுக்கு அவமானமாக இருக்கிறதோ,என்னவோ தெரியவில்லை. எதற்கும் நீங்கள் போய் வந்தால் நம் கௌரவம் இதனால் பாதிக்கப்பட்டுவிடாது. பிறகு உங்கள் இஷ்டம். நான் வற்புறுத்துவதாக நினைக்க வேண்டாம்'' என்றான்.

உமா தன்னிடம் பேச விரும்பியதைக் கேட்காவிடில் மண்டை வெடித்து விடும்போல் ஷண்பகத்திற்கு ஆவல் ஏற்பட்டிருந்தது. அதனால் அவள் மறுநாள் காலை போஜனத்திற்கு முன்பு பண்ணை மாளிகைக்குச் சென்று வர ஒப்புக் கொண்டாள். இதைப்பற்றி வரதராஜனுக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை என்று இருவரும் தீர்மானித்துவிட்டு, உறங்க எழுந்து சென்றார்கள்.

அடுத்த நாள் காலை, பண்ணையார் மாளிகையின் வாயிலில் மானேஜர் வரதராஜனது வில்வண்டி வந்து நின்றது. தான் மறைத்து வைத்திருந்த கடிதத்தைக் காணாது கலங்கித்

தவித்துக் கொண்டிருந்த சுலோசனா ஆவலுடன் வெளியே மாடி வராந்தாவிற்குள் ஓடிவந்து எட்டிப்பார்த்தாள்.

"சுலோசனா! நீ தயவுசெய்து மாடியிலேயே இரு. மானேஜர் வீட்டிலிருந்து அத்தையம்மாள் வந்திருக்கிறார்கள். அவர்களோடு சற்று நான் பேச விரும்புகிறேன்" என்று கண்டிப்பாக உத்தரவிட்டு, வேகமாகக் கீழே இறங்கி வந்தாள் உமா.

வழக்கம்போல ஷண்பகவல்லி தன் முத்துப் பற்கள் தெரிய மென்நகை புரிந்தவண்ணம் தளுக்கு நடைபோட்டுக் கொண்டு உள்ளே வந்து பவ்யமாகப் பண்ணையார் மகளுக்கு வணக்கம் செலுத்தினாள். சுற்றிலும் ஒருமுறை கவனித்து விட்டு, யாரும் இல்லாதது கண்டு திருப்தியடைந்த உமா, அவளை உட்காரச் சொல்லி உபசரித்து விட்டு, தானும் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

வேலைக்காரப்பையன் இரண்டு வெள்ளிக் கோப்பைகளில் பழரஸத்தை நிரப்பிக் கொண்டுவந்து அருகிலிருந்த மேஜைமீது வைத்துவிட்டு அப்பால் சென்று விட்டான். "முதலில் இதைச் சாப்பிடுங்கள். காலை வேளையான போதிலும் நல்ல வெய்யில்! களைப்பாக இருப்பீர்கள்!" என்று அன்பாகப் பேசிய உமா அதை எடுத்து மானேஜரின் சகோதரியிடம் கொடுத்துவிட்டு, சிந்தனையுடன் சிறிது நேரம் வாளா இருந்தாள்.

'என்ன பேசப் போகிறாளோ' என்ற ஆவலில் துடியாகத் துடித்துக் கொண்டிருந்த ஷண்பகம் பழரஸத்தை ஒரே மூச்சில் அருந்திவிட்டு கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு ஆசனத்தில் நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்து கொண்டாள். உணர்ச்சி வசத்திலே துடித்த தன் உள்ளத்தை ஒரு வழியாக சமாதானம் செய்துகொண்டு உமா தன் இடையில் சொருகியிருந்த காகிதப் பொட்டலத்தை அவிழ்த்தாள். "இதோ பாருங்கள் இதை! தங்களுடைய மாமியார் பரிசாக அளித்த வளையல்போல் காணப்படுகிறது. இல்லையா? ஒரு சமயம் இது



தான் தாங்கள் தொலைத்து விட்ட மற்றொரு வளையலோ என்னவோ? ஆனால் இந்த தீய வளையலின் சரிதத்தைக் கண்ணகியின் காற்சிலம்புக்கு ஏறக்குறைய ஒப்பிடலாம் போல் உள்ளது. தங்களுடைய காணாமற்போன நீல வளையல் இது அல்ல என்பதை நான் நிச்சயப்படுத்திக் கொண்டுவிட்டேன். இந்த நீல வளையல் என்னுடைய தாயாருக்குச் சொந்தமானதென்று அறிந்தேன். நன்றாகக் கூர்ந்து பாருங்கள். உள்ளே 'வைதேகி' என்ற பெயர் பொறிக்கப்பட்டிருப்பதைக் காண்பீர்கள்" என்று ஏளனமான குரலில் கூறிவிட்டு, வளையலை அவள் முன் நீட்டினாள்.

நெருப்பைக் கையால் தொடக் கூசுகிறவள்போல் சட்டென ஷண்பகம் கரத்தை இழுத்துக்கொண்டாள். முன்பின் எதிர்பாராத இந்தக் தாக்குதலில் அவளது சாகசம் அனைத்தும் சிதறுண்டு போய்விடவே, முகம் சிவக்க, நெஞ்சு பதற திகைப்புத் தாளமுடியாது பண்ணையாரின் புத்திரியை மிகவும் வியப்புடன் பார்த்துப் பதில் பேச முடியாது விழித்தாள்.

## 26

**சி**லந்தியின் கூடுமீது சூரிய ஒளி வீசிக் கொண்டிருந்தது. மெல்லிய இழைகளால் செய்யப்பட்ட அந்த வலை வீடு, வானவில் வர்ண ஒளி வீசி, பார்க்க அழகாகக் காணப்பட்டது. வீட்டு எஜமானியான சிலந்தி, வாய்நிறைய தேனினும் இனிய சொற்களால் இன்முகம் கூறி உள்ளே வரும்படி அழைக்கவே, வான வீதியில் பறந்து, திரிந்து கொண்டிருந்த ஈ ஒன்று அதைக் கேட்டு மயங்கி உள்ளே சென்றது. அவ்வளவுதான். தான் எப்படிப்பட்ட ஆபத்தில் சிக்கிக் கொண்டு விட்டோம் என்பதை அது உணர்ந்து கொள்ள வெகுநேரம் செல்லவில்லை.

சிலந்தியின் கூட்டுக்குள் சிக்கிய ஈயின் கதியைப் போன்றுதான் ஷெண்பகவல்லியின் நிலையும் ஆகிவிட்டது. 'வயதிலே சிறியவள், உபகாரமாகக் கெஞ்சி அழைத்திருக்கிறாள் என்று ஏமாந்தல்லவா வந்து விட்டோம்? இந்த வரவேற்பிலே பெரும் சூழ்ச்சியல்லவா கலந்திருக்கிறது!' என்று தனக்குள் எண்ணியபடி அவள் மருட்சி மிக்கவளாகச் சிலைபோல் அமர்ந்திருந்தாள்.

உமா அவளைப் பேசவிடாது தானே பேசிக் கொண்டிருந்தாள். ''தங்களிடம் உள்ள நீல வளையல் தங்களுடைய மாமியார் அளித்த மணப்பரிசு என்பதை ஏற்க நான் மறுக்கிறேன். அந்த நீல வளையல் என் தாயாருக்குச் சொந்தமாக இருந்த இரு நீல வளையல்களில் ஒன்று ஆகும். தங்களுடையது என்று கூறி நீங்கள் நிரூபிக்க விரும்பினால் மிகவும் சிரமப்படுவீர்கள்'' என்றாள் கடுமையாக அதட்டும் குரலில்.

முகத்தின்மீது துளிர்த்த வியர்வையைப் புடவைத் தலைப்பினால் அழுத்தித் துடைத்துக்கொண்டாள் ஷெண்பகம். அவளது உள்ளமும் உடலும் சொல்லமுடியாத ஒரு பயத்தில் 'கிடுகிடு' வென்று நடுங்கின. அவமானத்தினால் அவளுக்குப் பேச்சே வர மறுத்தது. ''தாங்கள் பதில் கூறத் தயங்குவதிலிருந்து நான் சொல்வது உண்மை என்று விளங்கவில்லையா?'' என்று உமா இகழ்ச்சியாகக் கேட்டாள்.

ஷெண்பகம் திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள். தன் எதிரேயிருந்த அந்தச் சிறு பெண்ணை நேருக்கு நேர் பார்த்தவுடன் அவள் முகம் முழுவதும் சிவந்துவிட்டது. ஒருவழியாகத் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''தங்களுடைய கடிதத்தைக்கண்டு நான் என்னவோ ஏதோ முக்கியமான சங்கதியென்று எண்ணிப் புறப்பட்டு வந்தேன். தாங்கள் பேசுவதைக் கவனித்தால் ஏதோ விளையாட்டுச் செய்து



என்னைப் பரிகசிக்க விரும்புவது போல் காணப்படுகிறது. ஏகாம்பரம் அவர்கள் பெரிய செல்வந்தராக இருந்தார். ஆனால் அவர் ஒருவர்தான் இது மாதிரியான நீலக்கற்கள் இழைத்த விலையுயர்ந்த ஆபரணங்களை வாங்கித் தமது மனைவிக்கு அளிக்க முடியும் என்று சொல்லி விட முடியுமா? என் புக்ககத்தாரும் உங்கள் தந்தையைப் போல் செல்வந்தர்கள் தான். என் வீட்டில் தாங்கள் அன்று பார்த்த வளையல் என்னுடைய புக்ககத்தாரின் சொத்து ஆகும். அதை நான் தங்களுக்கு நிரூபிக்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை'' என்றாள் கோபம் மிகுந்த மெல்லிய குரலில்.

பதிலுக்கு உமா களுக்கென்று சிரித்தாள். ''அம்மா! ஷெண்பகவல்லி! தாங்கள் மிகவும் கெட்டிக்காரப் பெண்மணி தான்! தங்கள் புக்ககத்தார்கள் ஒருவேளைச் சாப்பாட்டிற்குச் சிரமப்பட்டு வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பதை நான் ஆள் மூலம் முன்னதாகவே விசாரித்து வைத்திருக்கிறேன். தாங்கள் அன்று விருந்தின்போது தங்கள் புக்ககத்தைப்பற்றி என்னிடம் வருணித்தது அத்தனையும் கலப்படமில்லாத சுத்தமான பச்சைப் பொய்யாகும். தாங்கள் வசிக்கும் பெரிய வீடு, தங்களது பீரோக்களை நிறைத்து நிற்கும் ஆடை ஆபரணங்கள் அனைத்தும் தங்களுக்குக் குறுக்கு வழியிலே கிட்டிய செல்வமாகும். புக்ககத்திலிருந்து தங்களுக்குக் கிட்டிய பரிசு இதோ தாங்கள் கொண்டுள்ள இந்த விதவைக் கோலம் ஒன்றுதான். வயதில் உங்களை விடச் சிறியவள்! ஆனால் பகுத்தறிவில் உங்களுக்கு நான் எந்தவிதத்திலும் மட்டமானவள் அல்ல. முதல் நாள் உங்கள் பேச்சைக் கேட்டு நான் மயங்கிவிட்டேன். உங்களது அழகான தோற்றத்தைக் கண்டு சொக்கிப் போனேன். நானே இவ்வாறு மதிமயங்கிப்போனபோது, சபல புத்தியுடைய புருஷன் ஒருவன் மனந்தடுமாறி நியாயமான பாதையை விட்டு விலகித் தங்களுடன் நட்புப்பூண்டு பல

பாபகாரியங்களை அஞ்சாது செய்ததில் கொஞ்சமும் ஆச்சரியப் படுவதற்கில்லை. அம்மா ஷண்பகவல்லி! உங்களைப்பற்றி நான் சகலமும் அறிவேன்'' என்றாள் கோபத்துடன்.

ஷண்பகவல்லி மறுபடி தன் முகத்தைப் புடவை தலைப்பினால் அழுத்தித் துடைத்துக் கொண்டாள்.

''என்னைப்பற்றி நீங்கள் என்ன அறிவீர்கள்? அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசிவிட்டு பெரும் ஆபத்தில் சிக்கிக் கொள்ளப் போகிறீர்கள்!'' என்றாள் பதிலுக்கு ஆத்திரத்துடன்.

''நீங்களோ, உங்களது அருமை சகோதரரோ அல்லது சூழ்ச்சிமிக்க உங்களது அண்ணன் மகனோ என்னை ஏதும் செய்துவிட முடியாது. என் தகப்பனாரை ஆட்டி வைத்தது போன்று நீங்கள் மூவரும் என்னையும் ஆட்டி வைக்க முடியாது என்பதை முதல் நாளே உணர்ந்து கொண்டிருப்பீர்கள். என் தந்தையைக் குற்றம் சொல்வதில் பயன் இல்லை. தங்களது அழகான தோற்றத்தைக் கண்டு அவர் மதிமயங்கி,புத்தி தடுமாறிவிட்டார். விதவைப் பெண் ஒருத்தியுடன் கள்ள நட்பு பூண்டு மனைவிக்குப் பெரும் துரோகம் செய்வது மகாபாவம் என்பதை அவர் மறந்து விட்டார். பண்ணையார் மோகம் உங்கள் குடும்பத்திற்குப் பெரும் ஆதரவாக இருந்தது. வீட்டையும், பண்ணை நிர்வாகங்களையும்கூடப் புறக்கணித்துவிட்டு அவ்வளவு செல்வத்தையும் என் தந்தை தங்கள் பாதத்தில் காணிக்கையாக வைத்துவிட்டார். என் தாயின் ஆபரணங் களையும் கவர்ந்து தங்களிடம் சமர்ப்பித்தார். இந்தக் கள்ள நட்பிற்குத் தங்களது அருமைச் சகோதரன் பூரணமாக ஒத்துழைத்திருக்கிறார். சகோதரி மூலம் அவருக்குப் பண்ணையில் அத்தனை செல்வாக்கு. தமது குடுமி பலமாக அவரிடம் சிக்கிவிட்டதால் ஏகாம்பரம் அவர்கள் மானேஜர் கைப்பொம்மையாக ஆடிக்கொண்டிருந்தார். இவ்வளவும் எனக்குத் தெரிந்துவிட்டது. நீங்கள் மறுத்தாலும் ஒப்புக்



கொள்ளமாட்டேன். நீங்கள் என் தந்தையின் கள்ளக் காதலியாகக் கடைசிவரை இருந்தீர்கள் என்பது ஒரு சிலர் அறிந்த உண்மை. மறைக்க முடியாதது'' என்று ஆத்திரத்தில் உரத்த குரலில் பேசினாள்.

துடித்த தன் அதரங்களை ரத்தம் வரும்படி மிகவும் அழுத்திக் கடித்துக்கொண்டாள் ஷண்பகம். அவளது நெஞ்சு 'பக் பக்' என்று ஓயாது அடித்துக்கொண்டது. அவமானத்தால் குன்றிவிட்டாள்.

''இவ்வளவுதானே? இன்னும் ஏதாவது உண்டா?'' என்று கேட்டுவிட்டு, எரித்து விடுகிறவள்போல் முறைத்துப்பார்த்தாள்.

''இன்னும் எவ்வளவோ பாக்கி இருக்கின்றனவே! அவற்றையும் கூறிவிடுகிறேன். கட்டையன் மனைவி அஞ்சலை நேற்று இரவு மரணம் அடைந்துவிட்டாள். அவளது இறுதி காலத்தின்போது என்னிடம் சில அந்தரங்கங்களைக் கூறிச் சென்றாள். அவள் கூறியவைகளைச் சொல்லி விடுகிறேன். கேளுங்கள். பல வருஷங்களாக உங்களுக்கும் என் தந்தைக்கும் கள்ள நட்பு இருந்து வந்தது. ஊரார் கண்ணில் தாங்கள் பக்தி சிரத்தை நிறைந்த மகா உத்தமமான பெண்மணியாகக் காட்சியளிக்க விரும்பினீர்கள். என் தந்தையும் ஓரளவு சமூகத்திற்குப் பயந்தவராகத்தான் இருந்தார். எவ்வளவுதான் அந்தஸ்தும் செல்வாக்கும் இருந்தும் பகிரங்கமாக அவர் தங்களுடன் நேசம் பாராட்ட முடியவில்லை.

''அதனால் இருவரும் ஊர் உலகத்தை ஏமாற்றிக் கபடமாக வாழ விரும்பினீர்கள். தமது மூதாதையர் விட்டுப்போன மாந்தோப்பு வீட்டைத் தங்களுக்காக என் தந்தை அழகாகச் செப்பனிட்டுப் பாதுகாத்து வந்தார். அங்கே கட்டையனும் அஞ்சலையும் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். அதிகமான ஊதியம் கிடைக்கும் என்ற பேராசையில் கட்டையன், நீங்கள்

செய்த பல சதிகளுக்கும் கூட்டாளியாக இருந்தான். உங்கள் தமையனாருக்கும் பண்ணையாரது மோகம் எல்லா வழிகளிலும் நன்மையாகவே முடிந்தது. நாளுக்கு நாள் அவரது செல்வாக்கும் ஊதியமும் பண்ணையில் உயர்ந்தன. கூரைவீட்டில் வசித்து வந்த அவர் தங்கள் மூலம் பணக்காரராகி, மாடி மேல் மாடிவைத்து வீடு கட்டிக்கொண்டு, பரம்பரை செல்வந்தர்போல் ஸில்க் ஜிப்பாவும், சரிகை அங்கவஸ்திரமும், வைரக்கடுக்கனுமாக ஜம்மென்று சுகபோக வாழ்க்கை வாழத் தொடங்கினார். தங்களது கள்ள நட்பிற்கு மாந்தோப்பு பங்களா சந்திக்கும் இடமாக இருந்தது. வெகுகாலம் என் தாயாருக்கு என் தந்தையின் மோகம் தெரியவராமல் இருந்தது. அஞ்சலை ஆரம்பத்திலே இந்தச் சதியில் கணவனுடன் பங்கிட்டுக்கொண்டு துணைபுரிந்த போதிலும், அவளது பெண் உள்ளம் நாளடைவில் பெரும் போராட்டத்தைத் துவக்கிவிட்டது. கற்புக்கரசியான என் தாயாருக்குப் பண்ணையார் செய்து வந்த துரோகத்தை அவள் நீடித்துப் பொறுத்துப் பார்த்துக் கொண்டிருக்க விரும்பவில்லை.

''ஒரு நாள் மனம் ஒப்பாது நேரே பண்ணைக்கு வந்து எல்லாவற்றையும் என் தாயாருக்குக் கூறிவிட்டாள் அஞ்சலை. அது சமயம் தாங்கள் பூரண கர்ப்பமாக இருந்தீர்கள். மறுமுறை தாங்களும் என் தந்தையும் ஒருவரையொருவர் சந்திக்க மாந்தோப்பு பங்களாவிற்கு வந்திருந்த சமயம் என் தாய் திடீரென்று அங்கு தோன்ற, உங்கள் இருவரையும் நேரிடையாகக் கண்டுவிட்டார்கள். அன்று தினம் ஒரு பெரிய யுத்தம் அங்கே நடந்தது என்றால் மிகையில்லை. அன்றிலிருந்து என் தாய் மீது உங்களுக்கு அடங்காத பொறாமையும் ஆத்திரமும் உண்டாயின. அவளது வாழ்க்கையை நாசப்படுத்த நீங்கள் கொஞ்சமும் அஞ்சாது பல சூழ்ச்சிகள் செய்தீர்கள். தங்கள் மேல் கொண்ட கரை காணாத மோகத்தில் என் தந்தை நீங்கள் ஆட்டிவைத்தபடியெல்லாம் ஆடினார்.



31505
4757969

''தங்களுக்குப் பிறக்கவிருந்த சிசுவை அழித்து விடு வதற்கு என் தந்தை டாக்டர் குருமூர்த்தியின் உதவியை நாடினார். ஈனமான இந்தக் காரியத்தைச் செய்ய அவர் மறுத்ததனால் அவர்மீது கோபம் கொண்டு வேலையினின்று நீக்கிவிட்டார் என் தந்தை. தங்களுக்கும் அவர் மீது இதன் பொருட்டு மனத்தாங்கல். என் தாயார் மீது தங்களுக்கு இயற்கையாக வளர்ந்து வந்திருந்த பொறாமை இது சமயம் ஒரு சூழ்ச்சி செய்தது. குருமூர்த்தி பண்ணையின் குடும்ப வைத்தியராக இருந்தவர். என் தாயார் அவரைத் தந்தைக்குச் சமமாக மதித்து அன்பு பாராட்டி வந்திருந்தார். இதைத் தாங்கள் வேண்டுமென்றே வஞ்சமாகக் கதை திரித்து என் தந்தையை நம்பும்படி செய்து விட்டீர்கள். மாசற்ற என் தாய்மீது வீண்பழி சுமத்தி, அவர்கள் டாக்டர் குருமூர்த்தியுடன் நட்பு பாராட்டுவதாக வீண் கதையைக் கட்டிவிட்டீர்கள். என் தாயாருக்கும் தந்தைக்கும் இதனால் பெரும் மனஸ்தாபம் ஏற்பட்டது. தாம் செய்த துரோகத்தைக் கொஞ்சமும் பண்ணையார் நினைத்துப் பார்க்கவில்லை. ஆனால், மனைவி நெறி தவறி விட்டாள் என்ற போது அவர் நெஞ்சம் பொறுக்கவில்லை. என் தாயை அவள் கர்ப்பிணி என்று கூட இரக்கம் காட்டாது சொற்களாலும், செயலாலும் சித்திரவதை செய்தார்.

''மாந்தோப்பு பங்களாவில் தங்களுக்கு ஒரு நாள் இரவு ஆண் சிசு பிறந்தபோது அதே சமயம் என் தாயாருக்குச் செல்வமகளாக நான் பண்ணை மாளிகையில் பிறந்தேன். மனைவியையும் குழந்தையையும் பார்க்கக்கூடப் பண்ணை யாருக்குப் பொழுது இருக்கவில்லை. கள்ளநட்பின் பயனாகப் பிறந்த பிள்ளைகளை நீங்களோ, உங்கள் சகோதரரோ இந்த உலகில் வாழும்படி விடச் சம்மதிக்கவில்லை. அதன் பயனாக என் தந்தை தமது அதிகாரத்தை உபயோகித்து கட்டையனை, பயமுறுத்தி அவனை சிசு ஹத்தியில் ஈடுபடச் செய்துவிட்டார்.

பணத்திற்கும், பண்ணைச் செல்வாக்கிற்கும் பயந்து கட்டையன், பிறந்த அந்தச் சிசுவை நிம்மதியாகக் கொலை செய்து மாந்தோப்புத் தோட்டத்திலேயே அடக்கம் செய்துவிட்டான். காரியம் என்னவோ நொடியில் முடிந்து விட்டது. ஆனால் அன்றிலிருந்து கட்டையனும், என் தந்தையும் மானேஜர் வரதராஜன் கையில் பலமாகச் சிக்குண்டு விட்டனர். மானேஜர் போட்ட தூபத்திற்குத்தக்கபடி பிடித்ததோ பிடிக்க வில்லையோ அவர் கூத்தாட வேண்டியிருந்தது.

"பொருள் அனைத்தையும் கொள்ளை கொண்டது போதாதுபோல், நீங்களும் உங்கள் தமையனும் சேர்ந்து என் தாயாருக்கு எல்லையற்ற துன்பங்களை உண்டாக்கினீர்கள். உங்களுக்கு இரண்டாவது பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அதுவும் முதல் குழந்தையின் முடிவைத் தொடர்ந்தபோது, என் தாய் சகிக்க முடியாது என்னை எடுத்துக்கொண்டு கட்டின புடவையுடன் தன் பிறந்தகம் புறப்பட்டுச் சென்றுவிட்டாள். என் தாயைக்குற்றம் சொல்ல முடியாது. துரோகம் செய்யும் கணவன், அவனைக் கைப் பொம்மையாக ஆட்டி வைக்கும் நீங்கள் இருவரும் செய்த கொடுமை, நீங்கள் கட்டிவிட்ட வீண் கதையை நம்பி மிகவும் இழிவாக நடத்திய மாமியாரின் மனப்போக்கு இவை அனைத்தையும் அவர்கள் எத்தனை நாட்கள் பொறுப்பார்கள்? என் தாய் புறப்பட்டுச் சென்ற பின்னர் சில வருஷங்கள் கழிந்ததும் தான் என் தந்தைக்கு அறிவு உதயமாகத் தொடங்கியது. ஆனால், தங்களையோ தங்கள் தமையனையோ அவரால் உதறி எறிந்து தள்ளிவிட முடியவில்லை. உடும்பு போன்ற உங்கள் இருவரின் பிடியிலே சிக்குண்டு அவருக்கு நாளா வட்டத்தில் வாழ்க்கை வேம்பாகிவிட்டது. அவர் காலத்திற்குள் அவர் என் தாய் எப்படிப்பட்ட உத்தமி என்பதையும் உணர்ந்து கொண்டார், வருந்தினார், துடித்தார். ஆனால் கடந்து போனதை அவரால் ஈடு செய்ய முடியவில்லை.



இதற்கிடையில் உங்கள் தமையனார் என் தந்தையின் சொத்து அனைத்தையும் தாமே கவர்ந்து கொள்ளப் பல வழியிலும் திட்டங்கள் வகுத்தார். அனாதைபோல் நகரத்திலே வாழ்ந்துவந்த தமது மனைவியை நினைத்த பொழுது பண்ணையார் தமது முடிவு காலத்தில் ஏமாற்றி விட விரும்பவில்லை. அதனால் வரதராஜனுக்குத் தலை ஆட்டிக்கொண்டே இருந்துவிட்டு, தமது வக்கீலை அழைத்து வேறாக ஒரு தனி உயில் எழுதி, தமது புத்திரிக்குச் சகல சொத்துக்களையும் விட்டு விட்டுச் சென்றுவிட்டார்.

"வரதராஜனுக்கும் தங்களுக்கும் பெரிய ஏமாற்றம் ஏற்பட்டது உண்மை. என் தந்தை முதலில் வாக்களித்தபடி உங்கள் இருவருக்கும் தமதுஉயிலில் எதும் எழுதி வைக்க வில்லை. ஆனாலும் நீங்கள் இருவரும் நம்பிக்கையை இழக்க வில்லை. என்னைக்கொண்டு அந்த ஆசையைத் தீர்த்துக் கொள்ள விரும்பினீர்கள். தங்களது அருமை அண்ணன் மகன் ரங்கதுரைக்கு என்னைக் கட்டிவைத்து விட வேண்டும் என்று ஆரம்பத்திலிருந்து பெரிய திட்டத்தை அண்ணனுடன் தங்கை ஒத்திருந்து அமுல் செய்தீர்கள். ஆனால் பண்ணையாரின் மகள் மனம் அதற்கு இடம் கொடுக்க வேண்டாமா? தங்களது சூழ்ச்சிகள் பலிக்கவில்லை என்றதும், தங்கள் அருமைத் தமையன் இங்கிருந்து ராஜினாமா செய்துவிட்டுப் போய்விட்டார். தம்முடன் பண்ணை நிர்வாகத்தை அப்படியே ஸ்தம்பிக்கச் செய்து விட வேண்டும் என்பது அவரது ஆசை. அவருடைய அருமை புத்திரனோ, தாய் பத்தடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும் என்றபடி, தந்தையைச் சூழ்ச்சிகளில் மிஞ்சிவிட்டார்.

"நான் இவை அனைத்தையும் அறிவேன். ரங்கதுரை தாம் செய்துள்ள சூழ்ச்சிக்குத் தக்க தண்டனையை விரைவில் அடையத் தவறமாட்டார். அபலைப்பெண், உலக விவகாரம் அதிகம் அறியாதவள். புதிய ஊரில் வந்து நமது கையில்

சிக்குண்டாள் என்று நீங்கள் மூவரும் கொக்கரிக்க வேண்டாம். என்னைக் காத்துக் கொள்ளவும், என் பண்ணை விவகாரத்தைக் கவனிக்கவும் எனக்கு ஆற்றல் உண்டு'' என்று மூச்சுவிடாது உணர்ச்சி வசத்துடன் ஆத்திரமாகப் பேசிய உமா, சற்றுத் தடுமாறியவளாக நிறுத்தினாள்.

கண் இமைகளைக் கூட அசைக்காது கேட்டு வந்த ஷண்பகவல்லி, இதுவரை கைக்கொண்டிருந்த மரியாதையை உதறிவிட்டு, ''நீ மிகவும் கெட்டிக்காரி என்பது இத்தனை நேரம் நீ கூறியதிலிருந்தே புரிகின்றதே! வந்ததிலிருந்து துப்புமேல் துப்பாக அலசிப் பார்த்து இவ்வளவு உண்மைகளைக் கண்டுபிடித்திருக்கிறாயே? உன் சாமர்த்தியத்தை மெச்சிக் கொள்ளாது இருக்க முடியுமா? ஆமாம், இத்தனை பெரிய பிரசங்கம் எதற்காக என்னிடம் செய்ய வேண்டும்?'' என்றாள் இகழ்ச்சியாக.

உமா அவளது ஏளனத்தைக் காதில் வாங்கிக்கொள்ள வில்லை. ''என் வாழ்க்கையில் நீங்கள் குறுக்கிட்டதனால் இவைகளைக் கண்டுபிடித்து விட்டேன் என்று உங்களுக்குக் கூறி, மேலே அதிகம் குறுக்கிட்டுக் குழப்பாதிருக்க எச்சரிக்கவே இன்று இங்கே உங்களை அழைத்தேன். நான் கூறியவைகளில் எதையாவது தாங்கள் உண்மையல்ல என்று ஆக்ஷேபிக்க முடியுமா?'' என்று கேட்டாள் கோபத்துடன்.

ஷண்பகவல்லி ஆசனத்தினின்று குதித்து விடுகிறவள் போல் எழுந்தாள், ''போதும் பெண்ணே! போதும்! நீ பேசிக்கொண்டிருப்பதை நான் பொறுமையுடன் கேட்டுக் கொண்டே இருப்பேன் என்று எண்ண வேண்டாம். நீ கூறியது அனைத்தும் உண்மைதான். நான் இல்லை என்று மறுக்க வில்லை. அதனால் நீ என்ன இப்போது செய்து விடப் போகிறாய்? என் தலையை வாங்கி விடுவாயா, என்ன?'' என்று மிகவும் குரோதமாகக் கேட்டாள்.



''அப்படிச் செய்ய முடிவதாக இருந்தால் மிகவும் மகிழ்ச்சியுடன் செய்து முடிப்பேன். என் தாயின் வாழ்வைக் கெடுத்த விஷப் பாம்பல்லவா நீங்கள்!'' என்று ஆத்திரமாகப் பற்களைக் கடித்தபடி உமாவும் எழுந்து நின்றாள். உணர்ச்சி வேகத்தில் அவளது உடல் கிடுகடுவென்று நடுங்கியது

ஷண்பகவல்லி பற்களை நறநறவென்று கடித்தாள், ''உன் தாயின் வாழ்வை நானா நாசமாக்கினேன்? அவள் அல்லவா என் ஆசைக் கனவைத் தகர்த்துப் பொடி செய்தவள். இத்தனை விஷயம் கண்டுபிடித்தாயே, இன்னும் சில உனக்குத் தெரியாததைச் சொல்கிறேன். கேட்டுக்கொள், உன் தாயாரை ஏகாம்பரம் அவர்கள் மணந்துகொள்ளும் முன்பே என்னுடன் தொடர்பு கொண்டிருந்தார். என் பொருட்டு தாம் விவாகமே செய்து கொள்ளப்போவதில்லை என்று சபதமும் செய்திருந்தார். ஆனால் ஏகாம்பரம் போன்ற சபல புத்தியுடையோரின் சத்தியத்திற்கு அர்த்தம் ஏது? சில வருஷங்கள் கழித்து பண்ணையார் உன் தாயை விவாகம் செய்து கொண்டார். வைதேகிமீது கொண்டிருந்த புது மோகத்தில் சில வருஷம் என்னைக் கூட மறந்து புறக்கணித்து விட்டார். என்னை அப்படி உதறித் தள்ளும்படி தன்வசம் கவர்ந்துகொண்ட உன் தாய் மீது எனக்கு ஆசையா பொங்கி வரும்? அவளை நான் விஷம்போல் வெறுத்தேன். கொஞ்ச நாள் கழித்து மறுபடி உன் தந்தை என் அன்பிற்கு ஏங்கி ஓடி வந்தார். அதுசமயம் நான் என்னுடைய சாமர்த்தியம் முழுவதையும் உபயோகித்து அவர் என்றென்றும் எனது அடிமையாக இருக்கும்படி சொற்களாலும் செயலாலும், சாகசத்தாலும் கவர்ந்துகொண்டு விட்டேன். எங்களைப் பிரித்த உன் தாயின் வாழ்க்கையை நாசப்படுத்த பல வழிகளிலும் திட்டமிட்டேன். எனது சூழ்ச்சிகள் பலித்தன.

''உன் தாயை வீட்டை விட்டே வெளியே ஓட்டி விட்டேன். அனாதைபோல் அவள் வறுமையில் வாடி உயிரை விட்டாள்.

அவளது ஸ்தானத்தில் நான்இருந்து கொண்டு பண்ணையாரின் அளவற்ற ஐஸ்வரியத்தின் போகத்தை அனுபவித்த வண்ணம் இன்பமாக வாழ்ந்தேன். பல வருஷங்கள் பண்ணையார் தமது செல்வம் அனைத்தையும் என் காலடியில் போட்டுவிட்டு, அடிமையிலும் அடிமையாக நான் சொன்னபடியெல்லாம் நடந்துகொண்டு வாழ்ந்தார். அதனால் அம்மா உமாமகேசுவரி! வெற்றி என்னுடையது என்பதை மறக்காதே. அன்புப் போட்டியில் ஜெயித்தவள் நான்! தோற்றவள் உனது தரித்திரம் பிடித்த தாய்! வறுமையில் வாடி, நோயினால் அணு அணுவாகத் தேய்ந்து இறந்தாளே, அதைப்பற்றி எனக்கு ரொம்பவும் சந்தோஷம்'' என்றாள் மிகவும் கொடுமையான உரத்த குரலில்.

''வெற்றி! இதுவா வெற்றி? சமூகத்தின் முன்னால் என்னிடம் பேசியது போல் துணிவாகப் பேச முடியுமா உங்களுக்கு? கேவலம் பணத்திற்காகப் பாபகாரியங்களைச் செய்துவிட்டு வெற்றி என்று அகங்காரமாகப் பேசுகிறீர்கள்! உண்மையில் தோற்றவர்கள் நீங்கள்தான் என்பதை உங்கள் மனச்சாக்ஷி நன்றாக வற்புறுத்திக் கொண்டிருக்கும். உங்கள் அன்பு தூயதாக இருந்திருந்தால் என் தந்தை பாலியவிதவை என்பதைப் பாராட்டாது உங்களைப் பகிரங்கமாக மணம் புரிந்துகொண்டு வாழ்ந்திருப்பார். அதற்குத் தகுதியற்றவள் என்றதனால்தான் உங்களை உதறிவிட்டு என் தாயை மணந்து கொண்டார். தோற்றுப்போனது நீங்கள். இதில் வெற்றி முரசம் கொட்டுவற்கு என்ன இருக்கிறது.நெற்றியில் திருநீரும் ஜெபமாலையுமாக ருத்திராஷப் பூனை வேஷம் போட்டு சமூகத்தை ஏமாற்ற வேண்டாம். இனியாகிலும் பாவ காரியங்களை மறந்து, செய்த பிசகிற்குப் பகவானைப் பிரார்த்தித்து, பக்தியுடன் வாழ முயற்சியுங்கள். அதுதான் நான் கூறும் ஆலோசனை'' என்றாள் உமா பதிலுக்கு.

ஷண்பகவல்லி ஏளனமாக நகைத்தாள். ''மகளே! உன் புத்திக்கு மெத்த வந்தனம். முதலில் உன்னைச் சீர்படுத்திக்



கொண்டு பிறருக்குப் புத்திசொல், உன்னைப் பற்றிஊரார் பேசுவதைக்கேட்டால் நீ நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகவேண்டும். அத்தனை அவதூறு ஊரில் கிளம்பியுள்ளது. உன் தாயைப்பற்றி ரொம்பவும் பிரமாதப்படுத்திக்கொள்ள வேண்டாம். அவள் அப்படிப்பட்ட பெரிய உத்தமியொன்றும் இல்லை. அவளுக்கும் வைத்தியருக்குமிடையே இருந்த நட்பைப்பற்றி ஊர் உலகம் முழுவதும் அறியும்'' என்று கோபத்துடன் கத்திவிட்டு, பதிலுக்குக் காத்திராது 'விர் என்று வேகமாக வெளியேறிவிட்டாள்.'

இவ்வளவு நேரம் உணர்ச்சி வசத்திலே பேசி வந்த உமாவின் நெஞ்சமும் கால்களும் பதறின. கடைசியாக ஷண்பகவல்லி கூறிச்சென்ற சொற்கள் அவளது மென்மையான உள்ளத்தை வாள் போட்டு அறுப்பதுபோல புண்ணாக்கின.

அன்று மாலை சூரியன் அஸ்தமிக்கும் தருவாயில் காரை எடுத்துக்கொண்டு உமா குருமூர்த்தியின் ஜாகைக்குப் புறப்பட்டாள். அந்த வேளை அவர் தமது அன்றாட அலுவல்களை ஒரு வழியாக முடித்துவிட்டுக் கொஞ்சம் ஓய்வாக இருப்பார் என்பதை அவள் அறிவாள். வில் வண்டியைக் கள்ளர்கள் தாக்கியபோது உதவியதிலிருந்து டாக்டர் குரு மூர்த்திக்கும், அவளுக்கும் இடையே பரஸ்பரம் நல்லதொரு அபிப்பிராயம் வளர்ந்து வந்திருந்தது. முன்போல் மிகவும் மிடுக்காக அவர் பேசுவதை நிறுத்திக்கொண்டிருந்தார். உமாவும் அவரிடம் பணிவாக நடந்து கொள்ளப் பழகிக் கொண்டிருந்தாள்.

எனவே, அன்று சாயங்காலம் இருட்டும் சமயம் திடீரென்று தன்னைக் காண வந்திருந்த அந்தப் பெண்ணை அவர் சுமுகமாக வரவேற்றார். அவர் அளித்த ஆசனத்தில் உமா அமர்ந்து கொண்டாள். சுற்று முற்றும் பார்த்து, யாரும் இல்லை என்றதைக் கண்டதும் ஒன்றும் மறைக்காது தனக்கும்

ஷண்பகவல்லிக்கும் அன்று நிகழ்ந்த சம்பாஷணை அனைத்தையும் குருமூர்த்தியிடம் கூறி முடித்தாள்.

அமைதியாக எல்லாவற்றையும் கேட்ட வைத்தியர் ''மிஸ் உமா? உங்கள் ஸ்தானத்தில் நான் இருந்திருந்தால் என்ன செய்திருப்பேன் தெரியுமா? கஷ்டப்பட்டு உண்மைகளைத் துப்பறிந்து கொண்டதுடன் திருப்தி அடைந்திருப்பேன். ஷண்பகவல்லியிடம் அவைகளைப்பற்றி பேசியிருந்திருக்க மாட்டேன். மறைந்துபோன பழைய விஷயங்களைப்பற்றி இப்போது பேசியதால் யாருக்கு என்ன பயன்?'' என்று கேட்டார்.

''இல்லை, டாக்டர் ஸார்! பயன் இல்லாதுபோகவில்லை. மனச்சாந்தி இல்லாது துடித்த எனக்கு இப்போது ஓரளவுக்கு மன அமைதி ஏற்பட்டுவிட்டது. என் தாயையும் தந்தையையும் பிரித்த அந்த ரகசியத்தைப் பாடுபட்டுத் தெரிந்து கொண்டுவிட்டேன். இதில் ஓர் ஆச்சரியம் என்ன வென்றால், அஞ்சலை என்னிடம் கூறிய ரகசியம் மிகவும் கொஞ்சமே. அவள் கூறிய கொஞ்ச விஷயங்களை வைத்துக்கொண்டு மீதியை என் கற்பனையால் ஜோடித்து, ஷண்பகவல்லியை மிரட்டினேன்.. நான் பேசிய தோரணையைக் கண்டு அவள் பயந்து போய் உண்மையை ஒப்புக்கொண்டு, நான் அறியாத பல உண்மைகளையும் தானே கூறிவிட்டாள்''.என்றாள்.

''ஷண்பகவல்லியை விரோதித்துக் கொண்டது அவ்வளவு நல்லதல்ல. என்னைப்போன்ற ஆண்பிள்ளையாக இருந்தால் இந்த விரோதத்தைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். நீங்களோ அனுபவம் அதிகமில்லாத சிறு வயதுப்பெண். தன்னந்தனியாக வசிக்கிறீர்கள். நீங்கள் கூறும் சில விஷயங்களிலிருந்து வீட்டிலேயே சூழ்ச்சிக்காரர்கள் உங்களைச் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. அம்மா உமா!உங்களைப்பற்றி நான் மெத்த கவலைப்படுகிறேன்.



ஷண்பகவல்லி பெரும் நெருப்பு, அவளுடன் விளையாடுவது தவறு'' என்றார் கவலையுடன்.

உமா பதிலுக்கு மெல்லியதாக புன்னகை செய்தாள். ''டாக்டர் ஸார்! கடைசி முறையாக உங்களிடம் ஒரு வேண்டுகோள், தயவுசெய்து உண்மையைச் சொல்ல வேண்டும். எனக்கு மறுக்கக் கூடாது. நீங்கள் மறுத்தால் என் வாழ்நாள் முழுவதும் நான் ஒரு மனப்போராட்டத்திலே சதா துன்புறுத்தப்பட்டுத் துயரத்துடன் சாவேன். சத்தியமாகச் சொல்லுங்கள், என் தாயார் எப்படிப்பட்ட பெண்மணி? அவர் மேல் சுமத்தப்பட்ட குற்றம் உண்மையில் ஆதாரமற்றதா! இந்தச் சந்தேகத்தை தயவுசெய்து தீர்த்து வையுங்கள். உங்களை நான் கையெடுத்துக் கும்பிடுகிறேன்''என்றாள்.

டாக்டர் குருமூர்த்தி பதில் கூறாது அறையிலிருந்த ஒரு மர பீரோவைத் திறந்தார். பல புத்தகங்களுக்கு இடையே இருந்த ஒரு சிறுதோல் பையை எடுத்துத் திறந்தார். அதற்குள் அடுக்கடுக்காகக் கிடந்த பல கடிதச்சுருள்களுக்கு அடியிலிருந்து மிகவும் பழையதாக, மடிந்து நைந்துபோன ஒரு கடிதத்தை எடுத்து அவளிடம் நீட்டினார். ''உன் தாயார் எப்படிப்பட்டவர்கள் என்பதை இக்கடிதம் கூறும்'' என்றார் சுருக்கமாக. உமா பரபரப்புடன் அதைக் கையில் வாங்கிப் பிரித்துப் படித்தாள்.

''அன்புள்ள டாக்டர் அவர்களுக்கு வைதேகி அநேக நமஸ்காரம் செய்து எழுதியது. தங்களை நேரில் சந்தித்து விடைபெற முடியாததனால் இதை எழுதுகிறேன். தங்களை என் தந்தையைப்போல் கருதி என மனத் துயரமனைத்தும் கூறி இதுகாறும் ஆறுதல்பெற்று வந்தேன். எனது பரிசுத்தத் தன்மையை தெய்வம் அறியும். நான் எப்படிப்பட்ட பெண் என்பதைத் தந்தை போன்ற தாங்கள் அறிவீர்கள். ஷண்பகம் வீணாகத் தங்கள் மீது கொண்ட ஆத்திரத்தில் எனது நடத்தைமீது களங்கம்

சுமத்தி விட்டிருப்பதை எண்ணி எண்ணி என் நெஞ்சு கொதிக்கிறது. பண்ணையாரும் அவரது தாயாரும் என்னை நடத்தும் முறையை இனி க்ஷணமும் என்னால் சகிக்க முடியாது. அதனால் நான் என் குழந்தையுடன் இங்கிருந்து புறப்பட்டுவிடத் தீர்மானித்துவிட்டேன். இதுகாறும் எனக்குப் பெற்ற தந்தைபோல் பல வழிகளிலும் புத்தி சொல்லி மனச்சாந்தி கொடுத்த தங்களுக்கு என் நன்றி. தங்களை மீண்டும் நான் சந்திப்பேன் என்று நம்பவில்லை. ஒரு சமயம் பண்ணையார் மனம் திருந்தி என் மகளைத் தம் வசம் அழைத்துக்கொண்டார் என்றால், அவளை என் பொருட்டுத் தாங்கள் கவனித்துக்கொள்ள வேண்டும். ஒரு சமயம் ஊரில் வீணாகப் பரவி நிற்கும் இந்தப்பொய் வதந்தி அவள் காதுகளுக்கு எட்டி, அவள் தாயைப் பற்றிச் சந்தேகிக்க நேர்ந்தால், அறிவில் மிக்க தாங்கள் அந்த சந்தேகத்தைப் போக்கி எனது களங்கமற்ற தன்மையை நிருபிக்க வேண்டும். இதுதான் எனது கடைசி கோரிக்கை.

இப்படிக்கு
வைதேகி''

கடிதத்தைப் படித்த உமா கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாது வெகுநேரம் விம்மி விம்மி அழுதுவிட்டாள். தான் கொஞ்ச நாட்களாக அனுபவித்த அந்த மனப்போராட்டத்தை முன்கூட்டியே எதிர்பார்த்துத் தன் தாய் எழுதியிருந்த அந்தக் கடிதம், அவள் உள்ளத்தில் பல்வேறு உணர்ச்சிகளை எழுப்பி, அவளைத் துயரக் கடலில் கொஞ்ச நேரம் குமுற வைத்துவிட்டது. ஒரு வழியாகத் தன்னைச் சமாதானப்படுத்திக்கொண்டு ''டாக்டர் ஸார்? உங்களுக்கு என் நன்றியை எப்படித் தெரிவிப்பது என்றே தெரியவில்லை. இந்தக் கடிதத்தை நான் என்னுடன் வைத்துக் கொள்ள அனுமதிப்பீர்களா?'' என்று கெஞ்சிக்கேட்டாள்.



''அந்தக் கடிதம் உங்களுடைய சொத்து. உங்கள் தாயின் வேண்டுகோளின்படி அதை உங்களிடம் சேர்த்துவிட்டேன். பிரமாதமாக நான் ஏதும் செய்து விடவில்லை. அதனால் தாங்கள் நன்றி தெரிவிக்க வேண்டியது அவசியமல்ல'' என்று கூறிவிட்டு, முதன் முதலாக டாக்டர் குருமூர்த்தி அவளை அன்போடு நோக்கிப் புன்னகை செய்தார். கொஞ்சநேரம் அவரிடம் பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசியிருந்துவிட்டு மிக்க மன நிம்மதியுடன் உமா அன்று வீடு திரும்பினாள். பல நாட்களாக உள்ளத்தை வருத்திய பயங்கர உணர்ச்சி மறைந்ததும் ஏற்பட்ட அமைதியில் அன்று இரவு அவள் தன்னையுமறியாது மிகவும் நிம்மதியாக உறங்கிவிட்டாள்.

நடு இரவின்போது திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். தொண்டையைக் கமறிக்கொண்டு ஏதோ நெடி எழும்பி வருவதைக் கண்டு அச்சமுற்று கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். வாசலில் ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது. நித்திரை கலக்கத்தில் பண்ணையார் மாளிகையைப் பெருந்தீ சூழ்ந்து கொண்டு விட்டது என்பதை அறிந்து கொள்ள அவளுக்குச் சில நிமிஷங்கள் சென்றன.

## 27

சிவகுமார் வீட்டின் முன் பக்கத்துச் சிறு ரேழியில் மிகவும் பொறுமையுடன் உமாமகேச்வரி அன்று காலை வெகு நேரம் காத்திருந்தாள். சுவரின்மீது சாய்ந்த வண்ணம் முக்காலி ஒன்றில் அமர்ந்துகொண்டு திறந்த கதவு வழியே வெளிப்புறத்தில் தெரிந்த சாலையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். வெளியே ராஜபாட்டையின் திருப்பத்திலே வளர்ந்து நின்று கொண்டிருந்த இரண்டு பெரிய கொன்றை மரங்கள் இலை தெரியாது பூத்துக்குலுங்கிக் கொண்டிருந்தன. செக்கச்

செவேலென்று இளஞ் சூரிய வெளிச்சத்திலே தென்றலுக்குத் தலையசைத்துக் கொண்டிருந்த அந்தப் பூக்கள், சில தினங்களுக்கு முன்பு பண்ணையாரின் மாளிகையின் பெரும் பகுதியைத் தன் பசிதீர வேகமாகக் கபளீகரம் செய்துவிட்ட அக்னி ஜ்வாலையின் சிவந்த நாக்குகளை அவளுக்கு ஞாபகப்படுத்தின. நெருப்புப்போல ஜ்வலித்த சிவந்த இதழ்கள் கொண்ட கொன்றைப் புஷ்பங்களைக் கண்கொட்டாது வெகு நேரம் அவள் ஊன்றிப் பார்த்துக் கொண்டிருந்தாள். சில தினங்களுக்கு முன் நடந்த அந்தச் சம்பவங்கள் அனைத்தும் அவள் மனக்கண் முன் ஒன்றன்பின் ஒன்றாக சுழலத் தொடங்கின.

தூக்கத்தினின்று திடுக்கிட்டு விழித்துக் கொண்ட உமாவுக்குத் தன் நிலைமையைப் பற்றிப் புரிந்துகொள்ளக் கொஞ்சநேரம் சென்றது. தீ நாலாபக்கமும் பரவிக்கொண்டு வருவதை அறிந்ததும் அவளுக்குச் சட்டென என்ன செய்வது என்றே புத்தி ஓடவில்லை. குழப்பத்துடன் மாடிப்படிகளை வேகமாகக் கடந்து வாயில் பக்கம் அவளால் வெளியேற முடியவில்லை. கோடைக்காகப் போடப்பட்டிருந்த வாயில் கொட்டாரப் பந்தல் தீப்பிடித்துக்கொண்டு திகுதிகுவென எரிந்துகொண்டிருந்தது. அதனின்று வெளிப்பட்ட புகையும் அனலும் காற்று வாக்கில் உட்புறத்தில் வேகமாக வீசவே உமாவுக்கு மூச்சுத்திணறிவிட்டது. சற்றுத் தாமதித்தாலும் புகை நெடியில் மயக்கம் வந்து விடும்போலத் தோன்றவே பீதி மிக்கவளாக அவள் தலைதெறிக்க மாளிகையின் பின்கட்டை நோக்கி ஓடினாள்.

பின் கட்டின் பக்கமும் தீ நன்றாகப் பரவிவிட்டிருந்தது. பின் கட்டு வாயில் கதவும் நிலைப்படியும் தீயில் படபடவென்று ஓசையுடன் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருப்பதைக் கண்டாள். முன்னும் பின்னும் போக முடியாது நெருப்பு தன்னை



மடக்கிக் கொண்டதைக் காண, திகிலுடன் சுற்றுமுற்றும் ஓர் வழியுண்டா என்று திரும்பிப் பார்த்தாள்.

தோட்டத்தினின்று வீசிய காற்று, எரிந்த கரித்தூளையும், புகையையும், அனலையும் சுமந்துகொண்டு உள்ளே வீசவே, இன்னும் சற்று நேரம் அங்கேயே நின்றுகொண்டிருந்தால் அவளது மென்மையான, தேகம் பஸ்மீகரம் ஆகிவிடும் போல இருந்தது!

நிமிஷத்திற்கு நிமிஷம் தனது நிலை பயங்கரமாகிக் கொண்டு வருவதைக் கண்டதும், உமா திடீரென்று யோசனை பெற்றவளாக சாமான் வைக்கும் அறையின் பக்கம் ஓடினாள். இடதுபுறத்தில் அந்த அறைக்குள் ஒரு சிறு கதவு இருந்தது. அக்கதவு வெளிப்புறத்துத் தோட்டத்திற்குப் போகும் வழியை அடைத்துக் கொண்டிருந்தது. பல நாட்களாகத் திறக்காது உட்புறம் தாளிடப்பட்டிருந்ததனால், கதவின் தாழ்ப்பாள் துருவேறி நன்றாகக் கதவுடன் அழுத்தமாகப் பொருந்திக் கொண்டிருந்தது. உயிருக்கு மன்றாடும் நேரத்தில் யாருக்கும் ஏற்படக்கூடிய அசாதாரணமானதொரு சக்தி உமாவுக்கு அது சமயம் ஏற்படவே, பற்களைக் கடித்துக்கொண்டு தனது பலம் முழுவதையும் உபயோகித்து அந்தத் தாழ்ப்பாளை அழுத்தி இழுத்தாள். முதல் முயற்சியில் தோல்வி ஏற்பட்டபோதிலும் அடுத்த முயற்சியில் தாழ்ப்பாள் வேகமாகக் கழன்று விழுந்தது.

கதவிற்கு முட்டுக்கொடுத்ததுபோல் கீழே அடுக்கி யிருந்த பாத்திரங்களை அவசரமாகக் காலால் உதைத்து அப்பால் தள்ளிவிட்டு, கதவை வேகமாக இழுத்தாள். படால் என்று கதவு திறந்து கொண்டது. உடனே தோட்டத்தின் குளிர்ந்த காற்று குப்பென்று வீசியது. சாமான் அறையில் எரிந்த விளக்கின் வெளிச்சம் தோட்டத்திற்குள் கொஞ்ச தூரம் வீசவே, அதன் உதவியால் அருகில் படர்ந்து கொண்டிருந்த முட்புதரின் மீது

விழுந்துவிடா வண்ணம், லாவகமாக அறையினின்று அருகிலிருந்த புல் தரைமீது குதித்து வெளியேறி, சுற்றிக் கொண்டு வந்த ஜ்வாலையின் அருகே செல்லாது, சற்றுத் தொலைவில் அபாயமற்று இருந்த ஒரு சிமெண்ட் மேடை மீது ஏறி நின்று கொண்டாள்.

ஓடி வந்த களைப்புத் தீரத் தன்னைச் சற்று ஆசுவாசப்படுத்தியவண்ணம் தனது சூழ்நிலையை ஆராய்ந்து கவனித்தாள்.

தோட்டாக்காரச் சின்னமுத்து உட்பட பண்ணையாட்களில் பலர் தோட்டத்துக் கிணற்றுக்கும், தீப்பிடித்து எரிகின்ற பகுதிகளுக்கும் இங்குமங்கும் கூச்சலிட்டவண்ணம் ஓடிக்கொண்டிருந்தனர். சிலர் தீயை அணைக்கத் தண்ணீரை பெரிய வாளிகளில் நிரப்பி வந்து வீசிக்கொண்டிருந்தனர். சிலர் தீயை அணைப்பதில் எதும் உதவி செய்யாத போதிலும், பீதி மிக்கவர்களாகப் பெருங் கூச்சலிட்டுக்கொண்டு, அங்கு இருந்த குழப்பத்தைப் பன்மடங்காக்கிக் கொண்டிருந்தனர்.

கொஞ்சநேரம் உமா பதைக்கும் நெஞ்சத்துடன் மாளிகையைச் சுற்றிப் பரவி வந்த தீயை பிரமிப்புடன் பார்த்துக்கொண்டு நின்றாள். தான் ஆபத்தினின்று தப்பி விட்டோம் என்று உணர்ந்து மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு மேற்கொண்டு என்ன செய்வது என்று யோசிக்க அவளுக்குக் கொஞ்ச நேரம் சென்றது. இரும்புக் குடத்திலே தண்ணீரை நிரப்பிக்கொண்டு மூச்சு வாங்க ஓடிக் கொண்டிருந்த சின்னமுத்து, எரிகின்ற ஜ்வாலை வெளிச்சத்தில் பண்ணை எஜமானியம்மாள் நிம்மதியாக ஒரு பக்கம் நின்று கொண்டிருப்பதைக் கண்டான்.

''இதோ! அம்மா இங்கே நிக்கிறாங்களே!'' என்று ஆச்சர்யத்துடன் கூவிக்கொண்டு, அவன், பண்ணையாட்கள்



சிலர் கும்பலாகக் கூடிக் குழப்பம் செய்து கொண்டிருந்த இடத்தை நோக்கி ஓடினான்.

அப்போதுதான் உமாவுக்குச் சட்டென நினைவுக்கு வந்தது. அவளது அறைக்கு அடுத்த அறையில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்த சுலோசனாவை எழுப்பியழைத்துக் கொண்டு வராது தான் மட்டும் ஓடிவந்து விட்டதை உணர்ந்தாள். வீட்டிற்குள் அனாதைபோல் வந்து ஒண்டிக்கொண்டு, வஞ்சகமாக உளவாளி வேலைசெய்த அந்தப் பெண்மீது உமாவுக்கு மிகவும் கோபம் என்றபோதிலும், நெருப்பிலே அவள் வெந்து மடிவதை உமாவின் மனம் ஒப்பவில்லை. ''அம்மா! தப்பிவந்து விட்டீர்களா? உள்ளே அகப்பட்டுக்கொண்டு விட்டீர்களென்ற கவலையிலே நாங்க தவிச்சுப் போயிட்டோம். நல்லவேளை, தப்பிவிட்டீங்க'' என்று வேலையாட்கள் பலர் சூழ்ந்துகொண்டு கூக்குரலிட்டனர்.

''ஐயா, நான் தப்பினது பற்றிப் பிறகு பேசலாம். யாராவது அந்தப்பெண் சுலோசனாவைக் காப்பாற்ற வழி செய்யுங்கள். மாடியில் உள்ள முன்பகுதி அறையில் அவள் தூங்கிக் கொண்டிருந்தாள்'' என்று பரபரப்பாகக் கூறிவிட்டு, திகிலுடன் கையைப் பிசைந்து கொண்டு நின்றாள்.

மாடி முன் வராந்தாவை அலங்கரித்துக் கொண்டிருந்த பச்சை வர்ணத் தட்டிகள் மீது சிவந்த நாக்கை நீட்டிக்கொண்டு அக்னி பகவான் உல்லாசமாகத் திருவிளையாடல் செய்து கொண்டிருந்தார். தீ மேலேயும் பரவிவிட்டதை திகிலுடன் பார்த்து நின்ற பண்ணை ஆட்கள் பெருமூச்சுவிட்ட வண்ணம் தலையை அசைத்தனர். ''அம்மா, இனிமேல் அங்கே போயும் பிரயோசனம் இல்லை. தீ நன்றாகப் பரவிவிட்டதே!'' என்று விரக்தியுடன் பதில் அளித்தனர். சுலோசனா உயிருடன் தீயிலே மன்றாடி வதங்கி இறந்துபோகப் போகிற பயங்கரக் காட்சியைத் தனக்குள் கற்பனை செய்து கொண்டு, நெஞ்சும் உடலும் பதற

மிரட்சியாக, எரிகிற மாளிகையைப் பார்த்த வண்ணம் உமா நின்றுகொண்டிருந்தாள். 'யாராவது தீரமாக, எரிகின்ற நெருப்பிலே பாய்ந்து அந்தப் பெண்ணைத் தூக்கிக் கொண்டு வந்துவிட மாட்டார்களா' என அவளது மனம் துடியாகத் துடித்தது.

அது சமயம் தோட்டத்தின் ஒரு பகுதியினின்று சிலர் கையில் பிடித்த ஹரிக்கன் விளக்குகளுடன் அவர்கள் நின்றுகொண்டிருந்த திக்கை நோக்கி விரைந்து ஓடி வந்தனர். "கொஞ்சம் தண்ணீர் வேண்டும் குடிப்பதற்கு. கொஞ்சம் நகருங்கள்" என்று கூவிக்கொண்டு, முன்னால் வந்த இரண்டு ஆட்கள், முறையே தோளின் மீது இரண்டு பேர்களைச் சுமந்துகொண்டு வந்தனர். ஆனால் காற்று வீச்சுக்குச் சற்றுத் தொலைவிலிருந்த அந்த இடத்தில் புல்தரை மீது தாங்கள் சுமந்து வந்த மனிதர்களைக் கிடத்திவிட்டு, "தண்ணீர் எங்கே? எவ்வளவு நேரம்? யாரய்யா, காதில் படவில்லையா?" என்று கூச்சலிட்டனர்.

தோட்டக்கார சின்னமுத்து ஒரு தகரக் குவளையில் கொஞ்சம் தண்ணீரை வார்த்து நிரப்பிக்கொண்டு அங்கே ஓடி வந்தான். ஹரிக்கன் விளக்கு எழுப்பிய மங்கிய ஒளியில் தரை மீது மயக்கமாகக் கிடந்த அந்த இரண்டு உருவங்களையும் உமா அதிசயத்துடன் உற்றுக் கவனித்தாள்.

நெருப்பிலே ஆடையும், கூந்தலும் பற்றி எரிந்துவிட்ட போதிலும், புல்தரைமீது கிடந்த முதல் உருவம் சுலோசனா வுடையது என்பதை அறிந்ததும் அவளுக்கு ஏற்பட்ட வியப்பை வர்ணிக்கவே இயலாது. குவளையில் கொண்டு வந்த நீரை எடுத்துத் தெளித்ததும், கண்களை லேசாகத் திறந்த இரண்டாவது உருவத்தை உற்றுப்பார்த்த உமா திடுக்கிட்டுப் போனாள். தீப்பிடித்துக் கருகிவிட்ட ஆடையில் உருத் தெரியாது கிடந்த அந்த உருவம், அவளது அன்பைக் கவர்ந்து விட்டிருந்த சிவகுமாரன் தான். நெஞ்சுபதற துயரத்திலே கண்கள் கலங்க,



அருகில் சென்று மெல்லக் குனிந்து பார்த்தாள். ஒரு வாய்த் தண்ணீரை விழுங்கிவிட்டு, நெருப்புக் காயங்களின் எரிச்சல் தாளமுடியாது அரற்றியபடி சிவகுமார் கண்களை மூடிக் கொண்டான்.

பண்ணை மாளிகை நெருப்புப் பற்றி எரிகிறது என்ற சங்கதியைக் கேட்டதும் சிவகுமார் தாமதம் செய்யாது தனது மோட்டார் சைக்கிளில் அங்கே விரைந்து வந்து விட்டான். உமாமகேஸ்வரி நெருப்பிற்குள்ளே சிக்கிக் கொண்டுவிட்டாள், என்று பண்ணை ஆட்கள் செய்த குழப்பத்தில், தன் உயிரையும் பொருட்படுத்தாது அவன் தோட்டத்தின் வலது பக்கத்திலே சுவரோரமாக வளர்ந்திருந்த மரத்தின்மீது ஏறி, அங்கிருந்தபடியே ஜன்னலுக்குத் தாவி, மாடியை அடைந்துவிட்டான். உமாமகேச்வரியின் அறை காலியாக இருப்பதைக் கண்டதும், பரபரப்பாக அடுத்த அறைக்குள் ஓடினான். காற்று வாக்கிலே மேலே பரவி வந்துகொண்டிருந்த நெருப்பு சுலோசனா படுத்திருந்த அறையின் ஜன்னல்களுக்குப் பரவி, திரைச்சீலையைப் பிடித்துகொண்டுவிட்டிருந்தது. பற்றி எரிந்த திரைச்சீலை அறுந்து படுக்கை மீது விழவே, நெருப்பு சுலோசனாவின் ஆடைகளில் பிடித்துக்கொண்டது. உள்ளே பரவி வந்த புகையின் நெடியில் சுலோசனா மயக்கமடைந்து விட்டாள். அதனால் அவளுக்குத் தன்னைச் சுற்றி நின்ற அபாயம் ஏதும் தெரியவே வழியில்லை.

கட்டிலில் நெருப்பு ஜ்வாலை இடையே, சுருண்டு கிடந்த உருவத்தைக் கண்டதும் உமா என்று கருதிய சிவகுமாரன், பாய்ந்து ஓடிச்சென்று அப்படியே வாரித் தூக்கிக் கொண்டான். சேலைத் தலைப்பில் எரிந்து கொண்டிருந்த நெருப்பு அவனது ஆடைகளிலும் பிடித்துக்கொண்டது. மயக்கமுற்றுக் கிடந்த சுலோசனாவைச் சுமந்துகொண்டு, புகைநெடியில் தட்டுத் தடுமாறி வெளியே வந்த சிவகுமார், வேகமாகப் படிகளைக்

கடந்து கீழே இறங்கி ஓடிவந்தான். ஆடைகளில் பிடித்த நெருப்பு அவனது உடலில் பல இடங்களில் நெருப்புக் காயத்தை உண்டாக்கியிருந்தது. புகை நெடி தாள முடியாத அவனுக்கு மயக்கம் வந்து விடவே, பின்பக்கத்து வாயிலண்டை வந்ததும் மேலே நடக்க முடியாது தோளில் சுமந்து கொண்டிருந்த சுலோசனாவின் உடலை நழுவவிட்டு, தடால் என்று மூர்ச்சையாகிக் கீழே விழுந்துவிட்டான்.

அங்கு கூடிநின்று நெருப்பை அணைக்க உதவிக் கொண்டிருந்த மீனாக்ஷி ஆசிரமத்து ஆட்கள் சிலர் இதைக் கண்டதும் எரிகின்ற நெருப்பிலே பாய்ந்து சென்று, மயக்கமாகிக் கிடந்த அவர்கள் இருவரையும் வெளியே கொண்டு வந்தார்கள்.

சுலோசனாவுக்கு நெருப்புக் காயம் மிகவும் அதிகமாக இருந்ததனால் அவளை நேரே பக்கத்து நகரத்திலிருந்த பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதித்து விட்டார்கள். முதல் சில தினங்கள் அவளது நிலை மிகவும் அபாயகரமாக இருந்ததனால் அவளிடம் மரண வாக்குமூலம் பெற்றுக் கொண்டார்கள் அதிகாரிகள். சுலோசனாவின் மரணவாக்குமூலம் திடுக்கிடும் உண்மைகளை வெளியிட்டது. அதற்குப் பின்னர் நடந்த சம்பவங்கள் அழகர்நத்தத்தை பத்திரிகைகளில் வெளிவரும் அளவு பிரபலப்படுத்திவிட்டன.

சுலோசனா என்னும் பெண், சினிமாவிலே கொஞ்ச நாட்கள் நடித்துவிட்டு, தற்சமயம் வேலை ஏதுமின்றி தன் தாயுடன் வசித்து வந்தாள் என்பதையும், நாடகக்காரி மோகனாம்பாளின் சொந்த மகள் அல்ல, வளர்ப்புப்பெண் என்பதையும் அழகர்நத்தத்தில் உள்ள அனைவரும் அறிந்து கொண்டனர். அத்துடன், அவளுக்கும் பண்ணையின் மாஜி மானேஜராக இருந்த வரதராஜன் அவர்களின் அருமை மகன் ரங்கதுரைக்கும் இடையே இருந்த கள்ள நட்பைப்பற்றியும், அதன் பயனாக அவள் வீட்டைவிட்டு ஓடிவந்து சிவகுமாரன்



ஆசிரமத்திலே வந்து சூழ்ச்சியுடன் அடைக்கலம் ஆனதும் அம்பலமாகிவிட்டன. சுலோசனாவின் மரண வாக்குமூலத்தில் கிடைத்த உண்மைகளின் பயனாக, பண்ணை மாளிகைக்கு நெருப்பு வைக்கத் தூண்டிய ரங்கதுரையைப் போலீஸார் கைது செய்துவிட்டார்கள். அதற்குக் காரணமாக இருந்த சில போக்கிரிகளைக் கைது செய்து போலீஸார் தக்கபடி விசாரித்தபோது, ஒரு சில காலங்களுக்கு முன்பு உமாவின் வண்டியைக் கள்ளர்கள் சூழந்து கொண்டதன் அந்தரங்கமும் வெளியாகியது.

சிவகுமார் மீது வன்மம் கொண்டிருந்த ரங்கதுரை அவனை ஒழித்துவிடத் திட்டமிட்டு, வண்டி அந்த வழியாக வரும் சமயம் தாக்கிவிட வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தான். அவனது கையாட்கள் அவ்வண்ணமே செய்ய ஒளிந்து காத்திருந்தபோது, உமா அந்த வண்டியில் எதிர்பாராத விதமாக வந்துவிடவே, வண்டிக்குள் இருப்பது யார் என்று அறியாது வண்டியைச் சூழ்ந்து கொண்டு தாக்க ஆரம்பித்தனர் என்றும் விளங்கியது. ஒன்று என்பதைப் பத்தாகக் கதை திரித்துப் பேசுவதில் மிகவும் சமர்த்தர்களான அழகர்நத்தவாசிகளுக்கு, இந்தத் திடுக்கிடும் உண்மைகள் வெறும் வாயை மெல்பவனுக்கு ஒரு பிடி அவல் கிடைத்ததுபோல். ஆகவே, கொஞ்சம் வெளிவந்த கதைகளை வைத்துக்கொண்டு, வர்ணம் தீட்டி, மெருகு கொடுத்து அவர்கள் தங்கள் இஷ்டப்பட்ட படியெல்லாம் பண்ணையார் மகளைப் பற்றியும், நடந்த சம்பவங்கள் பற்றியும் வாய் அலுக்காது பேசி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

பண்ணை மாளிகை தீக்கு இரையானது ஒரு புறமிருக்க, தீயின் தாத்பர்யத்தை ஆராயப் புகுந்த போலீஸாரின் கெடுபிடி இன்னொருபுறம் கடுமையாக இருக்கவே, உமாமகேச்வரி பண்ணை மாளிகையில் வசிக்க முடியவில்லை. தற்காலிகமாக எல்லாம் ஒழுங்காகும்வரை தமது இல்லத்திலே வந்து

தங்கியிருக்கும்படி தானாக வலிய வேண்டிக் கொண்டார் வைத்தியர் குருமூர்த்தி. ஊரில் உள்ள வேறு சில நன் மதிப்புக்குகந்த மனிதர்கள் உமாவைத் தங்கள் வீட்டில் வந்து தங்கும்படி வேண்டிக்கொண்ட போதிலும், தந்தைக்கொப்பான பிரியத்தை மனத்திலே வைத்திருந்தும், சிறிதும் அதை வெளிக்காட்டாது மிகவும் அடக்கமாக இருந்த டாக்டர் குருமூர்த்தியின் வேண்டுகோளை அவளால் மறுக்க இயல வில்லை. உமா, டாக்டர் குருமூர்த்தியின் இல்லத்திலே அவரது விருந்தாளியாகத் தற்காலிகமாக வசிக்கத் தொடங்கினாள். அந்தச் சில நாட்களில் தனக்கும் சிவகுமாரனுக்கும் இடையே ஏற்பட்ட அன்பைப் பற்றியும் சுலோசனாவின் சூழ்ச்சியைப் பற்றியும், அதன் பயனாகத் தங்களுக்குள் ஏற்பட்ட பிளவைப் பற்றியும் அவரிடம் மனம்விட்டுப் பேசி, ஆறுதல், ஆலோசனையும் பெற்றாள்.

சிவகுமாரனின் உடலில் பட்ட நெருப்புக் காயம்அவனது உயிருக்கு அபாயம் விளைவிக்கும் அளவு அதிகமாக இல்லாததனால் டாக்டர் குருமூர்த்தி அவனை அவனது வீட்டிலேயே வைத்து சிகிச்சை செய்து வந்தார். காயம் ஓரளவுக்கு குணமாகும் வரை உமா அவனை வந்து காண மனம் கூசியபடி ஒதுங்கியே இருந்தாள். ஒரு சில தினங்கள் சென்ற பின்னர் அவன் எழுந்து உட்காரவும் தன்னைக் காண வந்த நண்பர்களிடம் பேசவும் கூடும்என்று குருமூர்த்தி உத்தரவிட்டபின்னர், உமா தனது துணிவு முழுவதையும் ஒருங்கே திரட்டிக்கொண்டு அவனைக் காண அன்று அங்கே வந்திருந்தாள்.

பற்பல சிந்தித்தபடி தன்னை மறந்து சிலையாகி விட்டிருந்த உமா, உட்புறத்துக் கதவு தடால் என்று திறக்கப்படும் ஓசை கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். மருந்துப் பெட்டியைச் சுமந்துகொண்டு வெளியே வந்த டாக்டர் குருமூர்த்தி புன்முறுவலுடன் அவள் முகத்தைப் பார்த்தார். அவள் பரபரப்புடன் ஆசனத்தினின்று எழுந்து நின்றாள். ''நான்



இப்பொழுது அவரைப் பார்க்கலாமா?''என்று மிகவும் சங்கோஜத்துடன் வினவினாள்.

''பேஷாகப் பார்க்கலாம், ஆனால் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருப்பது தகாது'' என்று குறிப்பாகக் கூறி விட்டு டாக்டர் குருமூர்த்தி மந்தஹாசம் பொங்கும் வதனத்துடன் அவ்விடத்தை விட்டு வெளியே சென்றார்.

ரேழியைத் தாண்டிக்கொண்டு உள்ளே நுழைவதற்குள் உமாவின் நெஞ்சு பயத்தில் படபடத்தது. முகத்திலே அரும்பிய வியர்வையைத் துடைத்துக்கொண்டு, தன்னை ஒருவழியாகச் சமாளித்துக்கொண்டு உள்ளே சென்றாள். முன்கூட்டியே அவளது வரவை வைத்தியர் மூலம் அறிந்து கொண்டிருந்த சிவகுமார் புன்முறுவலுடன் அவளை வரவேற்று, தனக்கு அருகே கிடந்த நாற்காலியில் அமரச்சொல்லி உபசரித்தான். கைகள் மீதும் கால்களின் மீதும் போர்த்தப்பட்டிருந்த மெல்லிய துணியைக் கடைக்கண்ணால் கவனித்த உமாவின் நெஞ்சு துணுக்குற்றது. உடலில் பல இடங்களில் நெருப்பினால் புண்ணாகிவிட்டிருந்த காயம் இன்னமும் பூர்ணமாக ஆறவில்லை என்பதை அந்த மருந்துப் போர்வை அவளுக்கு அறிவித்தது. ''உடம்பு இப்போது எப்படியிருக்கிறது?'' என்று விசாரித்து விட்டு, அவனது முகத்தை நேருக்கு நேர் சந்திக்க அஞ்சி தரையை வெறித்துப் பார்த்தாள்.

''உடம்பிற்கு அசதி இப்போது அதிகம் ஏதும் இல்லை. காயங்கள் ஆற குறைந்தது இரண்டு மாதமாவது ஆகும் என்று வைத்தியர் கூறிவிட்டார். ஆனால் அதிர்ஷ்டவசமாக என்மேல் பட்ட காயங்களினால் ஏற்படும் வடு அவ்வளவு பயங்கரமாக இருக்காதாம். ஆனால் பாவம், அந்தப் பெண் சுலோசனா, அவளது நிலையை நினைத்தால்தான் மிகவும் பரிதாபமாக இருக்கிறது. அவளது முகத்திலே பட்ட நெருப்புக் காயம் ஆறிவிட்டாலும் மிகவும் குரூரமானதொரு வடுவை

உண்டாக்கிவிடும் என்று வைத்தியர்கள் கருதுகிறார்கள். அவளது தாய் மோகனாம்பாள், மகளை ஆஸ்பத்திரியில் வந்து கண்டபோது நிலையைக் கண்டு மனம் பொறுக்காது அழுது கூச்சலிட்டு ரகளை செய்து விட்டாளாம். தன் மகள் இனிமேல் சினிமாவிலே நடிக்கவே முடியாது என்பதை உணர்ந்த அவள் மனம் இடிவிழுந்து போயிருக்கவேண்டும். என்ன செய்வது சுலோசனா உயிரோடு தப்பினாளே, அதுவே பெரிய அதிர்ஷ்டம் என்று கொள்ளவேண்டும்.?'' என்றான்.

''சுலோசனா செய்த சூழ்ச்சிகள் பலவும் என் வாழ்வைக் கெடுக்கக்கூடியதாக இருந்தபோதிலும், அவளுக்கு இப்படிப்பட்ட ஓர் ஆபத்து ஏற்பட்டதைப்பற்றி நான் மிகவும் வருந்துகிறேன்''. என்று கூறிவிட்டுத் தயக்கத்துடன் உமா சிறிதுநேரம் மௌனமாக இருந்தாள். தொண்டையைக் கனைத்துக்கொண்டு தலையை நிமிர்ந்து சிவகுமாரனை அன்பு நிறைந்த தனது அழகிய இரு விழிகளாலும் பார்த்து, ''மிஸ்டர் சிவகுமார்! அன்று தினம் தாங்கள் தங்களது உயிரையும் பொருட்படுத்தாது என்னை நெருப்பினின்று காப்பாற்றும் நிமித்தம், எரிகின்ற நெருப்பிற்குள் நுழைந்து படுகாயமடைந்தது பற்றி நான் மிகவும் வருந்துகிறேன். உங்களுக்கு எனது நன்றியை எப்படித் தெரிவிப்பது என்றே தெரியவில்லை'' என்றாள் தடுமாற்றத்துடன்.

சிவகுமார் தனது வரிசைப் பற்கள் தெரிய மெல்லச் சிரித்தான். ''தாங்கள் எனக்கு நன்றி தெரிவிக்க வேண்டியது அவசியமே இல்லை. என் உள்ளம் விழைந்ததை நான் செய்தேன். அவ்வளவுதான்'' என்றான் உற்சாகத்துடன்.

''மிஸ்டர் சிவகுமார்! தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அன்று தினம் சுலோசனா கூறிய பொய்யை நம்பிக்கொண்டு உங்களை நான் மிகவும் துச்சமாகப் பேசிவிட்டேன். அதை இப்போது



நினைத்தாலும் என் மனம் மிகவும் வேதனைப்படுகிறது'' என்றாள் உணர்ச்சிவசத்துடன். இதைச் சொல்லி முடிக்குமுன் அவளது கண்கள் கலங்கின. முகம் அவமானத்தினால் சிவந்து போயிற்று.

''மன்னிப்பு என்பதே நமக்குள் ஏதும் கிடையாது. தாங்கள் கடந்து போனதைப் பற்றி மனத்தை அலட்டிக் கொள்வது பற்றி அவசியமேயல்ல'' என்றான் சிவகுமார்.

அந்தச் சில வார்த்தைகளில் உமாவுக்கு தனியாக ஏதோ ஓர் அர்த்தம் இருப்பதுபோல் உள்ளத்தில் உணர்வு ஏற்படவே, அவள் அன்பு நிறைந்த தனது விழிகளால் அவனை மிகவும் பக்ஷமுடன் பார்த்தாள். எவ்வளவோ பேசவேண்டும் என்று எண்ணிக் கொண்டு வந்திருந்த அவளால் அதற்குமேல் ஏதும் பேச முடியவில்லை. எனினும் அவர்கள் இருவரது உள்ளமும், பார்வையிலேயே எவ்வளவோ பேசாது பேசிக்கொண்டன.

பண்ணையார் மாளிகை தீப்பற்றிக்கொண்டு எரிந்து சாம்பலாகி ஒரு வருஷ காலம் ஓடிவிட்டது. இதற்குள் பல சம்பவங்கள் தொடர்ந்தாற்போல் ஏற்பட்டு அழகர்நத்தத்தின் பெயர் மிகவும் பிரபலம் அடைந்துவிட்டது. பண்ணையாரது பழைய மாளிகை தீப்பற்றிப் போனதால் அந்த இடத்தில் மிகவும் சிறிய அளவிலே நவீன மோஸ்தரில் ஒரு சிறு வீடு கட்டப்பட்டு விட்டது.

வீட்டை செவ்வனே கட்டும் பொறுப்பை டாக்டர் குருமூர்த்தியும், சிவகுமாரும்மனமுவந்து ஏற்றுக் கொண்டு, உமாவுக்கு மெத்தவும் உதவி செய்தனர். மாளிகையில் தீ வைக்கத் தூண்டிய குற்றத்திற்கும், வேறுபல குற்றங் களுக்கும் ரங்கதுரையும் அவனது கூட்டாளிகளும் தண்டிக்கப் பட்டனர். தன் மகன் மூன்று வருஷம் கடுங்காவல் தண்டனை அடைந்தான் என்பதைக் கேள்விப்பட்ட வரதராஜன்

மாரடைப்பிலே மரணமடைந்துவிட்டார். அண்ணனது ஈமக்கிரியைகள் முடிந்ததும் ஷண்பகவல்லி, ஒரு தினம் சொல்லாது கொள்ளாது தனக்குச் சொந்தமான விலையுயர்ந்த பொருள்களை விற்றுப் பணமாக்கித் திரட்டிக்கொண்டு, க்ஷேத்ராடனம் செய்யப்புறப் பட்டு விட்டாள்.

தன் தந்தையின் பாபகாரியங்களுக்குப் பங்காக இருந்த இருபது ஏக்கர் பூமியையும் ''மீனாக்ஷி இல்ல''த்திற்கு நன்கொடையாக உமா அளித்துவிட்டதுடன், அனாதைக் குழந்தைகளுக்குப் பெரியதொரு ஆசிரமமும் விளையாட்டு மைதானமும் அமைக்க, வேண்டிய பண உதவியும் செய்தாள்.

அன்று தினம் பண்ணையார் மகள் புதிதாகக் கட்டியிருந்த தனது வீட்டிற்கு முதல் முதலாகக் குடியேறியிருந்தாள். ஊரிலிருந்த ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் செய்து மகிழ்ந்து, அந்த தினத்தை எவ்வித ஆடம்பரமும் இன்றி அமைதியாகப் போக்க விரும்பினாள். அனாதைக் குழந்தைகளும், ஏழைகளும் வயிறார உண்டு மகிழ்ந்து விட்டுப்போன காட்சியைப் பார்த்துக் களித்துவிட்டு, அன்று மாலை சற்று அமைதியாக இருக்க எண்ணித் தோட்டத்திலே தனியே உலாவிக் கொண்டிருந்தாள்.

''மன்னிக்கவேண்டும்...தங்களது கற்பனையைக் கலைத்து விட்டேன்.'' என்று கூறிய வண்ணம் புன்முறுவலுடன் சிவகுமார் அங்கே வந்தான். ஒரு வருஷகாலம் நெருங்கிப் பழகியதில் ஆரம்பத்திலே அவர்கள் இடையே தோன்றியிருந்த அன்பு பெரும் காதலாக மாறிவிட்டிருந்தது. இருவரும் ஒருவர் மீது ஒருவர் நேசம் கொண்டிருப்பதை அறிந்தும் அறியாதது போல் கௌரவமாக இருந்தனர்.

''அப்படியொன்றும் பிரமாதமான கற்பனை இல்லை. தாராளமாகப் பேசலாம்'' என்று வரவேற்ற உமா, அருகிலிருந்த



மெண்ட் ஆசனம் ஒன்றில் அமர்ந்து கொண்டாள். வெகுநேரம் குமார் பற்பல பொது விஷயங்களைப் பற்றிப் பேசிக் ண்டிருந்தான்.

அந்தி வானத்திலே மறைந்து கொண்டுவந்த சூரியனின் ந்த கிரணங்கள் தோட்டத்தின்மீது படிந்து, அந்த த்தையே செம்பொன்னில் வார்த்ததொரு பூங்காவைப் ால், அழகு செய்து கொண்டிருந்தன. சிவகுமார் தன் ள்ளத்தை வாட்டிய அந்த விஷயத்தை எப்படியாவது சிவிடுவது என்ற தீர்மானத்துடன் தயக்கமாக ஆரம்பித்தான். ிஸ் உமா! தாங்கள் என் மனநிலையைப்பற்றி அறிவீர்கள் ா நினைக்கிறேன். தங்களது அந்தஸ்திற்கும் எனது ந்தஸ்திற்கும் இடையே ஏற்றத் தாழ்வுகள் அதிகம் உள்ளன. னால் அன்பு ஒன்றுக்கு இடையே, அந்தஸ்து வேற்றுமை ும் செய்ய முடியாது என்ற நம்பிக்கையில் கேட்கிறேன். ங்கள் என்னை மணந்து கொண்டு என் வாழ்வைப் ிதமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்'' றான்.

அந்த வேண்டுகோளின் இனிமை தோட்டத்திலேயே சிட்டுப் பறந்து சென்ற பக்ஷி ஜாலங்களின் குரல் னிமையிலும் இனிமையாக இருந்தது. தென்றல் அன்று கவும் குளுமையாக வீசியது. அருகில் படர்ந்து நின்ற ல்லைக் கொடியில் கட்டவிழ்ந்து நின்ற பூக்களினின்று மிக னிமையான மணம் காற்றினூடே மிதந்து வந்தது. உமாவின் ள்ளம் பூரிப்பிலே பொங்கிப் பொங்கி ஆர்ப்பரிக்கவே, ந்துபோன தனது முகத்தைத் தாழ்த்திக் கொண்டு உமா மௌனமாகச் சிறிது நேரம் இருந்தாள்.

''மிஸ் உமா! தங்களது பதிலை நான் அறியலாமா?'' என்று மிகவும் தயக்கத்துடன், ஏக்கம் நிறைந்த குரலில் சிவகுமார் வினவினான்.

கருணை மிதந்த தன் கண்களை உயர்த்தி, அவனை மிகவும் அன்புடன் பார்த்தாள் உமா. அவளது பவள அதரங்களில் மலர்ந்து நெளிந்த புன்னகை அவனது கேள்விக்கு பதில் சொல்லாமலே சொல்லியது. சிவகுமார் நீட்டிய கரத்தை அன்போடு பற்றி உமா தனது மென்மையான கன்னத்திலே பதிய வைத்துக் கொண்டாள். வாழ்வு அவளுக்கு மிகவும் இனித்தது. வருங்காலம் அவனுடைய துணையுடன் செல்லப் போகிறது என்ற நம்பிக்கையில் அவள் கண்கள் மிக இனிதாகப் பரந்து கிடந்தன.

பண்ணையார் மகள் அமைதி மிக்கவளாக, திருப்தியுடன் பெருமூச்செறிந்தாள்.

முற்றும்

சென்னை மாவட்ட மைய நூலகம்
31505
4757969
சோளத்தூர், சென்னை - 99.